# மல்லிகை

## 43 ஆவது ஆண்டு மலர்

ஜனவரி-2008 ஆசிரியர்: டொமினிக்ஜீவா



## 50வது ஆண்டை நோக்கி...

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவர்'


தொடர்பு கொள்ளும் முகவரி :
201/4 Sri Kathiresan
Street,
Colombo - 13.
Tel : 2320721
MallikaiJeeva@yahoo.com




# மல்லிகை
## 43 – வது
## ஆண்டு மலர்
## 2008 – ஜனவரி
## 344


உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம்தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப்பட்ட பெறுமதி மிக்க சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்ஸார்ட் (04.02.2001) பதிவு செய்ததுடன் எதிர்காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது.


MALLIKAI PROGRESSIVE
MONTHLY MAGAZINE

மலர் மலர்வதற்கு உதவியவர்கள் :
செங்கை ஆழியான்
மா.பாலசிங்கம்

அட்டைப்படம் : ரமணி
அட்டை வடிவமைப்பு : மேமன்கவி
கணினி அச்சமைப்பு,
பக்க வடிவமைப்பு : எஸ். சாந்தகுமாரி
உள் ஓவியங்கள் : மதிபுள்ப்பா

முத்தையா முரளிதரன்

## மனுக்குலச் சாதனைகளில் இதுவுமொன்று!

சமீபத்தில் முத்தையா முரளிதரன் கண்டியில் நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டில் உலக சாதனையை நிலைநாட்டியதையிட்டு இந்த நாட்டுக் கலைஞர்கள் சார்பில் அன்னாருக்கு பெருமிதம் கலந்த மகிழ்ச்சியைத் தெரிவிப்பதில் பேரானந்தம் கொள்கின்றோம்!

இந்தச் சர்வதேச விளையாட்டுச் சாதனையை நாம் குறுகிய நோக்கில் பார்க்க அறவே விரும்பவில்லை. ஒரு தமிழன் சாதனை செய்தான் என்றோ, ஒரு மலையகத் தமிழ் இளைஞன் இப்படியொரு சர்வதேசச் சாதனையை நிலைநாட்டிவிட்டான் என்றோ, அல்லது ஓர் இலங்கையில் பிறந்த இளம் தலைமுறையைச் சார்ந்தவன் இந்த அகில உலகச் சாதனையைச் செய்து முடித்தான் என்பதற்காகவோ நாம் இந்த முரளிதரன் சாதனையைப் பார்க்கவில்லை, பாராட்டவுமில்லை.

மனுக்குலத்தைச் சேர்ந்த இளந்தலைமுறையைச் சேர்ந்த ஓர் இளைஞன் இந்த மண்ணில் இந்தச் சாதனையை நிலை நாட்டியுள்ளான் என்பதற்காகவே நாம் அந்த இளைஞனை மதிக்கின்றோம், பாராட்டுகின்றோம்! போற்றுகின்றோம்.

இந்தச் சாதனை மீண்டும் முறியடிக்கப்படலாம். இந்த உலக சாதனையை வேறு நாட்டைச் சேர்ந்த இன்னொரு விளையாட்டு வீரன் முறியடிக்கலாம்.

இது விளையாட்டு வரலாற்றில் இயல்பான தொன்றே. ஆனால், இப்போதைக்கு முரளிதரனின் இந்தச் சாதனை முறியடிக்கப்பட முடியாதது என்றே நாம் கருதுகின்றோம்.

காரணம், இந்தச் உலகச் சாதனையைச் செய்து முடித்த முரளிதரன் இன்னமும் களத்தில் நின்று, தாக்குப் பிடித்துக் கொண்டேயிருக்கிறார்.

இது சாதனை மட்டுமல்ல, உலக வரலாற்றில் ஒரு புதிய பதிவாகும். இந்தச் சாதனையாளன் தான் பிறந்த கண்டி மண்ணில் நின்று, விளையாடிக் கொண்டிருக்கும் போதே, இந்தச் சர்வதேசச் சாதனையை நிலை நாட்டிக் கொண்டார்.

இது சர்வதேசப் புதுமைகளில் ஒன்று!

இந்தச் சர்வதேசச் சாதனை நிலைநாட்டப் பெற்ற கால கட்டத்தில், நாட்டின் அரசியல் சூழ்நிலையை யும் நாம் அவதானத்தில் கொள்ளுகின்றோம்.

இந்த மண்ணுக்கு வரலாற்றுப் புகழைத் தேடித் தந்த, இந்த இளம் தோழனின் மொழியைப் பேசுகின் றனர், என்ற குற்றச்சாட்டின் பேரில், தலைநகரில் ஆயிரக் கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் முன்னறிவித்தல் இன்றி, இரவிரவாகவே கைது செய்யப்பட்டனர்; சிறையில் அடைக்கப்பட்டனர்.

எவ்வளவு விசித்திரமான சூழ்நிலைச் சம்பவம் இது!

இவர்களில் எத்தனை முரளிதரன் இருக்கக் கூடுமோ, யாரறிவார்கள்?

அரசாங்கமும், ஆட்சியாளர்களும், பேரினவாதி களும் இறுதியாக ஒன்றைப் புரிந்து கொள்ள வேண் டும். இந்த மண்ணில் வாழ்ந்து சாதனை புரிந்து கொண்டு, தமது தாய் மொழியில் உறவாடுவதால் சந்தேகிக்கப்பட்டு, பயத்தின் காரணமாகப் பதுங்கிப் பதுங்கி வாழ்ந்து வரும் இன்றைய தமிழ் இளைஞர் களின், யுவதிகளின் மெய்யான மன உணர்வு களைத் தயவு செய்து புரிந்து கொள்ளப் பழகுங்கள்.

முரளிதரனின் இந்தச் சர்வதேசச் சாதனைக்கு நீங்கள் செய்யக் கூடிய, தேசியக் கைமாறு அது வாகத் தான் இருக்க முடியும்!

இந்தச் சர்வதேசப் புகழை இலங்கைக்கு ஈட்டித் தந்த முரளிதரனின் முன்னோர்களைத் தான் பூமிபுத்திரர்களான சென்ற காலப் பரம்பரையினர் சும்மா விட்டார்களா? இந்தியாக்காரான், கள்ளத் தோணி, வந்தேறு குடிகள், தோட்டக்காட்டான் எனச் சொல்லிச் சொல்லியே, இந்த நாட்டுக்கு உழைப் பால் அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்த அவரது மூத்த பரம்பரையையே கேலியும், கிண்டலும் பேசிச் சிரித்தார்கள், களித்தார்கள்.

நமது தாய்த் திருநாட்டுக்குத் தனது அயராத திறமையால் முரளிதரன் ஈட்டித் தந்த பெரும் புகழுக்கு என்ன சொல்லப் போகின்றனர், இந்தப் பெருந்தேசியவாதிகள்?


இந்த மண்ணில் பிறந்து விட்டால் மாத்திரம் நாம் பெருமை பேசி விட முடியாது. நமது முன்னோர் கள், தாய், தந்தையர் இங்கு பிறந்து வாழ்ந்து விட்ட தன் காரணத்தால் நாம் இந்த மண்ணை நேசிக்கின் றோம். அதன் தார்மீக சொந்தக்காரர் நாம் என உரிமை பாராட்டி விடவும் இயலாது. நாம் பிறந்த இந்த மண் மணக்க, மண் சிறக்க என்ன சாதனைகள் நம்மள வில் செய்துள்ளோம் என்பதைக் கணக்கில் கொண்டு தான் நாம் அதனைக் கணிப்பீடு செய்ய இயலும்.

தமிழ்நாட்டிலிருந்து வாரா வாரம் இங்கு வந்து குவியும் வார, மாத தமிழ் இதழ்களைத் துருவித் துருவித் தேடிப் பார்க்கின்றோம்.

முரளிதரனின்- பக்கத்தே வாழும் இலங்கைத் திருநாட்டின் சர்வதேசத் தனிமகனைப் பற்றி எந்த விதமான செய்தித் தகவல்களோ, அன்னாரது உருவப் படங்களோ, ஓரிரு இதழகள் தவிர, வெளிவரவில்லை என்பதுதான் எமது கவனத்தில் தட்டுப்பட்டது.

கோடம்பாக்கத்தையே கோயிலாக வணங்கிய வண்ணம், பிரபல சினிமா நடிகைகளின் கண் கவர்ச்சி வண்ண உருவப் படங்களை வாரா வாரம் அட்டைப் படங்களாக வெளியிட்டு, தமிழ்க் கலா சாரத்தையும், விழுமியங்களையும் தமிழகத்தில் மாத்திரமல்ல, இந்த நாட்டிற்குள்ளும் இறக்குமதி செய்து பூரிப்படை யும் தமிழக ஏடுகள் முரளிதரனின் இந்தச் சர்வதேசச் சாதனையைக் கண்டு கொள்ளவில்லை என்பதை யும் நாம் இந்தக் கட்டத்தில் எரிச்சலுடன் சுட்டிக் காட்ட விரும்பு கின்றோம்.

- ஆசிரியர்




# கருவைச் சுமப்பவள் பெண்;
# கருத்துக்களைச் சுமந்து திரிபவன், கலைஞன்!

முதலில் பிறந்துள்ள புத்தாண்டில் புத்தாண்டு வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் தெரிவிப் பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்! இந்த ஆண்டிலாவது இந்த மண்ணில் சமாதானம் மலரட்டும்!

இந்த மலர் மல்லிகையின் 43- வது ஆண்டு மலர். நேற்றுப் போல இருக்கிறது, மல்லிகையின் முதலாவது இதழ் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த காலகட்டம். என் இலக்கிய முதிர்ச்சிக்கு அது வழி சமைத்துத் தந்தது.

இன்னும் ஏழு ஆண்டுகளில் மல்லிகையின் 50-வது ஆண்டு மலர் மலர இருக்கின்றது. நிச்சயமாக- உறுதியாக- மனஓர்மத்துடன் நம்புகிறேன். அந்த 50-வது ஆண்டு மலரையும் நானே உங்களது கரங்களில் சமர்ப்பிப்பேன். இது உறுதி!

அதற்குள் இத்தனை ஆண்டுகள் சொல்லாமல், முழங்காமல் ஓடிப் போய்விட்டன என்பதை நெஞ்சு நிறைய நினைக்கும் பொழுது, ஒரு வகையில் பிரமிப்பாக இருக்கிறது. இன்னொரு வகையில் அதி ஆச்சரியமாகவும் இருக்கின்றது.

மல்லிகை இதழை முதன் முதலில் ஆரம்பிக்கும் அந்த வேளையில்- அந்த அறுபதுகளின் பிற்பகுதிக் கால கட்டத்தில் பலரும் பலவிதமாகத் தத்தமது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் சொல்லி வைத்தார்கள்.

நான் சகலரினதும் கருத்துகளை, அபிப்பிராயங்களை மனந்திறந்து வைத்த வண்ணம் உள்வாங்கிக் கொண்டேன்.

தனிப்பட்ட முறையில் என்மீதும் எனது இலக்கியச் செயலாக்கத்தின் மீதும் இயல்பாகவே துவேஷம் பாராட்டிய பலர், எனது காது படவே என்னையும் எனது இலக்கிய நேர்மையையும் கொச்சைப்படுத்தி, என் மனசை நோகச் செய்தனர்.

என்னுடைய மிகப்பெரிய கெட்டித்தனம் என்னவென்றால், நான் இவர்களினது பொச்சரிப்பு வார்த்தைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவேயில்லை. தொடர்ந்து செயற்பட்டு வந்தேன்.

மல்லிகை மெல்ல மெல்ல தன் மணத்தை விரிவு படுத்தத் தொடங்கியது. நடெங்கும் பரவிப் படர்ந்தது.

அதற்காக நான் கொடுத்த விலை, வருங்கால இலக்கியத் தலைமுறை அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு தகவலாகும். அவசியம் இளைய தலைமுறையினர் படித்தறிந்திருக்க வேண்டும்.

மல்லிகை முதன் முதலில் தோன்றிய முகவரியிலிருந்து அதற்கான சொந்தக் கட்டடத்திற்குக் குடிபெயர்ந்த வேளையில் என்னை விமர்சித்த பலரே, என்னை நிமிர்ந்து பார்க்கத் தலைப்பட்டனர்.

**அத்துடன் சொந்த அச்சகத்தையும் நிறுவிக் கொண்டேன்.**

மல்லிகையின் முகவரி பிரபலமடையத் தொடங்கியது. ஆரம்ப காலகட்டங்களில் என்மீதும், எனது இலக்கியச் செயல்பாடுகளின் மீதும் தம் வரைக்கும் ஏதோவொரு கருத்து வைத்திருந்தவர்கள், மெல்ல மெல்ல என்னையும் எனது செயல்பாடுகளையும் கட்டம் கட்டமாகப் புரிந்து கொள்ளத் தலைப்பட்டனர்.

இந்தத் தொடர் மன ஓர்மத்தையும், விடாமுயற்சியையும், அசராத துணிச்சலையும் எனக்குக் கற்றுத் தந்ததே, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்தான்! அந்த மாபெரும் இலக்கிய இயக்கம் தான்!

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலங்கை பூராகவும், தனது வேலைத் திட்டங்களைப் பரவல் படுத்தி, கொழும்பைத் தலைமைப் பீடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தபோதிலும் கூட அதன் மூல வேர், அடி அத்தி வாரமே யாழ்ப்பாணத்தில் தான் ஆழம் கொண்டிருந்தது. பல பல துறைகளில் சதா இயங்கிக் கொண்டிருந்தது.

**அடிக்கடி பல்வேறு இலக்கியப் பிரச்சினைகள் சம்பந்தமாக சிறு சிறு கூட்டங்களை, கலந்துரையாடல் களை யாழ் வினை** நடத்தி வந்தது.

**உயர் சாதி வெறித் திமிர் தலைக்கேறி**ய பண்டிதப் பண்டாரங்கள் **இழிசினர் வழக்கு** என எமது இலக்கியப் படைப்புக் களை இழித்தும் பழித்தும் பேசிய சம்பவம் வட பிரதேச மண்ணிலிருந்து தான் முதன் முதலில் முகிழ்ந்தெழும்பி வந்தது.

அதற்கு மூல காரணமாக இருந்து இலக்கியம் படைத்தவர்கள் இருவர். ஒருவர் நான். அடுத்தவர் தோழர் டானியல். இருவருமே ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து முகிழ்தெழும்பி வந்தவர்கள்.

பண்டிதப் பண்டாரங்களின் மூல நோக்கம் தமிழ் இலக்கியத்தை வளர்த்துச் செம்மைப் படுத்துவதல்ல. அவர்கள் பாஷையில் கண்ட சாதி- நிண்ட் சாதிக் காரன்களை- பஞ்சமர்களை இலக்கிய உலகிலிருந்து ஓரங்கட்டுவதேயாகும். அதற்கு முட்டுக் கட்டையாக நானிருந்து முற்போக்கு எழுத்தாளர் சங்க வட பிராந்தியச் செயலாளராகச் செயல்படுவதை அறவே வெறுத்தனர் அவர்கள். அவதூறு பொழிந்தனர்.

அதன் வெளிப்பாடாகத்தான் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப் படிப்பிக்கும் பண்டிதர் ஒருவர்- அவர் ஓய்வு பெற்றதன் பின்னர் அவுஸ்தி ரேலியாவிற்குக் குடிபெயர்ந்து, அங்கேயே காலமாகி விட்டார் எனக் கேள்வி. நானே இன்னமும் இந்த மண்ணிலிருந்து கொண்டே மல்லிகையை வெளியிட்டுக் கொண்டு வருகிறேன்- அந்தப் பண்டிதப் பெருமானார் வகுப்பில் மாணவர்களைக் கூட்டி வைத்து "இண்டைக்கு ஒரு புதினம், பத்திரிகை களில் பார்த்தீர்களா? நாவிதன் ஒருவனுக்கு இந்தாண்டுச் சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்துள்ளதாம்! பாருங் கோவன், இந்தத் தமிழ் உலகம் பாழ்பட்டுப் போகிற போக்கை!" என மன மெரிஞ்சு சாபமிட்டாராம்.

எழுத்தாள நண்பன் தெணியான் அப்பொழுது ஆசிரிய கலாசாலை மாணவன். அடுத்த நாள் கொழும்புத் துறையில் இருந்து சைக்கிள் எடுத்துக் கொண்டு வந்து. எனக்கு இந்தத் தகவலைக் கூறினார், அவர்.

அன்றைக்குத் தான் எனக்குள் மல்லிகையின் வித்து முளை கொண்டது.

நமது பரம்பரையைக் கடந்த காலங்களில் நாய், பேய் மாதிரி நடத்திய இந்த நாசகாரக் கும்பலுக்கு ஒரு நாள் நல்ல பாடத்தை எனது செயல்களின் மூலம் படிப்பிக்க வேண்டும் என சபதமெடுத்துச் செயலாற்றத் தொடங்கி னேன். அன்று தொட்ட இலக்கிய வெறி!

சிலர் இன்று நினைப்பது போல, இலக்கியச் சிற்றே டொன்றை இடைவிடாது வெளியிட்டு வருவது என்பது சும்மா இலேசுபட்ட சங்கதியல்ல.

அதற்கு மகா அசுரத் துணிச்சல் வேண்டும். அயராது பாடு படும் மனப்பாங்கு தேவை. எல்லாவற்றையும் விட, சகிப்புத் தன்மையும் விடா முயற்சியும், அயாரது உழைக் கும் நெஞ்சுரமும் தினம் தினம் தேவைப்படும்.

இன்றைக்குப் பலர் நேரிலும், கடிதத் தகவல் மூலமும் செய்தி வாயிலாகவும் என்னையும் மல்லிகை யின் தொடர் வரவையும் புகழ்ந்து பேசும் போது, நான் மனசிற்குள் சிரித்துக் கொள்வதுண்டு.

அவர்கள் மேலோட்டமாகத்தான் எனது தினசரிச் சிரமங்களையும், கஷ்டங்களையும் பார்த்து மதிப்பிடு கிறார்களே தவிர, அதன் ஆழ, அகலங்களைப் புரிந்து கொண்டு மதிப்பிடுகிறார்கள் என்பதைச் சொல்லிவிட இயலாது.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். ரொம்ப ரொம்ப உருகுவார்கள். அடிக்கடி குசலம் விசாரிப்பார்கள். ஏதோ, ஆத்ம நண்பனைப் போலப் பேசுவார்கள். பழகுவார்கள். ஏதோவொரு தேவை கருதித்தான் இந்தக் குழைவு, குசலம் விசாரிப்பு எல்லாம் நடந்தேறி வரும்.

தங்கள் தங்கள் காரியம் மல்லிகையின் மூலமோ, அல்லது என் மூலமோ நிறைவேறி விட்டதும், வந்தது போலவே மறைந்து விடுவார்கள்.

கம்பன் கழக ஜெயராஜின் 50வது வயது பொன் விழாவில் நானொரு கருத்தைச் சொன்னேன்.

'எந்த ஒருவரது கண்களையும் அவர் அறிமுகமாகும் கட்டத்தில் உற்றுப் பார்த்து அவதானித்துக் கொள்ளுங் கள். அந்தக் கண்கள் உண்மையைத் தெளிவாக உங்க ளுக்கு உணர்த்திவிடும்!' எனக் கூறினேன்.

என் வரைக்கும் நான் ஒருவரை முதன் முதலில் அறிமுகமாகும் போது, அன்னாரது கண்களைத் தான் ஊடுருவிப் பார்த்து, எனக்குள் நானே அவரைப் பற்றிய எனது கருத்தை மட்டிட்டுக் கொள்வேன்.

இது எனது நீண்ட நாளையப் பழக்கம். இலக்கியப் பாத்திரங்கள் கற்றுத் தந்த பாடம்.

அதற்காகச் சம்பந்தப்பட்ட வரை ஓரம் கட்டிவிடமாட்டேன். வெகு நிதானமாக, அவதானமாக அவர்களுடன் பழகிக் கொள் வேன். அன்னாரது நோக்கத்திற்கு நான் பலியாகி விட மாட்டேன்.

என்னுடைய கணிப்பு நீண்ட நாட்கள் சென்ற பின்னரும் கூடச் சரியாகவே அமைந்துவிடும் என்பது உறுதி. இது அநுபவ உண்மை!

பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவமொன்று, என்னை விசுவசிப்பதாகச் சத்தியம் செய்த நண்பரொருவர் வெளிநாடு போய் விட்டார். இன்று கனடாவில் வெகு வசதியாக வாழ்ந்து வருவதாகக் கேள்வி.

அவர் நாட்டைவிட்டுப் புறப்பட்டுச் செல்வதற்கு முதல் நாள் என்னைச் சந்திக்க வந்தார். "ஜீவா, வெளிநாட்டில் நான் கோழிக்கறி சாப்பிடும் நேரமெல்லாம் உன்னைத் தானடாப்பா நினைச்சுக் கொண்டு சாப்பிடுவன்!" எனக் கண்கலங்கிக் கொண்டு சொல்லி, என்னிடம் விடை பெற்றுச் சென்றார்.

ஏதோவொரு கதையில் நண்பரொருவரிடம் இந்தத் தகவலைக் கூறினேன்.

அவர் சொன்னார்: "அது உண்மைதான். ஏனெண் டால் அவர் இன்னமும் கோழி இறைச்சிக் கறி சாப்பி ட்டிருக்க மாட்டார்!"

நாங்கள் இங்கிருந்து கொண்டு, கற்பனையில் வெளிநாட்டில் வசிப்பவர்களைப் பற்றி ஏதோ ஏதோ வெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்கின்றோம்.

அவர்களுக்குதான் தாம் புதிதாகக் குடி புகுந்த அந்நிய நாட்டில் எத்தனை எத்தனை பிரச்சினைகள்!

இந்த அநுதாப உணர்வு அவர்களைப் பற்றி என் அடி நெஞ்சில் நிறைய நிறைய உண்டு.

அது முக்காலும் உண்மைதான். ஆனால், ஒன்று, உலகத் தலைநகரங்களெல்லாம் தகவல் துறையில் இன்று பக்கத்து வீடு. இருந்த இடத்திலிருந்தே கையை நீட்டி அமுத்தினால், உலகம் நம் முன்னால் உருண்டு வரும். அத்தனை விஞ்ஞானயுக வளர்ச்சியில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த மண்ணில் இருக்கும் போது உருகி உருகி என்னையும், மல்லிகையையும் தங்களது வசதி கருதி நடித்து, அன்பு செலுத்தியவர்கள், அருகேயுள்ள தொலை பேசியை எடுக்கப் 'பஞ்சி'ப் படுகின்றனரே, என்பதுதான் எனது மன ஆதங்கமாகும்.

வெளிநாட்டில் இன்று வாழ்ந்து வரும் வட பிராந்தியத் தடிப்புப் பிடித்த சாதிமான் ஒருவருடைய தகவலையும் உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

கனடாவில் பொது நிகழ்ச்சி ஒன்று றொறண்ரோவில் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றதாம். அந்த விருந்து விழா வில் கலந்து கொண்ட சில குடும்பங்களைச் சுட்டிக் காட்டி "எங்கட ஊரிலையெண்டால் இவங்களுடைய வீட்டுக்குப் போய் நாங்கள் செம்பு தண்ணி தூக்கிக் கொண்டாட மாட்டம்!" எப்படி இருக்கிறது புலம் பெயர்ந்த நாட்டுக் கலாசாரத் தொடர்பு?

இதுவரையும் மல்லிகையின் அட்டைப் படத்தில் பதிவு செய்யப்பட்ட உருவங்கள் 200 மேலாகும். இவை கள் நான்கு தொகுதிகளாக, இதுவரையும் நூலுருப் பெற்று விட்டன. பார்க்கப் போனால், மாதம் ஒரு அட்டைப்படப் பதிவு. ஆனால், இன்னும் 50 ஆண்டுகளுக் குப் பின்னர் இந்தப் பதிவுகள் எல்லாம் இலக்கிய ஆவணங்களாகப் போற்றப்படும், பின் சந்ததிப் புத்தி ஜீவிகளால்.

இது எனக்குத் தெளிவாகவே தெரியும்.

இன்னொரு தகவலையும் இந்த இடத்தில் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

மல்லிகை நிறுவனம் இரட்டைக் குழல் துப்பாக்கி போன்றது. இன்றுவரை ஈழத்து இலக்கிய உலகில் இயங்கி வரும் நிறுவனம் அது.

ஒன்று மல்லிகை என்ற மாத இதழ். அடுத்து 'மல்லிகைப் பந்தல்' என்ற புத்தக வெளியீட்டு நிறுவனம்.

43- வது ஆண்டு மலரை இந்த நாட்டு இலக்கியச் சுவைஞர்களுக்கு இன்று அர்ப்பணிக்கும் இதே வேளை யில், மல்லிகைப் பந்தலின் வெளியீடாக இதுவரைக்கும் 70க்கும் மேற்பட்ட பல்வேறு தலைப்புக்களில் புதிய புதிய நூல்களை வெளியிட்டுள்ளது இந்த நிறுவனம்.

மணிக்கொடி, மறுமலர்ச்சி என ஆரம்ப கால இலக் கிய இதழ்களின் வருகையைக் குறிப்பிடுபவர்கள் கூட, அந்த அந்தச் சிற்றேடுகள் புத்தகங்களை வெளியிட்டுள்ள தாகத் தகவலேதும் இல்லை.

ஆனால், மல்லிகை ஆரம்பித்த ஒரு சில ஆண்டு களுக்குள்ளேயே யாழ்ப்பாண மண்ணிலிருந்து மல்லிகைப் பந்தல் புத்தக வெளியீட்டு அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் புதிய வரலாறொன்றை ஆரம்பித்து வைத்துள்ள துடன், இடம் பெயர்ந்தும் அந்த அமைப்புச் செயற்பட்டு வருகின்றது.

எனக்கொரு மனக்குறை உண்டு.

இந்த மண்ணிலிருந்து ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியாக் கண்டங்களிலுள்ள பெரும் பெரும் நகரங்களில் இன்று நம்மவர்களில் ஏராளமானோர் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

இப்படியாக இடம்பெயர்ந்து வாழ்பவர்களில் எம்மவர் கள் பலர், தரமான இலக்கியச் சுவைஞர்களாகவும் மிளிர்ந் தவர்கள். இன்னும் சிலர் இந்த மண்ணில் வாழ்ந்து கொண் டிருக்கும் போதே, நல்ல படைப்பாளிகளாகவும் திகழ்ந்தவர்கள்.

இவர்களில் பலர் உண்மையாகவே மனம் வைத்து இந்த மண்ணில் இன்று தொடர்ந்து வெளிவந்து கொண்டி ருக்கும் வெளியீடுகளை ஆதரித்து வந்தாலே சற்று ஆறுத லாக இருக்கும்.

நேரடியாகப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களும், பொருளாதாரச் சங்கடங்களும் குறுக்கிட்டுச் சங்கடப்படுத் தலாம். ஆனால், இங்குள்ள உற்றார், உறவினர்கள் மூலம் தருவித்துக் கொள்ளலாமே. இதைச் செய்ய அவர்களில் கணிசமானவர்கள் முன் வருவதேயில்லை. அதே சமயம் தமிழ்நாட்டுக்கு வருவோர்களுடன் தொடர்பு கொண்டு, அங்கிருந்து தமக்குத் தமக்குத் தேவையான புத்தகங் களைப் பெற்றுக் கொள்வதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான தமது சொந்தப் பணத்தையே முதலீடு செய்து இங்கு தமது படைப்புக்களை நூலுருவாக்கி விட்டு, இங்கு வாழும் படைப்பாளி, அவற்றை வீட்டறைக ளில் அடுக்கி வைத்து விட்டுக் காவல் காத்துக் கொண்டி ருக்கின்றான்.

உண்மையாகவே இந்த மண்ணின் மீது பற்றாக, இலக்கிய விசுவாசம் கொண்ட நமது புலம் பெயர்ந்த நண் பர்கள், வார இறுதி நாட்களில் தத்தமது நண்பர்களுடன் சென்று ஹோட்டல் ஒன்றுக்குச் செலவழிக்கும் பணத்தில் பாதியளவை இதற்காக ஒதுக்கினாலே போதும். இங்குள்ள படைப்பாளிகளின் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கண்டு விடலாம். தரமான படைப்புக்களைச் சுலபமாகப் பெற்றுக் கொண்டு உதவலாம்.

இரண்டாயிரமாம் ஆண்டுத் தொடக்க காலத்தில் பாரிஸில் நடந்த இலக்கிய விழாவுக்கு என்னையும் மிகக் கரிசனையுடன் அழைத்திருந்தார்கள்.

அந்த இலக்கியச் சுற்றுப் பயணத்தைப் பற்றி நானொரு நூலும் எழுதியிருந்தேன். 'முப்பெரும் தலை நகரங்களில் முப்பது நாட்கள்!' என்று அந்தப் புத்தகத்திற்குத் தலைப்பு.

இந்தச் சுற்றுப் பயணத்தில் புதிது புதிதாகப் பல இலக்கிய நெஞ்சங்களை, இளந் தலைமுறையினரைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்தேன்.

பாரிஸில் என்று நினைக்கின்றேன். இலக்கிய விழா நடைபெற்று முடிந்த அடுத்த நாள், ஒரு ஹோட்டலில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த சமயம் இலக்கிய விசுவாச முள்ள சில இளம் இலக்கியத் தலைமுறையினரிடம் கதை யோடு கதையாக மறைந்த எழுத்தாளர் முனியப்பதாச னின் கதைகளை இலக்கிய நேசர் செங்கை ஆழியான் தொகுத்து வைத்துள்ளதாகவும், அந்தத் தொகுப்பை அடுத்து நான் மல்லிகைப் பந்தல் மூலம் வெளியிட இருப்பதாக வும் சொல்லி வைத்தேன்.

விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த ஐரோப்பிய நாட்டுத் தலைநகரங்களில் வசித்து வரும் ஆர்வமுள்ள சில இளைஞர்கள் வெகு உற்சாகமாகப் பாராட்டி, எனது செயலை வரவேற்றார்கள். இதில் பலர் தாமே அந்த வெளியீட்டுக்கு மறைமுகமாகவும் உதவி செய்வதாகவும் வாக்குறுதி தந்தனர்.

அந்த வாக்குறுதிகள் அத்தனையுமே செயலிழந்து போனது தான் நான் கண்ட மிச்சம்!

அந்த முனியப்பதாசன் சிறுகதைகள் வெளிவந்து இன்றுடன் ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்று பாரிஸ் மாநகரில் வாக்குறுதி தந்த இலக்கிய நண்பர்களிட மிருந்து இன்று வரை எந்த விதமான தகவலும் இல்லை!

இத்தகைய நம்பிக்கையின் ஆழமற்ற வாக்குறுதி களையும், உரையாடல்களையும் நம்பி நம்பி எப்படித் தான் எதிர்காலத்தில் செயல்பட முடியும் என்பதில் நான் இன்றும் பெரிதும் தயக்கம் காட்டி வருகின்றேன்.

இப்படி கடந்த அரைநூற்றாண்டுக் காலத்திற்கும் சற்றுக் குறைந்த காலத்தில் நான் நடைமுறையில் பட்டு வந்த அநுபவங்கள் ஏராளமானவை. இது எதிர்காலச் சந்ததிக்குப் பயன்படக் கூடியவையு மாகும். வெறும் வெத்து வேட்டு வாக்குறுதிகள் காற்றில் கல்லெறிந்த விளையாட்டாகவே கடைசிக்கட்டத்தில் மிஞ்சும்.

இன்னொரு புத்தக வெளியீட்டுச் சர்க்கஸும் இடையே நடந்தது. இந்த மண்ணை நாவினால் உழுது பண்படுத்தி யவர்கள் நாங்கள். பேனாவால் கிண்டிக் கிளறிக் குளத்தை அமைத்தவர்கள், நாங்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளுக் கும் மேலாகவே இயக்கபூர்வமாகத் தேசம் பூராகவும் திரிந்து, திரிந்து சேறள்ளிக் குளத்தைச் சுத்தப்படுத்தி, காமாந்து பண்ணி வந்தவர்கள் இந்த நாட்டு எழுத்தாளர்கள்.

நாங்கள் பாடுபட்டுக் கிண்டிய குளத்திலேயே மீன் பிடிக்க முயற்சித்தவர்தான் மணிமேகலைப் பிரசுரக் கர்த்தா ரவி தமிழ்வாணன் அவர்கள். அதிலும் புலம் பெயர்ந்த வாய்ப்பு வசதியானவர்களைப் பார்த்துப் பார்த்து அணுகி, புதிய வெளி யீடுகள் என்ற பெயரில் ஏதோ ஏதோவெல்லாம் வெளியிட்டு நம்மவர்கள் சிலரைத் திடீர் எழுத்தாளர்களாக மாற்றத் தெண்டித்தார்.

இதில் எங்களுக்குப் பிரச்சனை புத்தகங்கள் வெளியிடு வதல்ல. இந்தத் திடீர் எழுத்தாளர்களின் அவசரப் படையல் களைப் படிக்கும் தமிழகத்தவர், நமது இலக்கியத் தரத்தை இதைக் கொண்டு கணித்து விடுவார்களோ என்பதுதான் நமது நியாயமான பயம்.

அந்தப் பம்மாத்து இலக்கிய மோசடியும் இடையே சாயம் வெளுத்து விட்டதால், இந்த மண்ணில் தோல்வியைத் தழுவிக் கொண்டது. குறுக்கு வழிப் பிரவேசங்கள் இறுதி யில் தோல்வி அடைவது நிச்சயம்.

இன்னொரு தமிழகப் பிரசுரக் களத்தையும் நாம் ரொம் பக் கவனமாக அவதானித்துக் கொண்டு வருகின்றோம்.

அது 'காலச் சுவடு' பிரசுராலயம். மாத இதழ் காலச் சுவடு புத்தகங்களை இன்று வெளியிட்டு வருகின்றது. காலச்சுவடு சஞ்சிகையைப் பிரபல எழுத்தாளர் சுந்தர ராமசாமி அவர்கள் முன்னரே வெளியிட்டு வந்துள்ளார். இடையே நின்று போனது. சுந்தர ராமசாமியின் மகன் கண்ணன் இன்று அச் சஞ்சிகையைப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார். நடைமுறைச் செயல்பாடுகள், கருத்துக்கள் மூலம் கருகிக் கிழடு தட்டிப் போய்விட்ட, பழைய பார்ப்பானீ யத்திற்கு மிண்டு கொடுத்துத் தூக்கிவிட, மிக மிக நுட்ப மாகச் செயல்பட்டு வருவதுதான் கண்ணனின் ராஜ தந்திரக் கண்ணோட்டம். புதிய பார்பானிய உத்தி!

அதற்குச் சர்வதேச அங்கீகாரம் தேவை. தகப்பனின் பிரபலம் அதற்குப் பக்கபலம்.

வசதி கருதி, பொருளாதாரப் பின்புலத்தைப் பக்க பலமாகக் கொண்டு, நம்மவர்கள் சிலரது படைப்புக்களை நூலுருவில் வெளியிட ஆவன செய்து வருகிறார், கண்ணன்.

இது ஒரு வசீகரிக்கும் வெளியீட்டுத் திட்டம். இதில் சங்கடமென்னவென்றால் யார் இந்த மண்ணில் பிறந்து, இந்த மண் மணக்க எழுதுகின்றார்களோ, அவர்களது எழுத்துக்கள் பரவலாக எமது மக்கள் மத்தியில் சென்ற டையாது. அத்துடன் அதன் விலை சென்னையில் நூறு ரூபா என்றால் இலங்கையில் அந்த நூலின் விலை 350/= மூன்ற ரைச் சதவிகிதம் விலை.

சாதாரணப் பொது மகன் அதை வாங்கி வாசிப்பானா? அல்லது விட்டுத் தள்ளுவானா?

புத்தகம் வந்தது சரி நமது மக்களிடம் அது சென்ற டையுமா? மாட்டாதே!

இங்கும் ஒரு பதிப்பை வெளியிடட்டும்.

சொல்வது எனது இலக்கியக் கடமை சொல்லி விட்டேன்.

- டொமினிக் ஜீவா

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*


**Millers Ltd**
Established 1854

121, Biyagama Road, Kelaniya, Sri Lanka
Tele Phone : (94 11) 2904400
Fax : (94 11) 2904499 / 2904422
E-mail : millers@millerslimited.com


## SOLE AGENTS / DISTRIBUTORS

- Kodak
  - Photographic Products
  - Motion Picture (Negative/ Positive Film, Sound Magnetic Tape)
  - Health Imaging ( X Ray Film & Equipment)
  - Business Imaging (Scanners & Micro Film)
- **Noritsu** Minilabs
- **Odonil** Air Freshener
- **Sanifresh** Toilet Disinfectant Liquid
- **Tang** Flavoured Powdered Drink
- **Classic** vegetarian Jelly
- Kraft
  - Cheese
  - Mayonnaise
  - Peanut Butter
  - Vegemite
- **Milkana** Cheese
- **Post** Breakfast Cereal
- **Bonlac** Non Fat Milk Powder
- **Classic** Canned Fish
- **Blue Bird** Canned Fish
- **Toblerone** Chocolates
- **Cadbury** Chocolates

# ‘ஈழநாடு’ இதழின் புனைகதைப் பங்களிப்பு




செங்கைஆழியான் க. குணராசா





ஈழத்துத் தமிழ் இலக்கியத்தினை 1930 -களிலிருந்து 1958 வரை ஆரோக்கியமாக முன்னெடுத்துச் சென்ற ‘ஈழகேசரி’ வார இதழின் தொடர்ச்சியாக, இலக்கியப்பணி ஆற்றுவதற்காக வெளிவந்த ஏடு ‘ஈழநாடு’ என்பேன். ஈழகேசரி தனது வாழ்வை 1958 இல் நிறைவு செய்து கொள்ள, 1959, பெப்ரவரி, 09 இலிருந்து ஈழநாடு வெளிவரத் தொடங்கியது. ஈழகேசரி ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்ததைப் போல, அடுத்த கட்ட இல்க்கிய நகர்விற்கான களத்தை ஈழநாடு அமைத்துக் கொடுத்தது. ஈழகேசரிக்கும் ஈழநாட்டிற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை இவ்விடத்தில் நோக்குதல் அவசியமெனக கருதுகின்றேன்.

1930 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து 1958 ஆம் ஆண்டு ஜுன் 06 ஆந் திகதி வரை ஈழகேசரி என்ற வாரஏடு வெளிவந்தது. ஈழத்தின் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சியில் மிக்க அக்கறையோடு இருபத்தெட்டு ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது. 1959 ஆம் ஆண்டு பெப்ரவரி 09 ஆந் திகதியிலிருந்து 1995 வரை ஈழநாடு என்ற ஏடு வெளிவந்தது. அது 1961 பெப்ரவரி 03 ஆந் திகதி வரை வார ஏடாகவும் அதன் பின்னர் நாளிதழாகவும் தன் செயற்பாடடினை மாற்றிக் கொண்டது. ஏறக்குறைய முப்பத்தாறு வருடங்கள் இந்த ஏடு தனது அரசியல், சமூக, பொருளாதார இலக்கியப் பணியினை முன்னெடுத்துச் சென்றுள்ளது.

ஈழகேசரியும் ஈழநாடும் யாழ்ப்பாணத்தை நிலைக்களனாகக் கொண்டு வெளிவந்தனவாயினும் சகல துறைகளிலும் இலங்கை முழுவதையும் ஒருங்கிணைத்துத் தகவல்களை வெளியிட்டு வந்துள்ளன. இலக்கியப் பகுதிகளைப் பொறுத்தளவில் ஈழத்தின் அனைத்துப் பிரதேசப் படைப்பாளிகளும் இவ்விரு ஏடுகளிலும் தம் ஆக்கங்களைப் படைத்துள்ளனர்.

ஈழகேசரி வாரஏட்டினை ஆரம்பித்து வெளியிட்ட பெருமகனாகக் குரும்பசிட்டி பொன்னையா என்பவர் இருந்தார். அதேபோல ஈழநாட்டினை ஆரம்பித்து வெளியிட்ட பெருமகனாக க.சி.தங்கராஜா என்பவா விளங்கினார். ஈழத்துப் பத்திரிகை உலகினைப் பொறுத்தளவில் இவ்விரு பெரியார்களும் மறக்க முடியாதவர்கள்.


க.சி.தங்கராஜா


இராஜ அரியரத்தினம்

ஈழகேசரியின் நிறைவுக் காலகட்டத்து ஆசிரியராக விளங்கிய இராஜ.அரியரெத்தினமே, ஈழநாடு வார ஏட்டின் முதல் ஆசிரியராக வந்து அமர்ந்தார். அதனால் ஈழகேசரியின் இலக்கியப் பணியைத் தொடர்ந்து ஆற்றுவது சாத்தியமானது. நவீன இலக்கியத்திற்கு ஆரோக்கியமான தடமும் தளமும் அமைத்துக் கொடுத்ததோடு, முன்னோடிப் படைப்பாளிகளை இனங்காணும், ஒரு காலகட்டத்து இலக்கியச் சக்தியாக ஈழகேசரி விளங்கியது. ஆனால் ஈழநாடு தனித்து அப்பெருமையை எடுத்துக்கொள்ள அக்கால இலக்கியச்சூழலில் வெளிவந்த ஏனைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனுமதிக்கவில்லை. எனினும், 1959 – 1995 ஆம் கால கட்டத்தின் இலக்கியச் சக்திகளில் ஒன்றாக ஈழநாடு விளங்கியது எனக கூறலாம்.

ஈழகேசரியின் குறிக்கோள் முதலாவது இதழில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ‘அடிமைக் குழியிலாழ்ந்து அந்நியர் வயப்பட்டு, அறிவிழந்து, மொழி வளங்குன்றி, சாதிப்பேய்க்கு ஆட்பட்டு, சன்மார்க்க நெறியிழந்து, உன்மத்தராய், மாக்களாய் உண்டு உறங்கி வாழ்தலே கண்கண்ட காட்சியெனக் கொண்டாடுமிக்காலத்தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் மிகையாகாது.’ அதற்காகவே ஈழகேசரி ஆரம்பிக்கப்பட்டதென்கிறார். ஈழநாடு தனது முதலாவது இதழில் தன் நோக்கங்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: ‘சிக்கல்கள்

நிறைந்த இன்றைய நிலையில் எத்திசை நோக்கிச் செல்ல வேண்டுமெனத் தெரியாது தமிழ்பேசும் மக்கள திகைத்து நிற்கின்றனர். இவ்வேளையில் 'உண்மை தெய்வீகமானது. தர்மத்தை இலக்காகக் கொண்டு உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கவும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஈழநாடு உதயமாகியுள்ளது. சாதிமதப் பாகுபாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை நீக்கித் தமிழ் மக்களை ஒருமுகப்படுத்தி ஆக்க பூர்வமான முயற்சிகளில் வழிப்படுத்துவதற்கு ஈழநாடு பணி செய்யும்.' என க.சி. தங்கராஜா தனது முதலுரையில் 'நமது நோக்கம்' என்ற தலைப்பில் எழுதியுள்ளார். அதில் அரசியல், சமூகம், பொருளாதாரம், இலக்கியம் குறித்து விபரித்துள்ளார். 'தமிழ் மக்களிடையே நிலவி வரும் பலதரப்பட்ட கருத்துக்களுக்கு ஓர் அரங்கமாக உதவுவதற்கும், தெளிவாகச் சிந்தித்து நிலைமைகளை நன்கு ஆராய்வதற்காகவுமே இவ்வார இதழ் வெளிவருகின்றது. இத்தகையதொரு வெளியீடு மக்களுக்கு அவசியமென்பதில் கருத்து வேற்றுமைகளுக்கு இடமேயில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் மலை நாட்டிலும் வாழும் தமிழ்பேசும் மக்கள் தங்கு தடையின்றி தங்கள் உளப்பாங்கை வெளியிடுவதற்கு இன்று ஒரு பத்திரிகை அவசியம் என்பதை இலங்கை வாழ் தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வில் அக்கறையுள்ள அனைவரும் ஒப்பக்கொள்வர். இந்த அவசியத்தேவையை நிறைவேற்றுவதற்காகவே மிகுந்த இன்னல்களுக்கிடையே ஈழநாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது' என்கிறார். 'சுதந்திர வார இதழ்' என்ற மகுடத்துடன் ஈழநாடு, 1959 பெப்ரவரி 09 ஆந்திகதி இருபது சத விலையுடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் பதினாறு பக்கங்களுடன் வெளிவரத் தொடங்கியது.

ஈழத்தின் மூத்த அரசியலறிஞர் சேர். பொன். இராமநாதன் அவர்களின் பல்துறைப் பணிகளைக் கவனத்திற்கு எடுத்து அவரை இலங்கையின் சிங்கமாகக் கருதித் தனது பத்திரிகைக்கு ஈழகேசரி என்று பொன்னையா பெயரிட்டார். அரசியல் நிலையில் ஒற்றையாட்சியா, சமஷ்டியா ,மாகாண சுயாட்சி முறையா என்ற வினாக்களுக்கு விடையாக தூர நோக்கோடு, ஈழநாடு என்ற பெயர் அமரர். தங்கராஜாவால் சூட்டப்பட்டதென முதலிதழிலிருந்து அறியலாம்.

ஈழநாடு 1961 பெப்ரவரி 03 ஆந்திகதி வரை வார இதழாக வெளிவந்தது. அதன் பின்னர் 1961 பெப்ரவரி 11 சனிக்கிழமையிலிருந்து 1995 வரை தினசரியாக மாறியது. அவ்வகையில் இலங்கையின் முதலாவது பிராந்தியத் தினசரிப் பத்திரிகையாக ஈழநாடு அமைகின்றது.

ஈழகேசரி போன்று ஈழநாட்டிலும் தமிழக அறிஞர்களது ஆக்கங்கள் ஆரம்பத்தில் கூடுதலாக இடம் கொண்டன. பின்னர் படிப்படியாக ஈழத்துப் படைப்புகளின் களமாக ஈழநாடு மாறியது.

முதலாவது ஈழநாடு இதழ் இருபது பக்கங்களைக் கொண்டிருந்தது. யோகி சுத்தானந்தபாரதியார், முருகையன், நாவற் குழியூர் நடராஜன், இனியன் முதலியோரின் கவிதைகளும், க.இராமச்சந்திரன் (அருள்வழி), டாக்டர் ஜி. விக்னராஜா (எமது பொருளாதார வளர்ச்சி), பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் (பொங்கல் விழாவின் தத்துவம்), கனகசெந்திநாதன் (நெஞ்சு சொல்லும் வார்த்தை), ச.அம்பிகைபாகன் (நம்நாட்டுக்கல்வி முறை), வி.சி.கந்தையா ( மட்டக்களப்புத் தமிழ்க் குரவை), க.நவரத்தினம் (ஈழநாடு), தேவன்-யாழ்ப்பாணம் (ஆராரோ ஆரிவரோ), மயில்வாகனன் (ஆப்ரகாம்லிங்கன்) முதலான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ரா.பாலகிருஸ்ணன் (சூழ்நிலை), வ.அ.இராசரத்தினம் (வீரன் துயர்), சுயா (நான் விலை மகளா?) ஆகிய சிறுகதைகள் முதலிதழில் வெளிவந்துள்ளன. சிறுவர் பகுதி ஒரு முழுப் பக்கத்தை எடுத்துள்ளது. இவற்றைவிட வாழ்த்துக்கள், தலையங்கம், உலகநிலை, வரிவிளம்பரம், முழுப்பக்க சினிமா விளம்பரம் என்பனவும் முதலிதழில் உள்ளன.

ஈழநாடு இதழின் பல்துறைப்பங்களிப்புகள் குறித்து விரிவாக ஆராய முடியும். எனினும் புனைகதைத் துறைக்கு அதன் பங்களிப்பு யாது என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாதலால் அதனை மட்டுமே நோக்குவோம்.

### ஆய்வுப்பரப்பு

1959 ஆம் ஆண்டிலிருந்து 1995 வரை ஈழநாடு ஏடு யாழ்ப்பாணத்தின் தேசியப் பத்திரிகையாக வெளிவந்துள்ளது. மொத்தமாக 36 வருடங்கள் அது தனது பயணத்தை நடாத்தியுள்ளது. இக்காலகட்டத்தின் அரசியல், சமூகமாற்றங்களும், யுத்த சூழ்நிலைகளும் ஈழநாட்டின் பயணத்தைப் பாதித்துள்ளன. 1973 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மீண்டும் எரிந்தபோது ஈழநாட்டுக் காரியாலயம் எரியூட்டப்பட்டு அழிவுற நேர்ந்தது. 36 ஆண்டுகள் வெளிவந்த ஈழநாடு இதழ்களில், 1961, 1973, 1974,

1975, 1976 ஆகிய ஐந்தாண்டு இதழ்கள் எனது ஆய்வுக்குக் கிடைக்கவில்லை. அவற்றினைப் பெறும் வரை காத்திருக்கில், அலை ஓய்ந்த பின் கடலில் குளிக்கக் காத்திருக்கும் பரதேசியின் நிலைக்குள்ளாவேன். மேலும், 1961, 1967, 1968, 1982, 1988, 1991, 1992, 1993, 1994 ஆகிய ஒன்பது ஆண்டுகள் ஈழநாடு வாரமலர் வெளி யிடப்படவில்லை. தினசரி மட்டுமே வெளி வந்தது. ஆக வெளிவந்த ஈழநாடு இதழ்களில், எனது ஆய்வுக்குக் கிட்டாது போன ஐந்தாண்டுகளுக்கான இதழ்களை விடுத்து, ஏனையவற்றின் புனைகதைப் படைப்புகள் என் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

## ஈழநாடு ஆசிரியகுழு


கே. பி. ஹரன்

ஈழநாடு தாபனத்தின் முதல் தலைவராக க.சி. தங்கராஜா விளங்கினார். அவர் வாழைச் சேனைக் காகிதத் தொழிற் சாலையின் பிரதம முகாமை யாளராகப் பொறுப்பேற்றுச்செல்ல அரசு பணித்தபோது, ஈழநாடு தாபனத்தின் தலைவராக அவரது சகோதரர் டாக்டர் கே. சி சண்முகரெத்தினம் பொறுப்பேற்றார். அவர் 1966 இல் மரணமடைய நேர்ந்தது. அதன் பின்னர் தலைவர் பொறுப்பினை ஓய்வு பெற்ற அதிபர் எம்.. வைரமுத்து ஏற்றுக்கொண்டார். அவரின் பின்னர் கட்டிடக்கலைஞர் வி. எஸ். துரைராஜாவும், பிரபல வழக்கறிஞர் எஸ். சத்தியேந்திராவும் பணிப்பாளர் களாக விளங்கினர். ஈழநாட்டின் இருபதாவதாண்டு நிறைவின்போது பணிப்பாளர் சபை சற்று விரிவாக் கப்பட்டது. அதில் கண் வைத்திய நிபுணர் டாக்டர் ஆனந்தராஜா, ஸ்ரீபொன்னம்பலவாணேசர் ஆலயதர்ம கர்த்தா ச.பத்மநாதன், தொழிலதிபர் இரா.யோகராசா, பா.சிவானந்தன், ஓய்வு பெற்ற அதிபர் து. சினீவாசகம் ஆகியோர் அமைந்தனர். து. சீனிவாசகம் முழுநேரப் பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.


சசிபாரதி

ஈழநாடு வார இதழின் முதல் ஆசிரியராக விளங்கியவர் மூத்த இதழாசிரியர் இராஜ அரியரெத்தினம் ஆவார். தினசரியாகிய பின்னர் பிரதம ஆசிரியராக கே.பி. ஹரன் வந்து அமர்ந்தார். அவரோடு வீரகேசரிப் பண்ணையிலிருந்து பெரியதொரு அணியே வெளியேறி ஈழநாட்டில் வந்து இணைந்தது. தினசரியின் ஆசிரியப் பொறுப் பினை கோபாலரெத்தினம் (கோபு) ஏற்றிருந்தார். அவரோடு பி.எஸ். பெருமாள், திருமதி குணமணி, சசிபாரதி சபாரத்தினம் ஆகியோர் காலத்திற்குக் காலம். ஈழநாடு வாரமலரின் ஆசிரியர்களாக அமர்ந்துள்ளனர். சில்காலம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபராக விளங் கிய என். சபாரத்தினம் ஈழநாட்டின் ஆசிரியராக இருந்துள்ளார். சசிபாரதி சபாரெத்தினத்தின் ஈழநாடு வாரமலர் ஆசிரியக் காலம் (1983 ஒக்டோபர் தொட்டு) ஈழத்துப் புனைகதை இலக்கியத்திற்கு ஒரு மறுமலர்ச்சிக் காலமாக அமைந்திருந்தது. ஆ. கந்தசாமி, ரஜனி குகநாதன், மகான் மகாதேவா, பாமாராஜகோபால் முதலானோர் உதவி ஆசிரியர்களாக விளங்கினர்.

## சிறப்பு அம்சங்கள

பிரதம ஆசிரியர் ஹரன், ஐயாறன் என்ற பெயரில் இப்படியும் நடக்கிறது என்ற தலைப்பில், ஈழநாட்டில் ஒரு கலம் எழுதிவந்தார். சமூக நலனோம்பு விடயங்களை அக்கலத்தில் அவர் சிறப்பாக எழுதினார்.

மகான் மகாதேவா, ஊடுருவி என்ற பெயரில் இப்படியும் நடக்கிறது என்றொரு கலத்தை நாளாந்தம் வாய்த்தபோது எழுதி வந்தார்.

வீரகேசரிக்கு எவ்வாறு நிருபர் செல்லத்துரை எழுச்சி கொடுத்தாரோ அதே போல ஈழநாட்டிற்கு அதன் அலுவலக நிருபர் க. யோகநாதன் கவர்ச்சி கொடுத்தார். கோகிலாம்பாள் கொலை வழக்கு, தமிழரசுக் கட்சியினரின் கச்சேரி சத்தியாக்கிரகம் ஆகிய காலத்துச் செய்திகளை அவர் தொகுத்து அளித்த முறை ஈழநாட்டின் விற்பனையில் சாதனையை ஏற்படுத்தியது.

ஈழநாடு இதழ்களை எழுத்துப்பிழையின்றி செப்பமாக வெளிவரச் செய்த பெருமை ஒப்பு நோக்குநர் ஏ.வீ. மாணிக்கத்திற்குரிய பெரும் பணியாக விருந்தது

ஈழகேசரிக்கு எப்படி ஒரு சபாரத்தினம் நல்லதொரு முகாமையாளராக விளங்கினாரோ அதுபோல ஈழநாட்டிற்கு மிகக் கறாரான முகாமையாளராக சிவானந்தம் என்பார் அமைந்தார்

ஓய்வுபெற்ற அதிபர் என். சபாரத்தினம் ஈழநாட்டின் ஆசிரியராக விளங்கிய காலவேளையில் எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கங்கள் தனிச்சிறப்பானவையாக விளங்கின. பயன்படுத்திய


சொற்கள் கனமானவையாயும் புதியனவாயும் இருந்தன. அவரது ஆங்கிலப் புலமையும் ஆங்கில வழி சிந்தித்துத் தமிழில் எழுதியபாங்கும், உதவி ஆசிரியர்களைக் கொண்டு எழுதுவித்துத் தானே சிரமப்பட்டு செப்பனிட்டு வெளியிட்ட சிறப்பும் விதந்துரைக்கப்படுகின்றது.

வவுனியா அடங்காத் தமிழர் தலைவர் சுந்தரலிங்கத்தின் 'ஈழத்துப் பாட்டனாரின் கடிதங்கள்' என்ற தொடருக்காகவும்,, சிரித்திரன் சுந்தர் சிவஞானசுந்தரத்தின் 'கார்ட்டுன் உலகில் நான்' என்ற தொடருக்காகவும் ஈழநாடு என்றும் பெருமை கொள்ளலாம். அவை ஈழநாட்டில் தொடராக வெளிவந்து பத்திரிகைக்கு ஒரு தனிச்சோபை தந்தன.

## ஈழநாடு புனைகதைத்துறைப் பங்களிப்பு

(1) ஈழநாட்டின் 36 வருட வரலாற்றில் 12 குறுநாவல்களும் 18 நாவல்களும் தொடராக வெளிவந்துள்ளன. ஈழநாட்டின் முதலாவது தொடர் கதையை எழுதியவர் ஈழகேசரியில் ஏற்கனவே பலநாவல்களைத் தொடராக எழுதிய மூத்த எழுத்தாளர் கசின் சிவகுருநாதனாவார். 'தேடிவந்த செல்வம்' என்ற தலைப்பில் அத்தொடர் அமைந்தது. வழமைபோல காதலுணர்வுக்கும் குடும்ப உறவுக்கும் இத்தொடரில் கசின் முதன்மை அளித்தார். ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவராகக் கருதப்படும் அமரர் கசின் நிறைவாக எழுதிய தொடர் இதுவாகும். எனக் கருதுகிறேன்.


கசின்


வ .அ. இராச ரத்தினம்

ஈழத்தில் ஆரோக்கியமான சிறுகதைகள் பலவற்றை அளித்த அமரர் வ.அ. இராச ரெத்தினத்தின் (தோணி) நாவல் 'துறைக்காரன்' 1959 செப்டம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை ஈழநாட்டில் வெளிவந்தது. 'என் துறைக்காரன், மனிதவாழ்க்கையை நிதர்சன மாகக் காண்கிறான். அமெரிக்க ஆசிரியரின் தொங்கு ஊஞ்சலில் ஆடும் மனிதன் பிரபஞ்சத்தைக் காண்பது போல எனது துறைக்காரனும் தன் தோணியில் இருந்து கொண்டு அவனைச் சுற்றியுள்ள உலகைக் காண்கிறான். பிரெஞ்சு ஆசிரியரின் தபாற்காரனும், அமெரிக்க ஆசிரியரின் கடலும் கிழவனும் போல..'என்ற முன்னுரையுடன் இந் நாவல் ஆரம்பமாகின்றது. இது வ.அ.இ.வின் வித்தியாசமான நாவல் மட்டுமல்ல ஈழத்து நாவல்களிலும் வித்தியாசமானது. 'கொழு கொம்பு' நாவலில் அவர் எட்டாத உச்சத்தை இந்த நாவலில் அவர் அடைந்துள்ளார். அவர் உயிரோடு இருக்கும் போது இந்த நாவலின் பிரதிகளை எடுத்துத் தருமாறு என்னிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார். எடுத்து அனுப்புவதற்கிடையில் அமரராகிவிட்டார். எனினும், இன்று அவரது நண்பர் எஸ். பொன்னுத்துரை என்னிடமிருந்து பிரதிகளைப் பெற்று தனது 'மித்ர' வெளியீடாகத் துறைக்காரனை வெளியிட்டுள்ளார். கிழக்கிலங்கையின், குறிப்பாக மகாவலிகங்கைக கரையின் களத்தினை இந்நாவல் சிறப்பாகச் சித்திரிக்கின்றது.

1964, ஜனவரி, 05 ஆந்திகதி ஈழநாடு இதழில் நீலாம்பரி என்பவர் 'யாத்திரிகன்' என்றொரு தொடர்கதையை எழுதியுள்ளார். இதே பெயரில் சிலசிறுகதைகளையும் ஈழநாட்டில் எழுதியுள் ளமையை அவதானிக்க முடிகின்றது. யார் இந்தப் புனைப் பெயரில் மறைந்து நின்று எழுதியவர் என்று அறிய முடியவில்லை.


முனியப்பதாசன்


செங்கை ஆழியான்

'கலைச்செல்வி' சிற்பி சிவ.சரவணபவன் கண்டெடுத்த சிறுகதை முத்து 'முனியப்பதாசன்' ஆவார். 'ஈழத்தின் சிறந்த சிறுகதைகள் மூன்றினைக் கூறுங்கள்' என்று சிற்பியிடம் கேட்டால் அவர் முனியப்பதாசனின் மூன்று சிறுகதைகளையே கூறுவார். முனியப்பதாசனின் திறமையைக் கண்டறிந்து ஈழ நாட்டில் அவர் சிறுகதைகளைத் தொடர்ந்து வெளியிட்டுப் பெருமையீட்டியவர் கே.பி ஹரன் ஆவார். இன்று முனியப்பதாசன் என்ற அற்புதப்படைப்பாளி எம்மிடையே இல்லை. தனது மூன்று தசாப்தங்கள் நிறைவுறாத அகவையில் ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு அவர் அளித்திருக்கின்ற செழுமை மிக அதிகமாகும். இந்த ஆற்றல்மிகு படைப்பாளியின் சிறுகதைகளைத் தேடி எடுத்து, தொகுத்து மல்லிகை ஜீவா மூலம் நூலுருப் பெற வைத்தவன் நான் என்பதில் எனக்குப் பெருமை. அவர் எழுதிய ஒரேயொரு நாவல்தான் 'காற்றே நீ கேட்டிலையோ?' என்பதாகும். அது ஈழநாடு இதழில் தொடராக வெளி வரவிருந்தது. மூன்று அத்தியாயங்கள் வெளிவந்த நிலையில் அந்நாவலின் கதைக்களப்பிரதேசமக்கள் சிலரின் எதிர்ப்பால் இடை நிறுத்தப்பட்டது. ஓர் அற்புதமான

நாவலை ஈழத்துப் புனைகதை உலகு இழந்து போனது.

ஈழநாடு தனது பத்தாவது நிறைவை முன்னிட்டு நடாத்திய நாவல் போட்டியில் மூத்த படைப்பாளி அமரர் சு.இராசநாயகத்தின் 'பிரயாணி' என்ற நாவலும், செங்கை ஆழியானின் 'போராடப் பிறந்தவர்கள்' நாவலும் முதற் பரிசுக்குரிய வையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஈழத்தின் கனதியான சிறுகதை எழுத்தாளர் சு.இராசநாயக த்தின் 'பிரயாணி' சமூக யதார்த்தப் படைப்பாகும். அது இன்னமும் நூலுருப் பெறவில்லை. நூலுருப் பெறில் ஈழத்து நாவல் உலகிறகுப் புதிய பரிமாணம் சேர்க்கும்.

ஈழநாடடில் எண்ணிக்கையில் அதிகமான நாவல்களை எழுதியவர் செங்கைஆழியான் ஆவார். போராடப்பிறந்தவர்கள், கிடுகுவேலி, கடல்கோட்டை, கந்தவேள் கோட்டம், அக்கினி, யாககுண்டம் ஆகிய ஏழு நாவல்கள்' ஈழநாட்டில் வெளிவந்துள்ளன. அவை வெளிவந்த காலத்தில் அந்நாவல்களுக்கு வாசக வரவேற்பு நிறையவிருந்தது. போராடப்பிறந்தவர்கள் என்ற நாவல் பின்னர் இரவின் முடிவு' என்ற தலைப்போடு வீரகேசரி வெளியீடாக வெளி வந்தது. யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளக் குடும்பம் ஒன்றின் வாழ்க்கைப் போராட்டங்களை இது சித்திரிக்கின்றது. ஏனைய நாவல்கள் அனைத்தும் நூலுருவாக வெளிவந் துள்ளன. சகோதரிக்களுக்காக வெளிநாடு சென்று சீதனம் உழைக்கும் தமையனையும் அவற்றைப் பொறுப்பற்ற முறையில் செலவிடும் தாய் ஒருத்தியையும் கலியாணம் கட்டிய மூன்றாம் மாதமே கணவன் வெளிநாட்டிற்குச் சென்று விட இங்கு தவிக்கும் மனைவி ஒருத்தியையும் பற்றிய கதை கிடுகு வேலி. ஈழநாட்டில் வெளிவந்தபோது மிகப்பர பரப்பாகப் பேசப்பட்ட தொடர் இதுவாகும். கடல்கோட்டை சரித்திர நாவலன்று. அது நாவல் சரித்திரம் எனப் பாராட்டப்பட்டது. தென்னிலங்கை யிலிருந்து சப்புமல் குமரயவின் யாழ்ப்பாணப் படையெடுப்பையும் கந்தவேள் கோட்டம் உருவான விதத்தையும் கந்தவேள் கோட்டம் நாவல் விபரிகி ன்றது அக்கினி ஒரு சாதிய நாவல். வெளிநாடு களுக்குப் பிள்ளைகளை அனுப்பிவிட்டு, ஏக்கங்க ளோடு வாழும் பெற்றோரின் ஏலாமையை யாககுண்டம் சித்திரிக்கின்றது. இந்த நாவல்கள் ஈழநாடு இதழில் தொடர்களாக வெளிவரக் காரணமாக அமைந்தவர் ஈழநாடு வாரமலரின் ஆசிரியராக விளங்கிய சசிபாரதி சபாரத்தினமாவார். செங்கை ஆழியானின் ஒரு தொடர் முடிந்தகையோடு அடுத்த தொடருக்கான விளம்பரத்தினைத் தானாகவே வெளியிட்டு விடுவார். வாராவாரம் அத்தியாயங்களை எழுதுவித்து வாங்கி வெளியிட்டு வந்தார்.

ஈழநாடு நடாத்திய பத்தாவதாண்டு நாவல் போட்டியில் இரண்டாவது பரிசினைப் பெற்றது அமரர் அகஸ்தியரின் 'எரிகோளம்' என்ற நாவலாகும். அது 1971 செப்டம்பர் 17 ஆந் திகதியிலிருந்து ஈழநாடு இதழ்களில் தொடராக வெளிவந்தது. யாழ்ப்பாண மக்களின் பேச்சு வழக்கினை இறுக்கமாகக் கையாண்டு எழுதப்பட்ட நாவல் எரிகோளம் ஆகும்.

ஈழத்தின் பிரபல்யமான நாவலாசிரியர் அமரர் கே.டானியல் எழுதிய மையக்குறி, முருங்கை யிலைக்கஞ்சி என்ற இரண்டு நாவல்கள் ஈழநாடு இதழ்களில் தொடராக வெளிவந்துள்ளன. இவ்விரு நாவல்களும் டானியலின் வழமையான நாவல்க ளிலும் பார்க்க வித்தியாசமானவை. சாதிப் பிரச் சினைகளைத் தூக்கலாகப் பேசாத நாவல்கள். பண்டாரி என்ற றிக்ஷோ இழுக்கும் தொழிலாளிக்கும், கூத்துக் கொட்டகை நடாத்தும் சோமசுந்தரத் திற்கும் இடையிலான உறவினை மையக்குறி விபரி க்கின்றது. கமக்காரர் ஒருவரின் மன ஓர்மத்தினை முருங்கையிலைக் கஞ்சி சித்திரிக்கின்றது. தனது நாவல்களைத் தொடராக வெளியிட விரும்பாதவர் டானியல் எனது வற்புறுத்தலால் ஈழ நாட்டில தொடராக எழுத ஒப்புக் கொண்டார். சாதியச் சிந்தனைக்கு அப்பால் தன்னால் எழுதமுடியும் என்பதை முருங்கையிலைக் கஞ்சி மூலம் நிருபித்தார்.

துரை ஏங்கரசு என்ற எழுத்தாளரின் ஈழநாட்டில் வெளிவந்த 'அவலங்கள்' என்ற தொடர்கதை யாழ்ப் பாணச் சமூக வாழ்க்கையின் ஒரு பக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.





கே. டானியல் எஸ். அகஸ்தியர்

ஈழத்தின் சிறுகதைப் படைப்பாளியாக இனங்காணப் பட்டிருக்கும் து.வைத்தி லிங்கத்தின் 'பூம்பனிமலர் கள்' என்ற நாவல் புதியதொரு களத்தினை நன்கு சித்திரிக்கின்றது. உண்மையிலேயே மிகவும் வித்தியாசமான நாவல் இதுவாகும். கச்சேரிப் பணிமனையின் உத்தியோகத்தர்களின் நடத்தை களைப் புட்டு வைக்கின்ற நாவல். உத்தியோகம்

பார்க்கும் பெண்ணொருத்தி எவ்வாறு மேலதி காரியினால் மோசம் செய்யப்படுகின்றாள் என்பதை அற்புதமாகவும் யதார்த்தமாகவும் பூம்பனிமலர் விபரிக்கின்றது. சரளமான நடையில் இந்த நாவலைத் து.வைத்திலிங்கம் நகர்த்தி வெற்றி கண்டுள்ளார். பெண்கள் அரச வேலைத் தளங்களில் படும பாலியல் அவலங்களை இந்த நாவல் போன்று வேறெந்த நாவலும் பேசவில்லை.


து.வைத்திலிங்கம்


தெணியான்

நாடறிந்த படைப்பாளிகளில் ஒருவரான தெணியானின் 'பரம்பரை அகதிகள்' ஈழநாடு வெளியிட்ட நாவல்களில் குறிப்பிடத்தக்கது. அது பேசுகின்ற சாதியப் பிரச்சினைகள் கதையோடு இயல்பாக நகர்கின்றன. வெளித் தோற்றத்தில் சாதியத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தது போன்ற பிரமைகள் ஏற்படுத்தும் சமூக நடைமுறைகளின் தாக்கங்கள், இன்னமும் ஆழ் மனவடுக்களாக எஞ்சி நிற்கின்றன என்பதைத் தெணியான் தன் நாவல்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.


கோகிலா மகேந்திரன்

ஈழத்தின் கவன ஈர்ப்புக் குரிய நாவலாசிரியை கோகிலா மகேந்திரன் ஈழநாடு இதழில் 'தூவானம் கவனம்' என்றொரு நாவலைப் படைத்துள்ளார். வெளிநாட்டுத் தொடர்பால் நமது சமூகம் எதிர் கொள்ளவிருக் கின்ற 'எய்ட்ஸ் பிரச்சினையைத் துணிச்சலாகக் கூறும் நாவல். அவர் ஈழநாட்டில் நல்ல சில சிறுகதைகளையும், 'நிர்ப்பந்தங்கள்' என்றொரு குறு நாவலையும் படைத்துள்ளார் வேறும் சிலரோடு சேர்ந்து குறுநாவற் கூட்டு முயற்சிகளிலும் தன் எழுத்தாற்றலைக் காட்டியுள்ளார்.

### குறுநாவல்கள்

ஈழநாட்டில் ஈழத்துப் படைப்பாளிகளால் எழுதப் பட்ட பன்னிரண்டு குறுநாவல்கள் வெளிவந்துள்ளன. முதலாவது குறுநாவலான 'சித்திரா பௌர்ணமி' 1964 ஏப்பிரல் 12 ஆம் திகதியிலிருந்து நாவலாசிரியர் செங்கை ஆழியான் எழுதியுள்ளார். நா யோகேந்திரநாதன் என்பவர் 'வானத்தாமரை' என்றொரு குறுநாவலை எழுதியுள்ளார். அகஸ்தியரின் 'நெஞ்சிலிட்ட நெருப்பு', மட்டக் களப்புப் படைப்பாளி அன்புமணியின் 'தீபச்சுடர்' என்பன குறிப்பிடத்தக்க குறுநாவல்களாகப் படைக்கப்பட்டுள்ளன. கோகிலா மகேந்திரன் 'நிர்ப்பந்தங்கள்' என்றொரு குறுநாவலையும், ரஜனி குகநாதன் 'தீர்ப்பு' என்றொரு குறுநாவலையும் எழுதியுள்ளனர். ரஜனி குகநாதன் இன்று, 'பாரிஸ் ஈழநாடு' என்ற பத்திரிகையையும், வேறு ஊடகத்துறைகளையும் நடாத்தி வருகின்ற தொழில் அதிபராக விளங்குகிறார். கோப்பாய் எஸ்.சிவம் என்பவரின் 'கரைசேரும் கட்டு மரங்கள்', இணுவையூர் சிதம்பா திருச்செந்திநாதனின் 'இருள் இரவிலல்ல' என்ற குறுநாவல்களும் ஈழநாடு இதழ்களில் வெளிவந்துள்ளன.


அன்புமணி


நெல்லை க.பேரன

ஈழநாட்டில் சில எழுத்தாளர்கள் கூட்டு சேர்ந்து குறுநாவல்கள் எழுதியுள்ளனர். இவ்வகையில் ஈழத்தின் மூத்த படைப்பாளிகளான இரசிகமணி கனக செந்திநாதன், குறமகள், எஸ்.பொன்னுத்துரை ஆகியோர் வீரகேசரியில் மத்தாப்பு, மணிமகுடம் என்ற நாவல்களையும், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் இருவரும் இணைந்து சுதந்திரனில் 'நிழல்கள்' என்றொரு நாவலையும் எழுதியுள்ளனர். அவ்வகையில் வடகோவை வரதராஜன், ராஜ மகேந்திரன், கோப்பாய் எஸ்.சிவம் ஆகிய மூவரும் இணைந்து 'பூநாகம்' என்றொரு குறுநாவலை ஈழநாட்டில் எழுதியுள்ளனர். அதேபோல ஆனந்தி, சிவமலர் செல்லத்துரை, கோகிலா மகேந்திரன், எஸ். ஸ்ரீரஞ்சனி, மாவை பாரதி, அருள் விஜயராணி, ராஜலட்சுமி குமாரவேல் ஆகியோர் கூட்டாக இணைந்து 'சிதைவுகளில் ஓர் உதிர்ப்பு' என்றொரு குறுநாவலை ஈழநாட்டில் எழுதியுள்ளனர். இவர்களில் தொடர்ந்து எழுத்துத்துறையில் கோகிலா மகேந்திரன், சிவமலர் செல்லத்துரை, அருள் விஜயராணி (அவுஸ்திரேலியா என நினைக்கிறேன்) என்போரே ஈடுபாடுடையவர்களாகவுள்ளனர்.

ஈழநாட்டில் வெளிவந்த குறுநாவல்களில் நெல்லை க.பேரனின. 'விமானங்கள் மீண்டும் வரும்', து.வைத்திலிங்கத்தின் 'ஒரு திட்டம் மூடப்படுகின்றது' என்ற இரு குறுநாவல்களும் இத்துறைக்குப் பெருமை சேர்ப்பனவாம். இவ்விரு குறுநாவல்களும் வெவ்வேறு கால கட்டங்களில் யாழ் இலக்கிய வட்டம் நடாத்திய இரசிகமணி

கனகசெந்திநாதன் குறு நாவல் போட்டியில் முதற் பரிசுகளைச் சுவீகரித்துக் கொண்டவையாகும். இளம் வயதிலேயே ஷெல் வீச்சிற்குக் குடும்பத்துடன் பலியாகிப்போன ஆற்றல் வாய்ந்த எழுத்தாளன் நெல்லை க.பேரன் எழுதிய விமானங்கள் மீண்டும் வரும் என்பது நல்லதொரு கனதியான குறுநாவலாகும். பூநகரிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டம் ஒரு உதவித்திட்டமிடல் பணிப்பாளரின் அசட்டையால், இறுதியில் மூடப்படுகின்ற அவலத்தை மிக நுட்பமாகத் து. வைத்திலிங்கம் தனது 'ஒரு திட்டம் மூடப்படுகிறது' என்ற குறுநாவலில் சித்திரித்துள்ளார்.

## ஈழநாடு சிறுகதைகள்

1959 பெப்ரவரி 09 ஆம் திகதி இதழிலிருந்து 1995 செப்டம்பர் 24 ஆந் திகதி வரையிலான ஈழநாட்டின் வார இதழ்களில் / சில வேளை நாளிதழிகளில் மொத்தமாக 799 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அவை எண்ணிக்கையில் அதிகமானவையாயினும் ஈழத்தின் சிறுகதைப் போக்கினைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன. அவற்றினைப் பலவாறாக வகுத்து நோக்குவோம்.

### (1) தமிழக எழுத்தாளர்கள்

ஈழநாடு வார இதழில் தமிழகப் படைப்பாளிகளான சுகி. சுப்பிரமணியம் (செயற்கரிய செயல்), வல்லிக்கண்ணன் (மாற்றம்), மாயாவி (காதலி), டி.எஸ்.கோதண்டராமன் (வந்தவள்), நா.பார்த்தசாரதி (தன்மானம்), ரா.பாலகிருஸ்ணன் (சூழ்நிலை), சுத்தானந்தபாரதி (ஒற்றன் உள்ளம் உருகியது) ஆகியோர் தம் சிறுகதைகளை எழுதியுள்ளனர். இவை குறிப்பிடத்தக்க தரமான சிறுகதைகளல்ல. தமிழ் நாட்டில் பிரசுரிக்க வேண்டாமெனக் கருதியவற்றை இங்கு அனுப்பியது போலப்படுகின்றது. அவர்களின் ஆற்றலிற்கு இவை கரும் புள்ளிகள். அவர்களின் தரமான வாசகர்கள் ஈழத்தில் தான் உள்ளனர் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர் போலும்.

### (2) ஈழத்தின் முன்னோடிகள

ஈழத்தின் சிறுகதை முன்னோடிகளில் நால்வர், ஈழநாடு வார இதழைத் தம் படைப்புகளால் அலங்கரித்துள்ளனர். சிறுகதை மூலவர்களில் சம்பந்தன், இலங்கையர்கோன், சுயா, அநுசுயா ஆகிய நால்வரின் சிறுகதைகள் வெளிவந்துள்ளன. தமிழ்ச்சிறுகதைகளில் அழுத்தமான காவிய மரபினைத் தந்தவரெனக் கருதப்படும் சம்பந்தனின் 'மனிதன்' என்றொரு கதை ஈழநாட்டில் பிரசுரமாகியுள்ளது. இவர் கதைகளில் எக்காலத்திற்கும் பொருந்துவதான மனிதனின் அடிப்படைப் பண்புகள் பதியப்பட்டிருப்பதால் இவரின் இலக்கியப்பாங்கு செம்மையானதாகவும், தனித்துவமானதாகவும் அக்காலத்திலேயே விளங்கின. சம்பந்தனைத் தக்க சிறுகதை ஆசிரியனாகத் தமிழுலகம் அறியும். ஆனால், ஈழநாட்டில் வெளிவந்திருக்கும் 'மனிதன்' சிறுகதையைக் கொண்டு அவரது ஆற்றலை மதிப்பிட முடியாது. மிக மிகச் சாதாரண சிறுகதையாக மனிதன் உள்ளது.

ஈழத்தின் கனதியான சிறுகதைப் படைப்பாளியான அமரர் இலங்கையர்கோனின் 'கடலில் ஒரு மீன்' என்ற சிறுகதை ஈழநாடு இதழில் வெளிவந்துள்ளது. ஆங்கில இலக்கியத்தின் செல்நெறிகளை நன்கு அறிந்தவரான இலங்கையர்கோன் நன்கு தெரிந்திருந்தமையால், அவரது சிறுகதைகளில் உணர்வு பூர்வமான சித்திரிப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கும். ஈழத்தின் உன்னதமான சிறுகதைகளில் ஒன்றான 'வெள்ளிப்பாதசர'த்தின் ஆசிரியரால் கடலில் ஒரு மீன் எழுதப்பட்டுள்ளது என நோக்கும்போது, பெரும் ஏமாற்றமே எஞ்சுகிறது. ஈழநாடு இதழின் சிறுகதைக் கோரிக்கைக்காக கட்டப்பட்ட ஒரு கதையாக அது விளங்குகிறது.



சம்பந்தன்



இலங்கையர் கோன்

ஈழத்து முன்னோடிச் சிறுகதையாளர்களில் ஒருவர் 'சுயா' என்ற புனைப்பெயரில் எழுதிய அமரர் சு. நல்லையா ஆவார். ஈழகேசரியில் மட்டும் அவர் 38 சிறுகதைகள் எழுதியுள்ளார். மிக எளிமையாகக் கதை சொல்லும் பாங்கு இவரிடமுள்ளது. ஈழநாடு இதழில் இவர் எழுதியுள்ள 'நான் விலை மகளா?' என்ற சிறுகதை அவருடைய வழமையான தரப்பாங்கினை ஒத்துள்ளது.

சுயா சிறுகதை எழுதிய காலத்திலேயே 'அனுசுயா' என்ற புனைப்பெயரில் வேறொரு எழுத்தாளர் எழுதி வந்தமையை நண்பர் தெணியான் தனது கடிதம் ஒன்றின் மூலம் என்னைத் தெளிவுபடுத்தியிருந்தார். வரலாற்றில் தவறுகள் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கோடு, அனுசுயா


என்பவர் ஈழத்தின் கவிஞர்களில் ஒருவரான அல்வாயூர் மு. செல்லையா எனத் தெரிவித்திருந்தார். அவர் தன் புனைப்பெயரில் 'கதையின் கதை' என்றொரு படைப்பையும், அல்வாயூர் மு. செல்லையா என்ற சுயபெயரில் 'கால் காற்சட்டை' என்றொரு சிறுகதையையும் ஈழநாடு இதழ்களில் எழுதியுள்ளார். மிகச் சாதாரண சிறுகதைகள். கவிஞருக்குச் சிறுகதைத்துறை கைவரவில்லை.

### (3) இரண்டாந் தலைமுறைப் படைப்பாளிகள்

ஈழத்தின் சிறுகதை வரலாற்றில் முன்னோடிகள் விட்ட இடத்தினைச் சிறப்பாக எடுத்துச் சென்ற பெருமை, இரண்டாந்தலைமுறை எழுத்தாளர்களான படைப்பாளிகளைச் சாரும். ஈழநாடு இதழ்களில், வ.அ. இராசரெத்தினம், சொக்கன், தேவன்-யாழ்ப்பாணம், மயில்வாகனன், சு.வே., அ.செ. முருகானந்தன், கனகசெந்திநாதன் முதலான 07 எழுத்தாளர்கள் 17 சிறுகதைகளை எழுதியுள்ளனர். இச்சிறுகதைகளில் காணப்படுகின்ற பொதுப்பண்பு யாதெனில் கனக செந்திநாதன், சொக்கன் இருவரைத் தவிர, ஏனைய படைப்பாளிகள் தமது முன்னைய படைப்புகளில் எட்டிய உச்சத்தினை இவற்றில் எட்டவில்லை என்பதே.

அமரர் வ.அ.இராசரெத்தினம், ஈழத்தின் இலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர். ஈழத்தின் உன்னதமான சிறுகதையாக அவரின் 'தோணி' மதிப்பிடப்பட்டுள்ளது. வ.அ.இராசரெத்தினத்தின் புனைகதைக் கருத்தியல் நிலை மிகத் தெளிவானது. தான் வாழும் கொட்டியாரத்துப் பிரதேசத்தின் அழகும், அங்கு வாழ்கின்ற மக்களின் பலமும் பலவீனமும் அவரது சிறுகதைகளில் மிளிரும். ஈழநாடு இதழில் அவர் 'வீரனின் துயர்' என்றொரு சரித்திரச் சிறுகதையையும், 'வெந்தணலால் வேகாது' என்றொரு புராணக் கதையும் எழுதியுள்ளார். இச்சிறுகதைகளில் இராசரெத்தினத்தின் கம்பீரமான உரை நடையைக் காணலாம். வெந்தணலால் வேகாது என்ற புராணச் சிறுகதை வீபிஷணனின் துரோகத்தனமான இலங்கைச் சிம்மாசன அபகரிப்பினையும் மனச்சாட்சியின் உறுத்தலால் அவன் தற்கொலை செய்வதாகவும் விபரிக்கின்றது. இவ்விரு சிறுகதைகளும் தரத்தில் மிகச் சாதாரணமானவை.

ஈழகேசரியில் 1947 இல் 'கனவுக் கோயில்' என்ற வரலாற்றுச் சிறுகதையுடன் அறிமுகமாகும் சொக்கன், தான் மரணமாகும் வரை எல்லாக் காலகட்டங்களிலும் சிறுகதைகள் எழுதியுள்ளார். ஈழநாடு இதழ்களில் அவரின் நான்கு சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அவற்றில் கரையில் துடிக்கும் மீன்கள், விடிவு ஆகிய இரு சிறுகதைகளும் 1995 இல் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கவை. ஒரேயொரு நிமிடம், குரு என்பன ஈழநாட்டில் வெளிவந்த ஏனைய இரு சிறுகதைகளாம். இவற்றில் 'குரு' ஒரு தரமான சிறுகதையாகும். படித்து விட்டுக் கமம் செய்து முன்னேறிய ஒரு மாணவனை ஆசிரியர் சந்திக்கிறார். ஆசிரிய மாணவ உறவில் கல்வியுலகில் ஏற்பட வேண்டிய மாற்றங்களை இச்சிறுகதையில் சொக்கன் கூறிவிடுகிறார். ஈழநாடு பிரசுரித்த நல்ல சிறுகதைகளில் 'குரு' ஒன்றாகும்.


சொக்கன்


தேவன்-யாழ்ப்பாணம்

ஈழத்தின் பல்பரிமாணப் படைப்பாளியான தேவன்-யாழ்ப்பாணம், ஈழநாடு இதழில் 'இரு தார மணம்' என்றொரு சிறுகதையை எழுதியுள்ளார். அவரின் முழுமையான ஆற்றலை அவரின் நாடகப்பிரதிகளில் நன்கு அவதானிக்க முடியும். அவருடைய முன்னைய சிறுகதைகளான 'பேரில் என்ன கிடக்கு', 'மாமி' ஆகிய சிறுகதைகளில் விழுந்துள்ள பாத்திர வார்ப்பு, உத்தி என்பனவற்றினை இருதார மணம் என்ற ஈழநாடு சிறுகதையில் காண முடியாது.

ஈழநாட்டில் இருசிறுகதைகளை எழுதியுள்ள மயில்வாகனன், ஈழகேசரி மூலம் அறிமுகமான படைப்பாளி. ஈழகேசரியில் அவர் எழுதியுள்ள 'ஏழையின்கொடை'பலரது கவனத்தைக் கவர்ந்த சிறுகதை. ஈழநாடு இதழில் புது வாழ்வு, புயல் என்றிரு சிறுகதைகளைத் தந்துள்ளார். எழுபது வயது வயோதிபரையும் புயலையும் ஒப்பிட்டு மிக எளிமையாகப் 'புயல்' என்ற சிறுகதையை எழுதியுள்ளார். ஓர் உணர்வின் பரிமாணமாக இச் சிறுகதை அமைந்துள்ளது.

ஈழகேசரிப்பண்ணையில் முகிழ்ந்த முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான சு.வே. எனும் சு.வேலுப்பிள்ளை முக்கியமானவர். ராஜாஜியால் பாராட்டப்பட்ட உருவகக் கதை எழுத்தாளரான சு.வே. , ஈழநாடு இதழில் 'இரு தொண்டர்கள்' என்ற ஓர் உருவகக் கதையைதந்துள்ளார். மண் புழுவையும், வண்ணத்துப் பூச்சியையும் பாத்திரங்களாக்கி, எளிமையும் இனிமையும்

அதேவேளை கம்பீரமும் சேர்ந்த நடையில் 'இரு தொண்டர்க'ளை விபரித்துள்ளார்.


சு.வே.


அ.செ.மு

ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளில் ஒருவரான அமரர் அ. செ. முருகானந்தனின் (அ. செ. மு.) சிறுகதைகள் கலைப் படைப்பாகவும், வாசிப்பவர்களின் நெஞ்சினை சுர்ரெனத் தாக்கும் மனித நேயப் படைப்பாகவும் விளங்குவன. ஆனால் ஈழநாடு இதழில் அவர் எழுதியிருக்கும் வசந்த மாளிகை, வளையல்ஒலி, இலக்கிய வட்டம், அமுதகானம், சோமலதை, தளரா வளர் தெங்கு, கன்னி நிலா ஆகிய சிறுகதைகளில், அவருடைய முன்னைய சிறு கதைகளில் காணப்பட்ட படைப்பாற்றலைத் தரிசிக்க முடியாதுள்ளது. ஈழத்தின் ஓர் இலக்கிய இயக்கமாகத் திகழ்ந்தவர் இரசிகமணி கனகசெந்திநாதன் ஆவார். பல்துறை ஆளுமையுடைய அவர் ஈழநாட்டில் 'பிட்டு' என்றொரு அற்புதமான சிறுகதையைப் படைத்துள்ளார். ஆலயத்தில் பிட்டுக்கு மண்சுமந்த சிவனின் புராணப் படிப்பு நடைபெறுகின்றது. யாருமற்ற பொன்னம்மாக் கிழவியின் குடிலில் அதன் 'பொருள்' நடைபெற்றுக் கொண்டிருப்பதை கனகசெந்திநாதன் அற்புதமாகச் சித்தரித்துள்ளார். ஈழநாடு இதழின் இன்னொரு சிறப்பான சிறுகதையாகப் 'பிட்டு' உள்ளது.


கனக செந்தில் நாதன்

## (4) மூன்றாந் தலை முறை எழுத்தாளர்கள்

ஈழத்தின் மூன்றாந் தலைமுறைப் படைப்பாளிகளில் 09 எழுத்தாளர்கள் ஈழநாடு இதழில் 23 சிறுகதைகள் எழுதியுள்ளனர். இ.நாகராஜன், கச்சாயில் இரத்தினம், தாழையடி சபாரத்தினம், கே.டானியல், பரம், எஸ். அகஸ்தியர், புதுமை லோலன், ம. ஜீவரெத்தினம், கே.வி.நடராஜன் ஆகியோரே அவர்கள் ஆவர்.


இ.நாகராஜன்


தாழையடிசபாரத்தினம்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் நிச்சயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்களில் ஒருவர் அமரர் இ. நாகராஜன் ஆவார். அவர் கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளார். அவரது சிறுகதைகளில் யாழ்ப்பாண மாந்தர்களின் வாழ்க்கையின் உணர்வு நிலைகள் உருக்கமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும். ஈழநாடு இதழில் மர்மம், ஆத்மா, கண்காட்சி, நியதி, தத்துவங்கள் என ஐந்து சிறுகதைகள் எழுதியுள்ளார். இவற்றில் கண்காட்சி குறிப்பிடத்தக்க படைப்பு. பண்ணைப் பாலத்தில் தூண்டிலிட்டு மீன் பிடிக்கும் ஏழைக் கிழவனின் ஏக்கத்தைத் தத்ரூபமாக கவிதா நடையில் 'கண்காட்சி'யில் சித்திரித்துள்ளார்.


புதுமை லோலன்

ஈழத்து இலக்கிய உலகில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நூற்றுக் கணக்கான சிறுகதைகளை எழுதியுள்ள எஸ்.அகஸ்தியர் ஈழநாடு இதழில், உள்ளுணர்வு, அன்பாய்ப்பேசி, ஒரு நெக்ஸ் பிறேயும் இரு சிநேகிதிகளும் என மூன்று சிறுகதைகளை எழுதியுள்ளார். அகஸ்தியரின் சிறுகதைகள் யதார்த்தமானவை. மண்வளம் மிக்கவை. பேச்சு வழக்கு அவரது சிறு கதைகளில் மிகவும் தூக்கலாகக் காணப்படும். அகஸ்தியரின் 'உள்ளுணர்வு' வர்க்கச் சிந்த னையோடு சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. இச்சிறு கதையில் வரும் பாத்திரங்கள் யாழ்ப்பாண மண் ணின் பிரதான ஏழைத்தொழிலாளர்கள் தாம். அகஸ் தியரின் படைப்பனுபவத்தினைப் புரிந்து கொள்ள 'உள்ளுணர்வு'ச் சிறுகதையை மிகப் பொறுமையோடு வாசிக்க வேண்டும்

சிறுகதைகள் பலவற்றினை எழுதியுள்ள கச்சாயில் இரத்தினம் , 'வன்னியின்செல்வி' என்றொரு நாவலையும் எழுதியுள்ளார். ஈழநாடு இதழில் கடமை கடமை, சித்திரை நிலவு ஆகிய இரு சிறுகதைகளை எழுதியுள்ளார். தாயின் மரணப் படுக்கையிலும் கடமையைக் கண்ணெனக் கருதும் டாக்டர் ஒருவரின் பணிப் பொறுப்பைத் தக்கவாறு தனது கடமை கடமை சிறுகதையில் சித்திரித் துள்ளார். புதுமைலோலன் ஈழநாடு இதழில் 'மஞ்சள்கயிறு' என்றொரு சிறுகதையைத் தந்துள்ளார். அவரின் முன்னைய சிறுகதைகளின் தரத்திற்கு இச்சிறுகதை அமையவில்லை. பரம் என்ற எழுத்தாளர் மூன்று சிறுகதைகளும், ம. ஜீவரெத்தினத்தின் ஒரேயொரு சிறுகதையையும்

ஈழநாடு இதழில் வெளிவந்துள்ளன. இவை சாதாரண மானவை. மனதைக் கவ்வவில்லை. ஈழத்தின நல்ல தொரு நாவலாசிரியராகக் கணிக்கப்படும் அமரர் கே.டானியல் பல சிறுகதைகளையும் படைத்தளி த்துள்ளார். சுதந்திரன் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 'அமரகாவியம்' எனும் கதைக்குப் பரிசில் பெற்றதன் மூலம், எழுத்துலகிற்கு வந்து இன்று தன்னைச் சிறந்ததொரு நாவலாசிரியராக நிலை நிறுத்தியுள்ளார். சமூகவியற் பண்புகள் அவரது படைப்புகளில் அதிக அவதானிப்புடன் இருக்கும் என்பதற்கு ஈழநாடு இதழில் வெளிவந்த பரம்பரை, சாநிழல், ஒன்பது சதக்காரன், நான்காவது வீடு ஆகிய நான்கு சிறுகதைகளிலும் காணலாம். சாநிழல், பின்னர் குறுநாவலாக அவரால் விரித்து எழுதப்பட்டது. ஒன்பது சதக்காரன் சமூகத்தில் அக்கால வேளையில் வாழ்ந்த ஒருவரைக் கதாபாத்திரமாகக் கொண்டு எழுதப்பட்டமையால் பலரின் கண்டனத்திற்குள்ளாகியது. சாநிழல் நல்லதொரு சிறுகதையாகவுள்ளது. சுடலை என்றொரு தோட்டியின் மனைவி காளி மீது சலனமடையும் வைத்தியர் ஒருவர், நாளாந்த சச்சரவுகளுக்கிடையே அவர்களுடைய அந்நி யோன்யத்தைப் பார்த்து விலகிக் கொள்கின்ற கதை சாநிழல்.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் அமரர் கே.வி. நடராஜனின் பங்கினைக் குறைத்து மதிப்பிடுவத ற்கில்லை. ஈழத்தின் தரமான சிறுகதைகள் சிலவற் றினை அவர் படைத்துள்ளார். இவருடைய சிறு கதைகள் ஒரு காலகட்டத்து யாழ்ப்பாண சமூகத்தை ப்படம் பிடித்துக் காட்டுவன. ஈழநாடு இதழில் சங்க மம், கள்ளும் கருப்பநீரும் என்றிரு சிறுகதைகளை எழுதியுள்ளார். வழங்கு தமிழை நன்கு பயன்படுத்தி எழுதப்பட்ட சிறுகதை கள்ளும் கருப்பநீரும் ஆகும். இரு பிள்ளைகளின் தாயான பாருபதிப்பிள்ளை மரணப் படுக்கையில் கிடக்கிறாள். அவள் கணவர் கணபதிப் பிள்ளை நனவோடையில் மிதக்கிறார். கதை விரிகின்றது. தாயைப் பராமரிக்கும் மூத்தமகன் பரமுவும், படித்த திமிருடன் தாயின் சடலத்தைப் பார்த்து அருவருப்டையும் தம்பி சண்முகமும் கள்ளும் கருப்பநீருமாக உருவகப்படுத்தப் படுகின்றனர். நல்லதொரு சிறுகதை.

### (5) நான்காந்தலைமுறை எழுத்தாளர்கள்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் நான்காந் தலைமுறை எழுத்தாளர்களாக மதிப்பிடத்தக்க எண்மர் பதினொரு சிறுகதைகளை ஈழநாடு இதழில் எழுதியுள்ளனர். ஜோவலன் வாஸ் என்பவர் 'வெறி, எரிமலை, ஆணிவேர்' என மூன்று சிறுகதைகளைத் தந்துள்ளார். அ. ஈ. தம்பிரத்தினம் 'நேசம் மறக்க வில்லை நெஞ்சம்' என்றொரு சிறுகதையையும், இ. பொன்னையா 'பாசம்' என்றொரு கதையையும், க.ரா., சா.ஆறுமுகம், எஸ். ஆர். ஜேசுதாகன், ஏ. எஸ். ஏம். ஆகியோர் தலைக்கு ஒவ்வொரு சிறு கதையையும் ஈழநாடு இதழில் எழுதியுள்ளனர். அவை குறிக்கும் படியான தரத்தினவல்ல. வன்னி யூர்க்கவிராயர் என்றழைக்கப்படும் எஸ். எல். சவுந்தரநாயகம் நல்ல பல சிறுகதைகளை எழுதிய வர். விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினைகளை யும் அவர்களது மனத்துயர்களையும் தன் சிறுகதை களில் சித்திரித்துள்ளார். 'ஈழத்துக்காவிய தீபகம்' என்றொரு சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்ட சவுந்தரநாயகம், ஈழநாடு இதழில் 'அபேட்சகர் அம்பலத்தார், தியாகம்' என்றிரு சிறுகதைகளை எழுதியுள்ளார். அபேட்சகர் அம்பலத்தார் எள்ளவோடு கூடிய நல்லதொரு சிறுகதை.



கே.வி.நடராஜன்



எஸ்.எல்.சவுந்தர நாயகம்

### (6) ஐந்தாந் தலைமுறை எழுத்தாளர்கள்

ஈழநாடு தனக்கென ஒரு எழுத்தாளர் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டமைக்கு ஐந்தாம் தலை முறைப் படைப்பாளிகளே தக்க உதாரணமாவர். ஈழத்துச் சிறுகதை உலகின் இன்றைய பிரபல்யங்கள் இப் பட்டியலில் அடங்குகின்றனர். இவ்வகையில் 42 எழு த்தாளர்கள், 151 சிறுகதைகளைத் தந்துள்ளனர்.

நல்ல பல சிறுகதைகளைப் படைத்த ஜோர்ஜ் சந்திரசேகரன் ஈழநாடு இதழில் 'முழுமை' என் றொரு சிறுகதையை எழுதியுள்ளார். ந. கிருஷ்ண சிங்கம் என்பவர் கனவு, மரபு, தந்தையின் மனம் எனும் மூன்று சிறுகதைகளையும், சு. துரைசிங்கம் இதயம் தாங்குமோ?, என்றொரு கதையையும், ஈழத் துச்சிவானந்தன் தித்திப்பு என்றொரு கதையையும், இரா. சிவச்சந்திரன் ஒரு வழிப் பாதை என்றொரு கதையையும், ஈழநாடு இதழ்களில் எழுதியுள்ளனர். இ. செ. கந்தசாமி 'நினைவும் நிழலும்', க. யோகநாதன் 'மனச்சாந்தி', கு.இராமச்சந்திரன் 'தீயின் பசி', மனோகரன் மயில்வாகனன் 'இதயத் தில் நீ', வட்டூர்கானம் 'கருகிய மொட்டு', பிலிப்


ஜேக்கப் 'தானம்' ஆகிய சிறுகதைகளை இவ்வேட்டில் எழுதியுள்ளனர். ஈழத்தின் பிரபல்யங்களான ஈழத்துச் சிவானந்தன் (கனடா), இரா. சிவச்சந்திரன் (பேராசிரியர்), வட்டூர்கானம் (கானமயில் நாதன்- உதயன் ஆசிரியர்), க.யோகநாதன் (ஈழநாடு அலுவலகநிருபர்) ஆகியோரும் ஒவ்வொரு சிறுகதை எழுத முயன்று ள்ளனர். வி.என்.பி .(திரும்பி வந்த லட்சுமி), சிவா.சுப்பிரமணியம் (மஞ்சள் மலர்கள்) ஆகியோரது சிறுகதைகளும் ஈழநாட்டில் வெளிவந்துள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகம் உருவாக்கிய ஆற்றல் மிகு படைப்பாளிகளான செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன், அங்கையன் கைலாசநாதன், துருவன் க. பரராசசிங்கம், சிதம்பரபத்தினி, பவானி ஆகியோருடைய படைப்புக்கள் ஈழநாடு இதழ்களை அலங்கரித்துள்ளன.

ஈழத்தின் முக்கியமான நாவலாசிரியராக இன்று முகிழ்ந்திருக்கும் செங்கை ஆழியான் ஈழநாடு இதழில் 'திருவன், கந்தையாண்ணை, விழிப்பு, அந்தி மயக்கம், ஒரு கண மனிதன், கங்கு மட்டை, ஊர்பார்க்க வந்த யானைகள், நக்ரோமா, கொள்ளி விறகு' முதலான ஒன்பது சிறுகதைகளை எழுதியுள்ளார். இவற்றில் 'கங்குமட்டை' விதந்துரைக் கத்தக்க சிறுகதையாகும். பிள்ளைகளின் கட்டுப்பாடுகளை உடைத்தெறியும் சகோதரவாஞ்சையைக் 'கங்குமட்டை' கலாபூர்வமாகச் சித்திரிக்கிறது. ஈழநாடு இதழின் பத்தாண்டு நிறைவுச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசில் பெற்ற இரண்டு சிறுகதைகளில் கங்குமட்டை ஒன்றாகும்.. இக்கதையும் பரிசில் பெற்ற ஏனைய சிறுகதைகளும் 'கங்குமட்டை' என்ற பெயரில் சிறுகதைத் தொகுதியாக ஈழநாடு வெளியிட்டது. செ.யோகநாதன் பின்னர் தொகுத்து வெளியிட்ட 'வெள்ளிப் பாதசரம்' என்ற ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதியில் இச்சிறுகதையும் இடம் கொண்டிருந்தது.

அமரர் செம்பியன் செல்வனின் இருசிறு கதைகளான 'ஞாயிற்றுக் கிழமை, பூவும்கனியும்' என்பன ஈழநாடு இதழில் வெளிவந்துள்ளன. பூவும் கனியும் பத்தாண்டு நிறைவுச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சிறுகதைகளில் ஒன்று. 'தன் எழுத்து காலத்தை உணர்த்தி நிற்கவேண்டும்' என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் செம்பியன் செல்வன். பல்துறை இலக்கியப் பரிமாணங்கொண்டவர். 'ஞாயிற்றுக் கிழமை' என்ற சிறுகதையில் ஒன்று கூடிக்குடித்து கும்மாளமிட்டு ஏற்றத்தாழ்வின்றி பழகும் அலுவலக ஊழியர்கள் வெறி முடிந்ததும் உயர்வு தாழ்வு காட்டுவது நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.


செம்பியன் செல்வன்


செ.கதிர்காம நாதன்


அமரர் செ. கதிர்காமநாதன் ஈழத்தின் சிறந்ததொரு படைப்பாளி. அவரது சிறுகதைகளில் யாழ்ப்பாணக் கிராமங்களே பகைப்புலமாக அமைந்திருக்கும். ஈழநாடு இதழில் அவரின் 'நினைவு மின்னல், தாய்' என்ற இரு சிறுகதைகள் வெளிவந்துள்ளன. தாய் என்ற சிறுகதையில் கல் கிளறி கழனியாக்கும் ஒரு தொழிலாளியின் அவலம் சித்திரிக்கப்பட்டுள்ளது.


அங்கையன்


துருவன். க.பரராசசிங்கம்

அமரர் அங்கையன் கைலாசநாதன் ஈழநாடு இதழ்களில் 'நெஞ்சோடு. நினைவு, வீரம், சுவீப், நிலவு இருந்த வானம், நாதங்கள் கோடி' முதலான சிறுகதைகளை எழுதியுள்ளார்

ஈழத்துச்சிறுகதை வரலாற்றில் ஒரு முக்கியமான ஒருவரான செ.யோகநாதன் ஈழநாடு இதழில் 'வடு' என்றொரு சிறுகதையை எழுதியுள்ளர். செ. யோகநாதனின் சிறுகதைகள் சமூக வாழ்வின் விமாசனங்களாக விளங்குகின்றன என்பர். இளம் வயதிலேயே அமரராகிவிட்ட துருவன் பரராசிங்கம் சொற்ப கதைகளே எழுதியுள்ளபோதிலும் மனதைக் கவரக் கூடியனவாக அவையுள்ளன. ஈழநாட்டு இதழ்களில் மரபு, வியாபாரம்' என்றிரு சிறுகதைகளை எழுதியுள்ளார். ஈழத்தின் நல்ல சிறுகதைகளின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டிய சிறுகதைகளில் ஒன்று 'வியாபாரம்'' ஆகும்.


செ.யோகநாதன்


சிதம்பர பத்தினி

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் பெண்ணிலை வாதத்தை முதன் முதல் முன் வைத்தவர் பவானி ஆழ்வாப்பிள்ளையாவார். பவானியின் சிறுகதைகள் பலவற்றிலும் குடும்ப உறவு நிலை, காதல் உறவுகள் என்பன பாரம்பரியச் சிந்தனைகளுக்கு முற்றிலும் புதிதாகக் கட்டவிழ்ப்பாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும். ஈழநாடு இதழில், பவானி 'ஜீவநதி' என்றொரு சிறுகதையை எழுதியுள்ளார். அது அவரது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தத் தவறி விட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இன்னொரு பெண் படைப்பாளி சிதம்பர பத்தினி எனும் பத்தினியம்மா திலகநாயகம் ஆவார். சிதம்பரபத்தினி தன் சிறுகதைகளில் பல்வேறு குணவியல்புகளுடைய பெண்களை அறிமுகப்படுத்தியுள்ளார். பெண் விடுதலை, ஆண்களின் அடக்குமுறைகள் என்பன இவரின் சிறுகதைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்றன. அவர் ஈழநாடு இதழில் ஐந்து சிறுகதைகள் எழுதியுள்ளார். 'மெய்ஞ்ஞானி, கர்த்தரின் இராச்சியம், தெய்வம் யாவும் உணர்த்திடும்.., சாந்தி, தெளிவு என்பன அவையாம்., தெளிவு நல்லதொரு சிறுகதை.


கே. எஸ். ஆனந்தன்


துரை சுப்பிரமணியம்

எழுத்தாளர்கள் பெனடிக் பாலன், (சுமைதாங்கி), துரை சுப்பிரமணியம் (தர்மபூமி), மருதூர்க் கொத்தன் (உத்தியோக நாற்காலி), கே.எஸ். ஆன்ந்தன் (கலங்கரை விளக்கம், வாழ்க்கைச்சுழல்), வண்ணை சிவராஜா (போட்டி, நீர்க்குமிழி, பெற்றதாயும்) எம் ஏ. ரஹ்மான் (சிறுகைநீட்டி) ஆகியோரது சிறுகதைகள் ஈழநாடு இதழ்களில் வெளிவந்துள்ளன. 1954 களில் பல்கலைக்கழக த்திற்கு வெளியே ஒரு சிறுகதை எழுத்தாளராகத் தன்னை இனங்காட்டிக் கொண்டவர் பெனடிக் பாலன் ஆவார். துரை சுப்பிரமணியம் முழுமையாகச் சிறுகதைத் தொகுதி ஒன்றினை வெளியிடுமளவி ற்குத் தரமான சிறுகதைகளைப் படைத்துள்ளார். 'எப்படியும் என் பயணத்திற்குள் என் சிறுகதைத் தொகுதி ஒன்று வெளியிட வேண்டும் என்ற மன நெருடல் உண்டு' எனச் செங்கை ஆழியானுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட் டிருந்த அவர் ஆசை நிறைவேறாது போய் விட்டது. கிழக்கிலங்கை தந்த சிறுகதையாளர் மருதூர்க்கொத்தன் ஆவார். கே.எஸ். ஆனந்தனின் சிறுகதைகள் குடும்ப உறவு, இனத்துவ உணர்வு சார்ந்தவை. எல்லாக் காலகட் டங்களிலும் சிறுகதைகள் எழுதியுள்ள வண்ணை கே.சிவராஜா, வர்க்கியம், தலித்தியம், என்பனவற்றில் தன்னை நுழைக்காது சமத்துவம், இனத்துவம் பற்றிய கருத்தியல் நிலைகளில் தன் சிறுகதைகளைப் படைத்துள்ளார். ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் எம் ஏ.ரஹ்மான் குறைவாகச் சிறுகதைகள் படைத்துள்ள போதிலும் சிறுகதை உலகில் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டவர். ஈழநாடு இதழில் வெளி வந்த அவரது 'சிறுகை நீட்டி' தரமான ஒரு சிறு கதை.

பொ. சண்முகநாதன், எஸ். சண்முகநாதன், பொ. சண்முகநாதன் ஆகிய மூன்று சண்முக நாதன்கள் ஈழநாடு இதழ்களில் பல சிறுகதைகளை எழுதியுள்ளனர். நகைச்சுவை எழுத்தாளரான பொ. சுண்முகநாதன் ஈழநாடு இதழ்களில் பத்துசிறுகதை கள் எழுதியுள்ளார். அவற்றில் 'வேட்டைப்புலி' தக்கதொரு சிறுகதையாகும். எஸ். சண்முகநாதன் பன்னிரண்டு சிறுகதைகள் வரையில் ஈழநாடு இதழ்களில் எழுதியுள்ளார். அவற்றில் 'முடிந்த வாழ்வு' அவற்றில் நல்லதொரு சிறுகதையாகும். பெரி. சுண்முகநாதன் 'முரளி கானம், பசுமையான அந்த நினைவு, அழிவும் ஆக்கமும், லதா, ஓ, பூக்கள் விழுகின்றன, நெஞ்சில் ஒரு முள்' ஆகிய சிறுகதைகளை எழுதியுள்ளார்.


ஸ்ரீ ரங்கன்


பொ. சுண்முக நாதன்

ஈழநாட்டின் ஆசிரியபீடங்களை அலங்கரித்த ஸ்ரீரங்கன் என்ற புனைப்பெயரில் சிறுகதைகள் எழுதும் கோபாலரத்தினம், பன்னீரன் என்ற புனைப்பெயரில் சிறுகதை எழுதும் பெருமாள் ஆகியோர் ஈழநாடு இதழ்களில் நிறையவே எழுதியுள்ளனர். 'குழந்தைகள், தெய்வப்பூ, இல்லாள் இல்லாமை ஒருநாள், பெருமை, அப்பா, கணநேரம், நெஞ்சம் மறப்பதில்லை, இதயங்கள் இரண்டு, பாவத்தின் நிழல், இதயத்திற்கு அப்பால், மைதிலி' ஆகிய பன்னிரண்டு சிறுகதைகளை ஸ்ரீரங்கன் எழுதியுள்ளார். இவை ஒரு தொகுதியாக வெளிவரில் ஈழத்துச் சிறுகதை உலகிற்கு ஒரு பங்களிப்பாக அமையும். 'நினைவில் வாழ்பவள், சிரிப்பு

வராதா, மயக்கம், பிறந்த மண், ரோசா மலர் போன்ற அவன் மனைவி, வேலைக்காரச்சிறுமி வீட்டிற்குப் போகிறாள், உள்ளும் புறமும், அன்ன பூரணிக்குப் பைத்தியம் முதலான சிறு கதைகளைப் பன்னீரன் எழுதியுள்ளார். சோடை போகாத சிறுகதைகளாக இவை விளங்கு கின்றன.



எம். ஏ. ரஹ்மான


பன்னீரன்

ஈழநாடு இதழை நன்கு பயன் படுத்திக்கொண்ட இன்னோர் எழுத்தாளா தையிட்டி அ. இராசதுரை ஆவார். விமர் சகர்களின் கவன த்தை அதிகம் கவராத கனதியான எழுத்தாளர். அண்மையில் 'அகதி அரிசி என்ற பெயரில் அவரது சிறுகதைகளைத் தொகுத்து ஒரு சிறுகதைத் தொகுதியை செங்கைஆழியான் வெளியிட்டுள்ளார். ஈழநாடு இதழ்களில் அவர் 16 சிறுகதைகளை எழுதியுள்ளார். யாழ்ப்பாண மக்களின் குடும்ப உறவு களைச் சித்திரிப்பதில் இவர் வல்லவர். குறிப்பாகச் சிறந்த அவதானிப்போடு தன் பாத்திரங்களைச் சித்திரித்துள்ளார். ஒரு சோடி காப்பு, சமநீதி, குழாயடிச் சண்டை என்பன ஈழ நாட்டில் அவர் எழுதிய சிறுகதைகளில் சிறந்தவை.

ஈழநாழிதழில் நல்ல பல சிறுகதைகளைப் படைத்தவர்களில் து. வைத்திலிங்கம் ஒருவராவார். 'அஸ்தமனம், காலந்தான் மாறாதோ?, முற்பகலும் பிற்பகலும், கிணறு முதலான பத்துச்சிறுகதைகளை ஈழநாடு இதழ்களில் படைத்துள்ளார். கிணறு ஓர் உன்னதமான சிறுகதை. ஈழத்தின் மூத்தபெண் எழுத்தாளர்களில் ஒருவரான பா. பாலேஸ்வரியின் 'பெண்களின் பெருமை, அர்த்தங்கள் ஆயிரம்,' ஆகிய இருசிறுகதைகள் வெளிவந்துள்ளன. நல்ல உலகச்சிறுகதைகளை தமிழாக்கி வழங்கும் வ. குகசர்மாவின் பாடும் பறவை, ஒளியும் இருளும், மனமுறிவு ஆகிய மூன்று சிறுகதைகள் ஈழநாளிதழில் எழுதப்பட்டுள்ளன.


தையிட்டி இராசதுரை


ஆரையம்பதி தங்கராஜா

ஈழத்தின் மூத்த படைப்பாளியான ஆரையம்பதி ஆ. தங்கராசாவின் 'ரிஷிமூலம், சருகு தளிர்த்தது, அவளு க்கு வயது வந்த போது, இரவு விடிந்தது, ஒரு பசு' ஆகிய சிறுகதைகள் வெளி வந்துள்ளன. கிழக்கிலங்கையின் சமூகத்தின் பல் வேறு உணர்வுகளை ஆரையம்பதி ஆ. தங்கராசா தனது சிறுகதைகளில் காட்டியுள்ளார். யாழ்ப் பாணத்தின் மூத்த நாடகாசிரியரான அராலியூர். ந. சுந்தரம்பிள்ளையின் 'அவலம், மலர்கள், எங்கே போவது?, தன்வினை, மொட்டுகள்' ஆகிய ஐந்து சிறுகதைகளை ஈழநாடு இதழ்களில் எழுதியுள்ளார். மிகுந்த அவதானிப்போடு சுந்தரம்பிள்ளையின் சிறு கதைகள் அமைகின்றன. அவலம், தமிழ்- சிங்கள உறவுநிலைகளை எடைபோடும் நல்லதொரு சிறுகதை. ஈழநாடு இதழ்களில் அமரர் மு. கனக ராஜன், காதல் **எனும்** அடிவானில், அமரா வதிச்சிலை, ஊடுருவி, சுண்டுவிரல் மெட்டி' ஆகிய சிறுகதைகளை எழுதியுள்ளார்.


ஆராலியூர் ந. சுந்தரம்பிள்ளை


மா. பாலசிங்கம்

## (7)ஆறாந்தலை முறை எழுத்தா ளர்கள்

ஈழநாடு இதழின் சிறு கதைப்பகுதியில் ஆறாந்தலை முறையைச் சேர்ந்த 94 எழுத்தாளர்கள், 302 சிறுகதைகள் எழுதித் தள்ளியுள்ளனர். எண்ணிக்கையில் இத் தலை முறை எழுத்தாளர்கள் அதிகமாகவுள்ளனர். ஆனால் தேறிய கனிகள் சொற்பமே.

இரா.யோகேந்திரன், ஆதவன், திக்கம் எஸ் யோகன், பூராடன், நாகபூஷணி பாலசுப்பிரமணியம், கா.யோககுமார், சத்தியன், சர்வானந்தன், கோல வேலவன், ஆ.தேவராஜன், சோ. குகானந்த சர்மா, வை.முத்துக்குமாரசாமி, கே.ரி. இராஜசிங்கம், பிறை சூடி, நா.யோகேந்திரநாதன், வீணைக் கொடியோன், வை. நாகராஜன், க.கணேசலிங்கம், சிவப்பிரியா, எஸ். வன்னியகுலம், வியாறன், புங்குடுதீவு ராஜன், நா. முருகதாஸ், ந. அரியரெத்தினம், எஸ்.கே.எஸ்., பூநகரி மரியதாஸ், அச்சுவேலி பொ.வாதவூரன், ராஜகோபால், காரைகலா, குகநாயகி கனகசபை, பூவை, இரா. சம்பந்தன், நவாலியூர் நடேசன ஆகியோர் ஈழநாடு இதழ்களில் ஓரிரு சிறுகதைகளோடு ஈழத்துச் சிறுகதை உலகிலிருந்து காணாமற் போயுள்ளனர்.


தி. ஞானசேகரன்

ஆறாந்தலைமுறைப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர்களாக எஞ்சியோர் முனியப்ப தாசன், வே. தனபாலசிங்கம், மா.பாலசிங்கம், பாமா.ராஜகோபால், தி ஞானசேகரன், மலையமான், அராலியூரான் (நகுலன்), அப்பச்சி மகாலிங்கம், த. இந்திரலிங்கம், அன்ரனி இராசையா, தெணியான், ச.ம. அச்சுதன், குப்பிளான் ஐ. சண்முகம், நந்தினி சேவியர், நெல்லை க.பேரன், மு. திருநாவுக்கரசு, உடுவை தில்லைநடராசா, திமிலைக்கண்ணன், வீ. சீத்தாராமன், கே.ஆர் டேவிட், எஸ்.பி. கிருஷ்ணன், இராஜம் புஸ்பவனம், வீ.எம்..குகராஜா, வல்வை ந. அனந்தராஜ், காவலூர் எஸ்.ஜெகநாதன், ச.முருகானந்தன், முருகு, புலோலியூர் ஆ.இரத்தின வேலோன், கீழ்க் கரவை பொன்னயன், கோப்பாய் எஸ். சிவம், கோகிலா மகேந்திரன், தமிழ்பிரியா, இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன், ஆனந்தி, தாமரைச்செல்வி, சி.சுதந்தி ராஜா, சிவமலர் செல்லத்துரை, செ. குணரெத்தினம், கே. விஜயன், துரை ஏங்கரசு, மாத்தளை வடிவேலன், கவிதா, யோகேஸ் கணேசலிங்கம், ஆதிலட்சுமி இராசையா, வாகரைவாணன், இ.யோகேஸ்வரி, இலக்குமி குமரன், சரவணையூர் மணிசேகரன் ஆகியோராவர். இவர்களில் பலர் தொடர்ந்தும் எழுதிக்கொண்டிருக் கின்றனர். சிலர் தமது பங்களிப்பாகச் சில நல்ல சிறுகதைகளைத் தந்துவிட்டு ஓய்வாகிவிட்டனர்.

ஈழத்துச்சிறுகதை உலகின் தன்னிகரில்லாத படைப்பாளி முனியப்பதாசன் எனும் கண்முகநாதன் ஆவார். எண்ணிக்கையில் மிகச் சொற்பமான சிறு கதைகளைப் படைத்துவிட்டு முப்பது அகவைகளில் அமரராகிப்போன அற்புதமான எழுத்தாளன முனியப்ப தாசன் ஆவார். ஈழநாடு இதழ்களில் 'சந்திரிகா, பிர வாகம், வெறுமையில் திருப்தி, சத்தியத்தின் குரல், அழிவும் தேய்வும், நிமிடப்பூக்கள், புதிய உயிர்' ஆகிய ஏழு சிறுகதைகளை ஈழநாடு இதழ்களில் எழுதியுள்ளார். தேர்ந்தெடுத்த சொற்கள், உள் மனவெளி ஆய்வு, ஆத்மார்த்தமான தேடல் என்பன முனியப்பதாசனின் சிறுகதைப் பண்புகளாம். சிறு கதையின் முழுமை என்பதை அவரின் சிறுகதை களில் தான் காணலாம். எழுதத் தொடங்கும் புதிய எழுத்தாளர்கள் முனியப்பதாசனின் 'சந்திரிகை' சிறுகதையைப் படித்துப் பார்க்க வேண்டும். நல்ல தொரு சிறுகதை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அச்சிறுகதையில் இருந்து புரிந்து கொள்ளலாம்.


கே.ஆர்.டேவிட்



ச.முருகானந்தம்

ஏற்கனவே நல்ல சில சிறுகதைகளை எழுதியுள்ள வே. தனபாலசிங்கம் ஈழநாட்டில், 'பிரார்த்தனை, நாய்கள், வர்க்கம்' என மூன்று சிறுகதைகள் எழுதியுள்ளார். அதே போல நல்ல பல சிறுகதைகளைத் தந்த மா. பாலசிங்கம், 'மழை, புயலில் ஒரு கொடியும் கொம்பும், தரிசுகள்' என மூன்று சிறுகதைகளை ஈழநாட்டில் தந்துள்ளார். அவற்றில் தரிசுகள் குறிப்பிடத்தக்க படைப்பாகவுள்ளது. நாவலாசிரியராக மலர்ந்துள்ள தி.ஞானசேகரன், ஆக்க பூர்வமான நல்ல பல சிறுகதை எழுதியுள்ளார். அவரின 'சுமங்கலி' என்ற சிறுகதை ஈழநாடு இதழில் வெளி வந்துள்ளது. சிறுகதைப் படைப்பாளியாக மிளிர்ந்த மலையமான், 'மின்னல், அன் பின் வழியது, கன்னிப்பெண்' ஆகிய நல்ல சிறுகதைகளை எழுதியுள்ளார்.


எஸ்.தில்லை நடராஜா


மு.திருநாவுக்கரவு


அடக்கியொடுக் கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக இலக்கியம் படைக்கும் தெணியான், ஈழநாடு இதழ்களில் 'செத்த வீடு, சரணம் தாயே, அவனுள் அவள், நான் தோற்றுவிட்டேன்,' ஆகிய சிறுகதைகளை எழுதியுள்ளார். சாதியம், வர்க்கியம் ஆகிய உணர் வுகள் இச்சிறுகதைகளில் நிற்கின்றன. குடும்ப உறவுகளை மென்மையான இறுக்கத்துடன் பிணை த்து எழுதுவதில் அவர் வல்லவர். 'நான் தோற்று விட்டேன்' என்ற சிறு கதை மூலம் தெணியான் குறிப்பிடும் ஆசிரிய உல கம் சிந்திக்க வைக்கிறது.


இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்.



தாமரைச் செல்வி

எழுத்தாளர் ந. ம. அச்சுதன், 'அவருக்கு முட்டை வேணும், காதல்சின்னம், காதல் வந்த போது, இல்லறப்பரீட்சை' முதலான சிறுகதைகளை எழுதி யுள்ளார். அவை விதந்துரைக்கத்தக்கனவாக வில்லை. நந்தினி சேவியரின் 'வேட்டை, மேய்ப்பன், முதலும் கடைசியும்'ஆகிய சிறுகதைகள் மூன்று ஈழநாட்டில் வெளிவந்துள்ளன. 'வேட்டை' ஒரு

புதியகளத்தையும் அனுபவத்தையும் தருகின்ற சிறுகதை. ஒரு மனிதனுக்கும் அவன் வளர்க்கின்ற நாய்க்கும் இடையிலான உறவை வேட்டையோடு இணைத்து நன்கு சித்திரித்துள்ளார். குப்பிளான் ஐ. சண்முகத்தின் இரண்டு சிறுகதைகளாக 'பைத்தியங்கள், நீ ஏன் அழுதாய்?' என்பன ஈழநாடு இதழ்களில் வெளிவந்துள்ளன.



புலோலியூர் ஆ.இரத்தின வேலோன்



கோப்பாய் சிவம்

ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர் வரிசையில் நெல்லை. க.பேரன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர். இளவயதிலேயே ஷெல்லிற்குக் குடும்பத்துடன் பலியான நெல்லை. க. பேரன் என்ற இப்படைப்பாளியின் சிறுகதைகள் 'ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள், சத்தியங்கள்' என்ற இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தனது நித்திய தரிசனங்களை அவர் தன் சிறுகதைகளாக்குகிறார். ஈழநாடு இதழ்களில் 'சொக்கட்டியின் மகன், யோகத்தின் யோகம், தேவைகள், வெற்றி வீரனாய்' முதலான சிறுகதைகள் வெளிவந்துள்ளன. சொக்கட்டியின் மகனில் சாதிவேறுபட்ட இரு உள்ளங்களுக்கிடையிலான காதலையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் முடிவையும் துயரத்துடன் சித்திரித்துள்ளார்.

மு. திருநாவுக்கரசு என்ற எழுத்தாளர் ஈழநாடு இதழிகளில் 'மனையறம் இழந்தாள், மணமகள் ஒருத்தி, புனித சங்கமம், நீறுபூத்த நெருப்பு, சொந்தம்' முதலான சிறுகதைகளை எழுதியுள்ளார். கணிப்புக்குரிய படைப்பாளியாகக் கருதப்படும் உடுவை தில்லை நடராஜாவின் 'சன்னதிக் கோயில் சாப்பாடு' என்ற ஒரேயொரு சிறுகதை ஈழநாடு இதழில் வெளிவந்துள்ளது. தூய்மை வெளி வேஷத்திலில்லை. மனதில் தான் இருக்கிறது என்பதை இச்சிறுகதை சிறப்பாகக் கூறுகின்றது. கே.ஆர். டேவிட்டின் 'ஊர்வலம் செல்கிறது, டானியல் அன்ரனியின் வாழ்வு மலர்ந்தது, டீ. சித்தா ராமனின் உழைப்பைத் தடி, முதலான சிறுகதைகளும் ஈழநாடு இதழ்களில் வெளிவந்துள்ளன. ஆனால் குறித்த ஆசிரியர்களின் ஏனைய சிறுகதைகளின் தரத்திற்கு ஈழநாடு கதைகள் கிட்டவும் வரவில்லை. அதே போன்றே எஸ். பி. கிருஷ்ணன் (காதல் பொய்ப்பதில்லை), ந.அரியரெத்தினம் (இருள்), வீ.எம். குகராஜா ( யார் சொந்தம், துரோகத்தின் பரிசு), இராஜம் புஸ்பவனம் ( பகை, நிர்ப்பந்தம்), தேவகாந்தன் (யுதிஷ்டிரன்), வல்வை ந.அனந்தராஜ் ( பிரிவும் துயரமும், அவன் என்ன செய்தான்), கலைவாதி கலீலின் ( சபலம், அவள் கூறிய பதில், நான் ஒரு குடை வாங்கினேன்), ஆகியோரதும் சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

ஈழத்தின் சிறுகதைப் படைப்பாளிகளில் காவலூர் எஸ் ஜெகநாதன் மிக முக்கியமானவர். ஈழத்துச் சஞ்சிகைகளிலும் தமிழகச் சஞ்சிகைகளிலும் நிறையவே தன் குறுகிய தன் வாழ்நாளில் எழுதி நிறுவியவர். ஈழநாட்டில் 13 சிறுகதைகளை எழுதியுள்ளார். இவற்றில் 'சுயரூபங்கள், அடிமைகளாய் அல்ல' எனும் சிறுகதைகள் சிறந்த தரத்தனவாயுள்ளன. வளவைவளவனுடைய ஐந்து சிறுகதைகளும், கணபதி கணேசனுடைய நான்கு சிறுகதைகளும், முருகுவின் இரண்டு சிறுகதைகளும் ஈழநாடு இதழ்களில் பிரசுரமாகியுள்ளன. இவைமெச்சுந் தரத்தனவாகவில்லை.

டாக்டர் எஸ். முருகானந்தன் இன்று சிறுகதை உலகில் ஒரு முக்கியவிடத்தினைப் பெற்று வருகின்றார். ஈழத்திலும் தமிழகத்திலும் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர். ஈழநாடு இதழ்களில் ' திரைகள் விலகுகின்றன, தம்பியின் சவடால் மனிதர்கள், இன்னும் எத்தனை யுகமோ?, இலவு காத்த கிளி, காலம் மாறும் போது, புதியசிற்பிகள்' ஆகிய 7 சிறுகதைகளை எழுதியிருக்கிறார். இவற்றில் திரைகள் விலகுகின்றன, புதிய சிற்பிகள் என்பன சிறந்த படைப்புகளாக விளங்குகின்றன.



கே.விஜயன்



மலயமான்

புலோலியூர் ஆ.இரத்தின வேலோன் ஈழத்துச் சிறு கதை வரலாற் றில் தனிக் கவ னிப்புக்கு உரிய வராக மாறிவரு கின்றார். விடிவு இப்படியும் பிறக்கும், வழி பிறந்தது, புத்தொளி ஆகிய மூன்று சிறுகதைகள் ஈழநாடு இதழ்களில் எழுதியுள்ளார். உள்ளடக்கம், செப்பனிட்ட வடிவம் என்பனவற்றில் கூடிய கவனம் செலுத்தும் இரத்தினவேலோனின் அன்றைய கதைகளில் அவற்றினைக் காணமுடியாதுள்ளது. கீழ்கரவைப் பொன்னையனின் மூன்று சிறுகதைகளும், கோப்பாய் எஸ் சிவத்தின் ஆறு சிறுகதைகளும் ஈழநாட்டில் வெளிவந்துள்ளன. சி.சுதந்திரராசா (பாதார விம்பங்கள்), மட்டக்களப்பு

எழுத்தாளர் செ.குணரெத்தினத்தின் (ஏழைகளும் ஆசைகளும், அளவு கோல்), கே.விஜயன் (கறோல் கீதங்கள், விபத்து), துரை ஏங்கரசு (உழைத்துக் கொடுக்கும் மாடுகள், நெருடல்), மாத்தளை வடிவேலன் (பூபாள ராகங்கள்), இலக்குமி குமாரன் (ஒளி பிறந்த வேளை, வானில் கலைந்த கனவுகள், அருந்ததி பார்த்து), வாகரை வாணன் (அம்மா), சாவணையூர் மணிசேகரன் (அபிராமி ஒரு தொடர் கதை) ஆகிய ஈழம் அறிந்த சிறுகதைப் படைப்பாளிகளின் சிறுகதைகளும் ஈழநாடு இதழ்களில் வெளி வந்துள்ளன.

ஈழநாடு இதழ்களில் ஈழத்தின் பிரபல்யம் பெற்ற பெண் எழுத்தாளர்களான கோகிலா மகேந்திரன், தமிழ்ப்பிரியா, ஆனந்தி, தாமரைச்செல்வி, சிவமலர் செல்லத்துரை, கவிதா, யோகேஸ் கணேசலிங்கம், ஆதிலட்சுமி இராசதுரை என்போரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இவ்வெழுத்தாளர்களுக்கு ஈழநாடு தக்ககளமாக விளங்கியிருப்பது புலனாகின்றது. கோகிலா மகேந்திரனின் 10 சிறுகதைகள் வெளியாகியுள்ளன. ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் சிறுகதையின் செல் நெறியைப் புரிந்து கொண்டு எழுதப்பட்டுள்ளன. புதுயுகம் விடிகிறது, நாளைய நாங்கள், வெளிச்சத் துக்கு வருவோம் ஆகிய சிறுகதைகள் மிகச்சிறப்பானவையாகவுள்ளன. கோகிலா மகேந்திரனின் கதைகளில் பெண்விடுதலை, தலை முறை இடைவெளி, கல்வியுலகு என்பன கருப்பொருளாக அமைந்திருக்கும். ஒரு கால கட்டத்தில் ஆர்வத்துடன் சிறுகதை உலகில் காணப்பட்ட ஆனந்தி, ஈழநாட்டில் 'வழிபாடு, இழப்பு, வழிதப்பிப் போனவர்கள்' முதலான சிறுகதை களைத் தந்துள்ளார். இன்று முக்கியமான பெண் படைப்பாளியாகக் கருதப்படும் தாமரைச் செல்வி, 'இழப்புக்கள், சுமை. எதிர்ப்புகள், நிழல், பாவை' முதலான சிறுகதைகளை ஈழநாட்டில் எழுதியுள்ளார். சிவமலர் செல்லத்துரையின் 'அந்தக்கடிதம், ஒற்றைக் குயில் அலறி ஓய்ந்தது' முதலான ஐந்து சிறுகதைகள் வெளிவந்துள்ளன. கவிதாவின் 'ஒரு மலர் உதிர்கிறது, யோகேஸ் கணேசலிங்கத்தின் 'கரையும் ஏக்கங்கள்', ஆதிலட்சுமி இராசதுரையின் கடமைக்கு இரையான கற்பனைகள், இவர்கள் முதலான ஆறு சிறுகதைகளும் ஈழநாட்டில் வெளிவந்துள்ளன. இவை சிறுகதைகளாக வாசிக்கும் தரத்தின.

ஈழத்துப் புனைகதைத்துறையில் கணிப்பிற்கு உள்ளாகியிருக்கும் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் 'மனதின் மாயங்கள், வழிப்பு, பொறுமை' முதலான 9 சிறுகதைகளை ஈழநாட்டில் எழுதியுள்ளார். அவருடைய இன்றைய சிறுகதை களில் அவருடய பார்வை ஆழமாயும் மிகச்சிறந்த அவதானிப்புடனும் அமைந்திருக்கின்றன.

## (8) ஏழாந்தலைமுறைப் படைப்பாளிகள்

ஈழநாடு இதழ்களில் சிறுகதை எழுதியதன் மூலம் ஈழத்துச்சிறுகதை உலகிற்கு அறிமுக மாகியிருக்கும் ஏழாந் தலைமுறை எழுத்தாளர்கள் எண்ணிக்கையில் 223 பேராவர். அவர்கள் வழங்கியுள்ள சிறுகதைகளின் எண்ணிக்கை 330 ஆகும். இவர்களில் ஓரிரு கதைகளோடு இன்று காணாமற் போயிருக்கும் எழுத்தாளர்களின் பட்டியலைத்தரில் நீண்டுவிடும். ஆதலால் இன்னமும் தொடர்ந்து ஏதோ வகையில் தமது பங்களிப்பினைத் தருபவர்களில் காங்கேயன், குமார் தனபால், ச.பாலசுப்பிரமணியம், குகன், புலவர் தமிழ்மாறன், அனலை ஆறு இராசேந்திரன், வ.ந. கிரிதரன், எஸ்.கே.சுப்பையா, வடகோவை வரதராஜன், கந். தர்மலிங்கம், சிங்கை தீவாகரன், செங்கதிர், வன்னியூர் அன்ரனி மனோகரன், ஐ. சண்முகலிங்கம், மண்டைதீவுக் கலைச் செல்வி, வவுனியூர் இரா. உதயணன், திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார், சி.கதிர்காமநாதன், சந்திரா தியாகராசா, இயல்வாணன், தேவி பரமலிங்கம் ந. இரத்தினசிங்கம் முதலானோரைக் குறிப்பிடலாம்.

ஈழநாடு இதழ்களில் நிறையவும் நிறைவாயும் எழுதியவர் காங்கேயன் ஆவார். 'பொங்கிற்றாம் புயல் கடல், வெள்ளி மல்லிகை, அட்டமிச்சந்திரன், கலை மான் கொம்பு, இன்பநிலை, பசும்புல், ஒரே ஒரு கோட் என்பன அவரின் எழுத்துக்களாம். இவரை இப்பொழுது எப்பத்திரிகைகளிலும் காணமுடியவில்லை. குமார் தனபாலை ஏழாந்தலை முறையில் அடக்குவது கடினம் அவர் ஈழநாட்டில் 'காவோலை, உயிர் ஒரு தூசு' முதலான ஆறு சிறுகதைகளை எழுதியுள்ளார். சுப்பிரமணியம் (நிறைவு, பாசக் கயிறு, டாக்டர் சுந்தரம், ஆணிவேர்), குகன் (ஆடிக்குழப்பம், அழிவுப்பாதையில், நந்தாவதி), செந்தாரகை (முருக்கம் பூ, அவள் பெண்மை), புலவர் தமிழ்மாறன் (நான் ஒரு அனாதை, பிரமதேவன் பென்ஷன் எடுக்கிறான்), வ.ந.கிரிதரன் (இப்படியும் ஒரு பெண், மணல் வீடுகள்), எஸ்.கே. சுப்பையா (அவனுக்கும் உலகம் புரிகின்றது, கனவுகள் கலைகின்றன) ஆகியோர் எழுதியுள்ளனர். இவர்கள் இப்பொழுது எங்கே?

இவ்விரிசையில் கவன ஈர்ப்பிற்கு உள்ளாகு பவர்கள் அனலை ஆறு. இராசேந்திரன், சிங்கைத் தீவாகரன், தேவி பரமலிங்கம், கந் தர்மலிங்கம், த.சண்முகசுந்தரம், மண்டைதீவுக் கலைச் செல்வி, திக்கம்சிவயோகமலர் ஜெயக்குமார், சி. கதிர்காமநாதன் ஆகியோராவர். அனலை ஆறு. இராசேந்திரன் ஈழநாடு மூலம் தன்னை நல்லதொரு எழுத்தாளராக இனங்காட்டிக் கொண்டவர். பாசத்தின் தீர்ப்பு, மலர்ந்தும் மலராத வாழ்வு, சேவலும் பேடும், நிலம் நோக்கும் நாள் எதுவோ?, ஒன்றுக்குள் ஒன்று' ஆகிய குறிப்பிடத்தக்க சிறுகதைகளை எழுதியுள்ளார். சிங்கைத்தீவாகரன் அவருக்கு இணையாகக் கடலலை ஏன் உறங்கவில்லை?, எங்கே போவது?, நிழல் தரும் காலம் வரை, ஓ இந்த மனிதர்கள் முதலான சிறுகதைகளை வரைந்துள்ளார். க.தர்மலிங்கம், 'கல்நெஞ்சன், அவன் செய்த காரியம்' முதலான ஐந்து சிறுகதைகளை எழுதியுள்ளார். வடகோவை வரதராஜன் ஓர் அற்புதமான படைப்பாளியாகத் தன்னை இனங்காட்டியவர். 'பாசத்தின் விலை, கோடை தகர்ந்தது, உயிரின் ஆராதனை, பழியும் பாவமும், பிச்சைக்காரிகள், நீலமணி, போகாத பாதைகள், முன்னிரவும் பின்னிரவும்' முதலான சிறுகதைகளைத் தரமாக ஈழநாடு இதழ்களில் எழுதியுள்ளார். த. சண்முகசுந்தரம் மிக மூத்த நாடகாசிரியர் எனினும் சிறுகதைத் துறையைப் பொறுத்தளவில் ஈழநாட்டில் பிற்காலத்திலேயே இணைந்தார். அவர் 'காட்டுக் கோழி, நடுத்தர வாழ்க்கை நடக்கிறது' முதலான சிறுகதைகளைத் தந்துள்ளார். மண்டைதீவுக் கலைச்செல்வி நல்ல தொரு படைப்பாளியாக முகிழ்த்தவர். ஈழநாடு இதழ்களில் அவள் துயில் கொள்கிறாள், அவளுக்கொரு கண்ணீர்ப்பூ, அவளுக்கொரு வாழ்வு, கரை காணாத கப்பல் முதலான சிறு கதைகளை எழுதியுள்ளார். திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமாரின் நல்ல சிறுகதைகளாக அவள் அகதி யில்லை, மயங்குகிறாள் ஒரு மாது, மலர் தாவும் வண்டுகள் வெளிவநதுள்ளன. அவ்வகையில் ஜனனி சபா புஸ்பநாதனின் நினைவில் நிற்கும் நெஞ்சங்கள், அவளுக்கு வேறென்ன தகுதி தேவை ஆகிய சிறுகதைகள் அமைந்துள்ளன. சி. கதிர் காமநாதன் ஈழத்து சிறுகதை உலகிற்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக உருவாகி வருகிறார். அவரின் எங்கள் கூட்டினுள்ளே, மணலெடுத்து, தாய முதலான சிறுகதைகள் ஈழநாட்டில் வெளிவந்துள்ளன.

ஈழநாடு இதழ்களில் நல்ல சிறுகதைகளைத் தந்த இன்னும் சிலரைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். கு. ராதா ரமணன் (அறை), தேவி பரமலிங்கம் (செய்திவேட்டை), மயிலை சிவசண்முகநாதன (மனப் புயல்), சி.புண்ணியமூர்த்தி (தெளிவு), எஸ்.எம பாஷீர் ( கங்கை கடலை நோக்கி ஓடிக் கொண்டிருக் கிறது), செல்வி ஜி. ஜோ. செல்லத்துரை (ஒரு பட்டதாரி சம்பளம் எடுக்கிறாள்), வன்னியூர் அன்ரனி மனோகரன் (பிடிவாதக் காரன், தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும்), ஐ. சண்முகலிங்கம் ( சிறிய மனிதர்கள்), அகளங்கன் (தீக்குளிப்பு), வவனியூர் இரா. உதயணன் ( அந்த இரண்டு பைத்தியங்கள்), ஜனக மகள் சிவஞானம் (தீர்வு), இயல்வாணன் (தாகம்), பா.சிவபாலன் (அகதிமுகாம்),. ந. கிருஷ்ணசிங்கம் (அந்த நாய் வந்தது) ஆகியோர் களாவர்.

## 9. பெண் எழுத்தாளர்கள்

ஈழநாடு இதழ்களில் 44 பெண் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை எழுதியுள்ளனர். அவர்களுள் இன்று எழுத்துலகில் எஞ்சியுள்ளவர்கள் கோகிலா மகேந்திரன், பா.பாலேஸ்வரி, தாமரைச்செல்வி, யோகேஸ்வரி கணேசலிங்கம், சிவயோகமலர் ஜெயக்குமார் ஆகிய ஒரு சிலராவர். சிதம்பரபத்தினி, இராஜம் புஸ்பவனம், தமிழ்பிரியா, ஆனந்தி, சிவமலர் செல்லத்துரை, மண்டைதீவுக் கலைச்செல்வி, ஆதிலட்சுமி இராசதுரை ஆகியோர் அண்மைக் கால எழுத்துலகில் இருந்து காணாமல் போய் விட்டனர்.

## 10. ஈழநாடு மொழிபெயர்ப்புகள்

ஈழநாடு இதழ்களில் 31 வேற்று மொழிச் சிறுகதைகள் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளி வந்துள்ளன. அவ்வகையில் ஈழநாடு பயனுள்ள பணியைச் செய்துள்ளது.

சி.வி.வேலுப்பிள்ளையின் ஆங்கில மொழி மூலமான 'நாடற்றவனும் நாயும்' என்ற சிறு கதையை வி.என்.பி. தமிழில் தந்துள்ளார். மலை நாட்டு அவலத்தினைச் சித்திரிக்கும் கதை.

வேறு ஆங்கில மொழிக்கதைகளான சுதர்சனின் நாகரிகப்பொய் (தமிழாக்கம் - சாம்பவி), தாகூரின் வெற்றிச்சின்னம், அணிச்சம், இந்திரா, திருக்கூத்து ஆகிய சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. முதலிரு சிறுகதைகளை சரோஜினி நடராசனும், இந்திராவை வை. முத்துக்குமாரசாமியும், இறுதிக்கதையை பெரி. சண்முகநாதனும் மொழி பெயர்த்துள்ளனர்.

டால்ஸ்ராயின் மண்மணம், மயங்குகின்றான் ஒரு மனிதன் ஆகிய சிறுகதைகளும், மாப்பசானின்

நிலவு (வ. குகசர்மா), சிறுகதையும் மொழிபெயர்ப் பிற்குள்ளாகியுள்ளன.

அதிக எண்ணிக்கையில் சிறுகதைகளை மொழி பெயர்த்து ஈழநாட்டில் வெளிவரச் செய்தவர் வ. குகசர்மா ஆவார். மூலத்தை அறிந்த உணர்ந்த தமிழாக்கம். நெதானியர் கவுதோணியின் பல்கேரியக் கதையான யவணகல்பம், முதியகன்னி, காஸ்மன் மிக்சாத்தின் ஹங்கேரிச் சிறுகதையான பச்சைப் பூச்சி, எ.பி. செக்கோவின் ருசியச் சிறுகதையான பகைவர்கள், அல் பெட்ரோ மொறாவியாவின் இத்தா லியச் சிறுகதையான ஏழாவது குழந்தை, மிகுபசி, ஈர்வின் ஜோன்ஸ்சின் ஆங்கிலச் சிறுகதையான தேவவீணை, வில்லியம் பிலோமாவின் விதியின் சிரிப்பு, ஆர் கே. நாராய ணின் பதிவுக் கடிதம், கே. ஜீ. மல்லையாவின் அந்தமரம், சூரியதேவன், சங்குவின் அன்னை பகவதி என்பன குகசர்மாவின் மொழிபெயர்ப்பில் வெளிவந்துள்ளன

**கே. பி. டி. விக்கிரமசிங்கவின் சிங்களச் சிறுகதையான சமூக்சேவகி (யாழ் வாணன்).** நரேந்நிதநாத் மித்தாவின் **டிக்கட் டிக்கட் (மு.க** ராஜா), ஏ.டபிள்யு. உவைசின் நிதி ஒன்று கைகள் மூன்று (மு.க.ராஜா), பொகூமில் ஹறபாஸின் தொழிற்சாலைக் காற்று (கே.ரி. ஆர்.), பியசேன ரத்தவிந் தனவின் சிங்களச் சிறுகதையான நினைவுகள் ஆயிரம் (பெரி. சண்முகநாதன்), ஷுயூ வின் சீனச்சிறு கதையான பனித்திரைக்குள் அவள் இருந்தாள் (பன்னீரன்), உவில்லியன் சரோஜனின் ஆடுமேய்ப்பவனின் மகன் (கே.கி பத்மநாதன்) ஆகியவை ஈழநாடு இதழ்களில் வெளிவந்துள்ளன. பிற மொழிக்கதைகளின் போக்கினை அறிந்து கொள்ள இவை உதவுகின்றன.

## 11. ஈழநாடு புனைகதைகளில் தேறுபவை

ஈழநாடு இதழின் 36 வருட வரலாற்றில் 17 நாவல்கள், 12 குறுநாவல்கள், 799 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. ஈழத்தின் புனைகதை முன்னோடி களிலிருந்து இளம் எழுத்தாளர்கள் வரை இதில் பங்கேற் றுள்ளனர். இவற்றில் இவர்களில் ஈழத்தின் புனைகதைக்குப் பங்களிப்புச் செய்தவர்களை இனங் காண்பது அவசியமான இலக்கியப் பணியெனக் கருதுகின்றேன்.

ஈழநாடு இதழ்களில் வெளிவந்த நாவல்களில் வ.அ. இராரெத்தினத்தின் துறைக்காரன், சு. இராசநாயகத்தின் பிரயாணி:, செங்கை ஆழியானின் கிடுகு வேலி, கடல்கோட்டை, து. வைத்தி லிங்கத் தின் பூம்பனி மலர்கள், தெணியானின் பரம்பரை அகதிகள், கோகிலா மகேந்திரனின் தூவானம் கவனம் என்பன தேறும்.

ஈழநாடு இதழ்களில் வெளியிட்ட குறு நாவல்களில் து.வைத்திலிங்கத்தின் ஒரு திட்டம் மூடப்படுகின்றது என்ற குறுநாவல் விதந்துரை க்கத்தக்கது.

ஈழநாடு இதழ்களில் வெளிவந்த சிறுகதை களில் உருவம், உத்தி, உள்ளடக்கம், கலா நேர்த்தி, சமுகச்செய்தி என்பன வற்றில் தேறுகின்ற சிறுகதைகள் சொற்ப மானவையே. சிறுகதையின் ஒவ்வொரு அம்சத்தில் குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பல சிறுகதைகள் கொண்டுள்ளன.

**ஈழநாட்டிதழில்** எழுதிய முன்னோடிச் **சிறுகதையாளர்களின்** எச்சிறுகதையும் தேற **வில்லை.** இரண்டாந்தலைமுறைப் படைப் பாளி **களில் சொக்கனின்** குரு. இரசிகமணி கனக செந்தி **நாதனின் பிட்டு ஆகி**ய இரு சிறுகதைகளும் கலா **நேர்த்தி கொண்டவை.**

**மூன்றாந்தலைமுறைப்** படைப்பாளிகளில் **இ.நாகராஜனின் கண்காட்சி,** கே.டானி யலின் **சாநிழல். கே.வி. நடராஜனின் கள்ளும்** கருப்பநீரும் **சிறந்த சிறுகதைப்** படைப்புகளாகவுள்ளன.

நான்காந் **தலைமுறைப் படைப்பாளி**களில் எஸ். எல் சவுந்தரநாயகத்தின் **அபேட்சகர் அம்**பலத்தார் குறிப்பிடத்தக்க சிறுகதையாகவுள்ளது.

ஐந்தாந் தலைமுறைப் படைபாளி**களில்** செங்கைஆழியானின் கங்குமட்டை, செம்பியன் செல்வனின் பூவும் கனியும், துருவன் க.பரராச சிங்கத்தின் வியாபாரம்', செ. யோகநாதனின் வடு, செ..கதிர்காமநாதனின் தாய், அங்கையன் கைலா சநாதனின் நிலவு இருந்த வானம், நகுலனின் இலட் சியம், பொ. சண்முகநாதனின் வேட்டைப்புலி, வண்ணை கே.சிவராஜாவின் நீர்க்குமிழி, தையிட்டி அ.இராசதுரையின் ஒரு சோடிக்காப்பு, பெரி சண்முகநாதனின் நெஞ்சில் ஒரு முள், மருதூர்க் கொத்தனின் உத்தியோக நாற்காலி, து.வைத்தி லிங்கத்தின் கிணறு, எஸ். சண்முகநாதனின் முடிந்த வாழ்வு, பெனடிக்பாலனின் சுமைதாங்கி, ஸ்ரீரங்கனின் தெய்வப்பூ, அராலியூர் அ.சுந்தரம்பிள்ளையின் அவ லம், ஜோர்ஜ் சந்திரசேகரனின் முழுமை, மலையமானின் பாசம், பிலிப் ஜேக்கப்பின் தானம் ஆகியவற்றினைக் குறிப்பிடலாம்.

ஆறாந் தலைமுறைப் படைப்பாளிகளில் முனியப்பதாசனின் சந்திரிகை, பிரவாகம், வெறு

மையில் திருப்தி, சத்தியத்தின் குரல், அழிவும் தேய்வும், நிமிடப்பூக்கள், புதியஉயிர், தெணியானின் நான் தோற்று விட்டேன், நந்தினி சேவியரின் வேட்டை, உடுவை தில்லைநடராஜாவின் சந்நிதி கோயில் சாப்பாடு, துரை சுப்பிரமணியனின் தர்மபூமி, காவலூர் எஸ்.ஜெகநாதனின் சுமைதாங்கி சுமையாகிய போது..,, ச.முருகானந்தனின் புதிய சிற்பிகள், புலோலியூர் ஆ. இரத்தினவேலோனின் வழி பிறந்தது, கோகிலா மகேந்திரனின் வெளிச்சத்துக்கு வருவோம், செ.குணரெத்தினம் ஏழைகளும் ஆசைகளும், ஆனந்தியின் அழகின் குரூரங்கள், சிதம்பரபத்தினியின் தெளிவு, மா.பாலசிங்கத்தின் புயலில் கொடியும் ஒரு கொம்பும், தி.ஞானசேகரனின் சுமங்கலி, நெல்லைக் க.பேரன் சொக்கட்டியின் மகன், கே.ஆர் டேவிட்டின் ஊர்வலம் செல்கிறது, தமிழ்ப் பிரியாவின் பார்வை கள் கோணலாகும் போது, கவிதாவின் ஒரு மலர் உதிர்கிறது, ச.முருகானந்தனின் திரைகள் விலகுகின்றன, இணுவையூர் சிதம்பரதிருச் செந்திநாதனின் விழிப்பு முதலான சிறுகதைகள் அடங்குகின்றன.

ஏழாந்தலை முறைப் படைப்பாளிகளில் த.சண்முகசுந்தரத்தின் காட்டுக்கோழி, மாத்தளை வடிவேலனின் பூபாளராகங்கள், குமார் தனபாலனின் நான் ஒரு சண்டியன், ச.சுப்பிரமணியத்தின் ஆணி வேர், செந்தாரகையின் முருக்கம்பூ, தேவி பரமலிங் கத்தின் செய்தி வேட்டை, வடகோவை வரதராஜ னின் உயிரின் ஆராதனை, கோப்பாய் எஸ். சிவத் தின் இரசனைகள், த.இந்திரலிங்கம் அவன் மனிதன், காங்கேயனின் அட்டமிச்சந்திரன், பரமின் சுயரூபம், அனலை ஆறு இராசேந்திரனின் சேவலும் பேடும், சி.கதிர்காமநாதனின் தாய், இயல்வாணனின் தாகம், ந. கிருஷ்ணசிங்கத்தின் அவன் மட்டும் வீடு திரும்ப வில்லை, வ.ந.கிரிதரன் மணல் வீடுகள், சிங்கை தீவா கரனின் எங்கே போவது?, செங்கதிரின் வாயும் வயிறும், க.தர்மலிங்கத்தின் காலம் காத்தி ருப்பதில்லை, மண்டைதீவுக் கலைச் செல்வியின் அவள் துயில் கொள்கிறாள், சிவயோகமலர் ஜெயக்குமாரின் அவள் அகதியில்லை என்பன நல்ல சிறு கதைகளாகத் தேறுகின்றன.

ஈழநாடு புனைகதைத்துறையை ஒரு காலகட்டத்தில் முன்னெடுத்துச் சென்றுள்ளது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் ஈழத்து புனைகதை இலக்கியத்திற்குரிய அதன் பங்களிப்பினை வருங்காலமே முடிவுசெய்ய வேண்டும்.

HAPPY PHOTO

**Excellent Photographers Modern Computerized Photography For Wedding Portraits & Child Sittings**

**Photo Copies of Identity Cards (NIC), Passport & Driving Licences Within 15 Minutes**

**300, Modera Street, Colombo - 15.**

**Tel : 2526345**

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*

# POOBALASINGHAM BOOK DEPOT

## IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS

**Head office :**

340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**

309A - 2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.



## பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்.

**தலைமை :**

இல. 202, 340 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ.பே. 2422321
தொ.நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

**கிளை :**

இல. 309A - 2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை.
தொ.பே. 4-515775

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.




உதயரத்ன எவ்வளவோ முயற்சித்தும் தூக்கம் வந்தபாடில்லை. தலைக்கு வைத்திருந்த தலையணையை முகத்தில் வைத்து அழுத்தியபடி, கண்களை இறுக்கமாக மூடினான். என்றாலும், எந்தவிதப் பயனும் கிட்டவில்லை. அருகே படுத்திருந்த விமலா கூட இடையிடையே அங்குமிங்கும் புரள்வதன் மூலம் அவளும் தூக்கம் வராமல் அவதிப்படுவதாக நினைத்தான். இன்று நடைபெற்ற நிகழ்வுகள் ஒவ்வொன்றாக உதயரத்னவின் மனத்துள் புரளத் தொடங்கின.

இன்று காலை அலுவலகம் செல்லத் தயாரானான் உதயரத்ன.

"ஒபீஸ் முடிஞ்சு சாயந்திரம் வருவன்..... சின்னவனையும் உடுப்பாட்டி நீங்களும் ரெடியா இருங்க...."

வேறு நாட்களை விட அவனது குரலில் ஒருவகையான ஏகத்தாளம் தொனித்தது.

இது போன்ற சந்தர்ப்பங்களில் விமலா எதுவும் கேட்கமாட்டாள். அப்படிக் கேட்டாலும், அவளது பேச்சை ஒரு பொருட்டாகவே எடுக்காமல் அவன் எடுத்தெறிந்து பேசுவதை அவள் நன்கு அறிவாள். அதனால், வழமையைப் போலவே தலையை மாத்திரம் அசைத்துக் கொண்டாள். அத்தோடு இன்று உதயரத்னவின் சம்பளநாள் என்பதும் அவளது ஞாபகத்திற்கு வந்தது. விசேட சாப்பாடு, பானம், சினிமா, சின்னவனோடு கோல்பேஸ் என்பவற்றில் ஏதாவது ஒன்று நிகழும் என்பதை உறுதியாக அறிந்திருந்தாள்.



என்றாலும், உதயரத்ன வழமைக்கு மாற்றான ஒரு பயணம் செல்வதற்கே ஆயத்தமானான் என்பதை அந்த அப்பாவி அறிந்திருக்க நியாயமில்லை.

சின்னவன் பிறந்தநாள் தொட்டு நடந்தவையெல்லாம் ஒவ்வொன்றாக அவனது நினைவில் முட்டின. மகனது பிறந்த நேரகாலத்தைக் கணித்த கரோலிஸ் குருக்கள் வியந்து போனார்.

"தம்பி.... இந்தக் கிராமத்திற்கு மட்டுமல்ல...முழுநாட்டுக்குமே புகழ் பெற்றுத் தரக் கூடிய அற்புதமான கிரக நிலைப்பாடு உம்மட மகன்ட ஜாதகத்தில் கச்சிதமாகப் பொருந்தியிருக்குது."

குருக்கள் சொல்லச் சொல்ல அவன் உச்சி குளிர்ந்து போனான். சின்னவன் பிறந்தநாள் முதல் தான் தொட்டதெல்லாமே தனக்குச் சார்பாக அமைவதாக அவன் நினைத்தான்.

தற்போது மஹரகமையில் அவன் குடியிருக்கும் காணி கூட சற்றும் எதிர்பாராத விதத்திலேயே கிட்டியது.

சிங்களச் சிறுகதை

# மகனுக்கென்று ஓர் உலகம்....!

- தர்ஸனா விஜேதிலக

தமிழில்:- திக்குவல்லை ஸப்வான்

அவனோடு ஒன்றாக வேலை பார்த்தவன் விமலஜீவ. இத்தாலி போகும் 'மசக்கை' அவனுக்கு நீண்ட காலமாகவே இருந்தது. திடீரென்று அதற்கான வாய்ப்புக் கிட்டியபோது, ஒரு லட்சம் ரூபா பணத்தட்டுப்பாட்டினால் பரிதவித்தான். அதற்கான ஒரே தீர்வாக, மஹரகமையில் தனக்கு உரித்தான காணியை விற்கத் திட்டமிட்டான். அவன் எதிர்பார்த்தது

போல காரியம் இலகுவில் கைகூடுவதாகத் தெரிய வில்லை. அத்தோடு அவனுக்கிருந்த அவசரம் காணி வாங்குபவர்களுக்கு இருந்தால்தானே? முடிவில் விமல ஜீவ தன்னுடைய காணியைப் பிணையாக வைத்துக் கொண்டு ஒரு லட்சம் தரும்படி உதயரத்னவை கேட் டான். காணிக்கான மிகுதிப் பெறுமதியைத் தான் எப்போ தாவது இலங்கைக்கு வரும்போது தந்தால் போதும் என்றான்.

அவனது கோரிக்கையை மனத்தால் அளந்து, நிறுத்து எடை போட்டான் உதயரத்ன. விடயம் தனக்குச் சார்பாகவே வளைந்துள்ளதை உணர்ந்து அதற்குச் சம்மதித்தான்.

தான் மிகவும் சிக்கனப்படுத்திச் சேமித்து வைத்தி ருந்த பணத்தோடு, விமலாவின் மிச்சசொச்ச நகைகளை யும் வங்கியில் வைத்து, எப்படியோ ஒரு லட்சத்தைப் புரட்டி எடுத்து, தன்னுடைய பெயருக்கு உறுதியைத் திருப்பிக் கொண்டான். கூலி வீட்டிலிருந்து வெளியேறி, மஹரகம காணித்துண்டில் ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டு குடிபுக வேண்டுமென அன்று தொடக்கம் கனவு காணத் தொடங்கினான்.

விமலஜீவ வெளிநாட்டுக்குப் போய் இரண்டு மாதமிருக்கும். அவன் இத்தாலிக்குப் பயணித்த கப்பல் மோதி இறந்து போன செய்தியைக் கேட்டு வெளிப் படையாகத் துக்கித்தாலும், உள் மனசு மகிழ்ச்சியில் பொத்துக் கொண்டு வெடிக்கிற அளவுக்கு கூத்தாடியது. தன்னிடம் சென்ற பிறப்பில் எடுத்த கடனைத்தான் அவன் இப்பிறப்பில் செலுத்தியுள்ளதாக மனதைத் தேற்றிக் கொண்டான். எல்லாம் மகனின் அதிஷ்டம் என்பது அவன் எண்ணம்.

வீட்டுச் சுவர் செங்கல், செங்கல்லாய், உயர உயர மகனும் வருடா வருடம் பெருத்து வளர்ந்து பாடசாலை செல்லும் வயதானான். போலி ஆவணங்களைச் சமர்ப் பித்துத் தர்மபால வித்தியாலயத்தில் மகனைச் சேர்த்த அன்றைய தினம், மாபெரும் இராச்சியத்தை வெற்றி கொண்டது போன்ற களிப்பு உள்ளத்தில் அலை மோதியது.

சின்னவன் சகலதுறைகளிலும் திறமைசாலியெனப் பெற்றார், ஆசிரியர் சங்கத்தில் விதந்துரைக்கப்பட்ட போது, கரோலிஸ் குருக்கள் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

புலமைப்பரிசில் பரீட்சையில் தனது மகன் அதிக புள்ளிகளைப் பெற்று, இலங்கையிலேயே முதல் மாணவ னாகச் சித்தியடைந்த தினம், தான் நாட்டிக் கிளை கொம்பு களுடன் வளந்த மரத்தின் முதல் காயைப் பறித்தது போன்று குதூகலித்தான்.

சகல பத்திரிகைகளினதும் அரைப் பக்கம் முழுவ தும் மகனின் விபரங்கள் ஆக்கிரமித்து இருந்தன. தானும் மனைவியும் அவனுக்கு மத்தியில் அமர்ந்து கொண்டு, வாய் நிறையச் சிரிக்கும் புகைப்படத்தைப் பார்த்துப் பூரித்துப் போனான்.

அலுவலகத்தில் ஒன்றாய் வேலை பார்க்கின்ற, மகனின் வயதையொத்த பிள்ளைகள் இருக்கும் தாய் மார்களான கமலா, தயானி, திலகா, சுமனா ஆகியோர் மகன் படித்த விதம், பாடம் செய்த மணித்தியாலக் கணக்கு, காலையில் எழுந்த போது செய்தவை போன்ற வற்றை இடைவிடாமல் கேட்டு அவனைத் துளைக்கத் தொடங்கினார்கள். உதயரத்ன அவர்களுடைய பலதரப் பட்ட கேள்விகளுக்கெல்லாம் பெருமிதம் பொங்கப் பதிலளித்தான்.

புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற காரணத்தினால், கொழும்பில் பிடித்தமான பாடசாலையைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்புக் கிட்டியமை அவனது மகிழ்ச்சிக்கு மேலும் நீரும் உரமும் வார்ப்பது போல இருந்தது.

தான் சொல்லும் எதையும் ஏற்றுக் கொண்டு, எதற்கும் தலையசைக்கும் மனைவி, மகனைப் பாடசாலை க்குச் சேர்க்கும் விவகாரத்தில் தலையிட்டமை அவனுக் குப் பொறுக்க முடியாத ஆத்திரத்தைக் கிளறி விட்டது. நாட்டின் முக்கிய அமைச்சர்கள், கொழும்பு ஏழின் பிரமுகர்கள் கற்ற பாடசாலைக்கு மகனைச் சேர்க்கும் அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கும் போது, அதற்கு அவள் உடன் படாது தனது தரப்பு நியாயங்களை முன் வைக்கத் தொடங்கினாள்.

"இங்க பாருங்க.... இங்கிலீஷ் பேசுற.... பென்ஸ் கார்ல வருகிற அப்பா... அம்மாக்கள்ட பிள்ளைங்கதான் அந்த ஸ்கூலுக்குப் போறாங்களாம். அவங்கட பிள்ளை ங்க லண்டன், அமெரிக்காவுக்குத்தான் விடுமுறை கழிக்கப் போவாங்களாம். சாப்பிடுறது வேறு ஹெபேக் கராம். எங்கட சின்னவன் அவங்களுக்கிடையில் சும்மாவே ஒதுக்கப்படுவானாம். மனத்தாக்கமடைவா னாம்."

வழிய வழிய 'ளாம்' 'னாம்' என்று அவள் அழுத்தமாக முன்மொழிந்தது, ஆசிரியராகிய அவளது அண்ணனின் கருத்துக்கள் என்பது உதயரத்னவுக்குத் தெரியும்.

விமலாவின் அண்ணனை உதயரத்னவுக்குச் சுத்த மாகவே பிடிக்காது. முகத்திற்கு நேரே, 'அண்ணே....' என்று விளித்தாலும், அவன் சொல்வதற்கெல்லாம் ஆமாம் போடத் தயாராக இல்லை. அத்தோடு மஹரகம காணி கொடுக்கல் வாங்கல் விவகாரம் கடவுளும்

பொறுக்காத இடி விழுகிற அநியாய வேல என்று ஊரெல்லாம் சொல்லித் திரிந்துள்ளான். இதுபோன்ற காரண காரியங்கள் ஏராளமாக இருந்தமையால், விமலாவுக்கு எந்த வகையிலும் வெற்றியைக் கொடுப்ப தில்லையென மனத்துள் தீர்க்கமாக முடிவெடுத்தான்.

கொழும்பில் உள்ள உயர்மட்டப் பாடசாலைக்கு மகனைச் சேர்ப்பதற்கான ஆவணங்களை ஒப்படைத்து விட்டு, வெளியே வரும் பொழுது, உதடுகளைச் சிவப் பாக்கிக் கொண்டு, வயிற்றில் பாதி வெளியே தெரியச் சேலை அணிந்திருந்த கிளார்க் நோனா, ''மிஸ்டர் உதயரத்ன...'' என்றபடி அவனை நெருங்கினாள். அவள் நீட்டிய வெள்ளை வெளேரென்ற கடித உறையை அடக்க ஒடுக்கத்துடன் பவ்வியமாய் வாங்கிக் கொண்டான். சைக்கிளில் சரிவர அமர்ந்து கொண்டு, மிகவும் அவதா னமாக உறையைப் பிரித்தான்.

பாடசாலை வேலைகளுக்குப் புறம்பாக செய்ய வேண்டியவை அதில் பட்டியலிடப்பட்டிருந்தன. நீச்சல், உடற்பயிற்சி, 'ரகர்', என்பவற்றுக்கான ஆடையணிகள், அவற்றுக்கான பெறுமதி யாவும் குறிக்கப்பட்டிருந்தது. அவற்றை மனத்தால் கணக்கிட்ட உதயரத்ன தன்னு டைய ஒருமாத, ஒன்றரை மாதச் சம்பளத்தை அவை விழுங்கி ஏப்பமிட்டுவிடும் என யூகித்தான். மேலும் எல் லாப் பொருள்களையும் கொள்வனவு செய்ய வேண்டிய கடைகளின் பெயர்களும், தொலைபேசி இலக்கங்களும் அதில் தரப்பட்டிருந்தன.

வெற்றிப் பெருமிதத்தில் மிதந்து கிடந்த உதயரத்ன வுக்கு, அவை மாபெரும் விடயமாகத் தோன்றவில்லை. வட்டிக்குப் பணம் தரும் காரியாலயத்தின் டியூட்ரை மனத்தின் மூலையில் வைத்துத் தேக்கிக் கொண்டு, பறவை போல் பறந்தான். மகனால் தானடைந்த மகிழ்ச்சியைக் கொண்டாடப் போகும் வழியில் கோழியி றைச்சி அரைக் கிலோ, கொடி முந்திரிகை நூறுகிராம் வாங்கிக் கொண்டான்.

மகனோடு பாடசாலைக்குச் சென்ற முதல்தினம் உதயரத்னவின் மனம் சற்று ஆடத் தொடங்கியது. விதவிதமான வண்ண வண்ணக் கார்களிடையே, தன்னு டைய 'செலி'யைச் சிற்றெறும்பாகக் கணித்தான். ''பாய் மம்மி.... பாய் டாடி'' என்று கையசைத்த வண்ணம், சுரை க்காய் மாதிரி 'மொழு மொழு' வான பையன்கள் அவற்றிலிருந்து இறங்கத் தொடங்கினார்கள். சிலரின் பின்னால் ட்ரைவர்கள் அல்லது வேலைக்காரர்கள் என்று மதிக்கக் கூடிய சிலர் பெரிய பொதிகளைச் சுமந்த வண்ணம் சென்றார்கள். அவை பாடசாலை முதற் தினத்தில் ஆசிரியர்களுக்கு, மாணவர்கள் கொடுக்கும் காணிக்கை.

உதயரத்ன ஒரு கணம் தனது கையில் நொறுங்கிப் போய்க் கிடந்த பிரவுண் பேப்பர் பையை நோட்டமிட்டான். சந்திக் கடையில் வாங்கிய வெற்றிலைக் கட்டோடு, அறுபத்தேழு ரூபா ஐம்பது சதம் பெறுமதியான பட்டர் கேக் ஒன்றும் அதற்குள் அடைக்கலம் புகுந்திருந்தது. ''பரவாயில்லை'' அவனை அறியாமலேயே வாய் அசைந்தது.

ஒரு வாரம் வரை மகனைப் பாடசாலைக்கு மோட் டார் சைக்கிளில் அழைத்துப் போனான். அலுவலகத்தில் மேலதிக வேலை செய்தாவது மகனை ஸ்கூல் வேனில் சேர்க்க வேண்டுமென்ற யோசனை அவனுள் தீர்க்கமாய் உதித்தது. அத்தோடு மகனுக்கு எந்தவகையிலும் கௌர வக் குறைச்சல் ஏற்பட வாய்ப்பே கிடையாதென்பது அவன் எண்ணம். அதற்கு அடுத்தவாரம் தொள்ளாயிரம் ரூபாவுக்கு ஒரு வேனைப் பேசி முடித்தான்.

''அந்தப் பாடசாலைக்குப் போறவங்க ரெண்டு மூன்று பேர் இருந்தால் எழுநூற்றைம்பது ரூபாவுக்கு விஷயத்தை முடிச்சிருப்பன். என்ன செய்ய தொரே. ஒருத்தராவது கெடைச்சாத்தானே.''

ட்ரைவர் சொன்னபோது, உதயரத்னவின் மனம் பெருமிதத்தால் பொங்கி வழிந்தது.

மகன் போகிற அந்த மாதிரி ஸ்கூலுக்கு ரெண்டு மூன்று பேரைத் தேடிப்பிடிக்கிறது இந்த ஜென்மத்தில நடக்கிற காரியமா என்ன? அவன் மனம் குதூகலித்தான்.

''சீசீக்குச் சொல்லி ஒரு நாளைக்கு ரெண்டு மணித் தியாலம் ஓவர்டைம் போட்டுத்தரச் சொல்லணும்.'' அவன் மனம் சொல்லிக் கொண்டது.

மகன் வேனில் செல்லத் தொடங்கிய நாள் தொட்டு உதயரத்ன ஒன்று, ஒன்றரை மணித்தியாலயங்கள் தாமதித்து வீட்டுக்கு வருவது வாடிக்கையாகிப் போனது.

உதயரத்ன மகனின் அப்பியாசக் கொப்பியின் பக்கங்களை ஒவ்வொன்றாகப் புரட்டத் தொடங்கினான். எந்தவொரு பாடமும் ஒழுங்காக செய்யப்பட்டிருக்க வில்லை. சமூகக்கல்விக் கொப்பியில் மூன்றாந் திகதி க்குப் பிறகு, இருபதாம் திகதியே பயிற்சி கொடுக்கப் பட்டிருந்தது. சில புத்தகங்கள் வாங்கிய போதிருந்த வாசனை மாறாமல் அப்பிடியே மணத்தது. இதற்கான காரணத்தை மகனிடம் கேட்ட போது, அவன் அளித்த பதிலால் உதயரத்ன ஆடிப்போனான்.

''அப்பா.... இது பெஸ்டிவல் ஸீஸன்.... இந்த டேர்ம்ல ஸ்கூல்ல பாடம் ஒன்றும் நடத்தமாட்டாங்க''

'பெஸ்டிவல்' என்று சொன்னால் வைபவம், விவா கம், பூப்பெய்துதல், புத்தாண்டு, வெஸாக் என்றுதான் உதயரத்ன அறிந்திருந்தான். என்றாலும் வேலைகளைப் பாழ்படுத்திக் கொண்டு, பல நாட்களாகப் பாடசாலையில் நடக்கின்ற கொண்டாட்டம் என்னாவாயிருக்குமென்று தலையைப் பிய்த்துக் கொண்டான். சில நாட்களிலேயே கொண்டாட்டத்தின் மகிமை என்னவென்று அவனுக்குப் புரிந்து விட்டது.

முழுமாதமும் கிரிக்கெட் பெஸ்டிவல், அதற்குப் பிறகு கானிவல்; பாடசாலை நிதியுதவிக்கான சினிமா பெஸ்டிவல். இப்படி முடிவே இல்லாத இத்யாதி பெஸ்டி வல்கள். அத்தோடு பிள்ளைகளின் கையில் டிக்கட் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும். புலமைப்பரிசில் மாணவர்களுக்கு நூறுரூபா பெறுமதியான டிக்கட் புத்த கம். மற்றவர்களுக்கு ஆயிரம் ரூபா. மகனின் கையில் அனு ப்பியிருந்த புத்தகத்தில் நூறுரூபாவுக்கான இருப்பது டிக் கட்டுகள் அடங்கியிருந்தன. மொத்தம் இரண்டாயிரம் ரூபா!

காரியாலயத்தில் உள்ள 'பெரிசு'களுக்கு முன்னால் வளைந்து நெளிந்து நின்று நான்கு டிக்கட்டுகளைத் தலையில் கட்டினான். எஞ்சியிருந்தவைகளில் எட்டை அலுவலக வேலைக்காக வந்த மக்களின் முதுகில் அடித்தான்.

"எங்களுக்கு உதவ விரும்பினா இந்த டிக்கட்டில ஒன்ற எடுங்க. அப்போ எங்களால முடிஞ்சத உங்களு க்கும் செஞ்சு தரலாம்...." என்று நியாயம் கற்பித்தான்.

'மீதி டிக்கட்டுக்களைத் திருப்பி விடுவதா? அல்லா விட்டால் எல்லாக் கரணங்களையும் போட்டு இரண்டாயி ரமாக்கிச் சுளையாய் கொடுப்பதா?' ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்தித்துக் குழம்பிப் போன உதயரத்னவுக்கு, காரியாலய நண்பன் சிரிதேவ கொடுத்த ஆலோசனை பெரும் நிம்மதியைத் தந்தது. எப்போதும் கீழ்மட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பவன் அவன். ஆலோச னையும் அதே போக்கில் அமைந்திருந்தது.

"மச்சான் உதயரத்ன.... எங்களுக்கென்று செய்யக் கூடிய அளவொன்று இருக்கு... அந்தப் பணத்தையும் எஞ்சிய டிக்கட்டுக்களையும் எடுத்துக்கிட்டு தைரியமா வகுப்பாசிரியையிடம் போ. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுடைய அப்பான்னு சொல்லு. சொற்ப சம்பளத்தில எல்லாவற்றையும் சமாளிக்கிற உனக்கு இதுக்கெல்லாம் கொடுக்க பணமா சுரக்குது. யோசிச்சுப் பாரு."

சிரிதேவவின் கருத்துக்குவியலோடு உதயரத்ன மறுநாள் காலை மகனின் வகுப்பாசிரியைச் சந்தித்தான். நண்பனின் கருத்துக்களைத் தெம்போடு அவிழ்த்து விட்டான். ஆசிரியையின் முகம் கறுத்துச் சிறுத்துப் போனது.

"ஸ்கொலஷிப்பால வந்த ஒருத்தருமே இப்படி முடியாதுன்னு சொல்லல்ல. உங்களுக்கு மட்டுந்தான் பிரச்சின. சரி பரவாயில்ல... இப்படித் தாங்க..."

பணத்தையும், எஞ்சியிருந்த டிக்கட் புத்தகத்தையும் பறிக்காத குறையாக எடுத்துக் கொண்டு, இடையை குலுக்கிய வண்ணம் எழுந்தாள்.

"ஸ்கொலஷிப் என்ற போர்வையில தரமான ஸ்கூலுக்கு வரவும் வேணும்.... காசு சம்பந்தப்பட்ட விஷயம்னா புறுபுறுப்புத்தான் மிச்சம்."

போகும் பொழுது அவள் முணுமுணுத்தது உதயரத்னவின் காதுகளில் தெளிவாகவே விழுந்தது.

உதயரத்ன இதுபற்றி மகனிடமோ, விமலாவிடமோ வாய் திறக்காமல் அமைதி காத்தான்.

தனக்கு செலியுலர் தொலைபேசி வாங்கித் தரும்படி ஒரு நாள் மகன் நச்சரிக்கத் தொடங்கினான். வீட்டில் கூட தொலைபேசி கிடையாது. அவனுக்கோ, விமலாவுக்கோ தொலைபேசி கட்டாயமானதாகத் தெரியவில்லை. தகவல்களைப் பரிமாற, சுகதுக்கங்களை விசாரிக்கக் கடிதம் போடுவதோடு சரி. மகனின் தொண தொணப் பிற்குப் பிறகே தொலைபேசி அத்தியாவசியப் பொருட் களின் பட்டியலில் அடங்கியுள்ள விவகாரம் அவனுக்குப் புரிந்தது. நாளைக்கே தொலைபேசிக்கான விண்ணப் பத்தை பூர்த்தி செய்து அனுப்பிவைக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் ஏற்பட்டு விட்டது.

வகுப்புப் பிள்ளைகள் தத்தம் பெற்றோரின் தொலை பேசி இலக்கங்களைத் தமக்குள் பரிமாறிக் கொள்வதி னாலேயே மகனும் சிணுங்கியுள்ளான். எந்த வகையிலும் மகனுக்குக் கௌரவக் குறைச்சல் ஏற்படக் கூடாது. மனவிரக்தி நெருங்கக் கூடாது. இதுபோன்ற ஏற்பாடு களைச் செய்யாவிட்டால் அவனுக்குப் படிப்பே சலித்து விடும் என்று உதயரத்ன நினைத்தான்.

நாள் செல்லச் செல்ல விமலா அன்று வாதிட்டது நியாயம்தான் என்ற ஞானம் அவனுக்குள் உறைத்தது. 'அவள் சொன்னது போல் சாதாரண பாடசாலைக்கு அனுப்பியிருந்தால் இதைவிட நிம்மதியா இருந்திருக் கலாம்' என ஆயிரந் தடவைக்குமேல் எண்ணியிருப்பான். என்றாலும் கரோலிஸ் குருக்கள் சொன்னது ஒரு போதும் பழுது போனதில்லை. மகன் முயன்று படித்துப் பெரியாள் ஆவது என்னவோ நிச்சயம்.

எந்தக் கஷ்டம் வந்தாலும், அவற்றை சகித்துக் கொண்டு மகனைப் படிப்பித்தே தீரவேண்டுமென்று உறுதி பூண்டான்.

தனது வகுப்பு நண்பர்கள் அப்பா, அம்மாக்கள் சகிதம் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் விதத்தி னைக் கூறி மகனும் புறுபுறுக்கத் தொடங்கினான்.

மகன் கூறும் அப்பா, அம்மாக்களுக்குச் சனி, ஞாயிறு தினங்களில் ஹோட்டல்களில்தான் சாப்பாடு. அத்தகைய ஹோட்டல்கள் பற்றி பத்திரிகைகளில் வரும் முழுப்பக்க விளம்பரங்கள் மூலமும், டீ. வி யில் காட்டு கின்ற படங்கள் மூலமும் உதயரத்ன நன்கு அறிந்திருந்தான். என்றாலும், அவற்றில் காணப்படுகின்ற உணவு வகையறாக்கள் ஒருபோதும் சாப்பிட்டு அறியாதவை. கையில் முள்ளுக்

கரண்டிகளோடு சப்பைக் கொட்டியபடி டீ. வியில் தோன்று கின்ற அந்த அப்பா, அம்மாக்கள் உணவுவகைகளை விட அபார அழகு.

எது எப்படிப் போனாலும் மகன் அங்கு போகத் துடிக்கின்றான். அதனைத் தட்டிக் கழிப்பது உசிதமல்ல. எனவே மகனை அங்கு அழைத்துச் செல்வதென உதயரத்ன தீர்மானித்தான்.

'பை'க்கில் போய் அங்கு, ஹெல்மட்டை ஏந்தியபடி அலையாமல், எடுப்பாகப் போய் அங்கு இறங்க வேண்டும். விமலின் ஆட்டோவில் போனால் பெரிய தொகையாய் கேட்கமாட்டான். என்றாலும், அவனை வெளியே வைத்து விட்டு நாங்கள் மட்டும் சாப்பிடுவது அழகல்ல. ச்சே.. அதுவும் சரிப்பட்டு வராது விட்டு விடுவோம். போக வேண்டிய இடத்திற்கு முன்னால் உள்ள ஹோட்டில் இறங்கி ஆட்டோ ஒன்றில் போனால் எல்லாம் சரி.

மனத்தில் அசைபோட்டுக் கொண்டான்.

காலையில் அலுவலகம் செல்லத் தயாரான உதயரத்ன, மாலையில் தயாராக இருக்கும்படி சொன்னது, பயணத்தை உஷாராக மனைவிக்கும் காட்டும் நோக்கிலாகும்.

மாலை அலுவலகத்திலிருந்து வந்த உதயரத்ன இருப்பதிலேயே நல்லதாக ஒன்றைப் பார்த்து அணிந்து கொண்டான். நல்ல சாரியாகப் பார்த்து அணியும்படி மனைவியையும் வற்புறுத்தினான்.

''போகிற இடத்திற்குச் சிறப்பாகப் போகணும். எதிர்பாராத விதமாக மகனின் நண்பர்கள் யாராவது வந்து இறங்கினால், அவனுக்குத் தான் அவமானம்''

ஆட்டோவிலிருந்து இறங்கிய உதயரத்ன கலைந்திருந்த கேசத்தை நீவிவிட்டான். மகனின் முடி ஒட்ட வெட்டப்பட்டிருந்ததனால் அங்கே சீவ ஒன்றுமில்லை. விமலா தனது கொண்டையை கைகளால் சரிப்படுத்திக் கொண்டாள்.

'புது இடம் போல் காட்டிக் கொள்ளக் கூடாது. நன்கு பழக்கப்பட்டது போல நடந்து கொள்ளணும்.'

மனம் பலதரப்பட்ட யோசனையில் இருந்தாலும், உதயரத்ன நெஞ்சை முன்னால் தள்ளி நிமிர்ந்து கொண்டு, கதவைத் திறப்பதற்காகக் கையை வைத்தான். மறுகணம், ''குட் ஈவினிங் ஸோர்'' ஒரு பெண்மணி கதவைத் திறந்தபடி, அவர்கள் உள்ளே வரும் வரை காத்திருந்தாள்.

உதயரத்னவுக்கு வேறோர் உலகத்திற்குள் புகுந்தது போன்ற உணர்வு. ஆங்காங்கே மேசைகள் தோறும் சாப்பிட்டபடி, குடித்தபடி கனவான்கள். அவர்களது முகங்களை, பேச்சு வார்த்தைகளை, ஆடையணிகளைக் கண்டதும், இவர்கள் ஒருபோதும் தன்னோடு ஒத்துவராத அபூர்வ ஜீவன்கள் என நினைத்தான். என்றாலும், தானத்திற்கு ஏற்ப ஆணியடிக்க வேண்டுமென எண்ணியபடி, தனக்கு முன்னால் அமர்ந்திருந்தவர்களைப் பின்பற்றத் தொடங்கினான்.

காற்சட்டைத் துண்டுகள் அணிந்திருந்த சில இளம் பெண்கள், இளைஞர்கள், முன்னாலிருந்த சுவரைப் பார்த்து விரல்களை நீட்டியபடி என்னதான் செய்கிறார்கள் என்று உதயரத்ன உன்னிப்பாய் நோக்கினான். உள்ளே மின்விளக்குப் பொருத்தி பிரகாசிக்கும் சட்டகமிடப்பட்ட படங்கள். சுவர் அலங்காரமாக இருக்குமோ! என ஒரு கணம் நினைத்தான். என்றாலும், அந்தப் பக்கமாய்ப் பார்த்தபடி 'பில்' அடிக்கும் பெண்ணைக் கண்டதும், தனக்கு ஏதோ தப்பு ஏற்பட்டுவிட்டதாக நினைத்தான். அந்தச் சுவருக்குள் வாடிக்கையாளர்கள் தெரிவு செய்கின்ற உணவு வகைகள் படங்களாகக் காட்டப் பட்டிருந்தன.

உதயரத்னவின் முறை வந்தது.

''குட் ஈவினிங் ஸோர்..... டுடே வி ஒபர்'' கிளிப்பிள்ளை போல ஏதோ சொல்கின்ற யுவதியின் கொஞ்சு மொழி கேட்டு, அவனுக்கு இருகாதுகளும் சிவந்து, மூக்கு நுனி வியர்த்துப் போனது. என்றாலும், அதை அலட்டிக் கொள்ளாதவன் போல் காட்டிக் கொண்டான். எல்லாம் தெரிந்தவன் போல் படங்கள் பலவற்றை விரலினால் சுட்டினான்.

அந்த யுவதியின் மென்மையான விரல்நுனி இலக்கப் பலகையில் அங்கும் இங்கும் ஓடியது. ''வண் தவுஸண்ட் நைன் ஹன்ரட் அன்ட் நைன்ரி நைன்'' எனப் பவ்வியமாகச் சொல்லியபடி பில்லை உதயரத்னவின் கையில் வைத்தாள். மனம் 'துணுக்'கென்று திடுக்கிட்டாலும், உதயரத்ன உடனடியாக ஆயிரம் ரூபாத் தாள்கள் இரண்டை எடுத்துப் பில்லைச் செலுத்தினான்.

அதன் பில்லை எடுத்துக் கொண்டு, வரிசையில் சென்ற உதயரத்னவுக்கு மூன்று தட்டங்கள் கிடைத்தன. ஒவ்வொன்றிலும் உணவோடு கரண்டி, முட்கரண்டி, கத்தி, கைத்துடைப்பம், சோர்ஸ் என்பனவும் காணப் பட்டன. மற்றவர்கள் செய்வதைப் பார்த்து அவனும் வெற்று மேசையைத் தேடி அலைந்தான். மேசை கிடைத்ததும், ஒவ்வொரு தட்டாக மூன்று தடவை கொண்டு போக வேண்டிய நிலை! விமலா அவற்றை மலைப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். 'பாவம் உதயரத்ன' என அவள் மனம் பரிதாபப்பட்டது. மகனுக்குக் கூட ஒத்துழைக்க முடியாதபடி ஒவ்வொரு தட்டமும் மிகப் பெரிதாக இருந்தது.

சாப்பிடத் தயாரானார்கள். இந்த முள்ளுக்கரண்டி, கரண்டியோடு சிலம்பாட்டமாடி இருவருக்குமே பரிச்சய

மில்லை. ஒத்துவராத சமாச்சாரம். விமலாவுக்குத் தலை கிறுகிறுவென்றது. அப்படிக் குழப்பம். ஒன்றுமே செய்வ தறியாதவளாய் அவனைப் பார்த்து, "பீங்கான் கிடைக் குமா?" என்று கேட்டாள். அவளைப் பார்க்கவே அவனுக் குப் பரிதாபமாக வந்தது. உதயரத்னவுக்கும் இந்த முள்ளுக் கரண்டியோடு கரகாட்டமாடி பழக்கமில்லை யென்றாலும், பொரித்த கோழி இறைச்சித் துண்டுக்கு ஒரு குத்துக் குத்தினான். அது வழுகிப் போனது. சின்ன வனோ எதையும் சட்டை செய்யாமல் முள்ளுக் கரண்டி யையும், கைகளையும் பிரயோகித்தபடி விழுங்கிக் கொண்டிருந்தான்.

உதயரத்ன மெதுவாக பக்கத்து மேசையைப் பார்த்தான். அவர்களோ பஞ்சத்தால் பறப்பவர்களைப் போல கரண்டி, முட்கரண்டிகளினால் போட்டி போட்ட வண்ணம் வாயிற்குள் திணித்துக் கொண்டிருந்தார்கள். பழக்கப்பட்டால் எதுவும் இலகுதான்.

கைகளினால் சாப்பிட மனம் தூண்டினாலும் வெட்கம் அணைபோட்டது. விமலா இன்னும் சாப்பிடாமல் திகைத்தபடியே இருந்தாள். குளிரூட்டப்பட்ட அந்த அறையிலும், அவளுக்கு வியர்த்திருந்தது.

குடுகுடுவென அங்குமிங்கும் ஓடிப் பாய்ந்து கவனி த்துக் கொண்டிருந்த 'வெயிட்டர்' பையன்கள், பெட்டை கள் கிசுகிசுவென ஆங்கிலத்திலேயே பேசினார்கள். தட்டுக்களில் எஞ்சிப் போன கோழி முள், கைத்துடைப் பம், எச்சில் போன்றவற்றைச் சேகரிக்கின்ற ஒரு பையன் மேசைக்கருகில் வந்து, "பினிஷ்" என்று கேட்டான். பதிலுக்காக வாயைத் திறக்கும் முன்பே அவர்களது தட்டுக்களை அள்ளிக் கொண்டு போனான்.

'அநியாயம் காசு' விமலா பெரிதாக பெருமூச்சு விட்டாள். உதயரத்னவின் அடிமனத்துள் துக்கம்



பீறிட்டது. பலவேளை சாப்பிடக் கூடிய பணமென்று அவன் நினைக்கத் தவறவில்லை. சாப்பிட்டாலும் பரவாயில்லை. அந்தப் பணத்திற்கு எவ்வளவோ வேலை செய்திருக் கலாம். அவன் மனம் அழுதது.

பட்டினியோடு வீட்டுக்கு வந்த உதயரத்னவும், விமலாவும் மகனுடைய வயிறாவது நிறைந்ததே என்று மனத்தை ஆசுவாசப்படுத்திக் கொண்டு படுக்கைக்குப் போனார்கள். என்றாலும் பசியினால் தூக்கம் வந்தபாடி ல்லை. வீட்டிற்கு வந்தவுடனேயே "தேநீர் கொண்டு வரவா?" என்று விமலா கேட்டதும் மறுத்தது எவ்வளவு மடத்தனம் என்று நினைத்தான். பசி வயிற்றைப் பிசைந்தது பாவம், விமலா கூட பட்டினியில் கிடக்கிறாளே என்பதை நினைத்ததும் துயரம் பொங்கியது.

விடியற்சாமத்திலேயே உதயரத்னவுக்கு சின்னதாய் கோழிதூக்கம் வந்தது. அடுக்களையில் விமலா தேங்காய் உடைக்கும் சத்தத்திற்கு விழிப்பு ஏற்பட்டது. அவசரமாக அந்தப் பக்கம் போன உதயரத்ன, மட்குவளையில் தண்ணீர் வார்த்து வாயைக் கொப்பளித்தான்.

அன்று அலுவலக நண்பன் சிரிதேவ சொன்னதைப் பொருட்படுத்தாமை எவ்வளவு மடைமை என்று மனம் சொன்னது.

'இனிமேல் மகனுக்குச் செய்யக் கூடிய அளவுக்கு த்தான் செய்ய வேண்டும்.'

"இந்தாங்க உங்களுக்குப் பிடித்தமான மாசிச்சம்பல் தேசிக்காய் புளி ஊற்றிச் சமைச்சிருக்கன்.... இந்த ரொட்டியச் சாப்பிட்டுட்டே தேநீர் குடியுங்கோ"

விமலா சொல்லி முடிக்கவில்லை. உதயரத்ன அடக்க முடியாத ஆவலோடு பாய்ந்து ரொட்டியைப் பிய்த்து வாயில் திணித்துக் கொண்டான்.






# அவஸ்த்தை

- தெணியான்

"அக்கா என்ன சொன்னவ?"

"அக்கா என்ன சொன்னவ?" அவள் மனசு கேட்டுக் கேட்டு அவளைப் போட்டுக் குடைந்து கொண்டிருக்கிறது.

"அக்கா என்ன சொன்னவ?" "என்ன சொல்லி இருப்பா?"

"அவன் என்ர மகன். அக்கா என்ன சொல்லிறது!"

"ஒரு வேளை அக்காவுக்கு...... சீச்சீ..... அப்படி இருக்காது!"

"அப்ப..... என்ன சொல்லி இருப்பா?"

சுனாமிச் சமுத்திரமாக மனசு கொந்தளிக்கிறது. குமுறலைத் தணிக்க அவளுக்கு இயலவில்லை. மறந்து போகலாமென்றால் மனசு விட்டு விடுவதாக இல்லை. மீண்டும் மீண்டும் வினவுகிறது.

"அக்கா என்ன சொல்லி இருப்பா?"

அவள் கட்டிலில் புரண்டு புரண்டு படுக்கின்றாள். உறக்கம் வந்து தழுவிக் கொள்ளாதோ, என்று ஏங்குகின்றாள். உறக்கத்தில் அயர்ந்து, மனசை ஏமாற்றி விடலாமென்றால் மனசு விழித்துக் கொண்டிருக்கிறது. உறக்கம் அருகில் வராமல் பார்த்துக் கொண்டிருக்கிறது.

சில இரவுகளில் மனசுக்கும் உறக்கத்துக்கும் இதே போர். இறுதியில் உறக்கம் ஜெயிக்கும். மனசு தோற்று, மௌனமாக அடங்கிப் போகும். அந்த மனசு இன்று தோற்றுப் போகத் தயாரா இல்லை.

மனசு விழித்துக் கொண்டிருக்கும் சமயங்களில் அவள் யன்னலைத் திறந்து விடுவாள். மெல்லத் தவழ்ந்து வரும் பூங்காற்று அவளை வந்து சில்லென்று தழுவிப் போகும். வானத்தை நிமிர்ந்து பார்ப்பாள். கொட்டிக் கிடக்கும் வைரங்கள் கண்டு மனசு குதூகலிக்கும். அந்தக் குதூகலிப்பில் தன்னை மறந்து எண்ணிக் கணக்கிடத் தொடங்குவாள். அப்பொழுது வெண்முகில்கள் பதுங்கிப் பதுங்கி வந்து வைரங்களைக் கொள்ளை கொள்ளும். அவள் சினம் பொங்கக் கைகட்டிப் பார்த்திருப்பாள். திருட்டு முகில்கள் ஓடிப் போன பின்னர் மீண்டும் வைரங்களை எண்ணிக் கணக்கிட ஆரம்பிப்பாள். வைரங்கள் சில கொள்ளை போனது தெரிய வரும். கவலையுடன் மீண்டும் கணக்கிடத் தொடங்குவாள். கணக்கில் வைரங்கள் மேலும் இறைந்து கிடக்கும். மனசு மகிழ்ந்து நிறையும்.

பக்கத்து அறையில் மகன் புரண்டு படுக்கும் மெல்லிய ஓசை வந்து செவிகளில் தேனாக விழும். அந்த ஓசையைக் கேட்பதில்தான் என்ன இன்பம்! அவள் சில சமயம் நினைத்துப் பார்ப்பதுண்டு. மகனின் மெல்லிய அசைவும் எப்படி இந்த மனசுக்குத் தெரிந்து விடுகிறது.

மனசு போதும் போதுமென்று சொல்லும். அவள் போய்க் கட்டிலில் மெல்லச் சரிவாள். அப்படியே, ஆனந்தமாக உறக்கம் வந்து அவளைத் தழுவிக் கொள்ளும்.

அந்தச் சந்தோசங்கள் எல்லாம் இப்ப தொலைந்து போயின.

ஏழுமணிக்கு ஊரடங்கு. ஆறு மணிக்கே எல்லாம் அடங்கிப் போகின்றன.

ஆறுமணிக்கு வெளிக் 'கேற்றில்' பெரிய பூட்டுப் போட்டுப் பூட்டித் தொங்க விடுகின்றாள். சரியாகப் பூட்டி இருக்கா? எனப் பல தடவை இழுத்து இழுத்துப் பார்க்கின்றாள். கதவுகளை உள்ளே அடைக்கின்றாள். குறுக்கே இரும்புச் சலாகைகளைப் பொருத்துகின்றாள். மனசில் இடையிடையே சந்தேகம் எழும். மெல்லச் சென்று இழுத்துப் பார்க்கின்றாள். லயிற்றுகளை அணைத்துவிட்டுச் சிறிது வெளிச்சம் தரும் லாம்புடன் உள்ளே நடமாடுகின்றாள். காலடி ஓசை தானும் எழாத வண்ணம் எச்சரிக்கையாக அடி எடுத்து வைக்கின்றாள். மகனுடைய அறையில் ஒரு ரீ. வி. மகன் கட்டிலில் படுத்துக் கொண்டு பார்ப்பதற்குப் படுக்கை அறையில் இன்னொரு ரீ. வி. மகன் ரீ. வி பார்ப்பதைத் தடுக்க மனசு கேட்காது. அடக்கமாகச் சத்தம் வெளியே வராமல் கவனமாக இருக்கின்றாள்.

தனது அறை. யன்னலைப் பார்த்து இப்ப அவள் ஏங்குகின்றாள். யன்னலைத் திறக்க மனசு நடுங்குகிறது.

மகன் சொல்லிச் சிரிப்பான். "அம்மாவுக்குச் சரியான பயம்"

"நீ இருக்க, எனக்கென்ன பயம்?" அவள் இப்படித்தான் சொல்லிக் கொள்வாள். உண்மையில், அவனை நினைத்துத்தான் அவள் கலங்குகின்றாள்.

நேரத்தைப் பார்க்கின்றாள். ஒன்பது மணி. மகனைப் பார்க்கின்றாள். அவன் கட்டில் மீது படரும் சுகமான மெல்லிய நீல ஒளியில், முகில் போல மூடிக் கிடக்கும் நுளம்பு வலைக்குள் நீட்டி நிமிர்ந்து கிடக்கின்றான்.

''என்ரை பிள்ளை ராசகுமாரன் போல..... என்ரை கண்ணே பட்டுவிடும்.'' நினைத்து 'தூ.... தூ.... தூ....' என மூன்று தடவைகள் வீட்டுக்குள் எச்சில் தெறிக்காது மெல்லத் துப்பி நாவூறு கழிக்கிறாள்.

மகன் கட்டிலைத் தனது அறைக்குள் கொண்டு வருவதற்குத் தான் செய்த தந்திரத்தை எண்ணி மெல்லச் சிரிக் கின்றாள்.

“தம்பி எனக்குப் பயமாக இருக்கு.”

''என்ன பயம் அம்மா?''

“அறையிலே தனியப் படுக்க.”

''பெரியம்மாவுக்குச் சொல்லுங்கோ!''

''பெரியம்மா வந்து படுக்கவா?''

“சீச்சீ.... அக்காவை அனுப்புவா.”

“அது சரியில்லை குமர்ப்பிள்ளை.”

''அப்ப என்ன அம்மா செய்கிறது?''

“கட்டிலைத் தூக்கி வந்து என்ரை அறைக்குள்ளே போடு!”

''இதென்னம்மா?''

''ஏன்? இப்ப நீ வளந்திட்டியே! தவனம் வந்தால் ஓடி வந்து அம்மாவின்ரை மடியிலெயே படுப்பாய்......''

“என்ரை அம்மா, எப்பவும் என்ரை அம்மாதான். அம்மாவுக்குச் கரைச்சலெண்டு......”

''என்ன கரைச்சல்?''

“நான் ரீ. வி. பாப்பன்....”

''ரீ. வி. யைத். தூக்கி வந்து வை. அல்லது இன்னொன்டு வாங்கித் தாறன்.''

''இதென்னம்மா! இரண்டு போதாதெண்டு இன்னுமொண்டா?''

''ஒண்டென்ன..... ஒன்பது கேட்டாலும் வாங்கித் தருவன்.''

அம்மாவுக்கு இடைஞ்சலாக இருக்குமென்று கட்டிலில் படுத்துக் கொண்டு அவன் இப்ப ரீ. வி. பார்ப்பதில்லை.

ஆனால் அம்மாவால் அமைதியாக உறங்க முடிவதில்லை.

எந்த வீடுகளில் அம்மாக்கள் இப்ப மன அமைதியுடன் உறங்குகின்றார்கள்? எந்த வேளையிலும் பயமும், பதற்றமுந்தான்.

இன்று அவளுக்குப் பதற்றத்துடன் மனசின் குழப்பம் வேறு. மனசு கேட்டுக் கொண்டிக்கிறது. “அக்கா என்ன சொன்னவ?”

எங்கோ..... நாய்கள் பயங்கரமாகக் குரைக்கும் ஓசை எழுகின்றது. அவளுக்கு நெஞ்சு படபடக்கின்றது. கால்கள் பதறுகின்றன. செவிகளைக் கூர்மையாக்கி ஓசை வரும் திக்கினை அவதானிக்கின்றாள். பூட்டிய அறைக்குள் துல்லியமாக அவதானிக்க இயலவில்லை. அஞ்சலோட்டம் போல நாய்களின் குரைப்புத் தொடர்கிறது. கிட்ட, நெருங்கி, நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

எந்த இரவும் இப்படித்தான்!

காவலோ, கள்வரோ யார் அறிவார்! யாருக்கு இங்கு தடை? எந்த வீட்டுக் கதவையும் தட்டலாம். யாரையும் கடத்திக் கொண்டு போகலாம், எவரையும் வெட்டலாம்; குத்தலாம், கொலை செய்யலாம், கொள்ளை இடலாம், சூறை ஆடலாம் எங்கு போய் முறையிடுவது? எவர் இந்தக் கோரக் கொடுமைகளைத் தட்டிக் கேட்பார்?

நாய்களின் குரைப்பொலி நெருக்கமாக அண்மிக்கிறது.

வீட்டு நாய் குரைக்கவில்லை. தின்று விட்டுச் சுருண்டு படுத்து விடும். பயந்த நாய். எங்காவது பதுங்கிக் கிடக்கும்.

கதவில் யாரோ தட்டும் ஓசை எழுகிறது.

அவளுக்கு இதயம் மேலும் வேகமாக அடிக்க ஆரம்பிக்கிறது, உடல் பதறி வியர்த்துக் கொட்டுகிறது, வயிற்றில் குழப்பம்.

மகனைப் பார்க்கின்றாள். அவன் கவலையின்றி அசையாது தூங்குகின்றான்.

அவள் எதையும் இழக்கலாம். ஆனால், அவனை..... அவள் உயிரான..... அவனை?

“ஓசைப்படாமல் அவனை மெள்ள எழுப்பி, கட்டிலுக்குக் கீழே ஒளிந்திருக்கச் செய்வோமா! அவன் கேலியாகச் சிரிப்பான். இளங்கன்று பயமறியாது'' நினைத்துக் குழம்புகின்றாள்.

காலடி ஓசை எழாது மெது மெதுவாக நடந்து அறைக் கதவருகே வருகின்றாள். கதவு இறுகப் பூட்டி இரும்புச் சட்டம் குறுக்கே போட்டுக் கிடக்கிறது. பலமாக ஒரு தடவை இழுத்துப் பார்த்து உறுதி செய்து கொள்ளுகிறாள்.

திரும்பவும் கதவில் தட்டும் ஓசை.

மனசை உறுதிப்படுத்திக் கொண்டு, கதவை நெருங்கி, காதை அதில் அணைத்து கூர்ந்து கேட்கின்றாள்.

“ஓ...... நாய் கால்களால் பிறாண்டிக் கொண்டிருக்கிறது.” மீண்டும் அவதானிக்கிறாள் “நாய்தான்” உறுதிப்படுத்திக் கொள்கிறாள்.

அப்பா......! உயிர் மீண்டும் வந்தது போல ஒரு நிம்மதி.

இரவுகள் எல்லாம் இப்படித்தான். தினந்தினம் இப்படியே செத்துக் கொண்டிருக்கலாமா? பகலும் என்ன நிம்மதி?

நடக்கக் கூடாத ஒன்று மகனுக்கு நடந்துவிட்டால்.... அதன் பிறகு யாருக்காக நான் வாழ வேண்டும்?

அவள் தகப்பனுக்கு இங்குள்ள நிலைமைகளைத் தெளிவாக அறிவித்தாள்.

"பணம் எவ்வளவு செலவானாலும் பறவாயில்லை. மகனை உடனே சுவிஸுக்கு அனுப்பு. பிறகு நீயும் வந்து சேரு" தகப்பன் தகவல் அனுப்பினார்.

அவனைச் சுவிஸ் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு களை ஆரம்பிப்பதற்கு முன்னர், அவன் ஜாதகத்தை ஒரு தடவை பார்க்க விரும்பினாள்.

அடுத்த வீட்டு அக்கா கனகத்தை அழைத்துக் கொண்டு காலையில் சோதிடரிடம் புறப்பட்டாள்.

கனகம் வழமைபோல வழிக்கு வழி கதை சொல்லிக் கொண்டு வந்தாள். கனகத்தின் கதைகளுக்கு அவள் மறுப்புச் சொல்வதில்லை. அது கனகத்துக்குப் பிடிக்கும் என்பது அவளுக்குத் தெரியும். தன் கணவனையும் கனகத்துக்குப் பிடிக்கும். அவரும் அப்படித்தான். குடும்பத்தின் தலைமை கனகத்தின் கையில்.

கணவனோடு அவள் அங்கு வந்து குடியேறி இருபது ஆண்டுகள். மகனுக்கு அப்பொழுது மூன்று வயது. 'பெரியம்மா.... பெரியம்மா' என்று கனகத்துடன் அவன் ஒட்டிக் கொண்டான். உறவுக்காரர் என்று எவரும் அவர்களைத் தேடிக் கொண்டு அங்கு வருவதில்லை. தங்கள் காதல் திருமணத்தை இருபகுதியாரும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கனகத்துக்கு அவள் பொய் கூறி உண்மையை மறைத்து வைத்தாள்.

கனகம் இடையில் அவளைத் திரும்பிப் பார்த்து, "புனிதம் இண்டைக்கும் நீ நெத்தீல பொட்டு வைக்க வில்லை. வாழ்வாழிச்சி எப்பவும் குங்குமம் வைக்க வேணும்" என்கின்றாள்.

அவள் மௌனமாகச் சிரித்து மழுப்புகின்றாள்.

கனகம் தன் நெற்றியில் 'அம்புலிமான்' பொட்டு வைத்திருப்பாள். சந்தைக்கு மரக்கறி வியாபாரம் செய்யப் புறப்பட்டு விட் டால், குங்குமத் திலகம் இன்னும் பெருத்து விடும். சந்தையில் 'பொட்டுக்காரி' என்றுதான் அவளுக்குப் பெயர். அவளுக்கு அதில் ஒரு பெருமை.

புனிதம் எப்படி வெளியில் எடுத்துச் சொல்லுவாள்? தான் நெற்றியில் திலகமிட்டுக் கொள்ளாததற்கான காரணம்?

கணவன் சுவிஸ் புறப்பட்டுப் போன பின்னர் அவள் நெற்றியில் திலகமிட்டுக் கொள்வதில்லை. நெற்றியில் 'பளிச்'சென்று அவள் ஒரு குங்குமத் திலகம் இட்டுவிட் டால் போதும். கணவன் அவளை வளைய வளைய வருவான். அவளை அழைத்து தன் முன்னே நிறுத்தி, அழகு சொரியும் அவள் வதனத்தைக் கண்கொட்டாமல் பார்த்து இரசிப்பான். "நீ இப்ப தெய்வம் போல இருக்கிறாய். லட்சுமி நீ" பைத்தியம் போலச் சொல்லிச் சொல்லிப் பரவசப்பட்டு மாய்வான். அவன் பார்த்து உள்ளம் பூரித்து கிறங்கிப் போன அந்த அழகு... குங்குமம் சிந்தும் பேரெழில் அவனுக்குத்தான் சொந்தம். அவன் சுவிஸ் போன பின்னர் கண்களுக்குத் தெரியாதவாறு லேசாக நெற்றியில் தடவி விட்டுக் கொண்டு, அவன் கட்டிய அந்தத் தாலியில் அவள் தினமும் குங்குமத் திலகம் இட்டுக் கொள்கிறாள்.

இந்த அந்தரங்கத்தை எப்படிப் போய் அவள் கனகத்துக்கு வெளியில் சொல்லுவாள்?

இருவரும் சோதிடர் இல்லம் வந்து சேருகின்றார்கள். சோதிடரிடம் முந்தி வந்தவர்கள், வந்த காரியம் முடிய ஒவ்வொருவராகப் போய்விட்டார்கள். இப்ப சோதிடர் தனித்திருக்கின்றார்.

இவர்களைக் கண்டு, "வாங்கோ...... வாங்கோ....." என மெல்ல வரவேற்கின்றார்.

சோதிடருக்கு எதிரிலுள்ள வாங்குமீது இருவரும் முகம் மலர்ந்து சிரித்த வண்ணம் அமருகின்றார்கள்.

"சந்தைக்குப் போகேல்லையா?" கனகத்தைப் பார்த்து விசாரிக்கின்றார் சோதிடர்.

"இல்லைச் சாத்திரியார். இஞ்சை ஒருக்கால் வர வேண்டி இருந்நிது.... அதுதான்....."

"ஆ.... சரி, தாருங்கோ பாப்பம்."

"புனிதம் சாதகத்தைக் குடு."

அவள் மகன் ஜாதகத்தை எடுத்து, அவர் முன் மேசை மேல் வைக்கின்றாள்.

"ஜாதகக்காரி புனிதம்." சோதிடர் சட்டென்று புரிந்து கொள்ளுகின்றார்.

அவருக்குத் தெரியும், ஜாதகம் பார்க்க வருகின்றவர்களின் பொதுவான பிரச்சினைகள் என்னவாக இருக்குமென்று.

திருமணப் பொருத்தம் பார்க்கச் சோடிச் சாதகங்களைத் தூக்கிக் கொண்டு வருவார்கள். அல்லது ஏதோ ஒரு பிரச்சினையுடன் வருவார்கள். பிரச்சினை பலவகையாக இருக்கும். ஜாதகரின் வயது, ஜாதகம் பார்ப்பதற்கு வந்திருப்பவரின் முகம் சொல்லும் செய்தி என்பவற்றை நுட்பமாக அவதானித்துத் தனக்குள் ஒரு தீர்மானத்துக்கு வருவார். பின்னர் நம்பகரமான ஒரு தகவலை முதலில் எடுத்துச் சொல்லுவார். அவருக்கு இயல்பான பேச்சுச் சாதுரியமும், அநுபவமும் எப்பொழுதும் கைகொடுக்கும்.

முதல் பார்வையில் அவள் நெற்றியில் குங்குமம் இல்லாதிருப்பதை அவர் அவதானித்து விடுகின்றார். முகம் வாடி அவள் கவலையுடன் இருப்பதையும் கவனத்தில் கொள்ளுகின்றார்.

அவன் ஜாதகத்தை விரித்துப் பார்த்துப் பார்த்து, ஒரு காகிதத்தில் பேனாவால் குறித்துக் கணக்குப் போட்ட பின்னர், தலை நிமிர்ந்து குறிப்பாக அவள் முகம் பார்த்துச் சொல்லுகின்றார்.

"இந்த ஜாதகர் பிறந்து ஆறாவது மாதம் தந்தையை இழந்திருப்பார்."

அவள் அவசரமாகக் குறுகிட்டு, "இல்லை அவர் இருக்கிறார்." என மறுக்கிறாள்.

சோதிடர் முகம் ஏமாற்றத்தினால் பட்டென்று மாறுகிறது.

அவர் பொய்த்துப் போகத் தயாராக இல்லை. திரும்பவும் கணக்குப் போடுவது போலப் பாவனை பண்ணுகின்றார். சற்று நேர இடைவெளியின் பின்னர் தலைநிமிர்ந்து, முகத்தில் இறுக்கமும் உறுதியுமாகச் சொல்லுகின்றார். "தகப்பன் இறந்துதான் இருக்க வேண்டும்."

"இல்லை..... இல்லை.... அவர் இருக்கிறார்." அவள் மீண்டும் மறுக்கின்றாள்.

அவளுக்கு இப்படி ஒரு துணிச்சல் எப்படி வந்தது என்று அவளைப் பார்க்கக் கனகத்துக்கு வியப்பாக இருக்கிறது.

"நீங்கள் தானே தாய்?" சோதிடர் வினவுகிறார்.

"ஓமோம்...." அவள் உறுதியுடன் கூறுகின்றாள்.

"அப்படியானால்.....?" அவளை ஏற இறங்கச் சந்தேகத்துடன் அவர் நோக்குகின்றார்.

அவள் கூனிக் குறுகிப் போகவில்லை. மெல்லச் சிரித்த வண்ணம் சொல்லுக்கின்றாள். "நான்தான் தாய், அவர்தான் தகப்பன்."

"இனி, இந்தச் சாதகத்தை நான் பார்ப்பதில் அர்த்தமில்லை." ஜாதகத்தை அவளுக்கு எதிரில் வைத்து விட்டு, சோதிடர் எழுந்து விடுகின்றார்.

"சரி, அக்கா வாங்க போவம்." சாதகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அவளும் எழுந்து விட்டாள்.

கனகத்துக்குப் பெருத்த சங்கடம் சோதிடர் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அவளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. எழுந்து, அவள் பின் தலை குனிந்து போகின்றாள்.

இருவரும் சோதிடர் வீட்டுக்கு வெளியே வீதிக்கு வந்துவிடுகிறார்கள்.

"புனிதம், நீ இதில கொஞ்சம் நிண்டு கொள் வாறன்" சொல்லிக் கொண்டு திரும்பி வேகமாகக் கனகம் உள்ளே போகின்றாள்.

சிறிது நேரத்தின் பின்னர், சிரித்த வண்ணம் மீண்டும் வந்து, "புனிதம் வா. சாத்திரியார் வரச் சொல்லுகிறார்." என அழைக்கின்றாள். அவளுக்கு மனதில் அடங்காத, அதிசயம். ஆனால், வாயைத் திறக்காது பின்தொடர்ந்து போகின்றாள்.

சோதிடர் எதுவும் நடக்காதது போலச் சகசமாகத் தோன்றுகின்றார்.

ஜாதகத்தை விரித்து வைத்துக் கொண்டு பலாபலன்களை அவர் விபரிக்கின்றார்.

அவள் கேட்டுக் கொண்டு எதிரில் அமர்ந்திருக்கின்றாள். ஆனால், அவள் மனதில் எதுமே பதியவில்லை.

அந்த மனசில் அப்பொழுது எழுந்த கேள்வி: "சாத்திரியாரிடம் வந்து அக்கா என்ன சொன்னவ?"

இருவரும் திரும்பிப் போகும் போதும் மனசு கேட்டது: "அக்கா என்ன சொன்னவா?"

அக்காவிடமே கேட்டு விடலாம் எனப் பலதடவைகள் வாய் உன்னி இருக்கின்றாள். அவளுக்கு முடியவில்லை.

குளிக்கும் போதும்.... சமைக்கும் போதும்.... சாப்பிடும் போதும் இடையிடையே மனசு கேட்டுக் கொண்டுதான் இருந்தது: "அக்கா என்ன சொன்னவ?"

இப்பொழுது வேறு கவனம் எதுவும் மனசுக்கில்லை. ஓயாமல் வினவிக் கொண்டிருக்கிறது. ஓட ஓட உறக்கத்தை விரட்டுகிறது. விடியும் வரை காத்திருக்க இயலவில்லை. காத்திருக்காமல் வேறு என்ன செய்வது? இந்த நேரம் போய் அக்காவை எழுப்ப முடியுமா? ஊரடங்கு வேளை வெளியே செல்ல முடியுமா?

எந்தச் சமாதானத்தையும் மனசு கேட்பதாக இல்லை. தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறது. அவளை விழித்திருக்கச் செய்கிறது.

இருள் மெல்ல மெல்லக் கரைகிறது. இருள் செறிந்த இரவின் கோரம் சற்றுத் தணிகிறது. மனசு கொஞ்சம் அடங்கி இடையிடையே வினவிக் கொண்டிருக்கிறது.

அவள் கனகத்தைத் தேடிக் கொண்டு வருகின்றாள். அவளுக்குள்ள அவசரத்தில் வழமைக்கு மாறாக முற்றத்தில் நின்று குரல் கொடுக்கின்றாள்.

"அக்கா!"

கனகம் எழுந்து, பதற்றத்துடன் வெளியே ஓடி வருகின்றாள்.

"என்ன புனிதம்.... விடிந்தும் விடியாமல் இந்த நேரம்! ஆருக்குச் சுகமில்லை? உனக்கு முகம் வீங்கிக்கு கிடக்குது!"

"ஒண்டுமில்லை அக்கா! நேற்று நீங்கள் போய்ச் சாத்திரியாருக்கு என்ன சொன்னனீங்கள்?"

கனகம் அவள் முகத்தை ஒரு தடவை குறிப்பாகப் பார்க்கின்றாள். பின்னர் சிரித்த வண்ணம் மெல்லச் சொல்லுகிறாள்-

"அதுவா......? தகப்பன் வெளிநாட்டிலே. இப்ப மகனைப் பிரிஞ்சிருக்கிறார். தகப்பன் இல்லாதது போலத் தானே.... அதுதான் சொன்னனான்."

"சரி அக்கா, நான் வாறன்" அவள் மனசு சட்டென்று அடங்கிப் போக, அமைதியாகத் திரும்பி வீடு நோக்கி நடக்கின்றாள்.

திரும்பிப் போய்க் கொண்டிருக்கும் அவளை அநுதாபத்துடன் பார்த்து, கனகம் தனக்குள் சொல்லிக் கொள்ளுகின்றாள்:

"பாவம் புனிதம்! அந்த இரகசியம் எனக்குத் தெரியுமெண்டு அவளுக்குத் தெரியாது. அறிஞ்சால் உயிர் விட்டு விடுவாள். மகனில அவளுக்கு அப்பிடி ஒரு பாசம். அவள் மகன், அவள் பெத்த பிள்ளை அல்ல. பிறந்த வீட்டுக்க காசு குடுத்து வாங்கின பிள்ளை."




# பிரச்சனைகள் மீதான ஒரு கண்ணோட்டத்தில், இலங்கைத் தமிழ் பெண் எழுத்தாளர்களின் சவால்களும் சாதனைகளும்

- அந்தனி ஜீவா

'சிறுகதைகள் வாழ்க்கையின் சாளரம்' என்றார் சிறுகதை உலகில் புகழ் பூத்த எழுத்தாளர் புதுமைப்பித்தன். அதனால் தான் இலக்கியத்தில் சிறுகதைகள் உன்னத இடத்தை வகிக்கின்றன. இலங்கைத் தமிழ் இலக்கியத்திலும் சிறுகதைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. சிறுகதைகள் மனித வாழ்வியலை நுட்பமாகச் சித்தரிக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் வளமூட்டிய சிறுகதைகளைப் பெண் எழுத்தாளர்களும் எழுதியுள்ளார்கள்.

'புவியியல் ரீதியாக இலங்கை அமைந்துள்ள விதம், நாட்டின் மக்கள் பரம்பல், சமூகம், கலாசாரம் என்பனவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றது. நாட்டின் மக்கள் இரண்டு பிரதான இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இந்தியாவில் இருந்து வந்து பல பாகங்களிலும் குடியேறியவர்களும் நாட்டின் பழங்குடி மக்களும் பல்வேறு வகைகளில் கலந்து வாழ்ந்தனர். வியாபாரத்திற்கு வந்த அரேபியர், முஸ்லிம்கள், ஐரோப்பியர்கள் என்போர் இந் நாட்டில் வாழ்கின்றனர். தென்னிந்தியாவில் அரசாண்ட அரசர்கள் காலத்திற்குக் காலம் படையெடுத்தும், ஒப்பந்தங்கள் செய்தும் இலங்கையுடன் தொடர்புடையவர்களாக இருந்தனர். இவ்விதம் ஏற்பட்ட தொடர்புகளால் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் கலாசார, சமூக ரீதியான தொடர்புகளும் இருந்தன. எனவே பெண்கள் தொடர்பான கருத்தியல் சமூக அமைப்பு என்பனவற்றில் பல ஒற்றுமைகள் காணப்பட்டன. இந்தியாவில் பெண்களின் அடிப்படைப் பாத்திரம் தாய், மனைவி, மகள் என்பதுடன் குடும்பத்திலுள்ள ஆண்களுக்குப் பெண்கள் அடங்கி நடக்க வேண்டும் என்ற கருத்தும் இருந்தது. இது இலங்கைப் பெண்களைப் பாதித்த கருத்தியலில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.' இவ்வாறு கலாநிதி குமாரி ஜெயவர்த்தன குறிப்பிடுகிறார்.

1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தும் கூட, கலை இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை அது ஏற்படுத்தவில்லை. அறுபதுகளுக்குப் பின்னர் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றம் இலவசக் கல்வி, பல்கலைக்கழகம் வரை தாய் மொழிக் கல்வியில் பட்டம் பெறும் வாய்ப்பு போன்றவையும் உலக அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களும் இலக்கியத்துறையில் புதிய எழுச்சியை ஏற்படுத்தின.

உலக மக்கள் தொகையில் அரைவாசி பெண்களாக இருக்கின்ற காரணத்தினால், பெண்கள் பிரச்சனைகள் சமூகத்தின் பிரச்சனைகள் ஆகின்றன. சர்வதேச பெண்கள் ஆண்டில் உலக செயலாக்கத் திட்டம் முன் வைத்த தீர்மானம் 'உலக மக்கள் தொகையில் 50 சதவீதத்தினர் திறமைகளையும், சக்திகளையும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாததால் ஏற்படும் நட்டம் ஒட்டுமொத்தமாகச் சமூகத்தின் நட்டமாகவே மாறுபடுகின்றது.' ஆகவே உலக முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் பெண்கள் ஓரங்கட்டப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் மையமாகவே அமைகிறார்கள். எனவே இந்த முயற்சிகளில் அதிக ஈடுபாடுடன் செயற்பட வேண்டியவர்கள் அவர்களே. இந்த நேரத்தில் தான் பெண்ணிய வாதிகள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சம உரிமை கோரினார்கள். இதன் பின்னரே பெண்களால் பெண்கள் தொடங்கிய பெண் விடுதலை இயக்கம் வெகுவாக முன்னேற்றம் அடைந்தது.

இதேபோலப் பெண்கள் கலை, இலக்கியத் துறைகளில் ஆண்களுக்கு நிகராகப் படைப்பிலக்கியவாதிகளாக மாறினார்கள். வடக்கில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சாதிப் பாகுபாடு ஒரு சமூகப் போராட்டமாகப் பரிணமித்ததை இலக்கியம் பெற்றுக் கொண்டது. கிழக்கில் தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களிடையே காணப்பட்ட ஒற்றுமை, நல்லுறவு, மலையகத்தில் ஒடுக்கப்பட்ட சமூகம் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க, தென்னிலங்கையில் பெரும்பான்மை சமூகத்துடன் உள்ள உறவு நிலைமை, இத்தகைய நிலைமையை இலக்கியப் படைப்புகள் மூலம் எடுத்துக் காட்ட முனைந்தார்கள்.

இந்த அடிப்படையில் சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் என இலக்கிய வடிவம் பெறலாயிற்று. இதில் பெண்களின் பங்களிப்பு எத்தகையது? இவர்கள் ஆண் எழுத்தாளர்களைப் போலச் சமூகத்தை ஊடுருவிப் பார்க்கிறார்களா? ஆண்

எழுத்தாளர்களோ, விமர்சகர்களோ பெண் படைப்பாளி களின் ஆக்க இலக்கிய ஆற்றல்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பது கவனத்திற்குரிய ஒன்றாகும்.

இதற்கு முன்னோடியாகப் பெண்கல்விக்கும் பெண்ணு ரிமைக்குமாக உரத்துக் குரல் கொடுத்த பாரதி பெண்களைக் கீழ்மைப்படுத்திய பழைய சமுதாயத்தைத் தமது கவிதைகளிற் சாடினார். இந்தியாவை 'இந்தியத் தாய்' எனும் பெண்ணாகவே அவர் பாடியதோடு பெண்க ளின் அடிமைப்பட்ட நிலை பற்றியும் ஒதுக்கப்பட்ட சகல பகுதியினரும் விழிப்புற வேண்டும் என்றும் பாடினார். தாம் ஆசிரியராக இருந்த 'இந்தியா' என்ற பத்திரிகையில், ஐரோப்பாவில் பெண்களின் வாக்குரிமைக்கான போராட்ட த்தை ஆதரித்துக் குறிப்பு எழுதினார். அவர் 'சக்கரவர்த் தினி' என்ற பெண்கள் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். சீனாவில் பெண்ணிலைவாதம் பற்றிய செய்தி களை அறிந்து அதனால் கவரப்பட்ட பாரதி 'ஜின் என்ற சீனப் பெண்ணின் கதை', 'ஜியு ஜின்னின் பேச்சு' என்ற இரண்டு கட்டுரைகளில் பிரபல சீனப் பெண் தியாகியைப் பற்றி எழுதினார். பாரதியின் பாடல்கள் அனைத்திலும் பெண்களின் பிரச்சனைகள் குறிப்பிட்டுள்ள போதிலும், அதில் மிகச் சிறந்தது புதுமைப் பெண் பற்றிய கவிதை யாகும். அவரது பாடல்களில் அநேகமாகத் திருமணம், கற்பு, சுதந்திரக்காதல் பற்றியே குறிப்பிடப்படுகின்றன.

ஆண் எழுத்தாளர்கள் மத்தியில் பெண்களும் எழுதுகிறார்கள் என்று மாத்திரம் கூறினார்களேயொழிய அவர்களின் படைப்புத் திறன் பற்றியோ அவர்கள் எதிர் கொள்ளும் எந்தப் பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ள ப்படவில்லை. பெண் எழுத்தாளர்கள் முதலில் சிறுகதை கள் மூலமே தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

இலங்கைத் தமிழ் சிறுகதை வரலாற்றில் முதலில் பெண்ணிய வாதத்தை முன் வைத்தவர் பேராதனைப் பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரியான பவானி ஆழ்வாப் பிள்ளை ஆவார். 'வேண்டும் என்றே ஏதோ ஒரு நோக் கோடு நான் எழுதவில்லை எனினும் எனது எழுத்துக் களை சுய நிர்ணயம் (தன்னை அறிதல்) என்று கூறலாம்.' என பெண் விடுதலை சார்ந்த கருத்துக்களை துணிவாக முன் வைத்தவர் பவானி. இவரது சிறுகதைகள் 'கடவுள ரும் மனிதரும்' என்ற மகுடத்தில் 1962 இல் வெளி வந்தது. இது பெண் எழுத்தாளர் ஒருவரின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகும்.

'பவானியின் சிறுகதைகள் பலவற்றில் குடும்ப உறவு நிலை, காதல் உறவுகள் என்பன பாரம்பரியச் சிந்தனை களுக்கு முற்றிலும் புதிதாகச் சித்தரிக்கப்படுகின்ற தன்மையைக் காணலாம். கற்பு, ஒழுக்கம் போன்ற நெறிகள் தன்னை அறிதலில் மீறப்படத்தக்கவையெனப் பவானி தன் சிறுகதைகளில் கரு (உள்ளடக்கம்) பாரம் பரிய கலாசாரப் பண்புகளைப் பேணும் சமூகத்திற்கு எவ் வளவு தூரம் பொருந்தும் என்பதும், பெண்கள் பக்கம் நியா யமாகி விடுமோ என்பதும் கேள்விக்குரியவை. எனினும், பவானியின் சிறுகதைகளில் உருவ அமைதியையும் சில சிறுகதைகளில் தரிசிக்க முடிகிறது'. இவ்வாறு சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான செங்கை ஆழியான் குறிப் பிடுகின்றார்.

இலங்கையில் இதுவரை 300 இற்கு மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவைகளில் 30 தொகுதிகள் கூட, பெண் எழுத்தாளர்களின் தொகுதி களாக இல்லை. இவ்வகையில் பெண் எழுத்தாளர்கள் எழுதும் கதைகள் தொகுப்புக்களாக வெளி வருவது மிகக் குறைவாகும். பல சிறுகதைகள் பத்திரிகைகளில், சிறு சஞ்சிகைகளில் வெளிவந்து அதன் சுவடுகள் கூடத் தெரியாமலே மறைந்து விடுகின்றன.

'எழுதத் தொடங்கிய 35 வருட காலத்தின் பின்னே நூலுருவில் உங்களைச் சந்திக்கின்றேன். ஏன்? எனக்கே புரியவில்லை. வாழ்க்கையில் அகத் தடைகளும் புறத் தடைகளும் அதே இலக்குகள் தட்டிப் போகின்றன. அவற்றைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதோடு திருப்தியாக ஏன் மகிழ்ச்சியாக வாழ எமது உள்ளம் பழக்கப்பட்டவை காரணமாகலாம்.' என்கிறார் மூத்த பெண் எழுத்தாளரான குறமகள் என்ற திருமதி. வள்ளி நாயகி இராமலிங்கம். ஐம்பதுகளின் நடுப்பகுதி களில் எழுதத் தொடங்கிப் பலரின் கவனத்திற்குள்ளான நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் தான் 'குறமகள் கதைகள்' என்ற தலைப்பில்அவரது சிறுகதைகள் நூலுருவம் பெற்றது.

பெண்ணியம் மனித நேயத்திற்கு புதிய பொலிவும் அர்த்தமும் ஆழமும் பாய்ச்சுதல் வேண்டும். இதனைத் துல்லியமாக உணர்ந்தவர் குறமகள். 'மனிதநேயம் மக்களின் தவறுகளை மறுபக்கம் நியாயம் பார்த்து மன்னிக்கவும் செய்கின்றது. ஆனால் அநீதிகள் இழை க்கப் படும் போது சாட வைக்கின்றது.' என்று ஒழிவு மறை வின்றித் தமது நிலைப்பாட்டினைப் பிரசித்தமாக்கியுள்ளார். 'சொன்னதைப் பொறுப்புணர்ச்சியுடன் நன்றாகவே வந்தனை செய்து கொண்டு எழுதும் குறமகளின் இந்தக் கதைகள் யாழ்ப்பாணத்துப் பெண்களின் பல்வகையான வாழ்க்கைக் கோலங்களை நமக்கு அறிமுகப்படுத்து கின்றன. ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் சாதித்தவற்றி ற்கு ஒரு மெய்யான ஆவணமாகக் குறமகள் கதைகள் திகழுகின்றன' என்றார் இலக்கிய சாதனையாளரான எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை.

அறுபதுகளிலிருந்து இலக்கியப் பிரவேசம் செய்த பெண் எழுத்தாளர்களைப் பற்றிக் குறமகள், குந்தவை, சிதம்பரபத்தினி, பா. பாலேஸ்வரி, பத்மா சோமகாந்தன், பவானி, யோகா பாலச்சந்திரன், யாழ்நங்கை, (அன்ன லட்சுமி ராஜதுரை), நயீமா சித்திக், பூரணி என்று குறிப்பிட லாம்.

அதன் பின்னர் ஒரு புதிய தலைமுறைப் பெண் எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் கால் பதித்தனர்.

அவர்களில் கோகிலா மகேந்திரன், தமிழ்ப்பிரியா, தாமரைச்செல்வி, மண்டூர் அசோகா, புசல்லாவ இஸ்மாலிகா, ராணி ஸ்ரீதரன், ரஹீமா, கெக்கிராவை சகானா, பாலரஞ்சனி சர்மா, ஹற்றன் சாந்தாராஜ், அக்னஸ் சவரிமுத்து, சுலைமா சமி, தாட்சாயினி, லஹீனா ஏ. ஹக் என்போரைக் குறிப்பிட்டுக் கூறலாம். இன்னும் சிலரும் சிறுகதை, கவிதையென ஈடுபாடு கொண்டு எழுதி வருகின்றனர்.

'பெண்ணின் வளர்ச்சியைத் தடுக்கும் வீட்டு வேலைகள், பெண்களை நசுக்குவதோடு அவர்களை மதிப்பிழக்க வைக்கிறது. சமையல்கட்டு, குழந்தைப் பராமரிப்பு என்பவையோடு சங்கிலியால் பிணைக்கப்பட்ட பெண்களின் வேலையின் தன்மை காட்டுமிராண்டித்தனமானது. வினைப் பயனற்றது, அற்பத் தனமானது, மன உளைச்சலைத் தருவது, சோர்வடையச் செய்வது' என்று பெண்ணின் நிலைமையை யதார்த்த பூர்வமாக எடுத்துச் சொன்னார் மாமேதை லெனின்.

இத்தகைய பெண்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் காரணிகளை யோகா பாலச்சந்திரன், கோகிலா மகேந்திரன், பத்மா சோமகாந்தன், போன்றவர்கள் தங்கள் படைப்புக்களின் மூலம் துணிச்சலாக வெளிப்படுத்தி பெண்களின் மன உணர்வுகளைப் பெண்களால் தான் கொண்டு வர முடியுமெனத் தங்கள் சிறுகதைகள் மூலம் வெளியுலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இது போன்று இஸ்லாமிய வாழ்வியலை அற்புதமாக சித்தரித்துக் காட்டியுள்ளார் மலையகத்தின் மூத்த பெண் எழுத்தாளரான நயீமா ஏ. சித்திக். வர்க்க முரண்பாடு எவ்வாறு குடும்பத்திற்குள் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது. குறடும்பத்திற்குள் ஏற்படும் சிக்கல்களை விமர்சிக்கின்றது.

வன்னிப் பிரதேசத்தைச் சார்ந்த எழுத்தாளரான தாமரைச்செல்வி- தனது படைப்புகளில் போர்க் கால அவலத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். வெளியே யிருந்து கொண்டு கற்பனைக் கண்களால் அவற்றைப் பார்க்காமல், அந்த மண்ணில் மக்களுடன் வாழ்ந்து அவர்களது துன்பங்களில் பங்கு கொண்ட நேரடி அநுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்.

சமீபகாலங்களில் வன்னிக்குள் இருந்து மிக அதிகமான படைப்புக்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் தேடிப் படிக்கப்படுவனவாகவும், பேசப்படுவனவாகவும் இப்படைப்புக்கள் தம்மை அடையாளப்படுத்தி இருப்பது மிக மகிழ்ச்சிக்குரிய விடயம். காலம் எமது மண்ணில் வரைந்த துயரத்தை அந்தத் துயருக்குள் இருந்து மக்கள் உயிர்ப்புப் பெற்று வாழ்வதையும் பதிவு செய்வதில் படைப்பாளிகள் தமது பங்கைக் கணிசமான அளவில் பதிவு செய்து கொண்டு வருகின்றார்கள். புனைவுகளோ, பொய்களோ அற்று இருப்பதினால் தான் இப்படைப்புக்கள் வாசகர்களின் கவனத்தைப் பெறுகின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது என்கிறார் எழுத்தாளரான தாமரைச்செல்வி.

வடக்கு, கிழக்கு, மலையகம் என்று மாத்திரம் இல்லாமல் தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களும் தாங்கள் வாழும் சூழலையும் பிரச்சனைகளையும் தங்கள் படைப்புக்களில் கொண்டு வரத் தவறுவதில்லை. தென்னிலங்கையில் ஹஸீனா வஹாப் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர். மாத்தறை ஹஸீனா வஹாப் ஆர்வம் மிக்க எழுத்தாளர். இருபத்தைந்திற்கு மேற்பட்ட சிறுகதைகளும், ஒரு நாவலும் எழுதியுள்ளார். அவரது 'ஹாஜியார் மாப்பிள்ளை' போன்ற கதைகளில் மாத்தறைப் பேச்சுத் தமிழை மிகப் பவ்வியமாகக் கையாளுகின்றார்.

கால ஓட்டத்தால் பெண் எழுத்தாளர்கள் சிலர் எழுத்துத் துறையை விட்டு ஒதுங்கி விட்டனர். சிலர் புலம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள். மூத்த எழுத்தாளர்கள் சிலரும் இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்களும் சமுதாயக் கண்ணோட்டத்தோடு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் படைப்புகளை, பன்முக ஆற்றல்களை எடை போடுவதற்கு இவர்களின் படைப்புகள் நூலாக வெளிவர வேண்டியது அவசியமாகும். இலங்கைப் பெண் எழுத்தாளர்கள் இருபத்தைந்து பேர்களின் சிறுகதைகள் 'அம்மா' தொகுதியாக வெளிவந்துள்ளது. இந்தத் தொகுதியில் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் வாழும் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கைச் சுதந்திரப் பொன்விழாவை யொட்டி இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியக் குழு 1998 ஆம் ஆண்டு 'சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டது. இதில் ஐம்பது சிறுகதைகள் அடங்கியிருந்தன. அவற்றில் நான்கு சிறுகதைகள் தான் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளாக இடம் பெற்றிருந்தன. நமது பெண் எழுத்தாளர்கள் அரச மட்டத்திலும் ஒதுக்கப்படுகிறார்கள் என்பதற்கு இத் தொகுதி எடுத்துக்காட்டாக அமைகின்றது. இதே போல் பத்திரிகைகளில், சிறு சஞ்சிகைகளில் வெளிவந்த காத்திரமான சிறுகதைகளைத் தேடியெடுத்துப் பதிப்பிக்க வேண்டியது பெண்ணிய அமைப்புக்களின் கடமையாகும். பெண் எழுத்தாளர்களின் ஆக்க இலக்கியப் படைப்புகள் பற்றிய ஆக்க பூர்வமான ஆய்வுகள் வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும். பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தவிர்த்து இலங்கைத் தமிழ் இலக்கியத்தை ஒட்டுமொத்தமாக மதீப்பீடு செய்ய முடியாது என்பது யதார்த்த பூர்வமான உண்மையாகும்.

(தமிழகத்தில் திருச்சி தூயவளனார் கல்லூரியில் 'அயலகத் தமிழர் வாழ்வும் இலக்கியமும்' என்ற தலைப்பில் டிசம்பர் முதல் வாரம் நடைபெற்ற கருத்தரங்கில் அந்தனி ஜீவாவால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.)

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*


**சுத்தமான, சுவையான, சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகளுக்கு
கொழும்பு மாநகரில் பிரசித்தி பெற்ற ஹோட்டல்
எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கத்தக்க பெயர்**

# Golden Cafe

# VEGETARIAN HOTEL




98, பாங்க்ஷால் வீதி,
கொழும்பு - 11.
தொலைபேசி இல. 2324712




மெல்லிய முன்னிருட்டுக் கவிந்து கொண்டிருந்தது. விண்ணில் சூல் கொண்டிருந்த கருமேகங்கள் மழை வர்ஷிப்புக்காய்ப் புடைத்து நின்றன. மழைக்காலச் சூழல், கடற்கரை சந்தடியின்றி ஓய்ந்து கிடந்தது. அவளும், அவனும் தோள்கள் அணைத்தபடி, நெருங்கியிருந்து காதல் பரிபாஷை மொழிந்து கொண்டிருந்தனர். அலையோசை சுருதி தளர்ந்து சன்னமாய்த் தொலைவில் ஒலித்தது.


தொடுவானில் பறவைகள், நேர்த்திசையாகக் கூட்டாகச் சேர்ந்து, அண்மையிலிருந்த மரங்களடர்ந்த செண்பகத் தீவுக் காட்டினுள் அவை சென்று உறைந்தன. அங்கு நிலவிய சீதளக் காற்றின் தாக்கமும், குளிரும் தேகங்களின் கதகதப்பில் அவர்களுக்கு உறைக்கவே இல்லை.

எல்லையற்ற மகிழ்ச்சிப் பிரவாகத்தில் இருவரும் மூழ்கியிருந்தார்கள் என்பதற்கு அடிக்கடி சிந்திய சிரிப்பொலியே சாட்சி பகன்றது. ஆழிப் பெண் நீலப் போர்வையில் நீட்டி நிமிர்ந்து நெட்டுயிர்த்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவர்களிருவரும் காதல் போதையில் கிறங்கிக் களித்து முத்தம் சொரிந்தனர்.




ஆனந்தன் மும்பையில் தொழிற் பயிற்சிக் கல்லூரியில் படித்தபோது, கல்லூரி மாணவியான மேரியை எதேச்சையாகச் சந்திக்கின்றான். பொங்கித் ததும்பும் அவளது பேரழகில் மயங்கி மனதைப் பறிகொடுக்கிறான். அடிக்கடி தொடர்ந்த சந்திப்பும், நட்பும் நாளடைவில் காதலாகப் பரிணமித்தது. இரண்டு ஆண்டுகள் ஒருவரையொருவர் மானசீகமாக நேசித்தனர்.

படிப்பு முடித்து அவளைப் பதிவுத் திருமணம் செய்து, இலங்கைக்கு அழைத்து வந்து விட்டான் ஆனந்தன். மும்பைப் பெண்ணான மேரிக்கு இந்நாட்டின் வனப்பும், வசீகரமும் மனதைக் கவர்ந்திருந்தது. கடல்முகப் பிரதேச வடக்குப் பக்கமாக ஆனந்தனின் இல்லம் இருந்தது.



ஆனந்தனின் தந்தை ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி. இவர்களது காதல் திருமணத்திற்கு அவர் எதிர்ப்புக் காட்டவில்லை. இருவரும் அந்திக் கருக்கலில் அருகிலிருந்த கடற்கரைக்குக் காற்று வாங்க வருவது வழக்கம்.

அவளை ஆரத்தழுவி கன்னம் சிவக்க முத்தமிட்டு விட்டு, வாஞ்சையோடு கேட்டான். ''டார்லிங்! ஸ்ரீலங்கா உனக்குப் பிடித்திருக்கிறதா?'' ''வை நொட், வெரி நைஸ்! பீயுட்டிபுல் கன்ட்ரீ'' என்று கூறியவாறு கன்னக் கதுப்புக்களில் குழிவிழக் கவர்ச்சியாகச் சிரித்தாள்.

நாளை மறுநாள் கண்டிக்குச் சுற்றுலா போவது குறித்து இருவரும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தனர். வானில் தென் கோடியிலிருந்து ஒரு மின்னல் கீற்று திடீரென மின்னி மறைந்தது. தூரத்தே இடி முழக்கம் கேட்டது. ''மேரி மழை வருமாப் போல இருக்கு. இருட்டுப்பட முன் வா, வீட்டுக்குப் போவோம்.'' அவன் அவளைத் துரிதப் படுத்தினான். எழுந்து நின்று மேனியில் அப்பியிருந்த மணற்றுகள்களைத் தட்டி உதறியவாறு, கை கோர்த்துக் கொண்டு ஒய்யாரமாக நடந்து சென்றனர்.

நீலநிற ஜீன்சும், சிகப்புநிற கையில்லாப் பிளவுசும் மிக இறுக்கமாக அணிந்திருந்தது, மேரியின் தோற்றத்தை எடுப்பாகக் காட்டிற்று. ஆளை உறுத்தும் நீண்டு வளர்ந்த கைகால்கள், ஐந்தரை அடிக்கு மேலான அதிஉயரம், செக்கச் சிவந்து பளபளக்கும் மேனி, சதைத் திரட்சியினால் பொலிவு காட்டும் கட்டுடல், பருவப் பூரிப்பு.

கொழுத்துப் பெருத்த பிருஷ்டபாகம் வரை நீண்டு பரந்திருந்த கருங்கூந்தல் இவையனைத்தும் அவளை ஒரு அழகுத் தேவதையாகத் துல்லியப் படுத்தியது.

கடற்கரையை அண்மித்தக் குறுக்குப் பாதையில் ஒரு சிகப்பு நிற ஆட்டோ ஓசையின்றி நிறுத்தப் பட்டிருந்தது. அதனுள் அமர்ந்திருந்த நான்கு முரடர்கள் இவர்களிரு வரையும் கூர்ந்து அவதானித்தவாறு இருந்தனர். உடம்பெங்கும் பச்சை குத்தியிருந்த கும்பலின் தலைவன் பிரான்சிஸ். போதையேறிய விழிகளால், மேரியை வக்கிரப் பார்வை பார்த்து விட்டுக் கூறினான்-

"இவளை எப்படியாவது மடக்க வேண்டும் மச்சான். மறியல் போனாலும் பரவாயில்லை." வன்மம் கலந்த குரலில், கம்பீரம் திளைத்திருந்தது.

இது போன்ற சமூக மீறல்கள் பலவற்றை வெற்றி கரமாகச் செய்து பரீச்சயமானவன்தான் பிரான்சிஸ். எந்தக் குற்றச் செயல்களுக்கும் அவன் பிடிபட்டதேயி ல்லை. பகலில் சைக்கிளில் சென்று மீன் விற்பான். இரவில் அவனது கும்பலோடு சேர்ந்து வழிப்பறி, கற் பழிப்பு, கொலை எல்லாம் செய்வான்.

இந்தக் கடல்முகப் பிரதேசமும், பார்க்கப் பீதியூட்டும் செண்பகத்தீவும், காடும் அவனது பயங்கரச் செயல்க ளுக்கான கேந்திரத் தளங்களாகும். இவனது கூட்டாளி கள் ஆட்டோச் சாரதி சுனில், வழிப்பறித் திருடன் மானெல், கஞ்சாவிற்கும் சரத் ஆகியோர் ஆட்டோவிலிரு ந்தவாறு தங்கள் குழுத் தலைவனின் பிரகடனத்தை ஆதரிக்குமாற் போன்று மௌனம் சாதித்னர்.

இவர்களுள் ஆட்டோ சாரதி சுனில் இக்கூட்டத்தோடு புதிதாக வந்து ஒட்டிக் கொண்டவன். குற்றம் புரிவதை மனசார ஏற்றுக் கொண்டவன் அல்ல. பழக்கதோஷம் யாரை விட்டது? போதைப் பழக்கம் கெட்ட சகாக்களோடு கை குலுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது.

"ஒவ்வொரு நாளும் இவள் தங்கபஸ்ப உடலோடு கடற்கரைக்கு வாறா மச்சான். அவளது புருஷனை அடிச்சி நொறுக்கிப் போட்டுக் கிளியக் காட்டுக்குள் கடத்திக் கொண்டு போயிட்டா விடிய விடிய ஜாலிக்கு என்ன குறைச்சல்?"

வழிப்பறித் திருடன் மானெல் மிகச் சாதாரணமாகச் சொல்லிவிட்டு கரையோரச் சூழலை அர்த்தத்தோடு வெறித்தான். அவர்களுக்குள் கூட்டுச்சதி மிகத் தீவிரமாக நிர்ணயமானது. ஆட்டோவிலிருந்த சாராயத்தை சிநேகபூர் வமாகப் பகிர்ந்து குடித்தனர். போதையில் விழிகள் கிறங்க அந்த அழகியின் அங்க லாவண்யம் பற்றிய சுகானுப வத்தில் கற்பனைக் கோட்டை கட்டி மிதந்தனர்.

அங்கு கடற்கரைக்குச் சற்றுத் தொலைவில் மரங்கள டர்ந்த பெரும் காடு. இப்பிரதேசத்தில் கத்தி முனையில், திருட்டு, கற்பழிப்பு, கொலை போன்ற குற்றச் செயல்கள் தொடர்ந்து நிகழ்ந்து வந்தன. இந்த வனாந்திரத்தின் மையப் பகுதியிலேயே காடையர் கும்பல் எந்த எதிர்ப்பு மின்றி இச்செயல்களை நடத்தி வந்தனர்.

தொடர்ந்து நிகழ்ந்து வந்த இந்த வன்முறைச் சம்பவங்களை அப்பகுதி காவல் நிலையம் கண்டு கொள்ளவில்லை. முறைப்பாடுகள் வந்தபொழுதிலும் அதையிட்டு கரிசனை காட்டவில்லை. குற்றம் புரிபவரிட மிருந்து ஒரு தொகை பணம் அவர்களைச் சென்ற டைவதாகப் பிரதேச மக்கள் குறைபட்டனர்.

*இங்கு கடலும், கங்கையும் சங்கமமாகும் இடம்.* மேற்கே வெட்டைக்குளி வரை கிறிஸ்தவ மீனவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதி. கல்லுக் கோயில் தொட்டுப் பாதையருகில் கிறிஸ்தவ தேவாலயங்கள் நிறைந்து காணப்படும். துறைமுக அதிகார சபையின் நடவடிக்கைகள் இங்குவரை பரந்து முடுக்கிவிடப் பட்டிருக்கும். சிறுபான்மை இனத்தவராகத் தமிழ், முஸ்லிம் மக்கள் ஆங்காங்கே வாழ்கிறார்கள்.

இங்கு மசூதிகள், இந்துக் கோயில்கள் கல்லூரிகள் என ஜனநெரிசல் எப்போதும் களை கட்டிக் கொண்டிருக்கும். இப்பிரதேசத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயம், பத்ரகாளி அம்மன் கோயில் ஆகியவை பிரச்சித்தி பெற்றவை. உற்சவ காலங்களில் பக்தர்களின் வருகை அதிகரித்துக் காணப்படும்.

மேரியும் ஆனந்தனும் மறுநாள் மாலை கடற்கரைப் பரப்பிற்கு வந்த போது, அந்திக் கருக்கல் தலைகாட்டிச் சிறிது இருட்டியிருந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாகச் சோர்ந்திருந்தது. சற்று நேரத்திற்கு முன் மழை பெய்தி ருக்க வேண்டுமென்பதை ஈரலிப்பான தரைமணல் உணர்த்தியது. நீண்ட நேரம் இருவரும் மனம் குதூக லித்து உரையாடிக் கொண்டிருந்தனர். எந்தச் சந்தடியு மற்ற ஓர் சூனிய அமைதி அங்கு கவிந்திருந்தது.

நேரமாகிவிட்டதினால் இல்லம் செல்லத் தயாராகினர். திடீரென ஒரு சிகப்பு நிற ஆட்டோ வேகமாக வந்து நிறுத்த அதிலிருந்து நால்வரும் குதித்து இறங்கினர். கனத்த தடிகளினால் ஆனந்தனைக் குறிவைத்து ஆக்ரோஷத் தோடு சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். கும்பலை எதிர்த்து முடிந்தவரை ஆனந்தன் துணிவோடு போராடி னான். வெறி கொண்ட காடையர் கும்பலின் நோக்கம் மேரி யைக் கடத்திக் கொண்டு போவதில் இலக்காயிருந்தது.

திடீர் முற்றுகையினால் நிராயுதபாணிகளான இவர் கள் இருவரும் விழிபிதுங்கித் தடுமாறினர்.

"மேரி ரண்! ரண்!" என்று ஆனந்தன் கூக்குரலிட்டான். வலப்பக்கப் பிரதான பாதைக்குச் செல்ல வேண்டிய அவள் பரபரப்பான மனநிலையில் தடுமாறி இடது பக்க கடற்கரையோரமாக மூச்சை விட்டவாறு வேகமாக ஓடினாள்.

தலையில் பட்ட பலத்த அடியினால் ஆனந்தன் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான். ஓசைகளற்ற வெற்றுப்

பெருவெளியாய்க் கடற்கரை காட்சி தந்தது. காட்டுப் பக்கமா அவள் ஓடுவது கும்பலுக்கு அநுகூலமாய் அமைந்தது. முழுப் பிரயத்தனத்தோடு அவளைத் துரத்திப் பிடிக்க நால்வரும் பின் தொடர்ந்து ஓடினர்.

மேற்கு மூலையில் இடியோசை மூக்கமாக்க் கேட்டது. வான்பரப்பில் மின்னலின் வருகை தொடர்ந்த வண்ண மிருந்தது. மறுகணம் பலத்த ஓசையுடன் மழை பொழிய ஆரம்பித்தது. பெரும் ஆபத்தில் சிக்கித் தவித்த அவள், உயிர் துடித்து நெக்குருகிக் காப்பாற்றும் படி அபயக்குரல் கொடுத்தாள்.

அவளின் பரிதாபக் கூக்குரலைக் கேட்பதற்கு அங்கெவரும் இருந்தாற்தானே? சில கணங்களுக்குப் பின் நினைவு திரும்பிய ஆனந்தன், தனது வேதனை யையும் பொருட்படுத்தாது 'மேரிக்கு என்ன நடந்திருக் குமோ?' என நினைத்துக் கதி கலங்கினான். பொலிசுக்குச் சென்று முறைப்பாடு கொடுத்துவிட்டு, பரிதவித்த நிலை யில் நடைப்பிணமாக வீடு திரும்பினான். ஆனந்தனின் தந்தை இந்த அதிர்ச்சியூட்டும் சம்பவத்தை அறிந்து துடிதுடித்தார்.

அவர் ஒரு முன்னாள் பொலிஸ் அதிகாரி என்பதால், அவரது செல்வாக்கைப் பிரயோகித்துப் பொலிஸ், இரா ணுவ உயர் அதிகாரிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கோரினார்.

விடியும் வரை இரவு நடந்த சம்பவம் குறித்து எவ்விதத் தடயங்களும் கிட்டவில்லை. தொடந்து கனமழை நகரை உலுப்பிக் கொண்டிருந்தது. மறுநாள் ஊடகங்களில் பெண் கடத்தல் பற்றிய செய்தி வெளியாகியிருந்தது.

மழையின் கடுமையினால் செண்பகத்தீவுக்காடு சேறும், சகதியுமாய் இருள் கப்பிப் போயிருந்தது. விடியற் காலையில் இராணுவமும், பொலிசும் சிரமப்பட்டுக் காட்டுக்குள் சென்று பாரிய தேடுதல் நடத்தினர். உடம் பெங்கும் காயங்களுடன் மேரியின் நிர்வாணச் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆட்டோ சாரதி சுனில் இரவு நடந்தேறிய கொடுமை குறித்து மனம் கலங்கி வருந்தினான். அந்நிகழ்வு ஒரு கொடுங்கனவாய் அவனது மனசாட்சியை உறுத்தியது.

நேற்றிரவு நிகழ்த்திய அந்த பயங்கர வன்முறையை அவன் மட்டு எதிர்த்து வேண்டாமெனக் கண்ணீர் விட்டுக் கெஞ்சினான். பிரான்சிஸ் காட்டுக்குள் வைத்து அவனது கன்னத்தில் ஓங்கியறைந்து, "பின் எதற்கடா நாயே எங் கட பின்னால வந்தாய்?" என்று சீறினான். இந்த விலங்கு கள் நடத்திய வன் கொடுமையை நினைத்து மனம் தாளாது, ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்தான். சுனில் தைரியமாகக் காவல் நிலையம் சென்று நடந்த கொடுமை பற்றித் தெளிவாக வாக்கு மூலம் கொடுத்தான். அவனது வாக்கு மூலத்தால் புலப்படாதிருந்த குற்றச் செயலின் உள் மடிப்பு சி. ஐ. டி யினருக்குத் தெரிய வந்தது.

பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட மேரியின் வழக்குத் தொடர்பாகச் சூத்திர தாரிகளைத் தேடிப் பொலிஸ் வலை விரித்தது. ஆன போதும் சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டு ஓடி எங்கோ தலைமறைவாகியிருந்தனர்.

பெண்ணிய இயக்கங்களும், பொது மக்களும் பரபரப்பு க்குள்ளாகி பாதையிலிறங்கி "குற்றவாளிகளைக் கண்டு பிடி" "கடுந்தண்டனை கொடு" என ஆர்ப்பாட்டம் செய்து கோஷம் எழுப்பினர். இக்கொடுமைகள் நடந்தேறும் போது பெண்ணின் நகைகள் ஆயுதமுனையில் அபகரிக்கப் பட்டுப் பிரான்சிஸ் யாருக்கும் கொடுக்காது தானே சொந்தமாக்கிக் கொள்வான்.

மேரியின் நகைகளை விற்றுப் பணமாக்கிக் கொண்டு, கம்பளையிலிருக்கும் தனது தங்கை வீட்டில் பிரான்சிஸ் தஞ்சமடைந்தான். இதற்கிடையில் ஆட்டோ டிரைவர் சுனில் அரச தரப்புச் சாட்சியாக மாறிச் சி. ஐ. டி யினருக்கு முக்கிய தகவல்களை வழங்கியதால், குற்றவாளிகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, பிரதான சாட்சியாகப் பதிவு செய்யப்பட்டதுடன். பிரான்சிஸின் அடாவடித்தனங்களை நன்கறிந்த தங்கையின் கணவனுக்கு அவன் மீது சந்தேகம் வலுத்தது.

குற்றச் செயல் குறித்துத் தேடப்பட்டு வரும் சிலரின் செய்திகளை , மைத்துனர் பத்திரிகையில் படித்திருந்தார். அநீதிக்குத் துணை போவது பெரும் பாவச் செயல் என்ற நிர்ணயத்தோடு, மச்சானைப் பொலிசில் காட்டிக் கொடு த்தார். சந்தேக நபர்கள் மூவரும் பிடிபட்டுத் தீவிர விசா ரணை நடந்தது. இறுதியில் பிரான்சிஸும் கூட்டாளிகள் இருவரும் தவறிழைத்ததை ஒப்புக் கொண்டனர். முதலாவது எதிரிக்கு மரண தண்டனையும் இரண்டாம் மூன்றாம் எதிரிகளுக்கு ஆயுள் தண்டனையும் தீர்ப்ப ளித்தது நீதிமன்றம்.

ஆனந்தன் எதிலுமே பிடிப்பற்ற மன உளைச்ச லினால் விரக்தியுற்றுப் போனான். படுகொலை செய்யப் பட்ட மேரியின் அவலம் குறித்த கவிதையொன்று சிறு சஞ்சிகை ஒன்றில் பிரசுரமாகியிருந்தது. அதை ஆனந் தன் கருத்தூன்றிப் படித்தான்.

பனிபடர்ந்து, காடடர்ந்த கொடும் இரவில் மழை
மேகக் குளிர்காற்றின் முனைபற்றி பீதியூட்டும் அதிர்
வலையில் அன்பே! நானெழுதும் இறுதி மடல்!
கனவுகள் வசப்பட நாம் களித்திருந்தோம் இன்றுகுளிர்
விறைத்து நடுங்குமென் நிர்வாணம் சிதைய இரக்கமற்ற
விலங்கு களின் கூட்டுவதை கடித்துக் குதறிய மாட்டுக்
குட்டி யாய் முட்புதரில் உயிர் துடித்து அன்பே
உனையழைத்தேன் காட்டுக் கொடி தூக்குக் கயிறாய்
கழுத் திறுக்க மானபங்கம் என் பிறவி விதியாயிற்று
மரணம் என்னை அழைக்கிறது விடை கொடு அன்பே!

அவன் விழிகளிலிருந்து நீர்த்துளிகள் அருவியாய் உருண்டு விழுந்தன.

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*


MOOSAJEES LIMITED



34. W.A.D.RAMANAYAKE
MAWATHA
COLOMBO - 02

**Tel : 2307168/ 170171**

**Fax : 2307169**




# சிவசேகரத்தின் கவிதைகள் சில அவதானிப்புகள்

-செ. யோகராசா

ஈழத்தில் நவீன கவிதை முகிழ்ந்த 1940 களின் பிற்பகுதி தொடக்கம் மார்க்சிய நோக்குடைய கவிஞர்களும் உருவாகினர். காலத்திற்குக் காலம் புதிய தலைமுறையினரும் இணைந்து கொண்டனர். இவ்வரிசையில் 1970களில் ஈழத்துக் கவிதையுலகில் காலூன்றத் தொடங்கியவரே சிவசேகரம். எனினும், ஏனைய மார்க்சிய நோக்குடைய பெரும்பாலான கவிஞர்களின் கவிதைகளிலிருந்தும் வேறுபட்டுத் தனித்துவமான இயல்புகளுடன் கவிதைகள் எழுதி வருபவராக அவர் விளங்குகின்றார்.

மேற்கூறியவாறு சிந்திக்கின்ற போது சமகால ஈழத்தின் அரசியற் பிரச்சினைகள் (இன ஒடுக்குமுறை, இயக்கங்களின் போராட்டம், பாராளுமன்ற அரசியல் முதலியன), சமூகப் பிரச்சனைகள், (சாதீயம், ஆணாதிக்கம், மூடநம்பிக்கை வாழ்க்கை முறை மாற்றங்கள் முதலியன), இலக்கியப் பிரச்சனைகள், (விமர்சன நிலை, பின் நவீனத்துவம் முதலியன), உலக அரசியல் விவகாரங்கள் (ஏகாதிபத்திய அரசுகள்; ஆட்சி மாற்றங்கள் முதலியன) எனப் பல விடயங்களையும் பற்றிக் கவிதைகள் எழுதி வருகின்ற மார்க்சிய நோக்குடைய கவிஞராக இவர் மட்டுமே உள்ளமை புலப்படுகின்றது.

மேற்கூறியவாறு பல விடயங்கள் பற்றியும் எழுதி வருவதை விட முக்கியமான விடயம் அவை யாவுமே மார்க்சிய விமர்சன நோக்கில் எழுதப்படுவதாகும். "என் சமூக விமர்சனங்களைக் கட்டுரைகளில் மட்டுமன்றிக் கவிதைகளிலும் முன் வைத்து வருகின்றேன்.'' என்று கவிஞரே ஓரிடத்தில் எழுதியுள்ளமை இவ்வேளை நினைவிற்கு வருகின்றது.

மேற்கூறியவாறு மார்க்சிய விமர்சன நோக்கில் எழுதி வருவதை விட முக்கியமான விடயம் ஏனைய பல கவிஞர்கள் போன்று பிரச்சார நோக்கிலோ வெற்றுக் கோஷமாகவோ அவற்றை எழுதாமல் கலாபூர்வமான முறையில் எழுதி வருவதாகவும். "ஈழத்துக் கவிஞர்களின் வரிசையில் மக்கள் நலனுக்கும் கவித்துவத்தின் அழகியல் அடிப்படை அம்சங்களுக்குமிடையில் சமநிலை கண்டு சமூக மாற்ற நோக்கில் கவிதை படைக்கும் கவிஞர் சிவசேகரம்'' என்று ஆய்வாளரொருவர் குறிப்பிட்டிருப்பது புறக்கணிக்கக் கூடிய கூற்றன்று.

மேற்கூறியவாறான அழகியல் அம்சங்கள் காலத்திற்குக் காலமோ கவிதையின் உள்ளடக்கத்திற்கேற்பவோ பல்வேறு விதங்களில் இடம்பெறுகின்றமை சிவசேகரத்தின் கவிதைகளில் காணப்படுகின்ற முக்கியமான பிறிதொரு சிறப்பம் சமாகும். (எ-டு: வில்வரத்தினம், சோலைக்கிளி) கவிதைகள் ஒரே பாணியில் அமைகின்ற குறைபாட்டிற்குள்ளாகாமல் 'பொருள் புதிது சுவை புதிது' ஆக வெளிப்படுகின்றன.

மேற்கூறிய விதத்தில் சிந்திக்கின்றபோது ஆரம்காலக் கவிதைகள் ('நந்திக் கரை' தொகுப்பு) பலவற்றிலும் சங்ககாலக் கவிதைகள் போன்று 'இயற்கை வர்ணனை' முக்கிய இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ('தமிழ்க் கவிதை பற்றிப் பேசுவோர் சங்கக் கவிதைகளைக் குறிப்பிடாமல் ஒரு முழுமையான சித்திரத்தை வரைய முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார் சிவசேகரம்) எனினும், சங்காலக் கவிதைகள் போன்று இயற்கை, பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடாகவோ, உரையாடல் உத்தியாகவோ அன்றிக் குறியீடாக இவரது கவிதைகளில் அமைவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கவிதைகளுள் ஒன்றினை இங்கே எடுத்தாளலாம். அது பின்வருமாறு:

**நெல்**

**முளைத்து எழுந்து தளிர்த்து வளர்ந்து**
**செழித்து விளைந்து சரிந்து விழுந்து**
**இறந்து கிடந்த நெல்லின் தலையில்**
**இருந்தன நாளைய பரம்பரை நூறு**

மேற்கூறியவாறான இயற்கை வர்ணனை போன்ற கவிதைகள் பற்றித் தமிழ்நாட்டு ஆய்வாளரொருவர் (அவர் கவனத்திற் கெடுத்துள்ளது முற்குறிப்பிட்ட கவிதையை அன்று) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது:

இலையுதிர் கால அரசியல் நினைவுகள் என்ற சிவசேகரத்தின் கவிதைத் தலைப்பு மாத்திரமே 'அரசியல்' என்ற பிரயோகத்தைக் கொண்டுள்ளது. ஆனால் மேலோட்டமாய்ப் படிக்கும் வாசகனுக்கு இது சிறந்த (Lyric) கவிதையாகக் கூடும். இயற்கை நிகழ்வுக்கான ஆழ்ந்த பிரக்ஞையும் பருவகால மாறுதல்களைப் பதிவு செய்யும் கவனமும் இக் கவிதையின் ஸ்தூலமான சித்தரிப்புக்களைத் தந்துள்ளன. பருவ மாறுதல்களும் கால மாறுதல்களும் சமூக மாறுதல்களை உணர்த்தும் படி இயல்பாய் எழுதப்பட்டிருக்கின்றன.

மீண்டும் மலர்கள் மண்ணைப் பெயர்க்க
பறவைகள் மெல்லப் பாடத் தொடங்க
அணில்கள் தாவ வசந்தம் வந்தது
மரங்கள் மீது இலைகள் போர்த்தின
இலையுதிர் காலம் கொடியது தானோ?

கடைசி வரியின் கேள்வி நம்மை மீண்டும் வரிவரியாகப் படிக்கச் செய்து, தலைப்புக்குக் கவனம் தாவி, மீண்டும் வரிவரியாகப் படிக்கச் சொல்கிறது. அரசியல் கவிதைகள் வரட்டுத் தன்மையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை என்பதைச் சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்' தொகுதி நிரூபணம் செய்கிறது.

பழந்தமிழ் இலக்கியப் பாடலடிகள் தலைப்புகளாக பயன்படுத்தப்படுவதையும் சிவசேகரம் கவிதைகளில் அவதானிக்கலாம். இன்றைய தமிழ்ச் சமூகம் பற்றிய விமர்சனம் சார்ந்த கவிதையொன்றிற்கு யாதும் ஊரே என்ற புறநானூற்றுப் பாடலடித் தலைப்பாகத் தரப்பட்டிருப்பதன் முக்கியத்துவம் பின்வரும் கவிதையூடாக வெளிப்படுகிறது:

**போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும்
ஆங்கில நாட்டாரும் ஆற்றிய கொடுமை
கொலனி ஆட்சியின் கொள்ளையடிப்பு
மரபைப் பேண வகுத்த தடைகள்
மொழியைப் பேசு வித்த தண்டம்
மதத்தை மாற்றப் புனைந்த சதிகள்
பழங்கதை என்றா மறந்து போனோம்?
பேரினவாதம் இழைத்த இன்னல்
இந்திய நண்பர் இயற்றிய வஞ்சனை
எல்லாம் முடிந்தன என்றோ மறந்தோம்?
இல்லை இல்லை உண்மை ஏதெனில்
நாமே நமக்குப் பகையென ஆனோம்
நம்மை நாமே அழித்திட உறுதி
பூண்டனம் அதனால்
எம்மூர் தவிர்ந்த யாதும் ஊரே
எம்மவர் தவிர்ந்த யாவரும் கேளிர்
தீதும் அழிவும் பிறர்தர வேண்டா.**

சில கவிதைகளில், இடைக்காலத் தமிழ்க் கவிதைகளின் சொற் பிரயோகம் கற்பனை, உத்தி முறைமை என்பன பயன்படுத்தப்பட்டு, இன்றைய சமூக நிலமை விமர்சிக்கப்படுகின்றது.

எ-டு:

**நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்து
பயன்மிகு அறிந்த பனைசெறி நாட்டார்
வழிபல சென்றே பல திசை பரந்தார்
வருகுவ தெந்தாள் அறிவையோ நாராய்
திரைகடல் ஓடித் தம்முயிர் பேணத்
திரிந்தவர் தமக்கோ எங்கணும் அவலம்
கரியவர் அயலார் எனவசை கேட்போர்
கவலைகள் நீயும் உணர்வையோ நாராய்**

**அகதியின் வாழ்வின் இழிநிலை தாங்கி
அந்நிய மண்ணில் அண்டிக் கிடந்து
மிக நலி மாந்தர் தம்நகர் மீளும்
வகையென ஒன்றேன் மொழிவையோ நாராய்**

**பெருங்குளிர் வருமுன் கடல் பல தாண்டி
புலம்பெயர் புள் நீ கிளையுடன் மீண்டும்
வருகுபவை நின்மண் தவறுதல் இன்றி
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நாராய் நினக்கோ யாதும் ஊரே
நாராய் நின் இனம் யாவருங் கேளிர்
பாராய் எங்கள் மனிதரின் நிலையை
நாராய் நமக்கோர் நல்வழி கூறாய்**

ஈழத்துக் கவிஞர்கள் இதிகாச, புராணத் தொன்மங்களைப் பயன்படுத்துவது குறைவாகும். இவ்விதத்தில் வெவ்வேறு நோக்கில் தமது கவிதைகளில் தொன்மம் பயன்படுத்துகிறார் சிவசேகரம். அகலிகை 'ஏகலைவ பூமி எங்கள் குருஷேத்திரம்', 'மகேசருக்கு நேர்ந்தது', 'தேவி எழுந்தாள்', காளி பத்தாவது, 'ஸம்பவாமி யுகே யுகே', முதலான கவிதைகள் இத்தகையவை; 'பிரம்படி' என்ற கவிதை பின்வருவது-

**பிரம்படி**

(இரண்டு கவிதைகள்)

**1. பிட்டுக்கு மண் சுமந்த
பிரான் மீது பட்ட அடி
அணையைக்
கட்டி முடிக்காத பிழைக்காக
பிரம்பெடுத்த ஆள்மீது
பிரானை அடித்ததற்காக
ஆணையிட்ட பாண்டியன்மேல்
பிரம்பு அவனது என்பதற்காக
வாதவூரன் மீது
நொந்தழுது வெள்ளத்தை
வரவழைத்ததற்காக
வாணிச்சி மீது....
பிட்டு உதிர்ந்தற்காக
ஊரார் மீது....
அடிக்க ஒரு பிரம்பு இருந்ததற்காக.**

**2. துரோகி எனத் தீர்த்து
முன்னொரு நாட் சுட்ட வெடி
சுட்டவனைச் சுட்டது
சுடக் கண்டவனைச் சுட்டது
சுடுமாறு ஆணை
இட்டவனைச் சுட்டது
குற்றஞ் சாட்டியவனை
வழக்குரைத்தவனைச்
சாட்சி சொன்னவனைத்
தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது
தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது
எதிர்த்தவனைச் சுட்டது
சும்மா இருந்தவனையுஞ் சுட்டது.**

நாட்டார் சார்ந்த உத்திமுறையில் எழுதப்பட்ட கவிதைகளுமுள்ளன. 'ஒரு சமகாலச் சிறுவர் கதை', 'சுற்றாடல்

பற்றி', 'களவாடப்பட்ட முத்துக்கள்', 'சமாதானப் புறாக் கள்', 'சமாதானம் பற்றிய ஒரு அநீதிக் கதை' முதலா னவை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவை.

நாட்டார் வழக்காறுகள் நாட்டார்ப் பாடல் மரபுகள், அதிகளவு பயன்படுத்தப்படாவிடினும், பயன்படுத்தப்பட்ட ஒருசில கவனத்திற்குரியன. 'பலி' என்ற கவிதையை இவ்வேளை எடுத்தாள்வது பொருத்தமானது.

**பூசாரி கூவுகிறான்**
**தின்பண்டங் கொண்டுவா**
**திரவகை கொண்டு வா**
**என்னுடைய சாமி**
**பசியாற வேண்டுமே**
**இன்னமும் நீ நிற்பதேன்**
**சொன்னதெல்லாம் கொண்டுவா**
**பூசனியின் காய் அறுத்தோம்**
**பலகாரம் பழவகைகள்**
**பற்பலவும் நாம் படைத்தோம்**
**பொங்கல் உலைவைத்தோம்**
**பால்மோரும் இளநீரும் போதாத சாமிக்குச்**
**சாராயம் கள்வகைகள் சீராக நாமீந்து,**
**கோழி அறுத்தோம் ஆடும் பலி தந்தோம்**
**காசு பணம் தந்தோம், கட்டிடவும் துணி தந்தோம்**
**உரக்க உடுக்கடித்துப் பூசாரி கூவுகிறான்**
**'தின் பண்டங் கொண்டுவா**
**திரவகை கொண்டுவா'**
**இலட்சக் கணக்கான மானிடரின் உடலங்கள்**
**வெட்டி வழிந்த வெங்குருதி குடக் கணகாய்க்**
**கொட்டிக் கறுத்த தரைமீது நின்றபடி**
**பறையொலி போல வேட்டதிர, அழுகை ஒலி சங்கூத**
**வெறியோடிச் சிவப்பான விழிகள் கனல் கக்க**
**உடுக்கடித்துப் பூசாரி உருஆடிக் கூவுகிறான்**
**கோழிகளும் ஆடுகளும் கொண்டு பசி தீருவதோ**
**சாராயங் கள்ளருந்தித் தாகம் தணிகுவதோ**
**பத்தாயிரம் உயிர்கள் பலிகேட்கும் தெய்வம் மீது**
**ரத்தத்தைக் கொண்டுவா, நரபலியைக் கொண்டுவா.**

**கிழடு பட்ட தசை வேண்டாம்**
**இளைய பரம்பரையின் இனியதசை கொண்டு வா**
**பட்டம் பதவி பல அதிகாரம் பணமுடையோர்**
**பெற்றெடுத்த பிள்ளைகளின் ஊளைத்தசை**
**வேண்டாம்**
**சிங்களத்தின் ஏழைகளின் சிறுவர்களைக்**
**கொண்டுவா**
**பச்சை கறுப்போடு பழுப்பாடை அணிவித்து**
**ஒட்ட முடி நறுக்கித் தொப்பி தலைக்கேற்றி**
**சப்பாத்துக் கால்களுடன் போர்ச்சாமி சந்நிதியில்**
**வெட்டிச் சரிக்கப் பத்தாயிரம் புதல்வர்**
**கட்டி இறுகக் கயிற்றாற் பிணைத்தெனினும்·**
**கட்டாயமாய் எனது களத்தினுக்குக் கொண்டு வா.**


மேற்கூறியவை தவிர, காட்சிப்படுத்தல் பாடல் முத லான உத்திகள் சார்ந்த கவிதைகள் பல எழுதப்ப ட்டுள்ளன. வெளிப்பாட்டு ரீதியிலான பரிசோதனை முயற்சிகள் என்றும் சொல்லும் படியான கவிதைகளும் எழுதப்பட்டுள்ளன. இவ்விதத்தில் 'பச்சோந்தி'......... பற்றிப் பேசாதிருத்தல் (தணிக்கை உத்தரவிற்கமைய கவிதை எழுதுதல்) முதலியவை கவனத்திற்குரியவை. இத் தொடர்பில் போரும் அமைதியும் (ஒரு நவீனத்துப் பின்வாசிப்பு) என்ற கவிதையும் முக்கியமானது. அது பின்வருமாறு :

**போரென்று ஒன்று இல்லாத போது**
**அமைதியென்று ஒன்று பொருளற்று விடுகிறது**
**எனவே/ எனவோ/ எனினும்/ எனுமாறு/ எவ்வாறும்**
**போர் மூலம் அமைதி எனவும்**
**அமைதிக்கான போர் எனவும்**
**போரும் அமைதியும் வாசிக்கப்படுகின்றன.**

**மேலும் கட்டுடைப்பின்**
**ஈற்றில்**
**அமைதியெனின் போரென்றும்**
**போரெனின் அமைதியென்றும்**
**மீள வாசிக்கலாம்**
**மெய்யாக, இன்னும்**
**எதையும் அதுவாக அன்றி**
**வேறு எதுவாகவும்**
**வேண்டின் எவரும்**
**(எவரும் எனின் எவரும் என்னற்க)**
**எவ்வாறும் வாசிக்கலாம்.**
**இதுவரை எவரும்**
**போரையும் அமைதியையும்**
**கட்டுடைத்து**
**அமைதி மூலம் போர் எனவும்**
**மீள வாசித்ததில்லை**
**(வாசித்து மீளவில்லை எனவுங்கொள்க)**
**வாசிப்புகளின் வரையறையின்மை கருதி**
**இனியும் அவ்வாறு இருக்க வேண்டியதில்லை.**
**ஆதலின்,**
**இதையும்**
**அமைதிப் போருக்**
**சகு/கும்/குரிய/கோ/கே/காக/காகா**
**என்று எவ்வாறுங்**
**கொள்க**
**கொள்ளற்க.**

இதுவரை கூறியவற்றை நோக்கும் போது பல்வேறு வித்தியாசமான வெளிப்பாட்டு முறைகளில் சிவசேகரத் தின் கவிதைகள் அமைந்துள்ளமை புலப்படுகின்றது. இத் தொடர்பில், அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவன த்திற்குரியது. "ஒரு கவிதை மனதில் எழும் சூழ்நிலையும் கவிதையை எவ்வாறு வெளிப்படுத்தின் அதன் தாக்கம் அதிகமாயிருக்கக் கூடும் என்ற எண்ணமும் கவிதை வடிவத்தின் தெரிவுக்குக் காரணமாகின்றன...... ஒரு கவிதை வடிவத்தைத் தெரிந்தெடுப்பது அவ்வடிவ த்துடனான பரிச்சயம், ஈடுபாடு, பரீட்சித்துப் பார்க்கும் முனைப்பு போன்ற காரணங்களின் விளைவானதாகவும் **இருக்கலாம்.....**"



# புவனேஸ்வரி

-த. கலாமணி

நெஞ்சு சுளீரென்று வலித்தது.

அம்மாவின் கருத்தியற் தளத்தையே ஆட்டம் காணச் செய்து விட்டேனோ......?

என்றைக்குமே இது இவ்வளவு நேரத்துக்கு நீடித்ததில்லை. ஒரு நேரம் ஒன்றென்றால் அடுத்த நேரம் எல்லாவற்றையும் மறந்து, ஒன்றாய்க் கூடியிருந்து கதைக்க ஆரம்பித்தால் கோபம் எல்லாம் பறந்து போகும். ஆனால் இன்று...!

ஒன்றுக்குமே மசிந்து கொடுக்காமல் எப்படி இந்த அம்மாவால் மௌனமாக இருக்க முடிகிறது.....!

இல்லையென்றால் இந்நேரம் அம்மா எத்தனை கதை சொல்லியிருப்பார்; என்னவெல்லாம் கேட்டிருப்பார்.....

வழமை இன்று மாறிப் போயிருக்கிறது.

சாய்மனையில் ஒருக்களித்துப் படுத்திருக்கும் அம்மாவைப் பார்க்கிறேன்.....

கலைந்த கேசம் முகத்தில் விழுந்து கிடக்கிறது....... முகம் சோபை இழந்தது என்னவோ போலிருக்கிறது..... திறந்திருந்த கண்களில் சோர்வு தெரிகிறது. கண்மடல்கள் உப்பிப் போய் விகாரப்பட்டுத் தோற்றம் காட்டுகின்றன....

"அழுதிருப்பாவோ.......?"

குசினிக்குள் சென்று காலையில் மூடிவைத்த தட்டைத் திறந்து பார்க்கிறேன்......

என்மீது தன் வெறுப்பைக் காட்டுவது போல இடியப்பம் காய்ந்து, சுருண்டு, கருவாடாய்க் கிடக்கிறது.

"காலையிலிருந்து 'இது' பட்டினி கிடக்குது.... விசமம் இன்னும் விட்டுப் போகேல்லை......"

உள்மனம் என் உணர்வை உசிப்பியது.

"ஏன் சாப்பிடேல்லை......?" என்று கேட்க வாய் உன்னியது போதும், பாழாய்ப் போன 'ஈகோ' கிளர்ந்தெழுந்து சமரசம் செய்யவிடாது தடுத்தது.

விஜி அக்கா வருவதற்குமுன் 'இதை' ஒரு வழிக்குக் கொண்டு வந்துவிட வேண்டும். இல்லையென்றால் அவளிடம் ஏச்சும் வசவும் வாங்க வேண்டி வரும்.

விஜி அக்கா ஒரு போதும் என்னைச் சினந்து பேசியதில்லை. நானும் அம்மாவும் சிறு சச்சரவுக்குள்ளாகும் போது மலர்ந்து சிரிப்பாள். எங்களுக்கிடையேயான சிறு சச்சரவு, அவளைப் பொறுத்தவரை ஒரு 'செல்ல விளையாட்டு'. உள்ளார்த்தத்தோடு கேலியாக ஏதாவது சொல்லிச் சிரிப்பாள். அது அவளுக்குக் கைவந்த கலை. அவளின் கேலியில் அம்மாவுக்கும் எனக்கும் வெட்கமாகிப் போய்விடும். இருவரும் ஒன்றாகி அவளுக்கு 'அழகு' காட்டுவோம்.

"என்றாலும் உனக்கு இவ்வளவு 'றாங்கி' கூடாதடீ...."

பள்ளிக்கூடம் போகுமுன் சற்றுக் காட்டமாகத்தான் விஜி அக்கா இதைச் சொல்லிவிட்டுச் சென்றாள். திரும்பி வந்து என்ன சொல்வாளோ என்று வயிற்றில் 'புளிகரைகிறது.'

அடுத்து என்ன அஸ்திரத்தைப் பிரயோகிக்கலாம்.....?

மனசு கிடந்து ஏம்பலிக்கிறது. கூடவே கொண்டு வந்திருந்த ரொபிப் பைக்கற்றை எடுத்து அம்மா காணக் கூடியதாக முன்னாலிருந்த 'ஸ்ரூலில்' வைக்கிறேன்.

ஊஹூம்! அசைந்தால் தானே......

அம்மாவுக்குக் 'கன்டோஸ்', 'ரொபி' என்றால் உயிர். எந்நேரமும் அம்மாவின் வாய் ஏதாவதொன்றை மென்று கொண்டிருக்கும். எல்லோரும் என்னைக் கடிந்து கொள் வார்கள். மட்டக்குளியிலுள்ள பெரியக்கா கூட உரிமை யோடு குற்றம் சொல்வார்.....

"இந்த வயசிலை இதையேன் வாங்கிக் குடுக்கிறியள். சக்கரை வியாதி கியாதி வந்தெல்லே படுக்கையிலை விழுத்தப் போகுது....."

விஜி அக்கா முந்திக் கொள்வாள்.

"நானும் சொல்லுறனான் தான். ஆனாலும் அம்மா ன்ரை செல்லம் பைக்கற் பைக்கற்றா வாங்கிக் குடுத்துக் கொண்டிருக்கு, நானென்ன செய்ய......"

என்னை ஏசுவது போல ஏதாவது சொல்லி விஜி அக்காதான் என்னைக் காப்பாற்றிக் கொள்வாள். நான் ஏதாவது இடக்கு மடக்காகச் சொல்லி வாக்குவா தப்பட்டுவிடுவேனோ என்ற பயம்.....

ஆனால், அம்மாவுக்கு எல்லாம் கேட்டுவிடும், பாம்புச் செவி.

"என்ரை பரம்பரையிலை ஆருக்கும் சக்கரை வியாதி இல்லையடி எனக்கென்னடி குறை? என்ரை செல்லம் எனக்கு ஆசையா வாங்கித் தந்தால் உங்களுக்கென்னடி?"

அம்மாவின் கொடுப்புக்குள் எப்போதும் 'ரொபி' ஒன்று உருண்டு கொண்டிருக்கும். இப்போது, கன்டோஸை விட அம்மாவுக்கு ரொபி பிடித்துப் போயிருக்கிறது. கொஞ்ச நாட்களாக 'ஒன்று முடிய மற்றொன்று' என்று அம்மாவின் வாய் கொய்யாப்பழ ருசியுள்ள ரொபியை உமிந்து கொண்டிருக்கின்றது. அந்த வேளைகளில் அம்மாவின் முகத்தில் என்றுமில்லாத ஒரு 'தேஜஸ்' வந்து சூழ்ந்தது போலிருக்கும். அகத்தைக் காட்டும் கண்ணாடி தான் முகம் என்றால் அம்மாவின் உள்ளத்தில் ஏன் இந்த ஆனந்தம்...... அம்மாவிடம் கேட்கலாம்தான். ஆனால் விஜி அக்காதான் கேலி செய்வாளே......

கேலி செய்தாலும் பரவாயில்லை என்று நினைத்து ஒருநாள் அம்மாவிடமே அதுபற்றிக் கேட்டுவிடுகிறேன்.

அம்மாவின் பார்வை தாழ்ந்து..... நினைவுகளுள் மூழ்குவது போல் இருந்தது. மெல்ல எழுந்து, மேசையி லிருந்த ரொபிப் பைக்கற்றில் தெரிந்தெடுத்து இரண்டிர ண்டாக எனக்கும் விஜி அக்காவுக்கும் தருகிறார். 'ஏற் கனவே நாங்களும் சுவைத்தவை தானே' என்று அதிச யித்து வாயில் போட்டுக் கொள்கிறோம்.

இரண்டுமே கொய்யாப்பழ ருசியுள்ள ரொபிகள் தான்..... ஆனால் இரண்டு வகை ருசி.

அம்மா என்ன சொல்லப் போகிறார் என்று எதிர் பார்த்து இருவருமே பொறுமையாக இருக்கிறோம்.

"இந்த ருசியுள்ள ரெண்டு கொய்யா மரங்களும் எங்கடை வளவுக்குள்ளை நான் வைச்சு வளந்தவை செல்லம்.... எப்பவும் அந்த மரங்களிலை கொத்துக் கொத்தா காயளெல்லாம் நிறைஞ்சிருக்கும்...... நீங்களெ ல்லாம் அப்ப சின்னப்பிள்ளையள்...... பழங்களைப் பறிச் சுக் கொண்டிருக்கேக்கை மயிந்து மயிந்து வந்து ஒவ் வொரு பழத்தைத் தூக்கிக் கொண்டு ஓடுவியள்... 'இந்தாருங்கோடி' என்று உங்களைக் கூப்பிட்டு நான் கைநிறையக் குடுப்பன்.... பக்கத்து வீட்டுப் பிள்ளைய ளுக்கும் கொடுத்து நீங்கள் கொறிச்சு மகிழுவியள்......"

இதன் பின்பு அம்மா தன் நினைவுகளில் மூழ்கிப் போனார். வளவும் வளவிலுள்ள பயிர் பச்சைகளும் தோற் றம் காட்டி அம்மாவுக்குக் கதையாய்ச் சொல்லியி ருக்கும்..... இரண்டு மூன்று முறை ஏக்கப் பெருமூச்சும் விட்டுக் கொண்டு கண்ணீரும் உகுத்தார்.

விஜி அக்கா அதிர்ந்து போனாள்.

"சரி, சரி...... பழச எல்லாம் நினைச்சு கலங்காதை யம்மா..... உன்னை ராசாத்தி மாதிரிப் பார்த்துக் கொள்ள நாங்க இருக்கிறம்தானே"

அம்மா அன்றிரவு நெடுநேரம் தூங்கவில்லை. ஐயாவுட னான வாழ்வும், கொஞ்சக் காலத்திலேயே ஐயா எங்க ளையெல்லாம் தவிக்கவிட்டுப் போனபின்பு எங்களை வளர்த்தெடுக்கப் பட்ட கஷ்டங்களும் நினைவுக்கு வந்து அம்மாவை அலைக் கழித்திருக்க வேண்டும்.

எனக்கும் உறக்கம் வரவில்லை. அம்மா அருகில் உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தேன். அம்மாவும் இதனை உணர்ந்து, தன்கையினால் என்முகத்தைத் தடவிக் கொண்டு வந்தபோது என் கண்ணிலிருந்து வழிந்து கொண்டிருந்த கண்ணீர் அம்மாவின் கையை நனைந்திருக்க வேண்டும். பதறிக் கொண்டு எழுந்தார்.

"ஏனடா செல்லம்..... அம்மா பட்ட கஷ்டங்களை நினைச்சு அழுறியே...... எனக்கென்னடா குறை......?"

விஜி அக்கா இவற்றையெல்லாம் பொருட்படுத்தா தவளாய் மறுபுறம் புரண்டு படுத்தாள். 'நல்ல கூத்துத் தான்....' என்று அவள் வாய் முனகியது போல் இருந்தது. அதன் பின்பு அம்மாவின் இறக்கைகளுள் ஒடுங்கியவாறே நான் உறங்கிப் போனேன்.

இன்று..... அந்த அம்மாதான் இவ்வளவு தூரம் வீறாப் புக் காட்டிக் கொண்டு மௌனித்துப் போயிருக்கிறார்.

அவ்வளவு தூரம் அம்மாவை நோகடித்து விட் டேனோ.....?

இப்பொழுதும் என் கண்கள் பனிக்கின்றன.

அம்மா எழுந்து வந்து ஆதூரமாக என்னைத் தடவ மாட்டாரா? என்று என் உள்ளம் ஏங்குகிறது.

'அம்மா வீறாப்புக் காட்டட்டும். பதிலுக்கு நீ என்ன பிடிவாதம் பிடிப்பது?' என்று என் அந்தராத்மா என்னை இடித்துக் காட்டுகிறது.

'அம்மாவின் பிடிவாதம் தானே எனக்கும் இருக்கும்' என்ற என் சமாதானத்தை என் அந்தராத்மா ஏற்பதாய் இல்லை.

என் உள்ளம் வழமையை நினைத்துக் கலங்குகிறது.

வழமையாக முன் விறாந்தையில் 'சோபா' ஒன்றில் அமர்ந்திருந்து, 'அம்மா' என்ற குரல் கேட்டதும் 'வாறனடா செல்லம்' என்று குரல் கொடுத்துக் கொண்டே ஓடி வந்து முன் கதவைத் திறந்து குதூகலிக்கும் அம்மா......

நான் என்ன வாங்கி வந்திருப்பேன் என்று என் பையையும் கையையும் பார்த்துக் கொண்டு நிற்கின்ற அம்மா....

றொபி பைக்கற் கொண்டு வந்திருந்தால் அதனைப் பறித்தெடுத்து றொபி ஒன்றைக் கொடுப்புக்குள் உடனடியாகப் போட்டு உருட்டிக் கொள்ளும் அம்மா.....

நாங்கள் வரும் வரை சாப்பிடாமற் காத்திருந்து என்னைக் கண்டதும் ஓடோடிச் சென்று கோப்பைகள் எல்லாம் எடுத்துக் கழுவி வைக்கும் அம்மா....

சோறு சாப்பிட்டபின் உண்பதற்காகவென்று பப்பாசிப் பழமொன்றைத் தோல் சீவி நறுக்கு, நறுக்காக வெட்டி வைக்கும் அம்மா......

விஜி அக்கா வரத் தாமதமானால் தனது கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் ''அவள் பிரின்ஸிபல் என்றால் ஏதும் பள்ளிக்கூட வேலையிருக்கும் தானே'' என்று எனக்கு ஆறுதல் கூறும் அம்மா....

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் நானும் விஜி அக்காவும் சொல்லும் பள்ளிக் கூடக் கதைகளை எல்லாம் கேட்டுப் பூரிப்புக் கொள்ளும் அம்மா.....

இந்த அம்மா எல்லா நடைமுறைகளையும் விடுத்து வழமைக்கு மாறாகச் சாய்மனையில் படுத்திருப்பதென்றால்....

'ரீவி' கூட அம்மா இன்று பார்த்திருக்க மாட்டாரோ? அப்படியென்றால், இன்று முழுவதும் தன் கடந்த கால வாழ்வை எண்ணி மறுகி மறுகிக் குமைந்திருப்பாரோ என்னவோ...

இப்போதுதான் அருகில்- நெருங்கிப் பார்க்கிறேன். கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் இரு கன்னங்களிலும் வழிந்து திட்டுத் திட்டாய்க் காய்ந்திருந்தது. இதுவரை அம்மாவின் பார்வையை நேருக்கு நேராகச் சந்திப்பதைத் தவிர்த்திருந்த நான் இப்போது அம்மாவின் கண்களை ஆழ ஊடுருவுகிறேன்.

அம்மாவால் தாங்க முடியவில்லைப் போலும். அம்மாவின் இருகண்களிலுமிருந்து பொலு பொலுவென்று கண்ணீர் கொட்டுகின்றது. என் உள்ளம் சிதறுகின்றது. என் கண்களிலும் கண்ணீர்..... இனியும் தாமதித்தால் என்னைப் போல் பாவி யாருமில்லை என்று நினைத்துக் கொண்டு ''ஏனம்மா, இப்படி.....?'' என்று குரல் குமுறக் கேட்கிறேன்.

அம்மா தன் கைகளால் என் கண்ணீரைத் துடைத்து விடுகிறார். ஆனால் வார்த்தைகள் தான் வர மறுகின்றன.

விஜி அக்காவைக் கொண்டு வந்து விடும் வானின் சத்தம் வாசலில் கேட்கிறது. பூட்டாதிருந்த முன்கதவைத் திறந்து கொண்டு விஜி உள்நுழைகிறாள். எங்கள் இருவரையும் இவ்வளவு நெருக்கமாகக் கண்டமை அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்க வேண்டும். அவளின் இதழ்க் கடையோரம் புன்னகை ஒன்று மலர்கிறது. ஒன்றுமே பேசாது கையிலுள்ள பையுடன் குசினிக்குள் சென்ற விஜி அக்காவுக்கு நிலைமை விளங்கியிருக்க வேண்டும்.

''ஏன், ரெண்டு பேருமே காலைச் சாப்பாடு சாப்பிடேல்லையே.......?'' கேட்டு விட்டுப் பதிலுக்குக் காத்திராது தொடர்ந்தாள்.

''சரி, சரி..... கெதியா வா. 'மார்கெற்றி'லை உயிர் மீன் கிடைச்சுது, வாங்கி வந்தனான்....... கறி சமைச்சுப் போட்டு ஒன்றாச் சாப்பிடுவம்..... அம்மா உயிர்மீன் சாப்பிட்டுக் கன நாளாப் போச்சு.....''

அம்மா இப்போதும் அசைந்து கொடுக்கவில்லை. இல்யென்றால் இந்நேரம் ''எங்க பாப்பம்?'' என்றே கேட்டுக் கொண்டு வந்து மீனின் கண்களைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பார். உயிர் மீன்தான் என்பது மீனின் கண்களிலேயே தெரியுமாம்.

உயிர்மீன் சாப்பிடுவதென்றால் அம்மாவுக்குக் கொள்ளை ஆசை. காய்கறிகளையும், பழவகைகளையும், மீன், இறைச்சி வகைகளையும் வாங்கி வந்து 'ஃபிரிட்ஜில்' வைத்து மூன்று நான்கு நாட்களுக்கு வைத்துச் சமைத்துச் சாப்பிடுவது அம்மாவுக்குப் பிடிக்காத ஒன்று.

''நாறல் மீன் சாப்பிர்ற கொழும்புச் சாதியளாயிட்டீயளடி, நீங்கள்'' அம்மா நையாண்டியாகக் கடிந்து கொள்வார்.

அம்மாவுக்கு எதுவும் உடன் பறித்ததாய் வேண்டும். ஊரிலிருந்த போது அது சாத்தியமாயிற்று. வளவைச் சுற்றியிருந்த தோட்டத்திலிருந்து அன்றன்றாடு பறிக்கின்ற காய் பிஞ்சு வகைகளைச் சமைக்கலாம்.

அம்மா இன்னும் ஒரு நிலைக்கு வராதது வஜு அக்காவைப் பாதித்திருக்க வேண்டும். குசினிக்குள் சென்ற என்னிடம் அம்மாவுக்குக் கேட்காத குரலில் சொன்னாள்......

"உன்ரை கதை அம்மாவை எவ்வளவு பாதிச்சிட்டுது பாத்தியோ......!"

நான் ஒன்றும் பேசாமல் நிற்கிறேன். ''உலக வழக்கைத் தானே நான் சொன்னேன்.'' என்று என் உள் மனம் முணுமுணுத்தது. என் மனத்திரையில் நேற்றிரவுச் சம்பவங்கள் கண்ணாமூச்சி காட்டின.

சோதி அத்தானின் மரணம் அம்மாவில் நன்றாகத் தான் பாதிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சோதி அத்தானைப் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தார்.

''என்னிலை சோதிக்கு நல்ல பட்சம் பிள்ளை.... போனதடவை கொழும்புக்கு வந்தவேளை கூட 'மாமிக்கு என்ன வேணும்?' என்று கேட்டுக் கையுக்குள்ளை கொஞ் சக் காசும் வைச்சவன். நான்தான் வேண்டாமென்று வலு கட்டாயமா மறுத்துப் போட்டன்....."

அம்மாவுக்கு யாரிடமும் கையேந்தித் தெரியாது..... ஐயாவின் சாவீட்டுச் செலவுக்கென்று தமையன்மார் கொடுத்த காசைக் கூடத் திருப்பிக் கொடுத்தவராம். "என்ர கடவுள் சேத்து வைச்சிட்டுப் போன சொத்துப்பத்தை வைச்சுக் கொண்டு நான் என்ரை குஞ்சுகளை வளத்து ஆளாக்கிப் போடுவன்..... எனக்கு ஆற்றை தஞ்சமும் தேவையில்லை....." என்று அம்மா அடிக்கடி சொல்வாராம்.

மாமாமாருக்கு அம்மாவிலை நல்ல கோபமாம். அம்மா, யாரைப் பற்றியும் கவலைப்படவில்லை. ஐயா வின் மரணத்தாலை துவண்டு போகாமல் நிமிர்ந்து நின் றார். வீட்டோடு உள்ள பத்துப் பரப்பு வளவுக் காணி யையும், வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள தோட்டக் காணி யையும் பயிர்பச்சைகளால் நிறைத்து அம்மா பரிபாலிக்கத் தொடங்கிவிட்டார்.

யார் வீட்டுக்கு வந்தாலும் வெறுங்கையோடு அம்மா அனுப்பமாட்டார். வளவைச் சுற்றியுள்ள செடி கொடிக ளிலிருந்தே காய் பிஞ்சைப் பறித்துக் கைநிறையக் கொடு த்து விடுவார். ஆனால், சொந்தத்தில் ஆரும் ஆசையா சையாய்க் கொடுத்தாற் கூட அம்மா எதையும் வாங்க மாட்டார், எங்களையும் எவரிடமும் எதையும் வாங்க விடமாட்டார்.

அம்மாவின் இந்தக் குணம்தான் என்னை உறுத்திக் கொண்டிருக்கும். அதென்ன தனக்கொரு நியாயம் பிறருக்கொரு நியாயம்.....?

இந்த நியாயத்தைக் கேட்கப் போய்த்தான் அம்மாவு க்கு இன்று இவ்வளவு கோபம்......

நேற்றிரவு நானும் விஜி அக்காவும் பெரியக்கா வீட்டிலிருந்து திரும்பியதுமே சோதி அத்தானின் மரணச் சடங்குப் புதினங்களை அம்மா துருவித் துருவிக் கேட்கத் தொடங்கிவிட்டார். பெரியக்கா ஊரிலிருந்து திரும்பி வந்து சொன்ன சங்கதிகளைச் சொல்லத் தொடங்கினேன்.

''மாமா பெரிய எடுப்பிலை செலவழிக்க வந்ததை சோதி அத்தான்ரை அவ விரும்பேல்லையாம்.... இவ்வளவு நாளுமில்லாமல் இப்ப என்ன புதுக் கொண் டாட்டம் என்று மறுத்துப் போட்டாவாம். சவம் எடுத்த கையோடை மாமா வீட்டுக்காரர் விட்டிட்டுப் போயிட்டின மாம்......"

அம்மா இடைமறித்துத் தீர்ப்புச் சொன்னார்.

"அதென்ன ஞாயம். சோதி விரும்பிக் கட்டிப் போட்டா னெண்டு நாலு பிள்ளையளைப் பெத்ததுக்குப் பிறகும் அவன்ர மனிசியை உன்ர மாமா மதிச்சு நடத்தேல்லை..... சோதி என்ன சும்மாவா விட்டுட்டுப் போனவன்..... அவன்ர ஒரு கடை காணும் அவன்ரை மனுசியும் பிள்ளையளும் சீவிக்க.... உங்கடை மாமாவுக்குக் கொழுப்பு இன்னும் போகேல்லை....."

விஜி அக்கா ஒன்றும் சொல்லாமல் இருந்தாள். நான்தான் அம்மாவை மறுத்துச் சொன்னேன்.

"ஏனம்மா உங்களுக்கு மற்றவையளின்ர நியாயம்..... சோதி அத்தான்ரை அவ, மாமாவை அனுசரிச்சுப் போகலாம் தானே......"

தன்பக்கத்து நியாயத்தை நான் மறுதலித்தது அம்மாவுக்குக் கோபத்தை மூட்டியிருக்க வேண்டும்.

''ஓ....! இவ அப்பாச்சி, எனக்கு ஞாயம் பறைய வந்திட்டா..... உனக்கென்னடி தெரியும் இதுகளைப் பத்தி யெல்லாம்..."

அக்காமாரை 'என்னடி' என்று சிலவேளைகளில் செல்லமாகச் சினந்தாலும் என்னை எப்போதும் 'செல்லம்' என்றே அழைக்கின்ற அம்மா என்னை 'அப்பாச்சி' ஆக்கி 'என்னடி' என்றும் கேட்டதும் எனக்குள் கோபம் பொத்துக் கொண்டு வருகின்றது.

"உங்களுக்கு உங்கடை பிள்ளயளைத் தவிர மற் றெல்லோரும் அந்நியம். உங்கடை வரட்டுக் கௌரவ த்தை சோதி அத்தான்ரை அவவுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கப் போறியளே......."

அவசர அவசரமாகக் கேட்டுவிட்டு அம்மாவைப் பார்க்கிறேன். எதிர்பாராத இந்த 'அடி'யில் அம்மா நிலை தடுமாறிப் போயிருக்க வேண்டும். அம்மா உறைந்து போனார்.....

அப்போதிலிருந்துதான் அந்த மௌனமும் பட்டினியும்.

"சரி... சரி, யோசிக்கிறதை விட்டிட்டுக் கறியை இறக்கிவை..... அம்மாவைக் கூட்டி வாறன்...."

விஜி அக்காதான் என் நினைவிலிருந்து என்னை மீட்டாள்.

'அம்மா' என்று சாப்பிட அழைத்தும் அம்மா ஒன்றும் பேசாமலிருப்பது விஜி அக்காவைச் சங்கடப்படுத்தியிருக்க வேண்டும். "நீயாச்சு, உன் செல்லமாச்சு என்று புறுபுறுத்துக் கொண்டே திரும்பினாள்."

நான் கோப்பைகளை நிரப்பி அம்மாவுக்கும் விஜி அக்காவுக்கும் கொடுத்துவிட்டு நானும் ஒன்றை எடுத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்குவது போலப் பாவனை செய்கிறேன்.

அம்மா என்ன நினைத்தாரோ தெரியவில்லை, ஒன்றும் சொல்லாமல் சாப்பிடத் தொடங்குகிறார்....... நாங்களும் சாப்பிடுகிறோம். என் கண்களிலிருந்து வடியும் நீரை விஜி அக்காவுக்குத் தெரியாமல் புறங்கையால் துடைத்துக் கொள்கிறேன். ஆனாலும் விஜி அக்கா கண்டு கொண்டிருக்க வேண்டும்.

நிலைமை ஓரளவு முன்னேற்றமடைந்ததில் விஜி அக்காவுக்குத் திருப்தி என்பது அவள் சாப்பிடும் வேகத்தில் தெரிகிறது. ஆனாலும், அடுத்த கட்ட நகர்வு பற்றி அவள் யோசித்துக் கொண்டிருப்பதை என்னால் உணர முடிகிறது.

சாப்பிட்டு முடித்து திடீரென்று ஏதோ தீர்மானத்துக்கு வந்தவள் போல் விஜி அக்கா சொன்னாள்.

"இன்றைக்குப் புத்தகக்கடைக்குப் போற நாளெல்லே...... எனக்குக் கொஞ்சம் பள்ளிக்கூட வேலை இருக்கு..... நீ அம்மாவைக் கூட்டிக் கொண்டு 'ஓட்டோ' விலை போய் வா..... அடைஞ்சு கிடக்காமல் அம்மாவும் கொஞ்சம் வெளீலை போன மாதிரியிருக்கும்....."

உடனேயே 'மொபைலை' எடுத்து ஓட்டோவைக் கொண்டு வருமாறு 'செனவி'க்குச் சொல்கிறாள். அம்மாவையும் என்னையும் கதைக்கச் செய்ய அவள் எடுக்கும் முயற்சிதான் இது என்பது எனக்கு நன்றாக விளங்குகிறது.

இரண்டு கிழமைக்கு ஒரு தடவை 'பக்தி', 'சக்தி', 'ஞானபூமி.....' என்று ஆன்மீகச் சஞ்சிகைகள் பூபால சிங்கம் புத்தகக் கடையிலிருந்து வாங்கிவர வேண்டும். இந்த வயதிற் கூட கண்ணாடி போடாமல் சராசரித் தூரத்தில் பிடித்துக் கொண்டு அம்மா அவற்றைப் படிப்பா.....

வெளியே 'ஓட்டோ' வந்து நிற்கிறது.

அம்மாவைக் கையைப் பிடித்து ஏற்றிவிட்டு நானும் ஏறிக் கொள்கிறேன். நாங்கள் ஒன்றுமே பேசாமல் வருவது 'செனவி'க்கு ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும்....."அய்?" என்று கேட்டுவிட்டு, எமது மௌனத்தைப் பார்த்துத் தானும் ஒன்றும் பேசாமல் வருகிறான்.

வெள்ளவத்தையில் இறங்கி, பூபாலசிங்கம் கடையின் படிக்கட்டுகளில் ஏறும் போது அம்மாவுக்கு மூச்சு வாங்குகிறது. இடையிலேயே ஒரு படியில் ஓரமாக அமர்ந்து கொள்கிறார்.

"சரி இப்படியே இருங்கோ.... நான் போய் வாங்கிக் கொண்டு வாறன்.'' என்று சொல்லிவிட்டு மேலே ஏறுகிறேன்.

புத்தகங்களை வாங்கிக் கொண்டு விரைந்து திரும்பும் போது அம்மாவின் முன்னால் யாரோ ஒருவன் குனிந்து நிமிர்வது போலத் தெரிகிறது. ஒரு கணம் தான்! முகம் தெரியவில்லை. பரபரத்துக் கொண்டு அம்மாவை நெருங்கு முன் அவன் தூரப் போயிருந்தான். அம்மாவிடம் குனிந்து "என்னம்மா..?" என்று மெதுவாகக் கேட்கிறேன்.

"இஞ்சை பாரடா செல்லம், அந்தத் தம்பி தந்திட்டுப் போகுது...."

இருபது ரூபாத்தாளொன்றைக் கையிலெடுத்து எனக்குக் காட்டி அம்மா மலர்ந்து சிரிக்கிறார். கோபம் எல்லாம் எங்கே பறந்ததோ.....? நடந்ததை விளங்கிக் கொண்டு நான் பெரிதாகச் சிரிக்கிறேன்.

"சீ, இதென்னம்மா..... பிச்சைக்கிருந்ததென்று நினைச்செல்லே குடுத்திட்டுப் போகுது..... திருப்பிக் குடாதேங் கோவன்...."

பிறத்தியாரிடம் கைநீட்டி அறியாத அம்மாவின் கையில் யாரோ கொடுத்த காசைப் பார்க்கச் சகிக்க முடியாமல் இருக்கிறது.....

"என்னெண்டடா செல்லம் திருப்பிக் குடுக்கிறது...... 'அம்மா களைச்சுப் போனியளோ' என்று கேட்டு என்ரை சொக்கையுந் தடவி என்ரை கையுக்குள்ளை வைச்சிட்டுப் போறதைப் பார்க்க என்ரை பிள்ளையைப் பாத்தது போலையிருக்கு... என்ரை பிள்ளையிட்டை காசு வாங்க எனக்கென்னடா வெக்கம்....."

அம்மா சொல்லச் சொல்ல அம்மாவைக் கட்டிக் கொஞ்ச வேண்டும் போல் இருக்கிறது. பூரித்துப் போய் அம்மாவைப் பார்க்கிறேன்.


அம்மாவின் முகத்தில் பழைய 'தேஜஸ்' நிறைந்திருக்கிறது.

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*

# Kalkison

## Importers & Distributors of Machinery & Electrical Equipments



B.G. Buiding
102, Wolfenhal Street,
Colombo - 13.
Tel: 2328729, 2332949 - 50
Fax: +94-11-2439623, +94-11-2576273
E-Mail : kalkison@slt.lk

# பட்ட மரமும் பகற் குருடனும்


**ஆனந்தி**




விழுந்து கிடக்கும் யாழ்ப்பாணத்தின் முகமறியாத, இன்னுமொரு புது உலகம் போல, அது இருந்தது. பாஸ்கரனைப் பொறுத்த வரை அந்தக் கல்யாண வீடும், அதன் காட்சி மனிதர்களும் வெறும் நிழல்களே. சதா நெஞ்சை வருத்திக் கொண்டிருக்கும் இந்த மண்ணோடு புரையோடிப் போன நிஜமான சோகங்களை மறந்துவிட்டு, இப்படிப் பொய்யாக வேடம் கட்டி ஆடுவதே பாவமென்று நினைப்பவன் அவன்.

ஆனால் இன்று உறவுக்கு முகம் கொடுத்தே ஆக வேண்டிய ஒரு சமூக நிர்ப்பந்தத்தின் விளைவாகவே, அவன் இங்கு வர நேர்ந்தது. அதுவும் இவ்விழாவின் காரண கர்த்தாவான, முரளி அவனுக்கு எப்பேர்ப்பட்ட ஓர் அருமை நண்பன். பால்ய வயதிலிருந்தே உயிர் கொண்டு வளர்ந்த உறவு.

இருவரும் நட்புறவில் ஒன்றாகிப் போயிருந்தாலும், மனதில் செதுக்கப்பட்ட எண்ண வார்ப்புகள் வேறாய், இருவரும் வெவ்வேறு துருவங்களில் நிற்பது போல் படும். அந்தத் துருவப் பாதையில் மிகவும் அறிவுத் தெளிவு கொண்ட ஒரு மேலான ஆன்மீகவாதி போன்றே, பளிங்கு கொண்டு துலங்கும் பாஸ்கரனின் உயிரோட்ட நடத்தைகள். சதா யதார்த்த வாழ்வின் நிஜங்களையே நம்புகின்ற, அதற்காகவே மனதில் பளு சுமந்து வருந்துகின்ற அவன் ஒரு நேர்மையான சத்தியப் புருஷன். இந்தத் தேஜஸ் காந்திகளின் உயிர்ச் சுவடு கூட அறியாத ஒரு வெறும் போக்கு மனிதன் தான் அந்த முரளி. சிறுவயதிலிருந்தே, படிப்பில் நாட்டமற்று, பணமே குறியாகக், குன்றும் பொய்யில் உயிர் பிழைத்து நிற்பவன். அந்தப் பொய்க்காகவே, இன்று இவ்வளவு பெரிய எடுப்பில் இந்தக் கல்யாணக் காட்சி நாடக விழாவெல்லாம்.



உண்மையில் அது ஒரு கல்யாண வீடேயல்ல! முரளியின் ஒரே ஒரு அருமைத் தங்கை' இந்து கல்யாணம் நிச்சயமாகி அதற்காக, விசா வந்து வருகிற மாதமளவில் கனடா போக இருக்கிறாளாம். அதற்கு முன் அவளைக் கல்யாணக் கோலத்தில் பார்த்து விட வேண்டுமென்ற, தன்னுடையதும், தாயினுடையதும் மனத் திருப்திக்காகவும் கல்யாணம் போன்றதொரு காட்சி நாடகத்தை அரங்கேற்றி நடத்த இருப்பதாக முரளி சொல்லியிருந்தான்.

அதற்காக ஊரே வந்து கூடியிருக்கிற மாதிரி அலங்காரப் பந்தலினுள் அலை பாயும் மனித வெள்ளத்தைக் கண்டு பாஸ்கரன் பிரமித்துப் போனான். உண்மையில் அவனின் கொள்கைகளுக்குப் பொருந்தாத, இது ஒரு மாறுபட்ட அநுபவமே. இந்த விழாவும், வேடிக்கை மனிதர்களும் அவன் கண்களில் ஒட்டாத வெறும் நிழல்கள் போன்றே நெஞ்சில் கரித்தன.

வாசலில் வரும் மனிதர்களை வரவேற்பதற்காக ஒளிவிடும் வானத்துத் தேவதைகள் போல், இரு இளம் பெண்கள். முகம் சிரித்தபடி நிறைகுட மேசையருகே நின்றிருந்தனர். பாஸ்கரன் பந்தலை நோக்கி வருவதைக் கண்டதும், ஒரு பெண் வெட்கத்துடன் சிரித்தபடி சந்தனக் கிண்ணத்தை எடுத்து அவன் முன்னால் நீட்டினாள்.

"வாங்கோ சேர்" அவன் ஒரு பட்டதாரி ஆசிரியரென்பதால் இந்த அழைப்பு, அவனுக்குப் புதிதாகப் படவில்லை. எனினும், அறிவு தெளிவான். எந்த உண்மையுமே இங்கு இவர்களிடம் எடுபடாமல் இப்படிப் பொய்யில் உயிர் பிழைத்து வாழ்கின்ற, இவர்களுக்கு முன்னால், இப்போது நிஜத்தில் விழித்திருக்கும் தனது சத்தியமே கறைபட்டு விட்டதாய் அவன் மிகவும் மனம் வருந்தினான்.

கேவலம், வெளிநாட்டுப் பணத்தை நம்பி, அதிலே தனித்துத் தேர் விடுகிற இவர்களைப் பட்டும் பொன்னுமாய் ஜொலித்துக் காட்சிக்கு நிற்கிற, குறிப்பாக இந்த இளம் பெண்களை நேர் கொண்டு நிமிர்ந்து பார்க்கவே முடியாமல், அவன் மனம் கூசினான். அக் கூச்சம் விடுபடாமலே, குனிந்த தலை நிமிராமல் அவன் நுனிவிரலால் சந்தனம் எடுத்துக் கொண்டிருந்த போது, அவனின் ஆத்ம நண்பனான முரளி அவனைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் விரைவாக அவனை நோக்கி ஓடி வந்தான்.

"வா பாஸ்கரா!"

அவனின் குரல் கேட்டுப் பாஸ்கரன் விழிப்பு வந்து நிமிர்ந்து பார்த்தான். முரளி ஆளே அடையாளம் தெரியாமல், பணக்காரனின் களை மின்ன, ஒரு கனவான் மாதிரித் தோன்றினான். சிறுவயதிலிருந்தே இந்த ஊர் மண்ணைச் சுவாசித்து ஒன்றாகவே வாழ்ந்த உயிர் நட்பு அவர்களுடையது. அப்படியிருந்த நிலையிலும், எண்ணங்களில் கொள்ளை வார்ப்புகளில் இருவரும் வெவ்வேறு துருவங்கள். சிறுவயதிலிருந்தே முரளிக்குப் படிப்பில் நாட்டமில்லை. பணமே குறியாக , இளம் வயதிலேயே சவூதிக்குப் போய்ப் பெரும் பணக்காரனாகத் திரும்பி வந்திருக்கும் அவனின் நிழல் கூடத் தீண்டாமல் இந்த மண்ணின் சோகங்களுடனேயே ஒன்றிப் போய் நிஜத்தில் விழித்திருக்கும் பாஸ்கரனுடைய அமானுஷ்ய தனிமை உலகம். அதன் சுவடு மாறாமல் சத்தியத்தின் உண்மையான தேஜஸ் களையோடு பாஸ்கரன் அவனை நிமிர்ந்து பார்த்து மெல்லப் புன்னகை செய்தான்.

"உள்ளே வா பாஸ்கரா. பலகாரம் சாப்பிடு!"

"எனக்கு இனிப்புச் சரிவராது." என்றபடியே பாஸ்கரன் அவனைத் தொடர்ந்து உள்ளே போனான். பந்தலினுள் இருக்க இடமில்லாமல், கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. ஒரு சிறுபையன் அவன் வருவதைக் கண்டதும், மரியாதையோடு இடம் விட்டுக் கொடுத்தான்.

வீடியோக்காரன்கள் வந்து விட்டதால், பந்தலினுள் ஒரே ஆரவாரமாக இருந்தது. வீடியோக் கமராவைத் தோள்மீது மிக இயல்பாகச் சுமந்தபடி, ஒரு வாட்ட சாட்டமான இளைஞன் தானே அன்றைய நாடகத்தை முன்னின்று இயக்கும் இயக்குநர் திலகமாய்த் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு, இந்து மணப் பெண் வேடமிட்டு அறையினின்றும் வெளிப்படும் சமயம் வாசலில் அவளை எதிர் கொண்டு நின்றவாறே, அவன் அவளை வழிநடத்தும் தோரணையுடன் கைகளால் சைகை காட்டி மௌன பாஷை பேசியபடியே, அவன் மெல்ல, மெல்லப் பின் நோக்கி நடந்து வரும் காட்சி, மங்கிய நிழற்படம் போல் பாஸ்கரனின் கண்களில் பட்டுத் தெறித்தது.

அப்போது அவன் விரித்த அந்த ஒளிப்பாதையில் மெய்சிலிர்த்து மனம் புளங்கிக்கும், கலையுலகில் சஞ்சரிக்கும் ஒரு மாய தேவதை போன்று, தன் வசமிழந்து, இந்து மெல்ல மெல்ல நடந்து வந்து, ஒப்பனை கலையாமல் மேடையில் ஏறி அமர்ந்து கொண்ட போது, பந்தலினுள் மௌனம் கனத்தது.

அவளுக்கு மிக அருகில், உரிமையோடு அவளின் தோள்மீது கை போட்டவாறு, அவள் வயதொத்த ஓர் அழகான இளம் பெண் மெருகூட்டப்பட்ட ஒப்பனை அலங்காரங்களுடன், கீச்சுக் குரலில் இந்துவிடம் சைகை காட்டி ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அவள் மாப்பிள்ளையின் தங்கை என்று யாரோ கூறுவது கேட்டது. திருமண விழாவில் இப்போதெல்லாம் வழக்கமாக நடந்தேற வேண்டிய மிக முக்கியமான ஒரு சம்பிரதாயச் சடங்கு போன்றே, எல்லோராலும் முதன்மைப் படுத்தப்பட்டு அரங்கேறி வரும் இந்த வீடியோப் படப்பிடிப்பு நாடகமும், அதையொட்டி நடந்தேறுகின்ற நிகழ்ச்சிகளும் பாஸ்கரனின் பார்வைக்கு முன்னால் அர்த்தமிழந்த வெறும் கேலிக்கூத்துகளாகவே நிழல் கொண்டு நிற்கும்.

புனிதமான வாழ்க்கைக்குப் பொருளே அறியாத, விலகி ஓடும் இந்த மக்கள் கூட்டத்தோடு ஒருவனாக அள்ளுண்டு போக என்றைக்குமே அவன் விரும்பியதில்லை. சிலவேளைகளில், தவிர்க்க முடியாத உறவின் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தங்களின் விளைவாக அவனும் இப்படியான விழாக்களில் கலந்து கொள்ள நேர்ந்து விடுகிறது.

வீடியோவுக்கு முகம் காட்டவெனக் கூட்டம் அலை மோதி அவசரப்பட்டுக் கொண்டு நிற்கையில், அவன் முன்னால் ஒரு நிழல் தெரிந்தது. அவன் கவனம் கலைந்து திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

கைக்குழந்தையை நீட்டியபடி ராதா நின்று கொண்டிருந்தாள். அவனின் இளம் மனைவியான அவளுக்கு இப்படியான கொண்டாட்டங்களென்றாலே போதும். பட்டும் பொன்னுமாய், ஜொலித்து மினுங்க அவனுக்கு முன்னதாகவே தேர் ஏறி வந்து விடுவாள். அவனது ஒரே ஒரு குழந்தை, கன்னம் குழிவிழச் சிரித்தபடி அவனை நோக்கித் தாவி வந்தது.

"கொஞ்ச நேரம் வைச்சிருங்கோ. எங்களை வீடியோவுக்கு நிற்க வரட்டாம். நான் கண்ணாடி பார்த்துச் சரி செய்து கொண்டு வாறன்."

குழந்தையை மடிமீது போட்டு விட்டு, அவள் பறந்து போனாள். அவனின் உள் மனம், அவளுக்கே பிடிபடவில்லை. என்ன செய்வது. அவன் மன வருத்தம் மாறாமல், குனிந்து பிள்ளையை நோக்கினான்.

அது கவலை மறந்து அவனைப் பார்த்து, வாய் நிறையச் சிரித்தது. போகப் போகத்தான், அதற்கு உலகம் பிடிபடும். இருட்டில் மறைந்து போக எங்கடை மண்ணின் இருப்பு நிலை கண்களில் துருத்திக் கொண்டு குத்தும்.

"அப்போது நீ என்ன செய்யப் போகிறாய்? டேய் பையா நன்றாகச் சிரி. இதுதான் உனக்குக் காலம்!"

"நீ வளந்து பெரியவனாகும் போது, இப்ப இருக்கிற நிலைமையே நீடித்தால், நீ என்னவாவாய்? எனக்குப் புரியேலை. எல்லாச் சகதிகளையும் குடித்துக் கொண்டு, உள்முக சோதி தரிசனமாய், இப்ப நான் காணும் உண்மைகள், உனக்குள்ளும் பிடிபட்டால், எனக்கு அது போதும்."

ராதா ஒப்பனை அலங்காரம் சீர் செய்து கொண்டு திரும்பி வந்துவிட்டாள்.

"எழும்புங்கோ! படமெடுக்க வரட்டாம்."

"நான் எதுக்கு? நீ போய் நிற்கிறது தானே"

"இது வடிவாயிருக்குமே?"

"சரி பிழை பாக்கிற காலமே இது"

"கனக்கப் பேசாதேங்கோ! நீங்கள் வராட்டால், முரளிதான் குறை சொல்லுவார்."

அதைக் கேட்டு அவன் அரை மனதோடு எழுந்து போனான். அதற்கும், அந்த நிழல் சங்கதிக்கும் வெகு நேரமாய் பொறுமையுடன், காத்து நிற்க நேர்ந்தது. கடைசியில் முரளி வந்த பிறகு தான் அவர்கள் மேடை ஏற வழி பிறந்தது. படமெடுத்து விட்டு வரும் போது, முரளி அவனின் கைய்யைப் பிடித்துக் கொண்டு சொன்னான்.

"அவசரப்படாதை பாஸ்கரா. நீ இருந்து சாப்பிட்டு விட்டுத் தான் போகவேணும். இது முடிய நாங்கள் வெளிக்கிடுவம்."

"நீ என்ன சொல்கிறாய்? விருந்து இஞ்சையில்லையே?"

"இல்லை. அது மாப்பிள்ளை வீட்டிலைதான், நடை பெறப் போகுது. கனதூரமில்லை! அவையள் இங்க விழிச் சிட்டியிலைதான் இருக்கினம்"

"மாப்பிள்ளை அச்சுவேலி ஆள்ளெண்டல்லோ நீ சொன்னது ஞாபகமாயிருக்கு."

"அது அப்ப, இப்ப இடம் பெயர்ந்து தாய் தகப்பன், சகோதரங்களெல்லாம், எங்கடை ஊருக்கே வந்திட்டினம்."

"ஓ! நாங்கள் வாழ்ந்து பெருமை கொண்ட இந்த மண்ணிலே எந்த இடத்திலேயேும் நிம்மதியாக வாழ்கிற நிலைமையும் போச்சு. சொந்த வீடு வாசலெல்லாம் மண்ணோடு கரைந்து போச்சு. இப்படியொரு மிகவும் பாதிக்கப்பட்ட நிலைமையிலே, இந்த விழாவும், கேளிக் கைக் கொண்டாட்டங்களும் எதுக்கு என்று உனக்குப் படவில்லையா முரளி?"

"உஷ்! மெல்லப் பேசு பாஸ்கரா. இதைப் பற்றி இப்ப பேச வேண்டாம். ஆறுதலாகக் கதைப்பம். இப்ப இந்துவைக் கூட்டிக் கொண்டு நாங்கள் வெளிக்கிடப் போறம். நீயும் கிளம்பு."

வேறு வழியில்லை. தெருவிலே வெளிச்சம் போட்டுக் கொண்டு கல்யாணக் களை கட்டித் தேர் ஏறிப் போகும் இந்துவிற்கு முன்னும் பின்னுமாய் அலைமோதி நிரம்பி வழியும் ஜடம் மரத்துப் போன மனித வெள்ளத்தில் ஒருவனாய் நிழல் தட்டி அவனும் புறப்பட நேர்ந்தது.

அவர்கள் அப்படிப் புறப்படும் போது, மணி பன்னிரண்டைத் தாண்டி விட்டது. உச்சி வெயில் வேறு, சுட்டெரித்துக் கொண்டிருந்தது. தலை விரித்து ஆடுகின்ற சண்டைப் பேயின் கோரவடுக்கள் பட்டு, குண்டும் குளியுமாய் நிலையிழந்து போனதே எங்கள் மண் பெருமை கொண்டு, தலை நிமிர்ந்து நின்ற அவனின் அந்தச் சிரஞ்சீவிக் கிராமமே முற்றாக- முகம் பொலிவிழந்து போய், உயிர் விட்டுக் கிடந்தது. வெறும் புற்காடாய், புதர் மண்டி வெறிச் சோடிக் கிடக்கும் பாழடைந்த அந்தக் குச்சொழுங்கைகளில் பொய்யில் வேடம் கட்டிப் போகும் அந்தக் கல்யாண ஊர்வலத்தோடு மனம் ஒன்றுபட்டுப் போக முடியாதவனாய் பாஸ்கரனுக்கு நடை இடறியது. இதையெல்லாம் நினைத்து அவனுக்கு வாய் விட்டு அழ வேண்டும் போல் தோன்றியது. அவனையறியாமலே கண்கள் கலங்கின. அந்த உணர்ச்சி வெளிப்பாட்டை மறைப்பது போல், கைக்குட்டையால் அவன் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்த போதுதான் அந்த விபரீதம் நிகழ்ந்தது. நவீன நாகரிக உச்ச நிலை வேடதாரிகளைப் போன்று பொய்யாகவும், மெய் இருப்புக்களை மறந்தும் அந்தக் கல்யாணக் காட்சி நாடகத்தின் கனவுலக மனிதர்களாய், ஒளி கொண்டு வெளிப்பட்டுப் போகும் அந்த ஊர்வலத்துக்கு முன்னால், சங்கக்கடை மூலைத் திருப்பத்தில் அவர்களுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு துருவத்தில் நிழல் வெறித்த வெறும் இருட் காட்சி அவலமாய், எதிர்ப்பட்டு வந்த அவர்களைக் காண நேர்ந்தது, ஒரு சூழ்நிலைக் குற்றமாய் முரளியை வதைத்தது.

அவர்கள் வேறு யாருமில்லை. நித்திய தெரு நாயகர்களாய் கனவிலல்ல, இந்த மண்ணில், யாழ்ப் பாணத்துத் தெருக்களில், குச்சொழுங்கைகளில் எங்கெங்கும் வியாபித்து வெறும் நடைப் பிணங்களாய் உடல் சுமந்து வருந்தி அலையும் விறகுக்காரன்களை அவ்வளவு எளிதில் மறந்து போக முடியுமா? என்ன?

சண்டை வரமுன் அவர்கள் நிலைமையே வேறு. அவர்களில் அநேகமானோர் வீடு கட்டும் மேசன்மாராகவும், தச்சு, இரும்பு வேலைகள் செய்தும் பிழைப்பு நடத்தியவர்கள். சண்டைக்குப் பிறகு, அந்தத் தொழிலே அடியோடு நின்று போனதால்தான் இந்த அவல நிலைமை. உயிரைப் பணயம் வைத்துக் காடு காடாய் அலைந்து விறகு வெட்டிச் சுமை சுமந்து கொண்டு சைக்கிள் ஓடி வருகின்ற அந்த நடைப்பிண இளைஞர்களைப் பார்க்கவே கண் எரிந்தது.

பாவம் அவர்கள்! அவர்கள் வயிறாரச் சாப்பிட்டு எவ்வளவு நாளானதோ? வெறும் தண்ணீர் மட்டும் குடித்து உயிர் வாழ்கிற அவலம் அவர்களுக்கு. அப்பேர்ப்பட்ட அவர்களுக்கு முன்னால், இப்படியொரு குருட்டு நாடகம்

முரளி அவர்களைக் கண்டு மனம் பதைத்துப் போய், ஆவேசமாக அவர்களை நெருங்கிப் போய் சூடேறிய குரலில், ஏதோ பேசுவது கேட்டது. அதை என்னவென்று

அறிவதற்காக அவசரமாகக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு பாஸ்கரன் முன்னுக்கு வந்து பார்த்தான்.

“கொஞ்சம் நில்லுங்கோ. இஞ்சை நாங்கள் கல்யாண ஊர்வலம் போறம். விறகுக் கட்டுகளோடு வாற உங்கட முகத்திலே விழித்தாலே, சகுனம் பிழைச்சுப் போடும். ஏன் நிற்கிறியள்? பேசாமல் திரும்பிப் போய் விடுங்கோ.”

முரளியின் அர்த்தமற்ற எல்லை மீறிய இந்தக் கோபத்திற்கு முன்னால், அவர்கள் ஒன்றும் பேசத் தோன்றாமல் வாயடைத்துப் போய் நிழலோடிய வெறும் மனித ஜடங்களாய், உயிர் மரத்துப் போய் உணர்வும் மனமும் செத்து விட்ட நடைப் பிணங்களாய் முகம் வாடிக் களையிழந்து நிற்பது தெரிந்தது.

உடைந்து கிழடு தட்டிப் போன, கறள் பிடித்த பழைய சைக்கிள்களின் பின் கரியரில் விறகுச் சுமை மலைபோல், குவிந்து கிடந்தன. ஒவ்வொரு விறகுக் கட்டும் இருநூறு ரூபாவிற்கு மேல் தேறாது. அதையும் தெருத் தெருவாகத் தொண்டைத் தண்ணீர் வற்ற கூவிக் கூவி விற்க அவர்கள் படும் பாடு, ஆண்டவனுக்கே வெளிச்சம். அதற்குக் கூடப் பேரம் பேசுபவர்கள் கூட உண்டு. அவர்கள் கணக்குப் பார்ப்ப தெல்லாம் ஏழைகள் சம்பந்தப்பட்ட இந்த மாதிரி விடயங் களுக்கு மட்டும் தான்.

அப்பால் பணத்தைப் பட்டுக்கும் பொன்னுக்குமாய் வாரியிறைக்கும் போது, மனம் கூசாமல் செலவழிக்க அவர்கள் தயங்குவதில்லை. பாஸ்கரனுக்கு இதிலெல்லாம் ஈடுபாடில்லாமல், ஒரு துண்டு நாலு முழ வேட்டியே அதிக பட்சம் செலவென்று ஒடுங்கிய மன உணர்வுகளுடன் வாழ்க்கை மனிதர்களைத் தன் உயிரென நேசித்து வாழ்கின்ற ஓர் ஆதர்ஷ மானுட தெய்வம் அவன்.

அவன் முரளியின் அநாவசிய கோபத்திற்கு இலக்காகிச் செய்வதறியாது, நிலை குலைந்து தடுமாறி நிற்கும் அந்த நான்கு விறகுக்காரன்களையும் பார்த்து மிகவும் மனவருத்தம் கொண்டவனாய்ப் பொங்கியெழும் தார்மீகச் சினத்தோடு, முரளியைத் தட்டிக் கேட்பதற்காக அவனை நோக்கி ஓடி வந்தான். அதற்குள் மிகவும் அவசரமாக முரளியின் நியாயமற்ற கட்டளைக்கு அடி பணிந்தவர் களாய், சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வந்த வழியாகவே இருளில் சென்று மறைந்து போனார்கள் அந்த விறகுக்காரன்கள்.

இது பாஸ்கரனை முகத்தில் அடித்தது போல், மேலும் தாக்கியது. வயிற்றுப் பசியால் உயிர் கருகிப் போகும் இவர்களின் நிஜமான இந்தக் குரூரமான, மிகவும் துன்பம் தருகின்ற இந்த வாழ்க்கை இருளின் சுவடுகளுக்கு முன்னால் அதைக் கண்டும் காணாதவன் போல், கேவலம் தனது இப்படியொரு வாழ்க்கைப் பொய்க்காக, என்ன காரியம் செய்து விட்டான் பாவி இந்த முரளி.

‘நான் இவனை எப்படி மன்னிப்பேன்?’ என்று மனம் பொறுக்காமல் தனக்குள் புலம்பியழுதவாறே அந்த மூலைத் திருப்பத்தில் மேற் கொண்டு நகர முடியாமல் வெகு நேரமாய்த் தரித்து நின்றான். அதைப் பொருட்ப டுத்தாமல் அவர்கள் போனதும் தடைப்பட்டு நின்ற ஊர் வலத்து மனிதர்களெல்லாம் மகிழ்ச்சி கரை புரள, ஆரவாரித்துக் கொண்டு அவனை விட்டு விலகி வெகு தூரம் போன பின் அவர்களில் ஒருவனாய்த் தன்னை மறந்து தேர் ஏறிப் போய்க் கொண்டிருந்த முரளிக்குத் திடீரென்று விழிப்புத் தட்டவே, அவசரமாகப் பாஸ்கரனைத் தேடி அவன் கண்கள் அலைந்தன.

தெறித்த அவன் கண்களின் அலைகளினூடே சிலையாக வந்து விழுந்தான் பாஸ்கரன். ‘அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏன் நடு வழியில் நிற்கிறான் அவன்?’

மனம் பதற அவசரமாய் ஓடிவந்து முரளி கேட்டான். “என்ன பசிக்குதே? பசிக் களையாயிருக்கே? ஏன் நின்றிட்டாய் பாஸ்கரா?”

“ஐயோ! எனக்குப் பசியே மறந்து போச்சு. நீ இப்ப பார்த்தியே, பசியின் கொடுமையை. அதற்குப் பலியானவர் களை. இப்படி எதிர்க் கொள்ள நேர்ந்ததே. ஒரு பாவத் தீட்டாய் என்னை இப்ப சுட்டெரிக்குது. நீ இது ஒன்றும் அறியாமல் விளையாட்டு மாதிரி, அவர்களைத் துரத்தி விட்டிருக்கிறாயே? இதைத் தான்ரா என்னாலை பொறுக்க முடியேல்லை.” தர்மத்திலே விழித்து, மேலான ஒரு சத்தியப் பிரகடனமாய் அதை அவன் உரத்துச் சொல்லிக் கொண்டிருந்த போது, பெரிய நகைச் சுவையைக் கேட்ட மாதிரி, இடையில் குறுக்கிட்டுக் கைக் கொட்டிச் சிரித்தவாறே, முரளி சொன்னான்.

“உனக்கு விசர். இப்படிப் பட்டினிச் சாவு சாகிறது அவன்ரை தலைவிதி. இதுக்காக நானும் சாக ஏலுமே. என்னட்டைப் பணம் இருக்கு. அநுபவிக்கிறன். இந்தப் பரதேசிகளுக்காக, என்ரை சந்தோஷங்களை நான் ஏன் விடவேணும். நீ ஒரு முட்டாள்! எக்கேடு கெட்டாவது போ. எனக்கென்ன வந்தது. நான் போறன்.”

நிழற் சங்கதிகளாய் நிறையப் பேசி எரிச்சல் தீர்த்து விட்டு, மின்னல் வேகத்தில் அவன் கழன்று போனான். அவன் போகும் திக்கையே வெறித்துப் பார்த்தபடி பாஸ்கரன் சிலையாக நின்றிருந்தான்.

சூழ்ந்து பெருகி வந்ததும் கொடிய கொலை வெறியிலே எங்கடை மண்ணே, முகம் தெரியாமல் அழிந்து போச்சு. புரையோடிப் போன அதன் முதுகிலே, ஏறி நின்று சூரிய நமஸ்காரம் செய்கிற மாதிரி, எங்களுக்கெல்லாம் என்ன சந்தோஷம் வேண்டிக் கிடக்கு? கண்ணை மூடிக் கொண்டு அப்படி வாழ்கிறவனை, இந்த முரளியை அவன் போன்ற மனிதர்களைக் கேவலம் பொய்யில் உயிர் பிழைத்து நிற்கும் அற்ப நிழல் கூட்டங்களாகவே நான் காண்கிறேன். பணத்திலே எப்படித்தான் கொடி கட்டி உயர உயரப் பறந்தாலும் இப்படிப் பொய்யிலே சகதி குடித்துப் போகிற இவர்களைப் பெரிய பெரியவர்களென்று, நம்புகிறவனே முட்டாள். இந்தச் சகதிக் கூட்டத்தில் ஒருவனாய், இன்று நானும் இங்கு வர நேர்ந்ததே! என்ன கொடுமை இது? வேண்டாம். இன்றோடு இந்தத் தீட்டுக் குளித்த கரிநாள் என்னை விட்டுக் கழன்று போகட்டும். நான் போறன். அதன் பிறகு அவன் அங்கு நிற்கவில்லை.

With Best Compliment To.

*Mallikai 43 year Issue*

# Wahls Shopping Centre

*Dealers in Video Cassettes, Audio Cassettes, CD's, Calculators, Luxury & Fancy Goods*



152, Bankshall Street,
Colombo - 11.
Tel : 2446028, 2441982
Fax : 323472

# தமிழகத்தில் வீறுபெற்று எழும் மார்க்சியம்- ஒரு உணர்வுப் பரிமாற்றம்

-ந. இரவீந்திரன்




**செ**ன்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வுக்காக, 1999 இல் தொடர்பு கொள்ளத் தொடங்கியிருந்தேன். பதிவு செய்ய முடிந்தது 2001 முடிவில். மூன்றாண்டுகள் ஆய்வுச் செயற்பாடு என்ற வகையில், 2004 இறுதிவரை கற்கை விடுமுறையுடன் சென்னையில் தங்கிப் படிப்பதற்கு முடிந்தது. ஆய்வோடு 2005 நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இவ்வருடத் தொடக்கத்திலேயே வாய்மொழித் தேர்வு இடம்பெற்றிருந்தது. அந்தவகையில், எட்டு வருடங்களாகத் தமிழகத்தின் நூலகங்களிலும் மக்களிடமிருந்தும் நிறையவே கற்கும் வாய்ப்பு இருந்து வந்துள்ளது. இக்காலத்தில் பெற்ற எனது சில அநுபவத் துளிகளின் பகிர்வு இந்தக் கட்டுரை.

எனது **'பாரதியின் மெய்ஞ்ஞானம்'** 1986 இல் வெளியானதிலிருந்து பாரதியியலறிஞர் பெ. சு. மணி அவர்களுடன் தொடர்பிருந்தது. அவரூடாகவே சென்னைப் பல்கலைக்கழகத்தில் இணைந்தேன். அவர் அன்றைய தமிழிலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்களை நான் எனது நெறிப்படுத்துநராகப் பெறுவதற்கு உதவினார். பேராசிரியர் இ. சு. திருக்குறள் ஆய்வில் துறை தோய்ந்தவர். எனக்கு மார்க்சிய ஏற்புக்கு முன்னர் திருக்குறளில் ஆழ்ந்த பற்றுதல் இருந்தது. இந்த வாய்ப்பைக் கொண்டு மீண்டும் திருக்குறள் ஆய்வில் இறங்கலாம் என்ற எண்ணத்துடன் 'திருக்குறளின் கல்விச் சிந்தனை' எனும் ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன்.

### விளிம்பு நிலைப் பார்வையில் வறட்டு மார்க்சியம்

இந்த ஆரம்பக் கட்டத்தில் சென்னையில் ஒரு இலக்கியக் குழுவின் ஒருநாள் கருத்தரங்கு ஒன்றில் பார்வையாளனாகக் கலந்து கொண்டேன். கருத்துரை வழங்கும் சந்தர்ப்பத்தில் எனது அவசரக்குடுக்கைத் தனத்தோடு இலங்கை அநுபவம் சார்ந்த சில விடயங்களைக் கூறியிருந்தேன். எனது பார்வை 'வறட்டுத் தனமான மார்க்சியம்' என்ற கருத்துப் பலரிடம் உண்டு. (ஒரு தடவை வேறொருவரது பார்வையை 'வறட்டு மார்க்சியம்' எனச் சொன்னவுடன், இது நினைவில் வர என்னையும் இப்படிச் சொல்கிறார்கள் என்று நண்பர்கள் அ. மார்க்ஸ், ஷோபாசக்தி ஆகியோரிடம் கூறினேன்; ஷோபாசக்தி சிறிது மௌனத்தின் பின் "ஒரு மரியாதையின் காரணமாக அதைச் சொல்லாமல் இருந்தேன்." என்றார்.)

விளிம்பு நிலைப் பார்வையை அடிப்படையாகக் கொண்டது அந்தக் கருத்தரங்கு. அங்கே போய் எமது 'வறட்டு மார்க்சியத்தை' விலை பேசியிருக்கக் கூடாது. வேறொரு வடிவில் தாக்குதல் வந்தது. யாழ்ப்பாணத்து வெள்ளாள மேட்டிகை மனப்பாங்குகளுடன் தமிழகம் வருகிறவர்கள், தமிழகத்தில் பிராமணர்களுடன்தான் தொடர்பாடுவார்கள்- அவை சார்ந்துதான் அவர்களது கருத்தும் வெளிப்படும் என்பதாக எதிர்வினை அமைந்தது. நான் அதிர்ந்து போனேன். அதன் பின்னர் தமிழகத்தில் அவசரக் கருத்துரைகளைத் தவிர்த்துக் கொண்டேன்.

யாழ் வெள்ளாள மேட்டிமைத் தனத்தின் குறுகிய மனப்பாங்குகளால் எமது தெற்காசியப் பிராந்தியத்துக்கு ஏற்பட்டு வரும் அமைதிக்கேடான அச்சுறுத்தல்கள் பற்றி எப்போதும் அலட்டிக் கொள்ளும் எனக்குக் கிடைத்த இந்தப் பூசை இங்குள்ள நண்பர்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இது தமிழகத்தின் அதீதமான பிராமணிய எதிர்ப்புச் சார்ந்தது. அங்குள்ள சில பிராமணர்களது அடாவடித்தனமென்பது தாங்க முடியாதது; மிகுந்த வெறுப்புணர்வை எவர்க்கும் ஏற்படுத்தக் கூடியது. வீடு வாடகைக்குத் தேடிய ஆரம்ப காலத்தில் எங்களுக்கும் கடும் கோபங்கள் அத்தகைய பிராமணர்கள் மீது எழுந்தது.

அதற்காகக் கண் மண் பாராது பிராமண வெறுப்பைக் கக்குவது நியாயமாகமாட்டாது. எல்லாப் பிராமணர்களுமே மக்கள் விரோதிகளாகி விடமாட்டார்கள்; சாதியத் தகர்ப்பைஇலட்சியமாகவுடைய பல பிராமணர்கள் முழுமையான மக்கள் விடுதலைக்காகத் தொடர்ச்சியாக உழைத்து வருவதைக் கண்டிருக்கிறேன். மக்கள் விடுதலைக்கு உதவும் வகையில்

ஆய்வுப் பணியை மேற்கொள்ளும் பிராமணரான பெ. சு. மணி ஒரு கம்யூனிஸ்டாக இல்லாத போதிலும், மார்க்சிய ஈடுபாடு கொண்டவர்; அவரது ஆய்வில் மார்க்சியப் பார்வை ஆழமாகத் தாக்கம் செலுத்துவதைக் காணமுடியும். அதை விடவும், அவருடன் 1987 இலிருந்து தொடர்ச்சியான கடிதத் தொடர்பு எனக்கிருந்தது. அவர் இலங்கை வரும் போது, பெரும்பாலான நாட்கள் அவரோடு தங்கிக் கலந்துரையாடியிருக்கிறேன். அவரும் இலங்கை வந்தால் முதலில் என்னை விசாரிப்பதனை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

எனது முனைவர் பட்ட ஆய்வுக்காக பெ. சு. மணி என்னோடு அலைந்த நாட்கள், செய்த உதவிகள் பற்பல. அவை பற்றியெல்லாம் இங்கு விவரிக்க வேண்டிய தில்லை. பிரதான விடயம், எனது கல்விக்குத் தன்னால் எந்தளவுக்கு உதவ முடியுமோ அதன் உச்ச அளவில் உதவுகின்ற அதேவேளை, எனது ஏனைய தொடர்புகள் மீது எந்தக் கருத்துத் திணிப்பையும் மேற்கொள்ளாமல் சுதந்திரமாக நான் இயங்குவதை அனுமதித்த பேருள்ளம் அவருடையது என்பதுதான்.

### மதமும் மார்க்சியமும் நூலாக்கத்தில்

தமிழகத்தில் எனது பிரதான பணியாகக் கற்பதும் எழுதுவதும் அமைந்திருந்த வகையில் என் புத்தகங் களை வெளியிட்ட **'சவுத் விஷன்'** பாலாஜியுடன் எனக்கிருந்த உறவு அலாதியானது. மரபான தமிழ்ப் பதிப்பாளர் போலன்றி, உண்மையில் ஒரு பதிப்பாசிரியர் கொண்டி ருக்க வேண்டிய பன்முக ஆளுமையுடன் எனது நூலாக் கங்களில் பாலாஜி ஆழமான தாக்குறவு செலுத்தியுள் ளார். இந்த எட்டு வருடங்களில் தொடர்ச்சியாக வெளி யிட்ட எனது ஐந்து நூல்களினதும் விமரிசனத் தொடர் பாடல்களை அவர் அக்கறையுடன் ஏற்படுத்தித் தந்தி ருக்கிறார். அந்த விமரிசனக் கருத்தாடல்களின் பரிணமிப் பாகவே அடுத்தடுத்த ஒவ்வொரு நூல்களும் வெளிப்பட் டன. அவை சார்ந்து அறிஞர்களோடும், தோழர்களுட னும், விமரிசகர்களோடும் பல்வேறு பிரதேசங்களது இலக்கிய அமைப்புகளுடனும் ஏற்பட்ட தொடர்பாடல் குறித்த அநுபவப் பகிர்வு சொல்லிற் பெருகும். இந்தக் கட்டுரை அமைப்புக்குள் அது அடங்க முடியாதது. அவற்றை வேறொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். அவை, தமிழகத்தில் ஏற்பட்டு வரும் மார்க்சியத்தின் மீதான எழுச்சியை வெளிப்படுத்துவன.

இந்த முயற்சிகளினூடாக விருத்தியுற்ற ஒரு உறவுப் பரிணமிப்புப் பற்றி இங்கு பதிவு செய்யலாம். என்னுடைய **'இந்துத்துவம், இந்து சமயம், சமூக மாற்றங்கள்'** என்ற நூல் 2002 இல் வெளிவந்தது. அந்த நூல் ஆர்வத்துடன் சிலரால் வரவேற்கப்பட்ட அதேவேளை, சில மார்க்சியர் கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கும் உள்ளானது. ஒரு பகுதியினர் முழு அளவில் அந்த நூலுடன் உடன் பாடு தெரிவித்துத் தொடர்ந்து **'மதமும் மார்க்சியமும்-தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை'** என்ற அடுத்த எனது நூலை எழுதுவதற்கு உத்வேக மூட்டிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பிரிவினர் பல விமரிசனங்களுடன் உடன் பட்டுத் தமது கருத்துக்களை வழங்கினர். இத்தகைய மார்க்சியத் தளத்திலான மூன்றாவது ஒரு பிரிவினர் அந்த நூலை முற்றாகவே நிராகரித்து, அது பிராமணியத்துக்கும் இந்துத்துவத்துக்குமே உதவுகிற நூல் எனச் சாடினர். இந்த மூன்றாவது கருத்து நிலைக்கு உட்பட்டவர்களில் பலரும் என்னுடனான நட்புரிமையோடு தான் தங்களது விமரிசனங்களை முன்வைத்தனர்.

இந்த மூன்றாவது அணிசார்ந்த, அல்லது இரண்டா வது நிலைப்பாட்டிலான கருத்தோடு பின் நவீனத்துவச் சிந்தனையாளரான அ. மார்க்ஸ் இடம் ஒரு கேள்வி கேட் கப்பட்டிருந்தது. அது சென்னையிலிருந்து வெளிவரும் **'கூட்டாஞ்சோறு'** சஞ்சிகைக்கு அ. மார்க்ஸ் வழங்கிய பேட்டியின் போது கேட்கப்பட்ட கேள்வி. அதன் பிரகாரம் **'இந்துத்துவம், இந்தசமயம், சமூக மாற்றங்கள்'** நூல் குறித்த தனது கருத்தை அவர் சொல்ல நேர்ந்தது. எதிர்பார்க்கக் கூடியவாறே பிராமணியத்துக்கும் இந்துத் துவத்துக்கும் உதவுகிற நூல் என்றே கூறியிருந்தார். ஒரு விடயத்தை அவர் அழுத்தியிருந்தார். இந்த நூல் இந்தியச் சிந்தனை என்பதை இந்து மதம் சார்ந்து பார்த்திருக்கிறது, இந்தியச் சிந்தனைக்குக் காத்திரமான பங்களிப்புச் செய்திருந்த சமணம், பௌத்தம் உள்ளிட்ட ஏனைய சிந்தனைப் பள்ளிகளைக் கவனத்தில் எடுக்கவில்லை; இது எனது நூல் பற்றிய மார்க்சின் கருத்து.

இந்தியச் சிந்தனை குறித்துப் பேசும் போது, இவ் வாறு பன்முகப் பங்களிப்புப் பற்றிப் பேசுவது அவசிய மானது; எனது நூலோ இந்து சமயத்திலிருந்து இந்துத்து வம் எவ்வகையில் வேறுபட்டது எனக்காட்டுவதுடன், சமூக மாற்றப் போராட்டங்களில் முற்போக்கான இந்து சமய அணிச் செயற்பாடுகளை எடுத்துக்காட்டுவதாக அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பேட்டி வெளியான மாதத்தில் இடம்பெற்ற அ. மார்க்ஸ் சார்ந்த இயக்கத்தின் கூட்டமொன்றில் அவரைச் சந்தித்த போது இதனை நான் அ. மார்க்சிடம் கூறியிருந்தேன். தவிர, சமணம் பௌத்தம் ஆகியவற்றின் பங்களிப்புக் குறித்து இப்போது எழுதி முடித்துள்ள **'மதமும் மார்க்சியமும்'** என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்திருந்தேன். (இது 2004 முடிவில் இடம் பெற்றது. அப்போது எழுதி முடித்திருப்பினும் பல்வேறு காரணங்களால் **'மதமும்.....'** நூல் 2007 தொடக்கத்திலேயே வெளிவந்தது.)

அதன் பின்னர் ஷோபாசக்தியுடன் அ. மார்க்ஸ் என் வீட்டுக்கு வந்திருந்தார். (அப்போதுதான் இந்தக்

கட்டுரைத் தொடக்கத்தில் வறட்டு மார்க்சியர் குறித்து இடம் பெற்ற உரையாடல் நடந்தது.) அதைத் தொடர்ந்து நானும் அ. மார்க்ஸ் வீட்டுக்குச் சென்று கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டேன். எங்களுக்கிடையேயான கருத்து வேறுபாடுகளைக் கடந்து ஆய்வுப் பிரச்சனைகள் தொடர்பான விமர்சனங்களைச் சுதந்திரமாகப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்வோம்.

### பின் நவீனத்துவத்திலிருந்து மார்க்சியம்

முதன் முதலாக மு. பொ. வின் நாவல் ஒன்றைப் பற்றிய விமர்சனக் கலந்துரையாடல் நிகழ்வில் அ. மார்க்சைச் சந்தித்திருந்தேன். அப்போது நண்பர் மதுசூதனன் சென்னையில் இருந்தார், அவரது அழைப்பில் அந்தக் கலந்துரையாடலுக்குச் சென்றேன். அது சில நண்பர்கள் கூடிச் சுதந்திரமாக உரையாடிய நிகழ்வு; அங்கு எனது கருத்து எத்தகைய உரசல்களையும் ஏற்படுத்தவில்லை. சம்பிரதாயக் கருத்துரைகளுக்கு அப்பால் நட்புறவான *பேச்சுவழக்கில் அ. மார்க்சின் எளிமையான பழகுந்தன்மை* இனிய அநுபவமாக அமைந்தது.

இடையிடையே கூட்டங்களில் சந்தித்த போதிலும், அதிகம் உரையாட அவகாசம் ஏற்படவில்லை. அடுத்த பிரதான தொடர்பை ஷோபாசக்தியின் **'கொரில்லா'** நாவல் விமரிசனத்தில் ஏற்படுத்த இடமிருந்தது. **'பின் நவீனத்துவமும் அழகியலும்'** என்ற எனது நூலில் (அதன் சென்னைப் பதிப்பு 2001 இல் இந்த விமரிசனக் கூட்டத்துக்கு முன்னதாக வெளிவந்தது.) அ. மார்க்சின் பின் நவீனத்துவ நிலைப்பாடு காரணமாகக் கடுமையாக அவரை விமர்சித்திருந்தேன். இருப்பினும், அவரது ஏற்பாட்டிலான **'கொரில்லா'** விமரிசனக் கூட்டத்துக்கு நான் அழைக்கப்பட்டிருந்தது வியப்பைத் தந்தது. அது பற்றிப் பேச்சின் ஆரம்பத்தில் கூறியிருந்தேன். நாவல் மீதான விமரிசனம் பின் நவீனத்துவத்தை நிராகரித்து எமது **'வறட்டு மார்க்சியத்தில்'** இருந்தது குறித்து அவர்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. எமக்கிடையேயான பார்வை வேறுபாடுகள் பற்றியன்றிப் பொதுவிடயங்கள் பற்றி எத்தகைய முடிவுகளைப் பெறுவது என்பது குறித்தாக எமது கருத்தாடல்கள் இப்போது அமைவதுண்டு.

அண்மையில் ஏ. ஜே. கனகரட்னா மறைந்ததும் மதுரையில் சுந்தர்காளி ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்துக்கு இரண்டொரு தினங்களின் முன்னரே நான் இங்கிருந்து சென்னை சென்றிருந்தேன். சென்றிருந்த நாளில் அ. மார்க்ஸ் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஏ. ஜே. குறித்துச் சில தகவல்களைக் கேட்டார், கூறினேன். "நீங்களும் மதுரை வந்தால் கூட்ட ஏற்பாட்டாளர்கள் ஏ. ஜே. உடன் பழகிய ஒருவரைப் பார்த்ததாக இருக்கும்; என்னைப் பேச அழைத்த போதிலும், எனக்கு ஏ. ஜே. உடன் எந்தப் பரிச்சயமும் இல்லை." என்று அ. மார்க்ஸ் கூறியிருந்தார். "அப்பாவின் ( K. A. சுப்பிரமணியம்) இறப்பிலும், அவர் நினைவாக வெளியான **'விடை பெறுகிறேன்'** நூல் வெளியீட்டிலும் மிகுந்த சிரமத்துடன் வந்தவர் ஏ. ஜே. மாமா, நீங்கள் கட்டாயமான கடமை என்ற உணர்வோடு மதுரை போக வேண்டும்" என்ற மனைவியின் பணிப்புரையுடன் கூட்டத்துக்குப் போயிருந்தேன்.

அந்தக் கூட்ட உரைகளில் பல தெளிவுகள் ஏற்பட முடிந்தது. அதை விடவும் கூட்டம் முடிந்த பின்னரான நண்பர்கள் ஒன்றுகூடல் பயனுள்ளதாய் அமைந்தது. அதன்போது சென்னையில் மார்க்சிய நண்பர்கள் அ. மார்க்ஸ் குறித்துக் கூறிய ஒரு கருத்தை நான் சொன்னேன். புதிய புதிய சிந்தனை வளர்ச்சிகளை இடைவிடாது படித்தவரான அ. மார்க்ஸ் அப்போது அங்கத்தவராக இருந்த மார்க்சிய அணியினுள் விவாதித்தார்; அவை பற்றித் துளியும் கவனத்திற் கொள்ளாமல் தீர்மானிக்கப் பட்ட திசை வழியிலான செயற்படல் ஒன்றே குறியெனக் கட்சி இருந்தது. செயற்பாட்டின் ஒரு பகுதியாக இந்தச் சிந்தனைத் தேடலுக்கான விவாதக் களம் ஒன்றைக் கட்சி ஏற்படுத்தியிருந்தால் அ. மார்க்ஸ் விலகிச் செல்வதைத் தவிர்த்திருக்க முடியும் என்பது நண்பர்கள் என்னிடம் கூறியிருந்த கருத்து. இதை மதுரையில் நான் சொன்ன போது அ. மார்க்ஸ் பெரிதும் அதிர்ந்தார். அப்படிச் சொன்னார்களா? என்றார். சொன்னது உண்மை. எங்கும் நீங்கள் எழுவில்லையே? என்றார். எழுதிவிட்டேன்.

அ. மார்க்ஸ் வெளிப்படுத்திய அந்த அதிர்ச்சி நான் எதிர்பாராத ஒன்று. அவர் மார்க்சியத்திலிருந்து தொலை தூரம் விலகிச் சென்றுவிட்ட ஒரு நண்பர் என்ற கருத்தே என்னிடம் இருந்தது. மார்க்சியத்திலிருந்து விலகமுடியாத அவருக்கான உயிர்ப்பான பந்தத்தையே அந்த அதிர்ச்சி காட்டியிருந்தது.

இப்போதெல்லாம் மார்க்சிய அணிகளுடன் ஐக்கியப் பட்டு அவர் செயற்படுவது அதிகரித்து வருவதைக் கவனத்திற் கொண்டிருந்தால், எனது ஆச்சரியத்திற்கு இடமில்லாமல் இருந்திருக்கும். ஐரோப்பா வரலாற்றை இழந்த நிலையில் அங்கே பின் நவீனத்துவம் தோற்றம் பெற்றது. இங்கோ மக்கள் இயக்கங்கள் வரலாற்றுக் கடமைகளைக் கையேற்கும் கட்டங்கள் வலுப் பெற்று வருகின்றன. அந்தவகையில் தமிழகத்தில் பின் நவீனத் *துவத்தை ஏற்றுக் கொண்ட போதிலும், பலவகை இயக்*கங்களுடன் தொடர்பாட வேண்டிய கட்டாயம் அ. மார்க்ஸ் போன்றோர்க்கு ஏற்பட்டுள்ளது. பின் நவீனத்துவத்தை ஏற்றுக் கொண்ட ஆரம்பத்தில் மார்க்சியத்தை முழுமையாக நிராகரிக்குமளவுக்குப் போயிருந்த போதிலும், மக்கள் இயக்கச் செயற்பாடுகள் சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மார்க்சியமே உதவ முடியும் என்ற கருத்தை இன்று வெளியிடுமாறு அ. மார்க்சை நிர்ப்பந்திக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தமிழியற் பணி பற்றி நடாத்திய மூன்று நாள் ஆய்வரங்கில் முதன் முதலில் அ. மார்க்ஸ் மேற்படி கருத்தைக் கூறியிருந்தார். தனது பின் நவீனத்துவ நாட்டத்துக்கு பேராசிரியர் சிவத்தம்பி ஆற்றுப்படுத் தியிருந்த நூல்களே காரணம் என்று கூறியிருந்த அ. மார்க்ஸ், அதன் வழியில் அவர் வளராதது குறித்து விசனம் தெரிவித்திருந்தார். அதன் வழியில் போயிருக்க முடியாதுதான், சரியான மார்க்சிய நிலைப்பாட்டை பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடர்ந்திருந்தால் அ. மார்க்சின் பல நெருக்குவாரங்களுக்கு இடமின்றியே தமிழகச் சிந்தனை வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப் புக்களை அவர்கள் இருவரும் செய்திருக்க முடியும். (அவர்கள் இருவரும் இணைந்து எண்பதுகளின் தொடக்க த்தில் எழுதிய 'பாரதி இறப்பு முதல் மகாகவி வரை' மிகச் சிறப்பானதொரு படைப்பாகும்.)

சமூகப் பிரச்சனைகளில் மார்க்சிய வழிகாட்டலை ஏற்றுக் கொண்ட போதிலும், அதற்கான நடைமுறைப் பிரயோகம், கட்சி அமைப்பு என்பன குறித்துப் பின் நவீனத் துவ நிலைப்பட்ட தவறான பார்வைகள் இன்னமும் அ. மார்க் சிடம் உண்டு. கட்சிகளிடம் தவறுகள் இல்லாமல் இல்லை, அதேவேளை, கட்சியில்லாமல் மார்க்சியப் பிரயோகம் இறுதி வெற்றி பெற முடியாது என்ற வகையில் நடை முறை ஊடாகவே தவறுகளை கட்சியினால் களைய முடியும். மார்க்சிய அமைப்புகள் எமது மக்களின் விடு தலைக்கான போராட்ட வடிவங்களைக் கண்டறிந்து, ஜன நாயக மத்தியத்தை முழு அளவில் பேணி, ஏற்படுகிற தவறுகளை உரிய தருணத்தில் திருத்தியபடி முன்னே றும் போது, இன்றைய சந்தேகங்களை அ. மார்க்ஸ் போன்றோர் கைவிட்டுக் கருத்து மாற்றத்துக்குள்ளாக இடமுண்டு.

அவசியமான மாற்றத்தை அவர் ஏற்பதற்குத் தயங்கியதில்லை என்பதற்கான ஒரு உதாரணத்தைக் காட்ட முடியும். மதுரையில் ஏ. ஜே. கனகரட்னா நினை வுக் கருத்தரங்கில் சாதியத் தகர்ப்புப் போராட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பை நான் குறிப்பிட்டிருந்தேன். அதை ஏற்காத தொனியில் அ. மார்க்ஸ் பின்னர் பேசினார். **'புது விசை'** பேட்டியில் ஷோபாசக்தியும் தலித் மக்களின் தன்னெழுச்சியான போராட்டமேயன்றிக் கட்சி எதுவும் செய்யவில்லை என்பது போலக் கூறியிருந்தார். பின்னர் சுகனுடன் அ. மார்க்ஸ் எனது வீட்டுக்கு வந்தபோது கட்சியின் பாத்திரம் எத்தகையதாக இருந்தது என்பது பற்றிப் பல விடயங் களைக் கூறினேன். தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் நடந்த கிராமங்களில் அக்காலங்களில் கட்சியின் மீது தலித் மக்கள் கொண்டிருந்த அளவு கடந்த பற்றுதலைக் கண்டது பற்றிச் சொன்னேன். (போராட்டம் முடிவுற்ற பின்னரே நான் கட்சியில் இணைந்து அந்தக் கிராமங்களு க்குச் சென்றிருந்தேன். அப்போது அவற்றை அநுபவத் தில் உணர்ந்திருந்தேன்.) அடுத்த தலைமுறையினரும், போராட்டக் கிராமங்களிலிருந்து தொலைவில் இருந்தவர் களும் இதனை அறியாமல் இருக்கக் கூடும் என்றேன். அனைத்தையும் விட அந்தப் போராட்டத்தில் எல்லாச் சாதியினரும் தீண்டாமைக்கு எதிராக ஐக்கியப்பட்டுப் போராட முடிந்தது கட்சியின் வழிநடத்துதலாலேயே சாத்தியப்பட்டது என்றேன். இவற்றைச் சுகனுக்குக் கூறியபோது அ. மார்க்ஸ் அவதானித்தபடியிருந்தார்.

இது நடந்து ஒரு மாதத்தில் அ. மார்க்ஸ் எழுதிய 'முன்னுரை' ஒன்றில் மாற்றிக் கொண்ட தனது புதிய கருத்தைப் பதிவு செய்திருந்தார். **'தீண்டத் தகாதவன் முதலிய 14 ஈழத்தலித் சிறுகதைகள்'** என்ற சுகன் தொகுத்து வெளியிட்ட நூலின் முன்னுரையில், தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் உயர் சாதியினரது பங்கேற்பைச் சாத்தியப்படுத்தியது கம்யூனிஸ்ட் கட்சியே என்று அ. மார்க்ஸ் குறிப்பிட்டிருந்தார். இன்னுமொரு மாற்றத்துக் கும் அவர் வரவேண்டியுள்ளது. ஆரம்பத்திலிருந்தே வெறும் தன்னெழுச்சியான போராட்டத்தில் தலித் மக்கள் மட்டும் போராடி வரவில்லை. போராட அறைகூவும் ஒருமுகப்பட்ட முற்போக்கான அரசியல் ஸ்தாபனம் வடிவப்படுத்திய தீர்மானங்கள் செயற்றபட்டதின் தொடர்ச் சியே தலித் மக்களின் ஒருங்கமைக்கப்பட்ட வெற்றிகர மான போராட்டங்களாய் அமைந்திருந்தன. முன்னதாக உதிரியான தன்னெழுச்சிகள் இடம்பெற்ற போதிலும், இருபதுகளில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசும், முப்பது களில் சமசமாசக் கட்சியும், நாற்பதுகளில் கம்யூனிஸ்ட் கட்சியும் உதயமான நிலையிலிருந்து முப்பது நாற்பது களில் தலித் மக்களின் எழுச்சி வெற்றிகளை ஈட்டத்தக்க ஒழுங்கமைந்த வடிவங்களைப் பெற முடிந்தது. அவ்வாறே அறுபதுகளில் ஆயுதங்களால் ஒடுக்க முனைந்த சாதி வெறியர்களை முறியடித்து ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதமேந்திப் போராட வழி நடத்தியதில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சண் பிரிவு)க்கு இருந்த பாத்திரம் மிகக் கனதியானது. கட்சி அமைப்புக் குறித்து, பின் நவீனத்துவப் பார்வை தெளிவீனங்களை ஏற்படுத்தியுள்ள தால், தலித் மக்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்திய தில் கட்சியின் பங்குப் பாத்திரத்தை அறிய முடியாத வராயுள்ளார் அ. மார்க்ஸ். இந்த மாற்றமும் அவரிடம் ஏற்படும்.

இத்தகைய நம்பிக்கையை வெளியிடுவதற்கு அவரு டனான என் தொடர்பாடலில் நான் அவரைக் கருத்தியல் மாற்றங்களூடாகக் கண்டு வந்த நட்புத்தான் காரணமாய் அமைகிறது. பின் நவீனத்துவப் பிரச்சாரத்தை முன்னெ டுத்த ஆரம்பத்தில் பாரதி குறித்துப் பல மாறுபட்ட கருத்துக் களைக் கொண்டிருந்தார். எங்களிடையேயான தொடர்

பின் பின் பல சந்தர்ப்பங்களில் பாரதியின் செயற்பாடுகள் குறித்து நான் விவாதித்திருக்கிறேன். அவரும் சுயமாக பாரதியை மதிப்பிட்டார். இன்று பாரதியின் பன்மைத்துவப் பார்வைகள், முழுமையான மக்கள் விடுதலை குறித்த பாரதி நிலைப்பாடு என்பன பற்றி அவர் பேசியும் எழுதியும் வருகிறார். பாரதிதாசனிடம் பாரதியளவில் பன்மைத்து வம் இருக்கவில்லை என்பதை அ. மார்க்ஸ் சொல்லத் தவறவில்லை.

அ. மார்க்சிடம் ஏற்பட்டு வந்த மாற்றங்களை இந்திய வரலாற்றுச் செல்நெறியோடு இணைத்து நோக்கும் ஒருவருக்கு இந்தியாவில் மார்க்சியம் எத்தனை வீச்சுடன் எழுச்சி பெற்று வருகிறது என்பதைக் கண்டுணர முடியும். இதனை கூட, இருந்து கண்டனுபவிக்க முடிந்தது எனக்கான நல்ல வாய்ப்பு. இன்னும் பல நண்பர்க ளோடான தொடர்பாடல்கள் மார்க்சியத்தின் உயிர்ப்பான வளர்ச்சியை அழுத்தியுரைப்பனவாக அமைந்தன. எங்களுக்கான மீள் சக்தி வழங்கலாக அந்த நினைவுகள் நீடிக்கும்.


**மேலும்– ஒரு பிற்குறிப்பு**

மார்க்சிய அணிகள் மீதான அ. மார்க்சின் விமரி சனம் தனியே அமைப்புச் சார்ந்தது மட்டுமல்ல. சமூகப் பிரச்சனைகளின் பன்மைப் பரிமாணங்களைக் கம்யூனி ஸ்ட் கட்சிகள் கவனத்திற் கொள்ளாதமை சார்ந்தது மாகும். வெறும் முதலாளி- தொழிலாளி வர்க்கங்களி னிடையேயான முரண்பாட்டை மட்டும் முனைப்பாக்கி யதில் தவறுண்டு. இது மார்க்சிய ஆய்வு முறையியலின் போதாமை சார்ந்ததல்ல. **'முரண்பாடு பற்றி'** மாஓ விளக்கு கையில் பல்வேறு முரண்பாடுகளையும் கவனத்திற் கொள்வதற்கு வழிப்படுத்தியிருந்தார். தலித், பெண், தேசியப் பிரச்சனைகளுக்கு அதனைப் பிரயோக்கி த்திருக்க வேண்டும். பின் நவீனத்துச் சிந்தனைப் போக்கு களை உள்வாங்கிய அ. மார்க்ஸ் மார்க்சியச் சிந்தனை முறையியலின் வழிகாட்டல் சார்ந்து தனது விமர்சன ங்களை முன்வைக்கும் போது சமூக மாற்றச் சக்திகளால் மேலும் கவனத்திற் கொள்ளப்பட இடமுண்டு.

வேறு சிந்தனைத் தளங்களை அறியத் தருவதைப் பாவச் செயலாகக் கருத வேண்டியதில்லை. மார்க்சிய உச்சாடனம் செய்கிற எல்லோருமே கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சிக்கு .உதவுகிறார்கள் என்பதற்கும் இல்லை. மார்க்சியப் பாராயணம் செய்து பலரது உதாரணங்களால் மார்க்சியத்தைச் சந்தேகிக்கிறவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் மறுந்து விட முடியாது.



# குட்டிக் கவிதைகள்



**சூரியன்**

மின்சாரம் இல்லாமல்
ஒளிரும் வான் விளக்கு

**வானவில்**

நிறங்களை நிரூபிக்க இயற்கை காட்டும்
இலவச விளம்பரம்

**மழை**

பூமியின் நிலை கண்டு
இரங்கும் வான் துயரின் அழுகை!

**வாழ்க்கை**

பிறப்பையும் இறப்பையும்
இணைக்கின்ற பயணம்

**தோல்வி**

வாழ்க்கையில் நிறையப் பேருக்குக்
கிடைக்கின்ற அதிர்ஷ்டம்!

**மரணம்**

மனித குலத்திற்கு இறுதியாக வந்துதவும்
இலவசப் பயணம்!

- மணி

# அவர்கள் இருவர்

**-க. சட்டநாதன்**




அதை அவன் நம்பவில்லை. சுலபமாக, சிரமம் ஏதுமில்லாமல் கிடைக்குமென்றால் இப்படி நாயாக அலைந்திருக்க வேண்டாமே என்றிருந்தது அவனுக்கு.

ஏ. ஏல் பாஸ் பண்ணி, மேலே படிக்க முடியாமல் போனதால்- வேலை தேடி அலைந்தான். எத்தனை பிரமுகர்களின் சிபார்சுகள்! எல்லாமே வியர்த்தமாய்ப் போன நிலையில்- வரேந்திரன் வந்து, "வர்த்தக வங்கியில் பயிலுநர் தர லிகிதர்களுக்கு வேக்கன்ஸி இருக்கு" என்ற பொழுது- இவன் நம்பிக்கை அற்றவனாய்; அசட்டுச் சிரிப்பையே பதிலாகத் தந்தான்.

வரேந்திரன் வேலை பற்றிக் கதைத்து ஒரு கிழமைக்குள்ளாகவே, அவனை வங்கிக்கு வருமாறு அழைத்து- நேர்முகமானதும்- நியமனக் கடிதத்தைக் கொடுத்தார்கள்.



முகாமையாளரிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பொழுது, அவரது கரங்களை இவன் நன்றி உணர்வுடன் இறுக்கமாகவே பற்றிக் கொண்டான்.

சந்தோஷத்தில் எதுவுமே பேசமுடியவில்லை.

குரல் நெகிழ்ந்து உடைய இவன் கேட்டான்: "மிஸ்டர் வரேந்திரன்"

"புதன் வேலைக்கு வருவார் பாருங்கள்."

"சரி ஸேர்....."

இவன் எழுந்ததும்- அவரும் எழுந்து, இவனது கரங்களைக் குலுக்கி விடை தந்தார்.

இவை எல்லாமே அவனுக்கு மிகுந்த நெகிழ்ச்சியையும், பரவசத்தையும் தந்தன.

மாதச் சம்பளம் பத்தாயிரத்து முந்நூறு ரூபாய், லிகிதர்தரம் IIக்கான திரட்டிய வேதனம். மூன்று வருடங்களுக்குப் பின்னர் நிரந்தரமானதும் பதினேழாயிரத்து அறுநூறு ரூபாய்- வருடாந்தப் படியாக நாநூற்றியிருபது, பத்து ஆண்டுகளுக்கு.

அவனுக்கு உடம்பு லேசாகி, காற்றில் மிதப்பது போலிருந்தது.

திடீரென அவனுக்கு ரஞ்சியின் ஞாபகம் வந்தது.

'ரஞ்சி இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பாள்? உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாத- புரிந்து கொண்டாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாத பெட்டை அவள். எந்தச் சந்தர்ப்பத்திலும் அழுத்தமான முகபாவங்களுடன், இயல்பாக அவளால் எப்படிப் பேசமுடிகிறது!'

எட்டாத உயரத்தில், காதல் பற்றிய அவளுக்கே உரிய கருத்துக்களுடனும், வரன்முறைகளுடனும் ராணி மாதிரி அவள் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

கூடவே தனம் மாமியின் ஞாபகமும் அவனுக்கு வந்தது.

♦♦♦♦♦♦

ஒரு வருஷம் இருக்கும்....? இருக்கும். சூரியன் நன்றாகவே மேற்கே சரிந்து விழுந்து கிடந்தான். வானம் மேற்குச் சாய்வில் செம்பொன்னாய் வழிந்த படி.... அன்று மாலை மாமி வீட்டிலில்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னர் இவன், ரஞ்சியை நெருங்கித் தனது காதலை வெளியிட்டான், அதுவும் தனிமையில்.

உதட்டில் மெதுவாக நெகிழ்ந்து உடையும் முறுவலைத் தவிர- வேறு எதுவித எதிர்வினையையும் அவள் அப்பொழுது காட்டவில்லை.

அவள் எழுந்து, கூடத்துச் சுவரோடு சாய்ந்தபடி நின்றாள். கைகள் அற்ற நீண்ட 'கவுண்' போட்டிருந்தாள். உடலோடு ஒட்டிய அந்தக் 'கவுண்' அவளுக்கு அழகாக இருந்தது.

எழுந்தவன், அவளை நெருங்கி நின்று கொண்டான். அவனது உயரத்துக்கே அவள் வளர்ந்தி கொண்டிருந்தாள். பளிச்சிடும் தாமிர நிறத்தில், தாங்கியிருக்கும் பூங்கொத்தாய் அவள் குலுங்கினாள். அவிழ்ந்து தழையும் கூந்தலில் அவன் கண்கள் சிக்கித் தவித்தன. நீண்ட கழுத்திலும், திரட்சியான உதடுகளிலும் முத்தமிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு,

"ரஞ்சி!" என்று உணர்ச்சி வசப்பட்டவனாய் அவளது வலது கரத்தைப் பற்றி அழுத்தினான். அவள் எதுவித பதட்டமும் அடையாதவளாய், நிதானமாக:

"சிவா.... இது.... இதென்ன...? வேண்டாமே..... சின்னப்பிள்ளையளைப் போல முதிர்ச்சி ஏதுமில்லாமல்...."

நிதானமாகப் பேசியவள், தனது கைகளை அவனது கரங்களிலிருந்து எளிதாக விடுவித்துக் கொண்டு, வீட்டின் உள்ளாக நகர்ந்தாள்.

அவன், அங்கு நிற்பதற்கே தயக்கம் கொண்டு, மனம் குழம்பிய நிலையில், வீட்டைப் பார்த்து நடந்தான்.

அதன் பின்னர், தனம் மாமி வீட்டுப் பக்கம் போவதைத் தவிர்த்துக் கொண்டான்.

எதற்குமே பிடி கொடாமல், நழுவி ஓடும் ரஞ்சியைத் தட்டு மறித்துக் காதல் செய்ய அவனால் முடியவில்லை. காலம் அவளது மனதைக் கனிய வைக்கும் எனும் எதிர்பார்ப்பு அவனுக்கு இருந்தது.

♦♦♦♦♦♦

அன்று சோமவாரம். சிவன் கோயிலிலிருந்து அவன் வெளியே வந்த பொழுது:

"அதாரது, எங்கட சிவாவே....."

கண்கள் விரிந்து சிரிக்க, கூவிய தனம் மாமி இவன் எதிராக வந்தாள். அவளுக்குப் பின்னால் அவனது தேவதை. அடுத்துக் கமலா, கலா நான்கு பேரும் நின்றார்கள்.

"வீட்டுப் பக்கம் ஏன் வாறேல்லை.... நேரம் கிடைக்கேக்கை வந்து போமன்...."

'எல்லாமே உங்கள் செல்ல மகளால் தான் வந்தது', என்று அவனுக்குச் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால், எதுவுமே பேசாது ரஞ்சியைப் பார்த்தான். அவள் இவனைக் கண்டு கொள்ளாத பாவனையில் எங்கோ பராக்குப் பார்த்தபடி நின்றாள்.

அவசர அவசரமாக விடை பெறுவதைத் தவிர அவனுக்கு அப்பொழுது எதுவும் செய்ய முடியவில்லை.

♦♦♦♦♦♦

நாலு நாள் கழித்து, அவன் மாமி வீட்டுப் பக்கம் போனான்- வீட்டில் ரஞ்சி மட்டுமல்ல, மாமியும் இருந்தாள்.

இவனைக் கண்டதும் மாமி ஆரையூரையாக வரவேற்றாள். ரஞ்சி வழமை போல இவன் வந்ததைக் கூடக் கவனம் கொள்ளாது, ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்து போயிருந்தாள்.

'என்ன புத்தகமது.... தன்னை மறந்து லயித்துப் போற மாதிரி..... காதல் கதையாகத்தான் இருக்கும்.' என இவன் நினைத்துக் கொண்டான்.

மாமி தான் முதலிப் பேசத் தொடங்கினாள்:

''ரஞ்சி எல்லாம் சொன்னவ தம்பி.....'' என்று ஆரம்பித்ததுமே இவனுக்கு வேர்த்துக் கொட்டியது. 'ரஞ்சி இவ்வளவு அசடா.... எதைச் சொல்வது எதை விடுவது என்ற விவஸ்தை கூட இல்லாத பெண்ணா இவள்!'

"உமக்கு விருப்பமெண்டா நடக்கிற மாதிரி எல்லாம் நடக்கும் தானே தம்பி..... இல்ல, ஒரு உத்தியோகம் அது இதெண்டில்லாமல் இந்த ஆசையில மனசை அலைய விடேலுமா...... முதலிலை ஒரு உத்தியோகத்துக்குத் தான் முயற்சி செய்ய வேணும்..... உம்மடை விருப்பத்துக்கு மாறா அண்ணரும் மச்சாளும் வரப் போகினமா...? அப்பிடி இப்பிடி எண்டாலும் அவையளைச் சரிக்கட்டலாம். எதுக்கும் முதலில ஒரு முயற்சி வேணும்..... உழைப்புப் பிழைப்பு இல்லாமல் இருக்கேலுமா?"

ரஞ்சி எழுந்து உள்ளே போனாள்.

"மாமி...! உத்தியோகம் கிடைச்ச பிறகுதான் எல்லாம்... சும்மா நான் கதைச்சதை ரஞ்சி பெரிசு படுத்தி உங்களிட்டைச் சொல்லுவா எண்டு நான் நினைக்கேல்லை..."

வெட்கத்துடன் அவன் விளக்கம் தந்தான்.

''இப்ப சொன்னால் என்ன, எப்ப சொன்னால் என்ன ராசா.... சொல்ல வேண்டிய விஷயந்தானே. என்ரை பிள்ளையள் எனக்குத் தெரியாம எதுவுமே செய்யாதுகள்... ஒரு துரால்லைக் கூட நகர்த்தாதுகள். அப்பிடி ஒரு வளர்ப்பு வளர்த்திருக்கிறன். அவர் இல்லையெண்டு பிள்ளையளுக்கு ஒரு குறை கிறை வைச்சிருக்கிறனா.....? தகப்பனைத் தின்னியள் போலவே என்ரை பிள்ளையளை நான் வளர்த்திருக்கிறன்..... இல்லை ராசா.... ரஞ்சி ட்ரெயினிங் கொலிச்சிலை இருக்கிறாள். மற்றவள் ஏ. எல் படிக்கிறாள். சின்னவள் கலா ஆண்டு ஒன்பது. என்ரை பிள்ளையளுக்கு எது இல்லை எண்டாலும் படிப்பு அதுகளைக் காப்பாத்தும் தம்பி.....!"

உள்ளே போன ரஞ்சி எவர் சில்வர்ரேயில்- ரம்ளரில், பாற் கோப்பி கொண்டு வந்தாள். கோப்பியை எடுத்தபடி இவன் ரஞ்சியைப் பார்த்தான்.

அவளது கண்கள் மலர்ந்து சிரித்தன. உதட்டோரம் கீறலாய் உடையும் அந்த மெல்லிய முறுவல். அவளது திரண்டு சிவந்த உதடுகளில் ஈரப் பசுமை!

இவன் உணர்ச்சி வசப்பட்டான்.

இங்கிதம் தெரிந்த தனம் மாமி எழுந்து உள்ளே போனாள்.

ரஞ்சியைப் பார்த்து இவன் கேட்டான்: "ரஞ்சிக்கு என்னிலை விருப்பமா.....?"

"உங்களுக்கு ஒரு ஷொக் ரீட்மெண்ட் கொடுத்தும் நீங்கள் வழிக்கு வாறதாத் தெரியேல்லை..... உங்கடை மனோரீதியக் கனவுகள் கலையத் தான் அம்மாட்டைச் சொன்னனான்..... வேணுமெண்டுதான் சொன்னனான்..... அந்த விசர் மனிசியும் ஏதோ மகளுக்குத் தாலி கட்டின ஆசை மருமகனோடை கதைக்கிறது போலக் கதைக்குது...."

இவன் மனதளவில் சோர்ந்து போனவனாய்க் கேட்டான்: "மனோரீதியம் எண்டா என்ன ரஞ்சி....? உங்களுக்கு விளங்கிற மாதிரிச் சொல்லட்டா.... விடலைப் பட்ட சேவல், பெட்டைக் கோழியைத் துரத்துமே.... அது மாதிரித் தான் நீங்க என்னை......, சிவா.... இது..... இதொரு சீரழிஞ்ச நிலை. காதல் இப்படிக் கொட்டிச் சிந்தி, உணர்ச்சி வசப்படிற விஷயமா...? ஆண்மை அதன் வசீகரங்களோடை, பெண்மையை நாடிற மாதிரி எனக்குப் படேல்லை...."

அவள் ஒரு விசித்திரமான அழுத்தத்துடன் தலையைச் சற்றுச் சாய்த்து, சிரித்தபடி இதனைச் சொன்னாள்.

அலட்சியமும், கேலியும் அவளது கண்களில் தெரிந்தன. அவளது கண்களைச் சந்திக்க விரும்பாமலே அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

'சின்னப் பெட்டை.... விசரி.... அம்மாவைக் கேட்டுக் காதல் செய்யும் அசடு... என நினைச்சன்..... ஆனால், அப்படி இல்லை என்று காட்டி நிற்கும் இந்த ஆழமான பெண்ணுடன் எனது காதல் சரிவருமா....?'

அவனுக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது.

இந்தச் சந்திப்பு அவனையும் அவளையும் வெகு தூரம் வரை பிரித்து விட்டதை மனம் கொண்டவன், அவளது ஆளுமையின் வலுவுக்குச் சமதையாகத் தன்னால் உயர முடியுமா? எனக் கலங்கவும் செய்தான்.

அவனைப் பொறுத்தவரை எல்லாமே முடிந்து விட்டதாகவே தோன்றியது. ரஞ்சியின் நினைவுகளையும் அவள் பால் சுமந்து சுரந்து நிற்கும் காதலையும் நெஞ்சில் இருந்து அழித்துவிட வேண்டியதுதான் என அப்பொழுது அவன் நினைத்துக் கொண்டான்.

♦♦♦♦♦♦

அந்த நிகழ்ச்சியின் பின்னர், அவளைச் சந்திப்பதையே அவன் பெருமளவு தவிர்த்துக் கொண்டான். ஒரு சமயம் அவன் எதிர்பாராத வேளை, அவளாகவே அவனை நாடி, அவனது வீடு வரை வந்தது, அவனுக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது.

வந்தவள், வழமைக்கு மாறாகத் தனது குரலைச் சற்று உயர்த்திப் பேசினாள். அந்தப் பேச்சு அவனுக்கு மேலும் வியப்பைத் தந்தது.

"முடிச்சா ஆசை மச்சாள் ரஞ்சியைத்தான் முடிப்பன் எண்டு ஊரெல்லாம் தம்பட்டம் அடிச்சாச்சுப் போல....."

"ரஞ்சி.....?"

"இல்ல, உங்க ஃப்ரண்ட சீலன், நாலஞ்சு காவாலியளோடை ஆலடிச் சந்தியிலை நிண்டு.... போகேக்கையும் வரேக்கையும் சிவாவின்ரை சரக்குப் போகுதடா.... ம் ...... பாருங்கடா எண்டு சொல்லிறார்......அதுதான்.....!"

அவனுக்கு சீலை நழுவியது போலிருந்தது. அவளைச் சமாதானப்படுத்த வார்த்தைகளே கிடைக்காமல் தவித்த பொழுது- அவள் தொடர்ந்து கேட்டாள்: "சரக்கு எண்டால் என்ன.....? சரியான மோசமா..... வல்கரா இருக்கே....."

'அவளது மனசு கூசும்படி சீலன் நடந்திருக்கு வேண்டாமே' என நினைத்துக் கொள்வதைத் தவிர, அவனால் அப்பொழுது எதுவும் செய்ய முடியவில்லை.

"வாழ்க்கை எவ்வளவு நெருக்கடி மிக்கதாக எங்களுக்கு ஆகிவிட்டது. எவ்வளவு சிரமங்கள், இழப்புக்கள் இவையளுக்கு மத்தியிலையும் தேசியம், விடுதலை எண்டு- மிகப் பொறுப்போடை சில இளைஞர்களாவது சிந்திக்கிறாங்களே....! அது சந்தோஷமா இருக்கு. இந்த உணர்வு.... இந்த அலை.... எத்தனை மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கு. பெண்மை பற்றிய தற்குறித்தனமான கருத்துக்களும் எண்ணங்களும் சிறுகச் சிறுகத் தகர்ந்து வாற சூழல் இது.... இந்தச் சூழலிலை, மன ஆரோக்கியம் இல்லாத உங்களது நண்பர்களை என்னாலை புரிஞ்சு கொள்ள முடியேல்லைச் சிவா.....! பொம்பிளப் பொறுக்கியள் உங்களது நண்பர்களா இருப்பதையும் என்னாலை செரிச்சுக் கொள்ள முடியேல்லை..."

"நோ.... அப்பிடியில்ல ரஞ்சி, ஏதோ வேடிக்கையாகச் சொல்லியிருப்பான்...."

"வேடிக்கையா......? இதிலை என்ன வேடிக்கை... மனசிலை இருக்கிறதுதான் உதட்டில வரும். இதுக்கு ஒரு சப்பைக்கட்டு வேறையா......"

“மன்னிச்சிடு ரஞ்சி!”

“இதிலை என்ன மன்னிக்க இருக்கு..... எதுக்கும் உங்க நண்பருக்கு உறைக்கிற மாதிரி நாலு வார்த்தை சொல்லி வையுங்க. அது போதும்.....” என்றவள், அவனது கையில் இருந்த புத்தகத்தை வாங்கிப் பார்த்து விட்டு, “உங்களுக்கு வாசிக்கிற பழக்கமும் இருக்கா....! என்ன ‘காவியமோ ஓவியமோ’.... ரமணிச்சந்திரன் தான் உங்க ஃபேவரிட் ரைட்டரா....? ” என்று கேட்டாள்.

அவன் மௌனமாக இருந்தான். அவனது மௌனம் அவளை பேசத் தூண்டியது.

“இந்தக் குப்பையளைப் படிச்சா..... உங்களுக்குக் குழப்பமாகத் தானிருக்கும். ரோமான்றிக்கா காதலிக்கத் தான் வரும்.... போலியா உணர்ச்சி வசப்படுறதுக்கு அசல் கஞ்சா இந்தப் புத்தகங்கள்.”

“ஸோ.... உணர்ச்சிவசப்படுறதே உனக்கு கேவல மாப் படுகுதா.....?”

“சொல்லுங்க.....”

“உணர்ச்சிகளை காற்புள்ளி, அரைப்புள்ளி, தரிப்பு என்று நிறுத்தற் குறியீடுகளைப் போட்டுக் கட்டுப்படுத்த எனக்குத் தெரியாது ரஞ்சி.....”

“எனக்கு ஒரு கனிவான பார்வை..... இசைவான ஸ்பரிசம்.... நெகிழ்ந்து சிலிர்த்து உதிரும் கண்ணீர் இவை எல்லாம் பிடிக்கும்..... இதை நீ உணர்ச்சி வசப்படுவதாய் சொன்னால் நான் அதற்கு என்ன சொல்ல முடியும்.....”

“Bluff, கொஞ்சம் பிதற்றாமல் இருங்க.... நான் சொல்லிறதை விளங்கிக் கொள்ளுங்க.... உணர்ச்சி வசப்பட வேண்டாமெண்டு நான் சொல்லேல்லை. நிதானம் தப்பின அவசரம் வேண்டாம் எண்டு தான் சொல்லிறன்.....”

“நல்ல புத்தகங்கள் சிலது என்னட்டக் கிடக்கு... வீட்டுப் பக்கம் வந்தா எடுத்துப் படியுங்க... படிப்பும் ரசனையும் உயர்வானதா இருக்க வேணும். நல்ல கலைகளுக்கு முகம் கொடுக்கிற போது.... நமது மனசும் உணர்வுகளும் மேன்மைப்படும். வாழ்வும் சுவையும் அர்த்தமும் நிரம்பியதாக ஆகிவரும்......”

அவள் பேசுவதையே அவன் கேட்டபடி இருந்தான்.

‘இவள் தனது தொடர்புகளை மீளவும் புதுப்பித்துக் கொள்ள விரும்புகிறாளா? என்ன..... என்ன இது... கை நழுவிய பொருள் மீளவும் காலடியில் வந்து விழுமா....?’

“என்ன சிவா..... என்ன அப்படி ஒரு ஆழ்ந்த பார்வை. போர் அடிக்குதா.....? ஸொரி.... பேசுவது எனக்குப் பிடிக் கும். அதுதான் இப்படி.... சரி அம்மா தேடுவா, நான் வரட்டுமா....?”

அவள் திடீரென அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

♦♦♦♦♦♦

வங்கி வாசலில் சைக்கிளில் ஏறியவனுக்கு இந்த உலகமே இனிமை நிறைந்ததாகவும் - உலகத்து மனிதர்கள் அனைவரும் மிகவும் நல்லவர்களாகவும் தோன்றினார்கள்.

வரேந்திரனை- அவரது வீடு வரை சென்று- சந்தித்து நன்றி கூறிக் கொள்ள வேண்டும் என நினைத்தவன், அவரிடம் செல்லாது, வீட்டைப் பார்த்து சைக்கிளை மிதித்தான்.

ஐயாவையும் அம்மாவையும் தான் முதலில் அவனுக்குப் பார்க்க வேணும் போல இருந்தது. செய்தி கேட்டதும்- அவர்கள் அடைந்த மகிழ்ச்சியில் நனைந்த வன்; குளித்து மத்தியானச் சாப்பாடானதும் குட்டித் தூக் கம் போட்டுவிட்டு, தனம் மாமி வீட்டுப் பக்கம் போனான்.

மாமி தலை வாசலில் சீமெந்துத் தரையில் படுத்துக் கிடந்தாள். இவனது குரலைக் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள். உள்ளே குரல் கொடுத்தாள்.

“ரஞ்சி ஆர் வந்திருக்கினை. வந்து பார் பிள்ளை.”

ரஞ்சி வெளியே வந்தாள். தூங்கி எழுந்து வந்ததால் ஒரு சோபிதம் அவளில் மிளிர்ந்தது. கண்களில் என்றுமி ல்லாதவாறு கனிவு. இது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ரஞ்சி எதுவும் பேசாமல் இருக்க மாமி தான் கேட்டாள்:

“தம்பிக்கு உத்தியோகம் கிடைச்சிருக்காம். சந்தோ ஷம். மிஸ்டர் வரேந்திரன் தான் எல்லாம் செய்தவரே... கமலா சொன்னாள்.”

கமலா வரேந்திரனிடம் வர்த்தகம் படிக்கப் போவது பளிச்சென இவனுக்கு ஞாபகம் வந்தது.

ரஞ்சி எழுந்து உள்ளே போனாள்.

“ரஞ்சியில தம்பிக்குச் சரியான விருப்பமெண்டு எனக்குத் தெரியும். என்ன செய்யேலும் ராசா.... எல்லாம் விதிச்சபடிதானே நடக்கும். எங்கட கையிலை என்ன இருக்கு......”

“என்ன மாமி.....?”

“அவளுக்கு ஒரு பேச்சுக் கால் வந்தது. நல்ல இடம். என்ரை பெட்டையின்ரை வடிவில மாப்பிள்ளை கிறங்கிப் போய்ச் சம்மதம் சொல்லீற்றார். காலையிலை தான் சிவன் கோயிலிலை வைச்சுப் பொம்பிளை பார்த்தவர். ரஞ்சிக்குத் தெரியாமல்த்தான் இந்த ஏற்பாடு. தெரிஞ்சதும்

அவள் குதிச்ச குதி..... 'என்ன கூத்திது சந்தைக்கு மாடு சாய்க்கிற மாதிரி...' எண்டு என்னிலை பாய்ஞ்சு விழுந் தாள். இப்ப எல்லாம் சரியாப் போச்சு..... அவளுக்கும் விருப்பம் தான். பொடியன் கொழும்பிலை தான் உத்தியோகம். போர்ட் அதோரிட்டியில சீனியர் எஞ்சி னியர். சீதனம் அதிகமில்லை. வீடு வளவும் நகையும். என்ரை சீமான்.... அதுதான் உன்ரை மாமா உழைச்ச திலை இந்த வீடு வளவு மிஞ்சினது பெட்டைக்கு நல்ல தாய்ப் போச்சுது. இது விஷயம் ஒருத்தருக்கும் சொல் லேல்லைத் தம்பி.... காதும் காதும் வைச்சாப்பிலை தான் எல்லா விஷயமும் நடக்குது."

மாமி எல்லாவற்றையுமே மறந்து போனவளாய், மூன்றாம் மனிதரிடம் பேசுவது போலப் பேசியது அவனு க்கு எரிச்சலூட்டியது.

"இரு தம்பி கோப்பி குடிச்சிட்டுப் போகலாம்."

அவளை அப்படியே, அந்த இடத்திலேயே கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் போலிருந்தது அவனுக்கு. எதுவும் பேசாமல் விசுக்கென எழுந்தவன், வேகமாக வெளியே நடந்தான். அவனுக்கு எல்லாமே சூனியமாக இருந்தது. இருட்டில் திசை தவறிய பதகளிப்பும் பதட்ட மும் அவனுள் நிறைந்தது.

'மாமி தன்ரை மனக்கிடக்கையை.... விருப்பத்தை..... *கொட்டிக் காட்டின மாதிரி, ஏன் ரஞ்சியாலை முடியேல்லை....* அவளுக்கென்று ரசனைகள் இருப்பது போல, விருப்பு வெறுப்புகள் இருக்காதா....? தனது அன்பை மனம் திறந்து சொன்னால் என்ன வாயா வெந்துவிடும். பட்டும் படாமலும் எத்தனை நாள் இப்படி.....! எனது ரசனைகள், அவளது ரசனைகளுடன் சமதையாக இல்லாமலிருக் கலாம். ஆனால், அவளது உடனிருப்பும்.... அவளது புத்தகங்களும்.... என்னில ஏற்படுத்தியுள்ள மாற்றத்தை நுட்பமா அவள் இனங்கண்டு, கனம் பண்ண முடிந்த சந்தர்ப்பங்கள் எத்தனை. இதெல்லாம் பொய்மையும் பசப்பும் நிரம்பியவையா? மாமியைப் புரிந்து கொள்ள முடிகிறது... ஆனால், ரஞ்சியை- அவள் நகர்த்தும் காய்கள்....! அவள் அநுசரணையாக ஆதரவாக ஏன் இருக்கக் கூடாது. அவள் காட்டும் எதிர்வினைகள் ஏன் பாதகமாய் இருக்க வேணும்....?'

சிந்தனை வசப்பட்டவனாய், சைக்கிளை உருட்டி யபடி, ஒழுங்கை முகப்பில் திரும்பிய பொழுது- எதிரில் வேம்படி வயிரவர் இவனைப் பார்த்துச் சிரிப்பது போலிரு ந்தது. 'ரஞ்சியின் காதலை யாசித்து அவரிடம் எத்தனை முறையீடுகள். நேர்த்திக் கடன்கள். அவை எல்லாமே அர்த்தமில்லாமல் போய்விட்டனவா....?'

இருள் கோயிற் கட்டிடத்தைச் சுற்றி அப்பிக்கிடந்தது. வயிரவருக்கு முன்பாகச் சிறிய தூண்டாமணி விளக்கு மினுக் மினுக் என எரிந்து கொண்டிருந்தது.

வயிரவரை வணங்கி நிமிர்ந்த பொழுது, கோயிலின் மேற்குப் பக்கமாக, 'ஆரது... ஆருடைய உருவம்? மங்கலாக...'

"சிவா.....!"

யாரோ அழைப்பது போலிருந்தது.

குரலில் ரஞ்சி என்று அவனுக்குத் தெரிந்தது.

சைக்கிளை இழுத்துப் புதர்களின் நடுவே தள்ளிவிட்டு, அவளை நோக்கி விரைந்து சென்றான்.

நெருங்கி வந்த அவனை, தீர்க்கமாகப் பார்த்த ரஞ்சி கேட்டாள்: "போட்ட கோப்பியைக் கூடக் குடிக்காமல் அப்படி என்ன அவசரம்?"

"இல்ல... உங்க அம்மா உனக்கு மாப்பிளை பார்க் கிறா... அதுக்குப் பிறகும்...."

"அம்மாவுக்குச் சணப்பித்தம் சணச்சித்தம்- அவ வின்ரை கதையைப் பெரிசா எடுக்கிற உங்களை..."

"ரஞ்சி!"

"நமது காரியம் நடக்கும்.... அவசரப்படாதேங்க... என்ரை ரீச்சர் ட்ரெயினிங் முடியட்டும். உங்கட உத்தி *யோகமும்* நிரந்தரமாகட்டும். உங்களை இந்தப் பெட்டை ஏமாத்த மாட்டாள்."

"ரஞ்சீ....!"

தொடர்ந்து ஏதேதோ சொன்னவன் அவளை நெருங்கி வந்து, அவளது கரங்களை எடுத்து, மெதுவாக முத்த மிட்டான்.

அவனது விழிகளில் அரும்பிய கண்ணீரைக் கண்ட தும்- "என்ன சிவா இது...! இந்தப் பெட்டையில அப்படி என்ன இருக்குது...."

"எல்லாம் இருக்குது..." என்றவன் அவளை மென் மையாக அணைத்துக் கொள்ளவும் செய்தான்.

அவனது அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவள், கோயிலின் பின்புறமாக நகர்ந்தாள். அவள் போவதையே விழி அகற்றாமல் அவன் பார்த்தபடி நின்றான்.

சிறிது தூரம் சென்ற ரஞ்சி அவனை ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வை, அவனுக்கு- அவளது நிரம்பிய காதலை உணர்த்தி இருக்க வேண்டும்.

காற்றில் மிதப்பதான ஓர் உணர்வு அவனை அப் பொழுது அணைத்துக் கொண்டது.

# மனிதம் இன்னும் மரித்திடவில்லை

ச. முருகானந்தன்




தபாற் கந்தோரில் காசுக் கட்டளை பெறுவதற்கு வரிசையில் நின்ற பத்துப் பதினைந்து பேரில் அவனும் ஒருவன். பணி புரிந்து கொண்டிருந்த பெண் மிகவும் மெதுவாக வேலை செய்து கொண்டிருந்தமையினால் அனுமார் வால் போல் வரிசை நீண்டு கொண்டு போனது. சம்பள நாட்களில் இப்படித்தான். அவன் வழக்கமாகக் காசு அனுப்ப இங்கு வருபவனல்ல, காத்து நிற்பதிலும் விருப்பமில்லை. எனினும், ஆமையாய் நகர்ந்து முன்னேறுவதை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. இந்த வயதிலும் ஒரு பெண்ணால் இப்படி அவனை மாற்ற முடிந்திருக்கிறதே!



சோமாவதியைச் சந்தித்த அந்த இரவுக்குப் பின் சுதன் எடுக்கும் முதல் சம்பளம் இன்று தான். அவனுக்கென்ன குடும்பமா, பிள்ளை குட்டியா என்ன? எல்லோரையும் இழந்து முப்பது வயதுக்குள்ளாகவே தனிமரமாக நிற்கிறான். மனைவி குழந்தை இருவரையும் 'ஷெல்' வீச்சுக்குப் பலி கொடுத்து ஒரு வருடம் கடந்து விட்ட பின்னரும் அவனிடம் என்றுமே சலனமிருந்ததில்லை. அன்பை அள்ளிச் சொரிந்து விட்டு, அற்ப ஆயுளில் பிரிந்துவிட்ட மனைவியின் நினைவுகளிலிருந்து அவன் மீளவில்லை. இனிமேல் இப்படியேதான் வாழ வேண்டும் என எண்ணியிருந்தான். துயர நினைவுகளிலிருந்து விடுபடக் கொழும்புக்கு மாற்றம் எடுத்துக் கொண்டு வந்து ஆறு மாதங்களாகின்றது. ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறோமென்று, பற்றில்லாத வாழ்க்கை தான் வாழ்ந்து கொண்டிருந்தான். அந்த இரவு அவனை என்னமாய் மாற்றி விட்டது.

அன்றைய தினம் மனம் சரியில்லாமலிருந்ததால் கெப்பிட்டல் படமாளிகையில் படம் பார்த்து விட்டு 155 ம் இலக்க பஸ்சுக்குக் காத்திருந்தான். பதினொரு மணியை நெருங்கியும் பஸ் வரவில்லை. ஆமர் வீதிச் சந்திக்குச் சென்று, அங்கிருந்து புறக்கோட்டைக்குப் போய் தனது பயணத்தைத் தொடரலாம் என அவன் நினைத்துக் கொண்டிருந்த போது, அவனை நெருங்கி இரு பெண் பொலிசார் வந்தனர். அவனிடம் அடையாள அட்டையைக் கேட்டனர். கொடுத்தான். "யாழ்ப்பாணமா?" என்று சிங்களத்தில் கேட்டனர். சுதன் 'ஆம்' என்பது போல் தலையசைத்தான்.

"இங்கே உனக்கென்ன வேலை, இந்த இரவில்?"

"படத்துக்குப் போனேன்..."

"ரிக்கெட்.....?"

எடுத்து நீட்டினான்.

"கொழும்பில் பதிந்திருக்கிறாயா?"

"ஓம் வெள்ளவத்தையில்.....".

"இங்கே ஏன் வந்தாய்?"

"கிராண்பாசில் தான் வேலை...." என்றபடி தனது அரசசேவை அடையாள அட்டையைக் காட்டினான். அவனுக்கு மனிதிலே சீற்றம். வெளியே காட்டிக் கொள்ள முடியாத நிலைமை. இரண்டு பெண்களுக்கு முன் கூனிக்குறுகி நிற்க வேண்டியிருக்கிறதே! தலையெழுத்துத் தமிழனாய்ப் பிறந்தது.

அவர்கள் அப்பால் நகர்ந்தார்கள். சுதன் மிகவும் குழம்பிப் போயிருந்தான். 'இனி 155ம் இலக்க பஸ் வராது...' என்று எண்ணிய படி ஆமர் வீதிச் சந்தியை அடைந்தான். பஸ் தரிப்பில் அமைதி. ஒரே ஒரு பெண் மட்டும் நின்றிருந்தாள். அவன் அவள் முகத்தைக் கூடப் பார்க்கும் மன நிலையில் இல்லை. பஸ் இன்னமும் வரவில்லை.

"எங்கே போகிறீர்கள்?" குயிலின் ஓசை. திரும்பிப் பார்த்தான். பேசியது கிளியா? "சிங்களம் தெரியுமா?" இப்போது அவள் அவனருகில் நின்றாள். வாசனை வீசியது. அழகாக இருந்தாள். ஆடையிலும், அலங்காரத்திலும் தேவதையாய்த் தெரிந்தாள். அவனுக்கு ஓரளவு பிடிபடுவது போலிருந்தது.

"எங்கேயாவது போகலாமா?"

அவனுக்குக் குழப்பம். நீறுபூத்த நெருப்பாய் ஒரு வருடம் அடங்கிப் போயிருந்த காமம் தூசு தட்டப்பட்டது. எனினும், முன் அநுபவம் இப்படியானவளுடன் இல்லாததால் தயங்கினான்.

"என்ன யோசிக்கிறீர்கள்?.... ஆயிரம் ரூபா தான்"

"என்னிடம் அவ்வளவு பணமில்லை.... ஐநூறு தான் இருக்கிறது...."

"பரவாயில்லை.... எனது வீட்டிற்கே போகலாம்.... அதிகாலையில் நீங்கள் போகலாம் உங்கள் வீட்டிற்கு...."

"வீட்டில் யாருமில்லையா?..... பயமில்லையா?"

"நானும் வயோதிபப் பாட்டியும் தான்.... வாருங்கள்..." அவள் நடந்தாள். அவனும் பின் தொடர்ந்தான். சிறு ஒழுங்கையூடாகச் சென்று ஒரு சிறிய கல்வீடு. கொழும்பிலும் இப்படியான கிராமப் பாங்கான இடங்களிருப்பதை வியப்போடு நோக்கினான். அவள் கதவைத் திறந்தபடி, "வாருங்கள்...." என்றாள். அவளது கொஞ்சலான சிங்களம் மனதில் போதையூட்டினாலும் ஒரு வித பயம். 'ஏதாவது நோய் நொடி இருக்குமோ?'

"என்ன யோசிக்கிறீர்கள்?.... இரவு சாப்பிட்டீர்களா?...."

"ஒண்டுமில்லை..... வாணி விலாசில் சாப்பிட்டேன்....."

"இருங்கள் வருகிறேன்..." அறையைக் காட்டினாள். சிறிது நேரத்தில் திரும்பி வந்தாள். "யாழ்ப்பாணமா?"

"ஓம்...." சுதன் எழுந்தான்.

"இருங்கோ..... என்ன பேர்....?"

"சுதன்....."

"என்ன செய்கிறீர்கள்?"

"அரச சேவையில் லிகிதராக இருக்கிறேன்... உங்களுடைய பெயர்?....." குரலில் இன்னமும் தயக்கம் தெரிந்தது.

"சோமாவதி...." சிரித்தாள். வசீகரிக்கும் சிரிப்பு. "உங்களுக்கு கலியாணமாச்சா?"

"ஓம்...."

"அப்படியானால் ஏன் என்னோடு வந்தீர்கள்? உங்கள் மனைவிக்குச் செய்யும் துரோகமல்லவா?"

அவனது கண்கள் கலங்கின. வசந்தாவும், குழந்தையும் மனதில் வந்து நின்றனர். "அவர்கள் இப்போது இல்லை... ஊரில் வீட்டில் 'ஷெல்' விழுந்தது. ஒரே கட்டிலில்தான் படுத்திருந்தோம். மனைவியும் குழந்தையும் பலியானார்கள்... இரக்கமற்ற கடவுள் என்னைத் தனியனாக்கி வேடிக்கை பார்க்கிறார்...."

"கடவுளைக் குறை கூறாதீர்கள்.... எல்லாம் மனிதர்களால் தான்.... மனிநேயத்தைத் தொலைத்து விட்ட மனிதப் பிறவிகளால் தான்....." இப்போது அவளது குரல் தளதளத்தது. கண்களில் நீர் குளம் கட்டியது.

"ஏன் கலங்குகிறீர்கள்?"

"என் கதையும் உங்கள் கதை போலத் தான்.... ஜெயசிக்குரு ராணுவ நடவடிக்கையில் எனது கணவரும் செத்திட்டார்..... அதால தான் எனக்கு இந்த நிலை..... மூன்று வருட மண வாழ்க்கை. அதிலும் அநேக நாட்கள் அவர் போர் முனையில் தான். என்னுடைய குழந்தையையும் என்னையும் தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டார்." அவள் விசும்பி அழுதாள். அவன் இரக்கத்தோடு அவளை நோக்கினான்.

"உங்களது குழந்தை எங்கே....?"

"பாடசாலை விடுதியில் விட்டு படிப்பிக்கிறேன்.... நான் வாழுகிறதே எனது மகன் சாமரவுக்காகத் தான்..... இப்போது ஆறு வயதாகிறது....." கண்களைத் துடைத்துக் கொண்டாள். "என்னிடம் வரும் யாருடனும் நான் இப்படி உரையாடுவதில்லை. அவர்களும் வந்த வேலையில் தான் குறியாக இருப்பார்கள்...... நான் உங்களை மினைக்கடுத்திறன் போல......"

''இல்லை சோமாவதி..... உங்கட கதையைக் கேட்டதும் எனக்கு மனமில்லாமலிருக்கு..... பாதிக் கப்பட்டவனுக்குத் தான் தெரியும் பாதிக்கப்பட்டவரின் துயரம்.... அதுசரி..... நீங்கள் ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தீர்கள்? அரச கொடுப்பனவு மாதப் பென்சன் எல்லாம் கிடைக்குமே.....''

"ம்..." அவள் நெடுமூச்செறிந்தாள். "எல்லாம் ஏட்டிலை தான். அவர் நிரந்தரமாக்கப்பட முன்னர் இறந்திட்டதால பென்சன் இல்லையாம்..... சாவுக் கொடுப்பனவாக இலட்ச ரூபா தந்தார்கள்..... ஒரு வருடம் இழுத்தடிச்சார்கள்.... அதுக்கு அலைஞ்ச போதுதான் அதிகாரிகளிடமே நான் என்னை இழக்க வேண்டி ஏற்பட்டது..... ஒரு வருட வறுமை என்னை இந்தத் தொழிலிலை தள்ளிவிட்டது..... தரகராக நான் எந்த மாமாவையும் வைச்சிருக் கேல்லை...... தேவைப்படுகிற போது மட்டும், மாசம் மூன்று நாலு தடவை போவேன்......"

"நோய்கள் தொற்றுமெண்ட பயமில்லையா?"

"நீங்கள் பயப்படாமல் தானே வந்திருக்கிறீர்கள்?" என அவள் சிரித்தாள். அவனால் பதில் சொல்ல முடியாமல் அவனும் சிரித்தான்.

அவளைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந் தது. அழகானவள், படித்தவள், நல்ல இதயம் படைத் தவள், பண்பாகப் பழகுகிறாள். ஆனால், நடத்தையில் பிறழ்வடைந்து விட்டாளே! இந்த யுத்தம் எண்ணிலட ங்காத தமிழர்களை மட்டும் தான் பாதித்தது என நினைந்திருந்தான். எல்லா இன மக்களையுமல்லவா பாதித்திருக்கிறது? சுதனின் மனத்திலே கழிவிரக்கம்.

''சரி.... நீங்கள் இங்கேயே படுத்திருந்து விட்டுக் காலையில் போங்கள்......" அவள் பெட்சீற்றை அவனிடம் நீட்டினாள்.

"நான் உங்கள் தொழிலைக் குழப்பி விட்டேன்..... தயவு செய்து இதை வைத்துக் கொள்ளுங்கள்.'' பணத்தை நீட்டினான் சுதன்.

"வேண்டாம்...." அவள் மறுத்தாள். "நான் பிச்சை கேட்க வில்லையே!" அவளது ரோஷம் அவனுக்குப் பிடித்தது. "நீங்கள் தூங்குங்கள் நான் போய்ப் பாட்டியுடன் படுக்கிறேன்."

அவன் எதுவும் சொல்லாமல் அவளையே உற்று நோக்கினான். அவள் மெல்ல நகர்ந்தாள்.

'நில்லுங்க.... உங்களுக்குத் தூக்கம் வராவிட்டால் இன்னும் சிறிது நேரம் உரையாடுவோம்....'' நாட்டிலே யுத்தம் புரிந்து கொண்டிருக்கின்ற இரு இனத்தைச் சேர்ந்த உள்ளங்கள் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் அனுதாபப்பட்டு.... ஓ.... மனிதம் செத்துவிடவில்லை என நினைத்தபடி வந்து அமர்ந்தாள் சோமாவதி.

"நீங்கள் என்னைச் சோமா என்று அழைக்கலாம். நீங்கள் என்ற மரியாதை தேவையில்லை. நட்புரிமையு டன் நீ என்றே சொல்லுங்கள்... சரி.... என்ன கதைக்கப் போகிறீர்கள்?"

''எங்கள் இருவரையும் பற்றித் தான்.'' அவனது வசீகரமான புன்னகையில் அவள் கட்டுண்டாள். "அப்படி என்ன கதைக்கப் போகிறீர்கள்? காலையில் நீங்கள் யாரோ, நான் யாரோ."

''எமது உறவு தொடர வேண்டும் என்று நினைக்கிறேன்.... நீங்கள் இந்தத் தொழிலுக்கு முழுக்குப் போடுங்கள்... நாம் இருவரும் வாழ்வில் இணைவது பற்றிச் சிந்தியுங்கள்..... எனக்கு உங்களைப் பிடிச்சிரு க்கு...." சுதன் உறுதியுடன் கூறினான்.

"சுதன், உங்களுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. நான் ஒரு விலைமாது....'' அவள் அவசரமாக மறுத்தாள்.

"எல்லாம் தெரிந்துதானே கேட்கிறேன்?"

"நமது மொழி வேறு, மதம் வேறு..... கலாச்சாரம் வேறு..... எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நாட்டில் மூன்று தசாப்தங்கள் மோதிக் கொண்டிருக்கிற இனங் களைச் சேர்ந்தவர்கள்...."

"மொழி.... இனம்.... மதம்.... இதெல்லாம் மனிதனை மனிதப் பண்புகளோடு வாழ வைக்கிறதற்கான விடயங் கள் தான். எல்லாவற்றிற்கும் மேலாக மனிதம்.... மனிதா பிமானம்.... சற்று முன்னர் நீங்கள் தானே கூறினீர்கள்...?"

அவள் மௌனமாக இருந்தாள். கண்கள் பனித்திருந் தன. என்ன என்று சொல்லத் தெரியாத பரவச நிலையில் அவள் இருந்தாள். 'இப்படியும் நல்ல இதயம் கொண்ட மனிதர்களா?'

"மௌனத்தை நான் சம்மதமாக எடுத்துக் கொள்ள லாமா?" அவன் ஆழாக ஊடுருவி அவளை நோக்கினான்.

"உங்கள் முடிவு அவசர முடிவு. யதார்த்தத்தைப் பற்றி சிந்திக்காத முடிவு.... நிதானமாக யோசித்தால் உங்களுக் குப் புரியும்....."

"எனது முடிவில் மாற்றமில்லை..... வேண்டுமானால் உங்களுக்குச் சிந்திக்க அவகாசம் தருகிறேன்.... குட் நைற்...'' அவன் போர்வைக்குள் புகுந்தான். அவள் குழப்பத்துடன் எழுந்து சென்றாள்.

அதிகாலையில் வந்து அவள் அவனை எழுப்பினாள். "நேரமாகிவிட்டது புறப்படுங்கள்...."

"உங்கள் முடிவைச் சொல்லுங்கள்.... முடிவு தெரியாமல் நான் போகப் போவதில்லை......"

"எனது முடிவில் மாற்றமில்லை.... முடிந்த முடிவு தான். ஒரு விபச்சாரியால் ஒரு உத்தமருடன் ஒழுங்காக வாழ முடியாது."

"நான் உங்களை ஒரு விலைமகளாகப் பார்க்க வில்லை. பாதிக்கப்பட்ட ஒரு பெண்: அதே யுத்தத்தால் பாதிக்கப்பட்டவன் நான்.... இருவரும் இணைவதில் தப்பில்லை..... நீங்கள் யோசிக்க அவகாசம் தருகிறேன். ஒரு வாரம் கழித்து வருகிறேன்..... முடிவு சாதகமாக இருக்கட்டும்." சுதன் விடை பெற்றான்.

ஒருவாரம் கழித்து மீண்டும் சுதன், சோமாவின் வீட்டிற்கு வந்தான். அவளும் இன்முகத்துடன் வரவேற்றாள். தேனீர் பரிமாறினாள்.

"என்ன, யோசித்தீர்களா?..... நான் உங்களுக்கு லாயக்கற்றவள்..... உங்கள் மண்ணிலே தான் ஆயிரக்கணக்கான விதவைகள் கண்ணீரில் மிதப்பதாக பத்திரிகையில் படித்தேன்.... அதில் ஒருத்திக்கு வாழ்வு கொடுக்கலாமே?....." சோமா அவனை ஏறிட்டு நோக்கினாள். அவன் விரக்தியோடு சிரித்தான்.

"வசந்தாவை மறந்து விட்டு இன்னொருத்தியை மணக்க நான் எண்ணியிருக்கவில்லை. ஆனாலும், அங்கே சில கலியாணப் பேச்சுகள் வரத்தான் செய்தன. எனக்காக இல்லாவிட்டாலும், ஒருத்திக்கு வாழ்வளிக்கலாமே என்று வற்புறுத்தினார்கள். இறுதியில் சம்மதித்தேன். முதலிலே ஒருத்தியைப் பேசி வந்தார்கள்.....பின்னர் தான் எனது சாதி அவர்களை விடக் குறைவானது என்பது அவர்களுக்குத் தெரிந்தது. வேண்டாம் என்றார்கள்....."

"இப்பொழுதும் தமிழர்கள் சாதி பார்க்கிறார்களா?....... விடுதலைக்காக ஒன்றிணைந்து போராடுகின்றபோது, தம்மிடையே சாதிப்பாகு பாடு பார்க்கிறார்களா?" சோமா விசித்திரமாக அவனை நோக்கினாள்.

"முன்னரை விட சாதிப்பாகுபாடு குறைந்துள்ளது. ஆனால், நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது... ம்.... அதற்குப் பிறகு போர் அனர்த்தத்தில் கணவனை இழந்த ஒரு டாக்டர் பெண்ணைப் பேசினார்கள். பதவி அதிகம் என்று எனக்குள் தயக்கம்..... அதற்கிடையில் அவளே எனது அந்தஸ்த்துக் காணாது என்று தரகரிடம் கூறி விட்டாளாம்..... இனிமேல் கலியாணம் பேசிக் கொண்டு வரவேண்டாம் என்று கண்டிப்புடன் தரகரிடம் கூறிவிட்டேன்."

"உங்களைப் போல குணமான, அழகான மாப்பிளையைக் கட்ட அவர்களுக்குக் கொடுத்து வைக்க வில்லை. விடுங்கள்...."

"உங்களுக்குத் தான் கொடுத்து வைத்திருக்கிறது..." சுதன் புன்னகையுடன் அவளை நோக்கினான். அவள் அவனிடம் கெஞ்சுவது போல் சொன்னாள். "பிளீஸ்.... சுதன்.... என்னைக் குழப்பாதீர்கள்.... நான் இப்படியே இருக்க விரும்புகிறேன்....."

"விபச்சாரம் செய்து கொண்டா......?" கோபமாக அவளை நோக்கினான் சுதன். சோமா அவசரமாக மறுத்தாள். "நான் அதற்குப் பின்னர் விபச்சாரத்தில் ஈடுபட வில்லை.... இனி ஈடுபடவும் மாட்டேன்.... தையல் தெரியும்..... மெசின் ஒன்று கட்டுக் காசுக்கு வாங்கியுள்ளேன்."

"ஏன், பணம் இல்லையா?..... மரணக் கொடுப்பன விலிருந்து எடுத்திருக்கலாமே.....?"

"நான் அந்தப் பணத்தை மகனுடன் இணைந்து போட்டுவிட்டேன். எதிர்காலத்தில் அவனது கல்விக்குப் பயன்படட்டும்..... ஒரு வேளை எதிர்பாராமல் எனக்கு ஏதும் நடந்தால் அவனுக்குப் பாதுகாப்பு வேண்டுமல்லவா?" சோமாவின் புத்திசாதுரியம் அவனைக் கவர்ந்தது.

"சரி..... நான் போய் வருகிறேன்..... உனக்காகக் காத்திருப்பேன் சோமா.... " உரிமையுடன் கூறினான். "நிதானமாக யோசி.... அவசரமில்லை..... நீ சம்மதித்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மாதா மாதம் எனது சம்பளத்தில் பணம் தருவேன்..."

"ஐயோ வேண்டாம் சுதன்.... நான் கடைசி வரையும் வாங்க மாட்டேன்...... அப்புறம் உங்களோடு கதைக்கவும் மாட்டேன்." கண்டிப்பாகக் கூறினாள். அவன் கையசைத்து விடை பெற்றான்.

அவள் அவனிடம் பணத்தை வாங்க மாட்டாள் என்பதாலேயே இன்று காசுக்கட்டளை எடுத்து பணம் அனுப்புகிறான். சோமாவின் விலாசத்திற்குக் காசுக் கட்டளையை அனுப்பிவிட்டு தபாலகத்தை விட்டு வெளியேறியபோது, அமைச்சரின் வாகனம் ஒன்று கிளைமோரில் சிக்கியது. எங்குமே அல்லோலகல்லோலம்.

திடீரென்று இராணுவமும் பொலிசும் வந்து குவிந்தது. பலரைக் கைது செய்தனர். சுதனும் கைது செய்ப்பட்டான். துன்புறுத்தலுடனான விசாரணை தொடர்ந்தது. சிலரை விடுவித்தார்கள். சிலரைச் சிறையில் அடைத்தார்கள்.

சுதனும் காலவரையறையின்றிச் சிறையில் அடைக்கப் பட்டான். நாட்கள் நரகமாக நகர்ந்தன.

கொழும்பில் அவனுக்கு நெருங்கியவர்கள் யாருமில்லை. யாரும் தேடியும் வரவில்லை. அவன்மீது அனுதாபம் கொண்ட சிறைக்காவலன், ''யாருக்காவது தகவல் கொடுக்க வேண்டுமா?'' என்று கேட்டான். சுதன் பல வாறாக யோசித்தான். இந்தச் சிறை வாழ்வின் கொடு மையை அவனால் தாங்க முடியவில்லை. விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று சித்திரவதை செய் தார்கள். சித்திரவதைகளின் கொடுமைகளை வார்த்தை களால் வடிக்க முடியாது.

பெல்ற்றால் அடித்தார்கள், தலைகீழாகக் கட்டித் தூக்கி நீண்ட நேரம் அப்படியே விட்டார்கள். வேதனை யில் ஆரம்பத்தில் அழுது குழறியவன், இப்போது எல்லாம் பழக்கப்பட்டது போல, வேதனைகளையும், வலிகளையும் பல்லைக் கடித்துக் கொண்டு சகித்தான். எனினும், இடையிடையே மிகக் கொடூரமான சித்திரவதைகளைச் செய்த போது அவ்வப்போதே உரத்துக் குழறினான். நிர்வாணப் படுத்திச் சிகரட்டால் சுட்டபோதும், கைவிரல் களுக்கிடையே குண்டூசியை ஏற்றிய போதும், மின்சா ரத்தைச் செலுத்திய போதும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதை விடச் செத்தால் கூடப் பரவாயி ல்லை என்று தோன்றியது.

சிறையிலே இருந்தவர்களில் பெரும்பாலோர் எதுவித குற்றமும் இழைக்காதவர்கள். குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமலே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வருடக்கணக்கில் சிறையில் வதைபடும் இளைஞர் களைத் தரிசிக்க முடிந்தது. குடும்பத்தவர்களும் இருந்தார்கள். வாழ்வின் வசந்தங்களைத் தொலைத்து விட்டு இருண்ட சிறைக்குள் வாடும் இவர்களைப் பார்க் கும் போது தனது துயரையும் மறந்து அவர்களுக்காக அனுதாபப்பட்டான் சுதன்.

எப்படியும் இந்த நரகத்திலிருந்து மீள வேண்டும் என எண்ணிய சுதன் பலவாறாக யோசித்தான். அவனது அலுவலகம் மூலம் விடுதலைக்காக முயன்றும் பயனளிக் கவில்லை. அவர்களும் ஒதுங்கிவிட்டனர். இந்த நிலை யில் தான் சோமாவதிக்குத் தகவல் கொடுத்தால் என்ன என அவனது மனது சிந்தித்தது. உதவி செய்வதாகக் கூறிய சிறைச்சாலைக் காவலாளியிடம் கடிதம் எழுதிக் கொடுத்துச் சோமாவதிக்குத் தபாலிட்டான். எங்கேயும் சில மனிதநேயம் மிக்கவர்கள் இருப்பது மனதிற்கு நிறை வைத் தந்தது.

கடிதம் கிடைத்ததும் சோமாவதி பதறியடித்துக் கொண்டு அவனைப் பார்க்க வந்தது அவனுக்கு வியப்பளித்தது. அவனைக் கண்டதும் கண் கலங்கிக் குரல் தழதழக்க அவள் ஆறுதல் சொன்ன போது அவனது மனது க்சிந்துருகியது. ஏதோ முற்பிறவிப் பந்தமோ என அவன் எண்ணினான்.

சோமா அவனது விடுதலைக்காக முயற்சிப்பதாகக் கூறினாள். தனக்குத் தெரிந்த இராணுவ அதிகாரியைச் சந்தித்து கதைப்பதாகக் கூறிய போது, சுதனின் கண்கள் கலங்கின. அவள் விடை பெற்றுச் சென்ற பின்னரும் நீண்ட நேரம் அவளது நினைவுகளிலேயே மிதந்தான். இனவாதச் சாக்கடையில் தேசம் சீரழிந்து கொண்டிருக் கும் வேளையிலும், இங்கேயும் சில நல்ல உள்ளங்கள் இருப்பதை எண்ணிப் பூரித்தான். இவ்வாறான மனிதநேய மும், மனிதாபிமானமும் தான் இந்த நாட்டில் நிரந்தரத் தினை ஏற்படுத்தும், இன்றேல் நாடு பிளவு பட்டு இரண்டா வதைத் தவிர்க்க முடியாது போய்விடும் என எண்ணினான்.

சோமாவதி தனக்குத் தெரிந்த இராணுவ அதிகாரி யைச் சந்தித்த போது, ''உனக்கென்ன தமிழனின் மேல் இவ்வளவு அக்கறை?'' என்று கேட்டார். சோமாவதி மௌனமாகக் கண்கலங்கவே அவருக்குப் புரிந்தது. ''ஏன், அவனைத் திருமணம் செய்யப் போகிறாயா?'' என்று சிரித்தார். அவள் மௌனமாக கண் கலங்கினாள். ஏற்கனவே பொலிசாரிடம் கையளிக்கப்பட்டு விட்டதால், இனி அவர்கள் மூலம் தான் முயற்சிக்க வேண்டும் என்று கூறித் தனக்குத் தெரிந்த ஒரு பொலிஸ் அதிகாரியைப் போய்ப் பார்க்கும் படி கூறினார். அவள் பொலிஸ் அதிகாரியைச் சந்தித்த போது, அவர் சுதனது விசார ணைக் கோவையைப் பார்த்தார். சுதன் மீது குற்றம் ஏதும் இருக்கவில்லை. எனினும், இனிக் கோட் மூலம்தான் விடுதலை செய்ய வேண்டும் என்று கூறி, விரைவில் அதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

சோமாவதி வங்கியிலிருந்து பணம் மீட்டு, வக்கீல் ஒருவரையும் ஒழுங்கு செய்தாள். அடிக்கடி சுதனைச் சிறைச்சாலைக்குச் சென்று பார்த்து ஆறுதல் கூறுவாள். இனமதங்களுக்கு அப்பால் இரண்டு மனித இதயங்கள் நெருங்கி வந்தன.

குறிப்பிட்ட ஒரு தினத்தில் சுதனை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து, குற்றமற்றவனென விடுதலை செய்தார் கள். ஒப்பமிட்டு அவனைப் பாரமெடுத்த சோமாவதி, ''சுதன்......நீங்கள் எங்கேயும் போக வேண்டாம்..... என்னோட வாங்க.....'' என்றாள். சுதன் நிறைவோடு அவளை நோக்கினான்.





'லங்காதீப' நாளிதழ் பிரதி செவ்வாய் தோறும் **'வீமங்ஸா'** எனும் விசேட இலக்கியப் பகுதியொன்றை வெளியிட்டு வருகிறது. கடந்த 16. 10. 2007 **'மல்லிகை'** ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களின் நேர்காணல் ஒன்று அதில் இடம் பெற்றிருந்தது. அதற்கு விளக்கம் அளிக்கும் தோரணையில் நவம்பர் 20ந் திகதி அதே பகுதியில் பிரபல சிங்கள எழுத்தாளர் குணஸேன விதான சில கருத்துக்களைத் தந்திருந்தார். இவரது கருத்துக்களின் மொழி பெயர்ப்பும் இங்கே தரப்பட்டுள்ளன. குணஸேன விதான அவர்கள் டொமினிக் ஜீவா அவர் களைக் குற்றம் சுமத்துவது போல் விளக்கமளித்துள்ளமையால், இதற்கான தெளிவான கருத்தினை மல்லிகை ஆசிரியர் வாசகர்களுக்குத் தருவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

- திக்குவல்லை ஸப்வான்

# தெற்கின் ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, இலக்கியவாதிகள் கூட எம்மை ஏமாற்றிவிட்டார்கள்......!

**நேர்காணல்: மனோ பர்னாந்து**
**தமிழில்: திக்குவல்லை ஸப்வான்**

**எ**ண்பது வயதினையுடைய திரு. டொமினிக் ஜீவா முதன்மையான தமிழிலக்கியவாதியாவார். இலக்கியப் பங்களிப்புக்காக வழங்கப்பட்ட முதல் சாகித்திய விருதினை, 1960களில் அவரது **'தண்ணீரும் கண்ணீரும்'** என்ற நூல் சுவீகரித்துக் கொண்டது. இவரது ஏராளமான சிறுகதைகள் சிங்களம், ஆங்கிலம், ரஷ்யா, செக் மொழிகளில் தரப்பட்டுள்ளன. நாற்பது வருட காலமாக உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் **'மல்லிகை'** சஞ்சிகையை வெளியிடும் அன்னார், தமிழ் இலக்கியத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். இது அவரோடு நடாத்தப்பட்ட நேர்காணல்.

**நான்:** உங்களுக்குத் தமிழிலக்கியம் சம்பந்தமான ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது?

**ஜீவா:** நான் யாழ் நகரில் பிறந்தவன். அங்குள்ள கஸ்தூரியார் வீதியில் வாழ்ந்தோம். அங்கே ஒரு புத்தகக்கடை இருந்தது. சிறுவயதில் பொருளாதார நெருக்கடி இருந்தாலும், நான் புத்தகங்களை வாங்கி வாசிப்பேன். அத்தோடு, யாழ் நகரில் நடைபெறுகின்ற இலக்கியச் சொற்பொழிவுகளைக் கேட்கத் தவறமாட்டேன். எனக்கு ராஜகோபால் என்றொரு நண்பன் இருந்தான். அவன் வாசிக்கவும், எழுதவும் என்னைத் தூண்டினான். எனக்கு இவ்வாறு தான் தமிழிலக்கியத்தில் ஈடுபாடு ஏற்பட்டது.

**நான்:** உங்களது இளைஞர் பிராயத்திற்கும், இலக்கியத்திற்குமிடையே தொடர்பு எவ்வாறு ஏற்பட்டது?

**ஜீவா:** எனது பாடசாலை வாழ்க்கை மிகவும் குறுகியதாகும். எட்டாம் வகுப்பு வரையில்தான் படித்துள்ளேன். நான் இளைஞர் பிராயத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தேன். யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட சனங்களுக்கு எதிராகப் பெரும் அநீதிகள் நிகழ்ந்தமையும் இவ்வாறு சேரக் காரணமாகும். தேநீர்கடைகளுக்குச் சென்றால் எங்களை வித்தியாசமாகக் கவனித்தார்கள். கோயில்களில் கூட இதே நிலைமை தொடர்ந்தது. இதற்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட ஐந்து சமூகங்கள் ஒன்றிணைந்து **'இலங்கை சிறுபான்மை மகாசபை'** என்ற அமைப்பினை ஏற்படுத்தினோம். கம்யூனிஸ்ட்

கட்சிதான் எமது பிரதான கட்சி. அதன் மூலம் சமூகத்திற்கு நன்மையளிக்கும் விதத்தில் செயலாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் இருந்தது. நான் எமக்கிழைக்கப்படும் அநீதிகளைப் பற்றி சிந்தித்தேன். இவற்றுக்கு எதிராக மக்களைச் சிந்திக்க வைக்க எனக்குத் தேவைப் பட்டது. அக்கால கட்டத்தில் வெளிவந்த **'சுதந்திரன்'** என்ற முற்போக்குப் பத்திரிகையில் எழுதத் தொடங்கினேன். எனது எழுத்தின் ஆரம்பம் இவ்வாறு தான் தொடங்கியது. பிற்காலத்தில் இப்பத்திரிகை இனவாதப் பத்திரிகையாக மாறியதனால், அதில் எழுதுவதைக் கைவிட்டேன்.

**நான்: 'இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை' என்ற அமைப்பு மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?**

**ஜீவா:** நாங்கள் சாதி வேறுபாட்டிற்கு எதிராகக் கூட்டங்கள் நடாத்தினோம். எங்களை ஒதுக்கிய, வேறுபாடு காட்டிய அனைத்து இடங்களுக்கும் போய் அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்தோம். உதாரணத்திற்குச் சொல்வதானால் எங்களுக்குத் தேநீர் தர மறுத்த கடைகளுக்குள் பலாத்காரமாக நுழைந்து தேநீர் குடித்தோம். எங்களை அனுமதிக்க மறுத்த கோயில்களுக்குள் பலவந்தமாக நுழைந்தோம். எனது இந்த நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக மக்களை அறிவுறுத்தவும் எழுதத் தொடங்கினேன். இவ்வாறுதான் எனது இளைஞர் பிராயத்தை பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

**நான்: உங்கள் முதல் சிறுகதை பற்றிச் சொல்ல முடியுமா?**

**ஜீவா:** எனது தந்தைக்குச் சொந்தமாக ஒரு பாபர் சலூன் இருந்தது. நானும் அதில்தான் கடமை புரிந்தேன். எனது சலூனுக்கு எதிரே ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி இருந்தான். அவனது பெயர் முத்து முகம்மது. அவன் தான் எனது சிறுகதையின் பிரதான பாத்திரம். 1954 இல் வெளிவந்த இக்கதையின் தலைப்பு- **'பாதுகை'**. சிறுகதை எழுதுவதில் தான் எனக்கு மிகுந்த ஆர்வம். அதன்பிறகு தொடர்ந்து சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் எழுதினேன்

**நான்: உங்கள் சிறுகதையின் கருப்பொருளாக அமைந்தவை யாவை?**

**ஜீவா:** எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றியும், அவற்றுக்குத் தீர்வே கிடையாதா? என்பது பற்றியும் சிந்தித் தேன். அதனால், எனது சிறுகதைகளில் வலம் வருகின்ற கதை மாந்தர்கள் யாழ்ப்பாண மக்கள். மேலும் எனது அநுபவங்கள் சிறுகதைகளாக வெளியாகின. உண்மை யான மானுட நேயம் எனது சிறுகதையின் பின்னணியாக அமைந்து இருந்தது.

**நான்: உங்கள் சிறுகதையொன்றுக்கு இலக்கிய விருது கிடைத்தது பற்றிக் கூறமுடியுமா?**

**ஜீவா:** ஆம். எனது, **'தண்ணீரும் கண்ணீரும்'** சிறுகதைத் தொகுப்புக்கு 1960 இல் அரச சாஹித்திய விருது கிடைத்தது. அது தமிழிலக்கியத்திற்குக் கிடைத்த முதலாவது இலக்கிய விருதாகும்.

**நான்: உங்கள் எழுத்துலகை நோக்கும் போது, மிகவும் துயரங்கள் நிறைந்ததொன்றாகத் தெரிகிறது. நீங்கள் கற்றது கூட மிகச் சொற்பம். தந்தையின் சலூனில் வேலை செய்துள்ளீர்கள். அங்கே சிறுகதை எழுதத் தொடங்கினீர்கள். இது போன்ற கடினமான பயணப் பாதையில் சிறுகதை எழுதப் பெரும் இலக்கியப் பிரயத்தனம் தேவை. நீங்கள் இவ்வாறான நிலைக்கு முகங்கொடுத்து உங்களை எவ்வாறு வளர்த்துக் கொண்டீர்கள்?**

**ஜீவா:** நான் வாலிப வயதில் ரொம்பவும் சுறுசுறுப்பு. எதைப் பற்றியும் தேடிப் பார்க்க வேண்டும் என்ற உந்துதல் எனக்குள் இருந்தது. விசேடமாக ரஷ்ய மற்றும் தரமான இலக்கிய நூல்களை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தமிழகத்திலிருந்து தரமற்ற நூல்கள் வந்தாலும், இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் இருந்து வந்த சிறந்த நூல்களை வாசிக்கும் பேறு கிடைத்தது. கலாநிதி கைலாசபதி அவர்கள் யாழ் பல்கலைக்கழக உபவேந்தராக நியமிக்கப்பட்டமை, மேலும் சந்தர்ப்பத்தை உருவாக்கியது. பாரிய நூல் நிலையமொன்று யாழ் நகரில் ஏற்படுத்தப்பட்டமை இலக்கிய ஆர்வலர்களின் வாசிப்புக்குப் பெரும் சந்தர்ப்பமாக அமைந்தது. இவை அனைத்தும் எனது இலக்கிய ஆர்வத்தை மேம்படுத்தவும், எழுத்து முயற்சியை வளர்க்கவும் காரணங்களாக அமைந்தன.

**நான்: புலம் பெயர்ந்த இலக்கியவாதிகளின் பங்களிப்பினை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

**ஜீவா:** முன்பு நாம் உலக இலக்கியங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, பின் அதன் தமிழாக்கத்தையே வாசித்தோம். என்றாலும், யுத்தம் காரணமாக பல்வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ள எமது இளைஞர்கள், யுவதிகள் அந்தந்த நாடுகளின் மொழிகளைக் கற்றுக் கொண்டு, நேரடியாகவே அவற்றைத் தமிழுக்குத் தருகிறார்கள். ஜேர்மனிக்குப் போயுள்ள ஒரு வாலிபன் அம்மொழியைக் கற்றுக் கொண்டு ஜேர்மன் இலக்கியத்தைத் தமிழுக்குத் தருகிறான். இது தமிழ் சமூகம் பெற்றுள்ள விசேட வரப்பிரசாதமாகும். அதனால் இதற்கு முன்பு தமிழ்நாடு, கொழும்பு அப்புறம் யாழ்ப்பாணமூடாக ஆங்கிலத்தில் உலகத்தைப் பார்த்த தமிழ் இளைஞன் இப்பொழுது தனித்துவமான முறையில் உலகத்தைப் பார்க்கின்றான். புலம்பெயர்ந்துள்ள இலக்கியவாதிகளின் இந்த அயரா முயற்சி பாராட்டுக்குரியது. இந்த வரப்பிரசாதம் சிங்கள சமூகத்திற்குக் கிட்டாததொன்றாகும்.

**நான்: நாற்பது வருடங்களாக நடாத்தி வரும் உங்கள் சஞ்சிகை பற்றிச் சற்றுச் சொல்லுங்களேன்?**

**ஜீவா:** இந்தச் சஞ்சிகையின் பெயர் **'மல்லிகை'** 1966 ஆகஸ்ட் மாதம் இதனைத் தொடங்கினேன். மாதாந்த சஞ்சிகையாகிய இதன் காரியாலயம் ஒரு சலூன். ஒரு சலூனுக்குள்ளே ஆரம்பித்து நாற்பது வருடங்களாகத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்கின்ற சஞ்சிகை உல

தில் வேறு எங்குமே கிடையாது. வெளிநாட்டுச் சஞ்சிகைகளோடு போட்டி போட்டுக் கொண்டு நடாத்திச் செல்கிறேன். இது நான் பெற்ற வெற்றியோ, தமிழ் சமூகம் பெற்ற வெற்றியோ அல்ல. முழு இலங்கை மக்களினதும் வெற்றி. மல்லிகை மாதாந்தம் 6000 பிரதிகள் அச்சாகின்றன. அவை உலகின் பல்வேறு நாடுகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. இங்கே விசேடமாகக் குறிப்பிட வேண்டிய விடயம், வெளியிடப்படும் சகல சஞ்சிகைகளிலும் சிங்கள எழுத்தாளர் ஒருவரின் சிறுகதையொன்று தமிழாக்கம் செய்யப்பட்டு சேர்க்கப்படுகின்றது. சில வெளியீடுகளின் முன் அட்டைகளைக் கூட சிங்கள எழுத்தாளர்களின் புகைப் படங்கள் அலங்கரித்துள்ளன. என்றாலும், தமிழ் இலக்கியவாதிகளுக்கு இவ்வாறான முக்கியத்துவத்தை சிங்கள இலக்கியவாதிகள் செய்துள்ளார்களா? ஏதோ ஓரிரண்டைச் செய்திருப்பார்கள். அவ்வளவுதான்!

**நான்:** நீங்கள் இவ்வாறாகச் சிங்கள இலக்கியவாதிகளுக்கு எதிராகக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்துவது ஏன்?

**ஜீவா:** இது சம்பந்தமாகச் சிறந்ததொரு உதாரணத்தை முன் வைக்கின்றேன். துரையப்பா அவர்கள் யாழ் மேயராக இருந்த காலத்தில் யாழ்ப்பாண தமிழ் எழுத்தாளர்களாகிய நாம், தெற்கின் சிங்கள எழுத்தாளர்கள் பத்துப் பேரை இங்கு வரவழைத்து ஒரு பாராட்டு நிகழ்வை நடத்தினோம். தமிழிலக்கியவாதிகள் சிலரைக் காலிக்கு வரவழைத்துப் பாராட்டு விழா நடாத்துவதாக அப்போது சிங்கள எழுத்தாளர்கள் சொன்னார்கள். அவர்கள் வாக்குறுதியளித்து இன்றோடு எத்தனை வருடங்கள் கழிந்து விட்டன? அந்தப் பாராட்டு விழா எங்கே? இதன் அர்த்தம் என்னவென்றால் தெற்கின் ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, தெற்கின் இலக்கியவாதிகள் கூட எம்மை ஏமாற்றிவிட்டார்கள். எமது தமிழ் எழுத்தாளர்கள் எண்ணிலடங்காத சிங்களச் சிறுகதைகளோடு ஏராளமான நாவல்கள், கவிதைகளை தமிழில் தந்துள்ளார்கள். என்றாலும், சிங்கள எழுத்தாளர்கள் அந்த அளவுக்கு ஏற்ப தமிழ் இலக்கியத்தைச் சிங்களத்தில் தந்துள்ளார்களா? இல்லை. அரச மட்டத்திலாவது அவ்வாறான முயற்சி நடைபெற்றுள்ளதா? அதுவும் இல்லை. தமிழ்ச் சமூகம் எத்தனையோ இனக் கலவரங்களுக்கு முகங் கொடுத்துள்ளது. சிங்கள ஆட்சியாளர்களினால் போதியளவு அடிதடிபட்டும், நாம் இன்னும் சிங்கள எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தமிழில் தந்து கொண்டிருக்கின்றோம். நாம் இவற்றையெல்லாம் செய்வது என்ன பயத்தினாலா? இல்லவே இல்லை. எமது இனத்தவரிடையே உள்ள சம்பிரதாயப் பழக்க வழக்கத்தினாலும், சகோதரத்துவத்துடன் வாழ வேண்டுமென்ற தேவையினாலுமே ஆகும். நான் சொல்வது கசப்பானாலும் உண்மை.

**நான்:** நீங்கள் சஞ்சிகையை பொறுப்பேற்று நடாத்துவதனால் சிறுகதை எழுதுவதை நிறுத்திவிட்டீர்களா? இல்லையாயின் சஞ்சிகை வெளியிடுவது இலாப நோக்கில் தானே?

**ஜீவா:** இல்லை- எனக்கு இந்த வேலையினால் கிட்டும் லாபம் எதுவுமே இல்லை. வாசகர்களின் உதவியினால் தான் சஞ்சிகையைக் கொண்டு செல்கின்றேன். நான் தனிமனிதாக இயங்காமல் ஒன்றிணைந்து, இலக்கிய வேலைகளுக்கு உரமூட்டி, செயற்பட முடிந்தமை மகத்துவமானது. இது சம்பந்தமாக உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தவனாக உள்ளேன். சஞ்சிகைக்கு வாசகர்கள் எழுதும் ஆக்கங்களை நெறிப்படுத்தல், அவசிய ஆக்கங்களை எழுதுவதெல்லாம் நான்தான். அதனால், நான் எழுதுவதை நிறுத்தவில்லை. எனது சஞ்சிகை மூலம் சிங்கள, தமிழ் எழுத்தாளர்கள் நூற்றுக் கணக்கானோரை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளேன். நான் செய்வது சமூகத்திற்குப் பயனளிக்கும் சேவை. இதன் மூலம் பூரண திருப்தியடைகின்றேன்.

**நான்:** யாழ்ப்பாண மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையைப் பற்றி தாங்கள் யாது கருதுகிறீர்கள்?

**ஜீவா:** நாம் பிறந்து வளர்ந்த சூழல் இப்போது அங்கில்லை. அமைதியும் சமாதானமும் அங்கில்லை. நா பெற்ற அநுபவங்களை விட மாறுபட்ட அநுபவங்களை இன்றைய இளைஞர்கள் அநுபவிக்கிறார்கள். இன்றை யுத்த நிலையினால் அன்றிருந்த தாழ்த்தப்பட்ட சா என்ற பிரச்சினை அடிப்பட்டுக் கிடக்கிறது. என்றாலும் யாவரும் பொதுவான உணவுப் பிரச்சினை, தாம் அகதிகளாகும் அவலநிலை மேலெழுந்துள்ளது. ஒரு பக்கத்தில் ஆயுதமேந்திய இயக்கங்களின் செயற்பாடு. அதனால், இளைஞர்களைக் கடத்தல், கொலை செய்தல் எக்கச்சக்கம். இக்காரணங்களினால் அவர்கள் தமது வாலிபப் பிராயத்தில் பெறுகின்ற அநுபவங்களின் அளவு அதிகம். அவை துயரம் மிகுந்தவை. இனிமையற்றவை.

**நான்:** நீங்கள் வயதால் மூத்தவர். இன்றைய யாழ்ப்பாண இளைய தலைமுறைகளை எவ்வாறு நோக்குகிறீர்கள்?

**ஜீவா:** அவர்களை யுத்தம் நேரடியாகவே பாதித்துள்ளது. அவர்களது எதிர்காலம் மரணத்தோடு பின்னிக்கிடக்கிறது. அவர்களது மட்டுமன்றி, இன்று வடக்கில், கிழக்கில் பிறக்கின்ற குழந்தைகளின் நிலையும் அவ்வாறே உள்ளது. அந்தக் குழந்தை மரணத்தின் எதிரே தவழ்கின்றது. அந்தப் பச்சிளம் பாலகனுக்கு நாளைய தினம் பற்றி நம்பிக்கை வைக்க முடியுமா? உண்மையிலேயே இளைய தலைமுறை விரக்தியின் விளிம்பிலேயே நிற்கின்றது. இதுபோன்ற ஸ்திரமற்ற வாழ்க்கைத் தன்மை தெற்கில் வாழும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் உண்டா?

**நான்:** நீங்கள் இந்த யுத்தத்தை எவ்வாறு நோக்குகிறீர்கள்?

**ஜீவா:** உலகில் உள்ள எந்தவொரு கலைஞனும் யுத்தத்தை விரும்பமாட்டான். நான் எல். ரி. ரி. ஈ செயற்பாடுகளைப் புறக்கணித்துவிட்டுக் கொழும்புக்கு வந்தவன். இந்த யுத்தத்தினால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்குக் கிடைக்கப் போவது ஒன்றுமில்லை. இந்த யுத்தம் மேலும் பல பரம்பரைகளைப் பாதிக்கும். யுத்தத்தினால் முதலில் கிடைப்பது பீதியும் குழப்ப நிலையும் தான். அப்புறம் பட்டினியும் மரணமுந்தான். அதனால் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். இலக்கியத்தினால் மனித வாழ்வுக்கான அதீத திருப்தி ஏற்படுகின்றது. எங்களுக்குத் தேவையானது அதுதான். நாம் நடைமுறைப்படுத்த வேண்டியதும் அதுதான்.

# டொமினிக் ஜீவாவின் தவறான கருத்து!

**எ**னது மிகவும் பழைய தமிழ் நண்பரான டொமினிக் ஜீவா அவர்களுடன், **'லங்காதீப'** ஊடகவியலாளர் நடாத்திய நேர்காணல் கடந்த ஒக்டோபர் 16ந் திகதி பிரசுரமாகியிருந்ததை வாசித்தேன். "தெற்கில் ஆட்சியாளர்கள் மாத்திரமல்ல, இலக்கியவாதிகள் கூட எம்மை ஏமாற்றி விட்டார்கள்" என்ற குற்றச்சாட்டுத் தலைப்போடு கூடிய அந்தப் பேட்டி மிகவும் தவறான, ஆவேசமான கருத்துக்களைச் சுட்டுவதனால், மிகவும் சுருக்கமான முறையிலாவது இவ்வாறான தெளிவைத் தர நான் விரும்புகின்றேன்.

**குணஸேன விதான**
**தமிழில்: திக்குவல்லை ஸப்வான்**
**(லங்காதீப- 2007. 11. 20)**

---

1960களிலிருந்து நான் நெருக்கமாகப் பழகும் தமிழ் எழுத்தாளர்களுள் டொமினிக் ஜீவா அவர்களும் ஒருவர். அவர் பிரபல சிறுகதையாசிரியர் மட்டுமல்ல, **'மல்லிகை'** எனும் தமிழ் சஞ்சிகையின் வெளியீட்டாசிரியருமாவார். அந்தச் சஞ்சிகையை நிறுத்தாமல் தொடர்ந்து கொண்டு செல்வதற்குப் பாடுபடும் திரு. டொமினிக் ஜீவா, அச்சஞ்சிகையில் அதிகமான சிங்கள எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் விபரங்களைத் தமிழ்வாசகர்களுக்கு வழங்குவதன் மூலம் அளப் பரிய சேவை செய்தவர். தமிழ் எழுத்தாளர்களின் அமைப்பாகிய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வாயிலாகச் சிறந்த பங்களிப் பினை நல்கியுள்ள அவர், 1970களில் யாழ் நகரில் இடம்பெற்ற தமிழ்- சிங்கள எழுத்தாளர் ஒன்று கூடலை ஏற்பாடு செய்தவர்களுள் ஒருவர். சிங்கள இனவாதிகள் யாழ்நூலகத்தை எரித்த பொழுது, அது பற்றி விபரங்கள் சேகரிக்கச் சிங்கள எழுத்தாளர் சார்பாக அங்கு சென்ற என்னை, வரவேற்று அழைத்துச் சென்ற தமிழ் எழுத்தாளர் திரு. டொமினிக் ஜீவா தான்!

சிங்கள தமிழ் எழுத்தாளரிடையே சுமுகமான தொடர்பை வளர்க்கும் பணிகளில் எம்மை ஊக்கப்படுத்திய பிரேம்ஜீ, ஞானசுந்தரம், கே. கணேஷ், கே. சிவத்தம்பி, கைலாசபதி, ரீ. கனகரத்தினம், டாக்டர் இந்திரகுமார், இளங்கீரன், அகஸ்தியர் ஆகிய தமிழ் எழுத்தாளர்களிடையே டொமினிக் ஜீவா அவர்களும் அடங்கியிருந்தமை எம்மால் மறக்க முடியாது, எனினும், சிங்கள தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களிடையே சுமுகமான உறவை வளர்ப்பதற்குப் பாடுபட்ட டொமினிக் ஜீவா போன்ற ஒருவர், சிங்கள எழுத்தாளர்கள் தமிழ் எழுத்தாளர்களை ஏமாற்றியுள்ளதாகக் குற்றம் சுமத்துவதில் எதுவித நியாயமுமில்லை என்றே கூற வேண்டும்.

எழுபதுகளில், தமிழ் எழுத்தாளர்களினால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, சிங்கள எழுத்தாளர் குழுவொன்று யாழ்நகர் சென்றது. அதில் என்னோடு பேராசிரியர் மென்திஸ் ரோஹணவீர, கே. ஜயதிலக, சிரிலால் பெரேரா போன்ற எழுத்தாளர்களும் அடங்குவர். தேசிய ஒற்றுமைக்கு எழுத்தாளர்கள் நல்க வேண்டிய பங்களிப்புக் குறித்துச் சூடான கருத்துப் பரிமாறல் இடம் பெற்றது. அன்று நாம் சிங்கள, தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துவது சம்பந்தமாகவும், தரம் வாய்ந்த இலங்கை இலக்கியத்தைக் கட்டியெழுப்புவது சம்பந்தமாகவும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டோம்.

வடக்கில் தமிழ் கிளர்ச்சி நடவடிக்கை உச்சக் கட்டத்தை எய்தி, அது பயங்கரவாதமாக வளர்ந்ததன் அவலத்தைக் கண்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கம், சிங்கள தமிழ் ஒற்றுமையைக் கருத்திற் கொண்டு, தேசிய சம்மேளனமொன்றை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடாத்தியது. அதில் பல சிங்கள எழுத்தாளர்கள் கலந்து கொண்டதோடு, ஏற்பாட்டுக் குழுவின் அங்கத்தவன் என்ற அடிப்படையில் நானும் கலந்து செயற்பட்டேன். தமிழ் மக்களுக்காகச் செயற்படுத்த வேண்டிய உரிமைகளை உள்ளடக்கிய அறிக்கையைச் சங்கம் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களிடம் கையளித்தது.

எண்பதுகளில், தமிழ் எழுத்தாளர்கள் குழுவொன்றை தெற்கிற்கு வரவழைத்துச் சிறந்த கருத்துப் பரிமாறலொன்றைத் நடாத்தும் நோக்கம், தேவை சிங்கள எழுத்தாளரிடையே இருந்தது. என்றாலும், அச்சந்தர்ப்பத்தில் தமிழ் எழுத்தாளர்களில் பெருந்தொகையானோர் ஒவ்வொரு திக்கிலும் இருந்தனர். குறிப்பாக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் கூட பயங்கரவாதிகளின் கட்டுபாட்டிலிருந்து விடுபட, நாட்டை விட்டுச் சென்று விட்டார். பிற்காலத்தில் டொமினிக் ஜீவா அவர்களுக்கும் யாழ் நகரத்தைக் கைவிட்டுக் கொழும்புக்கு வர நேர்ந்தது.

இவ்வாறான நிலைமையில் கூட, தெற்கின் சிங்கள எழுத்தாளர்களாகிய நாம் தமிழ் எழுத்தாளர்களுடன் சகோதரத்துவமான முறையில் இணைந்து செயற்பட்டோம். இலங்கைத் தமிழிலக்கியத்திற்கு, தமிழ் எழுத்தாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்த தமிழக புத்தக இறக்குமதியைக் கட்டுப்படுத்த நான் தனிப்பட்ட ரீதியில் மட்டுமன்றி, என்னோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலமும் தொழிற்பட்டேன். அதுமட்டுமன்றி, இந் நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை தமிழகத்தில் அச்சிடத் தூண்டும் அமைப்புக்களை மட்டுப்படுத்த தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினோம்.

இங்கே ஓர் உண்மையை முன்வைக்க விரும்புகின்றேன். ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் பொழுது, தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களை விட, சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல்களின் எண்ணிக்கை அதிகம். தொண்ணூறுகளில் மக்கள் எழுத்தாளர் முன்னணி தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பொன்றைச் சிங்களத்தில் வெளியிட்டது. அதில் டொமினிக் ஜீவா அவர்களின் கதையொன்றும் இடம் பெற்றிருந்தது. கொடகே (Godage) நூல் வெளியீட்டாளர்கள் பெருந்தொகையான தமிழ் நூல்களைச் சிங்களத்தில் தந்துள்ளார்கள். இப்பொழுதும் அவை புத்தகக் கடைகளில் விற்பனைக்குண்டு. என்றாலும், எந்தவொரு தமிழ் நூல் வெளியீட்டாளராவது இதுவரை சிங்கள நூல்களைத் தமிழில் வெளியிட முன் வந்துள்ளார்களா?

அரச நிறுவனங்கள் வாயிலாகத் தமிழிலக்கியமும், தமிழ் எழுத்தாளர்களும் நன்மை பெற நாம் எப்பொழுதும் ஆட்சியாளர்களை உதவி செய்வதற்குத் தூண்டினோம். நான் தலைவராகக் கடமை புரியும் இலங்கை தேசிய நூல் அபிவிருத்தி சபையின் அங்கத்தவராக திரு. டொமினிக் ஜீவாவையும் சேர்த்துக் கொண்டேன். அவர் மூலமாக தமிழ் இலக்கியத்திற்கும், எழுத்தாளர்களுக்கும் பாரிய வேலைத் திட்டமொன்றைச் செயல்படுத்த முடியும் என்று நம்பினேன். என்றாலும், இரண்டொரு கூட்டங்களில் மட்டும் கலந்து கொண்ட டொமினிக் ஜீவா அப்புறம் சபைக் கூட்டங்களுக்கு வருகை தரவில்லை. அதனால், வேறொரு தமிழ் எழுத்தாளரை அவரிடத்திற்கு நியமிக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல டொமினிக் ஜீவா அவர்கள் சடுதியாக அலுத்துப் போவதோடு, சடுதியாக ஆவேசப்படுகின்ற ஒருவர்! அதனால், தெற்கின் இலக்கியவாதிகள் பற்றி குற்றம் சுமத்துவது குறித்து நான் ஒன்றும் ஆச்சரியப்படவில்லை, மனஸ்தாபப்படவில்லை.

எண்பதுகளில் இலங்கை தேசிய நூல் அபிவிருத்தி சபை டொமினிக் ஜீவா உட்பட பல தமிழ் எழுத்தாளர்களின் படைப்பாற்றலைக் கௌரவித்து அவர்களை ஊக்கப்படுத்தியது. "தெற்கின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார்கள்" என்பது காலந்தொட்டுச் சில தமிழ் அரசியல்வாதிகளினாலும், ஊடகங்களினாலும் சுமத்தப்படும் குற்றச் சாட்டாகும். அது சம்பந்தமாகப் பேசுவதற்கு இது சந்தர்ப்பம் அல்ல; எனினும், "தெற்கின் இலக்கியவாதிகள் தமிழ் எழுத்தாளர்களை ஏமாற்றியுள்ளார்கள்" என்று தவறான, பொய்க் குற்றச் சாட்டுக்களை எழுப்பும் பொழுது சிநேகபூர்வத்துடனாவது அதனை நாட்டிற்குத் தெளிவுபடுத்துவது எங்கள் கடமை என்பதனால், இவற்றைத் தர எண்ணினேன். ஆக்கபூர்வமான 'இலங்கை இலக்கியத்தை'க் கட்டியெழுப்புவது அல்லாமல், வடக்கு, கிழக்கு, எனப் பிளவுபட்ட இலக்கியம் நாட்டிற்குத் தேவையற்றது. அதன் பிரகாரம் நாம் வளமான இலங்கைத் தமிழ் இலக்கியம் எனக் கருதுவது வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையக மக்களின் தமிழ் இலக்கியத்தையே என வலியுறுத்த விரும்புகின்றேன்.



# குடிகாறன்

- எஸ். முத்துமீரான்

ஏற்றிப் போட்ட குருத்து மணலில்
எச்சில் துப்புகிறான்– வெறியில்
இழிவாய்ப் பேசுகிறான்.
பன்றி போலப் படுத்துக் கிடந்து
பல்லைக் காட்டுகிறான்– மலத்தைப்
படுக்கையில் கழிக்கின்றான்.
உதிரம் சிந்தி உழைத்த பணத்தை
ஊதித் தள்ளுகிறான்– கசிப்பை
உறிஞ்சிக் குடிக்கின்றான்.

கஞ்சிக்காக மனைவி மக்கள்
கஷ்டப்படும் போது– கழிசற
கசிப்பில் குளிக்கின்றான்.
எச்சில் உணவை ஏங்கித் தவித்து,
ஏப்பம் விடுகிறான்– கனவில்
இன்பம் காண்கின்றான்
மதியையிழந்து மணலில் படுக்கும்
மக்களைப் பார்த்துக் குக்கல்– முகத்தில்
மலத்தைக் கழிக்கிறது.

மல்லிகைப்பந்தல்

# மல்லிகைப் பந்தல் வெளியிட்டுள்ள நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் : டொமினிக் ஜீவாவின் வாழ்க்கை வரலாறு (இரண்டாம் பதிப்பு) | 250/= |
| 2. | எழுதப்பட்ட அத்தியாயங்கள் : சாந்தன் | 140/= |
| 3. | கார்ட்டூன் ஓவிய உலகில் நான் : சிரித்திரன் சுந்தர் | 175/= |
| 4. | மண்ணின் மலர்கள் (13 யாழ் - பல்கலைக்கழக மாணவ - மாணவியரது சிறுகதைகள்) | 110/= |
| 5. | கிழக்கிலங்கைக் கிராமியம் (கட்டுரை) : ரமீஸ் அப்துல்லாஹ் | 100/= |
| 6. | முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள் : டொமினிக் ஜீவா(பிரயாணக் கட்டுரை) | 110/= |
| 7. | முனியப்பதாசன் கதைகள் (சிறுகதை) : முனியப்பதாசன் | 150/= |
| 8. | ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக் குரல் : டொமினிக் ஜீவா | 135/= |
| 9. | இப்படியும் ஒருவன் (சிறுகதை) : மா. பாலசிங்கம் | 150/= |
| 10. | அட்டைப் படங்கள் | 175/= |
| 11. | சேலை (சிறுகதை) : முல்லையூரான் | 150/= |
| 12. | மல்லிகை சிறுகதைகள் : செங்கை ஆழியான் (முதலாம் தொகுதி) | 275/= |
| 13. | மல்லிகைச் சிறுகதைகள் (இரண்டாம் தொகுதி) : செங்கை ஆழியான் | 350/= |
| 14. | நிலக்கிளி (நாவல்) : பாலமனோகரன் | 140/= |
| 15. | அநுபவ முத்திரைகள் : டொமினிக் ஜீவா | 180/= |
| 16. | நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள் | 150/= |
| 17 | டொமினிக் ஜீவா கருத்துக் கோவை (கட்டுரை) | 80/= |
| 18. | பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும் (கட்டுரை) | 100/= |
| 19. | முன்னுரைகள் சில பதிப்புரைகள் : டொமினிக் ஜீவா | 120/= |
| 20. | தரை மீன்கள் (சிறுகதை) : ச. முருகானந்தன் | 150/= |
| 21. | கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் (சிறுகதைகள்): செங்கை ஆழியான் | 175/= |
| 22. | நாம் பயணித்த புகைவண்டி (சிறுகதை) : ப.ஆப்டீன் | 150/= |
| 23. | அப்புறமென்ன (கவிதை) : குறிஞ்சி இளந்தென்றல் | 120/= |
| 24. | அப்பா (வரலாற்று நூல்) : தில்லை நடராஜா | 120/= |
| 25. | ஒரு டாக்டரின் டயரியில் இருந்து....: டாக்டர் எம். கே. முருகானந்தன் | 140/= |
| 26. | சிங்களச் சிறுகதைகள் - 25 : தொகுத்தவர் செங்கை ஆழியான் | 150/= |
| 27. | டொமினிக் ஜீவா சிறுகதைகள் - 50 இரண்டாம் பதிப்பு | 350/= |
| 28. | Undrawn Portrait for Unwritten Poetry - டொமினிக் ஜீவா சுயவரலாறு (ஆங்கிலம்) | 200/= |
| 29. | தலைப் பூக்கள் (மல்லிகைத் தலையங்கள்) | 120/= |
| 30. | அச்சுத்தாளின் ஊடாக ஓர் அநுபவப் பயணம் | 200/= |
| 31. | மல்லிகை ஜீவா மனப் பதிவுகள் - திக்குவல்லை கமால் | 150/= |
| 32. | மல்லிகை முகங்கள் : டொமினிக் ஜீவா | 150/= |
| 33. | பத்ரே பிரசூத்திய - சிங்களச் சிறுகதைகள் - டொமினிக் ஜீவா | 120/= |
| 34. | எங்கள் நினைவுகளில் கைலாசபதி : தொகுத்தவர் - டொமினிக் ஜீவா | 90/= |
| 35. | நினைவின் அலைகள் : எஸ். வீ. தம்பையா | 60/= |
| 36. | முன் முகங்கள் (53 மல்லிகை அட்டைப்படக் குறிப்புகள்) | 200/= |

# ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள்




-"பெயல் மணக்கும் பொழுது" ஈழ பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பினை முன் வைத்து-

**-மேமன்கவி**

(1)

தமிழ் கலை இலக்கியப் பரப்பின் வளர்ச்சிக்கு தொடக்க காலம் முதல் நவீன யுகம் வரை பெண்கள் கணிசமான பங்கினை ஆற்றிச் சென்றுள்ளனர். இன்று வரை பங்காற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் "பெண்ணிய எழுத்து" என்ற குறித்த அடையா ளத்துடன் பெண்கள் தமிழ் கலை இலக்கிய சூழலில் படைக்க வந்ததும், அப்படைப்புக்களை பெண்ணிய நோக்கு டன் பார்க்கும் முறைமை 20 நூற்றாண்டின் கடைசி சகாப்தத்தில் சாத்தியமாக்கியது. அவ்வாறான நோக்குடன் படைக்கப்பட்ட பெண்ணிய எழுத்துக்களில் வெளிப்பட்ட, கருத்துக்களையும் சேதிகளையும் எதிர் கொண்ட ஆணாதிக்க சக்திகள், அப்பெண்கள படைப்புக்களை பற்றியும் அப்படைப்புகளை படைத்த பெண்களைப் பற்றியும் மிக ,மோசமாக விமர்சித்ததன் மூலம், தம் வக்கிர முகத்தை வெளிக்காட்டிக் கொண்டன.

பெண்ணின் நடையையும், உடையையும், தொடையையும், இடையையும் வர்ணித்து ஆக்கிய பாடல் களையும் கவிதைகளையும் எழுதிய ஆண் கவிஞர்களின் படைப்புக்களையிட்டு எந்தவொரு எதிரவினையும் காட்டாது மாறாக அக்கவிஞர்களுக்கு கவிமகாராஜாக்கள் எனறெல்லாம் பட்டங்களை வழங்கி, பொன்னாடை போர்த்தி பூமாலை சூட்டி கௌரவம் செய்து ஆணாத்திக்க சக்திகள் தம் வக்கிரங்களை நிலை நாட்டிக கொண்டன.

ஆனால், தம் உடல் குறித்த படைப்புக்களை,பெண்கள் படைத்ததுடன், அப்படைப்புக்களில் அவர்கள் கையாண்ட உடல் சார்ந்த சொல்லாடல்களையும் எதிர் கொண்ட ஆணாதிக்க சக்திகள், அப்படைப்புக்களை ஆபாச இலக்கியம் என பிரசாரம் செய்தன.

இத்தகைய சூழலின் மத்தியிலும் பெண்ணிய எழுத்து என்பது தனித்த ஓர் இயக்கமாக தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டது.

(2)

பெண்ணிய எழுத்து இயக்கத்தின் இந்த ஸ்திரமான வளர்ச்சிக்கு தமிழகத்து பெண் படைப்பாளிகளால் படைக்கப்பட்ட படைப்புக்கள் (குறிப்பாக கவிதைகள்) மிகவும் துணை புரிந்தன எனலாம். இவர்களின அக்கவிதை கள் ஆணாதிக்க சமூக கட்டமைப்பில் பெண்ணின் உடல், கண்காணிக்கப்படும் விதத்திற்கும், அது பயன் படுத்தப்பட்ட முறைமைக்கும், அச்சமூக கட்டமைப்பின் ஒரு கூறான குடும்பம் எனும் கட்டமைப்பில் பெண் எனும் ஜீவன் நோக்கப்பட்ட விதத்திற்கும் எதிரான குரல்களாக அப்பெண் படைப்பாளிகளின் படைப்புக்கள் அமைந்தன. அதே வேளை, வெறுமனே தமிழ் பெண் எனும் அடையாளத்தை கடந்தும் தலித், முஸ்லிம் போன்ற சமூக வகுப்பினரின் பெண்களுக்கான பிரச்சினைகள் வேறுபட்டவை. தனித்துவமானவை என்ற கருத்தும் வலு பெற்றது. அதன் காரணமாக அத்தகைய சமூக வகுப்பினரில் தோன்றிய பெண் படைப்பளிகளின் படைப்புக்கள் வெளிப்படுத்திய சேதிகளும், பிரச்சினைகளும் வேறுபட்டு வெளிப்பட்டன. இந்த போக்கு பெண்ணிய எழுத்து இயக்கத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இத்தகைய ஒரு சூழலில்தான் இலங்கையிலிருந்து பெண் படைப்பாளிகளின் கவிதைகள் அடங்கிய முதல் தொகுதியாக சொல்லாத சேதிகள் வெளிவந்தது.

சொல்லாத சேதிகள் (இவ்விடத்தில் இத்தகைய ஒரு தொகுப்பு வெளிவரக் காரணமாக அமைந்த சித்திர லேகா மௌனகுரு அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.)

தொகுப்பு வரும் வரை ஈழத்து தமிழ் பெண் கவிஞர்களின் கவிதைகள் தமிழக பெண் கவிஞர்கள் பார்க்கப்பட்ட பெண்ணிய விமர்சன நோக்கிலேயே பார்க்கபட்டுக் கொண்டிருந்தன.

ஆனால், சொல்லாத சேதிகள் மற்றும் அதற்கு பின்னால் வெளிவந்த ஈழத்து பெண் கவிஞர்களின் தொகுப்புக்கள் மூலம்-,(இலங்கையிலிருந்து வெளிவந்த **"உயிர்வெளி"** எனும் தொகுப்பும் தமிழ் பெண்ணிய கவிதைகளின் இன்னொரு பரிமாணத்தை எடுத்துக் காட்டியது. காதல் உணர்வுக்கு ஆட்பட்ட பெண்ணின் நுண்ணிய உணர்வுகள் பெண்களின் குரல்களாக இத்தொகுப்பில் பதிவாகி இருந்தன. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகள் கொண்டிருந்த போக்கினை பற்றிய விரிவான ஒரு முன்னுரை சித்தரலேகா மௌனகுரு அவர்களால் எழுதப்பட்டுள்ளது.)

ஈழத்து பெண் கவிஞர்களின் படைப்புக்கள் சொல்லும் சேதிகளும், முன்வைப்புக்களும், தமிழக பெண் படைப்பாளிகளின் படைப்புக்களிலிருந்து வேறுபட்டவை என்பதை விட,மேலதிகமான பல பண்புகளைக் கொண்டவை என்பதை தமிழக, ஈழத்து பெண்ணிய எழுத்து இயக்க ஆர்வலர்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

இதற்கு காரணம், தமிழக பெண் படைப்பாளிகள் சந்தித்திருக்காத பல்வேறான புதிய அனுபவங்களை ஈழத்து பெண் படைப்பாளிகள் சந்தித்து கொண்டிருந்தமைதான்.

போர்க்கால சூழல், போரக்கள சூழல் என இவ்விரு சூழல்களினூடாக வெளிப்பட்ட ஈழத்து பெண்கள் மீதான இராணுவ ரிதீயான வன்முறை, போராட வேண்டிய தேவை, புலம்பெயர்ப்பு, இடப்பெயர்வு, போன்ற வைகளின் மத்தியில், ஆணாதிக்க சக்திகளால மதம், பண்பாடு, கலாசாரம், குடும்பம், ஒழுக்கம், சாதியம், இயக்கம் என்பன போன்றவற்றின் பேரால் பெண் என்பவள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்முறை, செலுத்தப்பட்ட அதிகாரம், மறுதலிக்கப்பட்ட இருப்பும், அடையாளமும் போன்ற மரணத்தையும் வாழ்வையும் ரொம்பவும் அருகே வைத்திருந்த நிகழ்வுகளின் மத்தியில், எழுத வந்த ஈழத்து பெண் படைப்பாளிகள் கவிதைகள் பெண்ணிய எழுத்து இயக்கத்தில் இதுவரை ""சொல்லாத சேதி""களாக இருந்தமையால் அப்படைப்புக்கள் கவனத்தை பெற்றன.

இவ்வாறான தனித்துவப் போக்குகளின் காரணமாக தமிழக பெண்ணிய இயக்க ஆர்வலரின் கவனத்தை ஈழத்து பெண் கவிதைப் படைப்பாளிகளின் கவிதைகள் அதிக அளவில் ஈர்த்த பொழுது தமிழகத்திலிருந்தும் ஈழத்து பெண கவிஞர்களின் தனித்தொகுப்புக்களும், தமிழக பெண்ணிய இயக்க ஆர்வலர்களின் முயற்சியினால் பல தொகுப்பு நூற்களும் வெளி வரத்தொடங்கின. அவ்வாறாக வெளிவந்த தொகுப்புகளில் ஒன்றாக அ.மங்கை தொகுத்து 2007 ஆம் ஆண்டு மே மாதம் **"மாற்று"** வெளியீடாக வெளி வந்திருக்கும் **"பெயல் மணக்கும் பொழுது"** எனும் தொகுப்பாகும்.

(3)

அ.மங்கை அவர்கள் தொகுத்திருக்கும் இத்தொகுப்பில் ஈழத்து பெண் கவிஞர்களின் படைப்புக்களை பற்றி பேசுவதற்கு முன்னதாக, அத்தொகுப்பு தொகுக்கப்பட்டிருக்கும் முறையை பற்றியும், அதனையொட்டிய சில விடயங்களைப் பேச வேண்டியிருக்கிறது.

முதலில் இத்தொகுப்பின் தலைப்பையிட்டு பேச வேண்டும். இத்தொகுப்பை என் கையில் கண்ட சிலர் **"பெயல் மணக்கும் பொழுது"** எனும இத்தொகுப்பின் தலைப்பிலுள்ள **"பெயல்"** என்றால் என்ன? என கேட்டார்கள். நானும் அச்சொல்லை பற்றி அறிந்து கொண்டதனால் விளக்கம் சொன்னேன். அவர்களை பொறுத்த வரை அவ்விளக்கம வெறுமனே ஒரு வார்த்தைக்கான விளக்கத்துடன் முடிந்து விட்டது. ஆனால், மங்கை அவர்கள் அச்சொல்லை யிட்டு சொல்லியிருக்கும் வார்த்தைகள் மூலம் அச்சொல்லுக்கான விளக்கத்துடன், அத்தொகுப்பிலுள்ள கவிதைகளின் தன்மையை மிக சரியாக இனங்காட்டியிருக்கிறார். அவரது அக்கூற்றின சில வரிகள் தமிழ் பெண்ணிய எழுத்துக்கும மிகப் பொருத்தமான வரிகளாக அமைந்துள்ளன.

மங்கை அவர்கள் தன் தொகுப்புரையில்-

"பெயல் மணக்கும் பொழுது" என்ற தலைப்பின் பின்புலத்தைச் சொல்லவேண்டிய அவசியம். மஹாஸ்வதாதேவியின் குருஷேத்திரத்திற்குப் பின் என்ற சிறுகதையில் யுத்தத்தில் மாளும் காலாட்படையினரின் இளம் மனைவியர் ஐவர். இளம் விதவையும் கர்ப்பிணியுமான உத்தரையின் தோழிகளாக அரண்மனையில் வசிக்கின்றனர். அரண்மனைவாசிகளான பெண்களுக்கு மத்தியில் இந்த ஐவரும் புதியதொரு சக்தியோடு உலவுகின்றனர். ஒரு நாள், முதல் மழையின் வாசம் எழுகிறது மண் ஆறுகிறது. இந்த ஐவரும் தமது நாடு செல்ல ஆயத்தமாகின்றனர். விவசாயம் தொடங்கும் பருவம். குவியல் குவியலாகச் சடலங்களை எரித்த சூடு

கால்களைத் தீய்த்ததால், குருஸேத்திர மண்ணில் நடக்க முடியாது. அரண்மனையில் தங்கிவிட்டதைச் கூறுகின்றனர். இப்போது- முதல் மழையில் மண் ஆறுகிறது. பயிர் தழைக்க வேண்டும். இதுவே பெயல் மணக்கும் பொழுது தொகுப்பின் ஆதார சுருதி.

ஈரக் கசிவை மறந்து தீய்க்கும் நெருக்கடி மிக்க மண்ணில் இருந்து கசிவுகளை உடலிலும் மனத்தி லும் சொல்லிலும் செயலிலும் சுமக்கும் பெண்களின் பெயல் இது. சளியும் மூத்திரமும் சீழும் உதிரமும் பாலும் கண்ணீரும் ஒழுகும் வழியும், மடைகடந்து பாயும் போது அதன் மணமும் நாற்றமும்(!) வீச்ச மடிக்கலாம்.ஆனால் அது உயிர்ப்பின் அடை யாளம்."

தொகுப்பாளர் என்ற முறையில் மங்கை அவர் கள், இத்தொகுப்பை தொகுப்பதில் பெரும சிரமத்தை மேற் கொண்டிருக்கிறார் என்பதை அவரது தொகுப் புரை வாசகங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அத்தகைய சிரமங்களில் ஒன்றாக ஈழப் பெண் கவிஞர்களின் கவிதைகளையும், கவிதைத தொகுப்பு களையும் தேடுவதில் அவர் பாரிய சிரமத்தை கொண்டி ருக்கிறார் எனத் தெரிகிறது.

(அந்த வகையில் தமிழகத்தில் டிசம்பர் 2004 இல் மாங்குயில் பதிப்பக வெளியீடாக வெளிவந்த இலங்கை பெண் படைப்பாளியான கெக்கிராவ ஸஹானாவின் "இன்றைய வண்ணத்துப் பூச்சிகள்" எனும் தொகுதியினை நினைவுபடுத்த வேண்டியிருக் கிறது. இவ்வாறாக அவரது கவனத்திலிருந்து தப்பிய அல்லது அவருக்கு கிடைக்காத தொகுதிகள இன்னும் இருக்கலாம். அவை பற்றிய தகவல்களை கூறுவது மூலம், எதிர்காலத்தில் மங்கை அவர்கள் ஈழப பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுத்தல் பணிக்கு உதவியாக இருக்கும் என்ற முறையில் இத்தகவல் கூறப்பட்டுள்ளது.)

அடுத்து அவர் சந்தித்த இன்னொரு பாரிய பிரச்சினைதான் ஈழத்தில் சில ஆண் கவிஞர்கள் பெண்களின் பெயரில் எழுதி இருந்தமைதான்.. அத்தகைய கவிதைகளை இனங்காணுவதில் அவ ருக்கு ஏற்பட்ட நெருக்கடிக்கு ஈழத்து நண்பர்கள் சிலர் உதவியதாக தொகுப்புரையில் கூறுகிறார். ஆனால், அந்த நண்பர்களின் உதவியையும் மீறியும், "நாச்சியாதீவு பர்வீன்" எனும் ஈழத்து ஆண் கவிஞரின் கவிதை அத்தொகுப்பில் இடம் பெற்று விட்டது. இந்த தவறுக்கு காரணம் அவருக்கு உதவிய ஈழ நண்பர்களுக்கு ஈழத்து முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆண்களுக்கும் பர்வீன் என்ற பெயர் வைப்பது உண்டு எனும் தகவல் தெரியாமல் இருந்திருக்கலாம்.

மேலும் இத்தொகுப்பில் ஈழத்து வடக்கு கிழக்கு பிரதேசத்தை தவிர்த்த பிரதேசங்களிலிருந்து எழுதும் பெண் கவிஞர்கள் கவிதைகளையிட்ட பங்களிப்பு நம்மால் காணமுடியவில்லை. குறிப்பாக மலையக பிரதேசத்தைச் சார்ந்த பெண் கவிஞர்களின் கவிதை களையும் மங்கை அவர்களின் கவனத்திற்கு அத்தொகுப்புக்கு உதவிய ஈழத்து நண்பர்கள் கொண்டு வந்திருக்கலாம். அவ்வாறான பணிக்கு மங்கை அவர்கள் இத்தொகுப்பு வெளி வருவதற்கு முன்னதாக மார்ச்-2000 இல் அந்தனி ஜீவா அவர்கள் தொகுத்த "குறிஞ்சி குயில்கள" எனும் தொகுப்பு அந்த நண்பர்களின் கவனத்திற்கு வரா மல் போனது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. (அல்லது அத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள மலையக பெண்களின் கவிதைகளில் பெண்ணியம் சார்ந்த சிந்தனைகள் இருக்கவில்லை என்று கருதினார் களோ என்னவோ?)

அதே போல் மங்கை அவர்களின் இத்தொகுப்பு வெளிவருவதற்கு முன்னதான காலகட்டத்தில ஈழத்து தேசியப் பத்திரிகைகளிலும் , மல்லிகை, ஞானம், தாயகம் போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்த, தனித் தொகுப்புகளை வெளியிடாத பெண் கவிஞர்களின் கவிதைகளை இன்னும் பரவலாக மங்கை அவர் களின் கவனத்திற்கு அந்த நண்பர்கள் கொண்டு வந்திருக்கலாம்.

மல்லிகை, (மங்கை அவர்களுக்கு கிடைக் காத தொகுதிகளில் ஒன்றான பாலரஞ்சனி சர்மா வின் "மனசின் பிடிக்குள்" எனும் தொகுப்பு மல்லிகைப் பந்தல் வெளியீடாக வந்த தொகுப்பு என்பதையும் இங்கு நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.) ஞானம், தாயகம் போன்ற சஞ்சிகைகள் அவரது பார்வைக்கு வந்திருந்தாலும் அது போதாது என்றே சொல்ல வேண்டும்)

அவ்வாறாகக் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தால், இத்தொகுப்பில் நாச்சியாதீவு பர்வீன் எனும் ஆண் கவிஞரின் கவிதை இடம் பெற்ற தவறை தடுத்திருக்கலாம். மேலும், இன்னும் பல பெண் கவிஞர்களின் கவிதைகள் குறிப்பாக வட-கிழக்கு தவிர்ந்த பிரதேசத்தைச் சார்ந்த பெண் கவிஞர்களின் கவிதைகள்(சந்திரகாந்தா முருகானந்தன், பிரமீளா செல்வராஜா போன்ற இன்னும் பல பெண் கவிஞர்களின் கவிதைகள்) மங்கை அவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

மங்கை இத்தொகுப்பின் பணியின் பொழுது நாம் மேற் குறிப்பிட்ட விடுபட்டவைகள் சுட்டி காட்டுவது என்பது இத்தகைய ஒரு பாரிய தொகுப்பை மங்கை அவர்கள் செலுத்திய உழைப்பில் குறை காணுவது அல்ல நம் நோக்கம். அவரே தனது தொகுப்புரையில்-

"இத்தொகுப்பைப் பற்றி நினைக்கும் போது எனக்கு சில அச்சங்கள் ஏற்படுகின்றன.இதில் வந்துவிடக் கூடிய தவறுகள் எனது தூக்கத்தை குலைக்கின்றன. தயவு செய்து தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அவற்றைச் சரி செய்வதற் கான வாய்ப்புக்கள் நிச்சயம் உண்டு என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்." எனும் கூற்றினை மனங் கொண்டுதான் மேற்குறிப்பிட்ட விடுபட்ட வைகள் பற்றி பதிவு செய்யபட்டுள்ளன. மேலும் அவர் தன் குறிப்பில் "சில அச்சங்கள் ஏற்படுத்து கின்றது" என கூறுவது தொகுப்பாளர் என்ற முறையி லான அவரது நேர்மையை எடுத்துக் காட்டுகிறது என்பதையும் இங்கு பதிவு செய்யவேண்டியிருக்கிறது.

மேற்குறித்த விடுபட்டவைகளுக்கு அப்பாலும், மிகுந்த சிரத்தையுடனும், சிரமத்துடனும் மங்கை அவர்களால் தொகுத்தப்பட்ட "பெயல் மணக்கும் பொழுது" எனும் இத்தொகுப்பில் இடம பெற்றுள்ள கவிதைகளை கொண்டு பார்குமிடத்து கவனத்திற் குரிய ஒரு தொகுப்பு என்பது மறுப்பதற்கில்லை.

(4)

இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள 124 கவிதைகளும் (125 தான் ஒரு கவிதை ஆண் கவிஞரின் என்பதனால் 124) பெண்களால் எழுதப்பட்ட படைப்புக்கள் எனும் நம்பிக்கையுடன் ஒரு சேரப்பயின்ற பொழுது மொத்த கவிதைகளையும் இரு பெரும் பிரிவுகளாக பிரித்து விடலாம் போல் தோன்றுகிறது.

1. பெண்ணிய அடையாளம் இல்லாமல் எழுதப் பட்ட கவிதைகள்
2. பெண்ணிய அடையாளத்தை தக்க வைத்து எழுதிய படைப்புக்கள்.

இவ்விடத்தில் பெண்ணிய அடையாளத்தை தக்க வைத்தல் என்பது மொழியை அடிப்படையாக கொண்டு பெண்களால் படைக்கப்படும் இலக்கியப் பிரதிகளில் பெண் மொழி, மற்றும் கையாளும் மொழியின் அரசியல் என்பனவற்றோடு இணைத்து பார்க்க வேண்டியிருக்கிறது..

அந்த வகையில், காலம் காலமாக தமிழ் மொழியில் கட்டமைக்கபட்டிருக்கும் ஆணிய சொல்லாடல்களையும் இத்தொகுப்பிலுள்ள ஒருசில பெண் படைப்பாளிகளும பயன்படுத்தி இருக்கிறார்கள். உதாரணமாக "மனிதன்", "புதல்வர்கள்", "இளைஞர்கள்" ( இச்சொற்களை மொழியியல் ரிதீயாக நின்று தமிழ் மொழி இலக்கணத்தை கொண்டு ஆண்பால், பெண்பால், பொது பால், பொதுபெயர் என்றெல்லாம் நோக்கும் மரபு நம் மத்தியில் இருப்பினும் கூட,) இச்சொற்களில் நடைமுறையிலும், யதார்த்தத்திலும், வெளிகொணரப்படும் ஆணிய அடையாளத்தை மறுக்கும் வகையில் மனுஷி, புதல்விகள் போன்ற சொற்களை கையாளுவதில் அவ்வளவு அக்கறை கொள்ள வில்லை போல் தெரிகிறது. இந்த இடத்தில்தான் பெண் மொழியிட்ட பிரக்ஞை பெண் படைப் பாளிகளுக்கு இருக்க வேண்டும் என பெண்ணிய சிந்தனையாளர்களால் வலியுறுத்துப்படுவதை நாம் நினைவு கொள்ள வேண்டி இருக்கிறது.

இத்தகைய கவிதைகள் இன்னொரு ஆபத்தையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதாவது பேச வந்த பிரச்சினை பெண்ணிய பிரச்சினையாக இருந்தும் அக்கவிதைகள் எழுதப்பட்ட சொல்லாடல்களின் காரணமாக அக்கவிதைகளை எழுதிய பெண் கவிஞர்களின் பெயரை எடுத்து விட்டால், அக்கவிதை எழுதியவர்களின் பால அடையாளத்தை இனங்காண முடியாத அல்லது ஆண் ஒருவர எழுதிய கவிதைகளாக மிஞ்சி விடும் ஆபத்தும் இருக்கிறது.(உதாரணத்திற்கு. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஆதிராவின் தலைப்பில்லா கவிதையினை (பக்கம் 35) சொல்லலாம் இப்படி சொல்வதற்கு அக்கவிதையில் இடம் பெற்றுள்ள "நான் மனிதனாய் மிருகமாய் கடவுளாய் (?)" எனும் வரிகள் ஏதுவாகின்றன.)

ஒட்டுமொத்தமான சமூகத்திற்காய் பொதுவான நிலை நின்று ஒரு படைப்பாளி என்ற முறையில் குரல் கொடுக்கும் பெண் படைப்பாளிகளின் கவிதைகளும் இத்தொகுப்பில் இருக்கின்றன. அக்கவிதைகளில் பெண்ணிய அடையாளம் திறந்த முறையில் இல்லாவிடினும் அக்கவிதைகள் பேசும் பிரச்சினைகளின் காரணமாகவும் ஆண்களுக்கு சமனாக இப்பிரச்சினைகளை பற்றி பெண்களாலும் எழுத முடியும் என்பதை எடுத்துகாட்டி நிற்பதனாலும் நம் கவனத்தை இத்தகைய கவிதைகள் பெறுகின்றன.

அத்தோடு பெண்ணிய அடையாளத்தை தக்க வைத்து எழுதப்பட்டுள்ள கவிதைகள் என பார்த்தோமானால் அதில் சில கவிதைகள் தாய்களின் குரல்களாக பதிவாக, அத்தாய்மார்கள் தம் "புதல்வர்களுக்காய" அழுகின்ற அளவுக்கு தம் "புதல்விகளுக்காய்" அழவில்லை.

இந்த நிலை நின்று பார்க்குமிடத்து அந்த சில கவிதைகளை எழுதியிருக்கும் பெண் கவிஞர்கள் இன்னும் ஆணில் தங்கியிருத்தல், ஆணை முதன்மைப் படுத்தல் என்ற உணர்வுகளிலிருந்து பிரக்ஞை பூர்வ மாக விடுபடவில்லை என எண்ணத் தோன்றுகிறது.

இந்த குரல்களை கடந்து பாரத்தோமானால், போர் காலத்தில் "பெண்" எனும் ஜீவி எதிர் கொள் ளும் இருப்பையிட்ட நெருக்கடிகள், பெண்ணாய் இருப்பதன் காரணமாக சுயமான இருப்பினூடாக அவள் ஆட்படுகின்ற உணர்வுகள், போர் களத்தில் நின்று போராடும் பெண்களின் பிரகடனங்கள், அதே போர் களத்தில் தன்னுடன் போராடும் தோழிகளுடனான உரையாடல்கள், போர் களத்திற்கு அனுப்பப்பட்ட,-போன, மகளையும் மகனையும் எண்ணி கலங்கும், தைரியமூட்டும்,அல்லது போர் களத்திற்கு போன மகள் தாய்க்கு தைரியமூட்டும் என்ற வகைகளிலான குரல்கள், ஒரே இயக்கத்தில் இருந்தும் தான் பெண் ணாக இருப்பதனால் நிராகரிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட பெண்களின் குரல்கள்,

சமூக பண்பாடு, கலாசார கூறுகளை மீறிய நிலை பற்றி கவலைபடாத குரல்கள்,ஆணின மற்றும் பொருளாதார சமூக கட்டமைப்பில் புலம் பெயர்வு, இடப் பெயர்வு சூழல்களிலும் பெண்ணாய் இருப்பதன காரண மாக சந்திக்கின்ற பிரச்சினைகள் தருகின்ற அழுத்தங்களின் குரல்கள், மறுபுறம் அவ்வாறான பிரச்சினை களை எந்தவிதமான சஞ்சலமின்றி எதிர்கொண்டு ஆணிய சமூகத்திற்கு சவால் விடும் குரல்கள், (இந்த சவால் விடுதல் என்பது ஒரு வகையில் ஆணிய சமூகத் திற்கு எதிரான கலக நடவடிக்கை இக்கவிதை களில் வெளிப்படு வதாகவே நாம் கருதுகிறோம்.) எனப் பலகுரல்கள் கவிதைகளாய் பதிவாகியுள்ளன.

ஆண் இனத்தின் வக்கிரமான முகத்தை என்றைக் குமே ஆணின சக்திகள் ஒத்துக் கொண்டது மில்லை. ஏற்றுக் கொண்டதுமில்லை. அவ்வாறான ஒரு நிலையில், ஆண் என்ற நிலையில் (உ-ம் கல்யாணியின் தலைப்பில்லா கவிதை-பக்கம்.70) நின்று இத்தொகுப்பில் சில பெண்கவிஞர்கள் எழுதிய கவிதைகள வெறுமனே பொது பிரச்சினை களை பற்றி பாடுகின்ற கவிதைகளாக அல்லாமல் ஆண் என்பவனின் நடத்தையில் பொதிந்திருக்கும் வக்கிரத்தை எடுத்துரைப்பது ஆணிய சக்திகளுக்கு எதிரான ஒரு அடியாக விழ, அதே அடி ஆண் - பெண் உறவிலுள்ள சமத்துவமின்மையை எடுத்துரைக்கும் இத்தொகுப்புக்கான பெண் கவிஞர்களின் கவிதை குரல்களின் மூலமும் விழுகிறது.

மேலும்,பெண் உடல் மீதான வன்முறை என்பதை யிட்ட தமிழக பெண் கவிஞர்களின் கவிதைளில் வெளிப்படும் வன்மத்தை விட, அதிகார சக்திகளின் காவலாளிகள் எனும் அங்கீகாரம் பெற்ற அந்நியர் களாலும் சரி (உ-ம், கலாவின் "கோணேஸ்வரிகள" ஆழியாளின் "மன்னம்பரிகள்") படுக்கையறை எனும் வெளிக்குள் கணவர எனும் அதிகாரம் பெற்ற காவலாளிகளாலும் சரி, (உ-ம் மைதிலியின் "பொருள்",) தன் உடல் மீது புரியப் படும் பலாத்காரத்தையும், இயந்திரபாங்கான உறவையும் பேசுகின்ற ஈழத்து பெண் கவிஞரகளின் கவிதைகளில் வெளிப்படும் வன்மம் அழுத்த மிக்கது. என்பதையும் இத்தொகுப்பில் பல கவிதை கள் காட்டி நிற்கின்றன.

இந்த அழுத்தமிக்க வன்மம் என்பது ஈழத்து பெண் கவிஞர்களின் கவிதைகளுக்கான தனித்து வத்தின் முக்கிய கூறாகும்.

இவ்வாறாக பன்முகதன்மைமிக்க ஈழப் பெண்ணின் குரல்கள் கவிதைகளாக இத்தொகுப் பில் பதிவாகியுள்ளன. இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ள அக்கவிதைகளில் வெளிப்படும் மேற்குறித்த குரல்களையும் அனுபவங்களையும் உள் வாங்கி சொல்கையில்தான், இத்தொகுப்பின் பின்னுரை வழங்கியுள்ள வ. கீதா அவர்கள தமிழக பெண் கவிஞர்களின் கவிதைகளை பற்றிச் சொல்வது போல் "தமிழ்நாட்டுப் பெண் கவிஞர்களின் படைப் புக்கள் தன்வயப்பட்ட வெளிப்பாடுகளாக எஞ்சிவிட," அக்கவிதைகளிலிருந்து ஈழத்து பெண்களின் கவிதைகள் வேறுபட்டு நிற்கும் வெளியினையும், அக்கவிதைகள் தனித்து நின்று வெளிப்படுத்தும் சேதிகளையும் நாம் இனங்காணக் கூடியதாக இருக்கிறது.

அதேவேளை கீதா அவர்கள் அதே பின்னுரை யில் சொல்லாத சேதிகள் தொகுப்பில் இடம பெற்றுள்ள கவிதைகளை பற்றிய முன் வைத்திருக்கும் கருத்துக்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள மற்ற கவிதைகளுக்கும் பெருந்தும் என நான் கருதுகிறேன்.

அவர் கூறுகிறார்-

"தமிழ்ப் பேசும் உலகில் வழங்கும் கவிதை மரபு அறியாத புதியதொரு படைப்பையும் அது தாங்கி வருகிறது. காதலும், கற்பும், உடலழகும் தாம்பத்தியமும், வீட்டுழைப்பும், தாய்மையும் பெண்ணுக்குரித்தான பிரத்யேக அனுபவங்க ளாகக் கருதப்பட்ட ஒரு பண்பாட்டில், காலம் ஏற்படுத்திய

உடைப்புக்களை "சொல்லாத சேதிகள்" படம் பிடித்துக் காட்டியது........................."
எனக் கூறிச் சொல்லும் கீதா அவர்கள், அப்பின் னுரையில் இத்தொகுப்பிலுள்ள கவிதைகளை பற்றி சொல்லும் பொழுது-

"கோபமும் ஆவேசமும் மட்டும் ஈழப் பெண்க ளுக்கு விட்டுவைக்கப்படவில்லை. போர்காலம் தந்த நெருக்கடியில் பறிபோன இடங்கள், காட்சிகள், நினைவுகள், ஆகியவற்றைப் பதிவு செய்யும் அவ லக் கடமையை ஏற்ற கவிஞர்களா" காலைச் செம் மையை ரசிப்பதை "மறந்து நேற்று வரையும் அமை தியான காலைப் பொழுது" என்ற கோர உண்மை உலகுக்கு அறிவிக்க வேண்டிய வரானார்கள்.. பறிபோன காலத்துக்கு சாட்சி சொல்ல நேர்ந்த அவர் களுக்கு, வேறொரு பணியும் காத்திருந்தது. போர் தொலைத்த, பாதித்த, காத்திருக்கச் செய்த உறவு களின் உன்னதத்தை மட்டுமின்றி அவற்றின் நிலை யற்ற தன்மையையும் இவர்கள் எழுத வந்தனர்."

இக்குறிப்பில் "போர்காலம் தந்த நெருகக்டியில் பறிபோன இடங்கள்,காட்சிகள், நினைவுகள்." என கூறுகின்ற பொழுது, இத்தொகுப்பில இடம்பிடித்துள்ள அனாரின் **"ஈறல்"** எனும் கவிதையும் ,மல்லிகாவின் **"மீண்டும் அங்கிருந்தேன்"** எனும் கவிதையும் உடனடியாக நம் நினைவுக்கு வருகின்றன.

கீதா அவர்களின் இப்பின்னுரை ஈழப் பெண கவிஞர் களின் போக்கை பற்றியும், தனித்துவத்தை பற்றியும் மிகச் சிறப்பான முறையில் எடுத்துக காட்டுகிறது.

தொகையில் கூடிய அளவில் பெண்ணிய குரல் களாக அதுவும் ஈழத்து பெண்ணிய குரல்களாக இக்கவிதைகள் வெளிப்படுவதின் காரணமாக மங்கை அவர்கள், தொகுத்திருக்கும் "பெயல மணக் கும் பொழுது" எனும் இத்தொகுப்பு மிகுந்த கவனத்தை பெறுகின்றதோடு, பெண்ணிய இலக்கிய பிரதிகள் என்பதற்கான உரையாடலுக்கு சிறந்த முறையில் உதவி புரியும் ஒரு தொகுப்பாகவும் விளங்குகிறது. இதற்கு காரணம் அத்தகைய உரையாடல் மேற் கொள்வதற்கான அதிக அளவான சாத்தியங்களை இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள, கவிதைகள் தம்மகத்தே கொண்டுள்ளன என்பதையும் இங்கு அழுத்தி சொல்ல வேண்டி இருக்கிறது.

இக்கட்டுரை குறிப்பின் மூலமும், இக்கட்டுரை குறிப்பில் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள சில கவிதைகளை பின்னிணைப்பாக கொடுத்திருப்ப தன மூலமும் மங்கை அவர்கள் தொகுத்த "பெயல மணக்கும் பொழுது" எனும் ஈழப் பெண் க்விஞர்க ளின் தொகுப்பு, மேலும் வாசகர்களால் தேடி படிக்க பட்டு, ஈழத்து பெண்ணிய எழுத்து சம்பந்தமாக, பல்வேறு தளங்களில் உரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

பின்னிணைப்பாக............

## மேலும் சில இரத்தக் குறிப்புகள்

மாதம் தவறாமல் இரத்தத்தைப் பார்த்து
பழக்கப்பட்டிருந்தும்
குழந்தை விரலை அறுத்துக் கொண்டு
அலறி வருகையில்
நான் இன்னும் அதிர்ச்சியுற்றுப்
பதறுகின்றேன்
இப்போதுதான் முதல் தடவையாக காண்பது
போன்று

"இரத்தம்" கருணையை பரிதவிப்பினை
அவாவுகின்றது
இயலாமையை வெளிப்படுத்துகின்றது

வன் கலவி புரியப்பட்ட பெண்ணின் இரத்தம்
செத்தக் காட்டுப் பூச்சியின் அருவருப்பூட்டும்
இரத்தமாயும்
குமுறும் அவளுயிரின் பிசுபிசுத்த நிறமாயும்
குளிர்ந்து வழியக் கூடும்

கொல்லப்பட்ட குழந்தையின்
உடலிலிருந்து கொட்டுகின்றது இரத்தம்
மிக நிசப்தமாக
மிகக் குழந்தைத் தனமாக

களத்தில்
இரத்தம் அதிகம் சிந்தியவர்கள்
அதிக இரத்தத்தை சிந்த வைத்தவர்கள்
தலைவர்களால் கௌரவிக்கப்பட்டும்
பதவி உயர்த்தப்பட்டும் உள்ளார்கள்

சித்திரவதை முகாம்களின்
இரத்தக் கறைபடிந்திருக்கும் சுவர்களில்
மன்றாடும் மனிதாத்மாவின் உணர்வுகள்
தண்டனைகளின் உக்கிரத்தில்
தெறித்துச் சிதறியிருக்கின்றன.

வன்மத்தின் இரத்த வாடை
வேட்டையின் இரத்த நெடி
வெறிபிடித்த தெருக்களில் உறையும் அதே
இரத்தம்
கல்லறைகளில் கசிந்து காய்ந்திருக்கும் அதே
இரத்தம்
சாவின் தடயமாய்
என்னைப் பின் தொடர்ந்து கொண்டடே
இருக்கிறது.

- அனார்

ஆயிரம் மார்க்குகளை
மணியோடரில் அனுப்பிவிட்டு
இரவில் விழிமூடாமல்
வேலைக்கும் போகாமல்
அத்தானே நீ அங்கு
அவசரத்தில் காத்துள்ளாய்

பத்தாம் திகதியன்று
பதிவுத்திருமணம் பின்
மூன்று நாட்களில்
பெரிய கொண்டாட்டம்
காட்டும் அடிச்சாச்சு
கலியாண வீட்டிற்கு
கமரா மன்னுடனும்
கதைச்சு முடிச்சாச்சு
நேற்று நெடுநேரம்
தொலைபேசியில் நீ.....

வெள்ளைத் தோலும்
வெளியில் ஆடித்திரியாதவளும்
வேண்டுமென்றாய்
உன் பணத்தில்
நான் மொஸ்கோ வந்திறங்கி
பதின்மூன்று மாசமாச்சு.

இருபது மாசமாய்
வாசுகி இங்கு
படாத பாடு படுகிறாள்

கமலாவின் கதையள் பற்றி
கனக்கச் சொல்லியுள்ளன்
எடுப்பம் எடுப்பமென்று
அகலியாவின் அண்ணை
எண்ணூறு டொலர்களை அனுப்பி
அவளை இன்னமும்
ஏன் தான் எடுக்கவில்லையோ?

ஏஜென்சிக்காரன் நேற்று
எனைத்தேடி வந்தான்
விடிய விடியப் பேசு
விரைவில் அனுப்பிறன் என்றான்
பத்தாம் திகதிக்கு
பதினாறு நாள்தானே இருக்கு
அதனாற்தான் அன்றிரவை
அவனோடை கழிச்சிட்டன்

உனக்காக நானென்று
உறுதியான பின்பு
அவசரமாய் எழுதுகிறேன்
இம் மடலை இன்று
அத்தானே நான்
உன்னிடத்தில் வந்திடுவேன்
பத்தாம் திகதிக்கு முன்பு.

**– நிருபா**

# மீண்டும் அங்கிருந்தேன்


நன்றாய் இருந்தது எல்லாம்......
இனிய பழைய நாட்களைவிடவும்
நிலத்திற்காகவும் நிலைமைக்காகவும்
சண்டைகள் இனியும் இல்லை.
சொந்த மண்ணில் மகிழ்ச்சியில்
மனிதர்கள் வாழ்ந்தனர் அங்கு.
"ஓம் அதை அவர்கள் செய்துதான்
விட்டார்கள்"
யுத்தத்தை நிறுத்திவிட்டார்கள்.
"போதும் போதுமிந்த சவம்பிடித்த யுத்தம்"
என்று சொல்லித் தான் விட்டார்கள்.
யாழ்பாணத்திலும் நிலைமை வழமையாம்
திரும்பவும் நானங்கு போக முடியுமாம்!
வழமைபோல் ஓடினாள்
யாழ்தேவியாள்.
நெரிசலும் இல்லை, வரிசையும் இல்லை
ஜன்னலோர மூலையில்
எனக்கொரு இடம் கிடைத்தது.
அந்த வெக்கையிலும் பணம் இனித்தது
திரும்பும் இடமெல்லாம் நல்லாய்த்தான்
இருந்தது.
போய் இறங்கிய பின்னர்
எல்லாம் எனதாய் உணர்ந்தேன்.
பாருங்கள்
எவ்வளவு பெரிய வித்தியாசத்தை
இந்த அமைதி (சமாதானம்) கொடுத்துவிடுகிறது.
எல்லாமே இலகுவாகையில்
கைபடும் தூரத்தில் எல்லாம் இருக்கையில்
சொர்க்கம் இந்த மண்ணில் வருகுதே!
சாதிமத பேதம் இல்லை
உண்ண உணவு நிறைய இருப்பதால்
பசியும் துயரும் பிணியும் இல்லை.
மெத்த மழை நித்தம் பெய்வதால்
துயரம் இல்லை
விவசாயிகள் மனசில் துயரம் இல்லை.
வெங்காயம் மிளகாய் மரக்கறி வகைகள்
புழங்களுக்கும் குறைவில்லை.
இவை ஒன்றுக்குமங்கு வரியுமில்லை.
உடைத்திருந்த நகரைப் பார்க்கப்
போனேன்.
போகிற வழியினில் கோவில்கள் கண்டேன்.
அழகான இந்த மண்ணில் போரென்று
சொன்னவர் யார்?
அதே அதே அழகுடன் எல்லாம் இருந்தன.
யாழ் நூலக வாசலில்
வண. பிதா லோங்கிற்கு வணக்கம்
தெரிவித்தேன்.
"எதுவுமிங்கு எரிந்துவிடவில்லை"
சொன்னார் பாதிரியார் நிமிர்ந்தபடி.
வீரசிங்கம் மண்டபத்திற்கு போனேன் பிறகு.
கட்டி இருந்தார்கள் இனி என்றுமே விழாதபடி.
அன்று அங்கு ஒரு பெண்கள் கூட்டம்
நிறையத் தோழிகளைக் கண்டதில் மகிழ்ச்சி.
பாத்திமா அங்கிருந்தாள்
சித்தியும் நயீமாவுடன்
"நாங்கள் மீண்டும் எங்கள் மண்ணில்"
புன்னகை தவழச் சொன்னாள் சகீமா.
என்னைக் கண்டதில் சாந்தினி மகிழ்ந்தாள்.
"பெண்களின் நிலைமை எப்படி?"
என்றேன்.
"எமக்கெல்லாம் நல்லகாலம்"– என்றவள்
"பெண்களாக மதிக்கப்படுகிறோம்"
"பெருமை தரும் விஷயந்தானே"
நிகழ்ச்சி ஒழுங்கு வேலைகளில் செல்வி
இருந்தாள்.
சிவரமணியோ கவிதை ஒன்றைப் படிக்க
இருந்தாள்.
"சமத்துவம் கௌரவம் மனித நேயம் இவற்றுடன்
அவர்களின் அடையாளத்துடன்
பெண்களைப் பார்க்கையில்
எத்தனை மகிழ்ச்சி, எத்தனை மகிழ்ச்சி"
என்று சொல்லி எதிரொலித்திடும் ஒரு குரல்.
திரும்பினேன்.
வழமையான பிரகாசம் மின்ன
ராஜினி நின்றாள்.
சந்தோசம் மிஞ்சிக் கத்தவும் முடியவில்லை.
விழித்துவிட்டேன்.
கண்டது கனவு.

- மல்லிகா

## அம்மா வந்துவிடேன்

அரபு நாட்டு அசிங்கங்களைக் கழுவி
நீ அனுப்பும் ரியாலும், டினாரும்
வேண்டாம்
நீ வேண்டும்
உன் மடியில் முகம் புதைத்து
உன் செல்ல மகள் ஆறுதலடைய வேண்டும்
மொட்டாக இருந்த நானிப்போ
மலர்ந்து புத்தம் புது மலராய்....
இப்போதெல்லாம் என்னிதயம்
உன் அரவணைப்புக்காய், அதிகமாய்
ஏங்குகிறது
வந்துவிட்டேன் தாயே!
அக்காவின் கணவரின்
அந்த இரகசியத்
தொடுகைகள்
அடுத்த வீட்டுக் கிழட்டு மாமாவின்
அர்த்தமுள்ள பார்வைகள்
இளவட்டங்களின் சின்னச் சின்ன
கண் சிமிட்டல்கள்
எதற்குமே அலட்டிக் கொள்ளாத
என் குடிகார அப்பாவோடு
நானும், இளையதுகளும்
நீ வரத்தாமதிக்கும் ஒவ்வொரு கணமும்
எனக்கு 'அக்கினிப் பரீட்சை' தான்
உன் அழகு ரோஜாவின் இதழ்கள்
பலவந்தமாய் உதிர்க்கப்பட்டு விடலாம்
ோம வல்லூறுகளின் பார்வையிலிருந்து நான்....
நீ வரும் போது உன் மகள்
அக்னிக்கு 'ஆகுதீ' ஆகிவிடுவேனோ
என்ற பயம்
அதனால் வந்துவிடேன் அன்னையே
கூழோ, கஞ்சியோ உன்னோடு போதும்.

- லுணுகலை ஹஸீனா புஹா


COSM TRE
Whole sale and in Beauty Care Items
Curos, salon Equipments, Electrical &
No : 23/22 Sea Street, Colombo - 11, Sri Lanka. TP : 094 11 2386484 Telefax : 094 11 2386484



ஒரு சந்தர்ப்பத்தில் நண்பர் கிருஷ்ண மீராவுடன் நுவரேலியா நகர சபை மண்டபத்தில் ஒரு பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

அன்று தலைநகருக்குத் திரும்பும் போது மாலை முற்றாக மயங்கி இருள் பரவிய நேரம். வாகனப் போக்குவரத்தும் குறைவு.

நீண்ட தூரம் பிரயாணம் செய்த பிறகு திடீரென்று ஓரிடத்தில் பஸ் வண்டி பழுதடைந்தது. பெரும்பாலும் அரசாங்கப் பேருந்துகளுக்கு இருக்கிற தொற்று நோய்தான் இது!

கும்மிருட்டில் எங்கே நிற்கிறோம் என்றறிய முடியாத அந்த நேரத்தில் வேறொரு பஸ் வண்டி வந்தால் தான் பிராயணத்தைத் தொடரலாம். அது எங்களுடைய அதிர்ஷ்டத்தைப் பொறுத்துள்ளது. பளீரென்று லயிற் வெளிச்சம் அதிர்ஷடத்தைத் தருகிறது.

“தாஜ்ஜண்ணே! பள்ளத்தில் ஒரு தமிழ் ஸ்கூல் போல் தெரிகிறது.....பளீரென்று லைட் வெளிச்சம். பேசாம அங்கே தங்கியிருந்து விட்டு விடிஞ்சப்புறம் போவமா.......?”

பாடசாலையோடு ஒட்டிய அதிபருடைய விடுதிக்குப் படிகள் இறங்கினோம். எங்களைத் தொடர்ந்து வேறு மூன்று பிரயாணிகளும் நடந்தார்கள்.

சற்று நேரத்தில் நாங்கள் எந்த இடத்தில் தரித்து நிற்கிறோம் என்று அறிய முடிந்த போது, எங்கள் மகிழ்ச்சிக்கு எல்லை கடந்தது.

ரோட்டில் அரைக் கிலோ மீற்றர் நடந்தால் மேட்டில் ஒரு நீள்சதுர பழைய ஒற்றைக் கட்டிடம் இருக்க வேண்டும். அன்றைய தோட்டப் பாடசாலை அமைப்பு அதுவே. நாங்கள் ஆரம்பக் கல்வியைக் கற்ற இடம்!

அக்காலத்தில் ஐந்து வகுப்புக்களுக்கும் ஒரே ஒருவர்தான் ஆசிரியர் ஹெட் மாஸ்டர். இவர்தான் இராஜநாயதம் மாஸ்டர்.

அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, சகல வசதிகளையும் உள்ளடக்கிய இந்தப் புதிய பாடசாலை கிடைத்திருக்கிறது!

அதிபர் முன் அறையில் பத்திரிகையில் மூழ்கியிருந்தார். எங்கள் அரவம் கேட்டு வெளியே வந்து சந்தேகப் பார்வையுடன், ‘உங்களுக்கு என்ன வேண்டும்?’ என்ற தோரணையில் நின்று கொண்டிருந்தார்.

“.......... சேர் மேலே ரோட்டில் நாங்கள் வந்த பஸ் பிரேக் டவுன். பாடசாலையில் தங்கியிருந்து விடிந்ததும் போகலாமா.......? என்று நினைத்து வந்தோம்...... நாங்கள் இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள்!”

அதிபர் ஒரு கணம் யோசித்தார்.

“ஐடென்டி....கார்ட் இருக்கா?”

அது இல்லாவிட்டால் தான் வாழ்க்கையே இல்லையே!

இருவரும் அடையாள அட்டைகளைக் காட்டினோம்.

எங்களுடன் வந்தவர்களும் ஐடென்டி நிரூபித்து அனுமதி பெற்றுக் கொண்டனர்.

# இராஜநாயகம் மாஸ்டரின் இலட்சியம்

-ப. ஆப்டீன்

"ஆசிரிய விடுதியில இடமில்ல..... நீங்க மண்டபத்தி லேதான், பெஞ்சுகளை இழுத்துப் போட்டுத் தூங்க வேண்டியிருக்கும். அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க..... பஸ் திருத் தப்பட்டுப் புறப்படும் போது, நீங்களும் போக வேண்டும்.... சரிதானே!"

"அது இப்போதைக்கு நடக்காது சேர்..... விடிஞ்சாப் பிறகுதான்..... எல்லாம்....."

மண்டபத்திற்குள் புகுந்து நீட்டு பெஞ்சுகளைப் பொருத்திப் படுக்கையை ஒழுங்கு செய்தோம்.

உடைகளை மாற்றி கைகால் அலம்பக் குளியலறைப் பக்கம் போனால், அமுக்கும் துர்நாற்றமும் மூக்கைத் துளைத்தது. அவசர அவசரமாக வந்து படுக்கையில் சற்று நேரம் இருந்துவிட்டு, பிரயாணப் பையிலிருந்து இடியப்பப் பொட்டலங்களையும், தண்ணீர்ப் போத்தலையும் வெளியே எடுத்துச் சாப்பிடத் தொடங்கினோம். முடியவில்லை.

குப்பையில் போடுவதற்காக மெல்ல எழுந்து சென் றோம். காலில் ஏதோ தட்டுப்பட்டு உருண்டது. அது ஒரு சோடாப் போத்தல். தட்டுப்பட்டதில் அதில் இருந்த அரை வாசிச் சோடாவும் நிலத்தில் சிந்தியது.

இந்த மண்டபத்தைக் குப்பைக் கூடமாகப் பாவிக்கி றார்களோ என்ற ஐயம் எமக்கு எழுந்தது.

சிகரட் துண்டுகளும், பேப்பர் துண்டுகளும், சீட்டுக் கட்டிலிருந்து நழுவிக் கீழே விழுந்து மிதிப்பட்டுக் கிடந்த கார்ட்டுகளும்......

வெளியே பாடசாலைச் சுற்றுப் புறமும் கவனிப்பா ரற்றுக் 'காடுமண்டி' இருளோடிப் போய்க் கிடந்தது.

திடீரென்று ஒரு வாகனம் வந்து நின்ற மாதிரிச் சத்தம் கேட்டது.

அதிபர் வந்து மண்டபத்தை எட்டிப் பார்த்துவிட்டுப் படியேறி மேலே போய், நிறுத்தப்பட்டிருக்கும் பழுதடைந்த பஸ் வண்டியைப் பார்வையிட்டு வந்து, தொலைபேசி மூலம் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தார்.

மேலே வந்து நின்ற வாகனத்தில் சிலர் பிரயாணத் தைத் தொடர்ந்தனர். மிகுதியாக இருந்தவர்கள் பஸ் வண்டியிலேயே தூங்கி விழுந்தனர்.

கிருஷ்ண மீராவும் நானும் பிரயாணப் பைகளைத் தலைக்கு வைத்து உறங்க முயன்றோம். களைத்துப் போன எங்களுக்கு ஓய்வு தேவையாக இருந்தது.

அசௌகரியம், மகிழ்ச்சியின்மை காரணமாகத் தூக்கம் வர மறுத்தது. வெளியில் பனிமூட்டம் சூழலை மறைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறது.

ஆனால், எங்களுடன் வந்த மூவரும் மண்டபத்தில் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆசிரிய விடுதியில் இன்னும் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

"கிருஷ்ண மீரா என்ன பாடசாலையும் சுற்றுப் புறமும் இப்படிக் குப்பைக் கோலமாய்க் கெடக்கு.....?"

மீரா நீண்ட நேரமாக மௌனம் சாதித்துக் கொண்டி ருந்துவிட்டு-

"தாஜ்ஜண்ணே! நாம் ஒண்ணும் பேசக் கூடாது.... ஆமா நீங்க எந்த ஒலகத்திலே இருக்கிறீங்க.... இது வந்து அந்தப் பழைய இராஜநாயகம் மாஸ்டர் யுகம் இல்ல...... அப்புறம் நீங்க ஒண்ணும் கண்டுக்காதீங்க..... உங்க துப்பறியும் நிபுணத்துவத்தைக் காட்டாதீங்க. காலப் போக்கில் எல்லாம் வெளிச்சத்துக்கு வந்து தரம் உயர ஆவன முயற்சிகளை மேற் கொள்வோம்......"

மீரா இலேசாகச் சிரித்தார்.

இராஜநாயம் மாஸ்டர் யுகம் என்று மீரா குறிப்பிட்டதும் எனது சர்வாங்கமும் ஒரு கணம் புல்லரித்து விட்டது.

'சே அந்த மனிதனைப் பார்த்தே படிக்க வேண்டிய விடயங்கள் எவ்வளவோ இருந்தன.'

காலங் கடந்து அந்தப் பழைய பாடசாலையை அரசு பொறுப்பேற்றதும், வயதைக் காரணம் காட்டி இராஜநாயகம் மாஸ்டரைக் காய் நகர்த்திய விதம்- அந்தச் சோகக் காட்சி எனக்கு இன்றைக்கும் உள் மனதைக் குத்திக் கிளறிக் கொண்டிருக்கிறது.

❖❖❖

"இன்று நாற்பது வருட ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்து விட்டு ஓய்வு பெறுகிறேன். பாடசாலை சம்பந்தப் பட்ட அனைத்து விபரங்களும் பூரணப்படுத்தப்பட்டு அலுவலகத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டுள்ளன...."

என்று மட்டும் பாடசாலைச் சம்பவத்திரட்டுப் புத்தகத் தில் குறிப்பிட்டிருந்தாலே போதும். ஆனால், இராஜநாய கம் மாஸ்டருக்கு அது திருப்தியில்லை. இவ்வளவு காலம் ஓர் இலட்சியத்தை முன்னோக்கி அரும்பணியாற்றியுள் ளார். அந்தப் பணி தொடர வேண்டும் என்று மானசீகமாக விரும்பியுள்ளார். அந்த விருப்பத்தை நிரந்தரமாகப் பதிவு செய்ய வேண்டும். இனிவரும் அதிபர்கள் ஆசிரியர்கள் செவ்வனே இயங்க வேண்டும்.

தீரயோசித்துவிட்டுத் தூரநோக்குடு சம்வத்திரட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து விட்டார். எவரும் இதனை ஒரு தேவையற்ற குறிப்பு என்று நிராகரிக்க முடியாது.

அலுவலகத்தையும் பாடசாலையையும் கவனமாகப் பூட்டினார். இறுதியாக ஒரு முறை தன் பார்வையைப் பாடசாலையிலும், சுற்றாடலிலும் செலுத்திவிட்டு, சாவிக் கொத்தைத் தோட்டத்துப் பெரிய கிளாக்கர் ஐயாவிடம் ஒப்படைக்கும் படி, பொறுப்பேற்க வந்திருக்கும் *சீனியர்* அஸிஸ்டன்ட் எட்வின் பர்னான்டுவிடம் கையளித்தார். இராஜநாயகம் மாஸ்டர்.

பாடசாலையும் சுற்றுப்புறமும் பளிச்சென்று சுத்தமாகக் காட்சியளித்தன.

மாஸ்டர் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, கண்களையும், மூக்குக் கண்ணாடியையும் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார்.

அன்று முப்பத்தோரந் திகதி மாஸ்டருக்குச் சேர வேண்டிய அந்த மாதச் சம்பளமும், போனசும் கொடுத்தாயிற்று. சீனியர் அவரது கையெழுத்தைப் பெற்றுக் கொண்டார். "எவ்ரிதிங் இஸ் ஓகே?" எட்வின் பர்னான்டு கை குலுக்கி விடை பெற்றார். இனி நாளை முதலாந்திகதி தொடக்கம் அது அரசாங்கப் பாடசாலை. பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சைப் பெற்ற மூன்று மலையக இளைஞர்கள் அரசாங்க நியமனம் பெற்று ஆசிரியர்களாகப் பொறுப்பேற்கிறார்கள்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' தவிர்க்க முடியாததுதான்.

இராஜநாயகம் மாஸ்டர் இரண்டு நாட்களுக்கு முன்பே சாமான் சட்டு முட்டுகளுடன் குடும்பத்தைத் தனது சொந்த ஊர் மாத்தளைக்கு அனுப்பிவிட்டிருந்தார்.

பாடசாலையை விட்டு வெளியேறியவர், படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தார். அதுவும் எண்ணினாற் போல நாற்பது படிகள்!

பதினைந்து படிகளைத் தாண்டியதும் குறுக்கே கிரவல் ரோட். இவர் இறங்குவதைக் கண்டு கொழுந்துப் பெண்கள் கும்பலாக நின்று கொண்டிருந்தனர். பழைய மாணவிகள், பிரஜாவுரிமை காரணமாக ஐந்தாம் வகுப்போடு கல்வியை இடை நிறுத்தம் செய்தவர்கள்.

"சேர் மனசுக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு. நீங்க படிச்சுக் குடுத்த மாதிரி யார் சேர் இனிச் செய்யப் போறாங்க....?"

கூடைகளில் இருந்து கொழுந்தை கொட்டுவது போல, ஆதங்கத்தைக் கொட்டினர்.

"அப்படிச் சொல்லாதீங்க பிள்ளைகளா! நாளைக்கு மூன்று மாஸ்டர்மார் வாராங்க..... பாடசாலைக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. எங்கட முயற்சிகள் வீண் போகல்ல. இனி வாரவங்க என்னென்ன செய்யணும்னு எழுதி வைச்சிருக்கேன்....... ஒவ்வொரு வருஷமும் வகுப்புக்கள் ஏறி ஓ. எல் வரைக்கும் வந்துவிடும்....."

ஆசிரியர் அடுக்கிக் கொண்டே போனார்.

"அதெல்லாம் வந்தாலும் சேர் ஒங்கக்கிட்டே படிக்கிறதுக்கு எங்க புள்ளைகளுக்குக் கொடுத்து வக்கலியே சேர்."

"அதுக்கு என்ன செய்யிறது புள்ள தலையெழுத்த மாத்த முடியுமா.....? புள்ளங்களை நல்லாப் படிக்க வைங்க..... சரி சரி எனக்கும் நேரமாகுது...... ஒங்களெல்லாம் சந்திச்சதிலே மனசுக்கு சந்தோஷமாயிருக்கு...... எங்கே யாரையும் பாக்காம போறேனோன்னு கவலையாயிருந்திச்சி. இப்ப மனசுக்கு ஆறுதலாயிருக்கு...... உங்க எல்லாருக்கும் வாழ்த்துக்கள்!......."

நான்கு தசாப்த காலமென்பது இலேசா? எத்தனை எத்தனை மாணவர்களை உருவாக்கியிருப்பார்!

ஆதங்கங்களைக் கொட்டிய பிறகு, தலைக்குப் பின்னால் தொங்கிக் கொண்டிருந்த கூடைகள் 'கிளிக் கிளிக்' கென்று கிறீச்சிட்டன! அவர்கள் வேகமாக நடந்து மறைந்தனர்!

இராஜநாயகம் மாஸ்டர் கிரவல் ரோட்டைக் குறுக்காகக் கடந்து மீண்டும் படிகள் இறங்கினார். இறங்குவது இலகு. ஏறப்போனால் தான் பொல்லாத களைப்பு, மூட்டுவலி என்று எல்லாமே வரிசையாக வந்து தொல்லை கொடுக்கும்.

தோட்டப் பாடசாலை குன்றின் மேல் மட்டத்தில் தோற்றமளித்துக் கொண்டிருந்தது. மெயின் ரோட்டிலிருந்து, இந்த வெண் மணல் பாதை பாடசாலைக்குச் சுற்று வழி இரண்டு மூன்று சுற்று சுற்றினால்தான் பாடசாலை முகப்பில் கொண்டு போய் விடும். வயதானவர்களுக்குச் சிரமம்தான்.

உண்மையில் அந்த மணற்பாதை பெரிய கிளாக்கர் ஐயா பங்களாவுக்கு அவரது கார் போகும் ரோட்.

மரங்களும் கொடிகளும் தேயிலைச் செடிகளும் தனித் தனியே அசைந்து அசைந்து மாஸ்டருக்குப் பிரியாவிடை கூறுகின்றன.

பாடசாலைச் சுவர்களுக்கும், கூரைக்கும், யன்னல்களுக்கும் கூட, வாயிருந்தால் ஓவென்று அழுது குழறியிருக்கும்!

இராஜநாயகம் மாஸ்டருக்கு எதிர்ப்புக் குரல்களும் இருந்தன!

"பெரிய அளவில் பிரியாவிடைக் கூட்டம் ஒழுங்கு செய்வதற்கு, அவர் என்ன பெரிய தொரையா......? "சாதாரண தோட்டத் தொழிலாளர் புள்ளங்களுக்கு அ..... ஆ...... சொல்லிக் குடுக்கிற ஒரு சின்னச் சம்பளக் காரன் தானே! அவருக்குப் போய்"

"காலங்காலமா..... பள்ளிக்கூடத் தோட்டத்தைச் சொரண்டிக்கிட்டு, இப்ப வயசு போனதும் பென்சனல போறாரு....."

"அவர் போனா நமக்கென்னையா.... அதான் அரசாங்கம் கட்டிடம் கட்டிக்கிட்டு இருக்கே..... மேல் வகுப்புகள், எத்தனையோ மாஸ்டர்மார் வரப்போறாங்க......"

இப்படிப் பல..... பாமரத்தனமான...... ஏறிய பிறகு ஏணியை உதைக்கும் பேச்சுகளுக்கும், அர்த்தராத்திரியில் குடை பிடிப்பவர்களின் விமர்சனங்களுக்கும் அவர் செவிசாய்ப்பதில்லை.

உண்மையில் அரசு பொறுப்பேற்றுப் புதிய கட்டிடம் எழும்ப அவர்தான் ஆதார சுருதியாக இருந்துள்ளார் என்பது அவர்களுக்குத் தெரியுமா!

இப்படியும் சில கருத்துக்கள் காற்றில் மிதந்தன:

"தங்கமான மாஸ்டர் போறார்டா! போன பிறகுதான்டா அருமை தெரியும்!"

"போன பிறகு இனி என்ன நடக்கப் போகுதுன்னு பார்க்கத் தானே போறோம்.....!"

"ஒரு உள்நாட்டு தேசியப் பத்திரிகை ஒன்றில் மாஸ்டரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தோட ஒரு செய்தியைப் போடக் கூட வக்கில்லாத...... நன்றி கெட்ட ஜென்மங்க......" இப்படியும் ஒரு கொதிப்பு.

பத்து நிமிடங்களில் படிகள் இறங்கி அரசாங்கப் பிரதான பாதையில் பஸ் நிறுத்தத்தை அடைந்ததும் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். பஸ் வரும் நேரம்தான்.

பஸ் தரிப்பில் பக்கீர் அலி நின்று கொண்டிருந்தார்.

"ஆ! மாஸ்டர் இண்டக்கி பயணமா? சொல்லவே இல்லியே!.... என் குடும்பம் சார்பில் ஏதும் தவறுகள் நடந்திருந்தா நீங்க மன்னிக்கணும்......."

இருவருக்குமே ஒரு பழைய, இனிய சம்பவம் ஞாபகத்திற்கு வந்து நெருடியது.

டீ மேக்கர் பக்கீர் அலியின் மூத்தமகன் அப்பொழுது பாடசாலையில் கீழ்ப்பிரிவில் சேர்ந்து மாதங்கள் ஓடி விட்டன!

பக்கீர் அலி 'பாலபோதினி' தொடக்கம் தேவையான கொப்பி புத்தகங்கள் பென்சில்கள் அனைத்தும் வாங்கிக் கொடுத்திருந்தார்.

ஆனால், இராஜநாயகம் மாஸ்டர் கீழ்ப்பிரிவுக்குக் கல்வி கற்பிக்கும் முறை வேறு.

பாடசாலை மண்டபம் எப்பொழுதும் மிகத் தூய்மையாகத் தான் இருக்கும். மாணவர்கள் செருப்பு, சப்பாத்துக்களைக் கூட வெளியே கழற்றி வைத்துத்தான் உள்ளே வகுப்புகளுக்கு வரவேண்டும்.

கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கு, சுத்தமான கல்லாறு வெள்ளை மணல் பரப்பப்பட்டிருக்கும். மாஸ்டர் ஒவ்வொரு பிள்ளையினதும் ஆட்காட்டி விரலைப் பிடித்து வெள்ளை மணலில் அ. ஆ. இ. ஈ என்று சொல்லிச் சொல்லி எழுத்து எழுதப் பழக்குவார்.

பக்கீர் அலியின் மகனும் சீக்கிரத்திலேயே எழுத்துக்களை எழுதப் பழகிவிட்டான். ஆனால், இன்னும் கொப்பிகளில் எழுதத் தொடங்கவில்லை.

'விரலை மணலில் அழுத்தி எழுதிப் பழகுவதில் ஓர் அபார சக்தி இருக்கிறது' என்று மாஸ்டர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்.

ஒருமுறை பக்கீர் அலியின் மனைவி பாடசாலையில் மாஸ்டரைச் சந்தித்து மகன் கொப்பிகளில் ஒன்றும் எழுதிப் பழகவில்லை என்று கௌரவக் குறைவாகக் கத்திப் பேசிவிட்டாள்.

மாஸ்டர் மிகவும் பொறுமையாகவும், மரியாதையாகவும். "உங்கள் மகன் கெட்டிக்காரன். உரிய காலத்தில் கொப்பிகள் நிறைய எழுதிக்காட்டுவான். நீங்கள் உங்கள் மகனின் கல்வியில் காட்டும் அக்கறைக்கு நன்றி போய் வாருங்கள்..."

மாஸ்டர் தான் மௌனத்தைக் கலைத்தார்.

"மிஸ்டர் பக்கீர் அலி அதெல்லாம் பழைய கதை இப்ப உங்கள் மகன் எப்படி?"

"கெட்டிக்காரனாக்கி விட்டீங்க.....நன்றி." பஸ் வண்டி வந்து கொண்டிருக்கிறது.

புனித நகருக்கு ஒரு டிக்கட். போனதும் பாமசியில் 'பிரசர்' குளிசைகள் வாங்கிக் கொண்டு நகரில் ஒரு சுற்று. நண்பர்கள் சந்திப்பு. அப்புறம் பாரிஸ் ஹோட்டலில் பகலுணவு.

இனி 'மனப் புகையைக் கக்கிக் கொண்டே போக, சனம் இல்லாத புகைவண்டிதான் பொருத்தம். very slow Train to Matale......' 'அப்பாடவென்று கைகால்களை நீட்டிக் கொண்டு வசதியாகப் போகலாம். சொந்த ஊருக்கு எத்தனை மணிக்குப் போய்ச் சேர்ந்தால் தான் என்ன!'

❖❖❖

பளீரென்று விடிந்தது.

சரியாக நித்திரை இல்லை.

இருவருமே இராஜநாயகம் மாஸ்டரைப் பற்றியே சிந்தித்திருக்கின்றோம்.

"முடிந்த வரைக்கும் சிரமதானம் மூலம் பாடசாலைக்

குப்பைகளை அகற்றுவோமா?" என்று கிருஷ்ணமீரா கேட்டார். தொட்டிற் பழக்கம்.

நான் மறுப்புக் கூறவில்லை.

இராஜநாயகம் மாஸ்டர் மதுரையில் பி. யூ. சி கற்றுக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக சோவியட் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தமது ரஷ்ய விஜயத்தின் போது, அவருக்கு மூன்று விடயங்கள் கவர்ந்துள்ளது.

ரஷ்ய மாணவர்கள் வாகனப் பிரயாணம் செய்து இறங்கும் போது, இருந்த இருக்கையை கைக்குட்டை யால் தூசு தட்டித்தான் இறங்குவார்கள். மற்றவர்கள் உட் காரும் போது, அழுக்காக இருக்கக் கூடாது என்பதற்காக!

மாணவர்கள் வழியில் நடக்கும் போது, அழுக்குப் பேப்பர்த் துண்டுகளைக் கண்டால் பொறுக்கி உரிய குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுத்தான் செல்வார்கள்.

மாஸ்டரின் மற்றுமொரு அவதானம், ரஷ்ய மாணவர் கள் நிறைய வாசிப்பார்கள் ரோட்டில் நடக்கும் போதும், பிரயாணம் செய்யும் போதும் கிடைக்கும் பொன்னான ஓய்வு நேரத்தை வீணாகக் கழிக்கமாட்டார்கள்.

இராஜநாயகம் மாஸ்டர் முடிந்தவரைக்கும் இந்தக் கலாசாரத்தைக் கடைப்பிடித்து வந்துள்ளார்.

அவரது பழைய மாணவர்களான எங்களுக்கு இந்தப் புதிய பாடசாலை மண்டபத்தைப் பார்த்ததும் அருவருப் பாக இருந்தது.

இராஜநாயகம் மாஸ்டர் பாடசாலைச் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் அச்சொட்டாக எழுதிய வாசகங்கள் எங்கள் கண்முன்னே பளிச்சிட்டன.

'புதிய கட்டிடத்தில் எதிர்வரும் ஜனவரி தொடக்கம் 'ஆறாம் ஆண்டு' தொடங்கி, ஆண்டு தோறும் வகுப்புக் களை ஏற்றி ஓ. எல். வரைக்கும் கட்டிட வசதி அமைந்தி ருக்கிறது.

மாணவர்களை ஊக்குவித்து வருடாந்த தமிழ்த்தினப் போட்டிகளில் ஈடுபடச் செய்வதோடு, சான்றோரின் ஞாபகார்த்த விழாக்கள், கலை இலக்கியத் துறை சார்ந்த பயிற்சிப் பட்டறைகள் ஏற்பாடு செய்வது ஆசிரியர்களின் கடமை.

பெரும்பாலும் அரசாங்க பாடசாலைகளில், ஆசிரியர் கள் தமது லீவு, பதவியுயர்வு, சம்பள உயர்வு, விடுதி வசதி கள், தமது சுய மேற்படிப்பு, டியூசன் வருமானம்....... என்று இவற்றை மட்டுமே கவனத்திற் கொண்டு இயங்கி வரு வதை நான் கவலையுடன் அவதானித்து வந்துள்ளேன்.



இவை அனைத்தும் தேவைதான்...... ஆனால், மலையக மாணவரின் கல்வி மேம்பாடு மிக முக்கியம். இதனை கற்பிப்பவர்கள் கண்ணும் கருத்துமாகக் கவனத் திற் கொள்ள வேண்டியது அவசியம்.

ஆசிரிய சேவை என்பது ஒரு புனிதமான சமூக சேவை. அதை வெறும் வருமானம் தரும் தொழிலாக மாற்றிவிடக் கூடாது.

புதிய கட்டிட வசதிகள் மூலம் சாதனை படைக்கும் வாய்ப்புகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன. கட்டிடத்தைச் சுற்றி நல்லதொரு சூழல். தோட்ட வேலையை ஒரு பாடமாக, பாடவிதானத்தில் காட்டி உற்பத்திகளை ஊக்குவிக்கலாம். உற்பத்திக்களை, மாணவர்களுக்கே இலவசமாகப் பகிர்ந்தளிக்கலாம்.' இப்படியாக அந்தப் பதிவு நீள்கிறது.

நாங்கள் ஒரு திட்டத்துடன் அதிபரை அணுகினோம்.

"சேர்! நீங்கள் அனுமதி தந்தால், நாங்கள் ஒரு 'சிரம தானம்' மூலம் மண்டபத்தையும், சுற்றாடலையும் சுத்தம் செய்து அழகுபடுத்தித் தருவோம்."

அதிபர் மறுத்துவிட்டார்.

"சிற்றூழியர்கள் லீவு. நாளை மறுநாள் வந்ததும் எல்லாம் துப்பரவாகிவிடும். நீங்கள் கேட்டதற்கு நன்றி! போய் வாருங்கள்."

வழியில் ஓரிரு மாணவர்களைச் சந்தித்து உரையாடி யதில் 'சில பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை, சில வகுப்புகளுக்குத் தளபாடங்கள் இல்லை.....' என்று தகவல்கள் கிடைத்தன.

"இராஜநாயகம் மாஸ்டரைப் பற்றி இவர்களுத் தெரி யுமா.......?" இது கிருஷ்ண மீராவின் கேள்வி.

"தெரியாது.... விரைவில் அவரைப் பற்றியும் அவரது இலட்சியத்தைப் பற்றியும் பதிவு செய்யத்தான் யோசித்தி ருக்கிறேன்."

பழைய மாண்வர்களைத் திரட்டி, படுபள்ளத்தில் தள்ளப்பட்டிருக்கும், இராஜநாயகம் மாஸ்டரின் இலட்சி யத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டே நானும் கிருஷ்ணமீராவும் நடந்து கொண்டிருந் தோம்.

'பிரேக்டவுனி'லிருந்து பஸ்வண்டியும் இன்னும் மீளவில்லை.




# பேய்க் கூத்தும்..... ஆமணக்கந்தடியும்

- பரன்

''ஐடென்ரிக் காட்டைத் தாங்கோ ஐயா....."

"அவசரமாக வந்ததிலை மறந்து போனன் தம்பி..... கலியாணப் புரோக்கர் சிறீதரனைச் சந்திக்க வேணும்..... தலைபோற காரியம்...... உம்மைக் கையெடுத்துக் கும்பிடுறன்...... என்னை உள்ளுக்குப் போக விடும்......"

கந்தையா மாஸ்ரர் கெஞ்சுவதைப் பார்க்க செக்கியூருட்டிக்குப் பாவமாக இருந்தது. புத்தகத்தில் கையெழுத்து வாங்கி..... பெயரும் விலாசமும் பதிந்து கொண்டு உள்ளே அனுப்பினான்.

இரண்டு மாடியையும் ஒரே ஓட்டத்தில் ஏறி மேலே வந்தபோது, மாஸ்ரருக்கு மூச்சிரைத்தது. இரண்டாம் மாடி முழுவதும் சிறீதரனின் அலுவலகம் தான். கண்ணாடிக் கதவுகளின் கைப்பிடிகள் 'பள பள' என்று மினுங்கின. வாசலில், தமிழிலும் ஆங்கிலத்திலும் 'சங்கமம்' என்று பொறித்திருந்தது. குளிரூட்டிய அறை வியர்வைக்கு இதமாக இருந்தது. நிதானித்துக் கொண்டு உள்ளே செல்ல முயன்ற கந்தையா மாஸ்ரரைத் தடுத்து நிறுத்தினாள் அந்தப் பெண்.

"என்ன விஷயமாக வந்தனீங்கள்......?"

"கலியாணப் புரோக்கர் சிறீதரனைச் சந்திக்க வேணும்......"

"இங்க புரோக்கர் ஒருவரும் இல்லை......."

"..... அப்ப...... அவர் சிறீதரன்.......?"

"அவர் புரோக்கர் இல்லை..... 'கொன்சல்ற்ரன்ற்.' அப்பொயின்மென்ற் இருக்கோ ஐயா......."

"அது..... என்ன.....?"

"அவரைச் சந்திக்கிறதெண்டால்......... 1000 ரூபா கட்டி முன்கூட்டியே பதிவு செய்து நேரம் ஒதுக்கியிருக்க வேண்டும். இல்லாட்டில் சந்திக்கேலாது......"

"இதென்ன ஆஸ்பத்திரியிலை டாக்குத்தர்மாரைச் சந்திக்கிற மாதிரி இருக்குது. எனக்கு அது ஒண்டும் தெரியாது. எப்படியும் சந்தித்தே ஆகவேணும். என்ரைப் பொம்பிளைப் பிள்ளை வெளிநாட்டிலை அந்தரிச்சுப் போய் நிக்குது. இவர் சிறீதரன் தான் கலியாணம் முற்றாக்கினவர்....."

"பெரியவர், அப்பொயின்மென்ற் இல்லாமல் அவர் ஒருத்தரையும் சந்திக்க மாட்டார். முன்பதிவு செய்யாமல் வாறவையை அவரட்டை அனுப்பேலாது. மிகவும் அவசரமெண்டால்...... 2000 ரூபா கட்டுங்கோ...... அப்பொயின்ற்மென்ற் எடுக்கலாம்."

"இதென்ன பகல் கொள்ளையாய்க் கிடக்கு. நீங்கள் கட்டிவைச்ச கலியாணம் குழம்பி மகள் வெளிநாட்டிலை அந்தரிச்சு நிக்கிறாள். அதைக் கேக்க வந்தால்...... அப்பொயின்மென்ற் கேக்கிறியள்....... பனையாலை விழுந்தவனை மாடேறி மிதிச்ச கதையாக் கிடக்கு......." மாஸ்ரரின் குரல் கோபத்தில் உயர்ந்தது.

"ஐயா...... கொஞ்சம் மரியாதையாகக் கதைக்க வேணும். வயது போனவர் என்றபடியால் பொறுத்துக் கொண்டிருக்கிறன். சத்தம் போட்டால்....... செக்கியூரிட்டியைக் கூப்பிட்டு வெளியிலை அனுப்பி விடுவன்......"

கந்தையா மாஸ்ரருக்கு வந்த கோபத்தில் சடாரென்று தள்ளிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஓடினார். வரவேற்பறையையும் ஒரே எட்டில் தாண்டி...... 'சிறீதரன் அநுசரணையாளர்' என்ற பெயர்ப் பலகை பதித்த கதவையும் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

"ஐயா..... வெளியிலை வாங்கோ......" என்றபடி அந்தப் பெண் பின்னே ஓடினாள். வரவேற்பறையில் அமர்ந்திருந்தவர்கள் ஆளை ஆள் பார்த்தனர்.

மாஸ்ரர் நுழைந்த சத்தத்தில், குனிந்து எழுதிக் கொண்டிருந்த சிறீதரனின் தலை நிமிர்ந்தது. மூச்சிரைத்த படி நின்ற மாஸ்ரரையும் பின்னே துரத்தி வந்து பெண்ணையும் கண்டதும் 'என்ன....' என்ற மாதிரி சிறீதரனின் புருவங்கள் விரிந்தன.

"சேர்..... அப்பொயின்மென்ற் இல்லை.... கேட்டால் கண்டபடி திட்டுறார்...... சொல்லச் சொல்லக் கேளாமல் உள்ளுக்கை வந்திட்டார்.... செக்கியூரிட்டியை வரச் சொல்லி ஆளனுப்பிவிட்டேன்......"

"என்னை ஒருத்தரும்..... வெளியே அனுப்பேலாது. வேணுமெண்டால் பொலிசையும் கூப்பிடுங்கோ......" மாஸ்ரர் கோபத்தில் கத்தினார். கதவு மீண்டும் திறக்க செக்கியூரிட்டியும் உள்ளே வந்தான்.

"பாமினி..... செக்கியூரிட்டியைக் கூட்டிக் கொண்டு நீங்கள் போங்கோ..... நான் ஐயாவை விசாரித்து அனுப்பி வைக்கிறன்....." பதட்டமேதுமில்லாமல் சிறீதரன் பேசினார்.

"ஐயா முதலிலை கதிரையில் இருங்கோ..... இந்த ஏசியுக்கையும் உங்களுக்கு வேர்க்குது..... பதட்டப் படாதையுங்கோ..... வயதான காலத்திலை இப்படிக் கோபப்படக் கூடாது....... உடம்புக்குக் கூடாது...... தயவு செய்து கதிரையிலை இருந்து அமைதியா விசயத்தைச் சொல்லுங்கோ......."

சிறீதரனின் பேச்சு மாஸ்ரரை நெகிழவைத்திருக்க வேண்டும். கதிரையில் உட்கார்ந்தவரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார்.

"ஐயா.....அழாதையுங்கோ..... என்ன விசயம்...... சொல்லுங்கோ....." சிறீதரனின் மென்மையான பேச்சு மாஸ்ரரின் அழுகையை இன்னமும் அதிகரித்தது. குலுங்கிக் குலுங்கி அழுதார். கோபம் போய்..... அழுகையும் கண்ணீரும் மிஞ்சியது. அழுது முடியட்டும் என்ற மாதிரி சிறீதரனும் பொறுத்திருந்தார்.

"தம்பி...... தம்பி......" மாஸ்ரரால் தொடர்ந்தும் பேசமுடியவில்லை..... மீண்டும் விக்கி விக்கி அழுதார்.

"என்ரை மகளுக்கு வெளிநாட்டு மாப்பிளை தேடி..... 'சங்கமம்' என்ற உம்முடைய நிறுவனத்திலைதான் பதிஞ்சனான். கேட்ட காசெல்லாம் கட்டினம். மாப்பிளையும் தேடித் தந்தீங்கள். கலியாண வேலையையும் பாரமெடுத்துச் செய்தது 'சங்கமம்' தான். இலண்டன் மாப்பிளை. நல்ல பொடியன் எண்டுதான் நாங்களும் கட்டி வைச்சம். மகள் இலண்டன் போய் மூன்று மாதமும் இல்லை. இண்டைக்கு மகளட்டை இருந்து ரெலிபோன் வந்தது. அங்கை அவருக்கு இன்னொரு பொஞ்சாதி இருக்காம். கேட்டால் விருப்பம் எண்டால் இரும்..... இல்லாட்டில் போம்...... என்றாராம். என்ரை பிள்ளை தவிச்சுப் போய் நிக்குது......." வார்த்தைகள் வேகமாகக் கொட்டுப்பட்டன.

"ஐயா உங்கடை கோபமும்.... கவலையும் எனக்கு விளங்குது. மாப்பிளை தேடும் போதே நாங்கள் விளக்கமாகச் சொல்லிப் போட்டம், மாப்பிளையின்ரை விபரத்தைத் தருவதுதான் எங்கடை வேலை என்று. அவற்றை தொழில், வசதி, வயது, சாதி...... சொத்து இப்படிப்பட்ட விசயங்கள்தான் எங்களாலை உறுதிப்படுத்த முடியும் என்று. நாங்கள் செய்யிறது கலியாணப் புரோக்கர் வேலை இல்லை. ஒரு 'கொன்சல்ற்ரன்' வேலைதான்.......... மாப்பிள்ளையின்ரை குணம், நடவடிக்கை எல்லாம் செக் பண்ணுறது உங்கடை வேலை. ஆரம்பத்திலையே எல்லாக் கஸ்ரமரிட்டையும் இதைச் சொல்லித்தான் நாங்கள் வேலையை ஆரம்பிக்கிறம். இது ஒரு..... ஒப்பந்தம் மாதிரி. நீங்களும் ஒத்துக் கொண்டுதான் இந்தக் கலியாணம் ஒப்பேறியது."

"தம்பி...... என்ரை பிள்ளையை அந்தரிக்க விட்டிட்டான்....... அவளின்ரை சிநேகிதி வீட்டிலைதான் இப்ப நிக்கிறா...... உங்களை நம்பித்தானே இந்தக் கலியாணத்தை நடத்தினம்...... இப்படி ஏமாத்திப் போட்டியளே........."

"ஐயா......... கோபப்படாதையுங்கோ...... இந்தத் தொழிலிலை 20 வருசமா இருக்கிறன். ஏமாத்திற ஒருவராலை இவ்வளவு காலமும் தொழிலிலை நீடிக்கேலாது.... திண்ணைவேலியிலை 'குட்டி மாமி' என்று கேள்விப்பட்டிருப்பியள். அவதான் இதிலை முன்னோடி. அவவின்ரை அசிஸ்ரென்ரா வளர்ந்தவன் நான். இரண்டொண்டைத் தவிர அவ செய்து வைச்ச கலியாணங்கள் குழம்பயில்லை. அது அந்தக் காலம். ஆனால், இப்ப மனுசரை நம்ப முடியிறதில்லை. அதனாலை இப்ப எங்கடை வேலை அநுசரணை மட்டுந்தான். தீர்மானிக்கிறது சம்பந்தப்பட்டவைதான்.... நீங்கள் ஓமெண்டால் நாங்கள் கட்டிவைப்பம்."

"சரி தம்பி...... எப்படி இருந்தாலும் நீங்கள் கட்டி வைச்ச கலியாணம் தானே....."

"ஐயா பிறகும் குழம்பிறியள். எங்கடை கடமை மாப்பிளையளைக் காட்டுறது. தெரிவு செய்தது நீங்கள். விரும்பிக் கட்டினது உங்கடை மகள்..... பிறகு பிரச்சனை வந்ததும் ஓடி வந்து குறை சொல்லுறியள்..........."

மாஸ்ரருக்குத் திரும்பவும் அழுகை வந்தது. அடக்க முடியாமல் விக்கி விக்கி அழுதார்.

"அழாதையுங்கோ...... இப்ப என்ன செய்ய வேணும் எண்டு எதிர்பார்க்கிறியள்......."

"அவனுக்குச் சரியான பாடம் படிப்பிக்க வேணும் தம்பி. அதுக்கு முந்தி என்ரை பிள்ளைக்கு ஒரு வழி

வேணும்..... தொழிலும் இல்லை..... துணையும் இல்லை...... தனியா நிக்குது. என்ன பாடுபடுகுதோ......."

"ஐயா........ இது சட்டப்படி நடந்த திருமணம். எந்த நாட்டுச் சட்டத்திலையும்.......... நிண்டு பிடிக்கும்... கோர்ட்.... கேஸ் என்று போகலாம்.... கட்டாயம் நியாயம் கிடைக்கும். ஆனால், காலம் எடுக்கும்...... இல்லையென்றால் சமாதானமாய்ப் பேசி நட்ட ஈடு கேக்கலாம். ஐம்பது லட்சமாவது கிடைக்கும்...... பிள்ளையின்ரை விசா நீடிக்கவும் வழி இருக்கு."

"நல்ல கதை தம்பி........ நீங்கள் கலியாணம் கட்டி வைச்சு நீங்களே பிரிச்சு......... நீங்களே நட்டஈடும் கேட்டு நல்லாய்த் தான் இருக்கு......" மாஸ்ரருக்கு மீண்டும் கோபம் வந்தது.

"கோபப்படாதேயுங்கோ ஐயா...... நடக்க வேண்டியதைப் பார்க்கோணும்.... நட்டஈடு கிடைச்சால் பிள்ளைக்கு உதவும். இப்படி எங்களுக்கு நிறைய அநுபவம் இருக்கு. கொஞ்சக் காலத்திற்குப் பிறகு......... 'மறுமணம்' அதுதான்..... இன்னொரு கலியாணமும்...... முயற்சி பண்ணலாம்...."

'ஓம்' என்று சொல்வதைத் தவிர வேறு வழி இருப்பதாக மாஸ்ரருக்கும் தெரியவில்லை. சரி என்று தலையாட்டினார்.

"பாமினி.... ஐயாவை ரேவதியின்ரை அறைக்குக் கூட்டிக் கொண்டு போய் தேவையான 'போம்' எல்லாம் நிரப்பிவியும்......" என்றபடி எழுந்தார் சிறீதரன்.

அல்சேசன் நாய் போலப் பாய்ந்து போன மாஸ்ரர் இப்போது பூனைக்குட்டி போலப் பாமினியின் பின்னே வருவதைக் கண்டு வரவேற்பு அறையில் இருந்தவர்களுக்கு வியப்பாக இருந்தது.

"பிள்ளை எத்தினை மாதத்திலை நட்டஈடு கிடைக்கும்..... அதுவரைக்கும் என்ரை பிள்ளை என்னபாடு படப்போகுதோ......" ரேவதியின் முன்னே இருந்து மாஸ்ரர் அங்கலாய்த்தார்.

"ஐயா..... இதிலை கையெழுத்து வையுங்கோ. இந்தப் 'போமி'லையும் வையுங்கோ....... கிடைக்கிற நட்டஈட்டில பத்து வீதம் கழிச்சுக் கொண்டுதான் தருவம். அது எங்கடை சேவைக் கட்டணம்."

ரேவதி காட்டிய இடத்தில் எல்லாம் மாஸ்ரர் கையெழுத்துப் போட்டார்.

"யோசிக்காதையுங்கோ ஐயா ஆறுமாதத்திலை நட்டஈடு கிடைக்கும். உங்கடை மகளுக்கும் நாங்களே இன்னொரு மாப்பிளையும் தேடித்தருவம். எங்கடை பத்திரிகையிலேயே விளம்பரம் செய்வம். லண்டனிலை இப்படிப் பிரச்சனைப் பட்ட ஆம்பிளையளும் நிறைய இருக்கினம். பாருங்கோ.... எங்கடை முதலாளியே இந்தப் பத்திரிகையிலை மறுமணத்திற்காக விளம்பரம் போட்டிருக்கிறார்."

ரேவதி காட்டிய பத்திரிகையில் சிறீதரனின் படம் இருந்தது. இரண்டு தடவை மணமுறிவு செய்தவர், இன்னமும் இளமைத் தோற்றத்துடன் என்றபடி, அவரது படிப்பு...... தகுதி..... இத்தியாதி எல்லாம் கொடுக்கப்பட்டிருந்தன.

"இப்ப மறுமணம் செய்யிறது ஒன்றும் கஷ்டமான வேலை இல்லை..... பழைய அநுபவமும் இருக்கிறபடியால் சரியான ஆளைத் தேடலாம்."

ரேவதி மாஸ்ரரை நினைவுலகிற்குக் கொண்டு வந்தாள்.

"வேணுமென்டா............. அவ ஒரு சிறுமணம் செய்யலாம்....."

"அதென்ன புதிசா ஒண்டு..... என்னைப் போட்டுக் குழப்புறியள்......"

ரேவதியின் முகத்தில் குறுநகை இழையோடியது. இந்தக் காலத்து விசயங்கள் ஒன்றும் தெரியாதவரான அப்பாவி மனுசராக இருக்கிறாரே என்பதால் உண்டான சிரிப்பு அது.

"சிறுமணம் என்றால் ஐயா..... வெளிநாட்டிலை 'லிவ்விங் ரூ கெதர்' என்று சொல்லுறது. கலியாணம் கட்டத் தேவை இல்லை.... சேர்ந்து வாழலாம். கொஞ்சக் காலத்துக்கு, விருப்பமென்றால் தொடரலாம், இல்லாட்டில் பிரியலாம். சட்டப் பிரச்சனை ஒன்றும் கிடையாது. இதுக்கும் 'சங்கமம்' உதவும்."

மாஸ்ரருக்குத் தலை சுற்றியது. ஒருகாலத்திலை கலியாணப் புரோக்கராகத் தொழில் தொடங்கினவை இப்ப எப்படிப்பட்ட புரோக்கராக எல்லாம் மாறி விட்டினம். என்பதை நினைக்கப் பயமாக இருந்தது. ஆனாலும், மகளின்ரை பிரச்சனை தீருமட்டும்......

மெதுவாக எழுந்தார். ரேவதியை நோக்கிக் கை கூப்பிய போது....... கைகள் சோர்ந்தது போல உணர்ந்தார். நடக்கத் தொடங்கிய போது கால்கள் நடுங்க ஆரம்பித்தன. காய்ந்த ஆமணக்கஞ்சுள்ளிகள் வாடைக் காற்றில் அல்லாடுவது போன்றிருந்தது மாஸ்ரரின் நடை. படிவழியே மெதுவாக இறங்கிவரும் போது....... எல்லாமே மங்கலாகத் தெரிந்தன. செக்கியூரிட்டியின் மேசையடியில் வரும் போது மயங்கிச் சாய்ந்தார். நல்ல வேளையாக 'சங்கமத்தின்' செக்கியூரிட்டி அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

# பேனாவால் பேசுகிறேன் - 10

- நாச்சியாதீவு பர்வீன்
கட்டாரிலிருந்து.




**இந்தக் கட்டார்** மண்ணில் கால் பதிக்கின்ற ஒவ்வொரு வெளிநாட்டவனுக்கும் கோர்னேஜ் (Cornage) ஐப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக டோஹா நகரையும் தாண்டி, தூரப்பிரதேசத்தில் பாலைவனக் காடுகளில் ஆடு, ஒட்டகம் மேய்ப்பவர்களுக்கு வேண்டுமானால் இந்த கோர்னேஜ் (Cornage) ஐப் பற்றிய அறிவு இல்லாமல் இருக்கலாம், விதிவிலக்காக மிகச் சிறிய வீதத்தினரைத் தவிர மற்றெல்லா வெளிநாட்டுக்காரர்களுக்கும் கோர்னேஜ் (Cornage) இல் கழித்த நிமிடங்கள் எல்லாக் காலங்களிலும் ஓயாத கடல் அலையாக, மனசின் மர்மப்பிரதேசமெங்கும் அலைந்து கொண்டே இருக்கும் இனிய ஓசைகளுடன்.

மூன்று பக்கம் கடலாலும், ஒருபக்கம் தரையாலும், தனது எல்லையை நிர்ணயித்துக் கொண்டுள்ள கட்டார் தீபகற்பத்தின் சுற்றுலாப் பயணிகளையும், வெளிநாட்டவர்களையும் மிகவும் கவர்ந்த பசுமையான கடற்கரையோரப் பிரதேசமே, இந்தக் (Cornage) பிரதேசமாகும்.

கட்டாரின் முக்கிய தளமான டோஹா சர்வதே விமானத் தளத்திலிருந்து Doha நகரைச் சுற்றிக் கிழக்குப் புறமாக அமைந்துள்ள அழகிய கடற்கரைப் பிரதேசமே, கோர்னேஜ் (Cornage) என்று அழைக்கப்படுகின்றது. தலைநகர் டோஹாவை அண்டிய பிரதேசம் ஆகையால், எப்போதுமே சனக்கூட்டம் நிரம்பி வழியும் ஒரு முக்கிய இடமாக இது இருக்கின்றது. அழகான புல் வெளிகளில் அமர்ந்து கொண்டே, சில்லென்ற கடற்காற்றைச் சுவாசித்த வண்ணமே கடல் அலையை ரசிப்பதில் ஒரு அலாதியான சுகம் மெய்யாகவே அமிழ்ந்து போயுள்ளது.

ஓயாத வேலையாலும், தீராத மனச்சுமையாலும், அலுத்துச் சலித்து வந்தொதுங்கும் பணியாளர்களுக்கு ஒத்தடம், கொடுத்து, மன உளைச்சல்களில் இருந்து விடுபட்டு, சந்தோஷத்துடன் திரும்பச் செய்யுலும் இயற்கை எழில் கொஞ்சமும், செயற்கை எழில் கொஞ்சமுமாய்ச் சேர்ந்து வனையப்பட்ட பசுமைப் பிரதேசம் தான் இந்தக் கோர்னேஜ் (Cornage) என்றால் அது மிகையாகாது.

இயற்கையின் அழகுகளை அள்ளிப் பருகுவதிலேயே, எனக்கு அலாதியான விருப்பம். இதனால், எப்போதுமே நான் பயணங்களில் கூட, ஜன்னல் ஓர இருக்கையைத்தான் தேர்ந்தெடுப்பது வழக்கம். பஸ், ரயில் என்று எனது கடந்த காலப் பயணங்களில் பெரும்பாலும் ஜன்னல் ஓர இருக்கைகளில்தான் பயணம் செய்திருக்கின்றேன். ஆனால், விமானத்தில் இந்த ஆசை எனக்கு நிறைவேறவில்லை என்பது, ஒரு சங்கடமான சங்கதியாகும். இந்த வகையில்தான், கோர்னேஜ் (Cornage) இல் எனது சில மாலை வேளைகளில் கழித்தேன்.

இருள்பாதி, ஒளிபாதி என்று இருக்கும் அந்த இரண்டுங்கெட்டான் மாலைப் பொழுதுகளில், அந்திகளின் அழகை ஆத்மார்த்தமாய் அருந்துவதற்காய் நானும் எனது நண்பர்களும் எங்களூர்க் குளக்கட்டுக்குச் செல்வது வாடிக்கை.

வானுயர்ந்த மரங்கள், வயல் வெளிகளில் வளைந்தோடும் ஆறுகள், வசந்தம் கொட்டும் காடுகள் என்று ஒரு அப்பட்டமான கிராமம் தான் எனது நாச்சியாதீவுக் கிராமமாகும். எனது கிராமத்தின் அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் கிராமத்தின் கிழக்குப் புற எல்லையில் அமைந்திருக்கிறது அந்தப் பாரிய குளம். விசாலமான நீர்ப் பரப்பைத் தாங்கி எங்கள் கிராமத்தின் சொத்தாக அமைந்திருக்கும் நாச்சியாதீவுக் குளத்திற்கு பெரும்பாலும் வெளி ஊரவர்களும் வந்து தமது பின்னேரப் பொழுதுகளைக் கழித்துச் செல்வர்.

நானும், எனது நண்பர்களான ரிஸ்வி, நஸ்வர், அமீன் ஆகியோர்கள் அந்தி நேரங்களில் இந்தக் குளக்கரை யோரங்களில் இருந்து கொண்டுதான், ஊர்ச் சங்கதிகளையும், இன்ன பிற விடயங்களையும் பரிமாறிக் கொள்வோம். மாலை நேரத்தில் மாருதக் காற்று உடலை வருடிச் செல்லும் போது, ஏற்படும் சுகமே தனிதான்! கடல் அலைகளைப் போலக் குளத்தில் எழும் அலைகள் ஆக்ரோசமாய் வருவதுமில்லை. இரைச்சலை எழுப்புவதுமில்லை. அமைதியாய் எழுந்து அழகாய் அசைந்து கரையை முத்தமிட்டு விட்டு, திரும்பிச் செல்லும் அழகே தனிதான்.

கொக்கும், குருவியும், ஆற்காட்டியும் என, எல்லா இனப் பறவைகளும் கூடு திரும்பும் பாதையாகக் குளத்தின் அமைவிடம் அமைந்திருந்தது. எத்தனையோ அந்திப் பொழுதுகள் நேரம் போவது கூடத் தெரியாமல், மணிக்கணக்காய்

அடர்ந்த இருள் படரும் மட்டுக்கும் அந்தக் குளக்கட்டில் பேசிக் கழித்திருக்கின்றோம். அது ஒரு அலாதியான காலம். இந்தக் கோர்னேஜ் (Cornage) புல் வெளிகளில் அமர்ந்து கொண்டே கடல் அலைகளையும், அது கரையில் எச்சமாய் விட்டுச்செல்லும் நுரைகளையும், பார்க்கின்ற போதுகளில் அந்தக் கடந்த கால நினைவுகள் என் கண்ணில் வந்து கவிபாடிச் செல்கின்றது.

விடுமுறை நாட்கள் என்றால், இந்தப் பிரதேசம் களை கட்டிவிடும் மிகுந்த சனத்திரள் தமது மாலையைக் கழிப்ப தற்கு இந்த இயற்கையெழில் கொஞ்சும் இடத்திற்கு வந்து விடுவார்கள். சுற்றுலாப் பயணிகள், வேலைக்காக இங்கு வந்தவர்கள். வெளிநாட்டுப் பிரதிகள் மற்றும் உள்ளூர்ப் அரபிகள் என்று எல்லாப் பிரதேசத்து நாட்டு மக்களையும் இந்த கோர்னேஜ் (Cornage) பிரதேசத்தில் காணலாம். பெரும்பாலும் அரபிகள் குடும்ப சகிதம் இங்கே வந்துவிடுவார்கள். குடும்பத்தவர்களுக்கு என்று இங்கே விஷேடமாக அமைக்கப்பட்ட பிரதேசமும் உள்ளது. அதற்குள் தனிநபர்களோ அல்லது திருமணமாகாதவர் களோ, நுழைய முடியாது. அங்கே சிறுவர்களுக்கான விளையாட்டுத்திடல், விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடை, சிற்றுண்டிச்சாலை என்று எல்லா வசதிக ளும் உள்ளன. எனவே, குடும்பத்துடன் visit அடிப்பவர் கள் அடுத்தவர்களின் தொந்தரவு இல்லாமல் குடும்ப சகிதம் அந்த மாலைப் பொழுதை இன்பமாய்க் கழித்து விட்டுச் செல்கின்றார்கள்.

கிழமை நாட்களிலும் இங்கே சாதாரண அளவு சனக் கூட்டத்தைப் பார்க்க முடியும். பெரும்பாலும் ஆண்களும், பெண்களும் கூட்டம் கூட்டமாகவே இங்கு வருவதை அவதானிக்க முடிந்தது. ஆங்காங்கே சில இளம் ஜோடிகள் தென்பட்டாலும், பெரும்பாலும் ஜோடிகளை அவதானிக்க முடியவில்லை.

அரேபிய பாலைவனங்களுக்கு மட்டுமே உரித்தான ஈச்சமரங்கள் இந்தப் பிரதேசமெங்கும் பரவலாய் நடப்பட்டுள் ளது. அழகான புல்தரைகளில் ஆங்காங்கே கிளை பரப்பிக் கையசைத்துக் கடற்காற்றின் சுகமான தழுவலில் மெய்மறந்து நெக்குருகி நிற்கின்ற இந்த ஈச்ச மரத்தைப் பார்க்கின்ற போதுகளில் எல்லாம் எனக்கு எனது உறவுக்காரர் ஒருவ ரின் நினைவு வருவதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

எனது உம்மம்மாவுக்குத் தந்தை வழித் தம்பியான அவர் எனது உம்மாவுக்கு மாமா முறையானவர். நாங்களும் அவரை மாமா என்றுதான் அழைப்பது வழக் கம். அவரது பெயர் மர்சூக். நான் சிறுபிள்ளையாக இருக் கும் போது, அவரது மடியில் என்னை இருக்க வைத்து பாட்டுப் பாடச் சொல்லுவாராம். நானும் "ஈச்சமரத்தின் இன்பச் சோலையிலேயே நபி நாதரே" என்ற ஈ. எம். நாஹூர் ஹனிபாவின் இஸ்லாமிய கீதப் பாடலைப் பாடுவேனாம்.

அவர் தொழில் நிமித்தமாக மத்திய கிழக்கு நாடொன்று க்கு வந்து முதலாவது எழுதிய கடிதத்தில் இங்குள்ள ஈச்ச மரங்களைப் பார்க்கின்ற போது, எனக்கு பர்வீனின் நினைவுதான் வருகிறது என்று குறிப்பிட்டுக் கூறியிருந்தா ராம். வெளிநாட்டிலிருந்து அவர் ஊர் வந்த போது, சில விஷமி களின் செயற்பாடுகளினால் குடும்பங்கள் பிரிந்து முரண் பாட்டுடன் இருந்தது. எனவே, அவர் கடுகஸ்தோட்டைக் குச் சென்று விட்டார். பின்னாட்களில் அவர் பற்றி நினைவு களை அவ்வப்போது, எனது குடும்பத்தவர்கள் கூறுவார் கள். எனவே, அவர் பற்றிய ஆழமான பதிவுகள் என்னுள் உறங்கிக் கிடந்தன. நான் மடவலயில் சிறிதுகாலம் உயர் தரத்தில் கல்வி கற்கும் போது இருந்தேன். அப்போது ஒரு தடவை அவரைச் சென்று சந்தித்துக் கதைத்தேன். நான் சென்றிருந்த வேளை, வேறுபல உறவினர்களும் அங்கு வந்திருந்தனர். அதனால், அவரோடு மனசு விட்டு என் னால் எதையும் பேச முடியவில்லை. அதன் பின்னர் அவ ரைச் சந்திக்கக் கிடைக்கவேயில்லை. சிறிது காலத்தில் அவரும் இறந்து போனார். பின்னர் அவர் பற்றிய எந்த நினைவுகளும் என்னில் மீளெழவில்லை. ஆனால், இந்தக் கோர்னேஜ் (Cornage) ஒரு கோட்டில் திட்டமிட்ட செயற்பாட்டின் அடிப்படையில் நடப்பட்டிருக்கும் ஈச்சமரங் களின் அருகில் செல்லும் போதும், அதைப்பார்க்கும் போதும், அந்த மர்சூக் மாமாவின் நினைவுகள் என்னில் எழுவதும், மறைவதும் தடுக்க முடியவில்லை.


இந்தக் கோர்னேஜ் (Cornage) பிரதேசத்தை எத் தனை பரப்பிலும் சுத்தமாகப் பளிச்சென்று வைத்துக் கொள்வதற்குக் கட்டார் அரசு மிகுந்த பிரயத்தனம் எடுத்து வருகிறது. இருபத்திநாலு மணிநேர சுத்திகரிப்பாளர்கள் எப்போதும், இந்தப் பிரதேசத்தை வலம் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். தவிரவும், இரண்டு நாளுக்கு ஒருதரம் புல் கட்டையாக வெட்டப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் அவற்றுக்கான பராமரிப்பாளர்கள் அவதானமாகத் தண்ணீர் ஊற்றுவதும் உரங்களைத் தூவுவதும் என்று கனகச் சிதமாய் செயற்படுகின்றார்கள்.

உள்நாட்டு, வெளிநாட்டுப் பெண்கள், ஆண்கள் என்று பெரும்பாலானோரின் walking place உம் இதுதான். நமது காலி முகத்திடலைப் போல குடைகளுக்குள் பதுங்கி இருக்கும் ஜோடிகள் இங்கே கிடையவே கிடை யாது. இங்குள்ள சட்டமும், நிபந்தனைகளும் அவற்றைக் கடுமையாகத் தடுத்துள்ளன. மீறியும் தென்பட்டால், கண் கொத்திப் பாம்பாகக் கண்ணில் விளக்கெண்ணெய் வைத்துக் கொண்டு உலாவும், மாறு வேடமிட்ட C.I.D களின் பிடியில் சிக்கித் திணற வேண்டி இருக்கும். முடிவு, மூட்டை முடிச்சைக்கட்டி நாட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்.

நீலக்கடல், நிறம்மாறாத புல்வெளி, பச்சை இலை ஈச்சமரம், ஈரமான உப்புக் காற்று........ என்று இதமாய் கழியும் நிமிஷங்களில் இவைகளையும் தாண்டி இந்த அந்தியைக் கழிப்பதற்கு வேறு என்னதான் தேவை!

(இன்னும் பேசுவேன்)



## அவஸ்தை

*சொல்லுக்கும் எந்தனுக்கும் எப்பொழுதும் சூடான*
*மல்லுக்கட்டல் நானோ மார்தட்டி- நல்லவிதம்*
*ஆச்சுக் கவிதையென்(று) ஆங்காரம் கொண்டாலோ*
*தாச்சி மறிக்கும் தமிழ்*

*பேப்பர் விரித்துப்பே னாவாற் குறிவைத்தும்*
*தோற்பதுவே அன்றித் தொடங்காது- பூப்பது*
*எப்போ தெனத்தெரி யாமற் கவியோடு*
*மற்போர் தொடர்கின்ற தே*

*வருவது போலத் தலைகாட்டும், கொஞ்சங்*
*கருவம் மிகுந்தாற் கலையும்- உருவத்தைப்*
*பூரணமாக் காட்டாமற் போகும் வரும்ஒளிக்கும்*
*நாரணனைப் போற்கவிதை யே.*

*எடுத்தால்ஏட் டைமறையும் பின்வாரா தென்று*
*படுத்தாலோ எட்டிப் பழிக்கும்- விடுக்கென்று*
*பற்ற நினைத்தாலோ பாலன்கண் ணன்போலச்*
*சுற்றுமுற் றுங்கவிதை யே.*

*தீரா விளையாட்டுத் தீர மிகக்களைத்து*
*ஓராமா! என்று விழுவேனே- நானாய்*
*இருக்கை யிலேவாரா இன்கவிதை ஒன்றென்*
*திருக்கை யிலேபூத்த தே!*

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*

**இலங்கையில் நூல்கள் விநியோகம், விற்பனை, ஏற்றுமதி, இறக்குமதி, பதிப்புத் துறையில் புதியதோர் சகாப்தம்.**

சேமமடு

**அன்புடன் அழைக்கிறது**

**சேமமடு பொத்தகசாலை**

*CHEMAMADU BOOK CENTRE*

**Telephone : 011 - 2472362**
**Fax : 011 - 2448624**
**E-mail :**
**chamamadu@yahoo.com**

**UG 49, 50. People's Park, Colombo - 11. Sri lanka**

*தமிழ்நாட்டில் பதிப்புத்துறை, விற்பனைத்துறை*
*முன்னோடிகள், எமது முகவர்கள்.*

க.சச்சிதானந்தன் – காந்தளகம், சென்னை – 02.

தொ.பே. : 044 - 28414505


**E-mail : tamilnool@data.in**

கோ. இளவழகன் - தமிழ்மண் பதிப்பகம், சென்னை - 17.

தொ.பே. : 044 - 24339030

**E-mail : ta-pathippagam@yahoo.co.in**

**அனைத்து வெளியீடுகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**





திருச்சி தூயவளனார் கல்லூரி ஆய்வில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கின் சிறப்பு நிகழ்வாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவிற்குப் பன்முகப் படைப்பிலக்கிய விருது வழங்கப் பட்டது. விருதையும் சான்றிதழையும் இலங்கைப் பிரதிநிதிகளான அந்தனி ஜீவாவும், ரா. நித்தியானந்தனும் டொமினிக் ஜீவா சார்பில் பெற்றுக் கொள்கிறார்கள்.

# சென்னைக்குச் சென்றேன் ஜெயகாந்தனைச் சந்தித்தேன்

**- அந்தனி ஜீவா**



தமிழகத்தில் திருச்சியில் நடைபெற்ற **'அயலகத் தமிழர் வாழ்வும் இலக்கியமும்'** என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை வாசிக்க, நானும் 'சிறகு' இணைய இதழ் ஆசிரியர் ரா. நித்தியானந்தனும் 30. 11. 2007 திருச்சிக்குப் பயணமானோம்.

மீண்டும் டிசம்பர் ஏழாந் திகதி திரும்பி விட வேண்டும் என்ற எண்ணத்தில் மின்னல் வேகப் பயணம். விமானத்தில் செல்லும் பொழுதே என் பயணத்தைத் திட்டமிட்டுக் கொண்டேன். இரண்டு நாட்களைச் சென்னையில் செலவிட வேண்டும் என்பதே என் முடிவு.

தமிழகத்துக்கு எப்பொழுது சென்றாலும், எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களைச் சந்திக்காமல் திரும்பியது இல்லை.


1978 ஆம் ஆண்டு திருப்பூரில் நடைபெற்ற கலை இலக்கியப் பெருமன்ற மாநாட்டில் முதன் முதலில் அவரைச் சந்தித்தேன். அன்றிலிருந்து எங்கள் நட்புத் தொடர்கிறது.

திருச்சி பன்னாட்டுக் கருத்தரங்கு டிசம்பர் முதலாந் திகதி நடை பெற்றது, இரண்டாம் திகதி தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இலக்கியச் சந்திப்பு, மூன்றாம் திகதி மதுரையில் எழுத்தாளர் சி. பன்னீர்செல்வம் அழைப்பின் பேரில் மதுரை சென்று சென்னை பயணமானோம்.

நான்காம் திகதி காலை சென்னைக்கு நானும் நண்பர் நித்தியானந்தனும் வந்து சேர்ந்தோம். எப்படியாவது ஜெயகாந்தனைச் சந்தித்துப் பேச வேண்டும் என்கிற அவா நண்பனுக்கு.

சென்னை சென்றதும் முதல் வேலையாக ஜெயகாந்தனைத் தொடர்பு கொண்டேன். அவரது வீட்டிலிருந்து ஒரு பெண்மணி, அவரது துணைவியாராக இருக்க வேண்டும்-

"இப்பொழுது அவரைப் பார்க்க முடியாது..... சுகவீனமாக இருக்கிறார்...... அவர் யாரையும் சந்திக்க மாட்டார்" என்றார்.




நான் மிகவும் மரியாதையாக "அம்மா நான் இலங்கை யிலிருந்து வந்திருக்கிறேன். அவர் எனது நண்பர். அவரி டம் நான் சந்திக்க விரும்புவதாகத் தெரிவியுங்கள்." என்றேன்.

"அவர் இப்பொழுது இருக்கும் நிலையில் யாரையும் சந்திக்க மாட்டார். அவரது செல் நம்பரைத் தருகிறேன் நீங் களே தொடர்பு கொள்ளுங்கள்" எனக் கூறி அவரது கை பேசி நம்பரைத் தந்தார். உடனடியாக ஜெயகாந்தனுடன் தொடர்பு கொண்டேன்.

"ஜெ. கே. நான் சென்னைக்கு வந்திருக்கிறேன். உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்." என்றேன்.

"எப்ப வாறீங்க? எப்ப வாறீங்க...." என்று குரல் ஒலித்தது. "நான்கு மணிக்கு உங்களைச் சந்திக்க வருகிறோம்." என்றேன்.

"கட்டாயமா வாங்க" என்றார்.

நண்பரும் எழுத்தாளருமான நித்தியானந்தனுக்கு மகிழ்ச்சி. மாலை 5 மணிக்கு ஓவியர் புகழேந்தி வீட்டில் இலக்கியச் சந்திப்பு. அதற்கு, முன்னர் நான்கு மணிக்கு ஜெயகாந்தன் வீட்டிற்குச் செல்வது என்று முடிவு செய்தோம்.

உடனே சென்னைப் பல்கலைக்கழகம் சென்று தமிழிலக்கியத்துறைத் தலைவரும், நண்பருமான பேராசிரியர் வீ. அரசு அவர்களைச் சந்தித்தோம். அவரு டன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அமைக்க உள்ள **'இலங்கை மலையக, தமிழக தமிழுறவு அறக்கட்டளை'** சம்பந்தமாக உரையாடினோம். பகலுணவையும் பேராசிரி யர் அரசே வாங்கித் தந்தார். மூவருமாக மலையக இலக்கியம் சம்பந்தமாகப் பல விடயங்களை உரையாடி யபடி பகலுணவை உண்டோம்.

பின்னர் மூன்று மணி அளவில் பேராசிரியரிடம் விடை பெற்று எழுத்தாளர் ஜெயகாந்தனை சந்திக்கப் புறப்பட் டோம். நான்கு மணிக்கு எழுத்தாளர் ஜெயகாந்தனின் இல்லத்தை அடைந்தோம். இல்லத்திலிருந்த பெண்மணி மாடிக்குச் செல்லும் படி கூறினார்.

அந்த இல்லத்தில் மாடியில்தான் ஜெயகாந்தன் நண்பர்களைச் சந்தித்து உரையாடுவது. இரண்டாண்டு களுக்கு முன்பும் ஜெயகாந்தனை அந்த மாடியில் சந் தித்து நீண்ட நேரம் உரையாடியுள்ளேன். மகாகவி பாரதி யின் பாடல்களைப் பாடிக்காட்டினார்.

நானும் நண்பனும் மாடிக்குச் சென்றோம். அங்கே ஜெயகாந்தன் அமரும் ஆசனம் காலியாக இருந்தது. அவரின் தேவைகளைக் கவனித்துக் கொள்ளும் ஒருவர் அங்கிருந்தார்.

அவர் என்னிடம் ஜெயகாந்தன் சுகவீனமாகப் படுத்திருக் கிறார். அவரை இப்பொழுது பார்க்க முடியாது என்றார்.

"நான் இலங்கையிலிருந்து வருகிறேன். காலையில் அவரோடு தொடர்பு கொண்டேன். அவர் வரச் சொன் னார்..." என்றேன்.

"அவர் படுத்திருக்கிறார்......" என்ற பல்லவியை மீண்டும் பாடினார்.

"எனது பெயரை சொல்லுங்கள் அவர் பார்க்க விரும்பாவிட்டால், போய் விடுகிறேன்." என்று சிறிது உரத்த குரலில் சொன்னேன்.

அந்த மனிதர் கோபமாக என்னைப் பார்த்து விட்டு, வேகமாக சென்றார். சிறிது நேரத்தில்- "உங்களை ஜெயகாந்தன் அழைக்கிறார்." என்றார்.

நானும் நண்பர் நித்தியானந்தனும் அறைக்குள் சென்றோம்.

ஜெயகாந்தன் என்ற கம்பீரம் மிக்கச் சிங்கம், சோர்ந்து போய்ப் படுத்திருந்தது. அவரது ஆளுமை மிக்கக் கம்பீர மான உருவத்தை பார்த்துப் பழகியிருந்த எனக்கு அவரது தோற்றமே வேதனையாக இருந்தது.

சில நிமிடங்களை அமைதியாக இருந்துவிட்டு, அவரது அருகில் சென்று "ஜே. கே" என்று அழைத்தேன்.

அப்பொழுது கண்களைத் திறந்து என்னைப் பார்த்து "எப்படி நலமாக இருக்கிறீர்களா?" என்றார்.

பிறகு எழுந்து பாத்ரூம் சென்று முகம் கழுவி பழைய ஜெயகாந்தனாக் கம்பீரமாக வந்தமர்ந்தார்.

அப்பொழுது அவரைப் பார்த்து ஆஹா! நமது பழைய ஜெயகாந்தனாகி விடுவார். அவருக்கு நல்ல ஓய்வு தேவை என்று எண்ணினேன்.

நான் கொண்டு சென்ற மல்லிகைப் பந்தலின் 'முன் முகங்கள்' நூலை அவரிடம் கொடுத்தேன்.

"மல்லிகை ஜீவா எப்படி நலமாக இருக்கிறாரா?" என்று கேட்டு விட்டுச் சிறிது நேரம் உரையாடினார்.

அவர் ஓய்வெடுக்க வேண்டும். மீண்டும் அவரைச் சந்திக்க வேண்டும் என்ற அவாவுடன் விடை பெற்று வந்தேன்.

எழுத்துலக ஜாம்பவான் ஜெயகாந்தன் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்கிறோம், அவருடன் பேசிகிறோம், பழகிறோம். என்ற ஆத்ம திருப்தியுடன் ஓவியர் புகழேந்தி வீட்டில் நடைபெறும் இலக்கியச் சந்திப்புக்காகச் சென் றோம்.

# புத்தக வெளியீடு – விற்பனை– பரவலாக்கம் ஒரு தமிழ் நிலைக் கனவு-

திக்குவல்லை கமால்



புத்தகக் கண்காட்சிகள் உலகமெங்கும் நடைபெற்று வருவதொன்றும் புதுமையான விடயமல்ல. இது தொடர்பான தகவல், புள்ளி விபரங்களைப் பார்க்கக் கிடைக்கும் போது, அடிமனதில் ஒருவித ஏக்கமும், ஆதங்கமும் மெல்லப் பரவுவதுண்டு. நமது நாட்டில் இதெல்லாம் சாத்தியமாகப் போவதில்லையென்ற தோல்வி மனப்பான்மையும் மனதைப் பிழிவதுண்டு.

இவற்றையெல்லாம் முறியடித்துக் கொண்டு இப்பொழுது ஆண்டுதோறும் நமது நாட்டிலே சர்வதேசப் புத்தகக் கண்காட்சி நடைபெற்று வருகின்றது. இங்கு மொழி வேறுபாடில்லாத போதும், தமிழ் நூல்களுக்கான சாதகத் தன்மை காணப்படவில்லையென்பது சிந்தைக்குரியது.

அதற்கு மாற்றீடாக நாம் இன்னொரு வழிமுறையை மேற்கொள்வதென்றாலும் கூட, அதற்கும் இந்தப் புத்தகக் கண்காட்சியின் படிமுறை வளர்ச்சியை அறிந்து கொள்ளுதல் கைகொடுக்கவே செய்யும்.

இலங்கைப் புத்தக வெளியீட்டாளர் சங்கம் ஆரம்பித்த இந்த சர்வதேச புத்தகக் கண்காட்சி 1999 இல் முதல்முறையாக கலாபவனத்திலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது அங்கு இருபத்தொரு காட்சி கூடங்களே காணப்பட்டன. மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக அதே இடத்திலேயே நடைபெற்று வந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள எழுந்த மக்கள் அலை பிரமாண்டமான இடத்தின் தேவையை உணர்ந்தனர். விரிவான திட்டங்களோடு 2002 இல் முதன்முதலாகப் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இக் கண்காட்சி நடைபெற்றது. படிப்படியாக அதன் வளர்ச்சி கல்வி அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களதும் அனுசரணையைப் பெற்று 2007 இல் நடைபெற்ற போது, 352 காட்சிக் கூடங்களை உள்ளடக்கியது. இவற்றுள் 43 வெளிநாட்டு நிறுவனங்களும் அடங்கும். இன்னும் 50 கூடங்களுக்கான கேள்வி- தேவை இருந்த போதும், இடவசதியின்மை ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

புத்தகக் கண்காட்சிக்கு இவ்வளவு சனத்திரள் ஒன்றுசேர முடியுமா? என்று கேட்கும் அளவுக்கு நாளாந்தம் 50- 70 ஆயிரம் பேர் வருகை தந்ததாக அறிய முடிகின்றது. குடும்ப சகிதம் அணிதிரண்ட மக்கள் ஆளுக்கொரு புத்தகமென்றாலும் வாங்கிக் கொள்ளாமல் சென்றது கிடையாது.

ஊடகத்துறையினர் இது தொடர்பாகப் பொதுமக்களை அணுகிக் கருத்துக்குவிப்பு செய்த போது, எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சியுறும் என்பதற்கான சாத்தியப்பாடுகளாகவே அவை காணப்பட்டன.

ஒரே இடத்தில் எல்லாவிதப் புத்தகங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். போதிய கழிவுடன் கொள்முதல் செய்ய இயலும். பிள்ளைகளுக்கு வாசிப்பு ஈடுபாட்டை ஏற்படுத்த இது அரிய வாய்ப்பு. இது ஒரு வியாபாரமாகவன்றிச் சேவையாகவே நடைபெறுகின்றது என்றெல்லாம் மனந்திறந்து கருத்து வெளியிட்டிருந்தனர். புத்தகத் தெரிவில் தேவையானதை உடன் பெற முடியவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்தனர்.

ஆரம்பப் பிரிவில் கற்கும் ஒரு சிறு மாணவி சொல்லிய கூற்று மனதைத் தொடுவதாக இருந்தது.

"உண்டியலில் காசு சேர்த்துக் கொண்டு வந்து புத்தகம் வாங்கினேன். அடுத்த வருடமும் காசு சேர்த்துக் கொண்டு வருவேன்." என்று தெரிவித்திருந்தாள்.

இலட்சக் கணக்கில் திருவிழாப் போல் மக்கள் திரண்டு நூல் கொள்வனவு செய்யும் போது புத்தக வெளியீட்டுத் துறையும் அதற்கேற்ப வளர்ச்சியடையுமென்பது வெளிப்படையானது.

சிங்கள மொழி வெளியீட்டு நிறுவனங்கள் வழமையான வெளியீட்டுத் திட்டம் ஒரு பக்கம் இயங்க, புத்தகக் கண்காட்சிக் கென்றே சிறப்பு வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளன. 2007 இல் சரஸவி வெளியீடு மாத்திரம் இந்த அடிப்படையில் 50 நூல்களை வெளியிட்டுள்ளது.

பிரதி வருடமும் செப்டம்பர் மாதத்தில் 07-10 நாட்கள் நடைபெறும் இப்புத்தகக் கண்காட்சியில் விரல்விட்டு எண்ணக் கூடிய தமிழ் புத்தகக் கூடங்களும் காணப்படு கின்றன. இங்கு போதிய புத்தகங்கள் விற்பனையாவ தில்லையென்பதும், அதில் இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அதிக கவனம் பெறவில்லையென்றும் தமிழ்ப் புத்தக விற்பனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வளவு பிரமாண்டமான சந்தை நடைபெறுவதைப் பார்த்து, தங்களது நூல்களை விலைப்படுத்த வாய்ப்பில் லையே என்று தமிழ் நூலாசிரியர்கள் கண்ணீர் வடிக் கின்றனர்.

தேசியப் பாடசாலை, நவோதயப் பாடசாலையென்று நூலக அபிவிருத்திக்காக வகைரீதியாக நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த போதும், ஆக்க இலக்கியமென்று வரும் போது, இந்திய இலக்கியங்களையே அள்ளுகின்ற நிலைப் பாட்டிலிருந்து அதிபர், ஆசிரியர்கள் விடுபடாத, புரிந்து கொள்ளாத ஒரு துன்பியலும் தொடரவே செய்கின்றது.

தமிழ்ப் புத்தகத் துறையினர் பெருமூச்சு விட்டபடி, கதிரைகளைச் சூடாக்கிக் கொண்டிருக்கையில், சிங்கள நூலாசிரியர்கள் இன்னொரு வகையில் களமிறங்கியுள்ளதை நாம் கவனித்தாக வேண்டும்.

தனிப்பட்ட வகையில் நூல் வெளியிடும் ஆசிரிய வெளி யீட்டாளர்கள் ஒன்றிணைந்து, ஆசிரிய நூல் வெளியீட்டா ளர்கள் சங்கமொன்றை ஸ்தாபித்துள்ளனர். அதன் மூல மாக வெளியீட்டு விழா மற்றும் புத்தகக் கண்காட்சிகளை அவ்வப்போது நடாத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் பல்வேறு விதமான வாதப் பிரதிவா தங்களும் இடம்பெறாமலில்லை.

''நூல் வெளியீட்டாளர் சங்கத்தினர் பெரும் முதலாளி களே. இதன் மூலமான வருவாய் எழுத்தாளர்களைச் சென்றடைவதில்லை.'' என்று ஒரு சாரார் குற்றம் சுமத்த, ''எழுத்தாளர்களோடு செய்து கொள்ளும் எழுத்து மூல ஒப்பந்தத்திற்கமைய அவர்களுக்கு விற்பனை விலையில் பத்துவீத ரோயல்டி வழங்கப்படுகிறது'' என்று மறுசாரார் மறுதலிக்கின்றனர்.

பல்வேறு தரப்பினரதும் விமர்சனங்களையும், கண்ட னங்களையும், கிண்டல்களையும் உள்வாங்கி, இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கம் புத்தகக் கண்காட்சியோடு நின்றுவிடாமல் எழுத்தாளர் மற்றும் பொது நலத் திட்டங் களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட ஆண்டில் வெளிவரும் சிறந்த நாவல்கள் ஐந்தைத் தெரிவு செய்து, அதில் மிகச் சிறந்ததற்கு கண்காட்சி ஆரம்ப வைபவத்தின் போது, ஐந்து லட்சம் ரூபா பரிசளிக்க முன் வந்துள்ளது.

இது சம்பந்தமாகப் பேராசிரியர் சுசரித் கமலத் கருத்துக் கூறுகையில் ''ஐந்து லட்சம் அல்ல ஐம்பது லட்சம் வழங்க முடியும். அப்போது நிம்மதியான சுதந்திரமான மனோ நிலையில் குறிப்பிட்ட படைப்பாளி இன்னும் சிறந்த சிருஷ்டி களைத் தரமுடியும்'' என்றார்.

மற்றும் உயர்தர மாணவர்களின் நன்மை கருதி, மாணவர் கல்விச் சகாய நிதியமொன்றையும் இவ்வமைப்பு ஆரம்பித்துள்ளது.

இரண்டு கோடி மக்கள் வாழும் இந்த நாட்டில் வருடாந்தம் 1000 உட்பட்ட புத்தகங்களே வெளிவருகின் றன. இது ஒப்பீட்டு ரீதியில் மிகக்குறைவு. எழுத்தறிவு விருத்தியும் அச்சுத் தொழில் நுட்பமும் முன்னேறியுள்ள இக்காலத்தில் நூல் வெளியீட்டை அதிகரிக்கச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஒரு பௌத்த பிக்கு தெரிவித்திருந்தார்.

மாணவர்கள், பெற்றார்கள், வாசகர்கள், எழுத்தாளர் கள், வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்கள், கல்விமான் கள், மதகுருக்கள் என்று எல்லோரும் ஏதோவொரு வகை யில் கொடுக்கும் உந்துதலால் புத்தகத் துறையை மேலு யர்த்த வழிவகுத்து வருவது நினைக்க மகிழ்ச்சி தருகி றது. இதற்கான அடைவும் கிட்டிய வண்ணமேயுள்ளது.

புத்தகக் கண்காட்சி கொழும்புக்கு மாத்திரமா? உயர் தரப் பாடசாலைகளுக்கு மட்டுமா? மாகாணப் பாடசாலை களுக்கு இந்த வாய்ப்புக் கிட்டாதா? பரந்து வாழும் கிராம மக்களுக்கு இந்த வாய்ப்பு வராதா? என்றெல்லாம் நியா யமான குரல் எழ ஆரம்பித்துள்ளது.

இதன் பிரதிபலிப்பாக மாகாண ரீதியாக இவ்வாறான புத்தகக் கண்காட்சிகளை நடாத்தும் சாத்தியக் கூறு பற்றி. அவசரப்படுவதாகத் தெரிகிறது.

மாகாண சபைகள் தமது பாடசாலைகளின் நூலபிவி ருத்திக்காக ஒதுக்கும் நிதி மற்றும் பாடசாலைகள் வசதிக் கட்டணம், தரமான உள்ளீடு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் மூலமாக ஒதுக்க உத்தேசித்துள்ள தொகை முதலான விபரங்களைக் கல்வியமைச்சுக் கோரியுள்ளது.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் புத்தக வெளியீடு-விற்பனை- பரவலாக்கம் தொடர்பாக அவ்வப்போது பேசுவதுண்டு. ஆனால் இயங்கியதில்லை.

இன்று பரவலாகப் புத்தகங்கள் மூலை முடுக்கெல்லாம் வெளிவர ஆரம்பித்துள்ளன. உள்ளடக்கக் கனதி, செய்நேர்த்தி எப்படிப் போனாலும், கொஞ்சம் பிரதிகளை அச்சிட்டு, புத்தக வெளியீட்டு விழாக்களைக் கோலாக லமாக நடாத்தி, ஒரே தினத்தில் லாபக் கணக்குப் பார்க் கும் கலாசாரம் மேலோங்கி வருகின்றது. எண்ணிக் கையை உயர்த்திக் கொள்ள ஒரு வேளை இது உதவலாம்.

இரத்தமும் சதையுமான தமது படைப்பில் ஆயிரம் பிரதிகளை அச்சிடும் பாரம்பரியம் எமக்குண்டு. அவை எழுத்தாளர் சூழல், மற்றும் பாடசாலை, பல்கலைக் கழகம், நூலகங்கள், வாசகர்கள் என்று பரவலாகி வாசிக்கப்பட வேண்டிய வெகுஜனத் தேவை எமக்குண்டு.

இந்தவகையில் சாத்தியமாகக் கூடியதொரு திட்டத்தை வகுத்துச் செயற்பட வேண்டிய கட்டாய நிலைப்பாட்டுக்கு நாம் வந்திருக்கிறோம். இதற்காக ஒரு சிறிய தமிழ் நிலைக் கனவு கண்டால் என்ன? எப்போது?




## இருப்பு

ஆங்கிலமூலம்- ஜேம்ஸ் வெல்டன் ஜோன்சன்
தமிழாக்கம்- சோ. பத்மநாதன்

அண்ட வெளியில் கால் பதித்த
கடவுள்சுற்றும் முற்றும் பார்த்தார்
"தனிமையாய் இருக்கிறது
எனக்கென ஓர் உலகைப் படைப்பேன்"
என்று திருவாய் மலர்ந்தருளினார்

கடவுளின் கண்ணுக் கெட்டியவரை
சைப்பிரஸ் குடைபிடிக்கும்
சதுப்பு நிலத்து நள்ளிரவுகளினதும்
கரிய இருள்
எல்லாவற்றையும் விழுங்கியிருந்தது
அவ்வேளை கடவுள் முறுவலித்தார்
ஒளி பிறந்தது
ஒரு புறத்தே இருள் சுருண்டு போயிற்று
மறுபுறத்தே ஒளி பிரகாசித்தபடி நின்றது
"நல்லது" என்றார் கடவுள்

பிறகு- கடவுள் எப்படி ஒளியைப் பற்றினார்
அதைக் கைகளால் உருட்டி
சூரியனை உருவாக்கினார்
விண்ணகத்தில் அதைக் கனன்றெரிய வைத்தார்
எஞ்சிய ஒளியை ஒரு பிரகாசமான பந்தாக்கி
இருளில் மோத வீசினார்
அது தட்டுக்களாகச் சிதறி
சந்திரனாகவும் விண்மீன்களாகவும்
இரவை அலங்கரித்தன.

பிறகு- ஒளிக்கும் இருளுக்கும் நடுவே
உலகை நிறுத்தி விட்டு
"நல்லது" என்றார் கடவுள்

பிறகு- கடவுளே இறங்கி வந்தார்
அவருடைய வலக்கையில் சூரியன்
அவருடைய இடக்கையில் சந்திரன்
அவருடைய தலையைச் சுற்றி உடுக்கூட்டம்
அவருடைய பாதத்தின் கீழ் பூமி
கடவுள் நடந்தார்
அவருடைய பாதம் அழுந்திய
இடங்களெல்லாம்
பள்ளத்தாக்குகள் குழிந்து அமுங்கின
மலைகள் பிதுங்கி எழுந்தன.

கடவுள் சற்று நின்று பார்த்தார்
பூமி வெந்து, வெறிதாய்க் கிடந்தது
ஆகவே, கடவுள் பூமியின் ஓரமாய்ப் போனார்
துப்பினார்- ஏழு கடல்களும் உண்டாயின
கண்களை இமைத்தார்- மின்னல் வெட்டியது
கைகளைத் தட்டினார்- இடி இடித்தது
பூமிக்கு மேலே நீர் பொழிந்தது
மண் தண்ணென்று குளிர்ந்தது

பிறகு-பச்சைப் புல் முளைவிட்டது
சிவந்த சிறுமலர்கள் முகையவிழ்ந்தன
ஊசியிலை மரம் தன் விரலை வான் நோக்கி
நீட்டியது
'ஓக்' மரம் தன் கைகளை விரித்தது
நிலக்குழிகளில் ஏரிகள் தழுவிக் கிடந்தன
ஆறுகள் கடலை நோக்கி ஓடின
கடவுள் மீண்டும் முறுவலித்தார்
வானவில் தோன்றியது
அது கடவுளின் தோளைச் சுற்றிக் கொண்டது

பிறகு- கடவுள் கைகளை உயர்த்தினார்
கடலின் மேலும் நிலத்தின் மேலும்
தம் கையை வீசினார்
'பொலிக, பொலிக' என்றார்
கடவுள் தம் கையைக் கீழே விடுமுன்னே
மீன்களும் விலங்குகளும் பறவைகளும்
ஆறுகளிலும் கடல்களிலும் நீந்தின
காடுகளிலும் வான்களிலும் அலைந்தன
தம் சிறகுகளால் காற்றைக் கிழித்தன
"நல்லது" என்றார் கடவுள்

பிறகு- கடவுள் உலாவினார்
தான் படைத்தவற்றையெல்லாம் பார்த்தார்
தன் சூரியனைப் பார்த்தார்
தன் சந்திரனைப் பார்த்தார்
தன் சின்னஞ்சிறு உடுக்களைப் பார்த்தார்
தன் உலகை- உயிரினங்களை- பார்த்தார்
"இருந்தும், தனிமையை உணர்கிறேன்!"
என்றார் கடவுள்.

பிறகு- ஒரு குன்றின் பக்கத்தே
ஓர் அகன்ற ஆற்றின் ஓரமாக
தன் தலையைக் கைகளால் தாங்கியபடி
அவர் அமர்ந்தார்
கடவுள் நெடு நேரம் சிந்தித்தார்
"எனக்கென மனிதனைப் படைப்பேன்!"
என்றார் கடவுள்

ஆற்றுப்படுக்கையிலே
கடவுள் ஒரு பிடி மண்ணை எடுத்தார்
ஆற்றங்கரையில் முழந்தாளிட்டு அமர்ந்தார்
சூரியனைக் கொளுத்தி வானில் ஏற்றிய கடவுள்-
இரவின் மூலை முடுக்குகளில்
நட்சத்திரங்களைத் தூவிய கடவுள்-


உள்ளங்கையில் பூமியை உருட்டியெடுத்த
பென்னம் பெரிய கடவுள்-
தன் குழந்தையை நோக்கிக் குனியும் தாய்போல
ஒரு களிமண் உருண்டையைப் பிசைந்தபடி
புழுதியிவ் குந்தி இருக்கிறார்
அதில்- தன் உருவைச் சமைக்கும் வரைக்கும்!

பிறகு-அதனுள்ளே
உயிர் மூச்சை ஊதினார்
மனிதன் உயிர்த்தான்
ஆமென்? ஆமென்.




### பக்கத்து வீட்டில் தங்கியிருந்த அந்தக் குருத்திக் குடும்பங்களுக்கு.....


ஓரிரவில் வந்து
எமது குடித்தனங்களின்
மௌனம் கலைத்து
பக்கத்தில் பாழ் அடித்து நின்ற
வீட்டைச்
சுத்தம் செய்தீர்கள்



கசமுசாவென்ற உங்கள்
பாஷைகளுடே
என் திண்ணையிலும்
விளையாடித் திரிந்தன
உங்கள் குழந்தைகள்.

நுளம்புகள் ரீங்காரித்த
மரத்தடியில் சுகமாய் உறங்கி
ஓரிரவுக்குள்ளேயே சண்டை பிடித்து
மண்டை உடைத்து
மருந்தும் கட்டிக் கொண்டீர்கள்.

நீர் தரும் வழிகளை
நாம் மறைத்து விட்டபோதும்
விடிகாலைக் கதிரோடு எழுந்து
ஊருணியில் குளித்து வந்து
சிலபோத்தல் நீரோடு
தேவைகளை
முடித்துக் கொண்டீர்கள்.



"அவர்களைப் பார்க்காதே
வாய்க்குள்ளிருக்கும்
மாய அரிசியை வீசி
கோழி பிடிக்கும் கூட்டம்"
என்று என் மகளுக்கு
நான் சொல்லிய கதைகளைப்
பொய்யாக்கிப் போயிற்று
பளபளக்கும் பட்டும்,
இமிடேஷன் நகைகளும் பூண்டு
அழகிய டொல்பின் வேனில் ஏறி
நீங்கள் எம்மைக்
கடந்து சென்ற காட்சி.

### ஒப்பீடு

வண்ணச் சுண்ணமெடுத்து
அழகழகு எழுதுகோல்களுடன்
புதிய புதிய கொப்பிகளில்
எழுதித் தள்ளுகிற குழந்தையை
என் இறந்தகால
வறுமை வடுக்களைத் தடவியபடி
பார்க்கிறேன்
இன்றைய பிள்ளைகளுக்கு
எத்தனை வசதிகள்?

இதே கேள்வி ஓங்கி ஒலித்து
மறைந்திருக்கும்,
எனது பிள்ளைப் பருவத்தில்
எனது தாயின்
பள்ளிப் பருவம் மீதான
ஞாபகங்களின் சுவடுகளோடும்

### தொன்மை

நிஜ
அம்மா– அப்பா விளையாட்டு
விளையாடி
ஓய்ந்து போன என்முன்னே,
என் குழந்தைகள்
விளையாடின
அம்மா– அப்பா விளையாட்டு

### *My Computer*

எத்தனை முறை யோசித்தாலும்
புலப்படுவதாயில்லை.
உட்பகுதிகளை மாற்றுவதா?
உருவத்தை மாற்றுவதா?
ஒளித்து வைப்பதா?
உற்றார் ஒருவர் தலையில்
கட்டி விடுவதா?

அனுதினம்
நகர் காவலர் வரவை எதிர்பார்த்து
விறைத்துப் போர்த்திருக்கும்
நான்
பிளக்மார்கட் என்று அறியாமல்
சந்தோஷமாய் வாங்கி வந்த
அந்தக் கம்பியூட்டர்.

– கெகிறாவ ஸஹானாவின் கவிதைகள்

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*

# ATCO FREIGHT SERVICES

## Clearing, Forwarding
## &
## Transport Agents

*454, T.B. Jayah Mawatha,*
*Colombo - 10. Sri Lanka*
*Tel : 2678953*




# 'வெறி' அரங்கேறியது

- பத்மா சோமகாந்தன்

பல்லாண்டுகளுக்கு முன் நடந்தேறிய சில நிகழ்ச்சிகளை அசைபோட்டுப் பார்க்கிறேன்.

ஐம்பதுகளின் பிற்பட்ட காலம்.

யாழ்ப்பாண நகரில் எழுத்தாளர்கள் இரண்டொருவர் சந்தித்துப்ப பேசும் களமாக, டொமினிக் ஜீவாவின் தொழிலிடம், பூபாலசிங்கம் புத்தகநிலையம், முட்டாஸ்கடைச் சந்தி, வரதரின் அச்சகம், 'விடிவெள்ளி' க. பே. முத்தையாவின் பாடசாலை வளவு என்றிருந்தாலும், பலர் கூடிக் கருத்துப்பரிமாறுவதும், அடிபிடிப்படுவதுபோல, உரத்த சத்தத்துடன் தன்பக்கக் கருத்தை உறைக்கப் பேசுவதும், எதிரணியைத் திட்டித் தீர்ப்பதற்கும், எதிர்காலத் திட்டம் பற்றி யோசிப்பதற்கும், அழுத்தம் கொடுப்பதற்குமான மையமாக யாழ் மத்தியகல்லூரி, பாரதிபாஷா வித்தியாசாலை, முற்றவெளி போன்றவை மேடையமைத்துக் கொடுத்துள்ளன. திருவிழாக் காலங்களில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முருகபக்தர்களின் இராய்ச்சியமாக மட்டுமல்ல, முற்போக்கு எழுத்தாளர்களின் கலைக்கூடமாகவும் திகழ்ந்திருக்கிறது.

தென்னகத்திலிருந்து இலக்கிய எழுத்தாளர்களான கல்கி, பெரியசாமிதூரன், ரகுநாதன். சரஸ்வதி ஆசிரியர் விஜய்பாஸ்கரன், அன்புப்பழம் நீ, தீபம் பார்த்தசாரதி எனப்பலரும் யாழ்நகருக்கு விஜயம் செய்து இங்குள்ள எழுத்தாளர்களை உசுப்பி விட்டிருந்தமையாலும், நமது தேசிய இலக்கியத்தை நேர்த்தியாக வளர்த்தெடுக்க வேண்டுமென்ற அவாவுடனும் யாழ் எழுத்தாளர்களெல்லாம் பரபரப்பாக உத்வேகத்துடன் இயங்கிய காலம். இந்தக் காலகட்டத்தில் தான் 'கங்கை' ஆசிரியர் பகீரதன் இலங்கை வந்திருந்தார். "இலங்கைச் சிறுகதைகள் பத்து ஆண்டுகள் பின்நிற்கின்றன!" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

உள்ளத்தின் ஆழத்திலே இது ஒரு பலப்பரீட்சையாக கருதப்பட்டாலும், கற்பனையும், எழுத்து வீரியமும் தனிப்பட்ட ஆற்றல்களின் வெளிப்பாடும் மேகங்களாக மூடிக் கொள்ள யாழ் எழுத்தாளர் சங்கம் கதைக்களுக்கான பரீட்சார்த்தமாகவும், திறனாய்வுக்கான மன்றாகவும் இக்கதை அரங்கினை ஒழுங்கு செய்திருந்தது. இவ்வரங்கில் 'வெறி' என்ற பொதுத்தலைப்பில் அறுவர் தாம் எழுதிய கதைகளைப் பல எழுத்தாளர்கள், ரசிகர்கள், சபையோர் மத்தியில் வாசிக்க வேண்டும். சபையோர் குறிப்புகள் கூறுவர். இவ்வரங்கில் பங்குபற்றியோர் இன்று சிறுகதைக் களத்தில் தமக்கென நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட வரதர், டானியல், சு. வே (சு. வேலுப்பிள்ளை), டொமினிக் ஜீவா, சிற்பி, பத்மா.பஞ்சநந்தீஸ்வரன் என்போராவர்.

என்னைத் தவிர, அன்றைய கருத்தரங்கில் பங்கு கொண்ட ஏனைய ஐவரும் இலங்கையின் நவீன இலக்கியத்துறையின் சிகரத்தைத் தொட்டவர்களாகவும், நவீன இலக்கிய வரலாற்றில் இவர்களுடைய பெயர்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கக் கூடியதாகவும், இவர்கள் பரிமளித்திருப்பதை விளையும் பயிர்களாக முளையிலேயே இனம் காட்டிக் கொண்டனர்.




# குருடர்களின் வெளிச்சம்

(மூலம்: லூயிஸ் பிரெய்லி)

ஆங்கிலத்தில்:- ரஸல் Fப்ரீட்மன்

தமிழில்:- கெகிராவ ஸுலைஹா

"லூயிஸ் பிரெய்லி குருடாக இருந்த போதிலும், பார்வையுடைய பலரையும் விட அவரது நோக்கு சிறப்பாயிருந்தது. அவர் அசாத்தியமானதையெல்லாம் சாத்தியமாக்கினார்."

அந்த அறை முழுதும் அமைதியும், இருளும் நிரம்பி இருந்தது. ஒரேயொரு சிறுவன் மட்டும் விழித்திருந்தான். அவ்வறையின் தொலைதூர மூலையொன்றில், தன் கட்டிலின் ஓரத்தே மடிமீது ஒரு தடித்த பத்திரிகைத் துண்டை வைத்துப் பிடித்தபடி, மெல்ல நிதானமாக, அவன் கூரிய எழுத்தாணி ஒன்றைப் பயன்படுத்தி அதிலே சின்னச் சின்னத் துளையிட்டான். இடையிடையே, துளையிட்ட அப்பத்திரிகைமீது தடவிப் பார்ப்பதும், பின் மீண்டும் தன் வேலையில் தொடர்வதுமாய் அவனிருந்தான்.

பக்கத்துக் கட்டிலிலிருந்து மெல்ல ஒலிக்கும் தொனியில், அவனது வேலையில் தலையீடு செய்வது போல, ஒரு குரல், "லூயிஸ் நீயா? இன்னமும் துளையிட்டபடியே" என்று முணுமுணுத்தது.

"உஸ்ஸ்...... சத்தம் செய்யாதே கோதியர். சுணங்கிவிட்டது. நீ எல்லாரையும் எழுப்பப் போகிறாய்......"

"அதை ஒருபக்கம் வைத்துவிட்டு, நீ சற்று ஓய்வெடுப்பது நன்று லூயிஸ். நடத்துனர், நாளை நீ வகுப்பில் தூங்கி வழிய நேர்ந்தால் உன்னைப் பயமுறுத்துவார்."

"எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும்; இதோ என் வேலையை முடித்துவிட்டேன்; தயவு செய்து நீ தூங்கு."

லூயிஸ் பேப்பரையும், எழுத்தாணியையும் தன் கட்டிலின் பக்கத்திலிருந்த இராக்கையின் மீது வைத்தான். அவ்வறை வழியே தன் கைகளை நீட்டிய படியே நடந்து, ஒரு திறந்த ஜன்னலண்டை நின்றான் அவன். அவனுக்கு மெலிந்த உடம்புதான். ஆயினும், அழகும் கூர்மையும், புத்திசாலித்தனமும் அவன் தன் பதின்மூன்று வயதுக்கும் பார்க்க முதிர்ந்த தோற்றத்தை அவனுக்கு வழங்கியிருந்தன.

அகன்ற நெற்றியின் மீது, சிக்குப் பிடித்திருந்த அவனது தலைமுடி விழுந்து கிடந்தது. அவனது தோற்றம், அவனது கண்களால் மட்டுமே அவலட்சணமாகத் தோற்றமளித்தது. கன்ன எலும்புகள் மேலே இளம் ஊதா நிறத்தில் அவை வெறுமையை வெறித்தபடி காட்சியளித்தன.

லூயிஸ் பாரிஸிலுள்ள இளம் குருடர்களுக்கான தேசியப் பயிற்சி நிறுவனத்திலோர் மாணவன். பல மாதங்களாக, அவன் தன் கற்பனையிலுதித்த, தன் முழு வாழ்வின் மீது செல்வாக்குச் செலுத்தத்தக்க ஒரு திட்டம் மீது மனம் ஒன்றித்திருந்தான். பத்திரிகை மீது துளைகளிட்டு புள்ளிகளால் குருடர்களுக்கென பிரத்தியேகமான எழுத வாசிக்க உதவுமோர் எழுத்தாணி முறையை உருவாக்குமோர் அயரா முயற்சியே அது.

குருடர் என்போர் எழுதுதற்கும், வாசிப்பதற்கும் தகுதியற்றோர் என்றிருந்த காலகட்டம் அது. அப்போதைக்கிருந்த நல்ல முறை எனக்கருதப்பட்ட வாசிப்பு எழுத்து முறை கூட, பயனற்ற ஒன்றாகவேயிருந்தது. மனித அறிவார்த்தங்களில் தனிமைப்பட்டு, எழுத்துவடிவினதோர் அமைப்பில் உரையாட முடியாததோர் அவலத்தில் வாழ்வின் முழுமையை பகிர்ந்து கொள்ள முடியாத அவநம்பிக்கையில், அவர்கள் உழன்றபடியிருந்தனர். இந்த உண்மையை லூயிஸால் அங்கீரிக்க முடியவில்லை. குருடனாய் இருந்ததால், அவன் மனித சமூகத்தின் தொடர்புகளிலிருந்து முழுதாய்த் துண்டிக்கப் பட்டிருந்தான்.

எனினும், அவனது துளையிடுதல் பரீட்சார்த்தத் திட்டம், யத்தார்த்தத்தில் வெற்றியளிக்கத்தக்கதாயில்லை. நிறுவனத்தில் அனைவருமே அவன் அவனது நேரத்தை வீணடிப்பதாய் குறைபட்டுக் கொண்டனர். இது சாத்தியமேயற்றது. குருடர்களுக்கென்று என்ன பிரத்தியேக வாசிப்பு எழுத்து முறை உள்ளது...... என அவர்கள் அங்கலாய்த்தனர். அவன் சற்று உற்சாகமிழந்தான். தனது திட்டம் தன் தகுதிக்கு மீறியதோவென, அவனே தனது திட்டம் குறித்து வியப்படைந்தான். அது தான் உண்மையும் கூட. பார்ப்போரின் உலகத்தில் அவன் தக்க வைக்க எண்ணியிருந்த இடம், சிலவேளை அவனுக்கோ அவனைப் போன்ற சக குருடருக்கோ சாத்தியமற்றதாகவே தோன்றிற்று என்பதுதான் உண்மை.

கீழே கரடுமுரடான பாதையில் குதிரை வண்டிகள் கடகடவென பாதை கடந்து, உருண்டோடும் ஒலி தொடர்ந்து ஒலிப்பதை லூயிஸ் கேட்டான். சட்டென, அவன் தன் தனிமையை உணர்ந்தான். வீட்டு ஞாபகங்கள் மனசை அலைக்கழித்தன. யன்னலடியே கரடுமுரடான அவ்வெற்றுத் தரைமீது அமர்ந்து கொண்டான் லூயிஸ். முழங்காலை மடித்துக் குந்தியபடி, தலையை சுவர் மீது சாய்த்துக் கொண்டான். மென்மையான ஏப்ரல் காற்றின் வருகையை அநுபவிக்கையில், அவனது சொந்தக் கிராமத்தின் வசந்தமான பருவகாலங்கள் பற்றிய ஞாபகங்களில் மனசு மூழ்கிப் போனது.

வெற்றுப் பாதங்களில், அவனால் அந்த வயல்களின் மென்மையையும், ஈரத்தையும் இப்போதும் உணரமுடிந்தது. புதுக் கராம்பின் வாசனை மலைவெளியெங்கிலும் பரவிக் கிடக்கக் கூடும்; உள்ளூர் விவசாயிகள் அவர்களது அறுவடையை கிராமத்தின் சந்தை சதுக்கம் நோக்கி எடுத்துச் செல்வர்; மேலும் மேலும் தன் சிறுபராய நினைவுகளை அசைபோட்டுப் போட்டு லூயிஸ் குறித்த சதுக்கம் எவ்வாறிருக்கும் என ஞாபகிக்க முயற்சித்தான். ஆனாலும், அது பயனற்றது என்பதை அவன் அறிந்திருந்தான். இதற்கு முன்னமும் பலதடவை அவன் இதற்காக முயன்றிருக்கிறான். ஆனாலும், அவனால் அந்தச் சதுக்கத்தையோ அந்த வயல்வெளிகளையோ, அந்த மலைகளையோ ஞாபகப்படுத்த முடியவில்லை. அவனது வீடு எது போலிருக்கும்...... அவனது தாய் தந்தை முகம் எவ்வாறு இருக்கும் என்பதையோ கூட அவனால் ஞாபகிக்க முடியவில்லை.

அந்த இல்லத்தின் சப்தமும், வாசமும், உணர்வும் சித்திரம் போல தெளிவாக அழகாய் இருந்தது. ஆனாலும் காட்சிகள் மங்கிப் போய், முழுதாய் ஞாபகத்தைவிட்டு விலகியே இருந்தன. என்றோ கண்ட எதையும் அவனால் இப்போது ஞாபகிக்க முடியவில்லை. குருடனாகி ரொம்ப காலங்களாகிவிட்டன.

ஒரு குழந்தையாய் லூயிஸ், தன் கால்களைக் கட்டிக் கொண்டு கல்தரை மீது அமர்ந்திருப்பான். குதிரைச் சேணம் தயாரிக்கும் தன் தந்தையினது, பாரிஸிலிருந்து இருபது மைல்கள் கிழக்கே அமைந்திருக்கும் ஒரு சின்ன கூப்வ்ரே (Coupvray) என அழைக்கப்படும் விவசாயக் கிராமத்திலிருக்கும் கடையில், தன் தந்தை சைமன் வேலை செய்வதை அவதானித்தபடியே!

ஒரு பெரிய தோலினாலான மேலாடையணிந்து உயரமான மனிதனாகிய சைமன் பிரெய்லி, சேணத்துக்கு கொழுக்கிகளை மாட்டியபடி வேலை செய்து கொண்டிருப்பார்.

லூயிசுக்கு தன் தந்தையின் கடையில் தன் பொழுதைப் போக்குவதில் அலாதிப் பிரியம். பலகையாலான அக்கடையின் கூரையினது உத்தரம் வழியே பதனிடப்பட்ட தோலினது கடும் வாசனை பரவியபடியிருக்கும். ஒரு சுவர் வழியே, இரும்புக் கொழுக்கிகள் மீது தொங்கவிடப்பட்டிருக்கும் பச்சைத் தோல்கள்..... மேசை மீது ஒவ்வொரு அளவிலும், வடிவிலும் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் இரும்பு ஆயுதங்கள்.

தன் தந்தையைப் போல வேலை செய்து பார்ப்பான் லூயிஸ் சிலவேளைகளில். அவனது நான்காவது பிறந்தநாளுக்கு கொஞ்ச நாட்களே இருக்கையில், ஒரு நாள் காலை அப்படித்தான் சைமன் ஒரு நீண்ட தோல் துண்டின் மீது ஓட்டைகள் போடுவதை, லூயிஸ் கவனமாக அவதானித்தபடி இருந்தான். வேலைத்தளத்திலிருந்து மேசையருகே லூயிஸ் மெல்லச் சென்றான். தன் தந்தை ஓட்டைகள் போடப் பாவித்துக் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு இரும்பாணியை மெல்ல எடுத்து, நிலத்திலிருந்து பொறுக்கிய தோல் துண்டு மீது துளையிட ஆயத்தமானான்.

ஒரு கண்ணால் அளவெடுப்பது போல பாவனை செய்தபடி தந்தை செய்வதைப் போல, தலையைக் கவிழ்த்திக் குத்தூசியால் தோல் துண்டின் மீது சுரண்டுவதும், பாய்ச்சுவதுமாய் வேலையிலீடுபட்டான் அவன். தோலோ ரொம்பக் கனதியாகயிருந்தது. உறுதியோடு தலையை இன்னும் சற்றுக் கீழே கவிழ்த்தி தன் பலத்தையெல்லாம் கூட்டி, குத்தத் தொடங்கினான். கூரிய ஆயுதம் தோல் துண்டின் மீது வழுக்கிச் செல்ல...... லூயிஸின் அலறல் சப்தம் கேட்டது.

சைமன் தன் கதிரை மீதிருந்து அடித்து எழுந்தார். சிறுவனின் முகத்திலிருந்து இரத்தம் ஆறாக ஓடிற்று. பயத்தில் உறைந்து போன அவர், தன் மகனைக் குனிந்து தூக்கினார். அதிக பயத்தின் காரணமாக, லூயிஸின் கண்களிலிருந்து ரத்தம் வழிவதாய் உணர்வேற்பட்டது. அவருக்கு தனது கையில் காயமுற்றுத் துடிக்கும் மகனை அணைத்துப் பற்றியபடி வாசல் வழியே கத்தி மனைவியைக் கூவியழைத்தபடி நடந்தார். தானிருந்த கல்வீட்டின் கதவு வழியே அக்காட்சியைக் கண்டதும் லூயிஸின் அம்மா "கருணையுள்ள கடவுளே என்ன இது என் குழந்தையின் முகத்தில்......?" என்று அலறியபடியே, தந்தையின் கையிலிருக்கும் குழந்தையைப் பறித்தெடுத்தபடி உள்ளே ஓடினாள்.

சைமன் வாசல் வழியே மீண்டும் வந்து, தன் குதிரை மீதேறி உள்ளூர் வைத்தியர் ஒருவரைத் தேடி ஓடத் தொடங்கினார். அவர் திரும்பி வந்து பார்த்தபோது, அவ்வீட்டின் இரண்டாம் மாடியின் ஓர் அறையின் ஜன்னலருகே, ஒரு கோரைப் பாய் மீது கிடத்தப்பட்டிருந்தான் லூயிஸ். தன் தாய் தனது கைகளைப் பற்றியபடியே, தனதருகே உட்கார்ந்திருப்பது உணர்ந்து அவன் மெல்ல விசும்பினான். தாயினது கண்கள் அச்சமுற்றிருந்தன; கூடவே, வீங்கியுமிருந்தன. ஒரு கேத்தலில் கொதிக்க வைத்திருந்த நீரினால் அவனது காயப்பட்டிருந்த இடத்தைச் சுற்றித் துடைத்து மெல்ல துப்புரவு செய்வதைத் தவிர வேறெதுவும் அவளால் பெரிதாக செய்ய முடியவில்லை. வைத்தியர் உள்ளே நுழைவது கண்டு, தாய்

எழுந்து நின்றார். வந்த வைத்தியர், லூயிஸை ஆழமாகப் பார்த்தார் குனிந்து.

சிறுவன் அவனது கண்ணைத் தான் குத்திக் கொண்டிருந்தான். வைத்தியர் செய்வதற்கு பெரிதாக எதுவுமிருக்கவில்லை. அவர், தலையை அசைத்துக் கொண்டார். அவனது காயப்பட்ட கண்ணுக்கு ஓர் குளிர் மருந்து வைத்தார். அவர் தினமும் வந்து போனாலும், தொற்றிலிருந்து அவனது கண்ணைப் பாதுக்காக்கிறளவு அவருக்கு எதுவும், செய்ய முடியாதிருந்தது. சொஞ்ச நாட்களுக்குள், தொற்று, அவனது மற்றக் கண்ணிலும் பரவிற்று.

அவன் மீது அவர் கரிசனை கொண்டு, லூயிஸை ஒரு இருட்டறைக்குள் வைக்கும் படி, கண்டிப்பான கட்டளை பிறப்பித்தார்.

ஏறக்குறைய இரண்டு வாரங்களாக, லூயிஸ் ஒரு இருட்டறைக்குள் கிடந்தான். அவன் தலையிலே , இறுக்கமாக கண்களைச் சுற்றிக் கட்டு போடப்பட்டிருந்தது. அவனது மூத்த சகோதரனும், இரு மூத்த சகோதரியரும் கதைகள் பல சொல்லி, அவனுக்கு விளையாட்டுக் காட்டிய வண்ணமிருந்தனர். அவனது, அம்மாவும் அப்பாவும் கவலையுற்ற தொனியில், ரகசியக் குரல்களில் பேசிக் கொள்பவர்களாக, அந்த வீட்டில் சந்தடி காட்டாது நடமாடிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு நாளும் வைத்தியர் வந்த போது, "நாம் என்ன செய்ய" என்றவர்கள் வினவினர். ஒவ்வொரு நாளும் வைத்தியரும் பதிலளித்த படியிருந்தார். "பிரார்த்தியுங்கள். அது தவிர செய்வதற்கேதுமில்லை" என்று.

சைமனும், அவரது மனைவியும் நடுக்கத்தோடு நின்றிருக்க, ஒரு மாலை வேளையில் அவர்களது மகனது கண்களிலிருந்து, கட்டு கடைசியாக அகற்றப்பட்டது. லூயிஸை கவனமாக பரிசோதித்த வைத்தியர், மெல்லத் திரும்பி ஜன்னலண்டை போய், ஜன்னல் கதவுகளைத் திறந்து அந்த அறையெங்கிலும் சூரிய ஒளி படுமாறு செய்து, அவனைக் கேட்டார். "என்ன தெரிகிறது லூயிஸ்?" லூயிஸ் கண் இமைக்காதிருந்தான். வைத்தியர் அவனைத் தன் கைகளில் அள்ளியெடுத்து, ஜன்னலருகே மிக நெருங்கிப் போய், மறுபடி மறுபடி கேட்டார். "சொல் சொல். என்ன தெரிகிறது உன் கண்களுக்கு?"

லூயிஸ் நேராக வெறித்தான் ஒரு சிலையின் தலையிலிருக்கும் கல்லான விழிக் கோலம் போலிருந்தன அவனது கண்கள். "எதையும் பார்க்க முடியவில்லை ஐயா. எதுவுமில்லை" அவன் மெல்லக் கேட்கும் தொனியில் முணுமுணுத்தான்.

ஒரு கணம் அந்த அறையை, அமைதி போர்த்தியிருந்தது. வாயில் கைவைத்து லூயிஸின் தாய் குலுங்கியழுதாள். வைத்தியர் சிறுவனை மறுபடி அவனது படுக்கையில் கொணர்ந்து கிடத்தினார். தாய் குனிந்து கட்டிலருகே உட்கார்ந்து, லூயிஸை தன் மார்போடு அணைத்தபடி குலுங்கியழுதாள். வைத்தியர், தன் பொதிகளைக் கையிலெடுத்துக் கொண்டு படிகளிலிறங்கினார் சைமனோடு.

"நம்பிக்கை தரும் வண்ணமாகயில்லையா?" சைமன் நம்பிக்கையிழந்து கேட்டார்.

"லூயிஸ் ஓரளவுக்கு மீளப் பார்வை பெறும் சாத்தியம் இருக்கத்தான் செய்கிறது. தொற்று நன்றாகவே கண்களைப் பாதித்து விட்டிருக்கிறது என்பதால் மனக்கவலை தான். மறுபடி என்றைக்குமே பார்வை பெற முடியாதவனாகவும் அவன் ஆகக் கூடும்" வைத்தியர் சொன்னார்.

"லூயிஸின் குதிரைச் சாணம் செய்யும் தந்தை எதுவுமே பேசாது, தலை கவிழ்ந்து நின்றார். தன் குதிரை மீது வைத்தியர் ஏறிச் செல்ல, சைமன் வாசல் வழியே திரும்பி நடந்து தன் வேலைத்தளத்திலே, ஒரு பிரம்பினை சீவத் தொடங்கினார்."

பார்வையை இழந்த ஏனைய சிறுவர்களைப் போலவே, லூயிஸும் தன் மற்ற அறிவினால் உலகத்தை, தன்னைச் சுற்றியிருக்கிற உலகத்தை- மறுபடி உணர்வதில் பெருத்த சிரமத்தை எதிர்கொண்டான்.

அவன் தன் சொந்த வீட்டை, தன் கைகளால் உணர்வதில் தன் முதல் முயற்சியை மேற்கொண்டான். அவன் கற்சுவர்களைத் தொட்டுணரவும், கற்படிகள் மீது ஏறி இறங்கவும் புரிந்து கொண்டான். சமையலறையிலே, பெரிய மேசையையும், கதிரைகளின் வடிவத்தையும், கோப்பைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அலுமாரியையும், சுவரிலே பொருத்தப்பட்டிருக்கும் தண்ணீர் பேசினையும், நெருப்பு மூட்டும் இடத்துக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கும் பெரிய இரும்புப் பானையையும் அவன் கற்றுக் கொண்டிருந்தான். எதிலும் முட்டி மோதா வண்ணம் சுதந்திரமாக அலைந்து திரிகிற அளவுக்கு வீட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் அவன் ஞாபகத்தில் பொதித்து வைத்திருந்தான். அதனைத் தொடர்ந்து, வெளியுலகம் மீதான அவனது முதல் படிப்பு ஆரம்பமாயிற்று.

இந்த முதல் பயணம் தயக்கத்தோடும், பிசகுதல்கள், இடறல்களோடு இருந்தாலும், லூயிஸ் தன் பிரம்பின் உதவியோடு தன் பாதையை உணரத் தொடங்கியிருந்தான். அருகிருக்கும் கிணறுக்கும், குழாய்க்கும் அவன் நடந்தான். பிறகு, கொஞ்சம் தொலைவிருக்கும் பாலம், அதனைத் தொடர்ந்து செங்குத்துப் பாறை வழியே கிராமத்துச் சதுக்கம் என்று அவன் தன் பாதையை கற்றுணர்ந்தான். அவனது வளர்ச்சிக்குத்தக்கதாய், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு புதிய பிரம்புகளென ஒன்றை தந்தை சீவி வைத்துவிடுவார். இந்தப் பிரம்புகளே அவன் கண்களாயிருந்தன. அவற்றினுதவியால், அவன் கூப்வ்ரே (Coupvray) யின் பாதைகளையும், வயல்களையும், மலைக்குன்றுகளையும் படிப்படியாக உணர்ந்து வைத்திருந்தான்.

லூயிஸ் வளர்ந்தபோது, தான் என்றோ கண்ட அம்சங்கள், அது பற்றிய ஞாபகங்கள் அனைத்தும் மெல்ல மங்கத் தொடங்கியிருந்தன. அவற்றினது நிறங்களையோ, வடிவத்தையோ அவனால் ஞாபகிக்க முடியவில்லை. ஒரு

மரம், உயரமானபதனவும், அதற்கு கரடுமுரடான தண்டுப் பகுதியும் நரம்புகள் இழையான ஓடும் இலைகளும், இருக்குமென்று அவனது விரல்கள் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தன. எனினும், மரம் எது போல இருக்குமென் பதை அவனால் ஞாபகிக்க முடியவில்லை. மனிதர்களை அவர் தம் குரல்களினால் அவன் அடையாளம் கண்டு கொண் டான். அவர்களது முகங்களின் படத்தை அவனால் ஞாப கிக்க முடியவில்லை. வசந்தம் 'ஓட்' தானியங்களுக்கி டையே மலர்ந்து மணம்பரப்பும் காம்பின் வாசனையாலோ, மலைவெளியெங்கிலும் பூக்கும் காட்டுப் பூக்களின் நறும ணத்தாலோ மட்டுமே உணரப்பட்டது. அவனது முகத்தில் விழும் மழைத்துளிகளால் மழை உணரப்பட்டது. வெற் றுத் தலை மீது சுள்ளெனச் சுடும் சூரியனின் வெப்பத் தினால் அவன் கோடையை உணர்ந்து கொண்டான்.

லூயிஸ் வேதனை மிக்கதோர் பாடம் படித்தேயாக வேண்டியிருந்தது. அது, கிராமத்தின் ஏனைய சாதாரண இளம் சிறார்களோடு அன்றி, அவனது குருட்டுத் தன்மை அவனை தொலைவுக்குத் தள்ளி வைத்திருந்ததே. அவன், வளர்ச்சியின் இயல்பான அநுபவங்களிலிருந்து தள்ளி, தனிமைப்பட்டேயிருந்தான். ஒரு சில பிள்ளைகள் அவ்வப்போது, அவனோடு உட்கார்ந்து பேசவும் அவனை விளையாட்டில் சேர்த்துக் கொள்ளவும் செய்தனர். இருந்தாலும், லூயிஸின் குருட்டுத் தன்மை அவர்களது விளையாட்டில் பல தடைகளை முன் வைத்தபோது, அவர்கள் குழம்பிப் போயினர். தவிர்க்க முடியாமல், அவர்கள் அவனை விட்டு விட்டு புதிய ஆர்வத்தின் பால் ஓடத் தலைப்பட, தன் தனித்த உலகில் தன் இருளுட னான சொந்தங்களோடும், தனக்கே மட்டுமான விளையாட் டுகளோடும் லூயிஸ் தனித்தே விடப்பட்டான்.

கூப்வ்ரேயின் ஒவ்வொருவரும் இந்தப் பார்வையற்ற சிறுவனை அறிந்து வைத்திருந்தனர். அவன் மீது கருணை காட்டினர். வயல்வெளிகள் வழியே அவன் நடந்து திரிவதையோ, நகரின் மூலையிலே இருக்கும் தடாகத்தின் பாசி படர்ந்த மதில்களின் மீது அவன் சாய்ந்து கிடப்பதையோ அவர்கள் கண்டனர். மற்றச் சிறுவர்கள் விளையாட்டில் திளைத்திருக்க, லூயிஸோ அவ்வப்போது, தனியே கிராமத்துச் சதுக்கத்தில் தன் முழங்காலருகே தன் பிரம்பைச் சாய்த்து வைத்தபடி உட்கார்ந்திருந்தான். கிராமத்துப் பெண்கள், தத்தமது கேலிப் பேச்சுகளை சற்று நிறுத்தி, குனிந்து அவனது கன்னங் களை பரிதாபத்தோடு கிள்ளுவர். லூயிஸ் இதனை மிகவுமே வெறுத்தான். அவர்களது அநுதாபம் அவனுக்கு தேவையற்றதாகவே இருந்தது. தன்னைச் சுற்றியிருப் போரின் சத்தங்களைக் கேட்க, அவன் ஆசைப்பட்டான். விவசாயிகளது கதைகள், முக்கியமான அம்சங்கள்- செய்திகள் பற்றி நகர்புறத்தே உலவும் கதைகள் 'ஓட்' பயிரின் மீது ஏற்பட்ட அழிவு பற்றிய கதைகள், கிழங்கின் விலையுயர்வு, நெப்போலியனின் தோல்வி, பிரான்ஸ் அரசமாளிகையின் இயல்புநிலை போன்றன பற்றி அவன் கேட்டான்.

லூயிஸ் வளர்ந்த போது, கிராமத்துப் பாடசாலையில் சேர்க்கப்பட்டான். ஒரு அறை கொண்ட அந்தப் பாடசா லையில், வகுப்பின் முதல் வரிசையில் உட்கார்ந்து ஆசிரியர் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனம் பிசகாது உள்வாங்க முயற்சித்தான் அவன். அவன் கெட்டிக்கார மாணவனாகயிருந்ததால், ஞாபகசக்தி வேண்டப்படும் பாடங்களில் அவனால் மற்றவர்களை விட ஜொலிக்க முடிந்தது. எனினும், பெரும்பாலான பாடங் களுக்கு, எழுத்து வாசிப்பு வேண்டற்பாலாகவிருந்தது. வாசிப்பு, எழுத்து பற்றிய கற்றலுக்கு லூயிஸ் அறவே நம்பிக்கை இழந்து போனான்.. ஆசிரியர், அவனது தோல்விகளைக் கண்டு கொள்ளாமல், அவனது வெற்றி களில் அவனுக்கு மிகுந்த புகழாரம் சூட்டினார். எல்லா வற்றுக்கும் மேலாக, குருடனாகயிருந்தமையால், அவ னால் எதைப் பற்றித்தான் எதிர்பார்ப்பு செலுத்த முடியும்? அவனது வெற்றிகளெல்லாம் கூட மாயை போலத்தான் தோன்றிற்று.

லூயிஸின் தாயும் தந்தையும் அவனது தோல்வி களை அறவே கண்டு கொள்ளாதிருந்தனர். கிராமத்து வாழ்வில், ஒரு இடத்தை, என்னதான் கெட்டித்தனம் இருந்தாலுமே, அவனால் பெறமுடியாது போகும் என்றவர்கள் அறிந்தும் வைத்திருந்தனர். குறைந்தபட்சம் தன் தந்தையைப் போல, குதிரைச் சாணம் செய்யுமளவுக் குக் கூட அவனால் வெற்றி பெற முடியாது தான். வேறெந்த வியாபாரத்துறைக்கும் அவன் பயிற்றுவிக்கப் பட முடியாதவனாகயிருந்தான். அவனது பெற்றோர்கள் இல்லையெனில் அவனுக்கு என்னாகும்? அக்காலத்தில், பெரும்பாலான குருடர்கள் பிச்சைக்காரத் தொழிலிலேயே வாழ்வை நடத்தி வந்தனர். இந்த விதி தன் மகனுக்கும் நேர்ந்து விடக் கூடாதென்று அவர்கள் பிரார்த்தித்தனர்.

லூயிஸின் பத்தாவது பிறந்தநாளுக்கு சற்று முன்னம், அவர்களது பிரார்த்தனைகளுக்கோர் பதில் கிடைக்கப் பெற்றது. ஒருநாள், கிராமத்து மதபோதகர் பாரிஸுக்கான தனது சுற்றுலாவை முடித்து திரும்பியதும் உடனடியாக லூயிஸின் இல்லம் போனார். பயன்மிக்க வியாபாரத் துறைகள் பலவற்றில், குருட்டு இளம் சிறார்கள் நன்கு பயிற்றுவிக்கப்படுமோர் விஷேட கல்விக் கூடமொன்றுக்கு தான் விஜயம் செய்ததாகவும், குருடர்களுக்கான வாசிப்பு எழுத்து முறை ஒன்று உள்ளதென்ற அற்புத சேதியையும் அவர் சொன்னார்.

அடுத்த நாள் விடிகாலையிலே சைமன் ப்ரெய்லி, இந்தப் பள்ளிக்கூட அமைப்பு முறைகளைப் பார்த்து வரப் பயணப்பட்டார். மாலையாகி வீடு திரும்பிய அவரை, எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தான் லூயிஸ். அவனைக் கூட்டிக் கொண்டு மலையடிவாரத்தே காலற நடந்து வரப் போனார் அவர்.

"இதுபோலோர் இடத்தை நான் இதற்கு முன்னம் எங்கும் கண்டதில்லை." அவர் வியந்தார். கூடவே சொன்னார், "குருட்டுச் சிறார்கள் பியானோ வயலின் இதர

பிற இசைக்கருவிகளை இசைப்பதை நான் கண்டேன்; அவர்களே அவர்களது சொந்த ஆடைகளைத் தைத்துக் கொள்வதையும் , சப்பாத்துகள் செய்து கொள்வதையும் கூட நான் கண்டேன். கேள் லூயிஸ்! அவர்கள் வாசிக்கவும் எழுதவும் கூட பயிற்றுவிக்கப்படுகிறார்கள்."

ஒரு கணம் அமைதியாகயிருந்த லூயிஸ், கெக்காளமிட்டுச் சிரித்தான் கை தட்டி. "ஜோக்கடிக்கிறீர்களா அப்பா அது எப்படிச் சாத்தியம்?" தயக்கத்தோடு கேட்டான்.

"நான் கண்டேனே லூயிஸ். பெரிய புத்தகங்களிலிருந்து அவர்கள் வாசிக்கிறார்கள். அதன் பக்கங்கள் மீது விரல் வைத்துத் தடவித் தடவி, அவர்கள் சத்தமாக வாசிக்கிறார்கள். நான் அதைக் கேட்டேன். அது அற்புதமாக இல்லையா? நீயே சொல்லேன்."

லூயிஸ் மறுபடி அமைதியானான். சில கணங்களின் பின் அவன் மெல்லிய குரலில் கேட்டான். "அவர்கள் அந்தக் குருடர் பாடசாலையிலேதான் வசிக்கவும் செய்கிறார்களா?"

"ஆம், அவர்கள் அங்கேதான் வசிக்கிறார்கள். அவர்களில் பலர் உன் வயதையொத்தவர்கள். பிரான்ஸின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அவர்கள் வருகிறார்கள். ஆனாலும் பெரும்பாலானோர் பாரிஸைச் சேர்ந்த சிறுவர்கள்."

லூயிஸ் தன் பிரம்பின் நுனியால் ஒரு பாறையைத் தட்டினான். "என்னை அங்கே கூட்டிப் போவீர்களா...... சும்மா போய் பார்த்து வரலாமே, ஒருநாள்?"

"நிச்சயமாக, சீக்கிரமே போவோம். நீ கூட பாரிஸை விரும்புவாய் லூயிஸ்."

1819, 15 ஆம் திகதி பெப்ரவரியில் லூயிஸின் பத்தாவது பிறந்த நாள் முடிந்து சரியாக ஆறு வாரத்தின் பின்னர் ஒரு காலையில், அவன் கூட்டிச் செல்லப்பட்டான். பள்ளிக் கூடத்தில் நுழைந்து, கொஞ்சவாரங்கள் தங்க வைக்கப்பட்டு அவன் விரும்பினால் பிறகு வீட்டுக்குக் கூட்டி வருவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அவனது அம்மா அவனது பொருட்களை ஒரு பலகைப் பெட்டிக்குள் போட்டு பொதி செய்தாள். சாப்பிட உணவுகளும் கூடவே வைத்தாள்.

குடும்பத்தில் அனைவரும் அவனை வழியனுப்புதற்காய், முற்றத்தில் கூடினர். லூயிஸ், மெலிந்த குட்டி மார்புடைய அந்தச் சின்னஞ்சிறுவன் அமைதியாக நின்றிருந்தான். ஏறக்குறைய அடர்ந்த அவனது ஸ்காஃப், பாரமான அவனது கோட்டு என்பவற்றில் அவன் புதையுற்றது போல காணாமல்ப் போயிருந்தான். ஒரு தோல் தொப்பி அவனது தலைக்கு இறுக்கமாகப் போடப்பட்டிருந்தது. இறுதியாக, அவனிரு சகோதரியரும், அவனது சகோதரனும் அவனது இரு கன்னங்களிலும் முத்தமிட்டனர். அம்மா அவனை கட்டியணைத்தார். பிறகு, லூயிஸ் வண்டிக்குள் ஏறி தந்தையின் பக்கத்தமர்ந்து, கையசைத்து விடைபெற்றபடி ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும் பயணத்தில் இணைந்து கொண்டான்.

வைகறைப் பொழுதில் இக் குருடர்களுக்கான தேசிய நிறுவகத்தின் பழைய கட்டிடத்தின் நடைபாதைகள் சப்தங்களால் எதிரொலிக்கத் தொடங்கி விடும். சற்றைக்கெல்லாம் பள்ளியின் சாப்பாட்டு மண்டபம் நோக்கிய பிரம்புகளின் சப்தங்கள் கேட்கவாரம்பிக்கும். இறுக்கமான கஞ்சியும் பால் கோப்பியும் பரிமாறப்பட்டு, மாணவர்கள் வரிசையில் நிற்க, அறிவிப்பாளர் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவார். கோப்பைகள் பரிமாறப்படும். கதிரைகள் மேசைகள் அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்குமாய் இழுபடும் சப்தங்கள் இவற்றைத் தொடர்ந்து தமது நாளாந்தப் பணிகளை நோக்கிய பிரம்புகளின் பயணச் சத்தங்கள் கேட்கவாரம்பித்து விடும்.

வகுப்பறையை நோக்கிப் பயணிக்கும் இம் மாணவர்கள் வெறுமனே குருடர்கள் என்பதல்ல. நிஜத்தில், உலகத்தின் மூலை முடுக்குகளில் வாழும் குருடர்களின் விதியை மாற்றுவதற்கான பரீசாட்சார்த்த முயற்சிகளில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கும் முன்னோடிகள். அது உண்மையில், குருடர்களுக்கான யதார்த்தக் கல்வியை வழங்குவதனூடாக, அவர்களது ஊனத்தைப் பொருட்படுத்தாது பிரயோசனமிக்க வாழ்க்கைக்கு அவர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு பயிற்சி எனலாம். குருடர்களுக்கான கல்வி நிறுவகத்தின் நிறுவுகைக்கு முன்னர், இது மாதிரியான முயற்சிகள் எதுவும் எய்தப்பட்டிருக்கவில்லை.

வரலாறு பூராகவும், சமூகத்தில் கவனிப்பாரற்றதோர் குழுவினராகவே குருடர்கள் இருந்து வந்திருந்தனர். ஆரம்ப காலங்களில், அவர்கள் அவர்களது ஊனத்தோடு சேர்த்து ஒதுக்கப்பட்டு சமூகத்தின் கடனாளிகளாக கருதப்பட்டு வந்தனர். இறுதியாக, வாழ்வதற்கான உரிமை வழங்கப்பட்டது. எனினும், வாழ்வதற்கான தேவை அற்றவர்களாக அவர்கள் கருதப்பட்டனர். சம்பாதிப்பது பெரும் சிரமமாக இருந்தது. உணவுக்கும், உறையுளுக்குமான அவர்தம் நாளாந்தப் போராட்டம் தொடர்ந்தபடியிருந்தது. பிச்சையெடுத்தல் அவர்களின் பாரம்பரியத் தொழிலென்றாக, சந்தைகளிலும், சதுக்கங்களிலும், பாதைகளிலும் பிச்சை கேட்டு அழுக்குத் தோய்ந்த பைகளோடு அலையலாயினர் அவர்கள். குருடர்களில் விரல் விட்டு எண்ணத்தக்க அளவில் சிலர் இந்த வழமையான நடைமுறையை விட்டு விலகி, புகழோடு, தம் புத்திசாலித்தனத்தாலும், செல்வத்தாலும் திறமையாலும் மேலோங்கி நின்று வாழ்ந்தவர்களாகவும் இருந்தார்கள். என்றாலும், இது அரிதாகவேயிருந்தது.

ஒரு சிலர் வாழ்வதற்கு வழி கண்டவர்களாகயிருந்த போதும், பெரும்பாலானோர் நாளாந்த தேவைகளுக்கே லாயக்கற்றவர்களாக, மற்றவர்களால் கேலிக்குரியவர்களாக கருதப்படும் நிலையில் சிதைவுற்றுக் கிடந்தனர்.

சமூக நலத்தாபனங்களினதும், மத ஆலயங்களினதும் பாதுகாப்புச் சிறகுகளின் கீழ் அடைக்கலமாகி இருக்கும் குருடர்களது எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. பொருளாதாரத்துக்கான போராட்டத்திலிருந்து விலகி மடங்களிலும், சத்திரங்களிலும் அவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். அவர்களால் மற்றவர்களுக்கு சிலபோது உபயோகமிருந்தது; பலபோதுகளில் அதுகூட இல்லாதிருந்தது. பசியிலிருந்து அவர்களை நலத்தாபனங்கள் காப்பாற்றின. எனினும், அவர்களது அடிப்படைப் பிரச்சனைகள் பற்றி ஆராயவும், மனித சமூகத்தோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றியும் அவைகளால் எதுவும் சிந்திக்க முடியாதிருந்தது. எனினும், ஆலயங்களால் காப்பாற்றப்பட்டு வந்த இவர்கள், அதிர்ஷ்டசாலிகளான சிறுபான்மை என்ற நிலையிலேனும் இருந்தார்கள். பெரும்பான்மை தகரடப்பாக்களோடு அலையத்தான் வேண்டியிருந்தது வாழ்வதற்காய்.

1784 ஆம் ஆண்டில், குருடர்களின் சரித்திரத்தில் முதலாவதாக ஒரு பெரும் திருப்புமுனையென, பாரிஸில் குருட்டிளைஞர்களுக்கான நிருவாகமொன்று வெலண்டின் ஹாயே என்கின்ற ஓர் இளம் உதாரணபுருஷரின் அயரா முயற்சியால் உருவாக்கப்பட்டது. வெலண்டின் சில ஆண்டுகளுக்கு முன்னே, பாரிஸின் பெரு வீதிகளில் அலைந்து திரிகிற குருட்டுப் பிச்சைக்காரர்களைக் கண்டு அச்சத்தால் உந்தப்பட்டு, அவர்களது நலன் பொருட்டு பணியாற்ற வேண்டுமென்ற ஓர் உறுதிப்பாட்டில் இருந்தார். எனினும், அவர்களுக்கான நலன் விரும்புதல் மட்டுமே போதாதெனவும் அவர் உணர்ந்திருந்தார்.

உலகில் குருடர்களை அகற்றுவதற்கான பணியை மேற்கொள்வதற்குப் பதிலாக, வெலண்டின் அவர்களிடமிருக்கும் திறமைகளைப் பயன்படுத்தி, அவர்களைப் பயிற்றுவித்து சமூகத்தில் பெறுமதிமிக்கவோர் இடத்தை அவர்கள் பெற்றுக் கொள்ள தான் உதவிபுரிய வேண்டுமென்று நாடினார். அவரது கருத்துப்படி, குருடென்பது நம்பிக்கையின் இறுதியான இழப்போ முடிவோ அல்ல; பதிலாக அது வெல்லப்படத்தக்கதோர் ஊனம் மட்டுமே. பழக்கப்பட்ட சில நண்பர்களின் உதவியோடு பாரிஸின் பிச்சைக்காரச் சிறுவர்களை தன் முதல் மாணவர்களாக்கி, வெலண்டின் குருடர்களை ஜீவிதப் பாதையில் முக்கியமான இடமொன்றில் நுழைய வைத்திட உதவும் தன் தனித்துவமான திட்டத்தினை ஆரம்பித்தார்.

முப்பத்தைந்து வருடங்களின் பிறகு, லூயிஸ் இப்பள்ளியிலே சேர்ந்த போது, இப்பள்ளியின் வேலைத் திட்டங்கள் பாரிஸில் பிரபல்யமாகியும், குருடர்களுக்கு பிரயோசனமளிக்கும் இப்பயிற்சி நெறி ஐரோப்பாவிற்கு மெல்ல எட்டத் தொடங்கியுமிருந்தது. ஆனாலும், இது போன்ற பயிற்சி நெறியானது ஒரு பரீட்சார்த்த அமைப்பிலேயே இருந்து வந்தது..

வெலண்டினது முன்னுதாரணமிக்க முயற்சிகளால், சில நூற்றுக்காணக்கான குருடர்கள் மட்டுமே பயனைடைந்திருந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் துயரத்திலும், அவமானத்திலும் தொடர்ந்தும் உழன்றபடியிருந்தனர்.

இளம் ப்ரெய்லி தன் முதல் பாடத்தை ஆரம்பித்த போது, குருட்டுப் பிச்சைகாரர்கள் பாரிஸின் வீதிகளில் இன்னும் அலைந்தபடிதானிருந்தனர். பயன் மிக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளுக்கு மேலே, அடுத்த வேளை உணவு பற்றிய கலக்கம் தம்மை ஆட் கொண்ட நிலையில்!!!

ஆரம்பத்தில், பள்ளி நிர்வாகம் லூயிஸைப் பற்றி அதிகம் எதிர்பார்ப்புகள் வைக்கவில்லை. இந்த வெட்கம் மிக்க, குறுகிப் போன கிராமத்துச் சிறுவன் மகிழ்ச்சியின்றியும் குழப்பத்தில் ஆழ்ந்தும் காணப்பட்டான். அவன் கோபத்தில் பேசாமலேயே இருந்தான். அவன் வீடு போக விரும்பினான்; அது பற்றிச் சொல்வது பற்றிக்கூட அவன் கணக்கில்க் கொள்ளவில்லை. அவர்கள் கற்பித்தவற்றை அவன் கவனமாகக் கவனித்தானில்லை. அவன் தன் குடும்பத்தையும், கிராமத்தையும் ரொம்ப இழந்து விட்டதாக உணர்ந்தான். நிறுவனத்தில் பள்ளியறைகளில் நிலவிய குளிரின் ஈரத்தை வெறுத்தான். பள்ளிக்குச் செல்லும் பாதையைக் கூட அவனால் தானாகக் கண்டு கொள்ள முடியவில்லை. சக நண்பர்களோடு சுற்றித் திரிகையில், ஒரு விநோத உலகின் கூட்டத்துக்குள் தான் தள்ளபட்ட தாய் அவன் பயந்தான். தொல்லை தரும் போக்குவரத்துச் சாதனங்களின் சப்தங்களையும், முன்பின் பழக்கமில் லாத வீதிகளில் வாசனைகளையும் கூடவே!

படிப்படியாக எப்படியோ அவன் புதுச் சூழலுக்குப் பழகிக் கொண்டான். தங்குமறையின் கதவடியிலிருந்து தான் படுக்கும் இரும்புக் கட்டிலுக்கும், கதவடியிலிருந்து படிகளுக்கும், படிகளிலிருந்து சாப்பாட்டு மண்டபத்துக்கும், சாப்பாட்டு மண்டபத்திலிருந்து முற்றத்துக்கும் படிகளை எண்ணிக் கணக்கிட அவன் கற்றுக் கொண்டான். கோதியர் என்கிற இளம் மாணவன் அவனது முதல் நண்பனானான். கூவ்ப்ரேயில், தனித்துவிடப்பட்ட ஒரு பரிதாபத்துக்குரிய ஜடப் பொருள் போலன்றி, இங்கே கூட்டத்தே வரவேற்கப்படும் ஒரு அங்கத்தவனாக அவன் தன்னையுணரத் தலைப்பட்டான். எல்லாவற்றுக்கும் மேலாக, தன் குருட்டுத் தன்மையானது, தாண்ட முடியாத ஒரு தடையல்ல என்பதை அவன் உணர்ந்தும் புரிந்தும் கொண்டான். அவனது சக தோழர்கள்தான் அதையும் நிரூபித்தலுக்கு அவனுக்குதவியவர்கள். கல்விக் கூடத்தைத் தன் வீடெனக் கொண்டு, அவன் கல்வியின் மீது சுறுசுறுப்பான ஆர்வத்தைக் காட்டத் தலைப்பட்டான். அவன் ஓர் கல்வியின்பால் ஆர்வம் காட்டும் மாணவனாக, ஆச்சர்யப்படத்தக்களவில் முன்னேறி வருவதனை, அவனது பள்ளியாசிரியர்கள் ஒப்புக் கொண்டனர்.

ஒரு புது மாணவனாக, குருடர்களுக்கென்று அப்போதிருந்த நல்ல முறையான வாசிப்பு எழுத்து முறையான தடிப்பெழுத்து (emboss) முறை அவனது முதல் பாடமாக அமைந்தது. பாரமான, அடர்த்தியான பத்திரிகை மீது பெரிய எழுத்துக்களாக அரிச்சுவடியை பதித்து வைக்கும் முறையே அது. தாளின் மறுபக்கத்தில் விரல்களால் தொட்டுத் தடவி எழுத்தை கற்றுணரும் முறை அது.

லூயிஸ், தன் கற்றலின் ஆரம்பப் படிகளில், விரல் நுனிகளால் எல்லா அரிச்சுவடியெழுத்துக்களையும் தொட்டுத் தொட்டுக் கற்றுணர்ந்து, அந்த எழுத்தின் வடிவத்தை விரல் நுனிகளால் அச்சுப் பதிப்பாகச் சொல்லவும் முடியுமான அளவு வளர்ந்து, தன் முதல் வாக்கியமான "என் பெயர் லூயிஸ் பிரெய்லி" என்று எழுத முடிகிறளவுக்கு, தன்னை வளர்த்துக் கொண்டான். மற்ற மாணாக்கரெல்லாம் மெல்ல மெல்ல தன் விரல்களால் தடவித் தடவி கற்றுணர்ந்து எழுத்தை இனம் காண முயலுகையில், லூயிஸ் வாசிப்பு வகுப்புகளில் நுழைகிற அளவுக்குத் தகைமையையும் திறமையையும் வளர்த்துக் கொண்டிருந்தான். அறையின் நடுவிலே பலகையாலான நடைபாதையில், நட்டு வைக்கட்டிருக்கும் எரிச்சலூட்டும் புத்தகங்கள் 'எம்பொஸ்' தடிப்பெழுத்துப் புத்தகங்கள், மற்ற மாணக்கருக்கு மிகுந்த அயர்வைத் தந்தன.

தேவைக்கேற்ப 'எம்பொஸ்' தடிப்பெழுத்து நூல்கள் அளவில் பெரியன. அச்சிடப்பட்ட எழுத்துக்கள் உயரமாகவும், அகலமான இடைவெளிகள் கொண்டும் தொடுகைக்கு இலகு ஏற்படுத்துமளவுக்கு இருந்தன. தடிப்பெழுத்து முறையிலமைந்த ஒரு புத்தகத்தின் ஒரு பக்கம், பெரும்பாலும் ஒரு சில வாக்கியங்களை மட்டுமே உள்ளடக்கக் கூடியதாக இருந்தது. இத் தடிப்பெழுத்துத் தாள் ஒரு பக்கத்தே மட்டுமே அச்சுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு தனித்த பக்கங்களும் ஒன்றின் பின்புறத்தே இன்னொன்றென ஒட்டப்பட்டிருந்தன. ஒரு சின்னப் பள்ளி நூலை உருவாக்கப் பெரியளவில் பாரம் கூடிய அலகுகள் சேர்க்கப்பட வேண்டி இருந்தன. அதன் காரணமாகவே 'எம்பொஸ்' தடிப்பெழுத்து முறையிலமைந்த நூல்கள் விலையதிகமாகவும், கச்சிதமின்றியும் இருந்தன. அந்த நிறுவகத்தின் வாசிகசாலையில், ஒரு சில பக்தி நூல்கள், சின்ன இலக்கண நூல்கள், ஒரு சில பாடநூல்கள் என்று விரல் விட்டு எண்ணத்தக்களவு நூல்களே இருந்தன. நிறுவகத்தை விட்டுச் செல்லும் ஓர் மாணவன், முழுமையாக வாசிக்கக் கற்றுக் கொள்ள முடியாத அளவிலேயே காணப்பட்டான். வெளியுலகில் 'எம்பொஸ்' தடிப்பெழுத்து நூல்கள் இல்லாதிருந்தன.

'எம்பொஸ்' நூல்களின் மிகவும் மோசமான பின்னடைவாக, அதைப் பெறுவதிலிருக்கும் அசௌகரியத்தையும் அவற்றினது பற்றாக் குறையும் அமைந்திருந்தது.

லூயிஸ் அவனுக்கு முன்னிருந்த மாணவர்கள் போலவே, இந்த முறைமை குறித்துக் கசப்புற்றிருந்தான். குருடர் எனில், அவர்கள் மெல்ல மெல்லத் தான் வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென்கிற நிலையிருந்தது. நடக்கும் போது அவர்கள் மெல்ல மெல்ல தயங்கித் தயங்கி நடப்பது போல!!! கொள்கையளவில் 'எம்பொஸிங்' தடிப்பெழுத்து முறை நல்லதுதான். யதார்த்தத்தில், தொடர்பாடல் பற்றி அதிகம் கருத்தில் கொள்ளாத, வகுப்பறைப் பயிற்சியாக மட்டுமே அது இருந்தது.

இருந்த போதும், ஆரம்ப மாதங்களில் இப்பள்ளியில் லூயிஸ் 'எம்பொஸ்' முறையின் குறைபாடுகள் பற்றி, ஆழ்ந்து சிந்தித்தான். வேறு ஒன்றுமில்லையென்கிற பட்சத்தில், குருடர்க்கு இது நல்ல முறை என்கிற நிலைதான் இருந்தது. இது ஒன்றே வாசிப்புக்கான சாத்திய நிலையை அவர்களுக்கு வழங்கிற்று.

கல்வி நிறுவனத்தின் கைப்பணிப் பாடங்கள், இசை, இதர பிற பாடங்களும் சமநிலையில் இருந்தது. லூயிஸ், வெகுவிரைவில் அவனது உடைகளை அவனே தைக்கக் கற்றுக் கொண்டான். அவனது வகுப்பில் சரித்திரம், புவியியல், கணிதம், இலக்கணம் போன்ற பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவனது புவியியல் வகுப்பில் பெரிய பிரான்ஸ் வரைபடம் ஒன்றிருந்தது. முதல் தடவையாக, லூயிஸ் அதைத் தொட்டுப் பார்த்து பாரிஸ் நகரின் ஓரங்களை இனம் கண்டு கொண்டான். 'சைன்' (Seine) ஆறின் அமைப்பையும், தெற்கின் 'எல்ப்ஸ்' இன் சிகரப் பகுதிகளையும் கூடவே அவனால் உணர முடிந்தது. அதனூடாக முழு உலகமுமே அவனது கண் முன் விரிந்தது.

ஞாயிறுகளில் மாணவர்கள் விஷேட சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவதுண்டு. பாரிஸ் நகர வீதிகளில் பார்வையுடைய தமது ஆசிரியர்கள் காட்சிகளை வர்ணித்தபடி செல்ல, கயிறுகளைப் பற்றியபடி தனித்தனியே ஒவ்வொருவராக மெல்ல மெல்லப் பயணிப்பர். இந்த வர்ணனைகளை ஆழமாகச் செவிமடுத்தபடி லூயிஸ் போனாலும், அவனது மனசுக்குள் அவனது மனப்பதிவில் அந்த வர்ணனையை விட அந்தக் காட்சிகள் இன்னும் தெளிவாகயிருந்தன. படைவீரர்களின் 'பூட்ஸ்'களின் அதிரும் இசையூடு ஒலிக்கும் சப்தங்கள், காற்றிலலையும் கொடிகள் உரசும் ஒலிகள், என்பனவற்றை அவனால் உணர முடிந்தது. ஒரு பேக்கரியையோ, மரக்கறிக் கடைகளையோ தாண்டிச் செல்லும் போது, அதை அவனால் கிரகித்துச் சொல்ல முடிந்தது. போலவே, ஊற்றுக்களில் தண்ணீரின் சலசலப்பை, அதன் மேலே புறாக்கள் சிறகடிப்பதை, பூங்காக்களுள் நுழைகையில் இலைகளின் உரசலால் விளையும் சப்தங்களை, மரங்களடியில் குளிரான நிழல் பகுதிகளின் ஈரத்தை, மாதாகோயிலுள் நுழையும் போதே அந்தப் படிகளின் குளிரை, எதிரொலிக்கும் காலடியோசைகளை அவனால் கிரகிக்க முடிந்தது. சிலபோதுகளில், 'சைன்' ஆற்றினது நீரைக் கிழித்தபடி பயணம் செய்யும், ஆரம்பகாலப் பிரான்சின் நீராவிக் கப்பல்களின் தனித்துவமான இரைச்சலைக் கூட அவனால் கிரகிக்க முடியுமாகயிருந்தது. இசைப் பாடங்களிலும் பார்க்க, அவனது கற்பனையிலகப்பட்ட, அவனனுபவித்த அல்லது படித்தவற்றினூடாக அவன் நிறைய கிரகித்து வைத்திருந்தான். குருடு அவனது தடையாயிருக்கவில்லை. பார்ப்போரோடு சரிசமமாக குருடர்க்கும் முடியுமென அவன் எண்ணினான். இதன் காரணமாகவே, இந்நிறுவகத்தில் இசை இவர்களிடையே பெரும் தாக்கத்தையேற்படுத்திய பாடமாக இருந்தது. நிறையப் பட்டதாரிகள் தொழில் ரீதியாக இசை வல்லுநர்களாகின்றனர்.

லூயிஸினது காலகட்டத்தில், பாரிஸின் தேவாலயங்களில் ஓர்கன் வாசிப்போராக ஐம்பதுக்கு மேற்பட்ட பட்டதாரிகளிருந்தனர்.

லூயிஸும் பியானோ, ஓர்கன் வாசிக்கக் கற்று, சிறிது காலத்திலேயே மிகுந்த திறமையோடு வெளிப்பட்டான். மணித்தியாலக் கணக்கில் கீபோர்ட்டில் குனிந்தபடி,

இசை பயின்றான் அவன். அவனது இருளைத் துடைத்து விரட்டியது இசையைத் தவிர வேறெதுவுமில்லை யென்றானது. வாழ்வின் எல்லைகளைக் கடந்த தொலை தூர உலகமொன்றில், தன்னை சுழற்றி வீசிய சூறைக் காற்றாக இசை அவனுக்குத் தோற்றம் தந்தது. இந்த உல கம் தள்ளாட்டமற்றது, தடுமாற்றங்கள் கிடையாது, தயக்கங் களில்லை, அச்சங்களில்லை இங்கே. இங்கே அவனே அவனது ஆசான். இசை அவன் முன் விரிகையில் கரடு முரட்டு மலைகளது உச்சியை அளவீடு செய்யவும், படையெடுத்து வரும் படைவீரர்களை வென்று முன்னேற வும், பூமியின் தொலைதூர மூலைக்காடுகளுக்கெல்லாம் பயணித்து, புதிய கண்டுபிடிப்புக்களோடு திரும்பி வரவும் அவனால் முடியுமாக இருந்தது.

கல்வி நிறுவனத்தின் இரண்டாம் வருட முடிவில், லூயிஸ் பள்ளியில் இதுவரை காலமும் இருந்த எவரை யும் விட திறமையான மாணவனாக அனைவராலும், இனம் காணப்பட்டான். வருடாந்த பரிசளிப்பு வைபவத் திலே அவனது திறமைக்காக அவன் கௌரவிக்கப்பட் டான். கோடை கால விடுமுறையில் அவன் வீடு வந்த போது, அவன் தன் குடும்பத்தவர்களையும் அவ்வூர் மக்களையும் அவனது கல்வியாலும், சுய நம்பிக்கையினாலும் வியப்புக் குள்ளாக்கினான். முன்னர் அவன் கூவ்ப்ரேயில் அநுபவிக்க நேர்ந்த அனுதாபமும், பச்சாதாபமும், பரிதாபமும் இப் போது கடந்த கால விடயங்களாகப் போய் விட்டிருந்தன.

லூயிஸ் கிராமாத்து தேவாலயத்தில் ஒரு ஞாயிறன்று, ஓர்கன் வாசிக்க அனுமதிக்கப்பட்டான். தொழில்ரீதியாக, தான் ஒரு இசைக் கலைஞனாக முன்னேறி வருவே னென்று நம்பிக்கையோடு பேசினான் அவன்.

லூயிஸின் வாழ்க்கையில் எதிர்பாராதவோர் மாற்றம் நிகழ்ந்தது. ஏப்ரல் 1821 இல் பாடசாலையில் அவனது மூன்றாம் வருட ஆரம்பகாலம் சார்ள்ஸ் பார்பியர் என வழைக்கப்படும் ஒரு ஓய்வு பெற்ற படைத்தலைவர் நிறுவ னத்தின் பணிப்பாளராக இருந்தார். பத்திரிகையில் புள்ளி களிட்டு குருடர்களுக்கு வாசிக்கவும் எழுதவும் உதவு மோர் முன்னேற்றகரமான முறைமையினை கற்பித்த லில் அறிமுகப்படுத்தக் கண்டு பிடித்துதவுவதாக அவர் உறுதி பூண்டிருந்தார்.

பார்பியர் தன் முறைமையினை 'நைட்- ரைட்டிங்' என்று அழைத்தார். இரவுகளில் ரகசிய செய்திகளைப் பரிமாற ராணுவ சமிக்ஞையாக- சங்கேத பாஷையாக- உதவும் ஒரு மூல அடிப்படையை நினைவில் வைத்தே, அதை அவர் அங்கனம் பெயரிட்டிருந்தார். குறித்த சங் கேத பாஷையால், பணியில் ஈடுபட்டிருக்கும் காவலர்கள் தன் விரல்நுனிகளால் இரவுகளிலும் இலகுவாக செய்தி களை வாசிக்க முடிந்தது. பிறகு, இதே குறித்த முறை குருடர்களுக்கும் உதவுமாறு வடிவமைக்கப்படலாம் என பார்பியர் சிந்தித்தார். குறித்த முறையில் சில முன்னேற் றகரமான அமைப்பைச் செய்து, அவர் குருட்டு இளைஞர் களுக்கான இந்நிறுவனத்துக்கு அதனை அறிமுகப்படுத்தினார்.

பள்ளி அதிகாரிகள் 'நைட்- ரைட்டிங்' முறை மீது அதிக ஆர்வம் காட்டினர். வகுப்பறையில் அதைப் பிரயோகிக்க முயற்சிகள் மேற்கொண்டனர். ஆயினும் முரண்பாடாக பார்பியரின் முறை பொருத்தமற்றது என்ற நிலை உருவானது. புள்ளிக் கோடுகள் அடையாளங்கள் வாசிப்பிற்கு இலகுவாக இல்லாமல் குழப்பகரமாக அமைந்தன. அரிச்சுவடி எழுத்துக்களை விட இப்புள்ளி கள் அதிகமாக சப்தங்களையே பிரநிதித்துவப்படுத்தின. மரபு முறை எழுத்து வடிவிலிருந்து ஒருபடி இம்முறை விலகியே இருந்தது. சரியான எழுத்துகளுக்கும், நிறுத்தற் குறிகளுக்கும், இலக்கங்களுக்கும் இம்முறையில் சாத்திய மில்லாதிருந்தது. எழுத்துக்களின் அடையாளங்களின் அளவு அடிப்படைப் பிழையாக இருந்தது. ஒரு விரலின் தொடுகையில் வாசித்து அடையாளம் கண்டு கொள்ள முடியாதளவு 'எம்பொஸ்' எழுத்துக்களைப் போலவே இவ்வெழுத்தமைப்பும் பெரிதாக இருந்தது.

இவ்வெல்லாக் குறைபாடுகளோடும் இளம் பிரெய்லி 'நைட்- ரைட்டிங்'கால் ரொம்பவே ஈர்க்கப்பட்டிருந்தான். 'எம்பொஸ்' இற்கு மேலே இம்முறையில் நன்மைகள் நிறைய இருப்பதாக அவன் புரிந்து கொண்டான். பேப்பரில் துளை யிட்டுப் புள்ளிகளிடும் முறை, எம்பொஸ் எழுத்துக் களுக்கும் பார்க்க நல்லதாகவேயிருந்தது.

பார்பியரின் சங்கேதபாஷையில், லூயிஸுக்கு ரகசியங் கள் இருக்கவில்லை. அவனும் அவனது நண்பன் கோதியரும் வாக்கியங்களை எழுதி ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு வாசித்துப் பார்த்தனர். எனினும், நிறுவகத்தில் பணியாற்றும் ஆசிரியர்களால் அவர்களது உற்சாகம் வரவேற்கப்படவில்லை. சில மாதங்களின் பின்பு, ஆசிரியர் 'நைட்- ரைட்டிங்' முறை குருடர்களுக்கு வாசிக்க உதவும் ஒரு சிறந்த முறையாக இல்லையென்ற நிரந்தரமான முடிவிற்கு வந்தனர்.

'எம்பொஸ்' முறையை விட முன்னேற்றகரமான முறை யாக இது இருக்காது என்கிற வாதத்தை லூயிஸால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பார்வையுடையோரால், குருடர்க்கு வாசிக்கவும் எழுதவும் உருவாக்கப்பட்ட 'எம் பொஸ்' முறை வெற்றிகரமாயில்லையென்பதை நன்கு தேர்ச்சி பெற்ற குருட்டு மாணக்கர் உணர்ந்தேயிருந்தனர். பார்வையுடையவர்கள் வாசிக்க வசதியாகக் கிடைத்த பல்லாயிரக்கணக்கான புத்தகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், குருடர்களுக்காக இருந்த புத்தகங்கள் மிகக் குறைவாக- விரல் விட்டு எண்ணத்தக்க வகையி லேயே இருந்தன. உன்னதமான இலக்கியங்களை, அதன் வாசனையைக் கூட நுகர முடியாதளவு அவர்கள் இருந்தார்கள். கடந்த கால வரலாற்று நிகழ்வுகளை குறை வாகவே அறிய முடிந்தது. நிகழ்காலச் சம்பவங்களும் மிகக் குறைவாகவே அவர்களது காதுகளுக்கு எட்டின. தத்துவம், அரசியல், விஞ்ஞானம், அழகியல், சரித்திரம் என்று எண்ணற்ற பாடங்களில் ஒரு சில புத்தகங்கள் மட்டுமேயிருந்தன. அவர்களுக்கென்று செய்திப் பத்திரி கைகள், அட்டவணைகள், சஞ்சிகைகள் எதுவும் இருக்க வில்லை.

அப்படியே புத்தகங்கள் கைக்கெட்டினாலும், ஒரு மாணவன் இப்போதுதான் வாசிக்கக் கற்றுக் கொள்ள சிரமப்படுவது மாதிரி பெருத்த பிரயத்தனம் எடுக்க வேண்டியிருந்தது. 'எம்பொஸ்' முறைக்குப் பதிலீடாக,

ஓரளவு முன்னேற்றமான முறையொன்றை முன்வைக் காது விட்டால், தம் இருளுலகில் அனுபவிக்கிற எல்லாத் தடைகளிலிந்தும் வெளியே வர குருடர்களுக்கு என்றுமே முடியாது போகும் என்று லூயிஸ் அறிந்திருந்தான். சில புதிய மாற்றங்களை உட்புகுத்தி, 'நைட்- ரைட்டிங்' முறையை பரீட்சித்தும் பார்க்க லூயிஸ் முயற்சி மேற் கொள்ள ஆரம்பித்தான். பள்ளியில் பார்பியர் இது பற்றி அறிமுகப்படுத்திய போது, இம் மேதாவியைச் சந்திப்பதற் காகவே அவன் விரைந்தான். லூயிஸுக்கு பன்னி ரெண்டு வயதே ஆகியிருந்தது. வியப்புற்ற இந்த படைவீரர், இச் சின்னஞ் சிறுவன் 'நைட்- ரைட்டிங்' பற்றிக் காட்டும் ஆர்வத்தையறிந்து, இது சம்பந்தமாக இச்சிறுவன் முன் னேற்றகரமான பல கண்டு பிடிப்புக்களை மேற் கொள் வான் என நம்பினார்.

லூயிஸ் முன்வைத்த ஆலோசனைகளை பார்பியர் விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டார். ஆயினும், இத்திட்ட மானது குருடர்களின் முழுதுமாக பிரயோசனமளிக்க வேண்டுமானால், அம்முறையில் ஒரு அடிப்படைச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இச்சிறு வன் எண்ணினான். "நீ என்ன திட்டத்தை முன்வைக் கிறாய்?" பார்பியர் கேட்டார்.

"நீங்கள் பயன்படுத்தியிருக்கும் எழுத்து அடையாளங் கள் குருடர் வாசிக்க கஸ்டப்படுமளவுக்கு பெரியது; அவைகள் சிக்கலானவை போலவும் இருக்கின்றன. அவற்றினது அளவைக் குறைத்து ஏதாவது ஒரு அமைப்பில் அதை மீளக் கட்டமைப்பது சாத்தியமாக இருக்காதா?"

பார்பியர் வியப்புற்றார். "நல்ல கேள்வி என் குட்டி நண்பனே. நிச்சயமாக எல்லாம் சாத்தியம் தான். எழுத்து அடையாளங்களை மாற்றுவது பற்றி நீ பேசுகையில் எனக்குப் புரிகிறது நீ 'நைட்- ரைட்டிங்' முறையில் இருக் கும் புள்ளித் திட்டத்தை மட்டுமே எடுக்கவும், எழுத்தடை யாளங்களை விடவும் யோசிக்கிறாய்; வீட்டை உடைத்து விட்டு பழைய அத்திவாரத்தில் ஒரு புதிய வசிப்பிடத்தைக் கட்ட நீ யோசிக்கிறாய்."

லூயிஸ் அவரது பதிலில் சற்றுத் தடுமாறினான். உடனடியாக என்ன சொல்வதென்று அவனுக்குப் புரிய வில்லை. "உங்கள் கண்டு பிடிப்பை நான் குறை காண விழையவில்லை. அது குருடர்களுக்குப் பெரும் நம்பிக் கையைத் தருகிறது. உங்கள் அனுமதியோடு கொஞ்சம் பரீட்சிக்க எண்ணுகிறேன்." என்றான் அவன்.

"நல்லது, எனினும், உன் நம்பிக்கையை ரொம்ப உச்சத்துக்கு வளர்த்துக் கொள்ளாதே. நீ ஒரு கடினமான முயற்சி மேற்கொள்கிறாய். பள்ளியில், நீ படிக்க வேண்டி யவை ஏராளமாக உள்ள நிலையில் நீ பார்வையில் லாதவனாகவும் இருக்கிறாய். உன் ஆசிரியர்களை தந்திரமாக வசியப்படுத்த நீ ஒரு மந்திரச் சாவியைக் கண்டு பிடிக்க வேண்டியேற்படலாம்."

பார்பியர் அமைதியானார் ஒரு கணம். அவனது தலை முடியை அவர் கோதிவிட்டார். "நல்லதிர்ஷ்டம் வாய்க் கட்டும் நீ கெட்டிக்காரன். திறமைசாலி. உனக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் செய்வேன்" அவர் சொன்னார்.

நல்லதிர்ஷ்டத்துக்கும் மேலே நல்ல திட்டம் ஒன்றே தனக்கு இது சம்பந்தமாகத் தேவையென்பதை லூயிஸ் உடனடியாக உணர்ந்தான். 'நைட்- ரைட்டிங்' முறையி லிருந்த சிக்கல், அவனது ஆசிரியர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியும், ஜெயிக்க முடியாது போல பிரமையையும் ஏற்படுத்தியிருந்தது. எனவே, அவனது பரிசோதனை களை எப்படி அணுகலாம் என அவன் யோசித்தான். ஆங்கில அரிச்சுவடி எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு புள்ளி அளவைத் திட்டமிட்டான். எனினும், 'a' எழுத் துக்கு ஒரு புள்ளி, 'b' எழுத்துக்கு இரண்டு புள்ளி எனத் திட்டமிட்டாலும் 'z' எழுத்தை மட்டும் வாசிக்க 26 புள்ளி களை ஒரு குருட்டு மாணவன் வாசிக்க வேண்டுமென் பதையும், கூடவே இலக்கங்கள் நிறுத்தற் குறியீடுகளுக்கு இன்னும் புள்ளிகளை நிறைக்க வேண்டுமென்பதையு மெண்ணி மலைத்தான் அவன்.

இதைவிட, விரல்களால் தொட்டு இனம் காணத்தக் களவு எழுத்துக்களுக்கு புள்ளித்திட்டமிடலை சுருக்கி வகைப்படுத்துவதெப்படி என அவன் சிந்தித்த வண்ண மிருந்தான். பள்ளிக்கூட வேலைகள் மிகைத்திருந் தனவாதலால் விடுதியில் இதைப் பரீட்சிக்க முயன்றான். கோதியர் என்ற நண்பனின் உதவியையும் பெற்றுக் கொண்டான்.

ஆங்கில அரிச்சுவடியின் ஒவ்வோர் எழுத்துக்கும் இணைத்து இணைத்துப் புள்ளகளிட்டு கூரிய ஆயுதத் தால் பெரிய 'எம்போஸ்' பத்திரிகையில் முயற்சி மேற் கொண்டபடியேயிருந்தான்.

ஆரம்பத்தில், அதிர்ஷ்டம் வாய்க்கவேயில்லை. அடிப் படை சூத்திரங்களுக்காக அலைய வேண்டியேற்பட்டது. தான் ஏலவே கண்ட முறைமைகளே இதுவரையும் தன் னால் பரீட்சிக்கப்பட்டிருக்கிறதென உணர்ந்து அவன் களைப்புற்றான். உற்சாகமிழந்து, இது தனது வயதுக்கு மீறிய வேலையோ என எண்ணிக் குழம்பினான் அவன். ஆயினும், பார்பியரின் முறை மீது மீள நம்பிக்கை கொண்டு, தன்னம்பிக்கையோடு மறுபடி அம்முயற்சியில் தலையீடு செய்ய அவன் உந்தப்படத்தக்கதாய் ஒரு நிகழ்வு, கல்விக் கூடத்தில் நிகழ்வுற்றது.

கல்விக் கூடத்தின் ஸ்தாபகரான வெலண்டின் ஹாயே யைக் கௌரவிக்கு முகமாக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஐரோப்பாவின் இன்னொரு பகுதியிலே, குருடர் களுக்கான இன்னொரு பள்ளியை ஆரம்பிக்கக் கருதி, பல வருடங்களாக அவர் பாரிஸை விட்டுப் போயிருந்தார். திரும்பி வந்த போது, களைப்புற்றும், உற்சாகமின்றியும், பொலிவின் றியும் காணப்பட்டார். எனினும், அவர் தன் கல்வி நிறுவகத் தால் மறக்கப்பட முடியா மனிதராகவேயிருந்தார். எனவே, நன்றி பாராட்டப்படவும், கௌரவிக்கப்படவும் அவர் அழைக்கபட்டிருந்தார். அதற்கான ஆயத்தங்களும், விழா ஏற்பாடுகளும் பல வாரங்களாக இடம் பெற்றன. வகுப்பறைகளும், சாப்பாட்டறையும் அலங்கரிக்கப்பட்டி ருந்தன. நேர்த்தியான நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக் கப்பட்டிருந்தன. வெலண்டின் ஹாயே, இந்த அலங்கா ரத்தை காண முடியாதவராயிருந்தார். 76 வயது நிரம்பிய நிலையில், பார்வையை முழுவதுமாக அவர் இழந்திருந்

தார். அவர் பாடசாலையைச் சுற்றி வழிநடத்திக் கூட்டிச் செல்லப்பட்டார். ஆனாலும், அவர் அந்த நாளை குதூகல மாக அனுபவித்தார். மாணவர்களது வகுப்பறைகளுக்கு அவர் விஜயம் செய்தார். மாணவர்களோடு தனித்தனியா கப் பேசினார். அவர்களோடு உணவு உண்டார். அந்த முதியவரின் மெல்லிய கரங்களை தொட்டுக் கைகுலுக் கிய போது, லூயிஸ் அவர் காதுகளுக்குள் மென்மையாக தனது பரீட்சார்த்தத் திட்டம் பற்றிச் சொன்னான். அவர் எதுவும் சொல்லவில்லை.

அன்று மாலை, மண்டபம் இசைக்கச்சேரியென்றும், விருந்தென்றும் கலகலத்துக் கிடந்தது. இந்நிகழ்ச்சிக் கென்றே ஏற்பாடு செய்யப்பட்ட பாடல்கள் பலதை மாணவர்கள் பாடினர். வெலண்டின் ஹாயே பேசுவதற் கான நேரம் வர, பாடசாலை வாத்தியக்குழுவின் இசையில் மண்டபம் அதிர, வழிகாட்டும் கயிறின் உதவி யோடு, தட்டுத்தடுமாறியபடி அந்த வயோதிபக் கல்விமான் மெல்ல நடந்து வந்தார். மாணவர்கள் ஆராவாரித்தனர். ஹாயேயின் கண்களில் கண்ணீர் முட்டிற்று. நடுங்கும் உணர்ச்சி தழுதழுத்த குரலில், கிட்ட தட்ட அரை நூற்றா ண்டு காலமாக குருடர்களுக்கான அர்ப்பணிப்பில், அவர் அனுபவித்த கடினங்களையும் இடர்களையும் அவர் ஞாபகப்படுத்திப் பேசினார். “என்னால் நிறைவேற்றப் பட்டிருக்கும் பணியினை திரும்பி இங்கே வந்து பார்க்கிற போது நிஜமாகவே நான் மகிழ்ச்சியில் திளைக்கிறேன். அதேவேளை, இன்னும் செய்ய வேண்டியிருக்கிற பணி கள் குறித்து நான் மிகுந்த கவலை கொள்கிறேன்.” அவர் மாணவர்களுக்குச் சொன்னார். “குருடர்களுக்கான ஒரு தெளிவான பாதையைக் காட்டும் ஒரு டோர்ச் விளக்காக, இப்பாடசாலை இருக்கும் என நான் நம்பியிருந்தேன். இன்று மாலை இங்கிருந்த நீங்கள் அனைவருமே தான் அந்த வெளிச்ச விளக்கின் காப்பாளர்கள். கெஞ்சிக் கேட்கிறேன்; இதைக் கவனமாகப் பாதுகாத்துதவுங்கள். இன்னும் இருளிலேயே வாழுகின்ற ஒரு பரம்பரையின ருக்காக இதை இந்தச் சுமையை நீங்கள் சுமந்தேயாக வேண்டும்.”

“எனக்கு கௌரவிப்போ, என் நலிந்த முயற்சிக்கான பாராட்டோ நான் வேண்டவில்லை. கடவுளின் உதவி யால், நாம் இங்கே உருவாக்கிய அறிவின் வெளிச்சத்தில் இப்புவியின் மீது வாழும் கடைசிக் குருடரது வாழ்வுரை, ஒளியூட்டப்படுமானால் அதுவே எனக்கான சிறந்த பரிசளிப்பு. அதற்காகவே வாழ்த்துகிறேன்.”

வெலண்டின் ஹாயே அதன் பிறகு அப்பள்ளிக்கு விஜயம் செய்யவேயில்லை. கொஞ்ச நாட்களிலே மரண மெய்தினார். ஒரு முழுக்குருடராக லூயிஸால் அந்த வயோதிபரது வார்த்தையை மறக்க முடியவில்லை. ஹாயே, தன்னிடம் தனிப்பட்ட ரீதியாக அந்த டோர்ச் விளக்கை தந்து போனதாக உணர்ந்தான். புள்ளியிடும் திட்டத்தை பரீட்சிப்பதன் மூலமாக அப்பணியை தான் நிறைவேற் றுவதாக அவருக்கு அவன் மானசீகமாக வாக்களித்தான்.

எல்லா சகமாணவரும் ஆழ்ந்த தூக்கத்திலிருக்க அவ்விடுதியில், மறுபடி நடு இரவுவரை அவன் அவனது வேலையைத் தொடர்ந்தான். தூக்கத்தில் தடுமாறி விழு மளவுக்கு, ஆயுதம் கைகளில் அணுகி அச்சை ஏற்படுத்து மளவுக்கு அவனது வேலையில் அவன் ஈடுபட்டான். நேரத்தை மறந்து துளையிடும் பணியில் மூழ்கியிருக் கையிலேயே, சிலவேளை குதிரைகளின் குளம்பொலி பாதையில் கேட்பதையுணர்ந்து விடிந்து விட்டதை அவன் உணர்ந்து கொள்வான். வகுப்பறையில் தூக்கத்தில் அவன் வழிந்தான். தொடர்ச்சியான இருமல் ஏற்பட்டது. அவனது நிறை கூடக் குறைந்தது. அடிக்கடி அவனுக்கு தன் நேரத்தை தான் வீணடிப்பதாகவும் உணர்வேற்பட்டது.

அடுத்த கோடை விடுமுறையில் அவன் வீடு வந்த போது, அவனது தோற்றத்தைக் கண்டு தாய் அதிர்ச்சி யடைந்தாள். விடுமுறைக்காக அவன் வீடு வருகையில், மெலிந்த தன் மகனை சொஞ்சமேனும் கொழுக்க வைக்க வென்று திட்டமிட்டு உணவு சமைப்பாள் அவனது அம்மா. இம்முறை அவனது நலிவுற்ற தோற்றம் கண்டு பயந்து, அவள் தன் பெரும்பாலான நேரத்தை சமையலறை யிலேயே செலவழித்தாள். லூயிஸ் அவனது விடுமுறை யில் மகிழ்ச்சியாகவும் ஓய்வாகவுமிருக்க வேண்டுமென அவள் விரும்பினாள். ஆனால், அவன் தன் வேலையில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தான்.

மகிழ்ச்சிகரமான சில நாட்களில், அச்சிறுவன் பாதை வழியே நடந்தும், புல்வெளிகளில் துளையிடும் ஆயுதம், பத்திரிகையோடு சூரியனின் கதகதப்புச் சூட்டை அனுபவித்தபடியே தன் நேரத்தைச் செலவழிப்பான். “லூயிஸ் உட்கார்ந்து என்ன செய்கிறாய்? துளையிடுகி றாயா?” என்று அவன் செய்யும் வேலை பற்றி தமக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டாலும் ஊராட்கள் அவனைக் கேட்டுப் போயினர். அவன் ஏதாவது பிரயோசனமளிக்கும் வேலையையே செய்வான் எனவும் அவர்கள் அறிந்திருந் தனர். மாலை வேளைகளில், தந்தையோடு கடைக்குச் செல்வான் அவன். தோல்களின் மீது கூரிய கருவிகளால் துளையிடும் சப்தத்தைச் செவிமடுத்தபடி, குதிரைச் சாணம் தயாரிக்கும் அக்கடையில் உட்கார்ந்திருப்பான். அவன் தன் பார்வையை தொலைக்க நேர்ந்த மேசை மீது உட்கார்ந்து, பார்பியரின் புள்ளியெழுத்துக்களை எங்ஙனம் இலகுபடுத்தி வெற்றி காணலாம் என்பது பற்றி சிந்தித் தபடியிருந்தான்.

வீட்டிலும், பாடசாலையிலும் ஏறக்குறைய தன் திட்டத்தின் பொருட்டு மூன்றாண்டுகள் கடினமாக உழைத்தபின் கடைசியாக புள்ளி அடையாள அரிச்சு வடியை விஸ்தீரணமாக்கி, பயன்பாட்டுக்கு உதவும் வகை யில் லூயிஸ் அறிமுகப்படுத்தினான். 1824 இல், முதலாம் தவணையின் ஆரம்பத்தில் அவனது புது அரிச்சுவடி, செய்முறை ரீதியாக பரீட்சிக்கப்பட ஆயத்தப்படுத்தப் பட்டது. லூயிஸுக்குப் பதினைந்து வயதே ஆகியிருந்தது. எனினும், எதிர்கால சந்ததியில் வரப்போகும் பல்லாயிரக் கணக்கான குருடர்களின் கல்விகான கதவினை திறக்க வேண்டுமென்ற நோக்குக் கொண்ட தனது திட்டத்தில் அவன் வெற்றி கண்டான். ஒரு மேலோட்டமான பார்வையில் அவனது திட்டம் எளிதாக இருக்கிறது என்று சொல்லப்படக்கூடும். ஆனால், உன்னத அறிவார்த்தத் தின் அடையாளம் அதுவென்பதே உண்மை. ஆயிரக் கணக்கான தன் மணித்துளிகளை இதன் அபிவிருத்திக் கென்று அவன் செலவழித்திருக்கிறான்.

இதன் ஆரம்பமாக, பார்பியரின் புள்ளிக் கோலங் களை சின்னதாகக் குறைத்து, ஒரு விரல் நுனியால் தொட்டு உணரத்தக்களவு அவன் கொண்டு வந்தான். இவ்வலகே 'பிரெய்லி கலம்' என்று அழைக்கப்படும் புள் ளித் திட்டமாகும். அது ஆறு புள்ளிகளைக் கொண்டது. இரண்டு குறுக்கும் மூன்று கீழுமாக இவ்வாறு அமையும்.

1..4 2..5 3..6

இக்கலத்துள், புள்ளிகளின் பல்வேறு கூட்டுகளை லூயிஸ் உருவாக்கினான். ஒவ்வொரு புள்ளிகளும் ஒரு எழுத்தை அடையாளப்படுத்தின. இன்று பயன்படுத்துவது போல முதல் பத்து அடையாளங்களும் ஆங்கில அரிச்சுவடியின் எழுத்துக்களையும், பத்து அரபு இலக்கங்களையும் கோடுகாட்டின.

| A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| G | H | I | J |
|---|---|---|---|
| .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. |
| 7 | 8 | 9 | 10 |

ஏனைய எழுத்துக்களுக்கும், இலக்கங்களும் இந்த பத்து அடையாளங்களை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டன. இவ்வாறாக 63 வித்தியாசமான அடையாளங்களை முழு ஆங்கில அரிச்சுவடியையும், அடிக்கடி உபயோகிக்கப்படும் வார்த்தைகளையும் உட்படுத்தி அவன் உருவாக்கினான். கூடவே, இசைக் குறியீடுகள், கணித அடையாளங்களையும் கூட அவன் உருவாக்கினான். எழுதுவதற்காக பார்பியர் உபயோ கித்த வண்ணமே உலோகத்தகடை அவன் உபயோகித் தான். தகட்டின் கீழே தடிப்பான தாள் ஒன்று வைக்கப் பட்டு, ஆயுதம் ஒன்று மூலம் குத்தப்பட்டு பொத்தல்களாக எழுத்துக்கள் உருவாகும்.

இம்முறையினால் இளம் பிரெய்லி 'எம்பொஸ்' முறை களின் பிழைகளைத் திருத்தினான். அவனது புள்ளிய டையாளங்கள் இலகுவாகவும், பூரணமாகவுமிருந்தன. அவை, இலகுவாக வாசிக்க முடியுமாக ஒரு இலகுவான தொடுகையிலேயே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந் தன. மனித வரலாற்றிலேயே முதன் முறையாக, உலகத் தின் எல்லா இலக்கியங்களும் குருடரின் விரல்நுனியில் வைக்கப்பட முடியும் என்றானது.

ஒருநாள், லூயிஸ் இரவுணவின் பின் தனது இம் முறையை வகுப்பறையில் செய்து காட்டினான். பார்வை யுடைய ஒரு ஆசிரியரிடம் ஏதாவது புத்தகத்தின் ஏதேனு மொரு பந்தியை வாசிக்குமாறு அவன் வேண்டினான்.

"மெதுவாகவும் தெளிவாகவும் வாசியுங்கள். ஒரு பார்வையுடைய ஒரு நண்பனுக்கு வாசித்து, அவன் தங்கள் அனைத்து சொற்களையும் எழுதுவது போன்ற வண்ணம் தெளிவுற வாசியுங்கள்."

மில்டனின்- ஒரு குருட்டுக் கவிஞனின்- கணீரென ஒலிக்கும் கவிதை வரிகளை வாசிப்பிற்காகத் தேர்ந் தெடுத்தார் ஆசிரியர். வகுப்பறையின் மத்தியில் உட்கார் ந்து கொண்டு, லூயிஸ் தனக்கு ஒப்புவிக்கப்படும் வார்த் தைகளை தகட்டில் ஆயுதத்தைப் பயன்படுத்தி எழுதிக் கொண்டே போனான். பார்வையுடைய ஆசிரியர்கள் அவனை அவதானித்தபடி சாய்ந்திருந்தனர். குருட்டு ஆசிரியர்கள் கவனமாக உலோகத் தட்டில் காகிதத் தாளூடாக துளை விழுகிற சப்தத்தை அவதானித் திருந்தனர்.

கவிதை வாசிக்கப்பட்டு முடிய, லூயிஸ் மீள ஒரு முறை தான் குத்தியதை சரிபார்த்துக் கொண்டான். பிறகு, எழுந்து நின்றான். அமைதியான குரலில் மில்ட னின் கவிவரிகளை ஆசிரியர் வாசித்த அதே வேகத்தோடு ஒரு வார்த்தையும் பிசகாது, ஒரு தவறும் விடாது, அழகுற ஒப்புவித்தான். அவன் வாசித்து முடித்த போது, அவ னைச் சுற்றி ஆசிரியர்கள் சூழ்ந்து கொள்ள, அந்த முழு அறையையுமே வியப்புடன் கூடிய சலசலப்புக் குரல்கள் ஒலித்து நிரப்பின.

அதைத் தொடர்ந்து, நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி. பிக்னியர் அவனைக் கூப்பிட்டனுப்பினார். லூயிஸ் நிறைவேற்றத் தவிக்கும் லட்சியம் பற்றி ஏலவே அறிந்திருந்தாலும், இத்தனை விரைவில் இந்தளவு முன்னேற வாய்ப்பில்லையென்பதாக ஒரு சந்தேகமும் அவரிடம் கூடவேயிருந்தது. லூயிஸ், மறுபடி தன் முறையை செய்து காட்டுமாறு வேண்டப்பட்டான்.

லூயிஸ் ஒரு கதிரை மீது பணிப்பாளரின் மேசைக் கருகே உட்கார்ந்து, டாக்டர் பிக்னியர் அவனுக்கு வாசித்த வரிகளை வியப்புற விதமாய் செய்து காண்பித்தான்.

அப்பணிப்பாளர் வியப்புற்றார். "ஒரு பெரிய விடயத்தை நீ சாதித்து விட்டாய். உனது முறையை எல்லா வகுப்புக் களிலும் பயன்படுத்துமாறு நான் ஆசிரியர்களை வேண் டப் போகிறேன். ஆனால், நீ புரிந்து கொள்ள வேண்டும் லூயிஸ். உன் முறைமை இன்னமும் நிறுவப்பட வில்லை. சட்டரீதியாக உனது முறை சேர்த்துக் கொள்ளப் படும் வரை நாம் நன்கு அதைப் பரீட்சிப்போம்."

லூயிஸின் புள்ளியிடல் அனைத்து மாணவர்களாலும் ஆகர்ஷிக்கப்பட்டது. முதன் முறையாக, வகுப்பறைகளில் குறிப்பெழுதும் முறை அறிமுகமானது. மாணவர்கள் இப்போதெல்லாம் கடிதங்கள் எழுதவும், டயரிகள் வைத்துப் பேணவும் முடியுமாகவிருந்தது. தன் முறை யைப் பயன்படுத்தி "Grammar of Grammars" (இலக் கணங்களின் இலக்கணம்) என்ற பாட நூலை மொழி மாற்றம் செய்தான்.

ஆயினும், அவனுக்குத் திருப்தியேற்படவில்லை. மாண வனாகயிருந்த மீதிக் காலங்களில் தனது முறையை இன் னமும் இலகுவாக்கவும் முன்னேற்றவும் முயன்றான். எனினும், கல்வியை அவன் புறக்கணிப்புச் செய்ய வில்லை. அவனது சகதோழன் ஒருவனது கூற்றுப்படி, ஒவ் வொரு வருடமும் பல்வேறு பரிசளிப்பை வென்றோர் பட்டியலில் லூயிஸ் பிரெய்லியின் நாமம் வாசிக்கப்பட்டே

வந்தது. 1826 இல், லூயிஸுக்கு 17 வயதானபோது, அவன் ஒரு உதவியாசிரியனானான். அடுத்த வருடமே பட்ட தாரியான அவனிடம் பணிப்பாளர் பிக்னியர் அவனது இன்றியமையாமையையுணர்ந்து நிறுவகத்திலேயே தங்கியிருக்கப் பணித்து, கேத்திர கணிதம், இலக்கணம், புவியியல் என்பவற்றிற்கான பேராசிரியராக்கிக் கௌரவித் தார். லூயிஸ் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான். இபோதெல்லாம் அந்நிறுவகமே அவன் வீடு என்றானது.

1828 இல் லூயிஸ் தனது இம்முறையை இசைக் குறிப்புக்களுக்குப் பயன்படுத்த விழைந்தான். 1829 அளவில், அவனது 20 பிறந்தநாளை நெருங்குகையில், அவனது புள்ளி அரிச்சுவடி 'பிரெய்லி முறை' என்று, இன்றழைக்கப்படும் முறைக்குக் கிட்டதட்ட ஒத்தளவில் நேர்த்தியாக்கப்பட்டு உருவானது. "Method of Writtig words, Music and plain songs by means of dots, for use by the blind and arranged for them" என்ற சஞ்சிகையை வெளியிட் டான். இச்சிறு நூலின் முன்னுரையில், அவன் கவனமா கத் தனக்கு உதவிய ஒவ்வொரு வரையும் கௌரவித்து எழுதியிருந்தான். குறிப்பாக சார்ள்ஸ் பார்பியர்- 'நைட்- ரைட்டிங்' முறைமையின் கண்டுபிடிப்பாளர்- அவர்களைக் கௌரவித்து, "இம்முறைமைக்காக நாம் சிந்திக்க, முதல் யோசனையை முன்வைத்த அவரைக் கௌரவிக்கும் முகமாக" என எழுதியிருந்தான்.

பிரெய்லியின் கண்டுபடிப்பு குருடர்களுக்கு ஒரு புது யுகத்தை தோற்றுவித்ததெனலாம். எம்மொழியிலும், தட்டெழுத்தோ, சுருக்கெழுத்தோ, கணிதமோ, இசையோ எதிலும் பயன்படுத்தத் தக்கதாயும் இருந்தது. முதல் தடவையாக, குருடர்களுக்கான அதிக விலையற்ற, மலிவான, வசதியான புத்தகங்களுக்கு இம்முறைமை வாக்குறிதியளித்தது. பார்வையுடையோர் அனுபவிக்கிற வசதிகளோடு, குருடர்களும் இப்புத்தகங்களை வாசிக்க இம்முறைமை வாய்ப்பு வழங்கிற்று.

குருட்டு இளைஞர்களுக்கான இந்நிறுவகம் தவிர்ந்த, ஏனைய நிறுவகங்கள் இம்முறைமையை புறக்கணித்தே வந்தன. கலாநிதி பிக்னியரின் இம்முறைக்கான அரச அனுமதி கோரிய, வேண்டுகோள்கள் அதிகாரத்தில் உள் ளோரால் புறக்கணிப்பட்டே வந்தன.

லூயிஸ் இது பற்றி உள்நாட்டு அலுவல்கள் அமைச்ச ருக்கு எழுதினான். ஆரம்பத்தில், அவனுக்கு ஒரு பதில் கூட வரவில்லை. அவன் மீண்டும் மீண்டும் எழுதினான். பிக்னியரின் தலையீடு காரணமாக ஒரு வழியாக அவ னுக்கு ஒரு அனுமதிக் கடிதம் கிடைத்தது. அமைச்சரின் உதவியாளர் ஒருவரால் அவன் வரவேற்கப்பட்டான். லூயிஸ் அவனது புள்ளித் திட்டம் பற்றிப் பொறுமையாக அவருக்கு விளக்கமளித்தான். நிறுவகத்தின் மாணவர் களால் அது வெற்றிகரமாக வரவேற்கப்படுவதையும் அவன் விளக்கினான். "உங்கள் முறைமை பற்றி நாம் அறிவோம்." அந்த அரச அதிகாரி சொன்னார். "உன் முயற் சியை வரவேற்கிறோம். உன் வேலையில் நீ இன்னும் ஆர்வமூட்டப்படல் வேண்டும்." என்றவர் சொன்ன போது, லூயிஸ் புரியாமல் குழம்பினான். "இன்னும் என்ன உற்சாகமூட்டப்பட.......? குறித்த முறை பற்றி நிரூபித்தா யிற்று. நாம் ஏறக்குறைய அதை ஐந்தாண்டுகள் செயல் படுத்தி வருகிறோம்."

"ஆம்; ஆனாலும், 'எம்பொஸ்' முறைக்குப் பதில் முறையாக மட்டும் கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் பாவித்து வந்த ஒரு முறையை சட்டென கண்மூடித்தனமாக நாம் கைவிட்டு விட முடியாதென்பதை, பிரெய்லி நீ ஞாபகத் தில் கொள். நாம் மெல்லத்தான் இம்முறைக்கு அணுக வேண்டும். பெரும்பாலான குருட்டு மாணவர்களின் நலன் குறித்து நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது."

"நானும் அதுபற்றித்தான் யோசிக்கிறேன். குருட்டு மாணவர் என் முறையை ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டி ருக்கிறார்கள். 'எம்பொஸ்' முறையிலிருந்து இது பெரு மளவு முன்னேறியது என்பதை அவர்கள் உணருகி றார்கள்." லூயிஸ் விவாதித்தான்.

"அவர்கள் நீதிபதிகள் அல்ல. நாம் முகம் கொடுக்க வேண்டியிருக்கும் சிக்கலான பிரச்சனை பற்றி நீ சிந்திக்க மறுக்கிறாய். இங்கே, அரச ஒப்பந்தங்களும் உள்ளடங் கியுள்ளன. 'எம்பொஸ்' சம்பந்தமான நூல்களை, கருவி களை நாம் எப்படி அழிப்பது? மறுபடி இப்புதிய முறையில் எல்லா ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பதெப்படி" அவர் கேட்டார்.

"மேலும், அரசதுறை சார்ந்த பல அதிகாரிகள் உன் முறையை ஒரு பரீட்சார்த்த முறையே என்றுதான் கருதுகிறார்கள். எழுத வாசிக்க உபயோகத்திலிருந்த பழமையான முறையிலிருந்து புரட்சிகரமாக உன் முறை விலகி நிற்கிறது. இது மாதிரி முறையொன்றை சேர்த்துக் கொள்ளும் போது, குருடர்களது உலகம் குழம்பிப் போகலாம்." அவர் சொன்னார்.

"குருடர்களது உலகம் பற்றி, அரச துறைசார் அதிகாரிகளுக்கென்ன தெரியும்? அவர்கள் குருடர்களா? நீங்கள் குருடரா? பார்க்க முடியாமை பற்றி புரிந்து கொள்ள முடிகிறதா உங்களால்? நல்லது. நான் குருடன். என்னால் பார்க்க முடியாது 'எம்பொஸ்' முறையிலிருக் கும் குறைகளை நானறிவேன். கூடவே, என் சொந்தக் கண்களின் குறைபாட்டையும்.... இந்த உரையாடல் பற்றி- அது எதையும் சாத்தியமாக்கித் தராது என்பது பற்றி நானறிவேன்" லூயிஸ் கோபத்தில் பீறிட்டான்; அவனது உடல் நடுங்கிற்று. அவனது மூச்சின் சப்தம் அவனுக்கே கேட்டது.

கடைசியில் அந்த அதிகாரி பேசினார். "அமைதியா கயிரு லூயிஸ் மொன்சியர். குருடர்களின் நலன் பற்றி நான் சிந்திப்பவன் தான். உன் முறையின் வெற்றிக்காக நீண்ட காலமாக ரொம்ப உழைத்திருக்கிறாய். இருந் தாலும், ஐரோப்பா முழுதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறை யாக 'எம்பொஸ்' தானிருக்கிறது. உன் முறை செயற் படுத்தப்பட ஆவன செய்யவேண்டும்."

"மொன்சியர் பிரெய்லி நீ இளம் பிள்ளை. பொறுமை இல்லை உனக்கு. உன் உற்சாகத்தினால் நீ உந்தப் பட்டு இருக்கிறாய். நீ விரும்புவதையெல்லாம் பரீட்சித்துப் பார். உன் முன்னேற்றத்தை நாம் ஆர்வத்தோடு கவனித்

துக் கொண்டிருக்கிறோம். உன் முறையே சிறந்ததென்று நிரூபிக்கப்பட்டு விட்டால், நாம் சரியான நடவடிக்கை எடுத்து, உனக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். மீண்டும் உனக்கு ஞாபகமூட்டுகிறேன்: 'எம்பொஸ்' மட்டுமே சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறையாக யிருக்கிறது. இந்நிறுவனத்தின் பேராசிரியர் என்ற வகை யில், நீ இதை நினைவில் வைத்திருக்க வேண்டும்...."

லூயிஸிற்கு மேலும் எதுவும் சொல்ல முடியவில்லை. சொல்ல எதுவுமில்லை. அவன் வகுப்பறைகளுக்குச் சென்றான். மறுபடி 'எம்பொஸ்' முறையைத் தொடர்ந் தான். அவன் வெறுப்படைந்தான். எனினும் சோர்வுற வில்லை. குருடர்களுக்கு அவனது முறை, அவர்களது விடுதலைக்கான சாவியாக இருக்கும் என்பதை அவன் நன்கறிவான். ஆதலால் அவனிடம் சோர்வில்லை.

லூயிஸ் பிரெய்லி குருடர்களுக்கான தேசிய நிறுவகத் திலேயே தன் எஞ்சிய காலங்களைச் செலவிட்டார். தன் புள்ளியரிச்சுவடிக்கான அங்கீகாரத்துக்காக நிரம்பவும் போராடினார்.

அதுபோலவே, ஒரு மாணவர் குழுவிற்கு, அதன் பயன்பாட்டைப் பற்றிச் சொல்லிக் கொடுத்து, அதை அவர்கள் பயன்படுத்த நிறையப் பயிற்சிகள் கொடுத்தார். குருடர்கள், அவரது முறையில் இருக்கிற உன்னதத்தை வெகுவாகப் புரிந்து கொண்டனர். மாணவர்கள் பட்டதாரி களாகி வெளியேறுகையில் தீவிர ஆர்வமுள்ள கல்விக் கூடங்களாக, தம்மோடு இம்முறையையும் சேர்த்தே சுமந்து கொண்டு வெளியேறினார்கள். எனினும், அரச நிர்வாகிகளோ பிரெய்லியின் முறையை புறக்கணித்தே வந்தனர். பாரிஸிய கல்விக் கூடங்களிலும், ஐரோப்பாவின் மற்றப் பள்ளிகளிலும் 'எம்பொஸ்' முறையே இன்னும் உத்தியோக பூர்வ முறையாக இருந்தது.

காலத்தால் தன் முறை நல்லதென்று நிரூபிக்கப்படும் என்ற உன்னத நம்பிக்கையோடு, பிரெய்லி தன் ஆய்வு களைத் தொடர்ந்தார். அவரது அரிச்சுவடி முறையில், புதிய நூல்களை மொழிமாற்றினார். 1834 இல் கலாநிதி பிக்னியரின் உதவியோடு பாரிஸ் வர்த்தகக் கண்காட்சி யொன்றில் அவரது முறை மறுபடி செய்து காட்டப்பட்டது. மூன்றாண்டுகளின் பின், தன் கற்பித்தல் முறைமை யையும், அதனால் அடைந்த பெறுபேறுகளையும் வர் ணித்து அவர் ஒரு சிறுநூல் வெளியிட்டார். என்றாலும், அரச நிர்வாகிகள் செவி சாய்க்காமலேயே இருந்தனர்.

இவை பிரெய்லிக்கு மிகுந்த ஏமாற்றம் தந்த வருஷங் களாக அமைந்தன. என்றாலும், தன் கற்பித்தலிலும், இசையிலும் தனக்கான ஆறுதலை அவர் தேடிக் கொண் டார். அவர் தவிர்க்க முடியாமல் ஒரு உன்னத ஆசிரியரென்று புகழ்பெற்றார். அவரது மாணவர் ஒருவர் அவர் பற்றிக் குறிப்பி டுகையில், "நிறைவேற்றப்படக் காத்திருக்கும் ஒரு உன் னதக் கடமையில் அடையும் மகிழ்ச்சியை விட அவரது, வகுப்புகளில் அவரது கற்பித்தலை அவதானித்தபடியி ருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும்." என்று கூறுகிறார்.

பிரெய்லியின் இசை முயற்சிகள் எண்ணிறந்த புகழை அவருக்கு ஈட்டிக் கொடுத்தன. "சைன்ட் நிக்கொலஸ்" தேவாலாயத்தின் ஓர்கன் இசைஞானியாக இவர் முன் னேறினார். பாரிஸின் எல்லா இடங்களிலும் அவரது பியானோ நிகழ்ச்சிகள் நடைபெற்றபடியிருந்தன. அடிக்கடி பாரிஸின் நவீன விருந்தினர் கூடங்களுக்கு அவர் அழைக்கப்பட்டார். அதற்கெல்லாம் அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு சென்றார். யாரேனும் ஒரு செல்வந்தரோ, செயலார்மிக்கவரோ முன் வந்து தன் திட்டத்தை செயல்படுத்தமாட்டார்களா என்கிற நப்பாசையோடு எல்லா விருந்து வைபவத்துக்கும் அவர் சென்று வந்தார். அந்த விருந்தினர் கூடத்து ஆண்களும் பெண் களும் அவர் செய்து காட்டிய நிகழ்ச்சிகளை மகிழ்ந்து அனுப வித்தனர். அவரது புள்ளிகளின் மொழி அற்புதமாகயிருந் தது. அவர்கள், அவரது திறமையைப் பாராட்டினர். ஆயினும், சொல்லத்தக்கதாய், எந்த அனுசர ணையாளர்களுமே அவர் திட்டத்தை செயல்படுத்த முன்வரவில்லை.

இந்நாட்களில் பிரெய்லியின் உடல்நிலை சீரற்றுப் போக ஆரம்பித்தது. மாணவனாய் இருந்தபோது ஆரம் பித்த இருமல் சயரோகமாய் மாறி, அவரைத் தொல்லைப் படுத்தியது. அவரது 20களிலேயே, வெளிக்கள வேலை கள் பலதைக் கைவிட்டு விட வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. அடிக்கடி, சூப்வ்ரேய்க்கு அவர் சென்று திரும்பினார்.

1840இல் தன் புள்ளியரிச்சுவடிக்கான அங்கீகாரம் கிடைக்குமென்ற அவரது எல்லா நம்பிக்கைகளையும் அவர் இழந்தார். கலாநிதி பிக்னியர், அவனது முயற்சிகளுக் காக அவனை ஆரம்பத்திலிருந்தே ஊக்குவித்து வந்தவர். நிறுவகத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்று விட டூபாவ் என்றழைக்கப்படும் ஒரு புதியவர் அவரது பதவிக்கு அமர்த்தப்பட்டார். வந்ததுமே, அவர் பிரெய்லியின் திட்டத்துக்கான தனது எதிர்ப்பை வெளியிட்டார். இன்னுமே அங்கீகாரம் பெற்றிருந்த 'எம்பொஸ்' முறையை பயன்படுத்த அவர் அனைவரையும் வற்புறுத்தினார். பிரெய்லியின் முறைக்கு அவர் முழுவதுமாக விடை கொடுத்தார்.

அதிகாரத்திலிருப்போரின் எதிர்ப்புக்கு பல வருடங்கள் முகம் கொடுக்க நேர்ந்த பின்னரும் பிரெய்லி பூரண விரோதத்தோடு, எதிர்க்கப்பட்டார். அவரது சுகக் குறைவு, மனச்சோர்வு பெருமளவில் அவரைப் பாதித்த இந்த மோச மான காலட்டத்தில், அவரது வயதொத்த சக குருட்டு நண்பர்களால் வழங்கப்பட்ட ஆதரவும், நம்பிக்கையும் மட்டுமே அவரை கொஞ்சமேனும் வாழவைத்தன. பாடசாலை நிர்வாகத்துக்கும் குருட்டு மாணவர் ஆசிரியர் களுக்குமிடையே குறித்த காலகட்டத்தில் ஒரு மௌனப் போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. "பிரெய்லியின் முறை யினை நாம் ரகசியமாக உபயோகிக்க வேண்டிய நிலை நமக் கேற்பட்டது. அதை நாம் பயன்படுத்துவது தெரிய வந்த போது நாம் தண்டிக்கப்பட்டோம்." என்று இது சம்பந்தமாக ஒரு மாணவன் பிறகு எழுதியிருந்தான், ஒரு குறிப்பில்.

குருடர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக, பிரெய்லியின் முறை உபயோகத்துக்கு வந்தது. டூபாவ், புள்ளியரிச்சுவடி மீது காட்டப்படும் ஆர்வத்தை மறுக்க முடியாதவராகயிருந்தார் டூபாவ். குருட்டு ஆசிரியர்களது

வற்புறுத்தலை மீள கருத்திற் கொள்ள வேண்டியதாயிற்று. 1844 இல் அவர் குருட்டிளைஞர்களுக்கான இத்தா பனத்தில், தகவலைப் பரிமாறும் மொழியாக பிரெய்லியின் முறை இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதை பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். நிருவாகம், "Account of the system of writing in raised dots for use by the blind" என்றொரு சிறுநூலை வெளியிட்டது. குறித்த நூலிலே, மதிப்பிடமுடியாத நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் பிரெய்லி அரிச்சுவடிக்கு நன்றியும் அதன் கண்டுப்பிடிப்பாளருக்கான அஞ்சலியும் முன் வைக்கப் பட்டிருந்தன. அதன்பிறகும் சுமார் 20 வருடங்களாக முடிவுறாது போராடிய பின்னர், பிரெய்லி அவரது சட்ட ரீதியான முதல் வெற்றியை அனுபவித்தார்.

இவ்வேளை, அவரது உடல் நிலை ரொம்ப மோசமாகியிருந்தது. சிறிது காலம் கற்பித்தார். இடையறாத இருமல், அவரது குரலுக்குத் தோல்வியைக் கொடுத்து, அவரது உரையை எவரும் கேட்க முடியாது செய்தது. மூன்று அல்லது இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் அவரால் பணிபுரிய முடியவில்லை. கிட்டதட்ட, தனது 40களில், அவர் அவரது கற்பித்தல் பணியினையும், அவரது சொந்த செயற்றிட்டத்தையும் முழுதாகக் கைவிட்டார். அவர் அந்நிறுவகத்தில் தனது இறுதிக்காலங்களை ஒய்வாயிருந்து செலவிட்டார்.

என்றாவதோர் நாள் தன் செயற்றிட்டத்துக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைக்கும் என்று பிரெய்லி என்றுமே அறிந்திருக்கவில்லை. தன் 43 வது பிறந்த நாளுக்கு சற்றுப் பிறகு அவர் இறந்த போது, அவரது அரிச்சுவடி ஐரோப்பாவின் மற்றப் பகுதிகளுக்குக் கூட தெரியாமலே போயிருந்தது. அவரது பாடசாலைக்கு வெளியே கூட குறைவாகவே, அது அறியப்பட்டிருந்தது. எந்த அரச பரிசளிப்பும் கூட அதற்குக் கிடைக்கவில்லை. பாரிஸ் நகர செய்திப் பத்திரிகைகள் அவரது மரணத்துக்காக, குறைந்த பட்சம் ஒருவரி கூட ஒதுக்கியிருக்கவில்லை. குறுகிய அவரது வாழ்க்கைக் காலத்தில், தம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தின் ஒரு பாகமான குருடர்களை முன்னேற்ற வேறு யாரும் செய்யாதளவு அவர் நிறைய சாதனை செய்திருக்கிறார் என்பதை ஒரு சிலர் மட்டுமே உணர்ந்திருந்தனர்.

நாடே தலைவணங்குமளவு உயர்ந்த மரியாதையை கூப்வ்ரேயின் குதிரைச் சாணத் தொழிலாளி ஒருவரின் மகன் இன்று பெற்றிருக்கிறார். புறக்கணிப்பே விதியென்றிருந்த பல்லாயிரக்கணக்கானோரின் விடுதலை வீரராக உணரப்பட்ட அவர் பிரான்சின் தெய்வீகமானவர்களுக்கு மத்தியிலே இன்று, கல்லறையில் ஒய்வு பெறுகிறார். உலகில் எல்லா நாடுகளிலும் எல்லா மொழியிலும் அவரது முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அது ஆபிரிக்க மொழியிலும், சீன சாஸ்திரங்களிலும் கூட, பயன் படுத்தப்படுகிறது. பிரெய்லி வாசிகசாலையின் வலைப் பின்னல்கள் இன்று குருடர்களுக்கான வாசிப்பு நூல்களை அபரிமிதமான அளவில் இன்று வழங்குகின்றன. அது விஷேட தொழில் நுட்பமோ ஜனரஞ்சக அட்டவணைகளோ எதுவாயினும் பார்வையைத் தவிர, வேறெந்த பரிசும் குருடர்க்கு பெறுமதியாகயிராது.

பிரெய்லியின் வீடு கூப்வ்ரேயின் ஒரு ஆலயமாக, ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தது போலவே, இப்போதும் பேணப்படுகிறது. அதன் முன்னே சில வாசகங்கள்:-

"இந்த இல்லத்தில்
ஜனவரி 4 1809 ல் பிறந்த
லூயிஸ் பிரெய்லி
குருடர்களால் பயன்படுத்தப்படும்
எழுத்தாணி முறையைக் கண்டு பிடித்தவர்.

பார்க்க முடியாத பலரின்
அறிவுக் கதவுகளை அவர் திறந்தார்."

சுடுகின்ற வெய்யிலில், முழங்காலைக் கட்டிக் கொண்டு தன் பிரம்பு சகிதம் லூயிஸ் முன்னரெல்லாம் உட்கார்ந்திருக்கும் கூப்வ்ரேயின் பொதுச் சதுக்கம், இன்று பிரெய்லி சதுக்கமென்று பெயர் சூட்டப்பட்டு, தேசிய ஞாபகச் சின்னமாக காட்சியளிக்கிறது. அந்த ஞாபகச் சின்னத்தின் ஒரு புறத்தே ஒரு குருட்டுச் சிறுவனை வாசிக்கக் கற்றுக் கொடுக்கின்ற லூயிஸின் சிலையொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தே தன் சொந்தக் குருட்டுத் தனத்தின் எல்லைகளை ஏற்றுக் கொள்ள மறுத்த 15 வயதேயான ஒரு சின்னஞ்சிறுவனால் கண்டு பிடிக்கப்பட்ட ஆங்கில அரிச்சுவடி காணக்கிடக்கிறது.

**எழுத்தாளர் பற்றி:-**

ரஸல் ஃபிரீட்மன் 1929 இல் பிறந்தவர். சான் பிரான்சிஸ்கோவில் பிறந்த இவர், பர்கெலியிலுள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் கற்றவர். படைவீரராக கொரியாவில் பணியாற்றிய பிறகு, ஒரு பத்திரிகையில் செய்தியாளராக அவரது எழுத்துப் பணியை ஆரம்பித்தார். பிறகு, தொலைக்காட்சிக்கு எழுதுபவராகவும், கலிபோர்னிய அகராதியின் பங்களிப்பாளராகவும் இருந்தார்.

அவரது முதல் நூல் 'சரித்திரத்தைப் படைத்த இளைஞர்கள்' (Teenagers who made history) 1961 இல் வெளிவந்தது. அதில் உள்ளடக்கப்பட்ட கட்டுரையே இது வாகும். இதுதவிர, சாமுவேல் கொல்ட், வேர்னர் வொன் பிரவுண், பாபே சாகரியாஸ், எட்னா செனட், வின்சன்ட் மிலே ஆகியோர் பற்றிய கட்டுரைகள் இதிலே உள்ளடக்கப் பட்டுள்ளன. இவரது அடுத்த வெளியீடாக விஞ்ஞானக் கற்பனைத் தொகுப்பு ஒன்று (2000 years of Space Travel) என்ற தலைப்பில் வெளியானது. ஜூலிஸ் வேர்னேயின் சரிதையையும் எழுதியிருக்கிறார். இப்போது, ரஸல் ஃபிரீட்மன் நியுயோர்க்கில் வசிக்கிறார். தனது சுதந்திர எழுத்துக்களுக்காக, தன் முழு நேரத்தையும் செலவழிக்கிறார்.

(இக்கட்டுரை, 1974 இல் மெக்மில்லன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டு 1984 இல் மீள் பதிப்புச் செய்யப்பட்ட 'Reading to enjoy' எனும் நூலிலிருந்து மொழியாக்கத் திற்காகப் பெறப்பட்டது.)




# தொடரும் காத்திருப்பு

- எஸ். சாந்தகுமாரி

''ஜானகி நான் பூப்பிடுங்கவா?'' என்று கேட்டுக் கொண்டு பக்கத்து வீட்டுத் தனம் அக்கா வரத்தான், ஜானகிக்கு ஞாபகமே வந்தது இன்றைக்கு வெள்ளிக்கிழமை என்று.

முன்பு வெள்ளிக்கிழமை என்றால், எழும்பி குளித்து, முழுகி வீடு வாசலெல்லாம் கழுவி மகனுடைய தேவைகளையும் பூர்த்தி செய்து விட்டுத்தான், ஜானகி கோவில் போய் வந்து, மதியச் சமையலைக் கவனிப்பாள். ஆனால், இன்றோ எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, ஏதோ பிரமை பிடித்தவள் போல இருக்கிறாள்.

எத்தனை பேர் என்ன சொல்லியும் அவளால் எதையும் நம்ப முடியவில்லை. அவள் மகன் கோகுலன் எப்பொழுதும் அவள் அருகிலேயே இருப்பதாக அவளுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது.

இன்றுடன் கோகுலன் காணாமல் போய் மூன்று மாதங்கள். அவள் அவனைத் தேடாத இடமேயில்லை. சிலவேளைகளில் 'செத்துப் போய்விடலாமா?' என்று கூடத் தோன்றும். தன் கணவனைச் ஷெல்வீச்சுக்குப் பலி கொடுத்து விட்டு தனி மரமாக நின்ற அவளுக்கு இருந்த ஒரே ஆறுதல் அவள் மகன் கோகுலன்தான். அவள் தன் ஒரே பிள்ளையை வளர்த்து, அவனுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருந்தாள். அவனை எப்படியாவது ஒரு டாக்டர் ஆக்கிவிட வேண்டும் என்று துடித்தாள். ஏன்என்றால், அவள் கணவன் ரட்ணத்தின் ஆசை அதுதான். அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார், ''என் பிள்ளையை ஒரு டாக்டர் ஆக்கிவிட வேணும்'' என்று. அந்த ஆசையை நிறைவேற்றிவிட அவள் கடும் பிரயத்தனம் எடுத்தாள். ஆனால், இன்று எல்லாம் சுக்கு நூறாகிப் போனது மாத்திரமல்ல, கோகுலன் அவள் அருகில் கூட இல்லை என்று நினைத்த போது, அவள் மனம் உடைந்தே போனாள்.

அன்று ஒரு விடுமுறை நாள். ''நீண்ட நாட்களாக நண்பர்களைச் சந்திக்கவில்லை'' என்று சொல்லிவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்ற கோகுலன் நீண்ட நேரமாகியும் வராததால், ஜானகிக்குப் பயம் ஏற்பட்டது. அவனின் நண்பர்களுக்குத் தொலைபேசி எடுத்துக் கேட்டாள். அவன் வந்த அலுவல் முடிந்து எப்பவோ கிளம்பி விட்டதாகச் சொன்னார்கள்.

அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. யாரிடம் போய் விசாரிக்கலாம் என்று மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்த சமயம், பக்கத்து வீட்டுத் துரைமாஸ்ரர் அவசரமாக ஜானகியைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தார்.

''பிள்ளை கோகுலன் எங்க போனவன்? அவனின் மோட்டார் சைக்கிள் பாதைக் கரையில் கிடந்ததை நான் கண்டனான், அதுதான் சொல்லியிற்றுப் போகலாம் என்று வந்தனான்.'' என்றார், அவர்.

இதைக் கேட்ட ஜானகிக்கு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. அப்படியே மயங்கி விட்டாள். கண் விழித்துப் பார்த்த போது, உறவினர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். அவள் பிள்ளையை மட்டும் காணவேயில்லை. ''எங்கை என்ர பிள்ளை'' என்று அவள் கதறியழுததைப் பார்க்கக் கூடியிருந்தவர்களுக்குத் தாங்க முடியாத வேதனையைக் கொடுத்தது. யார் எல்லாமோ வந்து விசாரித்தார்கள். செய்திகளிலெல்லாம் காட்டினார்கள். அவளும் நம்பினாள் தன்பிள்ளை வருவானென்று. ஆனால், அவன் வரவேயில்லை.

நாட்கள் மட்டும் ஓடிக் கொண்டேயிருந்தது.

தன் பிள்ளையைக் காட்டும் படி அவள் வேண்டாத தெய்வங்களே இல்லை. யாரிடமெல்லாமோ போய் முறையிட்டாள், மன்றாடினாள். தன் பிள்ளையை மீட்டுத் தரும்படி. ஆனால், யாரும் அவள் பிள்ளையை மீட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. தகவல் தெரிந்தால்தானே மீட்பைப் பற்றி யோசிப்பார்கள். அவனைப் பற்றிய எந்தத் தகவலும் யாருக்கும் தெரியவில்லை.

இப்படியே பழைய நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த ஜானகியை தனம் அக்காவின் குரல் சுய நினைவிற்குக் கொண்டு வந்தது.

''என்ன ஜானகி, என்ன யோசிக்கிறாய்? ஒண்டுக்கும் யோசியாதை, கோகுலன் கண்டிப்பாக வருவான். நீ எழும்பிக் குளிச்சிட்டுக் கோயிலுக்குப் போட்டு வா.'' என்றாள் தனம்.

தனம் அக்காவை நிமிர்ந்து பார்த்த ஜானகி, ''எனக்கு என்னக்கா கோயிலும் குளமும்? முதல் என்ர புருசன் என்னையும், என்ர பிள்ளையையும் தவிக்க விட்டு, போய் சேர்ந்து விட்டார். இப்ப, என்ர பிள்ளை என்னைத் தனியே தவிக்க விட்டு, எங்கை இருக்கிறானோ தெரியவில்லை. இதுக்குப் பிறகும் எனக்கு என்ன கோயிலும், குளமும்.''

''என்ர ஒரேயொரு குஞ்சு என்னட்டை, வந்து சேரும் வரை, இப்படியே அவனுக்காகக் காத்திருக்கப் போறன்.''

# திருவனந்தபுரம் அநுபவம்

- கே. எஸ். சிவகுமாரன்



மும்பாயிலிருந்து புறப்படும் 'நேத்திராவதி' கடுகதி ரெயில் வண்டி, கோ-ஆ (Goa)வின் கல்மாரி ரயில் நிலையத்தை இரவு 9. 50 க்கு வந்து சேர வேண்டும். ஆனால், அது 11. 40க்குத் தான் தரித்து நின்றது. அந்தச் சிறிய நிலையத்தில் இரண்டு நிமிடங்களே நிற்கும். இரண்டு உடை தாங்கிகளுடன் நான் ஏற வேண்டிய பெட்டிக்குள் பதற்றத்துடன் ஏற முனைந்தேன். கதவு இறுகி மூடப்பட்டிருந்தது. பரிதவித்தேன். வண்டி நகர ஆரம்பித்தது. பெட்டித் தொடரில் ஒன்றின் கதவு திறந்திருந்ததனால், மூச்சுத் திணறலுடன் ஏறிக் கொண்டேன். அருந்தப்பு. ஏறியதோ குளிரூட்டப்பட்ட முதல் வகுப்புப் பெட்டி. இன்னொரு பயம் கவ்விக் கொண்டது. அபராதம் செலுத்த வேண்டுமோ என்ற அங்கலாய்ப்பு. ரெயில் பாதுகாப்பு நடத்துநர் நிலைமையைப் புரிந்து கொண்டு எனக்குரிய பெட்டிக்குச் செல்லுமாறு பணித்தார். உடன் வரவில்லை. இருட்டில் தட்டுத் தடுமாறி எனது படுக்கையிடத்தைக் கண்டு பிடித்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். 'அப்பாடா!' மூச்சுத் திணறல் படிப்படியாகக் குறைந்தது.

கேரள மாநிலத் தலைநகரான திருவனந்தபுரத்திற்கான எனது பயணத்தின் 'பயங்கரமான' அநுபவம் இது. முதல் நாளிரவு தொடங்கிய பயணம் அடுத்த நாள் மாலை திருவனந்தபுரத்தை அடைந்தது. ரெயில் நிலையத்துக்கு எதிரே ஒரு முக்கிய வீதி. அங்கு நிறைய வண்டிச் சாலைகளும், ஹொட்டேல்களும், லொட்ஜுகளும் இருக்கின்றன.

அவற்றுள் ஒன்றில் ஓர் அறையை நாள் ஒன்றுக்கு ரூ 175/= அடிப்படையில் 10 நாட்களுக்கு வாடகைக்குப் பெற்றேன். இங்கு நான் தரும் நாணய விகிதம் இந்திய நாணயக் கணிப்பில் அமையும்.

நான் கேரளாவிற்குச் சென்றதன் நோக்கம், அங்கு நடைபெற்ற கேரளாவின் 12வது அனைத்துலகத் திரைப்பட விழாவிற் கலந்து கொள்வதற்காகவே.

இது டிசம்பர் 07 முதல் 14 வரை நடைபெற்றது. கேரள அரசு நடத்தும் இந்தப் பெயர்பெற்ற திரைப்பட விழாவில், இலங்கையிலிருந்து நான் சென்றது காரணமாக, எனக்குப் பெரிய வரவேற்பை விழாவின் ஊடகத்துறையினர் தந்து உபசரித்தனர்.

தகவற்றுறைத் திணைக்களத்தின் செய்தித்தாள் அறிக்கைகளில் என்னைப் பேட்டி கண்டு எனது கருத்துக்களை சகல மலையாளப் பத்திரிகைகளிலும், ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வெளியிடச் செய்தனர். இது எனக்குப் பெரிய அறிமுகத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. மலையாள எழுத்தாளர்கள், செய்தியாளர்கள், வானொலி, தொலைக்காட்சித் துறையினர் என்னைச் சத்தித்து தமிழ் கலந்த மலையாளத்திலும், ஆங்கிலத்திலும் சல்லாபித்தனர். ஒரு மலையாள தொலைக்காட்சி நிலையம் நான் ரசித்த உலகத் திடைப்படங்கள் பற்றி ஆங்கிலத்தில் பேட்டி கண்டது. இவையாவும் எனக்குப் புதிய அநுபவங்களே.

விழாவிற்கு வந்திருந்த தமிழ் நாட்டு எழுத்தாளர்களும் என்னுடன் உரையாடினர். 'கனவு' இதழின் ஆசிரியர் சுப்ரபாரதி மண்ணியன் அவர்களும் ஒருவர். ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் குசலம் விசாரித்தனர். இந்தியாவில் தற்சமயம் வசிக்கும் இரு இலங்கையரும் என்னைத் தேடி தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். அவர்களுள் ஒருவர் திரைப்பட நெறியாள்கையில் ஈடுபடுபவர். அவர் பெயர் ஞாபகத்திற்கு வரவில்லை. ஆனால், அவர் 'நான்காவது பரிமாணம்' தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒரு தடவை பங்கு பற்றியதை நான் பார்த்திருந்தேன். மற்றையவர் தற்சமயம் கனடாவில் வாழும் இலங்கையரான தேவகாந்தனின் நண்பர் என்று கூறிக் கொண்டார். இந்த அநுபவங்களுடன், எனது நண்பர் நீல பத்மநாபனை அவர் வீட்டிற்குச் சென்று சந்தித்து மகிழ்ந்தேன். கடந்த 'மல்லிகை' ஆண்டு மலரில் அவரைப் பற்றி நான் எழுதிய கட்டுரையின் நிழற் பிரதியை அவரிடம் சமர்ப்பித்தேன். அவருடன் பேசி மகிழ்வதே பெரிய அநுபவம். டொமினிக் ஜீவா, கா. சிவத்தம்பி, ஐ. சாந்தன் ஆகியோரைப் பற்றி அவர் விசாரித்தார்.

இலங்கையைச் சேர்ந்த சிங்களவர்களிற் சிலரும், தமிழிற் சிலரும் மலையாள வம்சாவளிகள் என்பதைப் புரிந்து கொள்வதில் அதிக கஷ்டமில்லை. சங்ககாலத் தமிழ் சொற்களும், வடமொழிச் சாயலும் கொண்ட மலையாள மொழி, யாழ்பாணத் தமிழ் பேச்சைப் போன்றே ஒலிக்கும்.

மலையாளச் சமையல் முறையின் செல்வாக்கு இங்கு உண்டு.

கேரளத் தொடர்புகள் பற்றி நிறைய எழுதலாம். இட நெருக்கடி காரணமாக, இச் சிறுகுறிப்பை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.




மல்லிகை ஆண்டுச் சந்தா

சுவைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்.
மல்லிகையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

***தனிப் பிரதி தேவைப்படுவோர் ரூபா 40க்கு முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்***

**ஆண்டுச் சந்தா 450/**
**தனிப்பிரதி 30/**
**ஆண்டு மலர் 200**

(தபாற் செலவு 100 ரூபா)
காசோலை அனுப்புபவர்கள் Dominic Jeeva எனக் குறிப்பிடவும்.
காசுக்கட்டளை அனுப்புபவர்கள் Dominic Jeeva. Kotahena, P.O. எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.
தொலைபேசி : 2320721

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*

# LEELA ENTERPRISES

*Fancy, Stationery, Facial Items*
*& Saloon Items*



24, Sri Kathiresan Street,
Colombo - 13.
Tel : 2439412




# தமிழரின் தனித்துவத்தைப் பேணும் உடப்பின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள்

- உடப்பூர் வீரசொக்கன்

புத்தளம் மாவட்டத்தின் தமிழ் மக்களின் இருப்பை, பண்பாட்டு நெறிமுறைகளை எடுத்துச் சொல்லும் கிராமங்களில் ஒன்றாகத் திகழ்வது தான், உடப்பு என்ற ஊர்.

இந்த உடப்புக் கிராமத்தின் பெருமைகளை, அதன் சிறப்புகளை எடுத்தோம்பும் நிகழ்வுகளை மூன்றாகக் கூறலாம். உடப்பு என்றால் ஆன்மீக மக்களிடத்தில் முன் தோன்றுவது இங்கே அமைந்து; அருள்பாலித்து வரும் உடப்பு அன்னை திரௌபதையம்மன் ஆலயம். அந்த ஆலயத்தில் வருடாவருடம் நிகழ்வுறும் '**தீமித்திப்பாகிய பூமித்திப்பு விழா**'. அதைத் தொடர்ந்து நினைவூட்டுவது, இவ்வூரில் விளையாடி வரும் கரப்பந்தாட்டப் போட்டி. இப்போட்டி 1957 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் இவ்வூர் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு வெற்றி வீரர்களாக திகழ்ந்த போது, எல்லா உள்ளங்களிலும் பேசப்பட்ட ஊர். தற்போது கலை இலக்கிய துறையிலும், ஆக்க இலக்கியப் படைப்பாளர்களின் பங்களிப்பும், இவ்வூரில் பிறந்து வளர்ந்து இசை மூலம், வில்லிசை கலை மூலம் அகலக்கால் பதித்து ஊரின் பெருமையைப் பட்டி தொட்டியெல்லாம் முன்னெடுத்துச் சென்ற வில்லிசைக் கலைஞன் உடப்பூரான் பெரி சோமஸ்கந்தனின் பங்கும் பணியையும் குறைத்து மதிப்பிட முடியாது.

இவ்வாறான நிகழ்வுகள் '**உடப்பின்**' சிறப்பை, அதன் மகிமைகளைக் கட்டியம் கூறி நிற்கின்றன.

வட, கிழக்கு, மலையகத்தைத் தவிர்ந்து தனியான ஓர் இனமாக, ஓர் கட்டுக் கோப்புடன் தமது பண்பாட்டு, கலை கலாசார நெறிமுறைகளைப் பின்பற்றி வாழும் உடப்பூர் மக்கள், தமது கலைகளை, இசை மரபுகளை, தமது முன்னோர் பின்பற்றி வந்த சடங்கு சம்பிரதாயங்களை பேணும் மக்களாக இன்னும் இருந்து வருகின்றார்கள்.

காலத்துக்குக் காலம் பல இன்னல்கள், இடர்கள் பல்வேறு வடிவங்களில் இக்கிராமத்துக்கு வந்தாலும் கூட, தமது குலதெய்வங்களே துணையென நினைத்து வாழ்கின்றனர். இம்மக்களிடத்தில் காணப்பட்டு வரும் இசை வடிவங்களான கோலாட்டம், சித்திரச் செவ்வாய், மரபிசைப் பாடல்கள், நாடகப் பாடல்கள் தனித்துவமும், பல செல்நெறிகளைக் கொண்டு காணப்பட்டு வருகின்றன. அதை நோக்குகைக்கு முன்னம்,

## இதன் ஆரம்பம்:-

இக்கிராமம் 350 வருடகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. நல்ல தண்ணீருக்காகவும், நிரந்தரத் தொழிலுக்காகவும் இக்கிராமாத்தை வந்தடைந்தனர். ஒல்லாந்தர் வெட்டுக் கால்வாய்க்கும், சமுத்திர இடைவெளிக்கும் உட்பட்ட இக்கிராமத்தின் ஊடாக உடைந்து பாய்ந்ததினால் 'உடைப்பு' என்றும் உடைப்பங்கரை என்பது தற்போது, மருவி உடப்புக் கிராமமாக திகழ்கின்றது.

இந்துக்களை, தமிழ்ச்சமூகத்தைக் கொண்ட இவ்வூர்கள் கி. பி. 1630 ஆம் ஆண்டளவில் உடப்பு மூதாதையர்கள் அக்காமடம், தங்கச்சி மடம் போன்ற பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து இங்கு குடியேறியுள் ளாதாக சொல்லப்படுகின்றது.

இதற்குச் சான்றாக இவ்வூரில் அமைந்துள்ள சக்தி ஆலயங்கள் சான்றாதாரமாக இருக்கின்றது.

16 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இனவடுக்கள் காரணமாக 18 குடும்பங்கள் ஏழு தோணிகளில் புலம் பெயர்ந்து மன்னார், கற்பிட்டி, புத்தளம் போன்ற பகுதியில் வாழ்ந்து ஈற்றில் உடப்பை வந்தடைந்தனர்.

இவர்களுக்குத் தலைவராக 'அம்பலகார' தலைமை வகித்து வந்துள்ளார். உடப்பு மக்கள் அம்பல கார இனத்தைச் சேர்ந்தவர்களாவார்கள்.

இவ்வாறு தனித்துக் கட்டுக் கோப்புடன் வாழ்ந்து வரும் இவ்வூர்ழக்கள் தமது கலைச் செல்வங்களை மதித்து தமது வாழ்வுடனும் பேணி பாதுகாத்து வரும் அதே வேளை, இம்மக்கள் தமது முன்னோர்கள் காத்த கலைகளை தெய்வாம்சத்துடன் பாதுகாத்து இன்னமும் வாழ்ந்து வருகிறார்கள்.

அவைகளில் கோலாட்டம், சித்திரச் செவ்வாய், மரபிசைப்பாடல்கள், கிராமியப் பாடல்கள், நாடக வடிவங்கள் என்பனவற்றுக்கு மூலகாரணமாக இருப் பது இவ்வூர் மக்கள் கடைப்பிடிக்கும் திருவிழா முறை மைகளே காரணமரகும்.

## கோலாட்டம்:-

தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த மக்க ளான இவர்கள் தாம் வரும்போது, தமது கலைப் பொக் கிஷத்தையும் கொண்டு வந்தனர். இக்கலைகளை இவர்கள் தெய்வாம்சமாக பேணுவார்கள். அவைக ளில் ஒன்றுதான் கோலாட்டம்.

கோலட்டக்கலை ஆலயங்களுடனும், சமய வழி பாடுகளுடனும் ஒன்றிக் காணப்படுகின்றது. தெய்வ வழிபாடோடு இருக்கின்றது. பாடப்படும் பாடல்கள் தெய்வ அனுக்கிரகம் வேண்டி உரைப்பதாக இருக்கும்.

இக்கோலாட்ட நிகழ்வு விழாக்காலங்களிலும், கரகபவனியின் போதும் நடைபெறும். இதில் எட்டுப் பேர் தொடக்கம் பதினாறு பேர் வரை வட்டமாகவும், சோடியாகவும் நின்று விளையாடுவார்கள். இக் கோலாட்டத்தில் ஒற்றை மல்லிகை, இரட்டை மல் லிகை, நாலுவெட்டு, சக்கரவெட்டு, கும்மி போன்ற பல் வேறு ஆட்டங்களாக இடம் பெறும்.

ஒற்றை மல்லிக் கோலாட்டத்தில் அவ்வாறு பாடுவார்கள்.

தாயே தயவு பாரம்மா- காளிகாதேவி
தயவு பெற்றென்னை யாளம்மா.

பொன்னிறம் போற்புவி எங்கும் நிறைந்திருக்கும்
பொருந்தும் மானிடர்கள் வருந்தும் துயரங்கண்டு
தன்னிறங் கொண்டு உடப்பங்கரையில் வந்து
சந்தோஷமாக அமைந்து கொலு விருந்து

என்றும்-

**இரட்டை மல்லிக் கோலாட்டம்**

சீராறு ஐந்து கரத் தேவன்
திருப் பாதம் தாழ் பணிந்தே
கூராறு வேறுடையான்- பாதமலர்
கும்பிட்டக மகிழ்வேன்.....

என்றும் பாடுவார்கள்.

**சித்திரைச் செவ்வாய்:-**

இவ்வூர்மக்களின் கலை அம்சங்களில் இந்தச் சித்திரைச் செவ்வாய் முதன்மை பெற்று விளங்கு கின்றது. தென்னிந்தியாவில் இந்தச் சித்திரைச் செவ் வாயை 'ஒயில் கும்மி' என அழைக்கப்படுகின்றது.

எமது நாட்டில் எங்குமில்லாத முறையில் தனித்து வத்துடனும், பக்தியுடனும், கலாசார நெறி முறைக ளுடனும் கொண்டாடப்படும் இச்சித்திரைச் செவ்வாய், சித்திரை மாதத்தில் வரும் ஒரு செவ்வாய் கிழமையில் மாரியம்மனுக்கு பச்சை குடில் அல்லது ரதம் அமைத் துக் கும்பம் வைத்து பெண்களும், ஆண்களும் கும்பக் குடிலை வளைய வளைய வந்து முளைக் கொட்டி பாடி ஆடுவதே சித்திரைச் செவ்வாய் ஆகும். செவ் வாய்க் கிழமையில் கொண்டாடுவதினால், 'செவ்வாய்' என பெயர் வந்தது.

இத்திருவிழாவுக்கு முளை வளர்த்தல் பாலிகை வளர்த்தல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நவதானி

யங்களான கடலை, பயறு, சோளம். எள்ளு, மொச்சை, சாணம், நெல், குரக்கன், சாமை போன்றவற்றை ஒன்றிணைத்தே இந்த முளை வளர்ப்பார்கள்.

பத்தாம் நாள் முளை வளர்த்த பெண்கள் யாவரும் குமுமி அம்பாளைத் தியானித்து பாடிக் குரல் எழுப்பிக் கைகொட்டி ஆடுவார்கள். அப்போது:-

செவ்வாயில் எருவெடுத்து
சிவந்த சித்திரக் கோலமிட்டு
கோலமிட்டுக் குரவையிட்டு
குங்குமத்தால் நீராடி
பாய்ந்தாடுங்கடி சித்திரப் பெண்கள்
சித்திரை மாதத்திலே
சிவந்த செவ்வாய் கிழமையிலே......

என்றும்

பத்து தினங்கள் முளை வளர்க்கப்படும். அத்தினங்களில் இப்பாடலைப் பாடிக் கும்மி அடிப்பார்கள்.

ஓரா நாள் முளை எழுந்து
ஓங்கி வளருமாம் மாரி முளை
ஈராநாள் முளை வளர்ந்து
இரட்டனம் கொட்டுமாம் மாரி முளை
----------------------
ஏழாம் நாள் முளை வளர்ந்து
ஏளனம் செய்யுமாம் மாரிமுளை
----------------------------
---------------------------
பத்தாம் நாள் முளை வளர்ந்து
பற்றிப் படருமாம் மாரிமுளை

முளக்கொட்டு விடிய விடிய பாடி மகிழ்ந்த மக்கள், தாள பாடலுடன் ஊர்வலம் வந்து காளியம்மன் கோவில் முன் வைத்து முளக் கொட்டி ஐதிகப் பாடலான இப்பாடலைப் பாடி கடலுடன் முளையைச் சொரிவார்கள்.

சிந்தாமல் சிதறாமல் வளர்த்தேனம்மா முளைய
தீர்த்த ஆற்றம் கரைதனிலே போராயம்மா முளைய
வாடாமல் வதங்கமால் வளர்த்தேனம்மா முளைய
வைகையாற்றங் கரைதனிலே போராயம்மா முளைய

இவ்வாறு இவ்விழா முடிவடையும்.

**அம்பாப் பாடல்:-**

தென்னிந்தியச் சாயலைக் கொண்ட இவ்வூர்மக்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் தனித்துவமானது. நாடோடி பாடலாகக் காணப்பட்டு வரும் அம்பாப்பாட்டு வாய் மொழி இலக்கியக் கூறாகும். தொழில் முறைமைகளுடன் பாடப்பட்டு வரும் இப்பாடல்களை ஓர் சாதாரண கடற்றொழிலாளன் இயற்கையுடன் அமைந்த சொல்வீச்சுக்களை எதுகை, மோகனத்துடன் பாடக் கூடிய ஆற்றல் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

அப்பாடல் இவ்வாறு அமையும்

இரங்கு இரங்கு ஆண்டவரே
ஏழை உந்தன் அடியவனுக்கு
ஏழை முகம் பார்த்து
ஏழைக்கு இரங்கும்மம்மா.....

மண்டாடி வளைத்த வலை
சென்றாலும் குறுவதில்லை
வலையை வளைத்துப் போட்டு
வட்டலாட்டம் போடுறாண்டா.

காளியம்மா என்தாயே
கண்பாரம்மா பெற்றவளே
மாரியம்மா என் தாயே
மன விரக்கம் உள்ளவளே

குள்ள நரி கூட்டம் போல
குமரிப் பெண்ணாள் வருகிறாள்
அள்ளி அணைத்தவளை
ஆதரித்துக் கொஞ்சிடுவோம்.

இவ்வாறு இப்பாடல்கள் வீரம், காதல், இன்ப உணர்வு, சோகம், இழப்பு போன்ற வடிவங்களில் பாடப்படும். வாய் மொழி நாட்டார் பாடலான இம் அம்பாப்பாடல் இம்மக்களின் ஊனோடும், உணர்வுகளுடனும் ஒன்றிக் காணப்படுகின்றது.

தென்னிலைங்கையில் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்து வரும் அதேவேளை, தமிழர்களின் இருப்பை எடுத்துக்கூறும் இடமாக உடப்புக் கிராமம் திகழ்கின்றது.




அண்மைக் காலமாகப் பெண்ணியம் பற்றிய இலக்கியப் படைப்புகளும், பத்தி எழுத்துக்களும், கட்டுரைகளும் ஊடகங்களில் நிறையவே வெளிவருகின்றன. பெண்ணியம் பற்றிய விழிப்பு சமூக மட்டத்தில், குறிப்பாக அடுப்படியில் அடங்கிப் போயிருந்த பெண்கள் மத்தியில் நிறையவே ஏற்பட்டு வருகின்றமையும் இதற்கொரு காரணம் எனலாம். கீழத்தேசங்களில் இவ்விழிப்பானது கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் உத்வேகம் கொண்டபோது, ஈழத்திலும் இந்நிலையை அவதானிக்க முடிந்தது.

ஏற்கனவே பல்வேறு சமூக கட்டுமானங்களால் பாரிய அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்த வடகிழக்கு மற்றும் மலையகப் பெண்களிற் பலர், விழிப்புற ஆரம்பித்த காலத்திற்தான் போர் எனும் அரக்கனின் கோரத் தாண்டவமும் எம் தேசத்தில் தலைதூக்கியது. இந்தநிலையில் ஈழத் தமிழ் சமூகப் பெண் ஏற்கனவே எதிர்கொண்ட நெருக்கடிகளோடு, போரும் அவள் மீது மேலதிக அழுத்தங்களைத் திணித்தது. உள்ளூரில் வன்முறைகளுக்குட்பட்டு அவலப்படும் நிலை ஒரு புறமும், புலம் பெயர்ந்து சென்ற ஈழப்பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மறுபுறமுமாக அவர்கள் பல்வேறு ஆதிக்கங்களுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இன்னொரு புறம் போராளிப் பெண்களின் உருவாக்கம், பெண்ணின் மனதிற் புதிய தரிசனங்களை ஏற்படுத்தின. இங்கிருந்து புலம் பெயர்ந்து சென்ற பெண்கள், மேற்கு நாடுகளில் எதிர்கொள்ளும் நெருக்கடியானது இருவேறுபட்ட கலாசாரங்களிடையே சிக்கித் தவிக்கும் நிலையை உருவாக்கியது. இதனாற் பெண் பரந்து பட்டுச் சிந்திக்க ஆரம்பித்தாள். பெண் தனது இருப்பை உணர வைத்ததில் புலம்பெயர்வுக்கும் முக்கிய பங்கு என்பதை, அங்கிருந்து வரும் பெண்ணிய இலக்கிய உருவாக்கங்களே பறைசாற்றி நிற்கின்றன. இதே போன்ற ஒரு மேம்பட்ட நிலை, போரின் பின்னணியில் தாயகத் தமிழ்ப் பெண்களின் இலக்கிய உருவாக்கங்களிலும் தரிசனமாகின்றன. சற்றுத் தாமதமாகவேனும் கூட, மலையகப் பெண்களிலிருந்தும் புத்தூக்கத்துடன் சில புதிய தலைமுறைப் பெண் படைப்பாளிகள் முகிழ்ந்து வருகின்றார்கள். இதே காலகட்டத்தில் தமிழகத்திலும், தலித் பெண்களும், ஏனையோரும் புத்தூக்கம் கொண்டு பெண்ணிய இலக்கிய உருவாக்கங்களைப் படைத்து பரபரப்பை ஏற்படுத்தினர்.

இலக்கியத்தில் பெண்மொழி என்று சொல்லப்படுவதானது, இலக்கிய உருவாக்கங்களில் அழுத்தங்களின்றி, பெண்ணாய் நின்று குரல் கொடுப்பதைக் குறிக்கின்றது. எனினும், கடந்த கால் நூற்றாண்டு கால எமது பெண்களின் இலக்கியப் படைப்புக்களை உற்று நோக்கும் போது, பெண்மொழியின் போதாமையைக் காணமுடிவதாக பின்நவீனத்துவ விமர்சகர்கள் கூறுகிறார்கள். இந்தக் கூற்றில் உண்மை

# நவீன இலக்கிய உருவாக்கங்களில் பெண் மொழி

- சந்திரகாந்தா முருகானந்தன்

இருக்கிறதா? இல்லையா? என்று ஒருபுறமிருக்க, இவ்வாறான பெண்மொழி ஆரம்பத்திலிருந்தே இருந்திருந்தால், பெண்களிற் பலர் பெண்ணிய இலக்கியப் பக்கமே தலை வைத்தும் படுத்திருக்க மாட்டார்கள் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்மொழிப் பிரயோகம் என்பது பெண்ணிய மேம்பாட்டை இன்னொரு புதிய தளத்திற்கு எடுத்துச் சென்று, புதியதொரு கோட் பாட்டை உருவாக்குகின்றதோ? இல்லையோ?, இன்றும் கூடப் பெண்களிற் பாதிக்கு மேற்பட்டோர் உரத்து ஒலிக்கும் பெண்மொழிக்கு ஆதரவாளர் களாக இல்லை என்கின்ற உண்மையைப் புறந்தள்ளி விட முடியாது. பெண்மொழி என்றதும், சுயமாக அழுத்தமெதுவுமின்றி வெளிப்படும் மொழி என்ப தால், அதன் சொற் பிரயோகங்கள் தாழ்ந்து விடக் கூடாது. சிலர் யோனி, அக்குல், முலைகள், குறி, கலவி, புணர்வு போன்ற சொற்களைப் பிரயோகிக் கின்ற போது, சமுதாயத்தின் வரவேற்புக்குப் பதிலாக கண்டனங்களையே தோற்றுவிக்கும்.

சமூகத்தை மீற அதனை மாற்றுகின்ற அல்லது மாற்றத்துக்கு வழி சமைக்கின்ற கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற பெண்படைப்பாளிகள் நிதான மாகத் தமது மொழிப்பிரயோகத்தைப் பயன்படுத் தாது விட்டால், இப்படைப்புகள் சென்றடைய வேண்டிய இலக்கை எட்டமுடியாது போய் விடும். எமது தேசத்தில் பின்நவீனத்துவம் உரிய இலக்கை எட்ட முடியாமற் போனமைக்கும் இது போன்ற பல காரணங்கள் உள்ளன. பின்நவீனத்தும் வரலாற்றில் எவ்வளவு அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்ற போதும் அது போலிமையான பல விடயங்களில் உடைவு களை, ஏற்படுத்தி, அவற்றைக் கேள்விக்குள்ளாக் கியுள்ள போதும், அதன் பணியானது மட்டுப்படுத்தப் பட்டமையாகவும், தத்துவ மாற்றத்திற்கு வழி சமைக்க முடியாததாகவுமே இன்னமும் இருப்பது, பெண்ணியத்திற்கும் பொருந்துவதாக உள்ளது. பெண்மொழி உரத்து உரைக்கப்பட்டு, சமூகத் திலுள்ள ஆணாதிக்கத்தை மீறி, அதனை மாற்று கின்ற போது, சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் படி அணுகப்பட வேண்டும். ஆழமும், வீச்சும், மென்மை யும் இருக்கும் அதே வேளை, முகச் சுழிப்புக்களை ஏற்படுத்தும் வார்த்தைகளைத் தவிர்த்தல் விரும்பத்தக் கது. வாளின் கூர்மையுடன் வந்து குவியும் பெண் மொழியிலான பெண்ணிய எழுத்துக்கள் ஆணாதிக் கத்தின் ஆணியடித்தது போலுள்ள மனக்கதவை உசுப்ப முடிந்ததா? என்பது பற்றி பெண்மொழி எழுத்தாளர்கள் மீளாய்வு செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

பெண்மொழி பற்றிய உரையாடல்களை 90களுக்குப் பின்னரே அதிகம் பேசப்பட்ட போதி லும், ஒவ்வொரு படிநிலையிலும் பெண்மொழி என்பது அக்கால கட்ட நிலைகளுக்கு ஏற்ப ஒலித்ததென்றே கூறலாம். அவர்கள் வாழ்ந்த சமூக சூழலின் சிந்தனை மட்டத்திற்கு மேலாக நின்று ஆணாதிக்கத்திற்கு எதிராக அவர்கள் குரல் எழுப்பிய போதே, பெண்மொழி உருவாகத் தொடங்கிவிட்டதெனலாம்.

எனினும், வளர்ந்து கொண்டிருக்கும் பெண் ணிய இலக்கிய உருவாக்கங்களில் பெண்ணின் தனித்துவம்மிக்க குரலை பல புதிய்வர்கள் செப்பமாக ஒலிக்க வைத்தனர். இதுகாலவரை பெண்ணிய இலக்கிய உருவாக்கங்களுக்குள் ஒலித்த குரலி லிருந்து இது வேறுபட்டு மேலோங்கி, பெண்ணின் இதயக் குமுறல்களை, இலக்குகளை, பயணிக்கும் பாதைகளை செவ்வனே கூறுவனவாக வெளிப்படுத்து கின்றன. ஆணாதிக்கத்தின் பிடிக்குள் காலா காலமாக அடிமைப்படுவது புரியாமலே இடர்பட்டு, ஏற்கனவே இவ் ஆணாதிக்க சமூகம் தமக்கேற்ற வாறு உருவாக்கி வைத்திருந்த பெண் பற்றிய போலிமைகள், கலாசாரப் பாரம்பரியங்கள், மதசம்பிர தாய அனுட்டானங்கள் ஆகியவற்றில் ஊறித் திளைத்திருந்த பெண்ணின் பார்வை விசாலமடை வதற்கும், சுயமாக வெளிப்படுவதற்கும் இயலாதிருந் ததில் வியப்பில்லை. இதனால், ஆரம்ப காலப் பெண்ணிய உருவாக்கங்களில், கூடுதலாக ஆணா திக்க சமூகத்தின் பிடியிலிருந்தவாறே பெண்ணியக் கருத்துகளும், இலக்கிய உருவாக்கங்களும் வெளிப் பட்டன. இதன் காரணமாகப் பெண்ணின் இயல் பான குரலைச் செப்பமாக ஒலிக்கச் செய்பவர்களுக் காகக் காத்திருக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. இந்நிலை உருவாவதில் பாரம்பரிய அழுத்தங்க ளிலிருந்து பெண் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டிய அகக் காரணியுடன், சில புற அழுத்தங் களும் பெண்ணின் குரல் ஓங்கி ஒலிப்பதற்குத் தடை யாக இருந்துள்ளன. முக்கியமாகப் பெண்ணியம் பற் றிப் பேசுபவர்களையும், எழுதுபவர்களையும், பெண்

ணிய மேம்பாட்டிற்காகச் செயற்படுகின்ற பெண்களையும் இச்சமூகம் ஏளனமாக நோக்கியமையையும், இப்பெண்களுக்கு எதிராக வசை மொழி பேசி, அவர்களது நடத்தை பற்றிக் கேள்விக்குள்ளாக்கி விமர்சித்தமையும், புறக் காரணங்களாக இருந்தன. இன்றும் கூடப் பெண்ணியவாதப் பெண்களை ஆணாதிக்க சமூகம் புறந்தள்ளியும், சிறுமைப்படுத்தியும், புண்படுத்தியும் விமர்சிப்பதை அவ்வப்போது அவதானிக்க முடிகிறது. எனினும், ஆண்களிலும் சிலர், பெண்ணியத்தின் நியாயத் தன்மைகளை ஏற்றுக் கொள்பவர்களாகவும், மேம்பாட்டிற்கு உறுதுணையளிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களும் பெண்ணிய மேம்பாட்டிற்கு உதவுகிறார்கள்.

படைப்புகளில் வரும் சொற்களின் தீவிரத் தன்மையால் வழிநடத்தப்படும் போது அப்படைப்புக்களின் மொழிப் பிரயோகம் முக்கியமானது என்கிற போதும், அவை படைப்பின் பொருளுக்கான பரந்து திரிந்த ஆழமான அர்த்தங்களைத் தரவல்லவையாக அமைய வேண்டுமல்லவா? வெறும் தீவிரமும், அதிர்ச்சியும் படைப்பின் நோக்கத்தைப் பயனற்றதாக்கி விடும்.

பெண்மொழிப் பிரயோகம் கவிதைகளிலும், பத்தி எழுத்துக்களிலுமே ஏனைய இலக்கிய உருவாக்கங்களை விட, ஓங்கி ஒலிக்கின்றது. எல்லாவற்றையும் புறக்கணித்து வெடித்தெழுகின்ற பெண்மொழி, படிப்போர் மனதில் கழிவிரக்கத்தையும், கையாலாகாத உணர்வையும், புரிதலுடனான அந்தரமிக்க உணர்வினையும் ஏற்படுத்தி, சாமான்ய பெண்ணைத் தீவிரமாகச் சிந்திக்க வைக்குமென்ற எதிர்பார்ப்புக்கு மாறாக, ஒருவித வெறுப்புணர்வையும், சிலவேளைகளில் எதிர்ப்புணர்வையுமே ஏற்படுத்துகின்ற ஏது நிலைகளும் உண்டு. இதனாற் பெண் மொழியின் பிரயோகம் குறித்தும், அவற்றின் தாக்கம் குறித்தும், பெண்ணிய சிந்தனை குறித்த வரலாற்று ரீதியான ஒரு புரிதலுடனல்லாமல் விமர்சிப்பது கடினமெனினும், இன்றைய நிலையில் இது இன்னமும் எதிர்விளைவை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது.

பெண்களைத் தமது போகப் பொருளாகவும், தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுபவளாகவும் வைத்திருக்கும் ஆணாதிக்க சமூகத்தில் இன்றைய பெண், தன்னை, தனது நிலையை உணர்ந்து மெல்ல, மெல்ல தனக்காக வாழவும் சிந்திக்கத் தொடங்கியுள்ள வேளை இது. பெண்ணாக, சமமானுடப் பிறவியாக நிமிர்ந்து நிற்கும் பிரக்ஞை பெற்று எழுகின்ற நவீனப் பெண், தான் வாழும் சமூக சூழலில் அந்தச் சமூக சிந்தனை மட்டத்திற்கு மேலாக நின்று, காலாகாலமாக ஆழவேர்பாய்ச்சி பக்க வேர்களின் துணையோடு செழித்து நிற்கும் ஆணாதிக்கத்திற்கெதிராகக் குரலெழுப்ப முடிந்துள்ளமையே வெற்றிதான். ஆணாதிக்கத்துள்ளிருக்கும் போதே, எழுந்த இம்மொழியில் அதன் தாக்கம் சிறிதளவாயினும் இருக்கின்ற போதிலும், இலக்கை நோக்கிய திசையிற் பெண்ணியத்தைச் செவ்வனே நகர்த்த முடிந்துள்ளது. எனவே, பெண்மொழி தான் பெண்ணின் இருப்பை முழுமைப்படுத்துமென்பதும், ஆணாதிக்கத்திற் தோய்ந்த பெண்களின் மொழி எதையும் சாதிக்காதென்பதும் ஏற்புடையதல்ல. எனினும், பெண் மொழியானது வீச்சாக வெளிப்படும் போது, அதன் தாக்கமும் அதிகமாக இருக்கும் வாய்ப்புண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

பெண்மொழி எனும் போது அது விழிப்புற்ற பெண்ணின் மொழியாக ஒலிக்கிறது. விழிப்புற வேண்டிய பெண்ணிடமிருந்து இதை எதிர்பார்க்க முடியாது. எனவே, பெண்மொழி எனும் போது, அது எந்தப் பெண்ணின் மொழி என்ற கேள்வி எழுகிறதல்லவா? எது எப்படியோ பச்சையாகப் பேசுவது தான் பெண் மொழி எனத் தப்பாகப் புரிந்து கொள்ள இடமளித்தலாகாது.

என் போன்றவர்களின் கருத்தைப் பின்நவீனத்துவவாதிகளும், பெண்மொழியில் அதீத பக்தி கொண்டவர்களும் நிராகரிப்பர் என்பதை நான் அறிவேன். நான் சில வார்த்தைகளைப் பிரயோகித்து வாங்கிக் கட்டிக் கொண்ட அநுபவமுண்டு. இதனாற் பயந்து பின்வாங்குமொருத்தியாக என்னையும் நினைக்கக் கூடும். புலம்பலும், திட்டலும், சபித்தலும் பிறிதொரு சமயம் சமரசம் செய்வதாக, சாடலும், ஊடலும், கூடலுமாய் கணவன் காலடியிற் கிடக்கும் வகை மாதிரி மனைவியாக விமர்சிக்கவும் கூடும். பெண் சமத்துவமமென நாம் கோருவது எந்த நிலையிலும் ஆண்களை நிராகரித்தலாகாதென்பதே என் கருத்தாகும்.




# கனவு மெய்ப்பட............

- வசந்தி தயாபரன்

அந்தச் சிரிப்பு அவனைக் காட்டிக் கொடுத்தவிட்டது. விநோத்! புசுபுசுவென்று அடர்ந்த புருவங்களும்....... பெரிய கண்களும்...... வாலிபம் வரைந்துவிட்ட வசீகரத்துடன் அவன் நின்றான்.

அவனது கன்னங்களை வாஞ்சையுடன் வருடினேன்.

மீண்டும் சிரித்தான்.



"சாந்தி, நீங்க மெலிஞ்சிட்டீங்கள்........." என்றான்.

நான் அவனை விடப் பத்து வயது மூத்தவள். ஆனால், 'அக்கா' இல்லை....... வெறுமனே 'சாந்தி'தான். அதிலொரு நெருக்கம்! பதினைந்து வயதில் கண்ட பையனுடன், முப்பதைத் தொட்ட இந்த இளைஞனை ஒட்டிப் பார்த்தேன். சந்தோஷமாக இருந்தது.

"ஜோசப் மாஸ்டர் எப்படி இருக்கிறார்...... விநோத்?"

"டடியா? போன வருஷம் பைபாஸ் ஒபரேசன் செய்தார். இப்ப சுகமா இருக்கிறார்."

அவருக்கும் ஒரு இதயம்....... ஒபரேசன்! ஆச்சரியந்தான்! விநோத்தை அப்பாவிடம் அழைத்து வந்த ஜோசப் மாஸ்டர் என் நினைவில் வந்து போனார்.

"சேர்.......... இவன் 'தமில்' படிக்கப் போறானாம்......... ஸ்கூலில் ஒரு பாடமாம்........... எனக்கெண்டா 'தமில்' சரிவராது.... தெரியுந்தானே" என்று சின்னப் பெருமையோடு அவர் சலித்துக் கொண்டதை நான் மறக்கவில்லை.

விநோத்துக்கு அப்போது பத்து வயதுதான் இருக்கும். தாயில்லாப் பிள்ளை....... தனிப்பிள்ளை. எங்கள் வீட்டில் ஒரு மூலையில்....... கையில் ஒரு புத்தகத்துடன்........ எதையாவது வாசித்தபடி, அவன் இருப்பான்.

"தாயைத் தின்னி...... தனிச்சுப் போச்சுது........... பாவம்" என்று செல்லம் கொஞ்ச அம்மம்மா, ருசியாகச் சமைத்துப் போட அம்மா, தமிழ் கற்பிக்க அப்பா,............ எங்கள் சகோதரனாக அவன்! மெல்ல மெல்ல.......... விநோத்தின் பல பொழுதுகள் எமது வீட்டில் கழியத் தொடங்கின.

கறுவாக்காட்டு அன்ரிகளின் கேக்கும் புடிங்கும், எங்கள் வீட்டுப் பிட்டுக்கும் கோழிக்கறிக்கும் முன்னால் மண்கவ்வின. தோசை, வடை எல்லாம் அவனது ஆசைப் பண்டங்களாயின.

கொஞ்சம் சீண்டினால் போதும்...... அவனுக்குப் பொசுக்கென்று கோபம் வந்துவிடும். ஆங்கிலத்தில் பொரியத் தொடங்கி விடுவான். தமிழிலே மட்டுந்தான் பேசலாம் என்று நாம் சட்டம் கொண்டுவர......... அவன் முறைக்க........ ஒரே களேபரந்தான். இதமான நினைவுகள்......... மீட்டுப் பார்ப்பதில்தான் எத்தனை ஆனந்தம்!

விநோத் போய் வெகுநேரமாகி விட்டது. ஜோசப் மாஸ்டரின் நினைவுகள் மட்டும் போனபாடில்லை.

கறுவாக்காட்டுக் கனவானின் மிடுக்கு, தோற்றம்! அதற்குத் துளியும் சம்பந்தமில்லாத மனது....... பேச்சு. நுனிநாக்கு ஆங்கிலம்.......... யாரையாவது மட்டந்தட்டுவதே வேலை!

சமூகத்தில் 'பெரிய மனிதர்'களோடுதானாம் அவருக்கு நட்பு. போனால் போகிறது என்று எங்களுடனும் பழகுவதாக ஒரு நடப்பு. 'இந்த யாழ்ப்பாணத்தாங்கள்' என்று கிண்டல்..... கேலி. கொழுத்த சீதனத்தோடு அங்கிருந்து வந்த மனைவியை மட்டும் வேண்டாம் என்று அவர் சொல்லவே இல்லையாம்.

சாதி........... சீதனம்....... பணம்........... அந்தஸ்து........... இன்னும் எத்தனை விடயங்களைத்தான் கனமான கோட்டுச் சூட்டுக்குள் மூடிக்கொண்டு திரிந்தாரோ.

எங்கள் லில்லி ரீச்சரை...... அந்த வடிவான ரீச்சரை ஜோசப் மாஸ்டருக்கு இரண்டாந் தாரமாகக் கல்யாணம் பேசியதும்.... அவர் எக்கச்சக்கச் சீதனம் கேட்டதும்......... பேச்சுக் குழம்பியதும்............ என் நினைவில் இடறின.

தமிழனாய்ப் பிறந்தது.......... ஒரு சாபக்கேடு! விநோத்தை ஆங்கிலத்தில் படிக்க வைத்து........ சாப விமோசனம் தேடப் பார்த்தார். "தமிலைப் படிச்சு என்ன செய்யிறது" என்ற அவரது புலம்பலின் நடுவே,........... விநோத் மட்டும் ஆசையோடு தமிழ் படித்தான். 'அவன் இயல்பாகவே புத்திசாலிப் பையன்' என்று சந்தோஷப் பட்டார் அப்பா!

அந்தப் 'புத்திசாலிப் பையன்'........... ஓலெவலில் மிகச்சிறந்த சித்திகளுடன் கடல்கடந்து போனான். இன்று பெயரின் பின்னால் பல் பட்டங்களாம்......... சொன்னான்! கேட்ட என் மனம் நிறைந்தது.

செழிப்பான நாடு..... பல்தேசியக் கம்பனி..... அவனது வாழ்வும் வேர்விட்டுச் செழித்திருக்கிறது. ஜோசப் மாஸ்டர் பூரித்துப் போயிருப்பார். அவரது கனவு வாழ்க்கை அல்லவா அது.

இந்த மண்ணின் சாபங்கள், சோகங்கள்.......... எதுவுமே விநோத்தைத் தீண்டாதபடி........ பக்குவமாகப் பிடுங்கி....... புதிய மண்ணில் ஊன்றி வளரவிட்டவர் அவர். அங்கு நீர் சோரும் விழிகளும், நெடிய அனல் மூச்சுக்களும் இல்லை. ஓடஓட விரட்டுவதும்..... முடிவில்லாமல் ஓடுவதும்........ புதைமணலான வாழ்க்கையும் இங்கு மட்டுந்தான்.

வாழ்வின் சொகுசுகளைத் தேடி ஓடிய ஜோசப் மாஸ்டர் எங்கே! உயிரைக் காக்க ஓடினாலும்.............. ஓடியற் கூழும்.... செம்பாட்டு மண்ணிலும்........ ஆத்மாவை விட்டு வைத்து............ வாழும் சீவன்கள் எங்கே.

வேரறுந்து துடிப்பனவும், வேரோடிக் களிப்பனவும்.... ஓரிடத்தில், ஒன்றாய் புதுவாழ்வில் சங்மிக்க......... அங்கு முகிழ்க்கும் நாளைய தலைமுறை? அது என்னவாகும்? எப்படியெல்லாம் சிந்திக்கும்? முந்தைய சந்ததியிடமிருந்து அது பெற்றுக் கொள்ளும் முதுசொம் எது?....... அதன் அடையாளமாக எஞ்சப் போவது எது? வேற்றுக் கலாசாரத்தில் விளைந்ததால் முகவரி தொலைத்து நிற்குமோ அது?

ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிரசவிக்கும் கேள்விகள். எப்போதும் என்னைக் குடையும் கேள்விகள். விநோத்தை எண்ண..... மனம் சோர்ந்தது. அவன் படித்த தமிழும்......... அவனில் சுவறிய தமிழும்....... எதிலெல்லாம் கலந்து....... கரைந்து...... நீர்த்து

▲▲▲▲

ஜீன்சுடன் நின்ற அந்தப் பெண்ணையும் பார்த்து விட்டு, விநோத்தையும் பார்த்தேன்.

"இவதான் பவானி..... நான் கல்யாணம் கட்டப் போறவ.................. எப்படி என் செலக்ஷன் சாந்தி?"

நான் நினைத்தது சரிதான். கணினிப் படிப்பை முடித்துவிட்டு வேலை பார்ப்பதாகச் சொன்னாள்.

"அப்ப கல்யாணத்தோட வேலைக்கு 'குட்பை'யா?"

புன்முறுவலைப் பதிலாகத் தந்தாள்.

"அவ நல்லாப் பாடுவா சாந்தி...... வீணையும் வாசிப்பா"

"சங்கீதம் பாடும் பெண்ணைப் பிடிக்குமோ............? பரவாயில்லை உன் இரசனை, விநோத்." என்னில் சிறிதாய் நம்பிக்கை துளிர்த்தது.

அந்தப் பெண்ணை மீண்டும் பார்த்தேன். ஜீன்சுடன் சங்கீதத்தைப் பொருத்திப் பார்க்கும் அளவுக்கு என் பார்வை இன்னமும் அகலிக்கவில்லையே...... நொந்து கொண்டேன். சேலை, சுடிதாருடன் அல்லவா அதனை நான் முடிச்சுப் போட்டிருக்கிறேன்.

பேச்சுவாக்கில் பவானியின் சித்தி என் அலுவலகத் தோழி என்று அறிந்து நெருக்கமானோம். அதில் விநோத்துக்கும் மகிழ்ச்சி.

"சாந்தி...... எனக்கு ஒரு உதவி தேவை"

"சொல்லும் விநோத்."

"பவானி ஒரு இந்து....... அதால தமிழ் முறைப் படியும் கல்யாணம் செய்யப் போறம். எங்கட திருமண நடைமுறைகள் பற்றியெல்லாம் அறிய........ ஒரு கையேடு அடித்துக் கொடுக்க.... இப்படிச் சில விருப்பங்கள் இருக்கு. நீங்கள் கொஞ்சம் உதவ வேணும். மற்றது.... எனக்குச் சகோதரியா..... பொம்பிளைத் தோழியா நீங்கதான்."

ஆச்சரியத்தில் உறைந்து, சந்தோஷத்தில் கிளர்ந்தேன் நான்! ஜோசப் மாஸ்டர் என் மனக்கண் முன் நின்று முறைத்தார். ஆங்கிலத்தில் திட்டினார்.... தலையை உசுப்பிக் கொண்டேன்.

"நான் ரெடி விநோத்!........ ஒரு சந்தேகம்.......... உமது டடி எப்படி இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக் கொண்டார்?"

"சாந்தி.......... நான் டடிக்கு ஒரே பிள்ளை"

விநோத் என்றைக்குமே புத்திசாலிதான்.

▲▲▲▲

அவன் அடுத்த வாரமும் வந்தான். நிறையவே பேசினோம். மனந் திறந்து.......... ஆழமாகப் பேசினோம். விநோத்தின் அறிவின் விசாலம் புரிந்தது.......... செம்மையான சிந்தனைத் தடம் தெரிந்தது.

# சுடுசரம்

கம்பவாரிதி- இ. ஜெயராஜ்




### தியானம்

வாசலில் செருப்பு
வாட்டும் நோய்
பெண்ணின் திருமணம்
பெடியனின் படிப்பு
நாளைய குலுக்கல் சீட்டு
கண்மூடி கோயிலில் பக்தன்.

### ஜனநாயகம்

நூறுவீத வாக்கு
அறுபதுவீத வாக்களிப்பு
நாற்பதுவீத ஓட்டு
பெரும்பான்மை வெற்றி.

### தேசபக்தன்

காணி விற்கவும்
கற்புள்ள மனைவி தேடவும்
கடல் கடந்து ஓடி வந்தவன்.

### தர்மகர்த்தா

கோயிலில் கூட்டம்
கூடக் கூட
மகிழும் மனிதர்
குவியும் தெட்சணையால்.

### தத்துவவாதி

தத்துவம் உரைத்த பின்
குரு சொன்னார்:
"ஆணவம் நீக்கும் வழியை
என்னைப் போல், யார்
சொல்வார்?"

### பெண்ணடிமை

கன்னங்கள் ஆப்பிள்
உதடுகள் கொவ்வை
விழிகள் தாமரை
கழுத்து மூங்கில்
பற்கள் மாதுளை
விரல்கள் வெண்டி
உயிர் உவமை தவிர்த்து
புகழ்ந்தான் காதலன்.

### பெண்ணியம்

அடிமைப்படுத்துகிறாய்!
ஆவேசித்தாள் மனைவி
புறப்பட்ட கணவனிடம்
'நேரத்திற்கு வந்து விடு'!
நிபந்தனை விதித்தாள்.

### பேராசிரியர்

மாணவன் மேல்
ஆத்திரம் அவருக்கு.
விடைத்தாளை விசிறி எறிந்தார்.
தெரியாதவற்றை எப்படி
எழுதலாம்?
தனக்கு!

### அறிவு

பசு பால் தந்தது
மரம் கனி தந்தது
பறவை முட்டை தந்தது
வாங்கிய மனிதன்
பெயர் தந்தான்
'அறிவில்லா ஜீவன்கள்'

### மறுபக்கம்

முள்ளில் ரோஜா
சேற்றில் தாமரை
சிற்பியில் முத்து
நல்லவை பிறக்க
அல்லவை தேவையோ?

### அரங்கேற்றம்

பாட்டு
பகட்டு
பாராட்டு

தமிழ்ச் சமுதாயத்தை..... அதன் வரலாற்றை.......... இன்றைய அவலத்தை....... அலசினான். அதில் இழையோடிய உணர்வு............ ஆதங்கம்.......... கரிசனை.

"சாந்தி...... இப்ப நீங்க பாடுறதில்லையா?"

"ஏன்......... முந்தி என்னைப் பகிடி பண்ணிய ஞாபகம் வந்திட்டுதோ?"

"இல்லை சாந்தி......... நான் அங்கே நடக்கிற ஒரு கச்சேரியையும் தவற விடுறதில்லை. ராஜ்குமார் பாரதி, நித்யஸ்ரீ.... இப்படி நிறையக் கேட்டிருக்கிறன். இரவில...... சங்கீதம் கேட்டுட்டுத்தான் நித்திரை கொள்வது என்று வழக்கமாகப் போச்சு."

என் காதுகளை என்னாலே நம்பமுடியவில்லை. ஜோசப் மாஸ்டரின் மகனிடம்.......... இதை நான் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

"விநோத்.... வெளிநாட்டில வேறை மாதிரிச் சிந்தனையோட வளர்ந்திருப்பீர் என்று நினைச்சன்...."

"ஏன் சாந்தி........ எங்க வளர்ந்தால் என்ன.....?"

"இல்லை சின்னவயதிலேயே போயிட்டீர்......"

"சாந்தி...... அங்க கட்டுப்பாடில்லை..... கருத்துத் திணிப்பில்லை... எங்களுக்கு வேண்டியதை நாங்கள் தேடிப் பெறலாம்.... உள்ளதை உள்ளபடி அறியலாம்..... எதை அறிகிறோம் என்பது எங்களைப் பொறுத்தது. சின்ன வயதில் சேர் ஆர்வத்தைத் தூண்டி விட்டார்..... இப் அதையெல்லாம் தேடிப் படித்தேன்....... உண்மையில் சாந்தி...... தமிழன் என்றதில எனக்கு இப்ப பெருமை."

அவனது குரல் அசரீரி போல என் செவிகளில் அறைந்தது. வியப்பில் என் கண்கள் விரிந்தன........ சிந்தனையுந்தான். நெஞ்சின் ஆழத்தில் ஒரு ஊற்று உடைப்பெடுத்தது. வறண்டு கிடந்த என் உள்ளங் குளிர அது பொங்கிப் பாய்ந்தது.

இவன்...... என்முன் இருப்பவன் யார்? தேம்ஸ் நதிக்கரையே சொர்க்கம் என்று செபிக்கின்ற ஜோசப் மாஸ்டரின் மகனா? எங்கே அந்த அடிமை மனோபாவம்?

இந்த இளைஞன்...... பதினைந்து வயதிலேயே பிறந்த மண்ணைப் பிரிந்து சென்ற தமிழனா?...... காலம் இவனில் கீறிப் பார்த்த கோலங்கள் எங்கே?

இவன் தவழ்ந்த மண் எது..... வாலிபனாய் வளர்ந்த மண் எது? விழுமியங்களை இவனில் கலந்துவிட்ட நாடெது?... அறிவை, அநுபவத்தை ஊட்டிவிட்ட நாடெது?

ஓ! இவன் புதிய வார்ப்பு..... சுதந்திரமான மானுடன். மாறுகின்ற காற்றும் மண்ணும்.... இவன் சிந்தையைக் குலைக்கவில்லை. கிழக்கோ...... மேற்கோ..... தனக்கு வேண்டுவன பற்றிய தெளிவுள்ளவன் இவன்.

விநோத் என் கருத்தினில் நிறைந்தான். புத்துலகு படைக்கப் போகும் புதுயுக புருஷனாக, புதிய பார்வையும் விசையும் கொண்ட வாரிசாக!

எனக்கு இனிக் குழப்பமில்லை..... பயங்கள் இல்லை..... எம்மவரின் இருப்புப் பற்றிய கேள்விகளில்லை. எனது கேள்விகளுக்கான பதில்கள்............ விநோத்களின் வடிவில் தான் இருக்கின்றன. வாழ்க்கை. தனக்கான தேடல்களோடு தீர்வுகளோடு வாழப்படும்.

............ எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

▲▲▲▲

திருமண மண்டபம் அடக்கமான அலங்காரத்தில் நிறைந்திருந்தது. நாதசுர இசை செவிகளை நிறைத்தது.

அன்று காலைதான் வந்திறங்கிய ஜோசப் மாஸ்டரைக் காண, என் கண்கள் காத்துக் கிடந்தன...... பருமனாக....... கோட் சூட்டுடன்...... பந்தாவாக.......... எவராவது தெரிகிறார்களா என்று தேடினேன். காணவில்லை.

அதோ......... காரிலிருந்து இறங்கும் அந்த மனிதர்.... ஜோசப் மாஸ்டரா?......... வயதும் நோயும் அவர் தோற்றத்தில் பாதியைத் தின்று விட்டிருந்தன. வேட்டி கால்களைத் தடுக்க....... மெதுவாக நடந்து வந்தார். பல்லுப் பிடுங்கிய சிங்கம் போல ........... அந்த உடையில் அவர் அவராகவே இல்லை.

அந்தச் சூழல்....... நடப்புக்கள்...... அவருக்கு இருந்த சங்கடங்கள்............ எனக்குப் புரிந்தன. கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்தோம். ஏதோ நினைத்தவராய், திடீரென்று......

"உமக்குத் தெரியுமா?....... பவானியிட அம்மா ஒரு பிராமண லேடி!" என்றார், ஜோசப் மாஸ்டர்.

எனக்குச் சிரிப்பு வந்தது. பவானியின் சித்தி என் தோழி........ அவர்களது குடும்பத்தை நான் நன்கறிவேன்.... என்றெல்லாம் சொல்லிவிட என் நா உன்னியது.

ஜோசப் மாஸ்டரின் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். மூப்பு..... வெறுமனே வயதால், தோற்றத்தால் மட்டும் முதிர்ந்திருந்தார். பாவம்! மாறவே மாறாத மனிதர்........ என் மனம் குமைந்தது.

என் நெஞ்சக் கொதிப்புக்கு மேளச் சத்தம் தாளம் போட்டது. மணவறையைப் பார்த்தேன். மாப்பிள்ளைக் கோலத்தில் விநோத். அவனது முகத்தில்...... அந்தச் சிரிப்பு! அது....... எதிர்காலத்தின் சிறப்புக்குக் கட்டியங் கூறியது.

இருண்டிருந்த என் மன அரங்கில் ஒளியைப் பாய்ச்சி........ மின்னியது அது!

இதுவே ஈழத்தில் நவீன எழுத்துலகில் முதன் முறையாக அரங்கேறிய கதையரங்காகும். இதனை எவ்வித ஆடம்பரமுமின்றி அமைதியும் ஆழமுமான கருத்தோட்டத்துடன் ஒழுங்கு செய்த யாழ் எழுத்தாளர் சங்கத்தைப் பெருமையுடன் நன்றியோடும் நினைவு கூருகிறேன்.

யாழ் எழுத்தாளரின் எழுத்துப் பணிக்கும் ஊக்கத்திற்கும் இவ்வரங்கு சிறந்த 'டானிக்'காகத் திகழ்ந்த தென்றால் மிகையில்லை.

நான் எழுதத் தொடங்கிய காலத்திலெல்லாம் ஈழத்தில் பெண்கள் யாரும் எழுதியதாக நான் அறியவில்லை. பின்னர்தான் பவானி ஆழ்வாப்பிள்ளை, குந்தவி, பூமணி போன்றோரும் எழுதியுள்ளதாக அறியக் கிடைத்தது. வீரகேசரியில் தொடர்கதையாக 'ரஜனி' என்ற (புனைப்பெயரில்) பெண்ணின் பெயரில் பல தொடர்கதைகள் இடம்பெற்றன. 'சுசீலா' என்ற பெயரில் (சில்லையூர் செல்வராஜன்) வீரகேசரி பெண்கள் பக்கத்தைப் பலவகையான படைப்புக்களால் வளப்படுத்தினார்.

ஆண்கள் பெண்கள் பெயரிலும் எழுதலாம், என்பதை அப்போது நான் விளங்கிக் கொள்ளாத படியினால், அச்சில் வெளியாவதெல்லாம் உண்மையாகவும், சரியாகவும் இருக்குமென்ற நம்பிக்கையில் இப்பெயர்களில் கூட, யாரோ தமிழ்நாட்டுப் பெண்கள் தான் எழுதுகிறார்கள் என மனதில் பதித்துக் கொண்டேன்.

அன்றைய காலப்போக்கில், சிறுகதைகள் என்றால் சம்பவங்களை மாத்திரமே மையப்படுத்தி, மனித நேயத்தை, அன்பின் ஆழத்தை, சீதனப் பிசாசை, சாதிவெறியான தீண்டாமைச் சாபக் கேட்டை, குடியின் சீரழிவை, வறுமையின் கொடுமையைச் சித்தரிப்பனவாகவும் நல்ல இலட்சியத்தை நோக்கி வாசகனைப் பயணிக்கத் தூண்டுவனவாகவும் ஆன எழுத்துக்களாகவே அமைந்திருந்தன. நாளாந்த வாழ்வின் நெளிவு சுளிவுகளை, யதார்த்தப் போக்கினைப் பச்சையாகப் படித்து உணரக்கூடிய வகையில் பெரும்பாலும் அப்போதைய சிறுகதைகள் அமைந்திருக்கவில்லை. வெளியாகும் கதைகளில் பெருவாரியாகப் பெண்களைப் பற்றிய வர்ணனை. காதற் சின்னங்களான பூக்கள், நிலா, கனவுகள் என்பனவே கதையின் அடர்த்தியைக் கௌவிக் கொண்டிருந்த காலம். மூடக்கொள்கைகள், சீர்த்திருத்தப் போக்கிற்கு இடம் வைத்து, முகிழ்ந்து விட்டிருந்த காலம்.

இத்தகைய சூழ்நிலையிலேயே 'வெறி' எனும் சிறுகதையரங்கம் அரங்கேறியது.

அரங்கின் தலைமையை மூத்தபடைப்பாளியும் இலக்கிய முன்னோடியும், பொட்டில் அறையக் கூடியவகையில் சட்டென்று தன் கருத்துக்களைத் தக்க சான்றுடன் அள்ளிவீசும் திறமை மிகு திறனாய்வாளரும் நடமாடும் பல்கலைக்கழகமெனப் பலராலும் பாராட்டப்படுபவரும், அன்றன்றாடப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் யாவற்றையும் பணம் கொடுத்து வாங்கிப் படித்துக் குறிப்பெழுதிச் சேகரித்து வைத்திருப்பவருமான குரும்பசிட்டி கனக செந்திநாதன் அவர்கள் அணிசெய்தார்.

அவர் தமது தலைமையுரையிலே, சிறுகதை முன்னோடி புதுமைப்பித்தனை நினைவூட்டி, புதுமைப்பித்தன் சிருஷ்டித்த தனது சிறுகதைகள் பற்றிய குறிப்பையும் மேற்கோள் காட்டினார். அதாவது, "பேரளவு துன்பத்தின் சாயை படியாது வெறும் உயிர்ப்பிண்டமாக வாழ்ந்த ஒரு வாலிபன், திடீரென்று உலகத்தில் இயல்பாக இருந்துவரும் கொடுமைகளையும், அநீதிகளையும், சமூகத்தின் வக்கிர விசித்திரங்களையும் கண்டு, ஆவேசமாக, கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த்துச் சொல்லிய பேய்க்கனவுகளாகும்" என்றே புதுமைப்பித்தன் தன் சிருஷ்டிகளைப் பற்றிக் கூறுகிறார். இதனை மகுடவாசகமாக்கி, மனித அவலங்களின் பிரதிபலிப்பாகத் தெறிக்கும் கருத்துக்களே கலையுடனும், கவித்துவத்துடனும் சிறுகதைகளாக சிருஷ்டிக்கப்படுகின்றன. இதே உலகில் சஞ்சரிக்கும் அறுவர் இன்றைய அரங்கில் இடம்பிடித்துள்ளனர். இன்று இங்கு தம் சிறுகதைகளை அரங்கேற்றும் ஆறுகதைஞர்களும், கருத்துச் செறிவும், கற்பனையும் கவின்ததும்பும் மொழிநடையும், தத்துவம் மிக்கப் பாத்திரப் படைப்பும், இயல்பான சம்பவங்களையும் கோர்த்து இலட்சியங்களுக்கு வழிகோலக் கூடிய இலக்கியமாகத் தத்தம் சிறுகதைகளை 'வெறி' என்ற தலைப்புக்கு இசைவாக வாசிக்க முன் வந்துள்ளனர். நாம் பிரதானமாக அவதானிக்க வேண்டியவை கதைகளின் மொழிநடை, சம்பவக்கோவை, கற்பனைப் போக்கு, பாத்திரப் படைப்பு, உண்மைத்தன்மை, கருத்துச் செறிவு என்பனவே.

எதிர்வரும் காலங்களில் இலக்கியப் படைப்புகளின் தரத்தை உயர்த்தவும், பரவலாகப் பலரும் இவ் ஆக்க முயற்சியில் இணைந்து கொள்ளவும், கதைப் போக்குகளைச் சீர்செய்யவும், ரசனையை மேம்படுத்தவும், படைப்பாளர் மத்தியிலே நிலவும் முரண்பாடுகள், சிக்கல்களை நீக்கிச் செம்மைப்படுத்தவும், ஒட்டு மொத்தமாகத் தரமான சிருஷ்டிகளை இனங்காண்பதற்கும் இத்தகைய அரங்குகள் அவசியம். இவற்றை மேன்மேலும் அதிகரிப்போம். விமர்சனத்துறையை வளர்த்தெடுப்பதற்கும் , அதன் ஆரோக்கியத்தை நிலை நிறுத்தவும் முயற்சிப்போம். இன்றைய அரங்கில் முன்நிறுத்தப்படும் படைப்பின் நோக்கங்கள், பயன்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பிட்ட கனக செந்திநாதன் அவர்கள், பாரதி தன் பாடலில் குறிப்பிட்டிருப்பது போல, "நமக்குத் தொழில் கவிதை-நாட்டிற் குழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்" என்பதற்கிணங்க நாம் சமூகத்தோடு நம்மை இணைத்துப் பார்க்க வேண்டும். அத்தோடு இவ்வரங்கில் முன்வைக்கப்படும் சிறுகதைகளின் வடிவம், உள்ளடக்கம், உத்தி என்பனவற்றோடு கதை ஆரம்பம் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்பனவும் ஆழ்ந்த கவனத்தில் கொள்ளப்படும். என்ற கருத்தடங்கிய தலைமையுரையைத் தனது அழகிய இனிய, ஆற்றொழுக்கான தமிழ் நடையில் பேசி முடித்தார்.

பின்னர் அன்றைய சிறுகதை அரங்கில் பங்கு கொண்ட எழுத்தாளர்கள் வரதர், டானியல், சு. வே (சு. வேலுப்பிள்ளை) டொமினிக் ஜீவா, சிற்பி ('கலைச்செல்வி' ஆசிரியர் S. சரவணபவன்) செல்வி பஞ்சநந்தீஸ்வரன் ஆகியோரை அறிமுகம் செய்து வைத்தார்.

**'வெறி'** என்ற தலைப்பில் இவ்வனைவரும் தாம் எழுதிய கதைகளை இந்த அருமையான இலக்கியச் சூழலிலே அரங்கேற்றுவார்கள் என ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து, வரவேற்புக் கூறி, அரங்கை ஆரம்பிக்குமாறு பணித்தார்.

ஈழத்தின் முதலாவது சிறுகதை அரங்கான இந்நிகழ்ச்சி பொலிவுடனும் மகிழ்ச்சிகரமாகவும் ஆரம்பமானது.

கனதியும் காத்திரமுமான பல இலக்கியச் சுவைஞர்கள் இவ்வரங்கை மேலும் மெருகூட்டினர்.

சபையின் முன்னணியிலே ஈழத்தின் சிறுகதை மூலவருள் ஒருவராகக் கணிக்கப் பெற்ற க. தி. சம்பந்தன், **'சமூகத்தொண்டன்'** ஆசிரியர் **'விடிவெள்ளி'** க. பே. முத்தையா, வித்துவான் சொக்கலிங்கம் (சொக்கன்), யாழ்ப்பாணம் தேவன், சுதந்திரன் இரத்தினசிங்கம், நாவேந்தன் புத்தொளி (ந. சிவபாதம்) சச்சி மாஸ்டர் (சச்சிதானந்தம்) ஆகியோருடன் தமிழ்ப் பண்டிதர்கள், வித்துவான்கள், ஏனைய எழுத்தாளர்கள், பத்திரிகை நிருபர்கள் எனப் பலரும் வருகை தந்திருந்தனர்.

தொகையில் அதிகம் பேர் எனக்குறிப்பிட முடியாவிட்டாலும், எல்லாருமாக 20, 25 பேரே பிரசன்னமாகியிருந்தனர்.

என்னைத் தவிர, ஒரு பெண்ணுமே அந்த எல்லைவரை இல்லை. அநேகமாக அன்றைய நிகழ்ச்சிகளில் பங்காளராகவும், பார்வையாளராகவும் நான் மாத்திரமே இருந்த கூட்டங்கள், குழுக்கள் எனப்பலப்பல. இதனால், வெளிவந்த விமர்சனங்களோ காது கொள்ளாதவை. என்றாலும் கூட, எழுத்துலகம் அன்று தொடக்கம் இன்றுவரை என்னை வரவேற்கவே செய்கிறது.

நான் உருவான சூழலில் க. தி. சம்பந்தன் (சகோதரியார் மிக அன்பான சத்தியபாமா குமாரசாமி என்னுடன் கற்பித்த ஆசிரியர்), வரதர், பிரேம்ஜி, வித்துவான் வேந்தனார், சு. வேலுப்பிள்ளை, **'விடிவெள்ளி'** முத்தையா, செ. கணேசலிங்கன், சு. இராசநாயகம், சொக்கன், டாக்டர் நந்தி, கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்ரர், வித்துவான் வேலன் ஆகியோருடனான நெருங்கிய தொடர்பு, இலக்கியத்தோடான இனிய பிணைப்பை எமக்கு ஏற்படுத்தித் தந்ததையும் நான் மீட்டுப் பார்க்கிறேன்.

நான் அன்று வாசித்த சிறுகதை 'பெருநெருப்பு' என்ற தலைப்புடன் தினகரனில் வெளிவந்தது. இந்த எழுத்துலக ஜாம்பவான்களோடு, நானும் அன்று மேடையேறி எனது சிறுகதையை அரங்கேற்றினேன் என எண்ணும் போது, எனக்குள்ளே ஒரு ஆனந்தம் கைகொட்டிக் குதூகலிக்கிறது.

---

## தலைப்புச் செய்1தி

**போயா** தினங்களில் மீன் சந்தைகள் மூடப்படும்.

போயா தினமான நேற்று வீதியோரம் மூன்று பேர் சுடப்பட்டு இறந்தனர்.

- ஜீ

---




# செல்லாயிக் கிழவி.........

- பிரமிளா பிரதீப்பன்

**செ**ல்லாயிக் கிழவிக்கு 'திகீர்' என்றிருந்தது. கொஞ்சம் அருகில் சென்று உற்றுப் பார்த்தாள். மெய்யாலுமே அந்தப் பலாப்பழத்தை அங்கே காணவில்லை. அவளுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. பெருத்த ஏமாற்றமாகிப் போய்விட்டது.

"ச்சீ............. மூதேசிகள்! பொத்திப் பொத்தி பாதுகாத்த பெலாக்காயை வெளங்காம போற எந்தப் பாவியோ பறிச்சிட்டானே............"

சத்தமாகச் சபித்துக் கொண்டே, மண்ணை வாரி மரத்துத் தூரில் இறைத்துவிட்டு வேகமாய், நடக்கலானாள். கடந்த ஒரு கிழமையாய் கிழவிக்கு இதுவேதான் வேலையாய் இருந்தது. வருவதும் பலாக்காயை பார்ப்பதும் செல்வதுமாய்......... அது பழுக்கும் நாளுக்காய்க் காத்துக் கொண்டிருந்தாள். சரியான சமயத்தில் எவனோ திருடியிருக்கிறான். சனியன் பிடிச்சவன்.

அது ஒன்றும் சாதாரண பலாப்பழம் அல்ல. ஊரில் எங்கேயுமே அப்படியொரு பழத்தைச் சாப்பிட்டுவிட இயலாது. வருடத்திற்கு எண்ணி ஐந்தோ ஆறோ காய்கள் மாத்திரமே அந்த மரத்தில் காய்க்கும்.

செம்மஞ்சளும் சிவப்பும் கலந்த ஒருவித கடும் நிறத்தில் பெரிய பெரிய சுளைகளுடன், பார்க்கவே நாவெல்லாம் ஊறும், அந்தக் கனிந்த சுளையை இரண்டாய்ப் பிய்த்து நாவிற்கருகே வைத்து உறிஞ்ச, தேனையொத்த ஒரு திரவம் வடிந்து வரும். சுவையென்றால் அப்படியொரு சுவை!

கிழவிக்குத் தெரிந்தவரையில் இந்தவகைப் பலாமரம் வேறு எங்கேயும் இருந்ததில்லை. தன் பாட்டான் காலத்துச் சொத்தாய் அந்த ஒரு மரத்தையே பாதுகாத்து வைத்திருந்தாள், கிழவி.

கிழவியின் பேரப்பிள்ளைகளுக்கெல்லாமே இந்தப்பழம் காய்க்கும் பருவம் நன்றாகத் தெரியும். ஆதலால், எல்லோருமே அப்பம்மா பழம் கொண்டு வருவளென எதிர்பார்த்துக் கொண்டிருப்பது வழமை. இனி என்ன செய்வதென்று அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

நிச்சயமாய் செல்லாயிக் கிழவிக்குத் தெரியும், இது சிறியாவத்தியின் வேலைதானென்று. ஒவ்வொரு முறையும் இப்படித்தான். என்ன பயிர் செய்தாலும் நாசம் பண்ணி விடுகிறாள். மரத்துக்கு மரம் மிளகுக் கொடி போட்டிருந்தும், கிழவியால் முழு விளைவையும் அனுபவிக்க முடிந்ததில்லை. இதெல்லாம் என்ன..........! பாக்கு மரத்திற்கு நடந்ததுதான் பெரிய அநியாயம். பச்சை மரத்திற்குள் பெருங்காயத்தை புதைத்து வேரோடு சாய்த்து விட்டாளே............ சண்டாளி!

சிறியாவத்தியை எப்படியாவது தண்டிக்க வேண்டுமென கிழவியின் மனது துடித்தது. இத்தனை நாசவேலையையும் கமுக்கமாகச் செய்து விட்டு, 'ஆச்சி ஆச்சி' என்று முகம் நிறையச் சிரிப்பதைத்தான் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

கிழவி முடிவாக நினைத்துக் கொண்டாள். இனி சிறியாவத்தியைத் தன் கிணற்றில் தண்ணீர் எடுக்கவிடக் கூடாதென்று. நினைத்தது போலவே படாரென்று கூறியும் விட்டாள்.

"இனிமே தண்ணி எடுக்க வேற எடம் பார்த்துக்கம்மா....... நான் சுத்தபத்தமா வச்சிருக்குற எடத்துல நீ கண்டது கடியதெல்லாம் போட்டுத் தண்ணியெடுக்கிறது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கல......."

"ஏன் ஆச்சி இப்படிச் சொல்றது...........? போன கெழம நான் தானே கிணறு கழுவினது..........!"

சிறியாவத்திக்கு நன்றாகத் தமிழ் தெரியும். தோட்டத்து லொறி டிரைவரை தான் கலியாணம் முடித்து, பத்துப் பன்னிரெண்டு வருடமாய் குப்பை கொட்டுகிறாள்.

"அது சரி ஆத்தா.............. கழுவிற மாதிரிக் கழுவிட்டு, இருக்குற கொஞ்ச நஞ்சப் பயிரையும் நாசமாக்குறியே, அதுதான் பொறுக்கல........."

சிறியாவத்திக்குக் கொதிப்பு ஏறியது.

"இந்தா...........! ஆச்சி யாரப் பார்த்து என்னாப் பேசுறது? இனிப் பாருங்க வெளையாட்ட............"
ஏறிக் கொண்டே சிறியாவத்தி போய்விட்டாள்.

எது எப்படிப் போனாலும் இந்தப் பலாப்பழத்தை பறிகொடுத்ததை தான் கிழவியால் தாங்க முடியவில்லை. தன் பிள்ளைகளும், பேரப்பிள்ளையும் எத்தனை விருப்பமாக அதை, சுவைத்திருப்பார்கள்?

ஒரு பக்கம் யோசிக்கையில் இப்படி நடந்தது கூட நல்லதுதான் போல............. இல்லையென்றால் இந்த தள்ளாத வயதிலும் எல்லாவற்றையும் அள்ளிக்கட்டிக் கொண்டு போய் வந்திருக்க வேண்டுமே........! ஐந்து பெத்தும் அநாதையாய் கிடக்கும் தன் நிலைமையை தானே நொந்து கொண்டாள், கிழவி.

தொழில்.......... பணம்......... குடும்பம்........ என்றும் ஆளாளுக்கு ஒவ்வொரு பக்கம் போக, கடைசி நேரம் ஒரு தண்ணி வச்சிக் குடுக்கவாவது............

பெத்தமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்பது உண்மைதான் போலிருக்கு. தான் ஒவ்வொரு பொருளையும் பார்த்து பார்த்துப் பிள்ளைகளுக்கென சேமிக்கும் போது, அவர்களின் ஏனோதானோவென்ற போக்கு கிழவியின் மனதை அரித்தெடுத்தது.

"போகட்டும் இந்தக் கட்டை வேகுற வரைக்கும் செய்றத செஞ்சுதானே ஆகணும். எல்லாம் அந்த ஆண்டவன் பாத்துப்பான்....."

என்று தனக்குத்தானே ஆறுதலும் பட்டுக் கொண்டாள் கிழவு.

அன்று காலை விடியமுன்னமேயே சிறியாவத்தியின் குரல் கேட்டது.

சண்டைக்குத்தான் வருகிறாளென்று எண்ணி வேகமாயக் கதவைத் திறந்தாள் கிழவி.

"இந்தாங்க ஆச்சி........... இன்னைக்கு எங்க வீட்டுல இடியப்பம் அவிச்சது. சொதியும் இருக்கு, சாப்பிடுங்க."

அடிக்கடி சிறியாவத்தி இப்படி வருவதுண்டு. ஏதாவது வித்தியாசமான சாப்பாடு செய்தால் கொஞ்சமாவது கொண்டு வந்து தந்து விடுவாள். கிழவியால் சிறியாவத்தியை புரிந்து கொள்ளவே முடியவில்லை.

ஒன்றுமே சொல்லாமல் வாங்கி வைத்துக் கொண்டாள். இது போன்ற சாப்பாடு கிடைத்தால் கிழவிக்கு அமிர்தமாய் தெரியும். தானே சமைத்துத் தான் மட்டுமே சாப்பிடும் கொடுமை இருக்கிறதே.......! அதை விட தண்டனை வேறெதுவுமே இல்லையெனலாம்.

"ஏண்டியம்மா........! நேத்து பேசினத மனசுல வச்சிக்கிறியா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல ஆச்சி. பக்கத்துலேயே இருக்குறம். எல்லா ஒதவியும் செய்றம். எங்களுக்கு நாலு பருக்க குடுக்க மாட்டது தானே?"

கிழவி மௌனமாய் இருந்தாள்.

"எல்லாத்தையும் புள்ளைகளுக்கே குடுக்கிறதே....... உங்கள உங்க புள்ளைகளா பாக்குறது? இல்லத் தானே......."

கிழவியின் தலையில் யாரோ சமட்டியால் அடித்தது போலொரு உணர்வு.

வெளியே சொல்லிக் கொள்ள முடியவில்லையென்றாலும் சிறியாவத்தியின் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. கடைசி நேரத்தில் பணம் இருந்தென்ன, சொத்து இருந்தென்ன...........? கடித்துத் தின்னவா அல்லது, கொண்டு போகவா? ஆளாளுக்கு ஒவ்வொரு காரணங்கள். அவர்களிலும் குறையில்லை தான். காலம் அப்படி. தானே தான் தெரிந்து கொள்ள வேண்டும், கூட இருக்கும் அயலவர்களையாவது பகைக்காமல் இருக்க...

கிழவிக்கு ஏதோ ஒன்று உறைக்கத் தொடங்கியது. சிரித்துக் கொண்டே கிழவி சொன்னாள்.

"எல்லாமே சரிதான். பழத்துல பாதி குடுத்துட்டுச் சாப்பிட்டிருக்கலாமே..............?"

சிறியாவத்தி வேறெங்கோ பார்ப்பது போல தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.





## இரண்டு மீன்களின் வெவ்வேறு உலகம்

# திலகபாமா கவிதைகள்

நீலம் தெரிய கடலிடை
துளிர்த்த வெண் புள்ளியிலிருந்து
மீண்டுயிர்த்த மச்சங்களிரண்டு

செவுள்களோடு காற்றுண்டு
நீரோடு சுவாசித்து
ஆழ இருள்களை
ஒன்றாய் வாசித்திருந்த
யுகத்தின் முகத்தில்

மேக நீர்
சொரியச் சேர்ந்த கடலில்
சேராது பிரிந்த நன்னீர் சொட்டு
விழுங்கிய மச்சம்
மெல்லத் தவங்கியது



ஓட்டத்தின் தோல்வியன்று
ஒன்றிலிருந்து
இன்னொன்று
தன் புது உலகை
சிருஷ்டித்த தருணமது

படைப்புக்குள்
சிக்காத உடல்
புரிபடா உணர்வுக்குள்
இருந்தபடி

ஒன்று பார்த்திருக்க
இரண்டாவதின் புது சொர்க்கம்
பார்த்திருந்தது புரியாதிருக்க
அர்த்தமாகாது
தாண்டிக் குதித்த நிழல்கள்
வெளிச்சங்களை
வென்றதாய்
வரலாறெழுதிப் போக

எழுதியதுக்குள்
சிக்காத வரலாறாய்
மீட்டெடுத்த புதிய உடல்தனை
நீந்த விட்டு
உடலையும் உணர்வையும் கடந்தேகுகின்றன
இரட்டைக் காதல்கள் எளிதாக

## குடுவைக்குள் பூதங்கள்

தேவதையாய் உலா வந்த
பொழுதுகளில்
தீண்ட வந்த இராசகுமாரன்கள்,
தவளைகளாய் மாறிப் போக
இரகசியங்கள் காக்கும்
பூதமாய் மாறிப் போனேன்

பார்த்த உணர்ந்த உண்மைகள்
சாட்சியங்களின்
தொடுகையின்றி
குடுவைக்குள் மூச்சுத் திணறிக் கிடக்கின்றன

இந்திராதி சந்திரன்களில்
தொடுகை வென்ற தருணங்களிலும்
கௌதம சாபமின்றியே
கல்லாகிப் போக வேண்டியிருக்கின்றது
அகலிகைகளுக்கு

*With Best Compliment To:*

*Mallikai 43 year Issue*

# HOTEL ANNAPOORANAA

## ஹோட்டல் அன்னபூரணா

**Pure Vegetarian Food** சைவ உணவகம்

*Food Suppliers of Weddings, Parties & Other Function*

திருமணம், பிறந்தநாள் மற்றும் ஏனைய வைபவங்களுக்கான சைவ உணவுகளை ஓடர் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.



**159A** Sea Street, Colombo- 11.
செட்டியார் தெரு. கொழும்பு- 11.
தொலைபேசி இல: 2330621




# சின்ன மனிசர்!

- மா. பாலசிங்கம்

காசுள்ள பேசை ஆரும் பொக்கட் அடிச்சிருந்தால் செந்தில்நாதன் இந்தளவுக்குச் சோகப்பட்டிருக்க மாட்டான். உழைச்சுப் போட்டு போகலாமெனச் சாந்தமாகி இருப்பான். ஆனால், இன்றைய சூழ்நிலையில் அவன் இழந்த பொருள் உயிருக்கு நிகரானது! உயிர்காக்கும் தோழன். அதனால்தான் தவியாகத் தவித்தான். யோசிச்சு, யோசிச்சு அவன் உடலும் சுருங்கியது.

அவன் நித்தமும் ஊசாடியே ஆக வேண்டும். வீட்டுக்குள் சுறுண்டு கிடக்க ஏலாது. இல்லாட்டில், அவன் வீட்டில் கருவாட்டுக் கறி கூட மணக்காது. வீட்டில் இருக்கும் ஆத்துமாக்களுக்குச் சொதியும் சோறும் கூடப் பொசியாது. இப்ப கொழும்பில் பக்கட் பிரேன்ரிகளின் பவனி மும்முரம்! இசத்தொண்டும் தேவையில்லை. காசைக் குடுத்தா குட்டிச் சொப்பிங் பாக்கில பிரேன்ரீயோ, ரீயோ கிடைக்கும். பதினொரு மணியெண்டாத் தெருவைப் பாத்தா- சாறத்தை அல்லது வேட்டியை மடிச்சு- முழங்காலுக்கு மேல சண்டிக் கட்டாக் கட்டிக் கொண்டு இடம்பெயர்ந்த சனம் ஆத்துப் பறந்து நடந்து கொண்டிருக்கும். கை இழுவிண்ட இழுவிண்ட சோத்துப் பாசல்களைக் காவிக் கொண்டு! சொப்பிங் பைகளுக்கு- கிடாயின்ர காத்தூதின சூத்தாம் பொட்டி மாதிரிச் சின்ன சின்னச் சொப்பிங் பாக்குகள் குளம்புகளோடயும் வறயோடயும் பொரிச்ச முளகாய் அப்பளத்தோடயும் சொதி, மோரோடயும் பாயாசத்தோடயும் கிடக்கிறதைப் பார்க்கலாம்.

செந்தில்நாதனும் இதுமாதிரிச் செய்து போட்டு- கன்வஸ் கதிரையில் காலுக்கு மேல் காலைப் போட்டுக் கொண்டு சீக்கிரேட்டையோ, சுருட்டையோ கருக்கிக் கொண்டு கிடக்கலாம்! ஆனால் இவன்ர குடும்பத்துக்கு இது சரிப் போகாது! சின்னத் தேங்காய்த் தும்பு கிடந்தாலும், திண்ட சோத்தைக் கொட்டிப் போடுங்கள். அப்பா கறி சாமான் வாங்கிக் கொண்டு வந்து, பெத்தவளின்ர கையால சமைச்சுக் குடுத்தாத்தான் அவன்ர புள்ளையளின்ர தொண்டைக் குழிக்கால தீன் இறங்கும். அப்பதானே அவை பொச்சந்தீர' உப்பில்லை, புளியில்லை எண்டு சொட்டை சொல்லலாம். போதாக் குறைக்கு சில நேரங்களில செந்தில்நாதனுக்கும் மங்களம் கிடைக்கும்.

நிண்ட நிலையில- குனியாமக் கினியாம நிண்டு- அள்ளிக் கொண்டு வந்துடுவார். நல்ல நண்டக், கணவாய, வாய்க்கு ருசியான மரக்கறியைப் பாத்து வாங்கிக் கொண்டு வரமாட்டேர்.

நீங்க போய் விருப்பமானதை வாங்கிக் கொண்டு வாங்கவெண்டு செந்தில்நாதன் சொன்னா மீசை முளைச்சதுகள் கூட அசையாது. அம்மா வந்திடுவா அவையை ஆமி, நேவி, பொலிசு பிடிக்குமெண்ட சாட்டுகளோட.

இவனோ குடுக்கிறதோட திண்டு போட்டு ஒழும்பியிடுவான். புள்ளையளுக்கும் பொஞ்சாதிக்கும் நினைச்சது வேணும். இதாலதான் அவன் நேரகாலமில்லாம மழை வெய்யில் பாராம றோட்டு றோட்டாய் அலையிறவன்.

இதையெல்லாம் நினைக்கத் தான்- அவனுக்கு மண்டையில மிஞ்சிக் கிடக்கிற கொஞ்ச மயிரும் கழரிற மாதிரி இருந்திது. போக்கிடம் தெரியாம அந்தரப்பட்டான். காலை அரக்கத் திடுக்கிட்டான். ஏதோ அசரீரி சொன்ன மாதிரி அந்தப் பதகளிப்புக்க செந்தில்நாதனுக்கு அந்தப் புத்தி சடாரென வந்திது.

பொலிஸ் றிப்போட் எடுத்து வைச்சுக் கொண்டு கொஞ்ச நாளைக்குத் திரியலாம்.

அதைக்கூடப் பிரட்டிப் பிரட்டி யோசிச்சான். அவனுக்கு வேற மார்க்கம் புடிபட இல்லை!

புறகும் அவனுக்குச் சமிசியம்! சேட் பொக்கட்டுக்க கை ஓட்டிப் பாத்த பொழுது உதறல் எடுத்தது.

போற வழியில் மறிச்சுச் செக் பண்ணினா?

அவன் கொட்டு முழுதும் சாவி குடுத்த பொம்மை மாதிரி ஆடிக் கொண்டிருந்தது.

எண்டாலும் தானொரு ஆணென்பதை அவன் மறக்கேல்ல.

பெத்ததுகள பட்டினி கிடக்கவைப்பதிலும் காட்டிச் செத்தாலென்ன?

குடும்ப அக்கறை கொண்ட குடும்பஸ்தன். குடும்பத்தை நினைச்ச பொழுது அவனுக்குப் பயம் எப்படிப் போனதோ தெரியேல்லை. கவடுகளைக் கொஞ்சம் அகட்டி வைச்சு பொலிஸ் ஸ்ரேசனை நோக்கி நடந்தான். வழிப்போக்கரையோ

வாகனங்களையோ பொருட்படுத்தாத நிலம் நோக்கிய நடை!

அவன் காதுக்குள்- 'செந்தில்'- எண்டு கூப்பிடும் குரல் தெருச் சந்தடிகளையும் இரைச்சலையும் தாண்டிக் காதைக் குடைஞ்சிது. அந்தக் குரல் அக்கம் பக்கத்துக் கடை ரீவி, வானொலியிலிருந்து வரேல்லையெண்டு தெரிஞ்சு கொண்டு தான் வீச்சா நடந்தான்.

சுணங்காமப் பொலிஸ் ஸ்ரேசனுக்குப் போய்விடுவம். செந்தில்நாதன் கூப்பிடும் குரலைக் கணக்கெடுக்கேல்லை. கெதி கெதியாக நடந்து கொண்டிருந்தான். இடக்கையை ஆரோ புடிச்சது போல இருந்தது. பொலிஸோ? ராணுவமோ? எண்டு திடுக்காட்டியத்தோட திரும்பி முழுசி முழுசிப் பாத்தான்.

"கூப்பிடக் கூப்பிட ஓடிறி!"

சிரிச்சபடி கேட்டவன் நண்பன் பாக்கியநாதர். கைப்பிடியை விடாம. "இப்ப லண்டன்காறர், ஜேர்மன் காறர், சுவிஸ்காறர் எண்ட கேப்போறில எங்கட ஆக்கள் திரும்பிக் கூடப் பாக்கினமில்ல. நீயும் அப்புடி மாறிப் போனியோ?"

ஒட்டை வடையொண்ட ரண்டாப் பிச்சுத் திண்ட கூட்டாளிமார். பிளேன்ரியொண்டை முடறு முடறா மாறி மாறிக் குடிச்ச ஒட்டிப் புறவா இரட்டையர். எண்டாலும் புட்டுக் கொண்டு செந்தில்நாதனுக்கு ஆத்திரம் வந்திட்டுது. அவன் தன்ர ஒரு பொடியைக்கூட சின்ன நாட்டுக் கெண்டாலும் அனுப்ப இல்ல.

"உதென்ன பேய்க் கதை பாக்கியம்."

விறுக்கு விறுக்கெண்டு நடக்கத் துடங்கினான். கையை உதறிவிட்டு.

"நில்லு செந்தில்.... ரெண்டு மாசமா சிக்கின் குனியா என்னை வீட்டுக்க போட்டிட்டுது."

சோட்டை தீரக் கதைக்க வேணுமெண்ட ஆசை பாக்கியநாதருக்கு.

"நிண்டு மினக்கெட ஏலாது. நிண்டா மாட்டுப் பட வேண்டி வரும்."

செந்தில்நாதனுக்கு நெஞ்சு வருத்தம் இல்லை. கூடின பிறசரில்லை. இருந்தும் அந்த வருத்தக்காறர் மாதிரிப் படபடத்தான்.

நண்பன் சுனாமி வேகத்தில் சொன்னது பாக்கிய நாதருக்குச் சுட்டுவிட்டது.

"என்னத்துக்கடா மாட்டுப்படப் போறா?"..... விளப்பந் தெரியாம பாக்கியநாதர் விசாரிச்சான்.

"பொலிசுக்குப் போறன்."

வெடுக்கென செந்தில் சொன்னான்.

"ஏன்ரா?"

"அடையாள அட்டையைத் துலைச்சுப் போட்டன்."

அழுகிற மாதிரிச் செந்தில்நாதன் சோகம் தொண்டையைக் கட்ட மணி இலையான் மாதிரிக் கிணுகிணுத்தான்.

"எங்க துலைச்ச நீ?........"

இரக்கமாகப் பாக்கியநாதர் கேட்டான்.

"பாங்கிக்குக் கொண்டு போனனான்."

சொல்லி அழ ஆள்கிடைச்ச மாதிரிச் செந்தில்நாதன் அழுவாரைப் போலச் சொன்னான்.

"ஆரும் பொக்கட் அடிச்சிருக்கலாம்."

இப்புடிச் சொன்னா நண்பனின் ரென்சன் கூடுமென்ற நினைப்பில்லாம பாக்கியநாதர் நடக்கக் கூடியதைச் சொல்லிக் காட்டினான்.

"சீ......... வைச்சதெல்லாம் பொக்கட்டில அப்புடியே கிடக்கடா. பொக்கட் அடிச்சா அதுகளில ஒண்டாவது சேந்து போயிருக்காதா..........?"

"வங்கியில விசாரிச்ச நீயா?"

"உதென்ன மோட்டுக் கதை கதைக்கிற. இப்படி அந்தரிககிற நான் அங்க கேக்காமலா வந்திருப்பன்? சிக்குன் குனியாவுக்குப் புறகு உன்ர மண்டையும் காஞ்சு போச்சா........?"

நெருப்புக்க போட்ட உப்பு மாதிரி செந்தில்நாதன் வெடிச்சான்.

"நானும் வாறன் வா.......... இன்னுமொருக்காத் தேடுவம்."

நடக்கக் காலைத் தூக்கியவனைப் பாக்கியநாதர் மறிச்சான். புடிச்சு இழுத்தான்.

"அங்க இல்லாட்டிப் பொலிஸ் றிப்போட்டுக்குப் போவம். புறகு பேப்பரிலும் போடுவம். செந்தில் நீ பேப்பருகளையும் கவனமாப் பார். நல்லவன் பெரியவன் எடுத்தா பேப்பருக்குக் குடுப்பான்."

நண்பன் காட்டிய கரிசனை செந்தில்நாதனுக்கு உடம்பில் குளுக்கோஸ் ஏத்தின மாதிரி இருந்தது. சோர்வில்லாமல் உற்சாகமானான். ஓம்பட்டான். ரெண்டு பேரும் வங்கி இருந்த திக்குக்குத் திரும்பி நடந்தனர்.

"போவமே?".............. சீற்றில் இருந்து கொண்டே ஓட்டோச் சாரதி கூப்பிட்டான்.

இப்ப ஒட்டோக்காரர்களை மறிச்சுத்தானே செக் பண்ணிறாங்க.

புத்தி தடை போட்டது. செந்தில்நாதன் முந்தி நடந்தான்.

"கிட்டத்தானே செந்தில் டக் கெண்டு போயிடலாம்."

காலுக்குள் ஆட்டோ நிண்டது.

சுணக்கம் ஆபத்தாகலாம்.

பேந்துமொரு குறுக்குப் புத்தி! செந்தில்நாதனை நண்பனோடு சேத்து தேகத்தில முட்டிக் கொண்டு நிண்ட ஆட்டோவில் ஏத்தியது.

வங்கி மண்டபத்தில் ரெண்டு பேரும் நிண்டனர். ஏசி, செந்தில்நாதனின் முழுத்தேகத்தையும் குளிர்ச்சியாக்கிச்சு.

"அந்தக் கவுண்டரில் தான் காசெடுத்தனான்."

"காசு பொக்கட்டுக்க இருக்கே?"

"அது உள்ளுக்க போட்டிருக்கிற றண்ணிங் சோட்சுக்க பத்திரமாக் கிடக்கு."
துடையைத் தடவியபடி செந்தில்நாதன் சொன்னான்.

"ஐசியைத் திருப்பித் தந்ததா ஒப்பிசர் சொல்லிப் போட்டான். காசெடுக்க நிண்டவையையும் நினைச்சுப் பாத்து ஒவ்வொருத்தராக் கேட்டன். இல்லையெண்டிட்டீனம். பாஸ்போட் மாதிரி ஐசிக்கும் தலைமாத்தலாமே பாக்கியம்?" அப்பாவி மாதிரி செந்தில்நாதன் நண்பனின் முகத்தை ஏறிட்டுப் பாத்தான்.

"சீ......... அது துடங்கேல்லயடா......"

நண்பனின் தேடுதலில் பாக்கியநாதருக்கு முக்கால் வாசித் திறுத்தி ஏற்பட்டு விட்டது.

"செக்குறிட்டிக்காட்டிட்டக் கேட்டனியே?"

"அவனிட்ட ஏன் கேப்பான்?"

பாக்கியநாதர் சொல்லி வாய் மூட முன்னம் செந்தில் நாதன் நிக்குமிடம் பொது எண்டதையும் பாராது உரத்துச் சொன்னான்.

"அப்படி ஆரும் எடுத்தாலும், அவனிட்டயா குடுப் பீனம்?"

தன் அனுமானிப்புப் புழை என்பதை செந்தில்நாதன் சொல்லாமல் சொல்லுவதாகப் பாக்கியநாதர் நினைச்சுக் கொண்டான்.

கேட்டும் கேளாதுமாகப் பாக்கியநாதர் செக்கியூறிற்றிக் காட் இருந்த மேசைக்கு நடந்தான். துடையில கட்டுள்ள வன் போல செந்தில்நாதனும் அரக்கி அரக்கி நடந்தான்.

"ஐசியைக் காணேல்ல."

செக்கியூறிட்டிக்காட் சொல்லிக் கொண்டு நிண்ட பாக்கியநாதரை ஏறிட்டுப் பாத்தான்.

"இஞ்ச காசெடுத்துப் போட்டு இவர் ஐசியை விட்டிட்டு வந்திட்டேர்." செந்தில்நாதனைப் பார்த்தபடி பாக்கியநாதர் செக்கியூறிட்டிக் காட்டுக்குச் சொன்னான். இமைகளை வெட்டாது செக்கியூறிட்டிக்காட் செந்தில்நாதனைப் பாத்தான். பார்வை ஆமி, நேவியிர பார்வையிலும் காட்டி கடுமையாக இருந்திது. மேசை லாச்சியை அவன் கை இழுத்தது.

"வாசலுக்க கிடந்ததாம் ஆச்சியொண்டு கொண்டு வந்து தந்திச்சு."

கையிலெடுத்த ஐசியையும் செந்தில்நாதனின் முகத்தையும் செக்கியூறிட்டிக்காட் பேந்தும் பேந்தும் கழுகுப்பார்வை பாத்தான். ஐசியை செந்தில்நாதனிடம் நீட்டினான்.

"தாங்ஸ்."

செந்தளிப்பான முகத்தோடு செந்தில்நாதன் பெற்றுக் கொண்டான்.

பாக்கியநாதருக்குப் புன்சிரிப்பு.

தலையை நிமித்தச் செந்தில்நாதன் சுணங்கினான்.

"உன்ர மூளை எனக்கு இல்லாமப் போச்சு பாக்கியம்."
புழையை செந்தில்நாதன் ஒத்துக் கொண்டான்.

எங்கட ஆக்கள் சின்னமனிசரக் கணக்கெடுக்கிற தில்லையெண்டு சொல்ல பாக்கியநாதரின் வாய் உன்னியது.

"பதகளிப்பில் மறந்திட்ட செந்தில்" என்று சொல்லிச் சமாளிச்சான்.

"இனி ஆறி இருந்து கதைப்பம் வா செந்தில்."

இரண்டு பேரும் பேமெண்டுக்கு வந்தீனம். அப்பதான் தெரிஞ்சிது காங்கை!

"கே. எவ். சீக்குத்தானே!"
சிரிச்சுக் கொண்டே பாக்கியநாதர் தாக சாந்திக்குக் கேட்டான்.

"ஃபை ஸ்ராருக்கெண்டாலும் ஓம் தான். பாக்கியம் உனக்குத் தெரியுந்தானே இப்ப எங்களுக்கு உயிர்பிச்சை தர இந்த ஐசியும் தேவையெண்டு. அது கிடைச்சிட்டுது வா."

கூட்டாளித்தனத்தின் கலகலப்பை அநுபவிச்சபடி இருவரும் வங்கிக்கு அப்பால் சென்று கொண்டிருந்தனர்.




# உதவாக்கரை

- உடுவை எஸ். தில்லைநடராசா

கிராமத்தில் வீட்டுக்குப் பக்கத்தில் பாடசாலை அமைந்தது கணேசனுக்கு அதிர்ஷ்டம். அரசாங்கம் அறிமுகம் செய்த தாய் மொழிக்கல்வியால் அவன் பெற்றுக் கொண்ட கல்விப் பொது தராதர சாதாரண தரச்சான்றிதழ் எழுதுநர் வேலைக்கும் வழிகாட்டியது. பின்தங்கிய கிராமத்திலிருந்து தலைநகர் கொழும்பில் தலைமையலுவலகத்தில் முதன் முதலாகக் கடமைக்குச் சமூகமளித்த போது, அலுவலக அதிகாரி ஆங்கிலத்தில் அவர் முன்னால் கைகட்டிக் கொண்டு தலை குனிந்தவனைத் திட்டித்தீர்த்தார். அவர் பயன்படுத்திய சொற்களை முழுமையாக உள்வாங்கக்கூடிய மொழிப்புலமை கணேசனுக்கில்லை. ஆனாலும், அவர் பயன்படுத்திய (Useless, Useless fellow) என்ற சொல் கணேசன் மனதில் பதிந்து விட்டது.

கணேசன் கையளித்த நியமனக் கடிதத்தில் கண்கள் செல்ல கை அழைப்பு மணியை அழுத்தியது. உள்ளே நுழைந்த பிரதம எழுதுநரின் பின்னால் கணேசனும் சென்றான். பிரதம எழுதுநர் சிவகுரு அலுவலக ஒழுங்கு- செய்ய வேண்டிய கடமைகள் பற்றிய சிறுவிளக்கத்துடன் கணேசன் அமர வேண்டிய இடத்தைக்காட்டினார். தமிழ் மொழியில் கதைத்த சிவகுரு கணேசனுக்கு தெய்வம் போலத் தோன்ற, கணேசன் தன் சந்தேகத்தைக் கேட்டான். "Sir Useless fellow எண்டால் என்ன கருத்து?"

சிவகுருவின் சிரிப்பு- "தம்பி நீர் என்னை சேர் எண்டு கூப்பிட வேண்டாம். யூஸ்லெஸ் எண்டால் பயனில்லாதது. ஊரிலை உதவாக்கரை எண்டு சொல்லுவினம்!"

சிவகுரு கணேசனின் குருவாக- நாட்கள் நகர்ந்தன. கணேசன் ஆங்கிலம், சிங்களம் முகாமைத்துவம் எனப் படிப்படியாகப் படித்து குருவையும் மிஞ்சிய வளர்ச்சி. அதன் பெறுபேறாக அவனும் நிர்வாக அதிகாரியாக உயர்த்தப்பட்டான். புதிய பதவியுயர்வு அவனை ஒரு பகுதித் தலைவனாக்க, எழுதுநராகக் கடமையை ஆரம்பித்தவனின் கீழ் பல எழுதுநர்கள். தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள். 'பேரம்பலம்'- எனும் பெயருடைய சிற்றூழியனும் கணேசனின் பகுதியில் கணேசன் கீழ் கடமையாற்றும் ஒருவன். பேரம்பலத்தை முன்பிருந்த அதிகாரிகள் 'யூஸ்லெஸ் பெலோ' என்றே அறிமுகம் செய்தனர்.

பேரம்பலம் இடையிடையே காணாமல் போய்விடுவான். எப்போது அலுவலகம் வருவான்? எப்போது போவான்? என்று சொல்ல முடியாது. லீவு மட்டுமல்ல- சம்பளமற்ற லீவும் அவனுக்குத் தண்ணி பட்ட பாடு. சம்பளக் கொடுப்பனவன்று எப்படியும் வந்துவிடுவான். வழமையான கழிவுகள் அது இதுபோக சிறிது மிகுதியாகக் கிடைக்கும்.

அவசியமான நாட்கள்- தேவையான வேளை பேரம்பலத்தைக் காண முடியாது..., இத்தகவல்களை வழங்கியவர் கணேசனுக்கு முன்பிருந்த அதிகாரி.

கணேசனும் சில நாட்கள் அவதானித்த பின் பேரம்பலம் திடீர் திடீரென்று மறைவது கண்டு பிடிக்கப்பட்டது. கணேசனின் எச்சரிக்கை செவிடன் காதுச் சங்கானது. 'அனுமதியும் அறிவிப்பும் இன்றி கடமைக்கு சமூகமளிக்காததால் நீராக வேலையிலிருந்து நீங்கியதாக கருதப்பட்டுள்ளீர்.' என கணேசன் கையொப்பம் வைத்த கடிதம் பதிவுத் தபாலாகப் பறந்தது.

மறுநாள் அலுவலகம் வந்த பேரம்பலம் கெஞ்சிக்கூத்தாடியது தான் மிச்சம். வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட அனுமதி மறுக்கப்பட்டதுடன் அவன் கொடுக்கும் விளக்கங்களையும் தான் ஏற்கத்தயாரில்லை என கணேசனின் அறைக்கதவு சாத்தப்பட்டது. பேரம்பலத்தின் சார்பில் தன்னுடன் யாரும் கதைக்கக் கூடாது என்ற கட்டளையும் கணேசனால் இடப்பட்டது. நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

அலுவலகத்தில் ஏற்பட்ட வேறுபாட்டுச் சூழல் தொலைபேசியூடாக திருமதி. கணேசனையும் பாதித்தது. கணேசன்: "லைட் எரியாட்டி நான் என்ன செய்யிறது? பியூஸைப் பாரும்- இல்லையெண்டால் எலக்றிக்சிட்டி போட்டுக்கு ரெலிபோன் பண்ணும். எனக்கு ஒவ்வீஸிலை கன வேலை."

மீண்டும் தொலைபேசியில் கணேசன்: "என்ன பாத்ரூம் அடைச்சிருக்கோ? நான் வேளைக்கு வாறன். வந்த பிறகு பைப் வேலை செய்யிற பிளம்பருக்கு சொல்லுவம்."

மேசையிலிருந்த கோவைகளைக் கணேசன் வீட்டுக்குக் கொண்டு போவதற்காக பையில் திணித்த போதும், தொலைபேசி ஒலித்தது. கணேசனின் கோபம் தொலைபேசியிலும் எதிரொலித்தது. "சரி சரி வாறபோது மினரல் வோட்டரும், சாப்பாடும் வாங்கிக் கொண்டு வாறன்."

'சேர் சேர்' என்ற பேரம்பலத்தின் குரல் கணேசனின் காதில் விழவேயில்லை.

பேரம்பலத்தை கணேசன் வலது கையால் தள்ளி விட்ட போது, பையிலிருந்து தவறிக் கீழே விழுந்த கைத்தொலைபேசியை யாரும் கவனிக்கவேயில்லை. கணேசனின் கார் வேகமாகப் புறப்பட்டது.

வேகமாகப் புறப்பட்ட என்ஜினுக்கும் கோபம் வர காரின் வேகமும் குறைந்தது. வழியிலிருந்த கராஜ் மூன்று மணித்தியாலத்துக்குள் காரை பழைய வேகத்துக் கொண்டு வந்தாலும், கணேசன் வீட்டை அடைந்த போது மெல்லிய இருள் வீட்டை மூடியிருந்தது.

வாசலில் காத்திருந்த திருமதியின் புலம்பல்- "லைட் இல்லை- தண்ணியில்லை- பாத்ரூமும் புளக்"

"சரி...... சரி" என்ற கணேசன் உள்ளே நுழைந்து கதிரையை பியூஸ் பொக்ஸ் அருகே வைத்து கதிரை மேல் ஏறியதும் சொன்னான். "சின்ன விஷயம்"

கணேசன் கதிரையிலிருந்து தூக்கி வீசப்பட்ட போது, தான் சின்ன விஷயமல்ல என்பதை அறிந்து அலறினார் திருமதி.

"அம்மா!" எனப் பெரிதாக அலறியது கணேசனல்ல- திருமதியுமல்ல- பேரம்பலம் தான்.

எப்படித்தான் விரைந்து செயற்பட்டானோ தெரியாது. அவன் கைகள் காற்சட்டைப் பைக்குள் புகுந்து குறட்டுடன் வெளியே வந்து மெயின் ஸ்விச் பியூஸ் பொக்ஸ் எல்லாவற்றிலும் புகுந்து விளையாடியது. லைட் எரியத் தொடங்கியது.

கணேசனைத் தூக்கிக் கதிரையில் இருத்தினான். பக்கத்து வீட்டிலிருந்து போத்தலில் வந்த தண்ணீர் கணேசனின் முகத்தில் தெளிக்கப்பட்டது. நல்ல வேளை சாதாரண அதிர்ச்சி. பயப்படும்படியாக எதுவும் இல்லை.

விடயத்தை விளங்கிக் கொண்டதும் பேரம்பலம் மீண்டும் விரைந்து செயற்பட்டான். குழாயில் நீர் வரத் தொடங்கியது. குளியலறை அடைப்புகளும் அகற்றப்பட்டன.

சாதாரண நிலைக்குத் திரும்பிய கணேசனுக்கும் திருமதிக்கும் எப்படிக் கதையை தொடங்குவது என்பது தெரியவில்லை.


கணேசனை நோக்கி பேரம்பலம் நீட்டிய கைகளில் கைத்தொலைபேசியொன்று- "சேர் நீங்க வெளிக்கிட்டு வாறபோது, உங்கட பொக்கற்றிலை இருந்து ஹான்ட் போன் விழுந்தது- நான் பிறகாலை கூப்பிடக் கூடா தெண்டபடியால் ஏ. ஓ. சேரட்டை உங்கடை அட்ரஸ் வாங்கிக் கொண்டு பஸ்ஸிலை வந்தனான்."

சந்தோஷமான சந்தர்ப்பங்களில் வார்த்தைகள் வராதென்பது உண்மையாகவும் இருக்கலாம். பேரம்பலத்தையும் தன் காரிலேற்றிக் கொண்டு அவனது வசிப்பிடம் சென்றபோது கணேசன் தெரிந்து கொண்ட தகவல்- 'வறுமைக்கோட்டோடு முட்டியும் முட்டாமலும் வாழும் நூற்றுக் மேற்பட்ட குடும்பங்களுக்கு பேரம்பலம் தான் உதவும் கரங்கள். தச்சு வேலை, மேசன் வேலை, குழாய் திருத்த வேலை, எலெக்றிக் வயரிங் எல்லாமே பேரம்பலம் தான். அவன் குடும்பம் பெரியது. பேரம்பலத்தின் உதிரி வேலைகளால் உதவி பெறுவோர் சில சந்தர்ப்பங்களில் சிறு தொகை கொடுப்பதுண்டு. அப்பகுதியில் இருப்போருக்கு உதவும் நாட்களில் கந்தோருக்கு மட்டம். மற்றவருக்கு உதவி செய்யும் அவனுக்கு இன்னும் இரண்டு வருடம் போனால் ஓய்வூதியம் கிடைக்குமாம்.'

கணேசனின் விரல்கள் கைத்தொலைபேசியை அமத்தியது. "ஏ. ஓ. நாளைக்கு முதல் வேலையாக பேரம்பலத்துக்கு அனுப்பின கடிதத்தை கான்ஸல் பண்ண நடவடிக்கை எடுத்து வேறை ஏதாவது வழியிலை உதவி செய்ய முடியுமா எண்டு யோசித்துப் பாருங்கோ...."




# கடிதங்கள்



(தமிழகக் கடிதம்)

ஒரு மாத காலம் கொழும்பில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கு கொண்டமை எனக்குக் கிடைத்த நல்லதொரு வாய்ப்பு என்றே கருதுகிறேன். தினகரன் வார மஞ்சரியிலும், இலங்கைத் தொலைக்காட்சியின் உதய தரிசனத்திலும் நேர் காணல் அளிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. உங்களை பலமுறை சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்ததும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சிதான். இலங்கையைப் பற்றியும், தமிழகத்தைப் பற்றியும் உங்களின் வேறுபட்ட, வித்தியாசமான பார்வையினை அறிந்து கொள்ள முடிந்தது. நண்பர் மேமன்கவிக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். பல அலுவலகளுக்கு மத்தியிலும் என்னோடு முழுமையாக உடனிருந்து உதவியது அவரின் இலக்கிய நட்புக்கு எடுத்துக்காட்டு. அட்டனில் ஒரு கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் திரு தெளிவத்தை ஜோசப் அவர்களைச் சந்தித்தேன். தளர்ந்து போயிருந்தார் உடலளவில். நீங்கள் தந்தனுப்பிய மல்லிகை இதழ்களை வாசிப்பில் ஆர்வம் கொண்ட நண்பர்களுக்குக் கொடுத்தேன். ஐம்பதாவது ஆண்டை நோக்கி ஓர் இலக்கிய இதழா? என்று இங்கு அனைவருக்குமே ஆச்சரியம் தான். நீங்களே கூறியிருப்பது போல், உங்களின் பிடிவாதம் ஈழத்து இலக்கிய உலகிற்கு நன்மையாகவே அமைந்திருக்கிறது.

நவம்பர் மாத மல்லிகை இதழ் மேமன்கவி மூலம் கிடைக்கப் பெற்றேன். பிரான்ஸ் தூதுவரகம் நடத்திய வாசிப்பு மாதம் குறித்தும் அதில் தமிழ், சிங்கள, ஆங்கில எழுத்தாளர்கள் தங்கள் அநுபவங்களைப் பகிர்ந்து கொண்டது நல்ல விஷயம். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்கிற தங்களின் தலையங்கம், ஈழத்து எழுத்தாளர்களையும், பதிப்பகங்களையும் ஒன்றிணைக்கும் பணியினைச் செய்ய வேண்டும். 'தமிழ் நாட்டின் சந்தைக் கடையா, நமது நாடு?' என்று எழுப்பியுள்ள கேள்வி முற்றிலும் நியாயமான ஒன்று தான். எழுத்தாளர்களையும், பதிப்பகங்களையும் ஒருங்கிணைக்கும் பணியினை உங்களைத் தவிர்த்து வேறு யாரால் செய்ய முடியும்?

சாரணா கையூமின் 'நெஞ்சில் பதிந்த ஆடிக் கலவரம்' கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீனாம்பிகா புத்தக நிலையம் எரிக்கப்பட்டதும் அதன் உரிமையாளர் திரு கருப்பையாவும் அவரது குடும்பத்தாரும் எங்கள் ஊரான மானமதுரைக்குத் தான் வந்து சேர்ந்தார்கள். இங்கு வந்த சில வருடங்களில் கருப்பையாவும் இறந்து போனார். அந்தக் குடும்பம் மிகவும் நொடிந்து போயிருக்கிறது. தமிழ் பேசும் மக்களும், சிங்கள மக்களும் சகோதர உணர்வோடு தான் வாழ்கிறார்கள். ஆனால், அரசியல் சார்ந்த சமூக விரோதிகள் தான் இது போன்ற அழித்தொழிப்பு வேலைகளில் ஈடுபடுகிறார்கள் என நினைக்கிறேன்.

கனிவுமதியின் கவிதைகளுக்கு இரண்டு பக்கம் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஒவ்வொரு கவிதைக்கும் வேறு வேறு எழுத்துருக்களைப் பயன்படுத்தியிருப்பதற்குப் பதிலாக ஒரே எழுத்துருவைப் பயன்படுத்தலாமே? மல்லிகை ஆண்டு மலர்களை வாசித்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் இலக்கியப் பணி மென்மேலும் சிறக்கட்டும்.

**அருணா சுந்தரராசன்** — மானா மதுரை.

லண்டனிலிருந்து நூலகவியலாளர் என். செல்வராஜா இங்கு வருகை தந்து திரும்பிச் சென்றார். அவரது நூல் தேட்டம் தொகுதிகளை இங்கு அறிமுகப்படுத்தினோம். எம்முடன் ஒருவார காலம் தங்கியிருந்து விட்டு, சிங்கப்பூர், மலேசியா போய்விட்டார். இறுதியாக மல்லிகை அக்டோபர் இதழும் முன்முகங்கள் நூலும் கிடைத்தன. நீர்கொழும்பிலிருந்து சகோதரி அனுப்பியிருந்தார்.

முன்முகங்கள் பற்றிப் பின்னர் மதிப்புரை எழுதுவேன். மல்லிகை அக்டோபர் இதழில் தூண்டில் பகுதியில் ஒரு வாசகரின் கேள்விக்கு நீங்கள் தந்துள்ள பதிலில் நான் முரண்படுகிறேன். (பக்கம் 70- தெஹிவளை ஏ. ராஜகோபால் என்ற வாசகரின் கேள்வியும் தங்கள் பதிலும்.)

இதற்கு எதிர்வினை எழுதலாம். ஆனால், தொட்டதற்கெல்லாம், எதிர்வினை எழுதி 'எதிர்வினை எழுத்தாளன்' என்று பெயரைத் தேடிக் கொள்ள விரும்பவில்லை.

பின்னர் விரிவான கட்டுரை- 'புலம்பெயர்ந்த எழுத்தாளர்களும்- இந்திய இதழ்களும்' என்ற தலைப்பில் எழுதும் போது, தங்கள் பதிலையும் பதிவு செய்வேன். தற்போது ஓய்வு குறைவு. உடல் நலத்திலும் கோளாறுகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு.

தெணியானுடன் கடிதத் தொடர்பு உண்டு. செங்கை ஆழியானுடன் மின்னஞ்சல் தொடர்பு நிகழ்கிறது. சர்வதேச ரீதியாக பல எழுத்தாளர்கள் நேரம் காலம் தெரியாமல் (இரவு நடுச்சாமத்திலும்) தொலைபேசியில் தொடர்பு கொள்வார்கள்.

ஒரு அதிசயமான தகவல்- சுமார் 25 வருடங்களின் பின்பு- முன்பு சோவியத் தகவல் பிரிவில் ஞானாவுடன் வேலை செய்த ராஜகுலேந்திரன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அதிகாலை 2 மணிக்கு கோல் வந்தது. அவர் இப்போது பம்பாயில் இருப்பதாகத் தகவல். மல்லிகை தொடர்ந்து எப்படியோ படிக்கிறார். இப்படியும் சில இலக்கியப் புதுமைகள் நடக்கின்றன. கனடா முத்துலிங்கம், சேரன், நவம், யோகா பாலச்சந்திரன், பிரேம்ஜி, லண்டன், பிரான்ஸ், டென்மார்க், ஜெர்மன் எழுத்தாளர்களுடனும் தொடர்பு நிகழ்கிறது.

**அவுஸ்திரேலியா.** — **முருகபூபதி.**

## தாமரைச் செல்வியின் கவிதைகள்




### தாயாகும் தந்தைகள்

கடமை முடிந்து
கதிர் ஓய்வெடுக்கும் மாலை– அரச
கடமையிலிருந்து ஓய்வு பெற்றும்– வீட்டுக்
கருமத்திலிருந்து ஓய்வு பெறாத காளை.

பொத்திப் பொத்தி
வளர்த்த பாசம்– போரில்
புத்தி பேதலித்த் போது
நாய்படாப்பாடு படும்
தாயாகும் தந்தைகள்.

யுத்தப் பிசாசுகளின் பிடியில்
மொத்த எதிர்காலத்தையும்
இழந்ததைக் கூட
விளங்க முடியாப் பிள்ளைகளுடன்
வளையும் நாணல்களாய்
மரண வேதனையை அனுபவிக்கும்
மலிந்து விட்ட அப்பாக்கள்,
நாட்டின் மூலை முடுக்கெங்கிலும்
முனகும் சத்தங்கள்
ஏராளம் ஏராளம்.

இருந்தும்,
தொடரும் யுத்த இடர்களோ
தாராளம் தாராளம்.

ஏழை பணக்காரனென்று பாராது
அழையா விருந்தாளியாய்
நுழையும் நோய்களுடன்
நழுவும் அறுபது வயதுடன்
பிள்ளை மீட்புக்காய்
ஆலயத்திற்கும்
ஆஸ்பத்திரிக்குமாக
வெயிலிலும் மழையிலும்
தளராத நம்பிக்கையுடன்
ஓயாமல் அலையும்
தாயாகும் தந்தைகள்.

### அம்மா அழுகிறாள்

நான்,
ஆண்மகன் என்றதும்
ஆனந்தம் அடைந்தவள்
அம்மா– இன்று அழுகிறாள்.

எங்கோ,
தூரத்தில் குரைக்கும்
நாய்களின் குரைப்பைக் கேட்டு
நாடிநரம் பெல்லாம் ஒடுங்க
பயந்து குமுறுகிறாள்.
என்னைத்
"தறு..... தறு......வென இழுத்துக் கொண்டு
அடுப்பங்கட்டின் கீழ்
அடுக்கி வைக்கப்பட்ட
விறகோடு விறகாக
மறைத்து வைக்கிறாள்.

இதோ,
கரித்துண்டுச் சோக்கினால்
கரும்பலகையான அடுப்பங்கட்டுக்
கீழ்ச்சுவர்
பல்லிக்கும், கரப்பான் பூச்சிக்கும்
வாழிடமான அதில்– என்
புதிய பள்ளிக் கூடம்.

இங்கு,
ஆசானும் நானே,
மாணவனும் நானே.

அதோ,
பதினைந்து வயது கூட நிரம்பாத– என்
பாடசாலை நண்பர்களின்
அவசரமவசரமான
திடீர்த் திருமணங்கள்.

இன்று,
அவர்கள்.
நாளை நான்.
இருந்தும்,
என்னைப் பார்த்துப் பார்த்து
விடாமல் தொடர்ந்தும்
அடைமழையாட்டம்
அழுது கொண்டிருக்கிறாள்
என் அம்மா.

எங்கள்,
காகிதம் ஏந்தும் கைகளில்
ஆயுதம் திணிக்கப்படுவதைப்
பார்த்து ஜீரணிக்கமுடியாமல்
பாலியல் திருமணங்கள்
தற்காப்பு ஆனபோது– தவிர்க்கமுடியா
தாய்க்காப்பு ஆகியும்
அம்மா அழுகிறாள்.

# வராமற்போனதும்
# வராமற் போனவர்களும்




– சுதாராஜ்

அம்மா படுத்த படுக்கையாகக் கிடந்தாள். அவள் இப்படிக் கிடந்து ஏழெட்டு நாட்களாகிறது. முன்னர் கொஞ்சம் அங்குமிங்கும் நடந்து திரியக் கூடியதாயிருந்தது. விழுந்து விடுவேனோ? என்ற பயத்துடன் ஊன்று கோலைப் பிடித்துக் கொண்டு நடப்பாள். இப்போது அதுவும் முடியவில்லை. ஊன்று கோல் கட்டிலின் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. தற்செயலாக நடக்க முடிந்தால் அது உதவக்கூடும் என அம்மா நினைத்திருப்பாளோ என்னவோ!

முற்றத்து மரத்திலிருந்து காகமொன்று கத்துகிற சத்தம் அம்மாவுக்குக் கேட்டுக் கொண்டிருந்தது. அதைக் கலைத்து விடவேண்டும். அது எந்தத் திசையிலிருந்து கத்துகிறதென்று தெரியவில்லை. காகம் இருந்து கத்துகிற திசையைப் பொறுத்து, நன்மையோ, தீமையோ என்று அம்மா அநுமானித்துக் கொள்வாள். எப்படியிருந்தாலும் அதைக் கத்திக் கொண்டிருக்க விடாது கலைத்துவிடுவதிற்தான் குறியாக இருப்பாள். சில வேளைகளில் அது போகாது. எவ்வளவு முயன்று கலைத்தாலும் ஒவ்வொரு கொப்பாக மாறி மாறி இருந்து கத்திக் கொண்டிருக்கும். இப்போது அம்மாவுக்கு எழுந்து போக முடியவில்லை. ஊன்று கோலைப் பிடித்துக் கொண்டு எழுவதற்கு முயற்சித்தாள். முடியவில்லை. காகம் கரைந்து கொண்டேயிருந்தது.

அம்மாவுக்கு அந்த ஊன்று கோலை சரியான அளவாக வெட்டிக் கொடுத்தவன் அவளது மகன்தான். பகலில் அவன் வேலைக்குப் போய் விடுவான். தான் வேலை விட்டு வரும் வரை அது அம்மாவுக்குத் துணையாக இருக்கட்டுமே என அவன் நினைத்திருப்பான் போலும். அம்மா எட்டுப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசங்களாகப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். கொழும்பில் ஒருவன் இருக்கிறான். இவன் மட்டும் ஊரோடு தங்கிவிட்டான், அம்மாவுக்கு இவனை நினைத்து நன்றி பெருகியது. கண்களும் கலங்கியது.

மகன் வீட்டில் இல்லாதபோது அம்மா ஒருமுறை விழுந்து போனாள். யாருடைய துணையுமில்லாமல் நடந்து திரிந்தவளுக்கு அன்றைக்கு என்ன நேர்ந்ததோ? கால்களை நிலத்தில் பதிக்க முடியாமல் தளர்ச்சி ஏற்பட்டது. உடல் நிலையற்றுத் தடுமாறியது. கால்களைச் சரியாக ஊன்றுவதற்குக் குனிந்து நிலத்தைப் பார்த்தால் தலை சுற்றியது. விழுந்து போனாள்.

மருமகளால் அம்மாவைத் தூக்கி எடுக்க முடியவில்லை. பாவம், சரியாகக் கஷ்டப்பட்டாள். பேரப்பிள்ளைகள் குளறினார்கள்.

“நீ விடு பிள்ளை! விடு!........... நான் எழும்பியிடுவன்!” என அம்மா கூறிக் கொண்டிருந்தாள். ஆனால், அம்மாவுக்குத் தனது பலத்தைப் பிரயோகித்து எழ முடியவில்லை.

ஊன்றுகோல் இன்னொரு காலைப் போல அம்மாவுக்குச் சற்றுப் பலத்தைக் கொடுத்தது உண்மைதான். ஆனால், அதுகூட சில நாட்களுக்குத் தான் நின்று பிடித்தது. விழுந்ததில் பட்ட அடி தினமும் வருத்தியது. இடுப்பு அசையக் கிசைய இடம் கொடாது வலித்தது. படுத்த படுக்கையாகிவிட்டாள்.

அம்மா தினமும் போட வேண்டிய குளிசைகள் அவளது கைவசம் இல்லை. குளிசைகள் ஒழுங்காகப் போட்டு நீண்ட நாட்களாகிவிட்டன. மகனும் தேடாத இடமில்லை. எல்லா பாமசிகளிலும் ஏறி இறங்கி அலைந்து சலித்து வருவான். சிலவேளைகளில் ஏதாவது கைக்குக் கிடைத்த குளிசைகளை வாங்கி வருவான்.

யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் பாதைகள் அடைக்கப்பட்டு பொருள் பண்டங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் அம்மாவின் உடல் நிலையும் மோசமடைந்துகொண்டு வந்தது. டொக்டர் எழுதிக் கொடுத்த குளிசைகளை ஒழுங்காக எடுத்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது என அம்மா நினைத்தாள். ஆறோ ஏழு வருடங்கள் இந்தக் குளிசைகளுடன் தான் அம்மா வாழ்ந்து வந்தாள். சாப்பிட மறந்தாலும் அம்மா குளிசைகள் போட மறக்கமாட்டாள். யாழ்ப்பாணத்தில் எல்லா இடங்களிலும் அலைந்து குளிசைகள் கிடைக்கவில்லை என்று மகன் வரும் நேரங்களிலெல்லாம் அம்மாவுக்குக் கவலையாயிருக்கும். பயமாயுமிருக்கும். தான் செத்துப் போய் விடுவேனோ என நெஞ்சு அடித்துக் கொள்ளும்.

அம்மாவுக்குச் செத்துப் போக விருப்பமில்லை!

உலகத்தின் ஒவ்வொரு பக்கமாகப் புலம் பெயர்ந்து போயி ருக்கும் தனது பிள்ளைகளை நினைத்து, அம்மா வுக்கு நிம்மதியில்லை. இந்த நாட்டில் எப்போது பிரச்சனை கள் தீரும், எப்போது சமாதானமீ வரும்? எப்போது இந்தப் பிள்ளைகள் ஊரோடு வந்து சேர்வார்கள் என்று ஏக்கத்துட னேயே ஒவ்வொரு நாட்களும் கழிகிறது. கொழும்பில் இருப்பவனை

நினைத்தாலும் பயமாயிருக்கிறது. கொழும்பில் தமிழர்களைப் பிடிக்கிறார்கள், அடைக்கிறார்கள் என்று செய்திகளில் அறியும் போதெல்லாம் நெஞ்சு பதை பதைக்கிறது. "தேவையில்லாத யோசனையை விட்டிட்டு, சும்மா இரம்மா! உங்கட நெஞ்சு வருத்தத்துக்கு இதுதான் காரணம்!" என மகன் கத்துவான். எப்படி யோசிக்காமல் இருப்பது? எது தேவையில்லாத யோசனை? கொழும்பிலுள்ள மகனின் பிள்ளைகள் வளர்ந்தவர்கள். அவர்களுக்கு என்ன ஆகுமோ? என்ற பயம்.

பிள்ளைகள் எல்லோரையும் நினைத்து நினைத்து அம்மா கடவுளை வேண்டாத நேரமில்லை. கடவுளும் கண் திறக்கிறாரில்லையே என அம்மாவுக்கு ஆதங்கமாயிருந்தது.

அம்மாவுக்கு மறுபக்கமாக சற்று அசைந்து படுக்க வேண்டும் போலிருந்தது. உடலை அசைக்க முடியாது இடுப்பு வலித்தது. விழுந்த நாளிலிருந்து இடுப்பு உடைந்த மாதிரி வலியாயிருக்கிறது. வைத்தியர்களின் வித்தைகளும் பலித்த மாதிரித் தெரியவில்லை. நெஞ்சுவலியும் இடைவிடாது நெருடிக் கொண்டிருக்கிறது. ஒரு நேரம் நடுநெஞ்சில் வலிப்பது போலிருக்கும். பிறகு இடப்பக்கமாக வலிக்கும். அந்தப் பக்கம் திரும்பிப் படுத்தால் கை விறைத்துப் போகும். மெல்லிய வலிதான்- தாங்கிக் கொள்ளலாம். ஆனால், இது என்ன செய்யுமோ? உயிரையே கொண்டு போய்விடுமோ? என்று அம்மாவுக்குப் பயமாயிருக்கிறது.

காகத்துக்கு அலுத்துப் போயிருக்க வேண்டும். நெடுநேரமாகக் கரைந்து கொண்டிருந்தது. பின்னர் பறந்து போய்விட்டது, அம்மாவுக்குக் கவலையாயிருந்தது. எப்படிக் கலைத்தும், போகாவிட்டால், அம்மா ஏதாவது சாப்பாட்டை எடுத்துக் காகத்துக்கு வீசுவாள். முற்றத்தில் வந்திருந்து சாப்பிட்டுவிட்டுப் போகும். பாவம்! அது பசியிலேதான் கத்தியிருக்கிறது என அம்மா நினைத்துக் கொள்வாள். இப்போது அது பசியோடுதான் திரும்பிப் போயிருக்குமோ? அம்மாவைக் காணவில்லையென்று தேடியிருக்குமோ? சில காகங்களின் ஒற்றைக் குரல்கள்தான் இடையிடையே கேட்டது. அம்மாவுக்கு அறையை விட்டு எழுந்து வெளியே போக வேண்டும் போலிருந்தது.

சமாதானப் பேச்சுக்கள் திரும்பத் திரும்ப நடந்த காலங்களில் அம்மா கொழும்பிலிருக்கும் தனது மகனிடம் போயிருந்தாள். பல காலங்கள் குண்டு வீச்சுகளுக்குள்ளும், ஷெல் அடிகளுக்குள்ளும் உயிரைப் பிடித்துக் கொண்டு சீவித்த பிறகு கொழும்பில் இருப்பது அம்மாவுக்கு ஒரு வகையில் ஆறுதலாகத்தான் இருந்தது. தினசரிகளையெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்ப்பாள், ரேடியோச் செய்திகளையும், ரெலிவிசன்களையும் கூர்ந்து கவனிப்பாள். சமாதானப் பேச்சு அங்கு நடைபெறுகிறது- இங்கு நடைபெறுகிறது.......... என்றெல்லாம் வரும் போது, மனது தெம்படையும். அவர்கள் ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து சிரித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தால்....... இனிச் சமாதானம் தான், சண்டை இல்லை என்று தோன்றும். அம்மாவுக்கு அப்போது பெரிய நிம்மதியாயிருந்தது. "அப்பனே..... இனியாவது இந்த நாடு உருப்படட்டும்......." எனக் கடவுளை வேண்டினாள்.

அப்போது அவுஸ்திரேலியாவிலிருந்த மகன் தனது குழந்தைகளுடன் அம்மாவைப் பார்க்க வந்திருந்தான். பேரப்பிள்ளைகளைப் பார்த்து அம்மா குதூகலித்துப் போனாள். யாழ்ப்பாணமென்றும், கண்டி, நுவரெலியா என்றும் அம்மா பிள்ளைகளுடன் சுதந்திரமாகப் பறந்து திரிந்தாள். அப்போதும் அம்மாவின் மனதில் ஒருவித நெருடல் இருந்தது. பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் ஒரு நல்ல நாள்ப் பெருநாளில் வந்து ஒன்றாகச் சேர்ந்து நிற்கும் காலம் வருமா?

ஆனால்...........

ஒரு பறவையின் சிறகடிப்பைத் தாங்க முடியாது மெல்ல மெல்ல வேகம் கொண்டு புயலாக மாறிய காற்றுப் போல, நாட்டு நிலைமைகள் மீண்டும் முறிகின்ற முருங்கைக் கொப்புகளில் ஏறத் தொடங்கிவிட்டன.

அம்மாவுக்கு நெஞ்சில் வலித்தது. இருமல் தொடர்ச்சியாக வந்தது. மகன் பக்கத்தில் அமர்ந்து நெஞ்சைத் தடவிக் கொடுத்தான்.

கொழும்பிலிருந்து ஏற்கனவே தம்பி வாங்கி அனுப்பிய மருந்து மாத்திரைகள் இரண்டு மூன்று மாதங்களாகியும் இன்னும் வந்து சேரவில்லையாம்! அவை எங்கோ தபாற்கந்தோர்களில் முடங்கிப் போயிருக்கும் என, மகன் அம்மாவிடம் கூறினான். அம்மாவுக்கு இதையெல்லாம் கேட்கக் கூடிய சக்தி இல்லை. மகன் கூறுவது அரைகுறையாகத் தான் கேட்டது. காய்ச்சலும் காயத் தொடங்கியிருந்தது. தேகமெல்லாம் உழைவெடுத்தது. மூட்டுக்கள் வலித்தன.

இரண்டு மூன்று நாட்களாக அம்மாவுக்கு சாப்பிட முடியவில்லை. உடல் நெருப்பாகக் காய்ந்தது. ஒரு சிறுசத்தம் கேட்டாலே திடுக்குறும் பயம். தலை மரத்துப் போய் விட்டதா அல்லது வலியா என்று புரிய முடியாத மயக்க நிலைக்குட்பட்டுக் கொண்டிருந்தது. எல்லா இடங்களிலும் பரவிய 'சிக்கின் குனியா' காய்ச்சல் அம்மாவையும் பிடித்திருக்கிறது என வைத்தியர் கூறினார். "அதற்கு மருந்து இல்லை. பனடோல் போடுங்கள்" எனக் கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

மருமகள் தெண்டித்து உணவு ஊட்ட முயற்சித்தாள். சாப்பாடு இறங்க மறுத்தது. "வேண்டாம்!" என்பது போல அம்மா சைகை செய்தாள்.

"சாப்பிடாமலக் கிடந்து.... என்ன செய்யப் போறீங்கள்....... சாப்பிடுங்கோ!" மருமகள் வற்புறுத்தினாள். அம்மா சாப்பிட மறுத்தாள்.

சிலவேளைகளில் அம்மாவுக்குப் பசி எடுப்பது போலவும் இருந்தது. எனினும், அம்மாவுக்குச் சாப்பிட மனதில்லாதிருந்தது. ரொய்லெட்டுக்குப் போகவேண்டிய அவசரம் வந்தால் அம்மாவுக்கு எழுந்து போகமுடியாது. மகன் வரும் வரை காத்திருக்க வேண்டும். வீட்டில் மற்றவர்கள் உறங்கிய பின்தான் அம்மா மகனைக் கூப்பிடுவாள்.

"தம்பீ!" அம்மாவின் முனகலைக் கேட்டவுடன் மகன் ஓடி வருவான். அம்மாவை அணைத்துத் தூக்கிப் போவான். ரொய்லெட் அலுவல் முடித்து, அம்மாவைக்

கழுவித் துடைத்துக் கொண்டு வந்து படுக்க விடுவான். அம்மாவுக்கு மகனை நினைத்துக் கவலையாயிருந்தது.

பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசமாகத் தங்களது பாடுகளைப் பார்த்துக் கொண்டு போய் விட்டார்கள். இவன் மட்டும் தன்னோடு கிடந்து கஷ்டப்படுகிறான். நிரந்தர உழைப்பு ஊதியம் இல்லாதவன். யாழ்ப்பாணத்தில் சாமான் சக்கட்டுக்கள் தட்டுப்பாடு. கிடைத்த பாடில்லை. கைக்குழந்தையை வைத்துக் கொண்டு பால் மா வகைகளும் கிடைக்காது கஷ்டப்படுகிறான். விடிந்தால் பொழுதறுதியும் பிள்ளைகளின் அழுகுரல்கள் அம்மாவுக்குக் கேட்பது போலிருக்கிறது. பிள்ளைகளுக்குப் பசி: மருமகள் பிள்ளைகளுக்கு அடித்து அடக்கப் பார்க்கிறாள்..... இந்த நினைவுகள் அம்மாவுக்குத் திரும்பத் திரும்ப கனவு போலவும் வந்து கொண்டிருந்தது.

பிள்ளைகள் சாப்பாடு தேடி அலைவது போலிருந்தது. அவர்களுக்கு அடிக்க வேண்டாம் என்று மருமகளுக்குச் சொல்ல வேண்டும். அம்மாவுக்குக் குரல் கொடுத்துப் பேசமுடியவில்லை. பாதை திறக்கிறது; எல்லோரும் வந்து போகிறார்கள். வருபவர்களுக்கு பாதைகளில் மறித்துக் காக்கி உடை அணிந்தவர்கள் உதைக்கிறார்கள். அம்மா திடுக்குற்று விழித்தாள்.

''அடிக்க வேண்டாம்!'' என்று சத்தம் போட முயன்றாள். மருமகள் ஓடி வந்தாள்.

"என்ன மாமி!.......... என்ன செய்யுது? பசியா? தண்ணி கொண்டு வரட்டா?"

அம்மாவின் நெற்றியில் மருமகள் கை வைத்துப் பார்த்தாள்.

அம்மாவுக்குக் கண்கள் பனித்தது. கண்ணீர் சட்டென வழிந்தோடியது. மெல்லத் தலையை மறுப்பக்கமாகத் திருப்பினாள். அறையின் அந்தப் பக்கமாக வைக்கப்பட்டிருந்த மேசையில் அம்மா வணங்கும் தெய்வங்களின் படங்கள் காட்சி தந்தன. அந்த மேசையையே அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மா படுத்திருக்கும் கட்டிலும் அந்த மேசையும் கல்யாணம் முடித்த புதிதில் அவர் வாங்கி வந்து சேர்த்தது. பர்மாவிலிருந்து இறக்குமதியாக்கப்பட்டவை என்று புளுகிப் புளுகிக் கொண்டு வந்தார். அவர் அம்மாவை விட்டுப் போன பின்னரும் அவற்றைப் பேணிப் பாதுகாத்து வந்தாள். வீட்டில் என்ன கஷ்ட நஷ்டங்கள் வந்து சில பொருட்களை விற்க நேர்ந்தாலும் அவை இரண்டையும் மட்டும் அம்மா வீட்டை விட்டு வெளியேற விடவில்லை.

ஒருமுறை மகன் தனது கடைக்கு ஒரு மேசை தேவைப்படுகிறது, அதைத் தருமாறு கேட்டான். அம்மா கொடுக்கவில்லை. "அதைத் தொடக்கூடாது! தரமாட்டன்!" என ஒரே பதிலாகக் கூறிவிட்டாள். அம்மா அப்போதெல்லாம் தனது கணவரைத்தான் நினைத்துக் கொள்வாள். அவரது நினைவுகள் அம்மாவின் அன்றாட வாழ்க்கையில் அவ்வப்போது முகிழ்ந்தெழுவதுண்டு. பழைய வாழ்க்கையின் நினைவுகளில் அம்மா கண் கலங்கினாள்.

அம்மாவை உறக்கம் பற்றிக் கொண்டது. உறக்கமா விழிப்பா என்ற உணர்வற்ற மயக்க நிலையில் உடல் கொதித்துக் கொண்டிருந்தது. கனவில் அவர் வந்தார். பிள்ளைகள் எல்லோரும் சிறுவர்களாயிருந்தார்கள். அவர்கள் பாடசாலையால் வீட்டுக்கு வரும் நேரமாயிருந்தது. அம்மா ஓடி ஓடிச் சமையல் செய்கிறாள். பிள்ளைகள் இந்தச் சாப்பாடு சரியில்லை...... அந்தக் கறி சரியில்லை. எனக்கு இதுதான் வேண்டும் என்று ஒவ்வொருவராகக் குழப்படி செய்கிறார்கள். அம்மா கெஞ்சிக் கூத்தாடி அவர்களைச் சாப்பிட வைக்கிறாள்.

"சாப்பிடுங்கோடி...... சாப்பிடுங்கோ.......... நான் ராவைக்கு பிள்ளையளுக்குப் பிடிச்ச சாப்பாடு செய்து தருவன். அப்பா பாவம்......... என்ன செய்யிறது? கஷ்டப்படுகிறார்."

இயலுமானவரை உழைத்துப் போட்ட அப்பா ஒரு கட்டத்தில் போய்ச் சேர்ந்துவிட்டார். அம்மா தனித்துப் போன சோகங்களையெல்லாம் நெஞ்சுக்குள்ளே புதைத்துக் கொண்டு பிள்ளைகளை வளர்த்தெடுத்தாள்.

''அம்மா!.......... அம்மா!'' என பிள்ளைகள் அழைக்கும் குரல் கேட்டது.

அம்மா விழிப்பதற்கு முயற்சித்தாள். மிக முயன்று முயன்று கண்களைத் திறந்தால், அம்மாவின் கட்டிலின் பக்கத்தில் உறவினர்கள் சிலர் நிற்பது போலிருந்தது. இன்னும் கண்களை விழித்துப் பார்த்தாள்.

அவளது கண்கள் மகனைத் தேடின. அம்மாவுக்குத் தனது பிள்ளைகள் எல்லோரையும் பார்க்க வேண்டும் போலிருந்தது. தனக்கு சுகயீனம் என அறிந்தால் அவர்கள் வரக்கூடும். வருவார்களா?

'இதில இரு! இதில இரு' என மகனிடம் சைகை செய்தாள். மகன் கட்டிலில், அம்மாவின் தலைமாட்டில் அமர்ந்தான்.

அம்மாவுக்கு மகனின் மடியில் படுக்க வேண்டும் போலிருந்தது. மகனின் மடியைத் தொட்டுத் தொட்டுக் காட்டினாள். மகன் அம்மாவை அணைத்துத் தூக்கி மடியில் கிடத்தினான். அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் கட்டுப்படாது ஓடி மகனின் மடியை நனைத்தது. நினைவுகள் மங்கி மங்கித் தொடர்ந்தன. அம்மாவை மகன் கட்டிலில் கிடத்தினான்.

அம்மா பிள்ளைகளை ஒவ்வொருவராகத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். பேரப்பிள்ளைகள் அம்மாவைச் சுற்றி வர நின்றார்கள். இவர்கள் எப்போது வெளிநாடுகளிலிருந்து வந்தார்கள்? எப்போது பாதை திறக்கப்பட்டது? இனி யுத்தம் இல்லையா? அம்மா திடுக்குற்று விழித்தாள்.

அம்மாவுக்குச் செத்துப் போக விருப்பமில்லை. அதனால், கண்களை நன்றாக விழித்து எல்லோரையும் பார்த்தாள்.

"பிள்ளைகள் எங்க?" மகன் தனது பிள்ளைகளைக் கூட்டி வந்து அம்மாவின் பக்கத்தில் விட்டான். எல்லோரையும் அம்மா ஒவ்வொருவராகப் பார்த்தாள். ஒருவித ஏக்கம் வந்து நெஞ்சை அடைத்தது. மறுபக்கமாகத் திரும்பி மேசையைப் பார்த்தாள்.

அம்மாவின் கண்கள் மூடிக் கொண்டன.



# இருமாப்பு

– தெளிவத்தை ஜோசப்

பூந்தோட்டத்தில் நிற்கின்றேன். பூஞ்செடிகளுக்கு நீரூற்றிக் கொண்டு.

இதைப் பூந்தோட்டம் என்று குறிக்கலாமா? என்னும் நினைவு என் மனதில் அடிக்கடி எழுவதுண்டு.

றோட்டுக்கும் வீட்டுக்கும் இடையிலான இந்தச் சிறிய நிலப்பரப்பில், வீட்டுச் சுவரோரங்களைச் சுற்றி, கிளை பரப்பி நிற்கும் ஒரு மாமரம், வேப்பமரத்தினடிகளில் வகை வகையான பூஞ்செடிகள் பூஞ்செடிகள் பூஞ்செடிகள்!

சின்னதான இந்த் நிலத்துண்டில் பூஞ்செடிகள் வளர்க்கின்றோம் என்பதற்காக, இதைப் பூந்தோட்டம் என்று கூறலாமா என்னும் சந்தேகம் என்னுள் அடிக்கடி எழுகின்றது.

மாதத்துக்கு இவ்வளவு என்று வாடகையை வாங்கிக் கொண்டு வீட்டுச் சொந்தக்காரன் எங்கோ இருக்கின்றான்.

நானோ இது என் வீடு என்று சொந்தம் கொண்டாடுகின்றேன்.

இது சிங்களவர்களின் நாடு, பௌத்தர்களின் நாடு என்று முழங்குகின்றனர் அரசியல் பிழைப்போர்.

ஒரு சிங்களப் பௌத்தன் இல்லாத, நானும் இது எங்கள் நாடு என்னும் உணர்வுடனேயே உலா வருகின்றேன்.

என் பெயர் சுந்தரம். எனக்கும் இந்தப் பெயருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. சௌந்தர்யத்துக்கும் எனக்கும் தொடர்பு இல்லை என்பது ஒரு புறமிருக்கு. என் பெயருக்கும் எனக்குமே தொடர்பு என்ன இருக்கிறது! என் பெற்றோர் இட்ட பெயர் இது. நான் கருவில் இருக்கும் போதே, ஆணாகப் பிறந்தால் அழகன் என்று வைப்போம் என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டது. மண்ணில் பிறந்த பின் அழகனைச் சுந்தரமாக்கிக் கொண்டதும் அவர்களே.

ஆனால், நானோ இதுதான் என் பெயர் என்று எத்தனை வித்தைகளைப் புரிகின்றேன்......

இப்படியெல்லாம் இருக்கையில் பூஞ்செடிகள் வளரும் இந்தச் சின்ன நிலத்தை ஏன் பூந்தோட்டம் என்று அழைக்கக் கூடாது என்னும் நினைவுகளும் மேலெழுவதுண்டு.

விரலமுத்தத்தால் ஹோஸ்பைப்பின் நுனியிலிருந்து விசிறியடிக்கும் நீர்த்திவலைகள் ஒவ்வொரு செடியையும் குதூகலிக்கச் செய்கிறது.

குனிந்து நிமிர்ந்தும், வளைந்து நெளிந்தும், சிலிர்த்துச் சிலிர்த்து நெகிழ்ந்து மகிழ்கின்றன. நீராடிக் களிக்கின்றன.

சிரித்துச் சிரித்து தங்கள் மத்தியிலான எனது இருப்பை, எனது உறவை வரவேற்கின்றன. ஸ்திரப்படுத்திக் கொள்ளுகின்றன.

வேலை முடித்து வீடு திரும்பியதும் எழுத்து, வாசிப்பு என்பவைகளுக்குமப்பால் என்னுடைய பெரும் பொழுது கழிவது இவைகளுடன்தான்.

மண்ணைக் கிளறி விடுதல், செடிகளுக்கு மண் அணைத்தல், உரமிடுதல், நீருற்றுதல், மேல்விழுந்து கிடக்கும் மாவிலை, வேப்பிலைகளை அகற்றி விடுதல் போன்ற உடல் வருத்தம் தராத சின்னச் சின்னச் செயற்பாடுகள்.

ஒன்றுமே செய்யாமலும் இவைகளுடன் நிற்றல், பேசுதல். சுற்றிவரல், சுகம் கேட்டல் என்று பொழுது போவதே தெரிவதில்லை எனக்கு.

இந்த எழுபத்தைந்து வயதிலும், ஒரு இளைஞனின் மன உணர்வுடன், உற்சாகத்துடன் என்னை உலா வரச்செய்யும் அவைகளின் அன்பு, செவிகளை விரித்து விரித்து என் குரல் கேட்கும் அந்த ரசனை.......

இவைகளுக்குக் காதுகள் உண்டா? காதுகள் இருந்தும் கேளாதோர் எத்தனை பேர். கேட்பதற்கும் காது என்ற ஒன்று அவசியமா என்ன?

வெடித்துச் சிரிக்கும் வெள்ளை வெள்ளைப் பூக்களுடன் பந்தல் கொள்ளாமல் படர்ந்து கிடக்கும் மல்லிகை.

அழகழகான வண்ண வண்ண இலைகளுடன் பலவிதமான குறோட்டன் செடிகள், ஸ்னியர்ஸ், பாபடன் டேய்சீஸ், டேலியா, சிவப்பு வெள்ளை ரோஜாக்கள், வாடமல்லிகை....

எஸ். பொ. வை நினைவு படுத்தும் ஆண்மை வெடிக்கும் அந்தூரியம். அரிசியை அள்ளிக் கொட்டியது போல் சின்னச் சின்னதாய் வெள்ளை வெள்ளையாய் இலை தெரியாமல் பூத்துக் குலுங்கும் பெயர் தெரியாத அந்தப் பூஞ்செடி......

பெயரில் என்ன இருக்கிறது. அழைப்பதற்காக மனிதர்கள் இட்டுக் கொள்வதுதானே பெயர்! பெயர் தெரியவில்லை என்பதற்காக அவைகளின் அழகும், அந்தரங்க அன்பும், உறவும் ஊனமுற்றா போய்விடுகின்றது?

அப்படியே பார்த்தாலும் இங்குள்ள செடிகளில் முக்கால்வாசிச் செடிகள் பெயர் தெரியாதவைதான்.

அதோ சுற்றுச் சுவர் ஓரத்தில் பூந்தொட்டியில் அரளிச் செடிபோல் கம்பு கம்பாய் வளர்ந்து சிறு சிறு கைகள் நீட்டி விரல் நுனிகளில் மாத்திரம் சுண்டினால் பால் வடியும் நாலைந்து நீண்டு தடித்த இலைகளும், இலைகளின் கக்கத்தில் மெல்லிய இளஞ்சிவப்பில் ஆறேழு பெரிய பெரிய பூக்களுமாய் மதிலுயரத்துக்கு மேல் வளர்ந்து றோட்டை எட்டிப் பார்த்துக் கொண்டு...

கண்ணைப் பறிப்பது போல் மலர்ந்து காற்றிலாடிக் கொண்டிருக்கும் அந்த அழகான பூஞ்செடிக்கு என்ன பெயர்?

இலைகளுக்கும் பூக்களுக்கும் இடையே கொத்தாய் விழுந்திருக்கும் வேப்பிலைச் சருகுகளை விரலால் பவ்வியமாக அப்புறப்படுத்திவிட்டு செடியின் அடியிலிருந்து வளர்நுனி வரை நீரடித்துக் கழுவி விடுகின்றேன்.

இலைகளும் பூக்களும் நீரின் வேகத்துக்கேற்ப ஆடி மகிழ்கின்றன. கட்டை விரல் உயர்த்திக் களிப்பைக் காட்டுகின்றன.

வேப்பிலைச் சருகுகள் இப்போது என் சிரசில் உதிர்கின்றன. தலையை உதறியபடி அண்ணாந்து பார்க்கின்றேன்.

வேப்பமர உச்சியில் இர்ண்டு அணில்கள் வாலுயர்த்தி வாலுயர்த்தி ஓடிப்பிடிக்கின்றன.

தார் றோட்டில் கார் ஓடுவது போல், அவைகள் மரத்தில் ஓடும் அழகே அலாதி.

வேப்பமரத்திலோடி மாமரத்துக்குத் தாவி கிளை வழி இறங்கி சுற்றுச் சுவர் மேல் ஓடிப் பக்கத்து வீட்டுப் பப்பாளி மரத்தில் மஞ்சளிட்டுக் கொண்டிருக்கும் காய்களை முன் பற்களால் 'நய்நய்'யென்று குதறிவிட்டுக் குதித்தோடி மறைகின்றன.

சுறுசுறுப்பான அந்த அணிலோட்டதின் பின் ஒரு வினாடி எனது பார்வை ஓடியதால் நீரோட்டம் செடியிலிருந்து விலகி வெறுந்தரையில் ஓடுகிறது.

செடியின் ஏக்கம் தெரிகிறது. 'சொறி' என்று மன்னிப்புக் கேட்டபடி இலை இலையாகக் குளிப்பாட்டி எடுத்தேன்.

பரவாயில்லைப் பரவாயில்லை என்று தலையாட்டி' தலையாட்டி மகிழ்கிறது செடி.

தோட்டத்தின் ஒரு ஓரத்தில் வீட்டுச் சுவரை அணைத்தபடி எங்கள் சனாவின் கூட்டருகே, சுற்றி செங்கல் பதிக்கப்பட்ட குட்டை போன்றதொரு வட்டமான இடம் இருக்கிறது.

வட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த இடத்தின் தாற்பரியம் ஒன்றும் எனக்குத் தெரியாது. இந்த வீட்டுக்கு நாங்கள் புதிதாகக் குடிவந்த போதே, இது இப்படியே தான் இருந்தது. உள்ளே புல்மண்டிக் கொண்டு.

இப்போது அந்த வட்டத்துக்குள்ளேயும் நிறையப் பூஞ்செடிகள் வைத்திருக்கின்றேன். சுமார் ஒரு எட்டடி குறுக்களவு கொண்ட இந்த வட்டத்தினுள் பூந்தோட்டத்தில் உள்ள அனைத்துப் பூஞ்செடிகளினதும் ஒவ்வொரு செடி இருக்கின்றது.

நினைத்துச் செய்த காரியம் இல்லை இது என்றாலும், அது அப்படித்தான் நடைபெற்றிருக்கிறது.

ஒரு புத்தகத்தின் பொருளடக்கம் போல், அமைந்துள்ள அந்த வட்டத்துச் செடிகளுக்கு நான் நீரூற்றும் போது, கூட்டுக்குள் அமர்ந்தபடி வாலாட்டி ரசித்துக் கொண்டிருக்கும் எங்கள் 'சனா'.

பெண் வளர்ச்சி போல், அவசர அவசரமாக வளர்ந்து கொத்துக் கொத்தாய் குருதி நிறத்தில் பூப் பூத்துக்

குதூகலித்துக் கிடக்கும் அந்தச் செடிக்கும் பெயர் தெரிய வில்லைதான்.

அதன் அழகு உள்ளத்தைக் கொள்ளை கொள் கிறது உண்மைதான் என்றாலும், அதன் முரட்டு வளர்ச் சியும், பலாத்காரப் படர்வும் என்னை மிகவும் நோகச் செய்ததுண்டு.

சற்றே அவைகளுடன் பேசிச் சிரித்து உரையாடி வலம் வரும் போதுதான், ஒரு பொழுது அதைக் கண்ணுற் றேன்.

முரட்டுத்தனமாகத் தனது கரங்களை நாலாபக்க மும் நீட்டி நீட்டி விரல்களை விரித்து விரித்து பரப்பிப் படர்ந்து சுற்றியுள்ள மற்றவைகளை அமுக்கி. அமுத்தி, வெய்யில் படவிடாமல் தடுத்து வெளுக்கச் செய்து அழித்து விடும் நோக்கில் வியூகம் அமைத்துக் கொண்டு...... எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது!

சூழ உள்ள மற்றவைகளை அமுக்கிவிடாமல் சுற்றிப் படர்ந்துள்ள அனைத்துக் கரங்களையும் உயர்த் திப் பிடித்துக் கயிறு கொண்டு விலங்கிட்டு வைத்தேன். அடிக்கடி கவனித்துக் கொண்டேன்.

உரிய நேரத்தில் நான் எச்சரிக்கை அடைந்திரா விட்டால்..........!

✷ ✷ ✷

ஜாஎலை பஸ்ஸில் பேலியகொடைக்கருகே நிற்கின் றேன். வத்தளை தபாற்கந்தோரில் இறங்கி இன்னொரு பஸ் பிடிக்க வேண்டும்.

கால்சட்டைப் பைக்குள் கிடக்கும் கைத் தொலை பேசி கிச்சுக் கிச்சு மூட்டுகிறது.

அலுவலகங்கள் முடிகின்ற ஐந்து மணிக்குப் பிந்திய மாலைகளில் பஸ்களுக்குள் ஒரே திருவிழாக் கூட்டம் தான். ஒருவர்மேல் ஒருவராகத்தான் நிற்பார்கள். பின்னிக் கிடக்கும் கால்களினிடையே இடம் தேடி இடம் தேடிக் காலூன்றுவார்கள்.

விரல் கூட நுழைக்க முடியாமல் கைகளால் மறைந்து கிடக்கும் கைப்பிடிக் கம்பிகளில் கைநுழைத்து கைநுழைத் துப் பற்றிக் கொள்வார்கள்.

வேலைத் தளங்களில் இருந்து விடுதலை பெற்ற மத்தியதர மற்றும் அதற்கும் அடித்தர வர்க்க மக்களனை வரும் தத்தமது இல்லமேக இந்தப் பஸ்கள்தான் ஒரே வழி.

என்ன செய்வார்கள் பாவம்! எப்படியாவது போயும் ஆக வேண்டும்!



வர்க்கப் பேதம் மறந்து, பால் பேதம் மறந்து ஒருவரு டன் ஒருவராக ஏறி மிதித்துக் கொண்டு..........

எனக்கு முன்னால் நிற்கும் பெண்ணின் கூந்தலில் குமிழ்நுனிப் பேனை ஒன்று ஊஞ்சலாடிக் கொண்டிருக் கிறது. குனிந்து சட்டைப்பையைப் பார்த்துக் கொள்கி றேன். என்னுடையதல்ல.

இந்த அலங்கோலத்தில் கால்சட்டைப் பைக்குள் தொலைபேசி ஒருபுறம் உயிர் கொண்டசைகின்றது.

ஒரு கையில் கைப்பை. மக்கள் கூட்டத்துக்குள் மாட் டிக் கொண்டிருக்கிறது. அசைக்கவோ, உயர்த்தவோ முடி யாது! மறுகை கைப்பிடிக்குள். ஏழெட்டுக்கைகள் அசைந் தால்த்தான் என் கை அசையும்! என்ன செய்யலாம்?

கை என்னுடையது! காற்சட்டைப் பைக்குள் கிடக் கும் தொலைபேசி என்னுடையது! ஆனாலும், எடுத்துப் பேச முடியவில்லை.

சூழலால் பாதிப்படையும் மனித சுதந்திரம் என் னைக் கோபமுறச் செய்கிறது.

கொழும்பு போன்ற பெரு நகருக்கும், எங்கெங்கோ தொலைதூரங்களிலிருந்தெல்லாம் தொழில் நிமித்தம் வந்து போகும் ஆயிரக்கணக்கான மனித ஜீவன்களின் பிரயாண வசதிகளை அரசு கவனிக்கும் லட்சணம் இது.

சுகமாகப் பயணியுங்கள் என்று பஸ்களில் சிங்களத் தில் எழுதி வைத்துக் கொண்டால் மட்டும் போதுமா? இதையெல்லாம் கவனிக்க யாரிருக்கிறார்கள்? யாருக்கு நேரமிருக்கிறது?

பேயோட்டும் வீடு மாதிரித் தான்.

உடுக்கும் கையுமாகப் பூசாரி ஆட, தலைவிரி கோலமாகப் பேய் பிடித்த பெண் ஆட, உடுக்கோசைக் கும், நெருப்புக்கும், புகைக்கும் மத்தியில் கூடி இருக்கும் அனைவரும் ஆட.......

இதொன்றும் விளங்காமல் அழுகின்ற குழந்தை அனாதையாகி விடுகின்ற நிலமைதான் எங்களுக்கும்.

வத்தளையில் பஸ் நிற்கிறது.

இறங்கினால் ஒரே இருள். மின்சாரம் இல்லாமல் போயிருப்பதை உணர்கின்றேன். பாதை மாற வேண்டும். இன்னொரு பஸ் ஏற வேண்டும். கால்சட்டைப் பைக்குள் கை நுழைந்து தொலைபேசியை எடுத்துப் பார்க்கின் றேன். விரலமுத்த வெளிச்சம் காட்டும் தொலைபேசி 'மூன்று மிஸ்கால்' என்கிறது.

வந்து நின்றுபோன அழைப்பு யாருடையது என்று அறிந்து கொள்ளும் சூட்சுமம் எனக்குத் தெரிந்திருக் கவில்லை.

இந்தச் சிறிய தொலைபேசிக்குள் ஏதேதோவெல் லாம் இருக்கின்றன என்பது மட்டுமே எனக்குத் தெரியும். ஒரு தொலைபேசியை வைத்துக் கொண்டு இந்த வையத் தின் வித்தைகளனைத்தையும் செய்து காட்டும் விண்ணர் களும் இருக்கின்றார்கள் தான்.

ஆனால், எனக்குத் தெரிந்ததெல்லாம் வந்த அழைப் புடன் பேசுவது, ஒரு அழைப்பை ஏற்படுத்திக் கொள்வது போன்ற ஒரு சில செயற்பாடுகள் மட்டுமே.

நான் மட்டுமல்ல! தொலைபேசியும் கையுமாகத் திரியும் பெரும்பாலானோரும் அப்படியேதான்.

தொலைபேசி மீண்டும் உயிர்க்கிறது. வீட்டிலிருந்து தான்.

"எங்கே இருக்கிறீர்கள்? இது நான்காவது கால். ஏன் பேசவில்லை? இருளுக்குள் இருக்கின்றேன். திடீரென்று லைட் போய்விட்டது. எப்போது வருமோ தெரியவில்லை. இவனுகளுக்கு இதே வேலையாகப் போய்விட்டது."

மறுமுனையில் மனைவியின் அதிகாரப் புலம்பல்.

"நீங்கள் மட்டுமல்ல...... நானும் இருட்டுக்குள் தான்....... நீங்களும் நானும் மட்டுமல்ல.....எல்லாருமே இருட்டுக்குள் தான்.......... யாருக்குத் தெரிகிறது என்ன நடக்கிறதென்று? ஏன் போன் போட்டீங்க.........."

"மெழுகுதிரியும், மொஸ்கிட்டோ கொயிலும் வேண் டும்..... பக்கத்துக் கடையை லைட் போனதுமே மூடிட்டா னுக...... பயந்தான்...... பேன் இல்லாட்டி படுக்கவும் ஏலாது....... கொசு புடுங்கித் தின்னுறும்....."

எங்களுக்கென்றே எப்படி எப்படி எல்லாம் செலவுகள் வருகின்றன.

இருளை விரட்டுவதற்கும் காசு! கொசுவை விரட்டு வதற்கும் காசு! மீண்டும் காற்சட்டைப் பைக்குள் கை நுழைக் கின்றேன்; என்னுடைய பொருளாதாரப் பலம் பார்க்க. அதை வைத்துதான் எத்தனை மெழுகுதிரி, எத்தனை நுளம்புச் சுருள் என்பதை நிர்ணயிக்க முடியும்........

என்னை இருளுக்குள் இறக்கி விட்டு விட்டு பாதைக்கு மட்டும் லைட் அடித்துக் கொண்டு பஸ் போய் விட்டது.

முன்வீட்டில், பக்கத்துவீட்டில் கிளைபரப்பி நிற்கும் மரங்கள் இருளை மேலும் கடினமாக்குகின்றன. எங்கள் வீட்டு மாமரமும் வேப்பமரமும் கூடத்தான்.

ஒரு நிதானத்துடன் இருட்டுக்குள் நடந்து கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தேன். பூந்தோட்டம் இரு ளுக்குள் சங்கமமாகிவிட்டிருக்கின்றது. எனது பிரசன்னத் தின் வாசம் அவைகளிடையே சிறு சலசலப்பை ஏற்படுத்துகின்றது.

ஒளியின் மகத்துவமும், மகிமையும் இருளுக்குள் தான் புரிகின்றது.

திடீரென்று ஒரு ஒளிக்கீற்று பாதையில் வீசி உள்ளே யும் சிதறுகின்றது.

பூஞ்செடிகள் சிலிர்த்து நிற்கின்றன. கேட்டுக்கு அருகில் நடந்து எட்டிப் பார்த்தேன்.

மின்சாரப் பகுதி வாகனம் ஒன்று ஏணியும் தானுமாக விசிறியடிக்கும் ஒளியுடன் மின்சாரத் தூணிற்கு அருகில் நிற்கின்றது.

லைட் வந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் வீட்டுக் குள் நுழைந்து, வாசலில் காத்து நின்ற மனைவியிடம் அந்த நம்பிக்கையை ஒரு மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டேன்.

"எத்தனை மணிக்கு லைட் போச்சி...... எத்தனை வாட்டி நானே போன் போட்டேன். எடுக்குறானுகளே இல்லை. இப்பத்தான் வந்திருக்காணுக......."

மனைவியின் குரலில் ஒரு எரிச்சலுடனான அவதானம் வெளிவருகின்றது.

"இந்தப் பகுதிக்கே மின்சாரம் இல்லாமல் போயிருக் கிறது...... உங்களைப் போல் எத்தனை வீட்டிலிருந்து எத்தனை டெலிபோன் போயிருக்கும்....... எதெதுக்குத் தான் பதில் சொல்வார்கள்..... அதான் வந்திருக்கி றார்களே சரி பார்க்க..... இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடும்."

"பார்த்துக்கிட்டே இருங்க பளீருன்னு ஒளி வெள்ளம் பாயப் போகுது..... சமாதானம் வந்த மாதிரித்தான் இதுவும். இந்த ஜென்மத்துல வராது!" என்றவாறு மெழுகு திரியை ஏற்றி வைக்கின்றாள்.

வாலிப இருளுடன் வலிய இருளுடன் போராட முனை கிறது மெழுகுதிரி.

இரவு பத்தாகி விட்டது. லைட்டையும் காணவில்லை. சரிக்கட்ட வந்த வாகனத்தையும் காணவில்லை.

மனைவியின் வாக்குப் பலிதமாகிக் கொண்டிருக் கிறது.

தூண் தூணாக ஏறிப் பார்க்கின்றார்களோ என்னவோ.

தோட்டத்து லயங்களைப் போலத்தான் இந்த மின் சாரம் ஓடும் கம்பிகளும். நூறாண்டு பழமை மிக்கவை. எங்காவது ஓரிடத்தில் இற்று அறுந்திருக்கும்..... அசைந்து விலகியிருக்கும். அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

காற்றடித்தால், வளர்ந்து கிடக்கும் மரங்களின் கிளை நுனிகள் லைட்கம்பிகளில் உரசினால் கூட சில வேளைகளில் லைட் இல்லாமல் போய்விடும். அத்தனை பழையவை இந்தக் கம்பிகள்.

மெழுகுதிரியின் மெல்லிய ஒளியில் இரவின் கடமைகள் நிறைவேறுகின்றன. மின்விசிறியை மட்டும் இயக்கத்தில் விட்டு மற்ற ஸ்விட்சுகளை அழுத்திவிட்டு மொஸ்கிட்டோ கொயிலைப் பற்றவைத்து விட்டுப் படுக்கத் தயாராகின்றோம்.

இன்னும் லைட்டைக் காணவில்லை. எப்படியோ மனைவியின் வாக்குப் படிதான் நடக்கிறது. ஊர் உலகம் என்று சுற்றி வரும் என்னை விடவும்; வீடே உலகமென்று கிடக்கும் மனைவியின் அநுபவசாலித்தனம் என்னை ஆச்சர்யம் கொள்ளச் செய்கின்றது.

"நாளைக்கும் வராது.....அயர்ன் பண்ண முடியாது. இருக்குறத மாட்டிக்கிட்டுக் கெளம்புறதுங்க....."

நாளைய காலைப் பிரச்சினை பற்றியதான மனைவியின் தீர்க்கதரிசனம்! பாதிக் கண்மூடிய தூக்கத்துடன் வெளி வருகின்றது.

✷ ✷ ✷

பூந்தோட்டத்தில் நிற்கின்றேன். விடிந்து கொண்டிருக்கின்றது.

பறவைகள் ஒலி எழுப்ப, மாந்தளிர்களைக் குளிர்த் தென்றல் ஊஞ்சலாட்ட, அணிற்கூட்டம் அங்குமிங்கும் ஓடித்திரிய, வண்ண வண்ண நிறம் காட்டி மலர்கள் சிரசசைக்க இருள் மெல்ல மெல்லக் கலைகிறது.

வழமையாக இதுபோன்ற அதிகாலையில் கூட, கார், பஸ், பாடசாலைவேன் என்று அல்லோலகல்லோலப்படும் பாதை இன்று ஊரடங்குச் சட்டம் இடப்பட்டுள்ளது போல், வெறிச்சோடிக் கிடக்கிறது. இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதன் எதிரொலி.

மாவிலை வேப்பிலைச் சருகுகள் தரையிலும் செடிகள் மீதும் தாறுமாறாகச் சிதறிக் கிடக்கின்றன. கைகளுக்கெட்டாத உயரத்தின் செடிகளின் இலைக் கக்கங்களில் கொத்துக் கொத்தாய் தொற்றிக் கிடக்கும் சருகுகளை குழாய் நீரைப் பீய்ச்சியடித்து வெளியேற்றுகின்றேன்.

நுகம் இறங்கிய சுகம் தென்றலிட தலையாட்டிக் களிக்கின்றது செடி.

எண்பத்துமூன்றின் இனக்கலவரம் போல் பாதையில் திடீரென பலமான பலகுரல்கள். கூக்குரல்களாக!

எட்டிப் பார்க்கின்றேன்.

இடிதடியர்கள் போல் ஒரு ஏழெட்டுப் பேர் கைகளில் கத்திகளுடன் மேலும் கீழுமாக நடக்கின்றனர். வளர்ந்தும் படர்ந்து சடைத்தும் கிடக்கும் பாதையோர மரங்களை முறைத்து முறைத்துப் பார்க்கின்றனர்.

ஏணிகள், தன்னியக்க உயர்த்திகள் சகிதம் இரண்டு மூன்று மின்சாரசபை வாகனங்கள்.

பாதையோர வீடுகளின் பாதுகாப்புக்காக உயர்த்திக் கட்டப்பட்டிருக்கும் மதில்களின் மேல் தாவி ஏறுகின்றனர். கீழிருக்கும் மற்றவர்கள் ஏணிகளை மரங்களில்ச் சாய்கின்றனர். மதிலிலிருந்து ஏணிக்குத்தாவி ஏணியிலிருந்து மரத்துக்குத் தாவி ஏறிய ஒருவன் றோட்டுப் பக்கமாக வளர்ந்து வளைந்திருக்கும் கிளையை படார் படாரென வெட்டுகின்றான்.

வீட்டுக்காரர்களுக்கு எதுவிதமான அறிவுறுத்தலோ அறிவிப்போ இல்லை. அவர்களுடைய மரங்கள் போல் ஏறுகின்றார்கள் வெட்டுகின்றார்கள். அரசாங்கக் கோழி முட்டை ஊர்மக்களின் அம்மிக்கல்லையும் உடைக்கும் என்பது சரியாகத்தான் இருக்கின்றது. கிளையின் மேல் விழுந்த வெட்டும்; கிளை நுனியின் பாரமும் கிளையை உலுப்ப ஒரு ஓங்காரக் கூச்சலுடன் கிளை பிளந்து மரத்தில் பட்டை உரித்துக் கொண்டு, தலை கீழாகத் தொங்குகிறது. கீழ் நோக்கி விழுந்த மற்றொரு வெட்டுடன் பெரிதாக ஓலமிட்டபடி தரைநோக்கி விரைகின்றது.

கிளை எழுப்பிய ஓசையாலும், 'ஓவ் ஓவ்' என்று அவர்கள் போட்ட கூச்சலாலும், பாதையில் ஓடிய கார் மருண்டு தடுமாறி மறுபக்கமாக ஓடி விரைகின்றது.

றோட்டோரத்து வீட்டு மரங்களின் கிளைகள், தென்னோலைகள், ஓரிரு திப்பிலி ஓலைகள் என்று பாதையிலும் பாதை ஓர இரு மருங்கு கான்களிலும் சரமாரியாக, தாறுமாறாக விழுகின்றன.

சடசடவென்று சப்தமெழ அவைகளை அமுக்கிக் கொண்டும் நசுக்கிக் கொண்டும் பஸ்கள் ஓடுகின்றன.

கிளைகள் முறிந்து விழும் ஒலியும் வெட்டித்தள்ளுகின்றவர்கள் எழுப்பும் கூச்சலும் தொடர்ந்து கேட்கின்றன; போர்க்களம் போல்.

மரம் வளர்ப்பதில் நாமும் எந்தவிதமான ஒழுங்கை யும் கடைப்பிடிப்பதில்லை.

நம்முடைய குழந்தை வளர்ப்புப் போலத் தான். கண்டபடி அதனதன் போக்கில் வளர விட்டு விடுகின் றோம். ஒழுங்கு படுத்துதல் கிடையாது. பிறகு இப்படித் தான்.

வீட்டுக் அடங்காதது றோட்டுக்கு அடங்கும் என்பது போல.

முன்வீட்டுக்காரர் மதில் ஓரத்தில் வரிசையாக ஒரு ஆறேழு மரங்கள் வளர்த்துள்ளார். பிரமிட் மாதிரி அடியிலி ருந்து நுனிவரை அழகாக வாயூறச் செய்யும் வகையில் வானுயர வளர்ந்து நிற்கும் அவைகளின் பாதி உயரத்தை ஒரு பச்சாதாபமின்றிக் கொத்தித் தள்ளுகின்றனர்.

ஏணியும் தானுமாக ஒரு நாலைந்து பேர் எங்கள் வீட்டு மரங்களை நோட்டமிடுகின்றனர். எங்கள் வீட்டுக்கு வெளியே மதிலை ஒட்டியபடி ஒரு பெரிய ஜேம் மரம் வளர்ந்து நிற்கிறது. பிசுபிசுப்பான இலைகளும் பச்சை முந்திரி போல் கொத்துக் கொத்தாய் தொங்கும் கனிகளுமாய்........ வீட்டு மரமல்ல. றோட்டு மரம்தான்.

சுவையான கனிகளைத் தருவதால் 'ஜேம் மரம்' என்னும் பெயர் நிலைத்திருக்கிறது. அதற்கென்று ஒரு பெயர் இருக்குமே.... அது தெரியவில்லை.

மரத்தடியில் நிற்கும் முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் தொத்தித் தொத்திக் கனி பறித்துச் சுவைப் பார்கள்.

ஒரு காட்டு மரம் போல் கண்டபடி வளர்ந்திருக்கும் இந்த ஜேம்மரத்தை ஒரு குழு நோட்டம் விடுகின்றது.

தன்னியக்க உயர்த்தியுடன் ஊர்ந்து வரும் வாகனம் எங்கள் வீட்டின் முன் நிற்கின்றது.

வீட்டுக்காரன் நான் கேட்டுக்கருகில் நிற்பது அவர்க ளுக்கு ஒரு பொருட்டாகவே படவில்லை. மடமடவென்று மதில் மேல் ஏறுகின்றனர். கைக்கெட்டிய வாதுகளை இழுத்து வெட்டுகின்றனர். ஜேம்மரத்தில் ஏறியவன் அரை வாசி மரத்தை வெட்டி வீழ்த்துகின்றான்.

ஆளுயரத்தில் ஏறி நின்று உயரப்போனவன் வேப்பமரத்தின் உச்சிக்கிளைகளை வெட்டுகின்றான்.

மாமரக்கிளை 'ஒஸ்' என்ற ஒலியுடன் எனது பூஞ் செடி மீது விழுகிறது.



மல்லிகையின் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.

சுண்டினால் பால்வடியும் அந்த இலைகளும், இளஞ் சிவப்புப் பூக்களும் செய்வதறியாது திகைத்துப் போய்ச் சுருண்டு கிடக்கின்றன.

வெள்ளை வெள்ளையாய் வழிந்தோடும் குருதியுடன் ஒடிந்து கிடக்கும் அந்த அபாக்கிய ஜீவனை அமுக்கிக் கொண்டு கிடக்கிறது மரக்கிளை.

வானத்திலிருந்து குண்டு மாரி பொழிவது போல், ஜேம்மரக்கிளைகள் பெரும் ஓங்கார ஓசையுடன் தோட்டத்து அப்பாவிச் செடிகளின் மீது விழுந்து விழுந்து துவம்சம் செய்கின்றன.

உச்சியிலிருந்து ஒடிந்து விழுந்த வேகத்தில் வேப்ப மரக்கிளையால் தூக்கி வீசப்பட்ட அந்தூரியம், பூவும் தானுமாய் மாமரத்தின் அடிக்கிளையில் தொங்கி ஆடிக் கொண்டிருக்கிறது.

அரைவாசி மரத்துடன் வெட்டப்பட்ட ஜேம்மரம் மல்லிகைக் கொடிமேல் விழுந்து கிடக்கிறது. மல்லிகைப் பந்தலையே காணவில்லை.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நெஞ்சை அடைக்கிறது. திக்பிரமை பிடித்தது போல் விக்கித்து நிற்கின்றேன். தலை சுற்றுகிறது.

ஒரு சொற்ப வேளையில் எல்லாமே நடந்து முடிந்து விட்டது. அப்பாவிகள் மேல் நடத்தப்படும் அராஜகம் போல்!

வாகனங்கள் கிளம்புகின்றன.

''கொஞ்சம் பொறுங்கள் கொஞ்சம் பொறுங்கள்'' என்று சிங்களத்தில் கூறியபடி, தென்னை மர உச்சியில் ஒருவன் இளநீர் சுவைத்துக் கொண்டிருக்கின்றான். ஊரார் வீட்டு இளநீர் தானே!

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 முகவரியில் வசிப்பவரும், மல்லிகை ஆசிரியரும்,
வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, கொழும்பு விவேகானந்த மேடு,
103 இலக்கத்திலுள்ள U.K. அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.
அட்டை: Happy Digital Centre (Pvt)Ltd.